சைவ சித்தாந்தப் பெருமன்றம்

சென்னை

முத்துவிழா மலர்

3012

உ

சிவமயம்

சைவ சித்தாந்தப் பெருமன்றம்

முத்துவிழா மலர்

வெளியீடு :
சைவ சித்தாந்தப் பெருமன்றம்
(தொடக்கம் 1905)
எண் 4, (முதல் மாடி) வேங்கடேச அக்கிரகாரம் தெரு,
மயிலாப்பூர், சென்னை-4.

விழா 1986 மே 10, 11

பதிப்பாசிரியர்,
பேராசிரியர் பெ. திருஞானசம்பந்தன், M.A., L.T.
பெருமன்றத் தலைவர்

முத்துவிழா வரவேற்புக் குழுவினர்

சிதம்பரம்

தலைவர்

டாக்டர் திரு. கே. அரங்கசாமிப் பிள்ளை, அவர்கள்
எம்.பி.பி.எஸ்., டி.ட்டி.எம். அண்ட் எச். (லிவர்பூல்) இசட்.எம்.ஆர். (வீயன்னா)
5, முருகப்பிள்ளை தெரு, சிதம்பரம்.

துணைத்-தலைவர்கள்

(1) திரு. என். எம். பொன்னம்பலம் பிள்ளை அவர்கள்
கனகசபை நகர், சிதம்பரம்.

(2) ஜி. வாகீசம் பிள்ளை அவர்கள்
கனகசபை நகர், சிதம்பரம்.

செயலாளர்கள்

(1) திரு. கே. சுவாமிநாதன் அவர்கள், பி.எஸ்சி., பி.டி.,
7, தெற்குத் தேர் வீதி, சிதம்பரம்.

2) திரு. எஸ். திருநாவுக்கரசுப் பிள்ளை அவர்கள், பி.ஏ.
கனகசபை நகர், சிதம்பரம்.

பொருளாளர்

திரு. ஆர். இராமநாதன் அவர்கள்
உரிமையாளர், நடராஜா ஜ்வல்லரி ஹால்,
கடைத் தெரு, சிதம்பரம்.

உறுப்பினர்கள்

(1) புலவர் திரு. க. வெள்ளைவாரணனார், கனகசபை நகர், சிதம்பரம்.
(2) திரு. சி. அரங்கசாமிப் பிள்ளை, பி.ஏ., கனகசபை நகர், சிதம்பரம்.
(3) திரு. எஸ். முத்துக்குமரப் பிள்ளை, கனகசபை நகர், சிதம்பரம்.
(4) திரு. ஆர். இராமலிங்கம் பிள்ளை, எம். ஏ., கனகசபை நகர், சிதம்பரம்
(5) திரு. வி. எஸ். இராமலிங்கம் பிள்ளை, கனகசபை நகர், சிதம்பரம்.
(6) திரு. ஆர். கே. சிவகுமார், கனகசபை நகர், சிதம்பரம்.
(7) புலவர் திரு. த. முருகேசனார், கனகசபை நகர், சிதம்பரம்.
(8) திரு. அ. சிவநேசன், மாரியப்பா நகர், சிதம்பரம்.
(9) திரு. எம். இராமலிங்கம் செட்டியார், மாரியப்பா நகர், சிதம்பரம்.
(10) திரு. ஆர். சம்பந்தம் பிள்ளை, மாரியப்பா நகர், சிதம்பரம்.
(11) திரு. கே. பழநிவேலு, மாரியப்பா நகர், சிதம்பரம்.
(12) திரு. எஸ். மெய்யப்பன், எம். ஏ., மாரியப்பா நகர், சிதம்பரம்.
(13) திரு. எ. முத்துக்குமாரசாமி முதலியார், மாரியப்பா நகர், சிதம்பரம்.
(14) திரு. ஆ. இராசரத்தின முதலியார், குறிஞ்சிப்பாடி.

முத்து விழா வரவேற்பு குழுவினர்

டாக்டர் திரு. K. ரெங்கசாமிப் பிள்ளை, M.B.B.S.,
சிதம்பரம்
தலைவர்

திரு. N. M. பொன்னம்பலம் பிள்ளை
சிதம்பரம்
துணைத் தலைவர்



திரு. G. வாகீசம் பிள்ளை
சிதம்பரம்
துணைத் தலைவர்



திரு. K. சுவாமிநாதன்
சிதம்பரம்
செயலாளர்



திரு. S. திருநாவுக்கரசு
சிதம்பரம்
செயலாளர்



பேராசிரியர் திரு. க. வெள்ளைவாரணனார்
சிதம்பரம்
உறுப்பினர்

திரு. S. முத்துக்குமரன்
சிதம்பரம்
உறுப்பினர்



திரு. R. சம்பந்தம் பிள்ளை
சிதம்பரம்
உறுப்பினர்

திரு. S. இராமலிங்கம்
சிதம்பரம்
உறுப்பினர்



திரு. A. இராசரத்தின முதலியார்
குறிஞ்சிப்பாடி
உறுப்பினர்



திரு. K. பழநிவேலு முதலியார்
சிதம்பரம்
உறுப்பினர்



திரு. A. முத்துக்குமாரசாமி முதலியார்
சிதம்பரம்
உறுப்பினர்

உள்ளுறை

பக்கம்

முத்துவிழா வரவேற்புக் குழுவினர் .. 2
ஆசியுரைகள் .. 3
வாழ்த்துச் செய்திகள் .. 12
சைவசித்தாந்தப் பெருமன்றப் பணிகள் .. 15
சைவ சித்தாந்தப் பெருமன்றப் பணியாளர்கள்—குறிப்பு .. 20
சைவ சித்தாந்தப் பெருமன்றத்தில் அன்பர்களால் நிறுவப்பட்ட அறக்கட்டளைகள் விவரம் .. 23
சைவ சித்தாந்தப் பெருமன்றக் காப்பாளர்களும் பணியாளர்களும் .. 26
சைவ சித்தாந்தப் பெருமன்ற மாநாட்டுத் தலைவர்கள் பட்டியல் .. 28
'' சித்தாந்தம் '' தமிழ்த் திஸ்கள் இதழ் ஆசிரியர்கள் .. 33
சிறப்புக் கூட்டங்களின் தலைவர்கள் .. 34
கோடை வகுப்புத் தலைமை ஆசிரியர்கள் .. 34
சைவ சித்தாந்தப் பெருமன்றத் தலைவர்கள் .. 34
சைவ சித்தாந்தப் பெருமன்றச் செயலாளர்கள் .. 35
சைவ சித்தாந்தப் பெருமன்றத்தின் சில முக்கிய வெளியீடுகள் .. 36

கட்டுரைகள்—தலைப்பும்—எழுதியோரும்

முத்து முகிழும் திருமுறைப் பாடல்கள்—தொகுப்பு—அம்பை இரா. சங்கரன் .. 1
முத்து விழா வாழ்த்து மலர்—ந. ரா. ஆடலரசு .. 4
நடராசர்—ஞானியாரடிகள் .. 5
திருமூலரும் சைவ சித்தாந்தமும்—சி. அருணை வடிவேல் முதலியார் .. 9
நடராச தத்துவம்—க. வச்சிரவேலு முதலியார் .. 13
திருக்கோவையார்—ந. ரா. முருகவேள் .. 17
திருமுறைகளில் தில்லை—க. வெள்ளைவாரணனர் .. 21
தசகாரியம்—முரு. பழ இரத்தினம் செட்டியார் .. 29
சைவத்தின் வளர்ச்சிக்கு—டாக்டர் நா. மகாலிங்கம் .. 33
சுந்தரர் காணக் கண்பெற்றமை—ஆ. சுப்பிரமணியப் பிள்ளை .. 39
மாணிக்கவாசகரின் அருள் நூல்—டாக்டர் கே. அரங்கசாமி பிள்ளை .. 44
வீரசைவமும் சைவசித்தாந்தமும்—டாக்டர் வை. இரத்தின சபாபதி .. 49
சிவதீட்சையின் அவசியமும் பயனும்—சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் .. 56
நம்பியாண்டார் நம்பிகளும் திருஞானசம்பந்தரும்—கு. வைத்தியநாதன் .. 60
கந்தபுராணத்தில் காப்பியச் சுவை—அம்பை இரா. சங்கரனர் .. 63
அப்பரடிகளும் சைவ சித்தாந்தமும்—டாக்டர் சொ. சிங்காரவேலன் .. 68
தொகையடியார்கள்—டாக்டர் கு. சுந்தரமூர்த்தி .. 73
மங்கையர்க்குத் தனியரசி—புலவர் ச. குழந்தையம்மாள் .. 78
சைவசித்தாந்தம் பரவ வழிவகைகள்—கி. லக்ஷ்மணன் .. 82
சக்தி—தத்துவ விளக்கம்—டாக்டர் கோமதி சூரியமூர்த்தி .. 87
திருக்கோயில் வரலாறும் வழிபாடும்—கோ. மு. முத்துசாமிப் பிள்ளை .. 91
சைவ சமய சாதனங்கள்—க. வடிவேலாயுதம் .. 98
திருவெண்காட்டு நங்கையார் மாண்பு—தி. சுந்தராம்பாள் .. 103

சிவபெருமான் படிமங்கள்—எ. வி. ஜயசந்திரன் .. 108
இரு பெரு நெறிகள்—டாக்டர் தெ. ஞானசுந்தரம் .. 114
அற்புதத் திருவந்தாதியில் காரைக்கால் அம்மையாரின் பா நலம்
சாரதா நம்பி ஆரூரன் .. 120
வாழ்த்துப்பா—ஆ. ஜெ. இராமசாமி முதலியார் .. 123
தலபுராணங்களால் சமய நெறியாளருக்கு ஏற்படும் பயன்கள்—
டாக்டர் சு. சுவர்ணகாளிச்சுரன் .. 124
தேவாரத்தில் சில இசைச் சிந்தனைகள்—மா. வைத்தியலிங்கம் .. 127
சிவஞானமாபாடியச் சிறப்பு—ஆதி. முருகவேள் .. 131
சிதம்பரத்தில் ஆறுமுக நாவலர்—க. சுவாமிநாதன் .. 139
முத்து விழா வாழ்த்து—அருள்விளக்கம் அண்ணாமலை அடிகள் .. 143
சேரவாரீர்—ஆ. இராசரத்தின முதலியார் .. 144
நன்றியுரை—ம. அண்ணாமலை .. 146

கட்டுரைகள்—(ஆங்கிலம்)

The Dance of Shiva—Ananda K. Kumaraswamy .. 1
The Saiva Religion and Saiva Advaita Siddhanta Philosophy—
J. M. Nallaswami Pillai .. 4
Some Western Contributions to the Study of Saiva Siddhantha—
Dr. V. A. Devasenapathi .. 14
Bharata Natya as a Symbolic Expression of Saiva Siddhantha—
Ari Darom .. 17
Hinduism in Europe and North America with Special Reference to Saiva Siddhantha
in the West to-day—K. Gnanasoorian .. 25
The Arguments of Mala according to Sivagrayogin—Jayendra Soni .. 30
Toward an Appreciation of H. W. Schomerus with reference to his translation
and Commentary of Arunanti's Sivagnanasiddhaiyar—Luitgard Soni .. 37
Saivism in South-East Asia—P. Thirugnanasambandhan .. 41
The Tattvas in Saiva Siddhantha—C. N. Singaravelu .. 45
Mysticism of Andal and Manickkavacakar—R. Rangachari .. 53
Free Will and Determinism in Saiva Siddhantha—Dr. Rama Ghose .. 55
Virasaivism and the Periya Puranam—T. N. Ramachandran .. 61
A Note on Pramana in Saiva Siddhantha—N. Murugesa Mudaliar .. 65

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்
26-ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

தருமபுரம்
மயிலாடுதுறை (அஞ்சல்) 609 001.

15-04-1986

'' ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆல வாயில் உறையும்எம் ஆதியே ''

சைவ சித்தாந்தம் நம் பண்டைத் தமிழ்ப் பெருமக்கள் திருவருள் வழியே அனுபவத்தில் கண்டு தெளிந்த அறிவு நெறி. உலகில் தோன்றிய சமய தத்துவங்கள் யாவற்றையும் தன்னுள் அடக்கி, அவற்றுக்கெல்லாம் மேலாக விளங்கும் செம்மையுடையது. உணர்வு பூர்வமாக மட்டும் அல்லாது இறைவன், உயிர், உலகு இவற்றின் உண்மை, இலக்கணம், இவற்றிடையே உள்ள தொடர்பு முதலியவற்றை அறிவு பூர்வமாகவும் ஆய்ந்து தெளிவிக்கும் பெருமித முடையது. விஞ்ஞான உலகமும் வியந்து போற்றும் அளவிற்கு எந்தப் பரிசோதனைகளாலும் அளவிட்டு அறியத்தக்க மெய்மையுடையது.

சைவ சித்தாந்தச் செந்நெறியின் வரலாறு தொன்மை வாய்ந்தது. மிக நீண்டது. வேதத்தில் அரும்பி, உபநிடங்களில் போதாகி, ஆகமங்களில் மலர்ந்த இச் செந்நெறியைத் தொல்காப்பியர் கால முதல் தமிழ்ச் சான்றோர் பல்வேறு நிலைகளில் போற்றி வளர்த்தனர். சைவத் திருமுறைகளில் உரம் பெற்ற சைவ சித்தாந்த மெய்ப் பொருளியலை — சிவபிரான் தொடங்கி உபதேச நெறியில் வளர்த்து வந்த மெய்கண்டார், தமது சிவஞான போதத்தால் வரையறைப்படுத்தி யருளினார்.

ஏறத்தாழ எண்ணூறு ஆண்டுகளாகத் தமிழகத்தில் குழப்ப நெறிகளை விடுத்து தனக் கென ஒரு தனி நிலையை மேற்கொண்டு வளர்ந்து வரும் சைவ சித்தாந்தச் செந்நெறியைப் போற்றிக் காத்த அருளாளர் பலர். நிறுவனங்கள் பல. கி.பி. 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சைவ சித்தாந்தச் செந்நெறியை வளர்க்கவென்றே தோற்றம் கொண்ட அரிய பெரிய அமைப்பு ' சைவ சித்தாந்தப் பெருமன்றம் ' (சைவ சித்தாந்த மகா சமாஜம்) ஆகும்.

சைவத் தமிழ்ச் சான்றோர் பலராலும் போற்றி வளர்க்கப் பெற்ற இப் பெருமன்றம் சைவ சித்தாந்த வளர்ச்சியில் ஆற்றி வந்திருக்கும் பணிகளைத் தொகுத்துச் சுட்டுதல் இயலாது. இம்மன்றம் திருமுறைகளையும், சித்தாந்த சாத்திரங்களையும் அடக்க விலையில் பதிப்பித்தது மன்றத்தின் தலை சிறந்த பணியாகும். சைவ சித்தாந்த வகுப்புகள் நடத்துதல், சைவ சித்தாந்த சபைகளை நாடெங்கும் அமைத்தல், சைவத் திருமுறைகள் மற்றும் சாத்திரங்களை மிகச் சிறப்பாகப் பதிப்பித்தல், இவற்றிற்கு உரை கண்டு வெளியிடுதல், ஆண்டு தோறும் நாடெங்கும் சைவர் மாநாடு, சைவ இளைஞர் மாநாடு, சைவ மங்கையர் மாநாடுகளைத்

திட்டமிட்டு நடத்துதல், சைவத் திருக்கோயில்களையும், மரபுகளையும் பேணிக் காத்தல், தமிழிலும் ஆங்கிலத்திலும் 'சித்தாந்தம்' என்ற இதழைத் திங்கள் தோறும், முத்திங்கள் தோறும் வெளியிடுதல் எனப் பெருமன்றப் பணிகளைப் பட்டியலிட்டு மகிழலாம்.

தமிழர் வாழ்வோடு இணைந்து மெய்த் தொண்டாற்றிய சைவ சித்தாந்தப் பெருமன்றத்தின் 80ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி அன்பர்கள் பலரும் இணைந்து 'முத்து விழா' கொண்டாடவிருப்பது பெரிதும் மகிழ்ச்சி தருகிறது.

அவ் விழாவும், மன்றத்தின் பொன்விழாவையும் வைர விழாவையும் கண்டதும், சைவ சித்தாந்தத் தத்துவத்தை உலகறியச் செய்து ஒளிர்வதுமாகிய சிதம்பரத்தில் நடைபெறுவதும், சிதம்பரம் சைவப் பெருமக்கள் இம் முத்துவிழாவை முதன்மைபெற நடத்த இருப்பதும் மிக்க மகிழ்ச்சிக்குரியதாகும். இதனை ஒட்டித் தமிழிலும் ஆங்கிலத்திலும் அரிய கட்டுரைகள் அடங்கிய விழா மலர்கள் வெளிவரவிருப்பது பாராட்டத்தக்கதாகும். முத்து விழா சிறக்கவும், விழா மலர் இனிதே மலர்ந்து சைவ சித்தாந்தச் செந்நெறி வளர்ச்சிக்குப் புதிய ஆக்கங்களைச் சேர்க்கவும், இம் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் அன்பர்கள் நீடு இனிது வாழவும், பெருமன்றம் பல நூற்றாண்டு விழாக்களைக் கண்டு ஆல்போல் தழைக்கவும் ஸ்ரீசெந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

உ

சிவமயம்

திருக்கயிலாய பரம்பரை
ஸ்ரீ–ல–ஸ்ரீ
சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்
குருமகாசந்நிதானம்
திருவாவடுதுறை ஆதீனம்

திருவாவடுதுறை 609 803
(தஞ்சை மாவட்டம்)
நாள் : 09–01–1986

ஆசியுரை

தமிழொடும் சைவத்தொடும் தானும் வளர்ந்து தனிச் சிறப்புடைய நிறுவனமாக விளங்குவது சைவ சித்தாந்தப் பெருமன்றம். இப்பெருமன்றம் தில்லையம்பதியில் வரும் மே மாதம் 10, 11 நாட்களில் முத்து விழாவினைக் கொண்டாடத் திருவருள் கூட்டியிருப்பதை யறிந்து மகிழ்கின்றோம்.

செந்தமிழின் தனி மாண்பினையும் சித்தாந்த சைவச் செந்நெறியின் மேன்மையினையும் யாவரும் அறிந்து பயன் கொள்ளும் வகையில் பெருமன்றம் தொடங்கப்பெற்ற காலம் முதல் ஆற்றிவரும் அரும்பணிகள் பாராட்டுதற்குரியன. முத்து விழா கொண்டாடும் மன்றம் மேலும் பல விழாக்கள் காணும் வண்ணம் சிறந்து விளங்கவும், விழா இனிது நிறைவேறவும், விழா மலர் தெய்வ மணங்கமழும் திருமலராக மலர்ந்து பொலியவும் எம் ஆன்மார்த்த மூர்த்தியாகிய ஸ்ரீ ஞானமா நடராஜப் பெருமான் திருவடி மலர்களைச் சிந்திக்கின்றோம்.

உ
சிவ சிவ

கயிலை மாமுனிவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி
முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்
அதிபர், ஸ்ரீ காசிமடம்
கடித எண் 3112 95.

திருப்பனந்தாள்-612 504
(தஞ்சை மாவட்டம்)
6—1—1986

வாழ்த்துரை

சைவ சமய நெறியின் மென்மையிலும், சித்தாந்தச் செந்நெறியின் உயர்விலும் தனது இணையற்ற பணி நிரல்களைச் செய்து, நீண்ட நெடும்பாதையில் பயணித்து, 80ஆவது ஆண்டு நிரம்பப் பெறும் சைவ சித்தாந்தப் பெருமன்றத்தின் முத்துவிழாத் தொடர்பாகச் சிறப்பு விழாவும், மலர் வெளியீடும் நிகழவுள்ளமையறிந்து மகிழ்ச்சி.

'வேதாந்தக் கனியின் சாரம் பிழிந்தது'' — 'மறை முடிவாம் சைவம்' — என்று ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளாலும், 'வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தம்' என்று பிறராலும் உயர்த்திப் பேசப்பட்ட சைவ சித்தாந்தப் பெருநெறி காலங்கடந்த பழமை மிக்கது, பிற நாட்டாரும் வந்தெடுத்துச் செல்ல அறிவுக் கருவூலங்களைத் தன்னகத்தே வைத்திருந்து வாரி வழங்கும் வண்மை மிக்கது. ஆயினும், தமிழகத்தே இன்னும் பலராலும் 'இது உயர்பொருள்' நமது அறிவிற்கும் சிந்தனைக்கும் அப்பாற்பட்டது, வாழ்வியலோடு தொடர்பு படாதது, என்று எண்ணி ஒதுக்கப்படுகிறது. ஏன், தமிழ் நன்கு பயின்ற சிலரே பிற துறைகளில் காட்டும் ஈடுபாட்டை இதில் காட்டாததையும் நாம் அறிகின்றோம். ஒன்று மட்டும் உறுதி, இத்தகு உயர்பெரும் நிலைக்கு வந்து பல்லாயிரம் பேர்களால் அது பயிலப்படவும், சிந்திக்கப்படவும் முதன்மையான தூண்டுதலாக அமைவது பெருமன்றத்தின் இணையிலாப் பணியே எனச் சொல்லலாம்.

இதன் கூறுகள் அறிவிக்கப்பட்ட கதைகள் அல்ல, ஆய்வு முடிவுகளே, அதன் செம்பொருள் உண்மையும் (Facts) மெய்ம்மை (Realities)யுமே என்பதைக் கொள்வோர் கொள்வகை அறிந்து கொளுத்தி மக்கள்தம் மனப் பிரமை நீக்கி, நெறி புதியதாய் மலர்ச்சி பெறும் வகையில் பணியாற்றி மன்றம் தழைத்தோங்கவும், மலர் சைவ சித்தாந்தப் பெருநெறியின் பழமை, தத்துவ மணங்கமழும் பொன் மலராய்ப் பொதுளவும் செந்திலழகன் சேவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

(சுபம்)

உ

'' கயிலைப் புனிதர் ''

சீலத்திரு. ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்

தொண்டை மண்டல ஆதீனம்

பெரிய காஞ்சீபுரம்-631 502.

நாள் : 19—2—1986

ஆசியுரை

உலகச் சமயங்களுள் சைவ சமயமே மிகத் தொன்மையானது என்பது புதைபொருள் ஆராய்ச்சியின் மூலம் இன்றைய உலகம் ஏற்றுக் கொண்ட ஒன்று. இதன் வழிபாட்டு முறை தொன்று தொட்டு, இது காறும் தமிழ் நாட்டில்தான் நின்று நிலவி வருகிறது. இதற்குச் சிறந்த சான்றாக உள்ளவை தமிழ் நாட்டுக்குக் கோயில்கள்.

இச் சமயத்தின் தத்துவம் பழம்பெரும் நூல்களில் வழிவழியாகச் சொல்லப்பட்டு வருவதுமன்றி, இன்றைய அறிவியல் உலகமும் உணர்ந்து பாராட்டக் கூடியதாய். '' முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம்பொருளாய் — பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியதாய்'' விளங்குவது சிந்திக்கத்தக்கது. இச் சைவசமயம், சமயங்கள் பலவற்றுள்ளும் '' இது ஆகும் '' '' இது அல்லது '' என்று கொள்ளாமல், அனைத்துச் சமய தத்துவங்களையும் தன்னுள் அடங்கக் கொண்டு விளங்குகின்றது என்பது அருணந்தி சிவாசாரியரால் '' ஓதும் சமயங்கள் பொருள் உணரும் நூல்கள் '' என வரும் செய்யுளால் இனிது விளக்கப் பட்டுள்ளது. இதனின்றும் இஃது ஓர் உலகப் பொதுச் சமயம் என்பது வெளிப்படை.

சைவ சித்தாந்த சிறப்புக் கொள்கைகள் பல நாட்டுப் பொது மக்களின் அன்றாட வாழ்க்கையிலேயே அமைந்துள்ளன. '' இவனுக்கு என்ன ஆணவம் '' '' அது அவனுடைய கருமம் '' '' மாயையிலே மயங்கிக் கிடக்கிறான் '' இவை போன்ற வழக்குகள் இதற்கு எடுத்துக்காட்டுகளாகும்.

இத்தகையதொரு நற்சமயத்திற்கு ஆக்கந்தேட நோக்கங்கொண்ட தமிழ், ஆங்கிலம், வடமொழி ஆகிய மொழிகளில் வல்ல நல்லறிஞர்கள் சிலர், திருக்கோவிலூர் ஆதீனம், திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் சுவாமிகள், ஆசிரியர் மறைமலையடிகள் ஆகியவர்களைக் கொண்டு '' சைவ சித்தாந்த மகாசமாஜம் '' என்னும் ஓர் அமைப்பினை நிறுவினார்கள். இதன் மூலம் சைவத் தெய்வத் திருமுறைகள், சித்தாந்த சாத்திரங்கள் ஆகிய நூல்களை அடக்கவிலையில் வெளியிட்டதோடு ஆண்டுதோறும் ஆங்காங்கு ஆண்டு விழாக்கள், நூல்

வெளியீடுகள், சிறப்புக் கூட்டங்கள், நாயன்மார்களின் திரு நாட்களைக் கொண்டாடுதல், திருமுறைகளை முற்றோதல் ஆகிய சமயத் தொண்டுகளைத் தொடர்ந்து செய்து வருவதோடு '' சித்தாந்தம் '' என்னும் ஒரு திங்கள் இதழும், பல அறிஞர் பெருமக்களின் கட்டுரைகளோடு வெளியிட்டு வருகின்றது. ஆங்கிலத்திலும் ஒரு முத்திங்களிதழ் வெளி வருகிறது.

இத்தகைய சைவ சமயத் திருத்தொண்டினை ஆற்றிவரும் இப்பெருமன்றம் இது போது முத்துவிழாக் காண இருப்பதும், இப் பெருவிழா தில்லையில் நடைபெற இருப்பதும் உண்மைச் சமய உணர்வுடையோர் அனைவருக்கும் பெரு மகிழ்ச்சி தருவதாகும்.

முத்துவிழா மலர் சிறந்து விளங்கி நலம் பல நல்கவும், பெருமன்றத்தின் திருத் தொண்டு உலகெங்கும் பரவவும், இதில் பங்கு பற்றியுள்ள அனைவரும், குறிப்பாகத் தலைவர் மும் மொழிப் புலவர் பேராசிரியர் திரு. பெ. திருஞானசம்பந்தம், எம். ஏ., எல்.டி., அவர்களும் நீடினிது வாழ்ந்து இம் மன்றத்தைச் சிறக்கச் செய்யவும் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

(சிவம்)

உ

சிவமயம்

சூரியனார் கோயில் ஸ்ரீசிவாகா யோகிகள் ஆதீனம்

26-வது குருமகா சந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்

18–2–1986

ஆசியுரை

ஆன்மாக்களுடன் அறிவுக்கு அறிவாய் நின்று உணர்த்தும் மெய்ப்பொருளாகிய சிவ பரம்பொருள் ஒன்றாய் உடனாய், வேறாய் நின்று அருள் புரியும். உயிர்கள் நிலைத்து வாழ் வதற்கு ஒன்றாயும், உயிர்கள் பொருள்களை அறிதற்கு ஏதுவாய் வேறாய் நின்றும், உயிர்கள் சுதந்திர ஹீனம் உடையனவாதலின் அனுபவிக்கும்படி செலுத்துதற்கு உடனாய் நின்றும் வினைக்கு ஈடாக தநு கரண புவன போகங்களை அளித்தும் பக்குவப்பட்ட தீவிர தரமுள்ள முத்தான்மாக்களுக்கு மும்மலமாம் தளையை வேரறுத்து பாசம் நீக்கித் தன் பாதம் அருளி உய்யக் கொள்ளும் நெறியை வகுத்துச் செவ்வே கூறுவது சைவ சித்தாந்தம். சிவாகமம் முன்னூல். சிவஞான போதமும், சித்தியும் வழிநூல்கள். சிவப்பிரகாசம் போன்றவை கள் சார்பு நூல்கள். அவற்றைத் தன்னகத்தே கொண்ட சிறப்பினையுடையது சைவ சித்தாந் தம். சுருங்கக் கூறின் பதி என்பது சிவம். பாசம் என்பது பசுக்களாகிய உயிர்களை ஈசனிடத்துப் பொருந்தவிடாமல் தடுக்கும் தளை. இறையருளால் உயிர்கள் பாச நீக்கம் பெற்று பரமேஸ்வரனிடம் சென்றடைந்து பேரின்பம் பெறுதலே உயிர்களுக்கு உய்யும் நெறி. இச் செந்நெறியைத் தடை விடைகளால் கூறும் சாத்திரமே சைவ சித்தாந்தம். இத்தகு திருவருள் கூட்டுவிக்கும் சிறந்த சாத்திரத்தை – முடிந்ததன் முடிபை எல்லோரும் கற்றுச் சிறக்க வேண்டும் என்னும் பேரவாவுடன் சென்னை 'சைவ சித்தாந்தப் பெருமன்றம்' எண்பது ஆண்டுக் காலமாக ஒல்லும் வகையெல்லாம் பணிபுரிந்து வருவது நாடு நன்கறியும்.

சிவ பரம்பொருளின் திருவருள் துணை கொண்டு 1986 ஆம் வருடம் மே மாதம் 10, 11ஆம் நாட்களில் அம்பலக் கூத்தன் ஆடும் தில்லை மாநகரில் ''முத்து விழா'' கொண் டாடுவது அறிந்து மிக்க மகிழ்ந்தனம்.

விழா சிறப்புற அமையவும், விழா சிறக்கப் பங்கு கொள்ளும் அன்பர்கள் எல்லோரும் வாழ்விற்கு வேண்டிய எல்லா நலனும் வளமும் பெற்று புகழ் சேர் மகிழுடன் நீடூழி வாழவும் அருள் புரியுமாறு ஸ்ரீ ஞானப் பூங்கோதை சமேத ஸ்ரீ காளத்தீஸ்வரர் திருவடிகளைப் பிரார்த் திக்கின்றோம்.

''முத்து விழா மலர்'' சிவமணம் கமழ வெளிவந்து அன்பர்கள் கரத்தில் ஆய்வுக் கருவூலமாகத் திகழத் திருவருள் துணை புரியுமாக!

இங்ஙனம்,
தெய்வசிகாமணி பண்டார சந்நிதி,
ஆதீனகர்த்தர்.

உ

சிவமயம்

மயிலம் பொம்மபுர ஆதீனம்

ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் மடாலயம்,

மயிலம் & பொம்மயபாளையம்.

24–04–1986

ஆசியுரை

உலகின்கண் தோன்றிய உயிர்கள் உய்வடைய வேண்டுமென்ற பெருங்கருணைத் திறத்தால் பரம்பொருளாம் இறைவன் '' சிவ பெருமானாகத் திருமேனி கொண்டுள்ளான். சிவம் என்ற சொல் மங்கலம் என்ற பொருளைத் தரும். மங்கலமாவது நன்மை என்பர் ஆன்றோர். நன்மை எனப்படுவன எல்லாவற்றுள்ளும் சிறந்த நன்மையாவது வீடு பேறு என்பது ஞானிகள் கண்ட உண்மை. எனவே உயிர்களுக்குச் சிறந்த நன்மையாகிய வீடு பேற்றைத் தருபவன் சிவ பெருமானாகிய பரம் பொருளாம். சிவபெருமானை அடைய நம்மனோர் கண்ட நெறியே சைவ நன்னெறியாம்.

சைவ நெறியினை மக்கள் அறிந்து பின்பற்றி உய்வடைய வேண்டுமென்ற அருளுணர் வால் திருக்கோவிலூராதீனம் ஸ்ரீலஸ்ரீ சிவ சண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் அவர்களால் 'சைவ சித்தாந்த மகா சமாஜம்' என்ற பெயரில் இவ்வமைப்புத் தோற்றுவிக்கப் பட்டது. சைவ சித்தாந்த மகா சமாஜம் மக்களுக்கு வாழ்வியல் நெறி – வழிபாடு முறை – தத்துவ ஆராய்ச்சி ஆகியவற்றைக் கூட்டங்கள் வாயிலாகவும், நூல், இதழ் வாயிலாகவும் விளக்கி அவர்களை நன்னெறியில் ஆற்றுப்படுத்தித் தன் குறிக்கோளை நிறைவேற்றிக்கொண் டிருப்பது கண்டு மகிழ்கிறோம்.

காலத்திற்கேற்ற மாற்றங்களுடன் பொலிவுறும் சமாஜம் தன் வைரவிழாவை தில்லையில் கொண்டாடியது போலவே முத்துவிழாவைத் தில்லையிலேயே கொண்டாட வேண்டுமென்பது தில்லைத் திருக்கூத்தனின் விருப்பம் போலும்.

சமாஜம் – பெருமன்றம் தன் தொண்டினைச் செவ்வனம் செய்திடவும், முத்துவிழா சிறப்புற நடைபெறவும், முத்து விழாவின் மலர் மணம் எங்கணும் பரவவும் மயிலந் தண் மாமலை முருகனின் திருவருளையும் நமதாதீன ஆதிகுரு ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் அவர்களின் குருவருளையும் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

எம். பக்தவத்சலம்,

"மல்லிகா"
48, வாறன் ரோடு, மயிலாப்பூர்,
சென்னை-4
14-2-1986

அன்புள்ள திரு. திருஞானசம்பந்தன் அவர்களுக்கு,

தங்களது மடல் கிடைத்தது. நன்றி. சைவ சித்தாந்தப் பெருமன்றம் 80 ஆண்டுகள் நிறைவு பெற்று முத்துவிழா கொண்டாட விருப்பது அறிந்து மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். நானும் ஒரு காலத்தில் இந்த பெருமன்றத்தின் செயலாளராக திரு. பாலசுப்பிரமணிய முதலியாருடன் பணியாற்றியுள்ளேன். மகாநாட்டிலும் கலந்து கொண்டுள்ளேன். அதில் பணியாற்றிய பெரியவர்களை நான் எப்போதும் மறந்ததில்லை.

முத்து விழா சிறப்பான முறையில் நடைபெறவும் "சிறப்பு மலர்" நன்கு மலரவும் என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புள்ள
(ஒப்.) எம். பக்தவத்சலம்.

பேராசிரியர் எஸ். வி. சிட்டிபாபு,
துணை வேந்தர்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

அண்ணாமலை நகர்,
பி.பி. 608 002

வாழ்த்துச் செய்தி

சைவ சித்தாந்தப் பெருமன்றம் தொடங்கி எண்பது ஆண்டுகள் ஆகின்றன என்பது வியப்பிற்குரிய செய்தியாகும். திருப்பாதிரிப் புலியூர் ஞானியார் சுவாமிகளும், மறைமலை அடிகளாரும் இதனைத் தோற்றுவித்ததோடு இதன் வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக இருந்தனர். வாய்ப்பு நேரும் போதெல்லாம் சித்தாந்த நூல்களைப் பொழிவுகள் வாயிலாகப் பரப்பி வந்தார்கள். அப்பெருமக்களின் சிறந்த தொண்டுகள் இன்னும் தமிழ் மக்களின் உள்ளங்களில் நின்று நிலவுகின்றன. பின்னர் திரு. வி. க. அவர்களும் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்களும் இப் பெருமன்றம் வாயிலாகப் பல நூல்களை அச்சேற்றினர். சைவ சித்தாந்த மாநாடுகள் பல நடைபெற்றன. இதன் வாயிலாக வெளிவந்த திங்கள் இதழ் களும் நன் முறையில் வெளியிடப்பெற்றன. சுருங்கக் கூறினால் சித்தாந்தச் செந்நெறியைப் பரப்புதற்குப் பல்லாற்றானும் இம்மன்றம் முயன்றுள்ளது. சிவஞான போதம், சிவஞான சித்தியார், போன்ற மெய்ப்பொருள் நூல்கள் தமிழக மெங்கும் பரவுதற்குக் காரணமாக இம் மன்றம் விளங்கியது.

இதன் முத்து விழாவை மிகப் பெருஞ் சிறப்புடன் நடத்த இருக்கிறார்கள் என்பதை அறியும் போது மனத்துக்கு நிறைவு தருகிறது. தில்லைப் பெருமான் நடனமிடும் சிதம் பரத்தைத் தேர்ந்தெடுத்து அவ் விழாவினை நடத்தத் திட்டமிட்ட விழாக் குழுவினர் உண்மை யிலேயே பாராட்டுதற்குரியவர்கள். டாக்டர் கே. அரங்கசாமிப் பிள்ளை அவர்கள் அறப் பணிச் செல்வராக விளங்குபவர்கள். அத்தகைய ஒருவரைத் தலைவராகக் கொண்டு விழா நடக்கப் பெறுவது மிகப் பொருத்தமாகும். விழா எல்லா வகையிலும் சிறப்புற நடை பெறவும் விழா மலர் நல்ல கருத்துக்களைத் தாங்கி வெளி வரவும் என் நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப் பெருமன்றம் பல் ஆண்டுகள் நிலைபெற்றுப் பணிபுரிய வேண்டும் என்னும் வேண்டுகோளை இறைவன் பால் வைத்து வாழ்த்துகிறேன்.

(ஒப்.) சை. வே. சிட்டிபாபு.

டாக்டர் **வசந்தி தேவி கோ,** எம்.ஏ., பிஎச்.டி.,
துணை வேந்தர்,
அன்னை தெரேசா மகளிர் பல்கலைக் கழகம்,
கோடைக்கானல்.

கோடைக்கானல்,
2-5-1986

எங்கும் சைவ நீதி பரவி விளங்கும் வகையில், மதிப்பிற்குரிய பேராசிரியர் திரு. பெ. திருஞானசம்பந்தன் அவர்கள் தலைமையில் செயல்பட்டு அரும்பெரும் தொண்டாற்றி வரும் சைவ சித்தாந்தப் பெருமன்றத்தின் முத்துவிழா மிகச் சிறந்த முறையில் அமைக்கப் பட்டிருப்பது சைவப் பெருமக்கள் அனைவருக்கும் மனநிறைவை யளிக்கின்றது. சைவ சித்தாந்தம் மேலும் மேலும் ஓங்கி வளர்ந்து தழைக்கவும், உலகெலாம் பயன்படும் வகையில் மக்களுக்கு அரிய பணி புரிந்து வரவும் இப்பெரு மன்றத்திற்கு என் உளங்கனிந்த வாழ்த்துக் களைத் தெரிவிப்பதில் மெத்த மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன்.

—o—

டாக்டர் வ. அய். சுப்பிரமணியன்
துணை வேந்தர்
தமிழ்ப் பல்கலைக் கழகம்

பேலஸ் கட்டிடங்கள்
தஞ்சாவூர்-713 001
நாள் : 30-4-86

அன்பரீர்,

சைவ சித்தாந்தப் பெரு மன்றத்தின் 80-ஆம் ஆண்டு நிறைவு விழா அழைப்பிதழ் கிடைத்தது. நன்றி. ஆண்டு விழா சிறக்க வாழ்த்துகிறேன்.

இங்ஙனம்,
அன்பன்
(ஒப்.) வ. அய். சுப்பிரமணியம்

—o—

LUCETTA MOWRY
WELLESLEY COLLEGE

11 Westwood Road,
Wellesley, MA, 02181
February 6, 1986 U. S. A.

Prof. P. Thirugnanasambandhan, M.A., LT.,
President, Saiva Saiddhanta Peru Mandram,
Madras 600 004.

I have been very much impressed and filled with admiration for your work. You have done so much through discussions and publications about Saiva Siddhanta for those devoted to the noble tradition of Saiva Siddhanta and for scholars throughout the world.

CARL-A KELLER
LE MONT - SUR - LAUSANNE
SWITZERLAND.

30-12-1985

The Saiva Siddhanta Perumanram is doing a remarkable job in promoting religious life. I wish it God's abundant blessings.

INSTITUT FOR INDOLOGIE
UNIVERSITT WIEN

UNIVERSITATSSTRASSE
7A-1010 VIENNA AUSTRIA
TEL. (0222) 43002569
Date : 24-1-86

I am happy to learn that you are going to celebrate the completino of eighty years of your 'Saiva Siddhanta Perumanram'. And I take this opportunity to wish you much success in your work.

JAIDEVA SINGH
Emeritus Professor.

D61/26F Siddhagiri Bagh,
Varanasi
4-12-84

Wishing your Souvenir a brilliant success.

JAIDEVA SINGH

திருப்பாதிரிப்புலியூர்
ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள்

தவத்திரு மறைமலை அடிகளார்

சைவ சித்தாந்தப் பெருமன்றத்தின் பணிகள்

தோற்றுவாய் :

திருப்பாதிரிப்புலியூர் அருள்மிகு ஞானியார் சுவாமிகள் முன்னிலையில் சுவாமி வேதாசலத்தால் (மறைமலை அடிகளால்) விசுவாவசு ஆண்டு ஆனி மாதம் 24ஆம்தேதி (7–7–1905 இல்) சைவ சித்தாந்த மகாசமாஜம் தோற்றுவிக்கப்பெற்றது. சமாஜம் தோன்றி 80 ஆண்டுகள் நிறைவுறுகின்றன. எனவே, இது (1986) முத்து விழா ஆண்டாகும். ''கோயில்'' எனப்படும் சிதம்பரத்தில் 1905 டிசம்பரில் முதல் ஆண்டு விழாவும் 50 ஆண்டுகள் நிறைவுற்றபின் பொன்விழாவும் 60 ஆண்டுகள் நிறைவுற்றபின் வைர விழாவும் சிறப்பாக நடைபெற்றன. இத் திருத்தலத்திலேயே 80 ஆண்டு நிறைவுக்குப் பின் முத்து விழாவும் நடக்க இருப்பது சாலப் பொருத்தமுடையதாகும்.

ஆண்டு விழா :

சமாஜம் தோன்றிய சில ஆண்டுகள் வரை ஆண்டுவிழா நடத்துவதே சிறப்பான பணியாக இருந்து வந்தது. அக் காலத்தில் அனைத்திந்திய காங்கிரஸ் பின்பற்றிய முறையான, ஆண்டு விழாத் தலைவரே காங்கிரஸ் தலைவராகவும் ஓராண்டுக்கு இருந்து வருவார் என்ற முறையில் சமாஜ ஆண்டு விழாத் தலைவரே சமாஜத் தலைவராகவும் ஓராண்டுக்கு இருந்து வந்தார். இம் முறை 1959ம் ஆண்டுவரை தொடர்ந்து வந்தது. அதற்குப் பிறகு ஆண்டு விழாவில் சமாஜத் தலைவர், செயலர், போன்ற பணியாளர்கள் ஆண்டு தோறும் தேர்ந்தெடுக்கப் பட்டனர். பணியாளர் விவரம் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

ஆண்டு விழா பல்லாண்டு காலமாக தொடக்க காலத்திலிருந்து டிசம்பர் கடைசியில் நடந்து வந்தது. இம்முறை சில ஆண்டுகளுக்கு முன் மாற்றப்பட்டு கோடை விடுமுறைக் காலமான மே மாதத்தில் நடந்து வருகிறது.

கோடை வகுப்புகள் :

முறையாகச் சித்தாந்த பாடங்களை மாணவர்க்கும், பிறர்க்கும், தகுதி உடைய பெரியோரைக் கொண்டு கற்பிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன், கோடை வகுப்புகள் நம் மகா சமாசத்தின் சார்பில் நடத்தப்பட்டன. ஏனோ சில ஆண்டுகள் இவ் வகுப்புகள் நடைபெற இயலவில்லை. சங்கராண்டான் பாளையத்தை அடுத்த மறலபாளையத்தில் திருவாளர் தேவசேனாதிபதி, எம்.பி. அவர்களின் ஆதரவில் 9–5–1979 முதல் 18–5–1979 வரை கோடை வகுப்பு நடைபெற்றது.

தேர்வுகள் :

மாணவர்களுக்குச் சைவ சித்தாந்த சமயப் புலமை உண்டாக்குவதற்காக நடை பெற்ற தேர்வுகள் சிறப்பாக விளங்கின. தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கு நற்சான்று இதழ்களும், பரிசுகளும் வழங்கப்பட்டன. எனினும், சில ஆண்டுகள் நடைபெற்ற இத்தேர்வுகள், தேர்வு எழுதுபவர் முன் வராததால் கைவிடப்பட்டது.

சித்தாந்தம் – திங்கள் இதழ் வெளியீடு :

நம் மகா சமாசம் தொடங்கி, ஏழாம் ஆண்டில், அதாவது 1912ஆம்ஆண்டில்இருந்து தான் ' சித்தாந்தம் ' என்ற பெயரில், ஓர் உயரிய திங்கள் வெளியீடு வெளிவரத் தொடங்கியது. அட்டாவதானம், பூவை கலியாண சுந்தர யதீந்திரர் அவர்கள் 'சித்தாந்தம் ' இதழின் முதல் ஆசிரியராக விளங்கினார்கள். அவர் ஆறு ஆண்டுகள் தொடர்ந்து பணி ஆற்றி, அரிய கருத்துகளை வெளியிட்டு, தமிழ் நாட்டில் சைவ சமய வளர்ச்சிக்கு அரும்பெரும் தொண்டு புரிந்தார்கள். இதழாசிரியர் விபரம் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

சைவ சித்தாந்த முத்திங்கள் ஆங்கில வெளியீடு :

சமாசத்தின் அறுபதாம் ஆண்டு நிறைவு விழாவின் போது அதாவது 1965ல் தொடங்

கப்பட்ட இவ்விதழ் இன்னும் தொடர்ந்து வெளி வருகின்றது. அமெரிக்கா. ரஷ்யா, ஆஸ்த்ரேலியா, ஜப்பான், பிஜித் தீவு முதலிய அயல் நாடுகளில் இவ் விதழுக்கு நல்ல வர வேற்பு இருக்கிறது. நம் தமிழகத்தில் போதிய உறுப்பினர்கள் சேராததால், போதிய பணம் வரவில்லை. கடந்த சில ஆண்டுகளில் ஹவாய் முனிவர் தவத்திரு சிவாய சுப்பிரமுனிய சுவாமி களின் உதவியால் 100 இதழ்களுக்கு மேல், மேல் நாடுகளுக்கு அனுப்ப முடிந்தது. இத னால், பணப் பற்றாக்குறை ஓரளவு நீங்கியி ருந்தது. இவ்வுதவி, சென்ற ஆண்டிலிருந்து கிடைக்காமையால், மீண்டும் பணப் பற்றாக் குறை ஏற்பட்டுள்ளது. இவ்விதழைத் தொடங்க அரும்பாடு பட்ட அந்நாள் தலை வர் திரு. கோ. மு. முத்துசாமிப் பிள்ளை அவர்களுக்குச் சமாசத்தின் பாராட்டு என் றென்றும் உரியது. இதனைச் சீரிய முறை யில் ஆசிரியர் பொறுப்பு ஏற்றுத் திரு. நல். முருகேச முதலியார் அவர்கள், தொடக்க காலம் முதல் ஆண்டு நடத்தித் தந்தார். அதன் பின்னர், டாக்டர் வி. எ. தேவசேனாபதி அவர்கள் ஆசிரியர் பொறுப்பை ஏற்று இதுநாள் வரை சிறப்புடன் நடத்தி வருகின்றார். இதன் இணை ஆசிரியராகத் திரு. சி. என். சிங்காரவேல் அவர்கள் விளங்கு கிறார்.

நூல் வெளியீடு :

திருவாளர் ம. பாலசுப்பிரமணிய முதலி யார் 1944 வரை 22 ஆண்டு காலம் செயலா ளராகப் பணி புரிந்தார். இக் காலத்தில் தான் திருமுறைகள், திருப்புகழ், காப்பியங் கள், சங்க நூல்கள் முதலியன அடக்கவிலைப் பதிப்புகளாக மிகச் சிறந்த முறையில், ஒரு பிழையும் இல்லாமல் செம்மையுற அச்சிடப் பட்டு வெளி வந்தன. இவ் வகையில் நம் மகாசமாசம் தமிழுக்கும், மொழிக்கும், சைவ சமயத்துக்கும் அரும்பணி ஆற்றி உள்ளது. இவை போல் சிறந்த பயனுடைய பதிப்புகள் கிடைப்பது அருமையே !

அறக்கட்டளைகள் :

சமாசம் தொடங்கிய 1905ம் ஆண்டு முதல் 1970 வரை சுமார் 65 ஆண்டுகளில் இரண்டு அறக்கட்டளைகள் ஏற்படுத்தப்பட்டன. ஒன்று திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளையால் ரூ. 2,000- கொடுத்து 1965ல் நிறுவப்பட்டது. மற் றொன்று 1968ல் கா. இராமநாதன் செட்டி யார் நினைவாக நிறுவப்பட்டது. 1970க்குப் பின் நாளதுவரை 27 அறக்கட்டளைகள் ரூ. 30,000 மூலதனத்துடன் நிறுவப்பட் டுள்ளன.

சமயாசாரியார், சந்தானகுரவர், முதலி யோருக்கு விழாக்கள் எடுக்க ஏற்பட்ட அறக் கட்டளைகள் தவிர ஆண்டுவிழா அறக்கட் டளை, கட்டிடநிதி, பொது நிதி என்று பல வகைகளில் பல ஆயிரங்கள் அன்பர்களால் கொடுக்கப்பட்டுள்ளன.

ஈழநாட்டின் பங்கு :

நம் மகா சமாசம் தோன்றிய நாளில் இருந்தே ஈழ நாட்டின் பங்கும் இதனுடன் இணைந்து உள்ளது என்பது முற்றிலும் உண் மையேயாகும்.

(அ) 1906ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் திரு ஆதிரை நன்னாள் தில்லையில் முதலாம் ஆண்டு விழா சிறப்பாக நடை பெற்றது. அவ் வமயம், ஈழ நாட்டுப் பெரியார் சர். பொன் னம்பலம், இராமநாதன் செட்டியார் அவர் கள் தலைமை தாங்கினார்கள்.

(ஆ) 1909ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் திருச்சிராப்பள்ளியில் நான்காம் ஆண்டு விழா நடைபெற்றது. அவ்வமயம் ஈழ நாட்டுப் பெரியார், திருவாளர் கனகசபைப் பிள்ளை அவர்கள் தலைமை தாங்கினார்கள்.

(இ) 1912 டிசம்பர் திங்கள் காஞ்சிபுரத் தில் ஏழாம் ஆண்டு விழா நடைபெற்றது. அவ்வமயம், ஈழ நாட்டுப் பெரியார் திரு வாளர் டி. பொன்னம்பலம் பிள்ளை அவர் கள் தலைமை தாங்கினார்கள்.

(ஈ) தஞ்சாவூரில் 1915ல் நடைபெற்ற பத்தாம் ஆண்டு விழாவில் திருவாளர் அம்பல வாண நாவலர் அவர்களும், 1916ல் மயிலாப் பூரில் நடைபெற்ற பதினோராம் ஆண்டுவிழா வில் முதலியார் சபாரத்தினம் அவர்களும் தலைமை தாங்கினார்கள். இவர்கள் இரு வரும் சிறந்த ஈழ நாட்டுப் பெரியோர் ஆவர்.

(உ) 1922ல் சென்னையில் நடை பெற்ற பதினேழாம் ஆண்டு விழாவில், ஈழ நாட்டுப் பெரியார் சர். பொன்னம்பலம் இராமநாதன் செட்டியார் அவர்கள் இரண்டாம் முறையாக தலைமை தாங்கினார்கள்.

(ஊ) 1935ல் திருவண்ணாமலையில் நடைபெற்ற முப்பாதாம் ஆண்டு விழாவில், ஈழ நாட்டுப் பெரியார், சுவாமி விபுலானந்தன் (மயில்வாகனம்) அவர்கள் தலைமை தாங்கினார்கள்.

(எ) 1953இல் பட்டுக்கோட்டை வே. நாகலிங்கம் பிள்ளையும் 1954இல் விருது நகரில் சர். கந்தையா வைத்திய நாதனும் 1955இல் சிதம்பரத்தில் இலங்கை முன்னாள் அமைச்சர் சு. நடேச பிள்ளையும் தலைமை தாங்கினார்கள்.

இவ்வாறு அவ்வப்போது ஈழ நாட்டுப் பெரியோர் பலர் மகா சமாசத்தின் விழாக்களிலும் மற்றும் பல நிகழ்ச்சிகளிலும் பங்கு கொண்டு வந்திருக்கிறார்கள். நம் சமாச உறுப்பினர்களில் ஈழ நாட்டு அன்பர்களும் பலர் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சைவ மங்கையர் மாநாடும்
சைவ இளைஞர் மாநாடும் :

1930ஆம் ஆண்டு முதல் அதாவது 25ஆம் ஆண்டு விழா முதல் மாநாட்டுடன் கூடச் சைவ இளைஞர் மாநாடு சைவ மங்கையர் மாநாடு ஆகியவை நடைபெறத் தொடங்கின.

முற்றோதல் :

1978-ல் காந்தி ஜயந்தி அன்று, அதாவது 2–10–1978-ல் முற்றோதல் என்ற முறை தொடங்கப் பெற்று நடைபெற்று வருகின்றது. பன்னிரு திருமுறையும் ஒரு முறை முற்றிலும் படித்து முடிக்கப்பட்டுள்ளது. இரண்டாவது சுற்றில், முதல் ஐந்து திருமுறைகள் படித்து முடிக்கப்பட்டு, ஆறாம் திருமுறை இப்பொழுது படிக்கப்பட்டு வருகின்றது.

படிப்பு வட்டம் :

23–10–1977 முதல் படிப்பு வட்டம் என்ற முறை ஏற்படுத்தப்பட்டு, ஞாயிற்றுக் கிழமை தோறும், காலை 9-30 மணி முதல் 12-30 மணிவரை முதலில் பலரும் பங்கு ஏற்கும் வண்ணம் பெரிய புராணத்தை முழுவதுமாகத் தொடர்ந்து விளக்கவுரையுடன் படித்து முடிக்கப்பட்டது. பின்னர், சிவஞான சித்தியார் சுபக்கமும் அவ்வாறே படித்து முடிக்கப்பட்டது. இப்பொழுது திருவாசகமும், திருக்குறளும் முறையாகப் படிக்கப்பட்டு வருகின்றன.

பெயர் மாற்றம் :

சைவ சித்தாந்த மகா சமாஜம் என்ற பெயரே தொடக்க முதல் இருந்து வந்தது. 1982 ஜூன் முதல் சைவ சித்தாந்த சமாஜம் என்ற பெயர் சைவ சித்தாந்தப் பெருமன்றம் என்று மாற்றப்பட்டது.

கட்டிட வாரியம் :

ருக்குமணி குக்கர், திருமுறைக் காவலர் அ. சோமசுந்தரம் செட்டியார் நிறுவிய கட்டிட வாரிய அறக் கட்டளை வருவாய் பெருமன்றத்தை நடத்தப் பெரிதும் உதவுகிறது. அதன் வருவாயிலிருந்துதான் மன்றம் இருக்கும் இடத்துக்கு வாடகை கொடுக்கப்படுகிறது. சமாசம் தோன்றி 80 ஆண்டுகள் நிறைவெய்திய பின்னும் சமாசத்துக்கென ஒரு கட்டிடம் ஏற்படாதது பெருங்குறையேயாகும்.

சமாஜ ஆண்டு :

சமாஜ ஆண்டு தொடக்க காலத்திலிருந்து 1981 வரை டிசம்பர் 1 முதல் நவம்பர் 30 வரை என்று இருந்தது. இது 1982 முதல் மாற்றப்பட்டு தற்போது சமாசம் ஆண்டு ஜனவரி 1 முதல் டிசம்பர் 31 வரை என்று உள்ளது.

பணியாளர் :

சமாசத் தலைவர், செயலர், சித்தாந்த இதழ் ஆசிரியர்கள் பற்றிய விவரங்கள் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

தொடக்க காலத்தில் ஞானியார் அடிகள், மறைமலை அடிகள் போன்றாரும் பின்னர் சச்சிதானந்தம் பிள்ளை, ருக்குமணி குக்கர், சோமசுந்தரம் செட்டியார் ம. பா. போன்றாரும் பெருமளவில் சாமாசத்துக்கு மகத்தான பணி ஆற்றியுள்ளனர்.

இப்பொழுது நடைபெறும் பணிகள் :

இதுவரை மேலே விவரித்த பணிகளுடன் கூடக் காலத்துக்கு ஏற்ற பல்வேறு சமயப் பணிகளையும் இப் பெருமன்றம் ஏற்று நடத்த முன்வந்துள்ளது. தற்போது இப்பெருமன் றம் நடத்தி வரும் சைவப் பணிகளின் தொகுப்பு வருமாறு :

(1) **ஆண்டு விழா :** (மாநாடு) ஆண்டு தோறும் மாவட்ட வாரியாக 2 அல்லது 3 நாட் கள் நடத்தி, சாத்திரம் தோத்திரம் பற்றிய அறிஞர்களின் கருத்தரங்கும் திருமுறை இசை யரங்குகளும் நடத்தி வருவது.

(2) **''சித்தாந்தம்'' :** தமிழ் திங்கள் இதழ் நடத்தி சைவ அறிஞர்களின் ஆய்வுக் கட்டுரை களுடன் பெருமன்ற நிகழ்ச்சிகளையும், ஏனைய சைவ சமய நிறுவனங்களால் நடத்தப்படும் சமயப் பிரசாரங்கள் விழாக்கள் பற்றிய செய் திகளையும் வெளியிட்டு வருவது. இந்தியா, வெளி நாடுகளில் உள்ள சுமார் 1,100 உறுப் பினர்களுக்கு இவ்விதழ் அனுப்பப்படுகின்றது.

(3) **''சைவ சித்தாந்தா'':** ஆங்கில முத்திங் கள் இதழ் சிறந்த கட்டுரைகள் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டு, உள்நாடு வெளிநாடுகளில் உள்ள சுமார் 400 அன்பர்கள் வாங்கிப்படிக் கின்றனர்.

(4) **நூல் வெளியீடு :** சைவ சமய நூல்கள் சிலவற்றையும், தோத்திரப் பாடல்கள் அடங் கிய சிறு, சிறு வழிபாட்டு நூல்களும் அவ் வப்போது வெளியிட்டு மிகக் குறைந்த விலைக்கு விற்கப்படுவது.

(5) **அறக்கட்டளை சொற்பொழிவுகள் :** பல அன்பர்கள் நிறுவியுள்ள அறக்கட்டளை யின் வட்டி வருவாயைக்கொண்டு ஆண்டு தோறும் கட்டளைதாரர்களின் விருப்பப்படி சமயாசாரியர், சந்தானாசாரியர் ஏனைய சைவச் சான்றோர் விழாக்கள் நடத்தி சைவ சமய சொற்பொழிவுகளும் நிகழ்த்தி வருவ துடன் சமுதாயப் பணிகள் சிலவும் செய்யப் படுகின்றன.

(6) **முற்றோதல் :** விரும்பிய சைவ அன் பர்கள் இல்லங்களில் திருமுறை முற்றோதல் விழா தொடர்ந்து மாகேசுவர பூசையுடன், அன்பர்கள் பலர் ஒன்றுகூடி, யாவரும் பதிகங் களை ஓதும் நல்லதொரு வாய்ப்பை அமைத்துக் கொடுப்பது.

(7) **படிப்பு வட்டம் :** பெருமன்ற அலுவல கத்தில் ஞாயிறு தோறும் காலை 2 மணி நேரம் பல்வேறு சைவ சாத்திர தோத்திர நூல்களைத் தொடர்ந்து படித்து, விளக்க வுரை கூறப்படுவது. தற்போது திருவாசகம், திருக்குறள் படிக்கப்பட்டு வருகின்றன.

(8) **இலவச தேவார இசைப் பயிற்சி வகுப்பு :** நாளும் இன்னிசையால் தமிழ் பரப் பிய ஞான சம்பந்தப் பெருமானின் அடிச் சுவட்டைப் பின்பற்றி திருமுறையை இசை யோடு பாடும் பயிற்சியை பலருக்கு அளித்து, இசையோடு தமிழ் பாடும் வல்லவர் பலரை உருவாக்கும் குறிக்கோளுடன், பெருமன்ற அலுவலகத்தில், சைதை நடராச ஓதுவாரால் இலவச தேவார வகுப்பு வாரம் இருமுறை நடத்தப்பட்டு வருகிறது. இவ்வகுப்பில் கலந்துகொள்ளும் மாணவ மாணவிகளுக்கு ஊக்கத்தொகை மாதந்தோறும் அளிக்கப்பட்டு வருவதுடன் ஆண்டுதோறும் பயிற்சியில் முன் னணியில் வருபவர்களுக்குத் தக்க பரிசுகளும் வழங்கப்பட்டு வருகின்றன. இளைஞர், முதிய வர், ஆடவர், மகளிர் பலர் கலந்துகொண்டு பயன்பெற்று வருகின்றனர்.

(9) **கண்பார்வை யற்றோருக்குக் கல்விப் பயிற்சி வகுப்பு :** சென்னை நகரில் உள்ள பார்வையற்ற பெண்கள் மறுவாழ்வு இல்லம் ஒன்றில் இருக்கும் சுமார் 40 பார்வையற்ற பெண்களுக்கு இப்பெருமன்றத்தின் சார்பில், இலவச தேவார வகுப்பும், திருத்தொண்டர் புராண விரிவுரை வகுப்பும் தக்க ஆசிரியர் களைக் கொண்டு நடத்தப்பட்டு வருகின்றன.

(10) **''காட்சி உரை'' :** ஆண்டுதோறும் மாநாடு நடக்கும் இடத்தில் சைவ சமய பொருட்காட்சி ஒன்றை நடத்தி கற்றாரும், மற்றாரும் கண்டுகளித்து சைவ சமய உண்மை களைக் ''காட்சி உரையில்'' தெரிந்துகொள் ளும் வாய்ப்பினை அளிக்கத்தக்க ஒரு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(11) **தல யாத்திரை :** மாநாட்டுச் சமயத் திலோ அல்லது வேறு விழாக்களின் போதோ

பெருமன்ற உறுப்பினர்கள் பலர் சேர்ந்து பாடல்பெற்ற சிவத்தலங்களைத் தரிசிக்கும் ஏற்பாடும் செய்யப்பட்டுள்ளது.

(12) **சிவத்தலப் பெருமை தொடர் சொற்பொழிவு :** மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையால் தொடங்குவார்க்கும் ஏனைய சைவ அன்பர்களுக்கும் ஒரு பொன்னான வாய்ப்பை அளிக்கும் ஒரு நிகழ்ச்சி திங்கள் தோறும் முதல் சனிக்கிழமை மாலை திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரி முதல்வர் டாக்டர் கு. சுந்தரமூர்த்தி ''சிவத்தலப் பெருமை'' எனும் தொடர் சொற்பொழிவு நடத்தி, பாடல்பெற்ற சிவத்தலங்களைப் பற்றி வரிசையாக விரிவுரை நிகழ்த்தி வருகிறார்கள். விழா தொடக்கத்தில் பேசப்படும் சிவத்தலங்களுக்குரிய திருமுறைப் பாடல்களை ஒரு இசைவாணர் பாடி வருகிறார். இது சுமார் மூன்று ஆண்டுகள் தொடர்ந்து நடைபெறும். இந்நிகழ்ச்சிக்கு முழு ஆதரவு நல்கி வருபவர்கள் இரண்டு சைவப் புரவலர்கள். இந்த அருமையான நிகழ்ச்சியில் திங்கள்தோறும் அன்பர்கள் நூற்றுக் கணக்கில் கலந்துகொண்டு பயன்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

(13) **பெரியாரைப் பேணல் :** ''அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை திறனறிந்து தேர்ந்து கொளல்'' எனும் பொய்யாமொழிக்கிணங்க, பல்லாண்டு சைவப் பணி புரிந்த 80 வயது ஆகும் பெரியார்களைப் பெருமன்றம் பாராட்டிப் போற்றுதல் செய்யும் நல்லதொரு தொண்டை மேற்கொண்டுள்ளது. இம்முறையில் கடந்த சில திங்களுக்கு முன்னர் நான்கு சைவப் பெரியார்களுக்குப் பாராட்டு விழா சிறப்பாக நடத்தப்பட்டது.

(14) **செய்தித்தாளில் பெருமன்ற நிகழ்ச்சிகள் :** பெருமன்ற விழாக்களிலும், நிகழ்ச்சிகளிலும் நேரில் கலந்துகொள்ள இயலாத அன்பர்கள் தெரிந்துகொள்ளும் வகையில் படிப்பு வட்டத்திலும், விழாக்களிலும், நிகழ்த்தப்படும் சொற்பொழிவுகளின் சுருக்கம் ''இந்தியன் எக்ஸ்பிரஸ்'' ஆங்கில நாளேட்டில் வெளியிடப்பட்டு வருவதை அனைவரும் அறிவர். இப்பணியை திரு. ஆர். ரங்காச்சாரி தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றார். இதனால் பெருமன்றத்தைப் பற்றியும், சைவ சமயத்தைப் பற்றியும், அப்பாலும் அடிசார்ந்த அன்பர்கள் பலரும் தெரிந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

(15) **'' ஆய்வு மாணவர் '' :** இப்பெருமன்றம் பல்லாண்டாகச் செய்து வரும் பணிகளின் பெருமைக்கு ஒரு சான்று. புகழ்வாய்ந்த அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தார், அங்கு தமிழ்த் துறையில் பயிலும் எம்.பில். ஆராய்ச்சி மாணவர் ஒருவருக்கு ''சைவ சித்தாந்தப் பெருமன்றத்தின் தமிழ்ப் பணி'' எனும்தலைப்பைத் தந்து ஆய்வுக் கட்டுரை தரும்படி ஆணையிட்டுள்ளார். அம்மாணவர் சமீபத்தில் பெருமன்ற அலுவலகத்திற்கு வந்து சின்னாள் தங்கி பெருமன்றத்தின் தமிழ்ப்பணி பற்றி குறிப்பு எடுத்துள்ளார்.

பெருமன்றக் கிளைகள்

பெருமன்றக் கிளைகள் பெரியார் மாவட்டத்தில் வெள்ளக்கோயிலிலும், தஞ்சை மாவட்டத்தில் திருவையாற்றிலும், கோவை நகரிலும் கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலிலும் செயல்பட்டு வருகின்றன. ஏனைய மாவட்டங்களிலும், கிளைகளைத் தோற்றுவிக்க அன்பர்கள் முயற்சி செய்யுமாறு வேண்டுகிறோம்.

ம. அண்ணாமலை
செயலாளர்

சைவ சித்தாந்தப் பெருமன்ற (மகாசமாஜ)ப் பணியாளர்கள் பற்றிய குறிப்பு

சைவ சித்தாந்த மகாசமாஜம் தொடங்கி 50 ஆண்டுக் காலத்தில் சமாஜத்திற்குத் தொண்டுசெய்த பல பெரியார்கள் பற்றிய விவரங்களைச் சமாஜப் பொன்விழா மலரில் (1955) காண்க. ஸ்ரீலஸ்ரீ ஞானியாரடிகள், மறைமலையடிகள், திரு.வி.க. போன்றோரின் குறிப்புக்கள் ஆங்குள்ளன. அவர்களையெல்லாம் நன்றியுடன் இம்முத்துவிழாவில் நினைவு கூர்கிறோம். எஞ்சிய பணியாளர்கள் இன்று வரை பணியாற்றி வருகின்றவர்கள் பற்றிய குறிப்பு கீழே தரப்படுகிறது.

திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார்,
பி.ஏ., பி.எல்.

இவர் சைவ சித்தாந்த சமாஜத்திற்குப் புகழ் ஈட்டிக்கொடுத்த தலைவர்களில் ஒருவர். இவர் 22 ஆண்டுகள் சமாஜச் செயலாளராகவும், இரண்டு ஆண்டுகள் மாநாட்டுத் தலைவராகவும் 6 ஆண்டுகள் ''சித்தாந்தம்'' ஆசிரியராகவும் இருந்தார். இவர் செயலாளராக இருக்கும்போதுதான் சமாஜம் நூற்றுக்கணக்கான நூல்களை அடக்க விலைப் பதிப்பாக வெளியிட்டது. இவர் அந்நூல்களுக்கு ஆராய்ச்சி முன்னுரைகளையும், பலவிதமான அட்டவணைகளையும் சேர்த்து அச்சிட்டவர். சமாஜ நூல்கள் என்றாலே, மலிவு விலைக்கும், தவறு இல்லாத மூல பாடங்களுக்கும், ஆராய்ச்சி முன்னுரைகளுக்கும் புகழ் பெற்றிருந்தன. பதினான்கு சாத்திரங்களையும் பழைய உரைகளோடு ஒரே நூலாக வெளியிட்டுள்ளார். மாபாடியம், சங்க நூல்கள் போன்ற பல நூல்கள் வெளியாயின. இவர் வைணவத்திலும் தேர்ச்சியடைந்து மாதவதாசன் என்ற புனை பெயரில் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம், ஆண்டாள் திருப்பாவை முதலிய நூல்களையும் வெளியிட்டுள்ளார்.

திரு. ச. சச்சிதாநந்தம் பிள்ளை, பி.ஏ., எல்.டி,

இவர் சைவப் பாதிரியார் என அழைக்கப் படுவார். வார வழிபாட்டு முறையை தமிழ் நாடு முழுவதும் பரப்பியவர். இவர் இரு ஆண்டுகள் சமாஜச் செயலாளராகவும், பல ஆண்டுகள் சமாஜத்தின் தலைவராகவும் இருந்தார். இவர்தான் முதன் முதலில் அறக் கட்டளை நிறுவினார். இது முன்னோடியாக இருந்து இதன்பின் பல அறக்கட்டளைகள் நிறுவப்பெற்றன.

திரு. அ. சோமசுந்தரம் செட்டியார், எம்.ஏ.

இவர் சமாஜத்தோடு நீண்டகாலத் தொடர்புடையவர். இவரை ருக்மணிகுக்கர் சோமசுந்தரம் செட்டியார் என்றுதான் அழைப்பர். இவர் தற்போது பெருவாரியாகப் பயன்படுத்தப்படும் பிரஷர் குக்கருக்கு முன்னோடியாக ஒரு குக்கரை உண்டாக்கியதால் அப்பெயர் பெற்றார். இவர் விஞ்ஞானத்தில் எம்.ஏ. பட்டம் பெற்றிருந்தாலும் திருமுறைகளில், முக்கியமாக தேவாரத்தில் ஆழ்ந்த பற்றும் தேர்ச்சியும் பெற்றவர். ''சித்தாந்தம்'' இதழ் துவக்குவதற்குப் பண உதவி செய்தார். இவர் சென்னையில் மாலை அங்காடியில் மூன்று கடைகளை வாங்கி ஒரு ''டிரஸ்ட்'' நிறுவி அதன் வருவாயை சமாஜப் பணிகளுக்கும், தேவாரத்தைச் சிறார்களுக்கு இசையோடு பயிற்றுவிப்பதற்கும் பயன்படுத்தும்படி ஏற்பாடு செய்தார். அவருக்குப் பின் அக்கடைகளின் மாடியில் மூன்று கடைகள் கட்டப்பட்டு அவற்றின் வருவாய் பெருக்கப்பெற்றது. இந்த வாரியத்தின் வருவாய்தான் இப்போது பெருமன்றத்திற்கு மிகவும் உதவியாக இருக்கிறது. அண்மையில் பெருமன்றம் வெளியிட்ட முதல் திருமுறை இக்கட்டட வாரியத்தின் வருவாயைக் கொண்டுதான் வெளியிடப்பெற்றது. பெருமன்றம் அவருக்கு மிகவும் கடமைப் பட்டுள்ளது.

திரு. மு. நாராயணசாமி முதலியார்

இவர் தாம் மறையும் வரை சமாஜத் தொண்டு செய்தவர். இவர் சமாஜத்தின்

சர். பொன்னம்பலம் இராமநாதன்

கனம் - எஸ். நடேசப் பிள்ளை
(பொன் விழாத் தலைவர்)

திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார்
(இளமுருகன்)

துணைச் செயலாளராகவும், செயலாளராக வும் இருந்து பெரும்பான்மையான பணிகளை அடக்கத்தோடு செய்து வந்தார். இவர் சில நூல்களையும் பதிப்பித்துள்ளார்.

திரு. ஒ. ஆலாலசுந்தரம் செட்டியார்

சென்னை கிறித்துவக் கல்லூரியின் தமிழ்த் துறைத் தலைவராக இருந்தவர். ஆரணியில் நடந்த மாநாட்டுக்குத் தலைவராக இருந்தார். பல நூல்களை இயற்றியுள்ளார்.

தற்போதைய பெருமன்றத் தொண்டர்கள்

திரு. ந. த. கிருஷ்ணசுவாமி, எம்.ஏ., எல்.டி.

இவர் 1933 முதல் பெருமன்ற உறுப்பின ராகவும், 1937 முதல் செயற்குழு உறுப்பின ராகவும் இருந்து பணிபுரிகின்றார். 1948 முதல் 1953 வரை துணைத் தலைவராகவும் இருந்தார். இவர் கட்டட வாரியத்தின் துவக் கத்திலிருந்து பல ஆண்டுகள் செயலாளராக இருந்து அவ்வாரியக் கடைகளுக்கு மாடி அமைத்து அவற்றின் வருவாயைப் பெருக்க முக்கிய காரணமாக இருந்தார்.

திரு. மு. அருணாசலம், எம். ஏ.

இவர் தமிழ் இலக்கியம் பற்றியும், சைவ சமயம் பற்றியும் தமிழிலும் ஆங்கிலத்திலும் பல நூல்கள் இயற்றியுள்ளார். சமாஜத்தில் நீண்டநாள் தொடர்புடையவர், பெருமன்றச் சார்பில் பல நூல்களைப் பதிப்பித்துள்ளார். ''சைவ சித்தாந்தம்'' இதழுக்கு பல ஆண்டு களாக ஆசிரியராக இருந்து வருகிறார்.

கைவண்டூர் இராஜி முதலியார்

பல ஆண்டுகளாக பெருமன்றச் செயற் குழுவில் உறுப்பினராக இருந்து பல கூட்டங் களில் உணவு, சிற்றுண்டி முதலிய அளித்து பெருந்தொண்டு புரிந்து வருகிறார்.

திரு. கீ. இராமலிங்கனார், எம்.ஏ.

இவருக்கு ''ஆட்சிமொழிக் காவலர்'' என்ற பட்டம் உண்டு. சில ஆண்டுகள் சமா ஜச் செயலாளராகவும் சுமார் 4 ஆண்டுகள் தொடர்ந்து தலைவராகவும், இருந்து தொண் டாற்றியுள்ளார். புதுமையான கருத்துக் களைக் கவர்ச்சியாகப் பேசக்கூடியவர். வாலா ஜாபாத் ஆண்டு விழாவில் சைவ சித்தாந்தச் சொற்பொழிவுகள் என்ற நூலைப் பதிப் பித்தார்.

வித்துவான் திரு. கோ. முத்துசாமிப் பிள்ளை, இ.ஆ.ப. (ஓய்வு)

பல மாவட்டங்களில் ஆட்சியாளராக இருந்து, ஓய்வுபெற்ற பின் ஆட்சி மொழிக் குழுத் தனி அலுவலராக இருந்தவர். ஓரிரு ஆண்டுகள் சமாஜச் செயலாளராக இருந்து பின் சுமார் 7 ஆண்டுகள் தலைவராக இருந் தார். பல ஆண்டு விழாக்கள் நிறைவுபெறக் காரணமாக இருந்தார். இவர் தலைவராக இருந்தபோது 1965-ல் அவர்தம் பெரு முயற்சியால் ''சைவ சித்தாந்தா'' என்ற ஆங் கில இதழ் துவங்கப் பெற்றது. இவர் பல நூல்கள் இயற்றியுள்ளார்.

திரு. கொ. நீ. சிங்காரவேலு, எம்.ஏ.

இவர் 1955 முதல் சமாஜத்தின் செயற் குழு உறுப்பினராக இருந்து தொண்டாற்றி வருகிறார். இவர் 1963முதல் 1965 வரை மூன்று ஆண்டுகள் சமாஜச் செயலாளராகவும், 1974 முதல் 1978 வரை சுமார் 5 ஆண்டுகள் தலைவராகவும், அதற்குபின் தொடர்ந்து துணைத் தலைவராகவும் பணிபுரிந்து வரு கிறார். அவர் செயலாளராக இருந்தபோது ஆங்கில இதழ் ''சைவ சித்தாந்தா'' துவங்கப் பெற்றது. ஆங்கில இதழுக்கு 1970 முதல் தொடர்ந்து இணை ஆசிரியராக இருந்து பணி புரிகிறார். ''உண்மை விளக்கம்'' என்னும் சாத்திர நூலைஆங்கிலத்தில் மொழிபெயர்த்து தெல்லிப் பழையில் நடந்த சமாஜ ஆண்டு விழாவில் வெளியிட்டுள்ளார்.

திரு. கு. நாராயணசாமி நாயுடு

திரு.வி.க.-வின் நெருங்கிய நண்பரும் சீட ரும் ஆவர். 1928-இல் தம் திருமணத்தின் போது திரு.வி.க. தலைமையில் சமாஜச் சிறப்பு மாநாடு நடத்தியவர். தம் சொந்த செலவில் சங்க நூல்களை அடக்க விலைப் பதிப்பாக வெளியிட்டவர். திருமுறைக் கையேடு, சமாஜப் பவளவிழா மலர் போன்ற நூல்கள் அவர் கைவண்ணம் காட்டுவன. சில ஆண்டுகள் செயலாளராகவும் செயற்குழு உறுப்பினராகவும் ஓராண்டு தலைவராகவும் இருந்திருக்கிறார்.

திரு. உ. நல். முருகேச முதலியார்

சமாஜத்தோடு நீண்டகாலத் தொடர் புடையவர். ஆங்கில முத்திங்கள் இதழ் ''சைவ சித்தாந்தா''வின் முதல் ஆசிரியர். ஓராண்டு மாநாட்டுக்குத் தலைமை வகித்தவர். பெருமன்றத்தில் பல சொற்பொழிவுகள் ஆற்றியவர். சைவ சித்தாந்தம், வீரசைவம் பற்றிய பல ஆங்கில நூல்களை இயற்றியுள்ளார். காசிப் பல்கலைக் கழகத்தில் சைவ சித்தாந்தச் சொற்பொழிவு நிகழ்த்தியவர்.

வித்துவான் அம்பை சங்கரனார்

பல் ஆண்டுகள் ''சித்தாந்த'' இதழின் துணை ஆசிரியராகவும் சமாஜச் செயலாளராகவும் இருந்து அரும்பணி புரிந்தவர். கவி புனைவதில் வல்லவர். சமாஜக் கிளைகளைத் தோற்றுவிப்பதில் துணை புரிந்தவர். சமாஜ வெளியீடுகள் சிலவற்றை உருவாக்கித் தந்தவர். இப்போது தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் அகராதித் துறையில் பணி புரிகிறார்.

டாக்டர் வ. ஆ. தேவசேனாபதி

திரு. முருகேச முதலியாருக்குப் பின் ''சைவ சித்தாந்தா'' ஆங்கில இதழ் ஆசிரியர் பொறுப்பேற்று பணி புரிந்து வருகிறார். சென்னைப் பல்கலைக் கழகத் தத்துவத் துறை இயக்குநராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். ''சைவ சித்தாந்தம்'' என்ற ஆங்கிலஆராய்ச்சி நூலை ஆக்கியவர். கனடா, ஐரோப்பா முதலான நாடுகளில் சைவம் பற்றி சொற்பொழிவாற்றியவர்.

திரு. கி. இல. பழனிசாமி

இரத்தினகிரி மாநாட்டில் துணைத் தலைவரானார். ஓராண்டு தலைவராக இருந்தார். மீண்டும் துணைத் தலைவராக இருந்து பணி புரிகிறார். பல அறக்கட்டளைகளை நிறுவியுள்ளார். முருகன் முந்நூல் போன்ற சில நூல்களைச் சொந்த செலவில் வெளியிட்டுள்ளார்.

திரு. ஏ. திருஞானசம்பந்தன்

தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய மும்மொழி வல்லவர். உமாபதி சிவத்தின் சதாத்ன சங்கிரக ஆங்கில மொழிபெயர்ப்பு, காச்மீர சைவம் முதலான நூல்களின் ஆசிரியர். பெருமன்றத் தலைவராக கடந்த ஐந்தாண்டுகளாகப் பணியாற்றி வருகிறார். காசி பல்கலைக் கழகத்தில் சைவ சித்தாந்தச் சொற்பொழிவாற்றியவர். மாநிலக் கல்லூரியில் 20 ஆண்டுகள் சமஸ்கிருதப் பேராசிரியராகவும், சென்னைப் பல்கலைக் கழகத்தில் மூன்றாண்டுகள் பதிவாளராகவும் பணியாற்றியவர்.

புலவர் ந. ரா. முருகவேள்

மறைமலையடிகளிடம் பயின்றவர். சிறந்த எழுத்தாளர்; கவிஞர். ''திருக்கோயில்'' ஆசிரியராகப் பல ஆண்டுகள் இருந்தவர். பல ஆண்டுகள் ''சித்தாந்தத்''-தின் ஆசிரியராகவும் இருந்தவர். சைவம், வைணவம் இரண்டிலும் சிறந்த ஆராய்ச்சியாளர். சிவஞான போதம், தெளிபொருட் பதவுரை முதலான பல நூல்களின் கட்டுரைகள் எழுதியவர். ஆசிரியர். சாத்திர தோத்திர நூல்களைத் தெளிவாக விளக்கும் ஆற்றல் படைத்தவர்.

திரு. மு. வடிவேலாயுதனார்

கிறித்துவக் கல்லூரித் தமிழ்த் துறைத் தலைவராக இருந்து ஓய்வு பெற்றவர். சிவ பூசைப் புண்ணியர். சமாஜத்தோடு நீண்டகாலத் தொடர்புடையவர். பல அரிய சொற்பொழிவுகள் ஆற்றியுள்ளார்.

யாழ்ப்பாணம் தங்கம்மா அப்பாகுட்டி

இலங்கையில் சைவம் பரப்பும் பெண்மணி. தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய நிருவாகி. சமாஜ ஆண்டு விழாவை 5 ஆண்டுகளுக்கு முன் சிறப்பாக நடத்தித் தந்தவர். காசியிலும் பிற இடங்களிலும் சைவ மங்கையர் மாநாட்டில் பங்குபெற்றவர். சிறந்த சொற்பொழிவாளர்.

திரு. ஆ. இராசரத்தின முதலியார்

பெருமன்றத்தில் பல சிறந்த அறக்கட்டளைகள் நிறுவி, திங்கள்தோறும் பல தலங்களைப் பற்றிய சொற்பொழிவும் ஆண்டுதோறும் திருக்குறள், திருவிளையாடல் புராணம் ஆகியவை முற்றோதல் செய்தும் பெருமன்றத்துக்கு புத்துணர்ச்சி ஊட்டி வருகிறார். அண்மையில் இராமேசுவரத்தில் நடந்த மாநாட்டுச் செலவுகள் முழுமையும் தாமே ஏற்றுக் கொண்டார்.

திரு. ம. அண்ணாமலை

இவர் 1982 முதல் பெருமன்றச் செயலாளராக இருந்து பெரும்பணி ஆற்றி வருகிறார். இவரது அயரா முயற்சியால் பெருமன்றக் கூட்டங்கள் மிகவும் சிறப்பாக நடைபெறுகின்றன. சிறார்களுக்குத் தேவார இசைப் பயிற்சி, ஊனமுற்றோர்களுக்குத் தேவாரப் பயிற்சி முதலிய புது துறைகளில் பெருமன்றப் பணியை விரிவு செய்கின்றார்.

சைவ சித்தாந்தப் பெருமன்றத்தில் அன்பர்களால் நிறுவப்பட்ட அறக்கட்டளைகள் விவரம்

எண்	நிறுவிய தேதி	கட்டளையின் பெயர்	நிறுவியவர் பெயர்	நிறுவிய நோக்கம்	தொகை
(1)	(2)	(3)	(4)	(5)	
1.	10–12–65	(அ) திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அறக்கட்டளை	திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை	திருநீலகண்டர், மங்கையர்க்கரசியார், உமாபதி சிவம், பாம்பன் சுவாமிகள் சொற்பொழிவுகள்	1000 ரூ.
2.	26–02–67	(ஆ) தந்தை-சபாபதிப் பிள்ளை, தாய்-மீனாட்சி அம்மாள் நினைவு	திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை	வைராக்கிய சதகம், கொலைமறுத்தல், பிரபு லிங்க லீலை, திருப்போரூர் சந்நிதி முறை, ஞானியார் அடிகள் திரு.வி.க.வும் பெண்மையும்'' சொற்பொழிவுகள்	1000
3.	30–11–68	கா. இராமநாதன் செட்டியார் நினைவுக் கட்டளை	திரு. கா. இராமநாதன் செட்டியார் தொகை ரூ.750 திரு.கொ.நீ. சிங்காரவேலு முதலியார் ரூ.250 மலேயோ அன்பர்கள் ரூ.1000	மெய்கண்டார் விழா சிறப்புறக் கொண்டாட	2000
4.	30–11–72	திருக்காரணி ம.வே. முருகேச முதலியார் அறக்கட்டளை	திரு. மு. சண்முக முதலியார்	அருணந்திசிவம், மறை ஞானசம்பந்தர் விழா	2500
5.	14–12–76	வா. தி. மாசிலாமணி முதலியார் அறக்கட்டளை	திரு. டி. எஸ். பழநிவேல் முதலியார்	வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் சொற்பொழிவு	1000
6.	01–11–77	குன்றத்தூர் சேக்கிழார் கழகக் கட்டளை	குன்றத்தூர் சேக்கிழார் கழகம் திருமறை திருநாவுக்கரசு மூலம்	சேக்கிழார் விழா	2000

Besant Nagar Chennai-20

(1)	(2)	(3)	(4)	(5)	(6)
7.	02—05—78	திருமதி கல்யாண சுந்தரம் அம்மையார் கட்டளை	திரு. கொ. நீ.சிங்கார வேலு முதலியார்	திருநாவுக்கரசர் விழா	1000
8.	02—05—78	திருமதி சந்திராபாய் அம்மையார் கட்டளை	டபிள்யு.ஜி. தனுஷ் கோடி முதலியார்	ஞானசம்பந்தர் விழா	1000
9.	-02—06—78	சேக்கிழார் சுவாமிகள் அறக்கட்டளை	எம். கே.முத்துராம லிங்கம் பிள்ளை	சேக்கிழார் விழா	1905
10.	30—05—78	அருணகிரிநாத சுவாமிகள் விழா	எம்.சிவராமன் பி.எ.	அருணகிரிநாதர் விழா	1000
11.	19—08—78	பாம்பன் சுவாமிகள் அறக்கட்டளை	திருமதி இராசாம் பாள் அம்மையார்	பாம்பன் சுவாமிகள் விழா	1000
12.	1978	சேக்கிழார் பற்றி ஆண்டு விழா சொற் பொழிவுக் கட்டளை	வேலூர் திரு. வி.ஆர். அண்ணாமலை முதலியார்	ஆண்டு விழாவில் சேக்கிழார் பற்றி சொற்பொழிவு	1000
13.	10—01—79	பெரிய பெருமாள் பிள்ளை நினைவு கந்தபுராண அறக்கட்டளை	திரு.பெ.திருஞான சம்பந்தம் பிள்ளை	கந்தபுராணச் சொற்பொழிவு	1000
14.	31—07—79	மாணிக்கவாசகர் அறக்கட்டளை (தந்தை காரைக்குடி சொ. நாராயணன் செட்டியார் நினைவு)	திரு. என். ஞானசம் பந்தம் செட்டியார்	மாணிக்கவாசகர் விழா	1000
15.	24—08—79	பெரியபுராண அறக்கட்டளை	திரு. டி.இராமசாமி முதலியார்	அறுபத்து மூன்று நாயன்மார்கள் விழாக் களை ஆண்டுதோறும் ஜூலை 21-ஆம் நாள் வரிசையாய்க் கொண்டாட	1000
16.	30—10—79	ஆர்க்காடு வரதராஜ செட்டியார் அறக்கட்டளை	திருமதி வ. மீனாம் பாள் அம்மையார் எ.எம். பத்மநாபச் செட்டியார்	சுந்தரமூர்த்தி சுவாமிகள் விழா	1000

(1)	(2)	(3)	(4)	(5)	(6)
17.	1981	திருநாவுக்கரசு சுவாமிகள் அறக்கட்டளை ஏ.எம்.சீதாராமச் செட்டியார் நினைவு	திரு. ஏ.எம்.பத்ம நாபச் செட்டியார்	திருநாவுக்கரசர் விழா	500
18.	1981	திருவிளையாடற் புராண அறக்கட்டளை	திரு.டி.இராமசாமி முதலியார்	திருவிளையாடற் புராணம் முறையாய் நடத்த	500
19.	1982	பாம்பன் சுவாமிகள் நூல் அறக்கட்டளை	திரு. பழநி சாது தங்கவேல் சுவாமிகள்	பாம்பன் சுவாமிகள் நூல்கள் பற்றிச் சொற்பொழிவு	1000
20.	31–05–82	சமூகத் தொண்டு அறக்கட்டளை ஆவேதி ஏ.கிருஷ்ண பிள்ளை நினைவாக	இலண்டன் திரு.கே.ஞானசூரியன்	பெருமன்ற ஆண்டு விழாக்களில் ஏழைகளுக்கு உணவு, உடை வழங்குதல்	2000
21.	1981	சோமசுந்தர நாயக்கர் அறக்கட்டளை	திரு.சி.ஜி.நடராஜ முதலியார்	சோமசுந்தர நாயக் கரைப் பற்றி சொற்பொழிவு	1000
22.	30–10–83	கந்தர் சஷ்டி விழாக் கட்டளை	திரு. பழநி சாது தங்கவேல் சுவாமிகள்	கந்தர்சஷ்டி விழாவை ஒட்டி, வழிபாடு, சொற்பொழிவு	1000
23.	19–02–84	''குறிஞ்சிப்பாடி ஆறுமுக முதலியார் பொன்னம்மாள் அறக்கட்டளை	திரு. ஏ. இராச ரத்தின முதலியார்	திருக்குறள் (அறத்துப் பால், பொருட் பால்); திருவிளையாடற் புராணம் முற்றோதல், கருத்தரங்கு திருமுறை இசையரங்கு ஆண்டு தோறும் ஏப்ரல் திங்களில் நடைபெற	6400
24.	27–04–84	திருவெம்பாவை அறக்கட்டளை	திரு. கி.இல. பழநி சாமிப் பிள்ளை	மார்கழித் திங்களில் திருவெம்பாவை விழா	1000
25.	31–03–85	திரு. ஆதி. வை. இராமலிங்கம் மணி விழா நினைவு அறக்கட்டளை	திரு. ஆதி. வை. இராமலிங்கம்	ஆண்டுதோறும் மாண வர்களுக்கு நல்லொழுக் கம் நன்னெறி புகட்டும் அருட்பாடல்கள் மனப்பாடப் போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு பரிசு வழங்கல்	5000
26.	11–05–85	திருமூலர் திருமந்திரம் விழா	திரு. கே.எல்.பழநி சாமிப் பிள்ளை	ஆண்டுதோறும் ஒருநாள் ''திருமூலரும் சைவ சித்தாந்தமும்'' எனும் பொருள்பற்றி சொற்பொழிவு நடத்த	1000

சைவ சித்தாந்தப் பெருமன்றக் காப்பாளர்களும் பணியாளர்களும்
1985–86

[குறிப்பு : ஓவ்வொருவர் பெயரின் முன் ''திரு'' என்றும்; இறுதியில் ''அவர்கள்'' என்றும் சேர்த்துப் படிக்கவும்].

காப்பாளர்கள்

(1) அருட்செல்வர் டாக்டர் திரு. நா. மகாலிங்கம், பொள்ளாச்சி
(2) கு. வைத்தியநாதன், திருப்பதிச்சாரம்
(3) சிவநேயச் செல்வர் ஆ. இராசரத்தின முதலியார், சென்னை
(4) காசிமடத்து அதிபர் கயிலை மாமுனிவர் தவத்திரு காசிவாசி முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள், திருப்பனந்தாள்
(5) சிவநேயச் செல்வி, துர்க்கா துரந்தரி தங்கம்மா அப்பாகுட்டி, இலங்கை

பணியாளர்கள்

தலைவர்

பேராசிரியர் பெ. திருஞானசம்பந்தன், எம்.ஏ., எல்.டி.

துணைத் தலைவர்கள்

(1) கொ. நீ. சிங்காரவேலு முதலியார், எம்.ஏ.
(2) கி. இல. பழநிச்சாமிப் பிள்ளை, பி.ஏ., எல்.டி.

செயலாளர்

திரு. ம. அண்ணாமலை

துணைச் செயலாளர்

திரு. ந. ஒளிஅரசு, பி.காம்.

பொருளாளர்

திரு. எம். சிவராமன், பி.ஏ.

'சித்தாந்தம்' ஆசிரியர்

திரு. மு. அருணாசலம், எம்.ஏ.

'சித்தாந்தம்' துணை ஆசிரியர்

திரு. சு. பொன்னுசாமி

'சைவ சித்தாந்தா' ஆங்கில இதழ் :

ஆசிரியர், டாக்டர் வி. ஏ. தேவசேனாபதி, எம். ஏ. பிஎச்.டி.
இணை ஆசிரியர் கோ. நீ. சிங்காரவேலு, எம்.ஏ.

சைவ சித்தாந்தப் பெருமன்றம் செயற்குழு உறுப்பினர்கள் 1985 — 86



செயற்குழு உறுப்பினர்கள்

(1) தி. கி. நாராயணசாமி நாயுடு

(2) கைவண்டூர் க. இராகு முதலியார்

(3) நே. த. கிருஷ்ணசாமி முதலியார், எம்.ஏ., எல்.டி.

(4 திரு. ச. சாந்தலிங்கம்

(5) திரு. பி. கே. கௌரிசங்கர்

(6) திரு. எம். இராமலிங்கம்

(7) திரு. எம். கிருஷ்ணன், இ.ஆ.ப. (ஓய்வு)

(8) கே. என். பலராமன்

(9) திரு. ஏ. கந்தசாமி, பி.ஏ., எல்.டி.

(10) சிவ. வேதாசலம்

(11) வித்துவான் ஏ. ஜே. இராமசாமி முதலியார்

(12) தருமைதாசன் திரு. சி. கிருஷ்ணகுமார்

முத்துவிழாக் குழுவினர்

(1) திரு. பெ. திருஞானசம்பந்தன், எம்.ஏ., எல்.டி.

(2) திரு. கொ. நீ. சிங்காரவேலு முதலியார், எம்.ஏ.

(3) திரு. கி. இல. பழநிசாமிப் பிள்ளை, பி.ஏ., எல்.டி.

(4) திரு. மு. அருணாசலம் ,எம்.ஏ.

(5) திரு. தி. கி. நாராயணசாமி நாயுடு

(6) திரு. அம்பை இரா. சங்கரன்

(7) திரு. நே. தா. கிருஷ்ணசாமி முதலியார், எம்.ஏ., பி.டி.

(8) திரு. ம. அண்ணாமலை

(9) திரு. சு. பொன்னுசுவாமி

(10) திரு. முருகு இராமலிங்கம்

சைவ சித்தாந்த பெருமன்ற மாநாட்டுத் தலைவர்கள் பட்டியல் (1930 வரை)

வ. எண்	ஆண்டு	இடம்	சைவர் மாநாட்டுத் தலைவர்
1.	1906	சிதம்பரம்	சர். பொன்னம்பலம் இராமநாதன் செட்டியார்
2.	1907	,,	பாண்டித்துரை தேவர்
3.	1908	நாகப்பட்டினம்	ஜே. எம். நல்லசாமிப் பிள்ளை
4.	1909	திருச்சி	சர். ஏ. கனகசபைப் பிள்ளை
5.	1910	இராமநாதபுரம்	சர். கே. பி. புட்டண்ண செட்டியார்
6.	1911	சென்னை	ஜே. எம். நல்லசாமிப் பிள்ளை
7.	1912	காஞ்சிபுரம்	டி. பொன்னம்பலம் பிள்ளை
8.	1913	வேலூர்	தவத்திரு ஞானியார் சுவாமிகள்
9.	1914	கூடலூர்	தவத்திரு ஞானியார் சுவாமிகள்
10.	1915	தஞ்சாவூர்	அம்பலவாண நாவலர்
11.	1916	மயிலாப்பூர்	முதலியார் சபாரத்தினம்
12.	1917	செம்பியம்	கல்யாணசுந்தர யதீந்திரர்
13.	1918	கும்பகோணம்	சுவாமிநாத பண்டிதர்
14.	1919	திருப்பனந்தாள்	சொக்கலிங்கத் தம்பிரான் சுவாமிகள்
15.	1920	மாயூரம்	சுவாமிநாத பண்டிதர்
16.	1921	சென்னை	பி. எம். சிவஞான முதலியார்
17.	1922	,,	சர். பொன்னம்பலம் இராமநாதன்
18.	1923	,,	பி. சுப்பையா முதலியார்
19.	1924	திருப்பாதிரிப் புலியூர்	தவத்திரு ஞானியார் சுவாமிகள்
20.	1925	சென்னை	மறைமலை அடிகள்
21.	1926	சென்னை	பி. சுப்பையா முதலியார்
22.	1927	புதுச்சேரி	தவத்திரு ஞானியார் சுவாமிகள்
23.	1928	சென்னை	சர். டி. என். சிவஞானம் பிள்ளை
24.	1929	திருவெண்ணெய் நல்லூர்	தவத்திரு ஞானியார் சுவாமிகள்

1930 முதல் சைவர் மாநாடு, சைவ மங்கையர் மாநாடு, இளைஞர் மாநாடுகள் தலைமை ஏற்றோர் விவரம்

வ.எண்	ஆண்டு	இடம்	சைவர் மாநாட்டுத் தலைவர்	மங்கையர் மாநாட்டுத் தலைவர்	இளைஞர் மாநாட்டுத் தலைவர்
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
25. வெள்ளி விழா	1930 மார்கழி	சென்னை	பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார்	ஆர்.எஸ்.சுப்புலட்சுமி அம்மையார்	கா. சுப்பிரமணியப் பிள்ளை
26.	1931	தூத்துக்குடி	ச. சச்சிதானந்தம் பிள்ளை	திருவரங்க நீலாம்பிகை அம்மையார்	சாமி வேலாயுதம் பிள்ளை
27.	1932	கூவம் (திருவிற்கோலம்)	மா.வே.நெல்லையப்ப பிள்ளை	பண்டிதை கிருஷ்ணவேணி அம்மையார்	தி.கி.நாராயணசாமி நாயுடு
28.	1933	கருந்திட்டைக்குடி (கரந்தை)	ந.மு.வேங்கடசாமி நாடார்	சரோஜினி மாணிக்கவாசக அம்மையார்	நீ. கந்தசாமிப் பிள்ளை
29.	1934	திருஅதிகை	திரு.வி.கல்யாணசுந்தரனார்	டி.என்.தாணு அம்மையார்	கீ. இராமலிங்க முதலியார்
30.	1935	திருஅண்ணாமலை	சுவாமி விபுலானந்தர்	பண்டிதை அசலாம்பிகை அம்மையார்	ஜி. கல்யாணம் பிள்ளை
31.	1936	காஞ்சிபுரம்	ந. சிவகுருநாதப் பிள்ளை	நடைபெறவில்லை	பூ. ஆலாலசுந்தரம் செட்டியார்
32.	1937	வேலூர்	தவத்திரு ஞானியார் சுவாமிகள்	,,	அ. சிதம்பரநாதன் செட்டியார்
33.	1938	கோயம்புத்தூர்	ச.சச்சிதானந்தம் பிள்ளை	,,	சொ.அ. மணிவாசகம்
34.	1939	குன்றக்குடி	சி.கே.சுப்பிரமணிய முதலியார்	,,	வாயிநாகரம் வே. இராமநாதன்
35.	1940	மயிலம்	சி.எம்.இராமச்சந்திரன் செட்டியார்	,,	மு. அருணாசலம் பிள்ளை
36.	1941	திருச்சிராப்பள்ளி	தவத்திரு ஞானியார் சுவாமிகள்	,,	ரா. சண்முகசுந்தரன் செட்டியார்

(1)	(2)	(3)	(4)	(5)	(6)
37.	1942	சீகாழி	பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார்	,,	தூ. இராமநாதன் செட்டியார்
38.	1943	மதுரை	திரு.வி.கல்யாணசுந்தரனார்	ஈ.ந.இராஜேஸ்வரி அம்மையார்	பு. ர. சாமிநாதன்
39.	1944	பள்ளத்தூர்	ம. பாலசுப்பிரமணிய முதலியார்	க.ர.ஆதிலட்சுமி அம்மையார்	லெ.ப.கரு.இராமநாதன் செட்டியார்
40.	1945	சிவகாசி	இ.எம்.இராமச்சந்திரன் செட்டியார்	நீலாவதி இராமசுப்பிரமணியம் அம்மையார்	அ. மு. பரமசிவானந்தம்
41.	1946	திருச்செங்கோடு	எஸ். வையாபுரிப் பிள்ளை	புஷ்பம் நடராஜன் அம்மையார்	இ. சிவராமன்
42.	1947	கோயம்புத்தூர்	சாத்தூர் கந்தசாமி முதலியார்	அ.கு.காமாட்சி அம்மையார்	அ. ச. ஞானசம்பந்தம்
43.	1948	யாழ்ப்பாணம்	ம. பாலசுப்பிரமணிய முதலியார்	சிவகாமி அம்மையார்	கா. பொ. இரத்தினம்
44.	1949	ஆண்டு விழா	நடைபெறவில்லை		
45.	1950	கொழும்பு	தெ.பொ.மீனாட்சிசுந்தரம் பிள்ளை	பத்மாசனி அம்மையார்	ஆழ்வார் பிள்ளை
46.	1950	இராமநாதபுரம்	ச. சச்சிதானந்தம் பிள்ளை	ஆர். இராசரத்தினம் அம்மையார்	குன்றக்குடி அடிகளார்
46.	1951	குன்றக்குடி	ஓ.பி.இராமசாமி ரெட்டியார்	கா.இராஜேஸ்வரி அம்மையார்	முத்துவேங்கடாசலம் ஐயர்
47.	1952	ஆண்டு விழா	நடைபெறவில்லை		
47.	1953	ஈரோடு	குன்றக்குடி அடிகளார்	ஈசுவர வடிவு அம்மையார்	அ. ச. ஞானசம்பந்தன்
48.	1953	சென்னை	வட்டுக்கோட்டை நாகலிங்கம் பிள்ளை	மரகதம் சிவபூஷணம் அம்மையார்	வ.அ.தேவசேனாபதிப் பிள்ளை
49.	1954	விருதுநகர்	சர். கந்தையா வைத்தியநாதன்	பாகீரதி அம்மையார்	சி. இராமலிங்க முதலியார்
பொன் விழா					
50.	1955	சிதம்பரம்	சு. நடேசப் பிள்ளை	அ.கு.காமாட்சி அம்மையார்	க. வெள்ளைவாரணனார்
51.	1956	திருப்பெண்ணாகடம்	சு. நடேசப் பிள்ளை	கற்பகவள்ளி அம்மையார்	ந. ரா. முருகவேள்

52.	1957	மயிலாப்பூர்	ம. பாலசுப்பிரமணிய முதலியார்	ஜோதி வெங்கடாசலம் அம்மையார்	ச. சிவகுமாரன்
53.	1958	மயிலம்	க. வஜ்ஜிரவேல் முதலியார்	மங்கையர்க்கரசி அம்மையார்	அடிகள் ஆசிரியர்
54.	1959	வாலாஜாபாத்	தவத்திரு சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள்	சௌந்தரம் கைலாசம் அம்மையார்	ந. சஞ்சீவி
55.	1960	திருக்கேதீஸ்வரம்	ச. சச்சிதானந்தம் பிள்ளை	ர. ஆதிலட்சுமி அம்மையார்	அம்பை இரா. சங்கரனார்
56.	1961	பழனி	ஔவை சு. துரைசாமிப் பிள்ளை	புஷ்பம் நடராஜன் அம்மையார்	நா. ப. தணிகை அரசு
57.	1962	சென்னை	நல். முருகேச முதலியார்	மீனாட்சி சுந்தரசிவை	தி. செ. பழனிவேல்
58.	1963	புதுச்சேரி	கா. இராமநாதன் செட்டியார்	மதுரை மீனாட்சி நல்லகிருஷ்ணன் அம்மையார்	தவத்திரு மாணிக்கவாசக ஞானதேசிக சுவாமிகள்
59.	1964	திருப்போரூர்	க. அரங்கசாமி முதலியார்	காமாட்சி குமாரசாமி அம்மையார்	ஜி. வரதராசப் பிள்ளை

வைர விழா

60.	1965	சிதம்பரம்	திரு. முருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்	ராதா தியாகராஜன் அம்மையார்	பெ. திருஞானசம்பந்தம் பிள்ளை
61.	1966	திருச்சிராப்பள்ளி	தவத்திரு ஞானப்பிரகாசதேசிக பரமாசாரிய சுவாமிகள்	நடைபெறவில்லை	காசிநாததுரை
62.	1967	திருவெண்காடு	தவத்திரு மேலையூர் மாணிக்கவாசக ஞானதேசிக சுவாமிகள்	இந்திராசோமசுந்தரம்	ஆளுடைய பிள்ளை
63.	1968	சென்னை	திருவாசகமணி கே.எம்.பாலசுப்பிரமணியம்	தாரா நடராஜன்	கே. ஈ. அருணாசலம்
64.	1969	காஞ்சிபுரம்	நல். முருகேச முதலியார்	பா. நீலா அம்மையார்	சி. அருணைவடிவேல் முதலியார்
65.	1970	வேலூர்	கீ. இராமலிங்கனார்	சரோஜினிதேவி	க. வடிவேலாயுதம்
66.	1971	சேலம்	கா.பொ. இரத்தினம், எம்.பி. (இலங்கை)	இரத்தினா ஆர். நவரத்தினம்	சொ. சிங்காரவேலன்
67.	1972	திருநெல்வேலி	அ. ச. ஞானசம்பந்தம்	சரோஜா அம்மையார்	க. வடிவேலாயுதம்

(1)	(2)	(3)	(4)	(5)	(6)
68.	1973	சீகாழி	வெள்ளைவாரணனார்	புஷ்பம் நடராஜன்	மாயூரம் ரா. ராஜசேகரன்
	1974		ஆண்டு விழா நடைபெறவில்லை		
69.	1975	மாம்பாக்கம் குருகுலம் மதுராந்தகம்	டாக்டர் வ. தேவசேனாபதி	எம். ஈ. சரஸ்வதி	க. வடிவேலாயுதம்
70.	1976	சிவகங்கை	வஜ்ஜிரவேல் முதலியார்	சுந்தராம்பாள்	ந. ரா. முருகவேள்
71.	1977	இரத்தினகிரி	சு. கல்யாணம்	ஜெயகுமாரி பாஸ்கரன்	வெ. தெ. மாணிக்கம்
72.	1978	சின்னமனூர்	மறை திருநாவுக்கரசு	குழந்தை அம்மாள்	இளமுருகன்
73.	1978	பழனி	புரிசை சு. நடேச முதலியார்	தெய்வநாயகி ஜோதி	கு. வைத்தியநாதன்
74.	1980	ஆரணி (வ.ஆ.)	ஆலால சுந்தரம் செட்டியார்	தங்கம் அப்பாக்குட்டி	பச்சையப்பன்
75.	1981	தெல்லிப்புழை	முரு. பழ. இரத்தினம் செட்டியார்	ராதா தியாகராஜன் (வரவில்லை) தங்கம் அப்பாக்குட்டி (தலைமை)	ந. நாகலிங்கம்
76.	1982	காசி	காசிவாசி முத்துக்குமார சாமித் தம்பிரான் சுவாமிகள்	சா.தா. நம்பியாரூரன்	ஜெ. அண்ணாமலை
77.	1983	இராமேஸ்வரம்	காசிநாததுரை	குழந்தை அம்மாள்	ந. ரா. முருகவேள்
78.	1984	நாகர்கோவில்	பழ. இரத்தினம் செட்டியார்	பாகீரதி அம்மையார்	கி. சு. மணி
79.	1985	திருப்பேரூர்	தவத்திரு இராமசாமி அடிகளார்	சிவகாம சுந்தரி	தவத்திரு சுந்தர சுவாமிகள்
முத்து விழா					
80.	1986	சிதம்பரம்	மாபெரும்புலவர் கி. அருணை வடிவேலு முதலியார்	ந. சரோஜினி தேவி	தவத்திரு மௌன சுந்தரமூர்த்தி சுவாமிகள்

" சித்தாந்தம் " - தமிழ்த்திங்கள் - இதழ் ஆசிரியர்கள்

வ.எண். (1)	ஆண்டு (2)	இதழ் ஆசிரியர் (3)
1.	1912	பூ. கல்யாணசுந்தர யதீந்திரர்
2.	1918	கி. குப்புசாமி முதலியார்
3.	1921	இதழ் நடைபெறவில்லை
4.	1928	ம. பாலசுப்பிரமணிய முதலியார்
5.	1937	அ. சோமசுந்தரம் செட்டியார்
6.	1938	திரு. வி. உலகநாத முதலியார்
7.	1943	பு. ர. சாமிநாதனார்
8.	1944	ம. பாலசுப்பிரமணிய முதலியார்
9.	1945	ச. சச்சிதானந்தம் பிள்ளை
10.	1947	சி. எம். இராமச்சந்திரன் செட்டியார்
11.	1954	ம. பாலசுப்பிரமணிய முதலியார்
12.	1956	சி. எம். இராமச்சந்திரன் செட்டியார்
13.	1958	புலவர் ந. ரா. முருகவேள்
14.	1962	அ. சோமசுந்தரம் செட்டியார்
15.	1963	மு. அருணாசலம்
16.	1972	கல்யாணம்
17.	1978–79	ந. ரா. முருகவேள்
18.	1980–86	மு. அருணாசலம்

சமாஜத்தின் திங்கள் வெளியீடாகிய சித்தாந்தம், சைவ சித்தாந்த மகா சமாஜ உறுப்பினர் யாவர்க்கும் இலவசமாகத் திங்கள்தோறும் அனுப்பப்படுகிறது. இத் திங்கள் வெளியீடு 1912-ல் தொடங்கப்பெற்றது. இன்றும் தொடர்ந்து வெளி வருகின்றது. இடையில் 1921 முதல் 1927 முடிய ஏழு ஆண்டுகள் இதழ் வெளிவரவில்லை.

சிறப்புக் கூட்டங்களின் தலைவர்கள்

1.	7–7–1905	திருப்பாதிரிப்புலியூர், ஞானியாரடிகள் — தொடக்கம்
16.	1921	கும்பகோணம், சாமிநாத பண்டிதர் — மகாமகம்
20.	1925	சென்னை, ஸர். பி. இராமநாதன்
22.	1927	சென்னை, ஞானியார் சுவாமிகள்
24.	1929	நெல்லை, ச. சச்சிதானந்தம் பிள்ளை
	16, 21-5-1929	திருப்பாதிரிப்புலியூர், சாமி வேதாசலம்
25.	5–6–1930	இரும்பூளை, வாலையானந்தர்
	22–2–1930	சென்னை, இராஜம்மாள் — சைவ மங்கையர் — தொடக்கம்
	18–4–1930	திருவிடைமருதூர், கா. சுப்பிரமணிய பிள்ளை — சைவ இளைஞர்— தொடக்கம்
	29–8–1930	கிழக்கு மருதூர் திரு. வி. கலியாணசுந்தர முதலியார்—வெள்ளிவிழா
29.	2–9–1934	மயிலை, ஞானியாரடிகள்
30.	19–7–1935	சென்னை, ஞானியாரடிகள்
32.	1937	பெங்களூர், திவான்பகதூர் கீ. தெய்வசிகாமணி முதலியார்
58.	1963	மலேயா, சைவ சித்தாந்த சிறப்பு மாநாடு, ராய. சொக்கலிங்கம் செட்டியார்

கோடை வகுப்புத் தலைமை ஆசிரியர்கள்

1.	1944	பாபநாசம் வச்சிரவேலு முதலியார், சிவகுருநாதர்
2.	1945	தில்லை, பண்டிதமணி, மு. கதிரேசன் செட்டியார்
3.	1946	ஸ்ரீவில்லிபுத்தூர், ஔவை துரைசாமிப் பிள்ளை
4.	1947	வித்தியாலயம், ஔவை துரைசாமிப் பிள்ளை
5.	1948	குன்னூர், டி. எஸ். கந்தசாமி முதலியார்
6.	1949	ஓத்தை, இரா. சண்முகசுந்தரஞ் செட்டியார்
7.	1950	கோவை, முத்து, மாணிக்கவாசகனார்
8.	1963	திருச்சிற்றம்பலம், க. வச்சிரவேல் முதலியார்
9.	1964	மஞ்சக்கொல்லை, க. வச்சிரவேல் முதலியார்
10.	1964	வாலாசாபாத், க. வச்சிரவேல் முதலியார்
11.	1979	சங்கராண்டாம் பாளையம், அடிகள் ஆசிரியர்

சைவ சித்தாந்தப் பெருமன்றத் தலைவர்கள்

1.	1959	நல். முருகேச முதலியார்
2.	1960	சோமசுந்தரம் செட்டியார்
3.	1961	சோமசுந்தரம் செட்டியார்
4.	1962–69	ஜி. எம். முத்துசாமிப் பிள்ளை
5.	1970–73	ஜி. இராமலிங்க முதலியார்
6.	1974	சு. சோமசுந்தரம் செட்டியார் (1-1-74 முதல் 26-5-74 முடிய)
7.	1975–78	கொ. நீ. சிங்காரவேலு
8.	1978–79	கி. இல. பழநிசாமி பிள்ளை
9.	1980–81	தி. கி. நாராயணசாமி நாயுடு
10.	1981–86	பெ. திருஞானசம்பந்தம் பிள்ளை

சைவ சித்தாந்தப் பெருமன்றச் செயலாளர்கள்

1.	1905—10	சுவாமி வேதாசலம் (மறைமலையடிகள்)
2.	1910—11	இருக்கம் ஆதிமூல முதலியார்
3.	1911—12	ச. சச்சிதானந்தம் பிள்ளை
4.	1912—17	சி. குப்புசாமி முதலியார்
5.	1917—20	கா. சுப்பிரமணியம் பிள்ளை
6.	1920—21	வா. தி. கோவிந்தராச முதலியார்
7.	1921—43	ம. பாலசுப்பிரமணிய முதலியார்
8.	1944—46	கா. இராமநாதன் செட்டியார்
9.	1946—53	க. அரங்கசாமி முதலியார்
10.	1953—55	ச. சிவகுமாரன்
11.	1955—57	தி. கி. நாராயணசாமி நாயுடு
12.	1957	கோ. முத்துசாமி பிள்ளை
13.	1958	ம. சி. நித்தியானந்த முதலியார்
14.	1958—59	மா. ப. தியாகராச முதலியார்
15.	1959—61	கீ. இராமலிங்கனார்
16.	1961—63	ஜி. கல்யாணம் பிள்ளை
17.	1963	ச. சிவகுமார்
18.	1963—65	கொ. நீ. சிங்காரவேலு முதலியார்
19.	1965—67	தி. கி. நாராயணசாமி நாயுடு
20.	1967—68	சி. வடிவேல் பிளை
21.	1968—73	மு. நாராயணசாமி முதலியார்
22.	1974	தி. கி. நாராயணசாமி நாயுடு
23.	1975—77	ந. ரா. முருக்வேள்
24.	1977—82	அம்பை சங்கரன்
25.	1982—83	ஜெ. அண்ணாமலை
26.	1983—86	ம. அண்ணாமலை

சைவ சித்தாந்தப் பெருமன்றத்தின் சில முக்கிய வெளியீடுகள்

1. சுந்தரர் தேவாரம் (சமாஜப் பொன்விழா வெளியீடு)
2. திருநாவுக்கரசர் தேவாரம்
3. திருஞானசம்பந்தர் தேவாரம்
4. திருவாசகம், திருக்கோவையார்
5. திருவிசைப்பா, திருப்பல்லாண்டு
6. திருமந்திரம்
7. பதினோராம் திருமுறை
8. திருத்தொண்டர் புராணம்
9. சிவஞானபோதச் சிற்றுரை
10. சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கு உரையுடன்
11. சங்க இலக்கிய மூலம்
12. சீவக சிந்தாமணி மூலம்
13. நாலாயிர திவ்விய பிரபந்தம் 2
14. முருகன் முந்நூல் — உரையுடன்
15. ஞானியார் அடிகள் நினைவு மலர்
16. சைவ சமயச் சொற்பொழிவுகள்
17. திருப்போரூர்ச் சந்நிதி முறை
18. கந்தரனுபூதி — யந்திரங்களுடன் கூடிய உரை
19. சமாஜப் பொன்விழா மலர்
20. சிவஞானபோதம் (எளிய உரை)
21. குகார்ச்சனைத் திருமந்திரம்
22. சமாஜ வைரவிழா மலர்
23. சமாஜப் பவளவிழா மலர்
24. அம்மை தோத்திரத் திரட்டு
25. பஞ்ச புராணம்
26. முப்பொருள் இயல்பு
27. சைவப் புண்ணியக் கண்கள்
28. திருஞானசம்பந்தர் தேவாரம், முதல் திருமுறை
29. அம்மை தோத்திரத் திரட்டு
30. சைவ சமயக் கையேடு

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சைவசித்தாந்தப் பெருமன்றம்

முத்து விழா மலர்

கடவுள் வணக்கம்

முத்து முகிழும் திருமுறைப் பாடல்கள்

பன்னிரு திருமுறைகளுள் **முத்து** எனும் குறிப்புடையனவாகப் பாடல்கள் பலவுள்ளன. பன்னிரு திருமுறைகளுக்கும் வகைக்கொன்றாகப் பன்னிரண்டு பாடல்களையே இம் முத்துவிழா மலரில் கடவுள் வணக்கப் பாடல்களாக வெளியிட்டிருக்கின்றோம்.

திருச்சிற்றம்பலம்

1. அறம்கிளரும் நால்வேதம் ஆலின் கீழ்
இருந்தருளி அமரர்வேண்ட
நிறம் கிளர் செந்தாமரையோன் சிரம் ஐந்தின்
ஒன்று அறுத்த நிமலர் கோயில்
திறம்கொள்மணித் தரளங்கள் வரத் திரண்டு அங்கு
எழிற்குறவர் சிறுமிமார்கள்
முறங்களினால் கொழித்துமணி செல விலக்கி
முத்துஉலைப்பெய் முதுகுன்றமே.
(1-131-7)

2. தண்**முத்து** அரும்பத் தடம் மூன்றுடையான் தனை உன்னிக்
கண்**முத்து** அரும்பக் கழல் சேவடிகை தொழுவார்கள்
உள்**முத்து** அரும்ப உவகை தருவான் ஊர்போலும்
வெண்**முத்து** அருவிப் புனல்வந்து அலைக்கும் வெண்காடே
(2-61-3)

3. **முத்தின்** தாழ்வடமும் சந்தனக் குழம்பும்
நீறும் தன் மார்பினில் முயங்கப்
பத்தியார் கின்ற பாண்டிமா தேவி
பாங்கொடு பணிசெய நின்ற
சுத்தமார் பளிங்கின் பெரு மலையுடனே
சுடர் மரகதம் அடுத்தாற் போல்
அத்தனார் உமையோடு இன்புறுகின்ற
ஆலவாய் ஆவதும் இதுவே
(3-120-7)

4. சித்தத்து எழுந்த செழுங் கமலத்தன்ன சேவடிகள்
வைத்த மனத்தவர் வாழ்கின்ற தில்லைச் சிற்றம்பலவன்
முத்தும் வயிரமும் மாணிக்கந் தன்னுள் விளங்கிய தூ
மத்த மலர்கண்ட கண்கொண்டு மற்று இனிக் காண்பது என்னே
(4-80-9)

5. **முத்தினைப்** பவளத்தை முளைத்த எம்
தொத்தினைச் சுடரைச் சுடர்போல் ஒளிப்
பித்தனைக் கொலும் நஞ்சினை வானவர்
நித்தனை நெருநற் கண்ட வெண்ணியே
(5-17-1)

6. திருமணியைத் தித்திக்கும் தேனைப் பாலைத்
தீங்கரும்பின் இன்சுவையைத் தெளிந்த தேறல்

குறிப்பு :- முதலெண் திரு முறையையும் இரண்டாவது எண் பதிக வரிசையையும் மூன்றாவது எண் பதிகப்பாட்டின் வரிசையையும் குறிப்பிடுவன.

குருமணியைக் குழல் மொந்தை தாளம் வீணை
கொக்கரையின் சச்சரியின் பாணியானைப்
பருமணியைப் பவளத்தைப் பசும்பொன் முத்தைப்
பருப்பதத்தில் அருங்கலத்தைப் பாவம் தீர்க்கும்
அருமணியை ஆரூரில் அம்மான் தன்னை
அறியாது அடிநாயேன் அயர்த்தவாறே
(6–29–1)

7. பத்திமையும் அடிமையையும் கைவிடுவான் பாவியேன்
பொத்தின நோய் அது இதனைப் பொருள் அறிந்தேன் போய்த்தொழுவேன்
முத்தினை மாமணிதன்னை வயிரத்தை மூர்க்கனேன்
எத்தனைநாள் பிரிந்திருக்கேன் என் ஆரூர் இறைவனையே
(7-51–1)

8. வேண்டும் வேண்டும் மெய்யடியார் உள்ளே விரும்பி எனை அருளால்
ஆண்டாய் அடியேன் இடர்களைந்த அமுதே
அருமா மணி **முத்தே**
தூண்டா விளக்கின் சுடர் அனையாய் தொண்டனேற்கும் உண்டாங்கொல்
வேண்டாது ஒன்றும் வேண்டாது மிக்க அன்பே மேவுதலே.
(32. பிரார்த்தனைப் பத்து–4.)

9. **முத்து** வயிரமணி மாணிக்க மாலைகள் மேல்
தொத்து மிளிர்வனபோல் தூண்டு விளக்கு ஏய்ப்ப
எத்திசையும் வானவர்கள் ஏத்தும் எழில்தில்லை
அத்தனுக்கும் அம்பலமே ஆடரங்கம் ஆயிற்றே
(பூந்துருத்தி நம்பி காடநம்பி)
(கோயில்–1.)

10. **முத்தி**னின் **முத்தை** முகிழ் இள ஞாயிற்றை
எத்தனை வானோரும் ஏத்தும் இறைவனை
அத்தனைக் காணாது அரற்றுகின்றேனை ஓர்
பித்தன் இவன் என்று பேசுகின்றாரே.
(திருமந்திரம்–2984)

11. பரு**முத்து** உதித்திடும் சீர்மத்த யானை நுதல் பகுந்திட்டு
உரும்ஒத்த திண்குரல் சீயம் திரிநெறி ஓங்கு வைவாய்ப்
பொரு முத்தலை வேல்படைக் கம்பர் பூங்கயிலைப் புனத்துள்
தரு**முத்து** அன நகை தன் நசையால் வெற்ப சார்வரிதே
(பட்டினத்துப் பிள்ளையார்
திருவேகம்பமுடையார்
திருவந்தாதி–17)

12. சித்தம் நிலாவும் தென்திரு ஆரூர் நகராளும்
மைத்தழை கண்டர் ஆதிரை நாளின் மகிழ் செல்வம்
இத்தகைமைத்தென்று என்மொழிகேன் என்று அருள் செய்தார்
''**முத்து**விதானம் மணிப்பொற்கவரி'' மொழிமாலை.
(பெரியபுராணம்—திருநாவுக்கரசர்–235)

திருச்சிற்றம்பலம்

தொகுத்தவர் :–
வித்துவான் அம்பை. இரா. சங்கரனார்,
தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்–5.

பிள்ளை யுடனுண்ணப் பேசியழைத் தாரன்பு
துள்ளு சிறுத்தொண்டர் சோமேசா — உள்ளுங்காற்
பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்

**— ஸ்ரீ மாதவச் சிவஞான யோகிகள், குளத்தூர்ச்
சோமேசர் முதுமொழி வெண்பா.**

உ

திருச்சிற்றம்பலம்!

சென்னை சைவசித்தாந்தப் பெருமன்றத்தின் எண்பதாம் ஆண்டு நிறைவு

முத்து விழா வாழ்த்து மலர்

(பன்னிரு சீர்)

(1) பூவுலகில் பழமையொடு தெளிவுமியல்
நெறிபிழையாப் பொற்பும் பூண்டு
பொருவில்இலக் கணநலமும் புகழ்மிக்க
இலக்கியமும் பொருந்தி நிற்கும்
தாவில்சிவ நெறியுமுயர் தனிமொழியாம்
தமிழ்மொழியும் தழைக்கச் சென்ற
தலைமுறையில் **திருஞான சம்பந்தர்**
திருநாவுக் கரசர் போல
மேவிமொழி, சமயம்சார் புண்ணியக்கண்
இரண்டெனவே மிளிர்ந்த சீரார்
மேன்மைமிகு **திருப்புலிசை ஞானியார்**
மறைமலையார் மிகவும் எண்ணிச்
சேவுயர்த்த கொடி நாட்டி அமைத்த**சைவ**
சித்தாந்த மகாச மாஜம்
சீர்த்திமிகு பலபணிகள் ஆற்றி**முத்து**
விழாக்காணும் சிறப்பெய் திற்றே !

(2) தமிழகத்தின் தலைசிறந்த தலங்களிலும்
காசியிலும் தமிழர் வாழும்
கடல்கடந்த **ஈழத்தும் மலேசியநன்**
நாட்டினிலும் தகைசால் சான்றோர்
தமையழைத்துச் **சமுதாய சீர்திருத்த**
உணர்வோடு சமயம் மற்றும்
தமிழ்வளர்ச்சிக் காம்எழுச்சி யுடன்சைவர்
இளைஞர்மங் கையர் மாநாடும்
அமையஅருட் பாங்கோடு ஆண்டுவிழாக்
கொண்டாடி, **அடக்க விலையில்**
அரியதமிழ்ச் சமயஇலக் கியநூல்கள்
அச்சிட்டு வழங்கி நல்ல
சமயவகுப் புக்களையும் அருட்சான்றோர்
விழாக்களையும் தகநடத்தித்
தமிழகமெங் கும்சமய உணர்வதனை
வளர்த்ததுநம் சமாஜம் ஒன்றே !

(3) திங்கள்தொறும் **'சித்தாந்தம்'**
எனும்இதழ் செந்
தமிழிலும்முத் திங்கட் கொன்றாய்ச்
சீர்த்திமிகும் **ஆங்கிலத்தும்** வெளியிட்டே
சைவநெறி செழிக்க எங்கும்
துங்கமிகு சித்தாந்தத் தத்துவஉண்
மைகள்பரவத் தொடர்ந்து நல்ல-
தொண்டுகளைச் செய்துவரும்
பாங்கின்னும்
பல்வகையில் துளிர்த்தல் வேண்டும்
பொங்குதமிழ் உணர்வால்நம்
சமாஜமின்று
'பெருமன்றம்' எனும்பேர் பூண்டு
பொருததமிகுவளர்ச்சியுற்று வருகின்ற(து)
அன்பர்பலர் புகழ்சி றக்கத்
தங்கள்பெய ரால்நல்ல நல்லஅறக்
கட்டளைகள் தமைய மைத்துத்
தமிழ்ச்சைவ உணர்வுமிகத் தழைக்குநிலை
செய்துவரு கின்றார் நன்றே !

(4) தமிழ்த்தென்றல் **திரு. வி. க.** மா. பால
சுப்ரமணி யப்பேர்த் தக்கார்
சார்சச்சி தானந்தர் பெரியார், சி.
எம் **இராமச் சந்தி ரர்,சீர்**
தமிழ்நாரா யணசாமி கல்யாணம்
பிள்ளை யுயர்**அரங்க சாமி**
கவின்புலவர் முருக**வேள்** ஆதிபலர்
செய்பணிகள் கருதல் வேண்டும்,

அமுதனைய **திருமுறைகள் தமைஅடக்க**
விலையில்வெளி யிடுவ தற்கும்
அவைகளைநம் சிறுவர்முதல் எல்லோரும்
இசையோடு பயில்வ தற்கும்
தமதுபெருஞ் செல்வத்தைத் தந்துயர்ந்த
'திருமுறைக்கா வலர்'என் னும்பேர்
சான்றதிரு **சோமசுந்த ரர்**சிறப்பை
எண்ணிஉளம் தழைத்தல் வேண்டும்,

(5) **எண்பஃதாண்(டு) அளவில்பணி**
செய்தவர்கள்
பெயரைஎலாம் எண்ணி எண்ணி
எழில்மிக்க கட்டிடத்தில் 'பெருமன்றம்'
இருந்துபணி செய்தற் கான
வண்மையரை நாடிஅதில் வரிசைபட
எழுதிவைத்து வணங்கல் வேண்டும்
'மன்றுள்ளார் அடியார்அன் னார்தமது
வான்புகழ்கள் மறையா தென்றும்
உண்மையினில் **நின்றதெங்கும் நிலவிஉல**
கெல்லாம்'என் றுரைத்த வாக்கே
ஓங்குநிலை செயல்வேண்டும் **'சித்தாந்த**
நெறிஒன்றே உலகில் உள்ள
எண்ணிறந்த நெறிகளைஎல் லாம்தன்னுள்
அடக்கிக்கொண் டினிது யர்ந்தே
இருக்குமொளி நெறி'யென்னும்
உண்மையினை
இவ்வுலகுக் குணர்த்தல் வேண்டும் !

(6) **வாழ்க ! சைவ சித்தாந்தப் பெருமன்றம்**
அம்பலவர் அருளால் மன்னி,
வாழ்க ! அதன் **உறுப்பினர்கள்**
தலைவர்முதல்
செயலாளர் பொருளர் மற்றும்
வாழ்க!அதன் **செயற்குழு;**மா **வட்டச்சார்**
பாளர்;இதம் ஆசிரி யர்சீர் ;
வாழ்க ! அறக் **கட்டளைகள் நிறுவியவர்!**
புகழ்சிறக்க **வாழ்க ! வாழ்க !**
வாழ்க ! அதன் தொண்டுகளுக் குதவுபவர்
விழாவாற்ற வகைசெய் வோர்கள்
வாழ்க!திரு முறைஓதிச் சிறப்பிப்போர்,
வகுப்புகளை நடத்தும் நல்லோர்,
வாழ்க!விரி உரையாளர், ஈடுபடும்
நல்லன்பர் எல்லாம் என்றும்
வாழ்க!பலப் பலவைர **நூறாண்டு**
விழாக்காணும் வண்ணம் வாழ்க !

— ஒளியகம். ந. ரா. ஆடலரசு

'உலகு, உயிர், கடவுள் என்னும் மூன்றும் என்றும் இருப்பன. உலகு மாறுதல் அடையும் பொருள். உயிர் அறியாமை விரவிய அறிவாகிய உள்பொருள். கடவுள் அறியாமையே இல்லாத முற்றறிவு உடைய உள்பொருள்.

சின்முத்திரை முப்பொருள் உண்மையைத் தெரிவிப்பது. பெருவிரல் — பதி ; சுட்டு விரல் — பசு. மற்ற மூன்று விரல்கள் — மும்மலம் ஆகிய பாசம். பசு மும்மலங்களினின்றும் நீங்கிப் பதியுடன் சேர்தல் வீடுபேறு. இவைகளின் உள்ளுறை சிவஞானபோதம். சின்முத்திரையும் சிவஞானபோதமும் பொருளில் ஒன்றே.

திரு. வி. க.

சென்னை பார்வையற்ற பெண்கள் மறுவாழ்வு இல்லத்தில்
பெரியபுராண வகுப்பு

வகுப்பு ஆசிரியர் திரு. கா. சி. தனக்கோட்டி

நடராசர்

ஞானியாரடிகள்

''குறி ஒன்றும் இல்லாத கூத்தன்றன் கூத்தை எனக்கு
அறியும் வண்ணம் அருளியவா றார்
பெறுவார் அச்சோவே''

உலகிற் பிறந்த நாம் துன்பமடைகிறோம். அதனை நீக்கி இன்பமடைவதே எல்லா உயிர் களும் செய்ய வேண்டிய காரியம். எல்லா உயிர்களும் துன்பத்தை வெறுக்கின்றன. இன்பத்தை விரும்புகின்றன. ஆனால் இன்ப மடைகின்றதில்லை. அதற்குள்ள முயற்சி மட்டும் இருக்கிறதே தவிர நினைத்தபடி பயன் பெறுகிறதில்லை. அது மட்டுமல்ல. இன்பத் திற்காக முயல்கின்றபோது அதிகத் துன்பம் வருகிறது. இதற்கெல்லாம் காரணம் யாதென நாம் ஆராய்ந்தறிய வேண்டும்.

மனிதர்களாகிய நாம் அறிவுடையோம். மன். அறிதல் (to think) என்பது பகுதி. ஆதலால் நாம் அவ்வறிவு கொண்டு ஆராயும்போது மூன்று பொருள்கள் நமக்குக் கிடைக்கின்றன. அவைதாம், அறிகின்ற நாம், நம்மால் அறியப் படுகின்ற உலகம், நம்மை அறியும்படி செய்து அறிவிக்கின்ற பொருள் என்பன. வேதங்கள் நான்கு என்பாராயினும் அதர்வண வேதம் மந்திர சொரூபமாக நிற்க ஏனை மூன்றுமே முக்கியமாகக் கணக்கிடப்படும். வேதங் களுக்குத் திரயீ என்று பெயர் உண்டல்லவா? இவற்றில் மத்தியில் உள்ளது யசுர் வேதம். அதன் மத்திய கண்டத்தில் மத்தியில் உள்ளது ஸ்ரீருத்திரம் என்னும் பகுதியாகும். அதில் பசூநாம் பதயே நம என்ற மந்திரம் பேசப் படுகிறது. சிவ அஷ்டோத்திரம் என்னும் அர்ச்சனை மந்திரங்களிலே பசு பதயே நம என்ற ஒரு மந்திரம் கேட்கப்படுகிறது. இவைகள் பசுக்களுக்குப் பதியே உன்னை நமஸ் கரிக்கின்றேன் என்று பொருள்படும்.

பசு என்றால் கட்டப்படுவது என்று பொருள். பச்-கட்டுதல் என்பது பகுதிப் பொருள். நம்முடைய வீட்டில் பசுக்கள் இருக்கின்றன. அவைகள் தம் இஷ்டப்படி வாழ முடியாமல் நாம் தரும் சிறிது அளவேயாகிய புல், தட்டு முதலிய அரை வயிற்று உணவு உண்கின்றன. கஞ்சி முதலிய அசுத்த நீரைப் பருகுகின்றன. காற்று, வெயில், மழைக்கு உதவாத கட்டுத் துறையில் தங்குகின்றன. அந்தக் கட்டுத் துறை, வீட்டின் புறக்கடையில் இருக்கும். இவ்வளவு அவைகள் துன்பப்படக் காரணம் அவை கட்டுப்பட்டிருப்பதேயாம். அது போலவே உயிர்களாகிய நாமும் பசியாலும் தாகம் வெயில் மழை முதலிய உபாதிகளாலும் துன்பப்பட்டுக்கொண்டு இருக்கிறோம். நம் வீடும் பசுவின் கட்டுத்துறை போன்றதுதான். இதற்கு வீடு என்ற பேரும் பிசகானது. நமது வீடுகள் எல்லாம் கட்டப்பட்டவை. அவைகள் முதற் கட்டு இரண்டாம் கட்டு எனக் கட்டே யாவனவன்றி வீடாகா. இவ்வாறு பசுக்கள் போல நாம் கட்டுப்பட்டு துன்பம் கொண்டிருப் பதால் நாமும் பசுக்களே யாவோம். நம்மைப் பசுக்கள் (கட்டப் பட்டவை) என்று சாத்திரங் கள் பேசும். பசுக்களாகிய நாம் இருக்கிறோம் என்றும், நாம் கட்டுண்டு துன்பம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம் என்றும் நாம் தெரிந்து கொண்டோம். இதையும் சிலர் ஒப்புக் கொள்ளாமல் இருக்கலாம். ஆனால் 'நாம்' என்பதற்குப் பொருள் உண்டு என்பதை மறுக்க முடியாது.

இனிக் கட்டுப்பட்ட நாம் உண்டு என்று பசு என்ற பதத்தால் தெரிகிறபோது அந்தப்

பதத்திலிருந்தே நம்மைக் கட்டி நிற்கிற பாசம் என்று மற்றொரு பொருளும் உண்டென்று தெரிகிறதல்லவா?

இவையிரண்டும் பெறுகின்றபோது கட்டினின்றும் நம்மை விடுவித்து இன்பம் தருவதாகிய பதி ஒருவன் உண்டென்று தெரிகின்றோம். அதுவே நம்மை அறியும்படி செய்கின்றது. நாமே பொருள்களை அறியலாமே எனின் அறியலாகாது. நமது கண்ணால் பொருள்களைப் பார்க்கின்றோம். ஆனால் கண் தானே பார்க்கின்றதில்லை. தன்னையும் பார்க்கின்றதில்லை. அதற்குப் பொருள்களைக் காட்டுகின்ற சூரியன் முதலிய பிரகாச பதார்த்தங்கள் வேண்டும். சூரியன் இல்லாதவிடத்துக் கண் பார்க்காது. கண்களும் சூரியனும் இருந்த போதிலும் அறிகின்ற ஆத்மபோதம் என்ற உயிரறிவு இல்லாமற் போனால் கண் பார்க்காது.

''காட்டிய கண்ணே தனைக் காணா;
கண்ணுக்குக்
காட்டாய உள்ளத்தைச் சண் காணா;
—காட்டிய
உள்ளம்தனைக் காணா; உள்ளத்தின்
கண்ணாய
கள்வன்தான் உள்ளத்திற் காண்''

என்பது சிவஞான போதம்.

இப்படிப் பார்த்து உலகத்தையும் நம்மையும் ஆராய்ந்து நம்மைப் பந்தித்துத் துன்பம் செய்யும் கட்டுகளைத் தெரிந்து அவற்றை நிவர்த்தித்துக் கொள்வதற்கு அறிவு வேண்டும். அறிவுதான் ஞானம் எனப்படும். அது ஒளியுருவம். ஞானமே இன்பம் தருவது. இது எல்லாவற்றிற்கும் பொருந்தும். ஆகவே அஞ்ஞானத்தைப் போக்கி ஞானத்தைப் பெற வேண்டுவது நமது கடமை. அதற்கே நாம் முயற்சிக்க வேண்டியது. இது முழு ஞான வடிவாகிய — முழு ஒளி வடிவாகிய பதியின் அருளினால்தான் இயலும்.

இதற்கு நாம் பதியின் அருளைப் பெற வேண்டும். அதற்குப் பதியை நாம் தெரிய வேண்டும். ஆனால், பதி அப்பிரமேயன் அதாவது அறிய முடியாதவன் எனப் பெறும். அறிய முடியாதது, சொல்ல முடியாதது, நினைக்க முடியாதது என்றெல்லாம் வேதங்கள் பேசும். அதை 1 நினைக்க 2 பூசிக்க 3 வந்திக்க வேண்டும். நினைத்தலே தியானிப்பது என்று சொல்லப் பெறும். பூசை செய்வது என்றால் பூ — ஜா = பூ — போவது, ஜா — உண்டாவது என்று அர்த்தம். நம்முடைய துன்பம்—மலம் எல்லாம் போக்குவது, இன்பம் எல்லாம் உண்டாக்குவது எதுவோ அதுவே பூசையாம். வந்திக்கிறது வாயினால் வாழ்த்துவதாம். இம் மூன்று செய்கைகளையும் நாம் இறைவனிடத்தில் செய்வோமானால் துன்பம் நீங்கி இன்பம் பெறுவோம். இவைகளை நாம் அவனிடத்தில் செய்யும் பொருட்டுத் திருமேனியிலாத அவன் திருமேனி தாங்குகிறான். அந்தத் திருமேனிகள் மூன்று வகைப்படும். அவை அருவம்——அருவுருவம்—உருவம் என்பன. இவைகளை அரூபம்—ரூபாரூபம்—ரூபம் என்றும் சொல்வர்.

''அருவமோ உருவா ரூபம் ஆனதோ அன்றி
நின்ற
உருவமோ உரைக்கும் கர்த்தா வடிவெனக்
குணர்த்திங் கென்னின்
அருவமும் உருவா ரூபம் ஆனதும் அன்றி
நின்ற
உருவமும் மூன்றும் சொன்ன ஒருவனுக்
குள்ளவாமே''

என்பது சிவஞான சித்தியார்.

அரூபம் கண்ணாற் காண முடியாதது, மனத்தால் மட்டும் தியானிக்கத் தக்கது. புருவ நடுவில் சோதி சொரூபமாய்த் தியானிப்பர். ரூபாரூபம் சிவலிங்கமாம். இதுவே நாம் பூசித்து சுகம் பெறுவதற்காக இறைவன் கொள்ளும் திருவுருவம். இது கண்ணாற் காணப் பெறுவதால் உருவ முடையதாம். ஆனால் இன்னதென்று சொல்லக் கூடாததாய்க் கை கால் முதலிய அவயவப்பகுதி இல்லாததாய் நீண்டு வட்டமாய் இருத்தலால் அருவமாம். எனவே ரூபமுண்டு—ரூபமில்லை என்ற இரண்டு தன்மையும் இருப்பதால் இதற்கு அருவுருவம் என்று பெயர். இதுவே பூசிக்கத் தக்கது.

''காணாத அருவினுக்கும் உருவினுக்கும்
காரணமாய்
நீள் நாகம் அணிந்தார்க்கு நிகழ்குறியாம்
சிவலிங்கம்''

என்பது பெரியபுராணம்.

இனி வந்திக்கத் தக்க திருமேனி நடராஜர் உருவமாம். நாம் கோயிலில் வைத்து வந்திக்கும் ஒவ்வொரு ரூபமும் ஒவ்வோர் அர்த்தமுடையது. அவற்றை ஒன்றும் தெரிந்து கொள்ளாமலே நாம் இருந்து வருவது வருந்தத் தக்கது. கோவிலுக்கு வருவோர்களில் பெரும்பாலோர் ஒன்றும் தெரியாமல் இது என்ன சாமி? என்று கேட்டுத் தெரிந்துகொள்ளும் நிலையில் இருக்கிறார்கள். இது என்ன சாமி என்றால் விநாயகா என்று ஒருவன் சொல்லக் கேட்டதும், சரியென்று அதற்கு ஒரு அரைக் கும்பிடு போட்டுவிட்டு அப்புறம் போகிறார்கள். சாமியும் தெரியாது; அதனைக் கும்பிடும் முறையும் தெரியாது. இந்த நிலையை சீர்திருத்திக் கொண்டால்தான் நமது சமய வாழ்க்கை செவ்வனே நடைபெற்று, நமக்குத் துன்பம் நீங்கி இன்பம் நிகழ்வதாகும்.

கடவுள் நமக்காக ஐந்தொழில்கள் செய்கிறார். உலகத்தைப் படைக்கிறார்; அவற்றைக் காப்பாற்றுகிறார்; சம்மரிக்கிறார்; இளைப்பாற்றுகிறார்; அநுக்கிரகம் செய்கிறார். இதுவே இவரது ஐந்தொழிற் கூத்து நடனம் என்று சொல்லப் பெறும். நடராசர் உருவத்தில் நான்கு கைகளும் இரண்டு கால்களும் பார்க்கிறீர்கள். இருகைகள் வலத்தில் ஒன்றும் இடத்தில் ஒன்றும் தூக்கியிருக்கும். அவற்றிலே வலக்கையில் டமருகம் என்னும் உடுக்கையிருக்கும். உடுக்கை ஒலியை உண்டாக்கும். அதுவே நாதத்தைக் காட்டுவது. நாதமே சிருஷ்டிக்குக் காரணம்.

இந்தக் கை சிருஷ்டிகர்த்தா நான் என்பதைக் காட்டும். மற்றொரு வலக்கை பயப்படாதே என்ற குறிப்புடன் அபயமாக அமைந்திருக்கும். அது சிருஷ்டிக்கப் பெற்ற உலகத்தை ''அஞ்சல்! உங்களைக் காப்பாற்ற நானிருக்கிறேன்!— காத்தற் கடவுள் நானே!'' என்று காட்டும். தூக்கிய இடக்கையில் உள்ள அக்கினி—நெருப்பு சங்கார கர்த்தா நானே என்று காட்டும். நெருப்புத்தான் உலகங்களை அழிக்கிறது. அது சங்காரம் என் கையிலிருக்கிறது என்று குறிக்கிறது.

''தோற்றம் துடியதனில்; தோயும் திதியமைப்பில்;
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்;— ஊற்றமாய்
ஊன்று மலர்ப்பாதத்தே உற்றதிரோதம்; முத்தி
நான்ற மலர்ப் பாதத்தே நாடு''

என்பது 'திருவதிகை மனவாசகங் கடந்தார்' அருளிய திருமொழி.

அவருடைய கால்களில் வலது பாதம் ஊன்றியிருக்கிறது. அது ஒரு அரக்கனுடைய உருவத்தை மிதித்துக்கொண்டிருக்கிறது. அந்தத் தலை நிமிர்ந்தபடியும், உடல் வேறு விதம் திருகலாகவும், கால்கள் மற்றொரு விதம் திருகலாகவும் . ஆக மூன்று திருகலாக இருக்கும். இதற்கு முயலகன் என்று பெயர். இந்தப் பாதம் உலகத்தில் போகங்களை உண்டு ஆடி இளைத்த உயிர்களைத் தன்கீழ் அமிழ்த்தி வைத்து இளைப்பாறச் செய்கின்றதாகிய திரோபவத் தொழில் செய்கின்ற கர்த்தா நானே என்று அறிவிக்கிறது.

வெகுநேரம் விளையாடி இளைத்துப் போயும் மறுபடியும் தன்னை யறியாது தனக்குத் துன்பம் வருமாறு மேலும் மேலும் ஆட்டமே விரும்பி யலைகின்ற பிள்ளையைப் பிதா அடக்கி இழுத்து வந்து தன்னிடம் உட்கார வைத்து அவன் தப்பி ஓடி மறுபடியும் ஆட்டம் போட்டு கெடாதபடி அவன மேல் ஒரு துடையையும் வைத்து அமிழ்த்திக் கொள்வது போல் உள்ளது இந்தத் திரோபவம் என்ற தொழிலாம்.

''மாயைதனை உதறி, வல்வினையைச் சுட்டு, மலம்
சாய அமுக்கி, அருள்தான் எடுத்து— நேயத்தால்
ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத் தான் அழுத்தல்
தான் எந்தையார் பரதம் தான்''

என 'உண்மை விளக்கம்' கூறுதல் காண்க.

இனிக் கீழ் தொங்க வைத்து வலதுபுறமாக வீசி நீட்டியிருப்பது மற்றொரு இடக்கை. அதன் கீழ் இடக்கால் தூக்கி வளைந்து வலதுபுறமாக நீட்டியிருக்கும். மேற்கண்ட இடது கை இந்த

நீட்டிய இடது காலைக் காட்டிக்கொண்டிருக்கும். இந்தக் காலுக்குக் குஞ்சித பாதம் என்று பெயர். குஞ்சிதம் = வளைந்தது. மேற் குவிந்த ஒரு அர்த்த வட்டவடிவாக நமது தலை இருக்கிறது. அனேக தலைகளில் வைத்து வைத்து இந்தக் கால் உள் வளைத்தது போல வுள்ளது. இந்தக்கால் தான் மீளா இன்ப மாகிய முத்தி நிழல் தந்து உயிர்களை அனுக்கிரகிக்கின்ற பாதம். இதற்கு ஒரு மாலை போட்டு உபசாரமாகக் காட்டுவார்கள். ஆகவே அனுக்கிரகத் தொழிலைக் குறிப்பது ஒரு கையும் ஒரு காலும் என இரண்டுமாம்.

''கூற்றை யுதைத்த குரை கழற்கால்
கும்பிட்டுத்
தோற்றம் துடைத்தோம் துடைத்
தோமால்''

என்றார் பெரியார். இத் திருவடியே நாம் அடையத் தக்கது. சிந்தித்து வந்திக்கத்தக்கது. இவ்வாறுள்ள நடராசர் திருவுருவம் இறைவன் உயிர்களுக்குச் செய்யும் பரம உபகாரமாகிய ஐந்தொழில்களையும் விளக்கி நிற்பதாம். இது முழுதும் வட்டவடிவமாய் ஓங்காரமாகிய திருவாசியினுள் விளங்கும். ஓங்காரமாகிய பிரணவத்துள்ளே இவ்வருட் கூத்து நிகழும்.

''ஓங்காரமே நல் திருவாசி, உற்றதனில்
நீங்கா எழுத்தே நிறை சுடராம்!—
ஆங்காரம்
அற்றார் அறிவர்! அணி அம்பலத்தான்
ஆடலிது
பெற்றார் பிறப்பற்றார் பின்!''

என வரும் சித்தாந்த சாத்திரப் பாடல் ஈண்டு அறிந்தின்புறற்பாலது.

''உய்யுநெறி காட்டுவித்திட்
டோங்காரத்துட் பொருளை
ஐயனெனக் கருளிய வாறார் பெறுவாரச்
சோவே''

என்று மாணிக்க வாசக சுவாமிகள் அருளியிருக்கிறார்.

இவ்வாறுள்ள ஸ்ரீ நடராச மூர்த்தியினது பெருமைகளை அறிந்து வழிபட்டுத் துக்கங்களைப் போக்கிச் சுகம் பெற்றுய்வது அறிவுடைய மக்கள் கடமையாம்.

சம்பந்தர் நாவரசர் பாற்கண்டோம், சார்ந்துவப்ப
தும் பிரிவி னுள்ளுவதும், சோமேசா —நம்பி
உவப்பத் தலைக்கூடி யுள்ளப் பிரித
லனைத்தே புலவர் தொழில்.

— *ஸ்ரீ மாதவச் சிவஞான யோகிகள், குளத்தூர்ச்
சோமேசர் முதுமொழி வெண்பா.*

திருமூலரும் சைவ சித்தாந்தமும்

மகாவித்துவான் சி. அருணைவடிவேல் முதலியார்,
தமிழ்ப் பல்கலைக் கழகத் தத்துவ மையம், காஞ்சீபுரம்.

'திருமுறை, சாத்திரம்' என்னும் இருவகைத் தொகுப்பு நூல்கள் சைவ சமயத்தின் இரு கண்களாக விளங்குகின்றன. அவற்றுள் 'சாத்திரம்' என்னும் தொகுப்பு நூல்களில் தாம் சைவ சமயத்தின் மெய்ப்பொருளியல், அஃதாவது தத்துவக் கூறு அமைந்துள்ளது என்றும், அக்கூற்றுப் பொருள்தான் 'சைவ சித்தாந்தம்' எனப்படுகிறது என்றும் அவற்றை அறிந்தோர் யாவரும் ஒருமுகமாகவே கொண்டுள்ளனர்.

சாத்திர நூல்கள் யாவும் திருமுறைகட்குக் காலத்தால் பிற்பட்டவை. ஆகவே, அந்த நூல்களைச் செய்த ஆசிரியர்கள்தாம் திருமுறை ஆசிரியர்களுக்குப் பின் சைவ சித்தாந்தத்தை விளக்கியவர்கள் ஆகின்றனர். ஆயினும் திருமந்திரம் திருமுறை பன்னிரண்டனுள் பத்தாவதாகிய திருமுறையேயாயினும் அது சாத்திரமாகவும் அமைந்துள்ளது. அதனால் திருமந்திரத்தை அருளிச்செய்த **திருமூலநாயனார்** சித்தாந்த ஆசிரியர்களுக்கு முன்பே தமது திருமந்திர நூலில் சைவ சித்தாந்தத்தை விளக்கினமை அறியப்படும்.

திருமூலர் தமது திருமந்திரத்துள் 'ஆறந்தம்' என்னும் தலைப்பில், வேதாந்தம், சித்தாந்தம், நாதாந்தம், போதாந்தம், யோகாந்தம், கலாந்தம்', என்று ஆறு அந்தங்கள் உள்ளன எனக் கூறிப் பின்பு அவை பற்றிப் பல கருத்துக் களைக் கூறியுள்ளார்[1]. 'சித்தாந்தம், நாதாந்தம்' என்னும் சொல்லாட்சியை நாம் சித்தாந்த சாத்திரத்தில்தான் பார்க்கிறோம். ஆயினும் திருமந்திரத்தில் அந்தச் சொல்லாட்சி மிகுந்து காணப்படுகிறது.

சித்தாந்த சாத்திரங்களில் '**வேதம் பொது நூல், சிவாகமம் சிறப்பு நூல்**' என்பதும், 'வேதாந்தத்தில் தெளிவின்றிப் பொதுவாகச் சொல்லப்பட்ட கருத்தே தெளிவுபடச் சிறப்பாகச் சொல்லப்படும் பொழுது சித்தாந்தமாக – சைவ சித்தாந்தமாக அமைகிறது' என்பதும் அடிப்படையாகச் சொல்லப்படுகின்றன.

''வேத நூல் சைவ நூல்
என்றிரண்டே நூல்கள்;
வேறு முளநூல் இவற்றின்
விரிந்த நூல்கள்;
ஆதிநூல், அனாதியமலன்
தருநூல் இரண்டும்;
**ஆரணநூல் பொது; சைவம்
அருஞ்சிறப்பு நூலாம்**''

என்பது சிவஞான சித்தியார்[2]. இது திருமந்திரத்தில் திருமூலரால் சொல்லப்பட்ட கருத்தாகவே உள்ளது.

''வேதமொ டாகமம் மெய்யாம்
இறைவன் நூல்;
ஓதும் பொதுவும் சிறப்பும்
என் றுள்ளன''

என்பது அம்மந்திரம்[3].

''பொருள்கள் யாவும் பதி, பசு, பாசம் — என்னும் மூன்றாய் அடங்கும்'' என்பதும், 'அம்மூன்றும் அநாதி நித்தியப் பொருள்கள், அஃதாவது தோற்றமும், அழிவும் இன்றி, என்றும் உள்ள பொருள்கள்; எனவே, அந்த மூன்றனுள் எந்த ஒன்றும் மற்றொன்றிலிருந்து தோன்றவில்லை; ஒவ்வொன்றும் தனித்தனியே

இயல்பாய் என்றும் உள்ளன' என்பதும் சைவ சித்தாந்தத்தின் அடிப்படைக் கொள்கை.

''அநாதி சிவனுடைமையால்
எவையும் ஆங்கே
அநாதி எனப் பட்ட
அணுவை — அநாதியே
ஆர்த்த துயரகல
அம்பிகையோ டெவ்விடத்தும்
காத்தல் அவன்கடனே காண்''

என்பது திருக்களிற்றுப்படியார்[4].

''ஏகன், அநேகன், இருள்,
கருமம், மாயையிரண்டு
ஆக இவை ஆ(று) ஆதி இல்''

என்பது திருவருட்பயன்[5]. இதையே திருமூலர் தமது திருமந்திரத்தில் பின்வருமாறு அருளிச் செய்கின்றார்.

பதிபசு பாசம் எனப் பகர் மூன்றில்
பதியினைப் போல்பசு பாசம் அநாதி;
பதியினைச் சென்றணு காப்பசு பாசம்;
பதியணு கிற்பசு பாசம் நில்லாவே.[6]

பாசங்களில் ஆணவம் முதலாவது. இஃது உயிர் என்று உண்டோ அன்றே அதனைச் செம்பில் களிம்புபோலப் பற்றி, அதன் அறிவை மறைத்து, அறியாமையைத் தருகின்றது' என்பதும், 'ஆணவம் நீங்கும் அளவு பரிபாகத்தை அடையும்பொழுது இறைவனே குருவாகி வந்து அருள் செய்து அந்த ஆணவ மலத்தைப் போக்கி அறிவை யளித்து, அவ்வுயிரைத் தன்போல் ஆகச் செய்வான்' என்பதும் சைவ சித்தாந்தத்தின் முதன்மை யான கொள்கை.

''ஏகமாய்த் தம்கால
எல்லைகளின் மீளும்
எண்ணிரிய சத்தியதாய், இருள்
ஒளிர இருண்ட
மோகமாய்ச் செம்பின் உறு
களிம்பேய்ந்து நித்த
மூலமலமாய் அறிவு
முழுதினையும் மறைக்கும்''

''......... எண்ணரிய
ஞான பாதம்
கூடும் அவர் தமக்(கு)
உணர்வாய் நின்ற ஞானக்
கூத்தன் ஒரு மூர்த்திகொடு
குறுகி மோகம்
நீடிய கேவல சகலம்
நிகழா வாறு
நிறுத்தி, மலம் அறுக்கும்''[7]

என்பன சிவப்பிரகாசம் கூறும் கருத்துக்கள். இக்கருத்தைத் திருமூலர் **'உபதேசம்'** என்னும் பகுதியில் முதல் மந்திரத்தில்,

''விண்ணின் றிழிந்து வினைக்கீடாய் மெய்கொண்டு
தண்ணின்ற தாளைத் தலைக்காவல் முன்வைத்து
உண்ணின் றுருக்கி ஓர் ஒப்பிலா ஆனந்தக்
கண்ணின்று காட்டிக் களிம்பறுத்தானே''[8]

எனக் கூறினார். இதில் அஞ்ஞானத்தைக் 'களிம்பு' எனக் கூறினமை நோக்கத்தக்கது.

''உண்மை ஞானத்தை உணர்த்துதற்கு இறைவன் தானே குருவாகி வருவான்' என்பதைச் சிவஞான போதம்,

''தம் முதல் குருவுமாய்த்
தவத்தினில் உணர்த்த''

எனக் கூறிற்று[9]. இதனைத் திருமந்திரம்,

''குருவே சிவமெனக் கூறினன் நந்தி;
குருவே சிவம் என்பது குறித் தோரார்;
குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்;
குருவே உரையுணர் வற்றதோர் கோவே''[10]

என வெளியிடுகின்றது.

''ஞான குரு இன்றி யாருக்கும் ஞானம் உண்டாகாது'' என்பதற்கும், ''ஞான குருவால் ஞானம் விளங்கும்'' என்பதற்கும் சித்தாந்த நூல்கள் சூரியனாலே சூரியக்காந்தக் கல்லில் நெருப்புத் தோன்றுதலை உவமையாகக் கூறுகின்றன.

''ஞானம் இவனொழிய நண்ணியிடும்
நற்கல் அனல் பானு ஒழியப் படின்''[11]

''சூரிய காந்தக் கல்லினிடத் தேசெய்ய
சுடர்தோன்றி யிடச் சோதி தோன்று
மாபோல்
ஆரியனாம் ஆசான்வந் தருளால் தோன்ற
அடிஞானம் ஆன்மாவில் தோன்றும்''[12]

என்பவை காணத்தக்கன. இவ்வுவமை திருமந்திரத்திலே முன்பே காட்டப்பட்டுள்ளது.

சூரிய காந்தமும் சூழ்பஞ்சும் போலவே
சூரிய காந்தமும் சூழ்பஞ்சைச் சுட்டிடா,
சூரியன் சந்நிதி யில் சுடு மாறுபோல்
ஆரியன் தோற்ற முன் அற்ற மலங்களே.[13]

''மெய்யுணர்வாவது பிரமத்தை உள்ளவாறு உணர்தலே' என்னும் கருத்தினால் வேதாந்தத்தில் மெய்ஞ்ஞானத்தை, **'பிரம்ம ஞானம்'** என வழங்குவர். எனினும்,

''முதற்பொருளை, 'பிரம்மம்' எனப் பொதுவாக உணர்தல் நிறைவான மெய்யுணர்வாகாது. 'சிவம்' எனச் சிறப்பாக உணர்தலே நிறைவான மெய்யுணர்வாகும்' என்னும் கருத்தினால் சைவ சித்தாந்தத்தில் மெய்ஞ்ஞானத்தைச், 'சிவ ஞானம்' என்றே குறிப்பிடுவர். அந்தச் சிவஞானத்தைப் போதிப்பதனாலே, **'சிவஞான போதம்'** என்றும், அந்தச் சிவஞானததைச் சித்திக்கச் செய்வதனாலே **'சிவ ஞான சித்தி'** என்றும் சித்தாந்தத்தில் சிறப்புடைய சாத்திரங்கள் பெயர் பெற்று விளங்குகின்றன.

'' நல்லசிவ தன்மத்தால்
நல்லசிவ யோகத்தால்
நல்லசிவ ஞானத்தால்
நானழிய — வல்லதனால்[14]

எனவும்,

'' சிவஞானச் செயலுடையோர்
கையில் தானம்
திலமளவே செய்திடினும்
நிலம்மலைபோல் திகழ்ந்து''[15]

எனவும் வந்தமை காணத்தக்கது. திருமூலரும்,

'' சிவஞானி கட்கும் சிவயோகி கட்கும்
அவமான சாதனம் ஆகாது''[16]

என ஞானிகளைச் **'சிவஞானிகள்''** என்றே குறித்தார்.

சிவஞானம் சிவபுண்ணியத்தினாலேதான் கிடைக்கும். மற்றொன்றினாலும் கிடைக்காது. சிவபுண்ணியமாவன சரியை கிரியா யோகங்கள், இவை முறையே **'தாச மார்க்கம், சற்புத்திர மார்க்கம், சகமார்க்கம்'** எனப் பெயர் பெறும்; இவற்றால் அடையப்படும் ஞானம் **சன்மார்க்கமாகும்** என்பனவும், இவற்றால் அடையப்படும் பயன்கள் முறையே **சாலோகம், சாமீபம், சாருபம், சாயுச்சியம்** ஆகியவைகள் என்பதும், 'சரியை முதலிய நான்கும் முறையே **'மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதரம்'** என்னும் சத்தி நிபாதம் உண்டாய பொழுதே நிகழும்' என்பதும் சைவ சித்தாந்தத்தில் கூறப்படும் சிறப்புப் பொருள்கள், இவை அனைத்தையும் தனித்தனி ஒவ்வோர் அதிகாரமாக எடுத்து வைத்துத் திருமந்திரம் விளக்குகின்றது.[17]

சரியை முதலிய நாற்பாதங்களிலும் திருவைந்தெழுத்தை (பஞ்சாக்கரத்தைத்)த் **'தூலம், சூக்குமம், அதிசூக்குமம்'** என்னும் முறையில் பல வகையாகக்கொண்டு கணித்தல் வேண்டும் என்பது சைவ சித்தாந்த நூல்கள் கூறும் சிறப்புச் சாதனை.[18] திருமந்திரத்திலும் 'தூல பஞ்சாக்கரம். சூக்கும பஞ்சாக்கரம், அதிசூக்கும பஞ்சாக்கரம்' என வரும் அதிகாரங்களைக் காணலாம்.[19]

இவ்வாறு சைவ சித்தாந்தத் தத்துவம் திருமந்திரத்தில் பல இடங்களில் வெளிப்படையாகவே கண்டு உணரக்கூடிய நிலைமையிருத்தலை யாவரும் அறிந்து பயனடைதல் நலம்.

சைவத்திற்கு ஏலாதன சில திருமந்திரத்தில் சொல்லப்படுதல் போலச் சில இடங்களில் நினைக்கத் தோன்றும். அவையெல்லாம் சிவஞான சித்தியார் பரபக்கம், சங்கற்ப நிராகரணம் என்னும் சித்தாந்த நூல்களில் பிற மதங்களைப் பூர்வ பட்சமாக எடுத்துக் கூறி மறுத்தன போன்றனவே என்பது, ஆழ்ந்து நோக்கின் புலனாகும். ஆகவே, திருமந்திரத்தின் முடிந்த பொருளை அதன்கண் உணர்ந்து பயன் அடைதல் தக்கது.

மேற்கோள் நூல்கள்

1. திருமந்திரம் – 2370
2. சிவஞான சித்தியார் – சுபக்கம் – 267, 293
3. திருமந்திரம் – 2397
4. திருக்களிற்றுப்படியார் – 43
5. திருவருட் பயன் – 52
6. திருமந்திரம் – 115
7. சிவப்பிரகாசம் – 20, 49
8. திருமந்திரம் – 113
9. சிவஞானபோதம் – சூ. 8
10. திருமந்திரம் – 1581
11. திருவருட்பயன் – 50
12. சிவஞான சித்தியார் சுபக்கம் – 280
13. திருமந்திரம் – தந்திரம் – 1
உபதேசம் – 5
14. திருக்களிற்றுப்படியார் – 15
15. சிவஞானசித்தியார் சுபக்கம் – 278
16. திருமந்திரம் – 1670
17. ௸ 1443 – 1549
18. சிவஞான போதம், சூ. 9.
சிவஞான சித்தியார் – சூத்திரம் 9
சிவப்பிரகாசம் 90, 91,
திருவருட்பயன் – அதிகாரம் 9
19. திருமந்திரம் – தந்திரம் – 9

நமது சைவசமயிகள் ஒற்றுமையுடையர்களாய்த் திரண்டு தேவாலயங்கள் எங்கும் சைவாகமங்களில் விதித்த இலக்கணங்கள் அமைந்த பிராமணர்களைக் கொண்டே பிரதிட்டை பூசை திருவிழா முதலியவற்றை விதிவழுவாது இயற்றுவித்தலும், வாணவிளையாட்டு முதலிய வேடிக்கைகளின் பொருட்டுப் பொருளைச் செலவழித்தலை ஒழித்து, சிவபக்திமான்களும் பண்ணோடு ஓத வல்லவர்களுமாகிய ஓதுவார்கள் பலரை நியோகித்துப் பூசாகாலத்தும் உத்சவகாலத்தும் யாவருக்கும் மனம் கசிந்துருக உரோமம் சிலிர்ப்ப ஆனந்தவருவி சொரியச் சிவன்மேல் அன்பு செனிக்கும் பொருட்டுத் தேவாரமும் திருவாசகமுமாகிய தமிழ் வேதத்தை ஓதுவித்தலும், சைவப்பிரசாரகர்களை நியோகித்து வாரந்தோறும் கடவுளது மகிமையையும் புண்ணிய பாவங்களையும் அவற்றின் பலன்களையும் கடவுளை வழிபடும் முறைமையையும் குறித்துச் சனங்களுக்குப் போதிப்பித்தலும் செய்வார்களாயில், அறியாமை நீங்கும்; பாவம் தேயும்; புண்ணியம் வளரும்; சிவபக்தி தழைக்கும்; மாதமும் மழை பெய்யும்; பஞ்சம் ஒழியும்; கொள்ளை நோய் குன்றும்; உலகம் உய்யும்.

— யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் —

பெருமன்றத்தில் இலவச தேவார வகுப்பு



தேவார ஆசிரியர் கலைமாமணி – சைதை. திரு. நடராஜன்

நடராச தத்துவம்

க. வச்சிரவேலு முதலியார்

தத்துவம் என்பதற்கு அதன் தன்மை (தத்+த்வம்) என்பது பொருள். நடராச தத்துவம்—நடராச மூர்த்தியின் உண்மை யியல்பு. அதை

ஆதியாய் நடுவும் ஆகி அளவிலா அளவும் ஆகிச்
சோதியாய் உணர்வும் ஆகித் தோன்றிய பொருளும் ஆகிப்
பேதியா ஏகமாகிப் பெண்ணுமாய் ஆணும் ஆகிப்
போதியா நிற்கும் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி!

என்னும் பாட்டால் சிந்தித்து அறியலாம்.

இது சேக்கிழார் அடிகள் திருவாக்கு; தில்லை மன்றுள் முதல்வனால் இயற்றப்படும் திருக் கூத்து, அவனுடைய இயல்புகளை உணர்த்து கின்றது; போதியா நிற்கும் நடம் அது, அவன் எல்லாப் பொருள்களுக்கும் முதலாய் நின்று தோற்றுவிக்கிறான்; நடத்துவோனா யிருந்து காக்கின்றான்; அளவு படாத ஊழி முதல்வனா யிருந்து ஒடுக்குகிறான்; உயிர்களின் உணர்வின் சோதியாய் மறைந்து நின்று அவற்றின் அறிவை வளர்த்து வருகின்றான். பக்குவ காலத்திலே மெய்யுணர்வாகவும் அதனை உணர்த்துதற்குத் தோன்றும் குருமூர்த்தியாகவும் உளன்; உயிர் களோடு வேறுபடாது ஒன்றிநிற்கும் சக்தியாக வும் உளன்; அதனால் அம்மையப்பராயும் உளன். இப்படி யெல்லாம் விளங்கி ஆன்மாக் கள் முடிவில் எய்துதற்கு உரிய பரானந்த நிலை யினையும், அதனை அணைந்து இன்புறும் வழி யினையும் திருநடனம் போதிக்கின்றது. வணங் கினால் அவ்வின்பத்தைப் பெறலாம்—என்பது பாட்டின் பொருள்.

முதலில் முதல்வன் கொள்ளும் திருவுருவம் பற்றிச் சிறிது எண்ணுவோம்; உருவமில்லாத முதல்வன் நாம் மெய்யுணர்ந்து நிலைத்த இன்பம் பெறுதற் பொருட்டுத் திருவுருவம் கொள்கிறான். அவ்வுருவம் நமக்கு உள்ள உடம்பு போல மாயையிலிருந்து உண்டான தன்று; வினைக் கீடாக வந்ததும் அன்று; வினைப்பயனை நுகர வந்ததும் அன்று; நால் வகைத் தோற்றம் எழு வகைப் பிறப்பில் அடக்கி வைத்துப் பேசப்படுவதும் அன்று; பிறர் ஒருவரால் அவனுக்குக் கொடுக்கப் பட்டதும் அன்று. பின்னர் அது யாது என்றால், அவன், தன் கருணையினால், தன்னை நாம் உணர்ந்து, போக மோக்ஷங் களைப் பெறுதற் பொருட்டு, ஞானமாகிய தன் திருவருளே தனது பிழம்பாகத் தோன்றி வெளிப்படுவது. இப்படித் திருமேனி கொள்ளு முறை சிவபெருமான் ஒருவனுக்குத்தான் சிறப் பாக நூல்களுள் பேசப்பட்டு வருகின்றது. இக் கருத்து பற்றியே சிவபிரானைச் சைவர்களும் பிறரும் ''**பிறப்பில் பெருமான்**'' என்றும், ''பிறவா யாக்கைப் பெரியோன்'' என்றும், ''முழு முதற் கடவுள்'' என்றும், ''ஒருவன்'' என்றும் சிறப்பித்துக் கூறுவது தொன்று தொட்டு வரும் மரபாக உள்ளது.

மேற்கூறிய முறையில் சிவபிரான் அன்பர் களுக்குக் காட்டியருளிய திருவுருவங்கள் பல. அவற்றுள் **நடராச மூர்த்தம்** அவன்றன் முழு முதற்றன்மையைத் துலக்குவதாய் சித்தாந்த சைவத்துட் கூறப்படும் முடிநிலை முடிபாகிய பரானந்த அனுபூதி நிலையினைப் போதிப் பதாய் உள்ளது. அதுபற்றிச் சில உண்மைகளை இங்குச் சிந்திப்போம்.

நடராசர் என்றவுடனே, திருவருள் வெளி யாகிய அம்பலமும், அந்த வெளியில் முதல்வன்

நின்று ஒரு பாதத்தைத் தூக்கி, பக்கத்தில் அருள்வடிவாகிய அம்மை நின்று காணும்படி திருக்கூத்து இயற்றுவதும் நம் நினைவுக்கு வரும். இத் திருக்கூத்தைச் சேக்கிழார் **''போதியா நிற்கும் பொது நடம்''** என விவரிக்கிறார். **பொதுநடம்** என்றமையால் (ஞான) சபையில் இயற்றும் நடனம் என்பதோடு, எல்லா உயிர்களுக்கும் பொதுப்பட எல்லா உயிர்களுக்கும் எல்லா நன்மையும் விளையும்படி நடிக்கும் நடனம் என்பதும் விளங்கும். ''போதியா நிற்கும் பொது நடம் என்று கூறுகின்றமையால் அந்நடனம் அவரவர் தகுதிக்கும் உணர்வு நிலைக்கும் தக்கபடி உண்மைகளை உணர்த்தும் எனவும் கொள்ளலாம்.

குறைந்த முயற்சியில் நிறைந்த பயனைப் பெறக் கருதுவது நம் இயற்கை. அதற்கு ஏற்றபடி அம்பலக் கூத்தர் அருமையில் எளிய அழகராய் நின்று நம்மை வசப்படுத்துகின்றார். மற்றைய திருவுருவங்களைப் பல்காலும் பயின்று அருச்சித்து வந்தால்தான் பயன் பெறலாம். ஆனால் ஆனந்த நடராசமூர்த்தியை **ஒரு கால் கண்டு கும்பிட்டால்** போதும்; பரகதியை அப்பொழுதே வழங்குவார். இதை அவர் அபிநயமே காட்டுகிறது. அவர் வலப்பாதத்தை முயலகன் மேல் ஊன்றி நின்று இடப்பாதத்தைத் தூக்கி நிறுத்தி, அதை இடக்கரத்தால் காட்டி வலக்கரத்தால் போதும் என்று அமைக்கிறார். இதனால் கூடும் கதி, ஒரு கால் கும்பிட்டால் போதும் என்னும் குறிப்பு வெளிப்படுகிறது.

''ஒரு கால் கும்பிட்டால் போதும்'' என்பதற்கு நாம் இரண்டு பொருள் செய்து கொள்ளலாம். தூக்கிய பாதம் ஒன்றையே கும்பிட்டால் போதும் எனவும், அதையும் ''ஒரு தடவை'' (ஒருகால்) கும்பிட்டால் போதும் எனவும் கொண்டின்புறலாம். இதுபோன்ற உணர்வின்பங்களைக் கவிஞர்களுக்கும் கலைஞர்களுக்கும் பொதுநடம் போதிக்கின்றது.

திருநாவுக்கரசர் முற்றத் துறந்த ஞானத் தவமுனிவர். அவர் சென்ற இடங்களில் எல்லாம் **''பிறவாமை''** வேண்டும் என்றே சொல்லிக்கொண்டு வந்தார். அப்படி வரும் போது தில்லைத் திருக்கோயிலுட் சென்று திருவம்பலத்தைக் கண்டார். கண்டவுடன், உள்ளும் புறம்பும் அவர் உணர்வு கரைந்து அன்பாய் நெகிழ்ந்து உருகிற்று. எதிரே இருந்த திருவம்பலத்தையும் ஆனந்தக் கூத்தையும் மட்டும் காணவில்லை. அவர் அகத்தே இருந்த பரம ஆகாசமாகிய திருவருள் வெளியில் அவர் ஆன்மா கலந்தது. அங்குப் பேரின்ப சொரூபம் விளங்க அதனைப் பத்தியா யுணர்ந்து அருளை வாய்மடுத்து அமுதமாய்ப் பருகித்திளைத்து நின்றார்.

''நீடுந்திருவுடன் நிகழும் பெருகொளி
நிறையம்பல நினைவுறநேரே
கூடும்படி வரும் அன்பால் இன்புறு
குணமுன் பெறவரும் நிலைகூட,
தேடும் பிரமனு மாலுந்தேவரும் முதலாம்
யோனிகள் தெளிவொன்றா
ஆடுங் கழல்புரி அமுதத் திருநடம் ஆரா
வகை தொழுதார் கின்றார்''

இப்படி அவர் அனுபவத்தைச் சேக்கிழார் தெரிவிக்கின்றார். (உயிர்களின் தெளிவில், அறிவில் ஒன்றி ஆடுவது முதல்வன் கழல்). அப்பொழுதே அப்பர் பெருமான் தம் கருத்தை மாற்றிக்கொண்டார். ஆனந்த நடனத்தைப் **பல்காலும்** கண்டு கும்பிடுதற்காக மேலும் மக்கட் பிறவி வேண்டும் என்று பாடத் தொடங்கிவிட்டார். பெரும்பற்றை உண்டு பண்ணும் பெரும் பற்றப்புலியூர் அல்லவா அது!

''அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்
பொன்னம் பாலிக்கும்; மேலும்இப் பூமிசை
என்னம்பாலிக்கு மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்கு மோஇப் பிறவியே''

அன்னம் என்றது முக்தியை; பாதகமே **சோறு** பற்றினவா தோணுக்கம் என்றமை காண்க. முக்தி யின்பத்தைத் தரும் தில்லைச் சிற்றம்பலம், செம்பு பொன்னுவது போல, ஆன்மாவைச் சிவமாக ஆக்கிவிடுகிறது, அன்பு தழைத்து இன்பமாக மலர்கின்றது. இவையெல்லாம் பெறுவதானால், மீளப் பிறக்கலாம் அல்லவா? நடராச மூர்த்தியின் திருவுரு அவர் உள்ளத்தில் பதிந்துவிட்டது. உள்ளக் கிழியில் உருவெழுதிக் கொண்டார்;

''குனித்த புருவமும் கொவ்வைச் செவ்
வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற்
பால்வெண்ணீறும்

இனித்த முடைய் எடுத்த பொற்பாதமும்
காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ தேஇந்த
மாநிலத்தே''

என்று பாடுகிறார்.

நம்மை நோக்கிச் சொல்கிறார். முன்னே பார்த்ததில்லை என்றால், திருக்கூத்தை ஒருமையுடன் நினையுங்கள்: நுமது குறைகள் நீங்கும்; முன்னே பார்த்தது இல்லை என்றால் தில்லைக்குச் சென்று காண்மின்கள். நீங்கள் அங்கே போனால் ''எப்பொழுது வநதாய்'' என்னும் திருக்குறிப்போடு நகை முகத்தால் வரவேற்பார் முதல்வர். உம்மை மரணம் நீக்கி ஆள்வார் என்கிறார்:

''ஒன்றி யிருந்து நினைமின்கள் உந்தமக்(கு)
ஊனமில்லை,
கன்றிய காலனைக் காலாற் கடிந்தான்
அடியவற்கா,
சென்று தொழுமின்கள் தில்லையுட் சிற்றம்
பலத்து நட்டம்
என்றுவந் தாய் என்னும் எம்பெரு
மான்றன் திருக்குறிப்பே!

இது மாகவியோகியாகிய அப்பர், நம் சமயத் தந்தை, நடராச மூர்த்தியைக் கண்டு அனுபவித்த அனுபவம். இனிச் சாத்திரஞ் சொன்ன ஞானிகள் என்ன சொல்கிறுர்கள் என்று பார்ப்போம்:

சைவசித்தாந்த சாத்திரம் பதினான்கனுள் ஒன்று உண்மை விளக்கம். அது கூத்தப்பிரான் திருவுருவின் இயல்பை நன்கினிது விளக்குகின்றது. நமக்கு மூன்று உடம்பு உண்டு; அவை தூல உடம்பு; அதற்குள் சூக்கும உடம்பு, அதற்குள் பரசரீரம். அதுபோலத் தில்லைக் கூத்தனுக்கும் மூன்று உடம்பு உள்ளன என்கிறது சாத்திரம். ஓங்காரமும் அதனை விட்டு நீங்காத திருவைந்தெழுத்தும் கூத்தப் பிரானுக்குத் தூல உடம்பு, உயிரே அவனுக்குச் சூக்கும உடம்பு, உயிர்க் குயிரா யுள்ள திருவருளே அவன்றன் பரசரீரம்:

எட்டும் இரண்டும் உருவான லிங்கத்தே
நட்டம் புதல்வா நவிலக்கேள்—சிட்டன்
சிவாயநம என்னும் திருவெழுத்தஞ் சாலே
அவாயமற நின்றாடு வான்.

எட்டும் இரண்டும் பத்து; பத்தைத் தமிழில் ய என எழுதுவோம். ய என்பது ஆன்மாவை உணர்த்தும். ஆன்மாவாகிய லிங்கத்தில் ஐந்தெழுத்துருவாய் நின்று கூத்தியற்றுகிறான் முதல்வன்.

ஓங்கார மேநல் திருவாசி; உற்றதனில்
நீங்கா எழுத்தே நிறைசுடராம்—

திருவாசியில் 33 அல்லது 51 சுடர்கள் இருக்கும், அச்சுடர்(ச்சிகை)கள் ஓங்காரத்தில் இருந்து தோன்றும் மாத்ருகாக்கரங்கள் எனப்படும் முதல் எழுத்துக்களைக் குறிக்கும்.

தூல சூக்கும பஞ்சாக்கரங்களே அவன் திருவுருவாகச் சமைந்துள்ளன :

ஆடும் படிகேள் நல் லம்பலத்தான்
ஐயனே
நாடுந் திருவடியி லேநகரம்—கூடும்
மகரம் உதரம் வளர்தோள் சிகரம்
பகருமுகம் வாமுடியப் பார்

உதரம்—வயிறு.

சேர்க்கும் துடிசிகரம் சிக்கனவா வீசுகரம்
ஆர்க்கும் யகரம் அபயகரம்—பார்க்கில்
இறைக்(கு)
அங்கி நகரம் அடிக்கீழ் முயலகனார்
தங்கு மகரமது தான்

சேக்கிழார் அடிகள் குறித்த படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழிலை மனவாசகங்கடந்தார் முதல்வன் திருவுருவில் வைத்துக் காட்டுகிறார். உண்மை விளக்கத்தை அருளிச் செய்தவர் மனவாசகங்கடந்தார்.

தோற்றம் துடியதனில், தோயும்திதி
அமைப்பில்,
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்—
ஊற்றமாய்
ஊன்று மலர்ப்பதத்தில் உற்றதிரோ தம்
முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு

இது அண்டத்தில் வைத்துக் காணும் நடனம் (Cosmic dance)

இனி, அவன் உயிர்தோறும் கலந்து நின்று, மும்மலம் அகற்றி, சகல கேவலங்களிலிருந்து உயிரை அருணிலையில் உயர்த்துதலையும், பின் பேரின்ப வெள்ளத்தில் அழுத்துதலையும் (Spiritual emancipation) பின்வருமாறு உணர வேண்டும் என்கிறார்:

மாயைதனை உதறி, வல்வினையைச் சுட்டு
மலம்
சாய அமுக்கி அருள் தான் எடுத்து—
நேயத்தால்
ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத்
தானமுத்தல்
தானெந்தை யார்பரதம் தான்

இன்னும் அவர் **பராசக்தியே திருவம்பலம்** என்றும், இறைவன் தனது அருளையே மூர்த்தியாகக் கொண்டு நடம் இயற்றுகின்றான் என்றும் கூறுகின்றார்.

''கூடுங்கதி ஒருகால் கும்பிட்டால் போதும்'' எனக் கவிஞர்கள் கண்ட அபிநயத்தையே, இவர் மும்மலத்தையும் முதல்வன் அருளால் சேதித்த முத்தர்கள் தற்பாவம் நீங்கும் இடத்தே வெளிப்படும் பரானந்த வெள்ளத்தை மொண்டு அருந்தி, அவ்வெள்ளத்துள் அமுந்தி மூழ்கி இருக்குமாறு போதிப்பதாக உணர்கிறார்கள் என்று கூறுகிறார். இங்ஙனம் போதித்தல் பற்றித் தில்லைத் திருநடனம் பரானந்த போத நடனம் என உயர்த்துக் கூறப்படும்.

இறுதியாகத் தவமுதல்வர் சம்பந்தர் திருநடத்தை எப்படி அனுபவித்தார் எனக் காண்போம்.

திருஞானசம்பந்தர், திருவம்பலத்தின் முன் சிரத்தின் மேல் கைகூப்பி நின்றவர் திருவம்பலத்தைத் தாம் முதல்வன் அருளாற் பெற்ற உணர்வரிய மெய்ஞ்ஞானமாகவே கண்டார்; தம்முள் நிறைந்த ஞானத்தின் விளைவாகத் தாம் அனுபவித்த பரமானந்தமாகவே திருக்கூத்து இருக்கக் கண்டார்; திருவுந்தியாரிற் கூறியுள்ளபடி முதல்வனையும் அம்மையையும் ''பேரின்பமான பிரமகிழத்தியோடு—ஓரின்பத்துள்ளான்'' என உணர்ந்து கும்பிட்டார்.

அண்ணவார்தமக் களித்தமெய்ஞ் ஞானமே
ஆன அம் பலமும்தம்
உண்ணி றைந்தஞா னத்தெழும் ஆனந்த ஒரு
பெருந் தனிக்கூத்தும்
கண்ணின் முன்புறக் கண்டுகும் பிட்டெழுங்
களிப்பொடுங் கடற்காழிப்
புண்ணியக்கொழுந் தனையவர் போற்றுவார்
புனிதரா டியபொற்பு

பின் இறைவனைப் போற்றுகின்றார் :

உணர்வின் நேர்பெற வருஞ்சிவ போகத்தை
ஒழிவின்றி உருவின் கண்
அணையும் ஐம்பொறி அளவினும் எளிவர
அருளினை எனப்போற்றி
இணையில் வண்பெருங் கருணையே ஏத்திமுன்
எடுத்தசொற் பதிகத்தில்
புணரும் இன்னிசை பாடினர் ஆடினர்
பொழிந்தனர் விழிமாரி

பேரின்ப சக்தியோடுகூடிய பேரின்ப வடிவ முதல்வனைக் கருவிகரணங்கள் கழன்று, யான் எனது என நிகழும் தற்போதமும் கழன்று, முதல்வன் திருவருளோடு கலந்து, தூய்தாய் விரிந்து நிற்கும் ஆன்ம உணர்வில் நேரே சார்ந்தபோதுதான் சிவபோகம் என்னும் பேரின்பம் அனுபவிக்கப்படும். அங்குத் தம் உணர்வுக்கும் முதல்வனுக்கும் ஊடே எப்பொருளும் நிற்பதில்லை. அப்படி இருந்து நுகர வேண்டிய இன்பத்தைக் கூத்தப்பிரான் தாம் உடம்போடு கூடிக் கண்களால் நோக்கும் போதே அந்நோக்கின் வழி உள் நுழைந்து ஐம் பொறிகளாலேயே பெறப்படுவதாக எளிதிற் கிடைக்கும்படி அருளினான் எனப் போற்றினார்.

திருக்கூத்தைக் கண்டால் பரம சுகம் விளையும் என்று திருமூலர் கூறுகின்றார் :

புளிக்கண் டவர்க்குப் புனல்ஊறு மாபோல்
களிக்கும் திருக்கூத்துக் கண்டவர்க்
கெல்லாம்
துளிக்குங்கண் ணீருடன் சோரும்
நெஞ்சத்(து) இருள்

ஒளிக்கும்ஆனந்த அமுதூறும் உள்ளத்தே. மாணிக்கவாசகர், நினைத்தாலும் பேசினாலும் கூடத் திருக்கூத்துப் பரானந்தத்தைச் சொரியும் என்கிறார் : அதனால் எடுத்த பாதத்தை நினைந்து வாழ்த்தும்படி உபதேசிக்கின்றார் :

''தினைத்தனை உள்ளதோர் பூவினிற்றேன்
உண்ணாதே
நினைத்தொறும், காண்டொறும்,
பேசுந்தொறும் எப்போதும்
அனைத்தெலும் புள்நெக ஆனந்தத்
தேன் சொரியும்
குனிப்புடை யானுக்கே சென்றூதாய்
கோத்தும்பீ''

என்கிறார்.

நாம் தில்லைக்கூத்தனை முன்னர் துடி, பின் அங்கி, பின் ஊன்றிய பாதம் இவற்றை எண்ணி முறையே மாயையை உதறி, வினையைச் சுட்டு மல சத்தியை மெலிவித்து, பின்னர்த் தூக்கிய பாதம், வீசிய இடக்கரம், அமைத்த கரதலம் என்பவற்றைச் சேர்த்து எண்ணி அருணிலைத் தானம் சென்று ஆனந்தம் மொண்டருந்துவோமாக !

மன்னுக தில்லை ! வளர்க நம்பத்தர்கள் !!

உ

சிவமயம்

திருக்கோவையார்*

முருகவேள்

மாணிக்கவாசகப் பெருமான் அருளிச் செய்த திருவாசகம் திருக்கோவையார் என்னும் இரு பெரு நூல்களும், நம் தமிழ்மொழிக்கண் உள்ள அரும்பெறல் நூல்களுள் முதன்மைச் சிறப்பிடம் பெறுதற் குரியனவாய்ப் பெரும் புகழ் வாய்ந்து திகழ்வனவாகும். திருவாசகம் மாணிக்கவாசகரின் அயரா அன்பின் திறனை விளக்குகிறது; திருக்கோவையார் அவர் தம் அளப்பரிய புலமை யறிவின் பெற்றியினைப் புலப்படுத்துகின்றது. சிவபெருமானின் அருள் நலங்களைப் புகழ்ந்து பாடிப் போற்றுகின்றது திருவாசகம்; நமது அருமைச் செந்தமிழ் மொழியின் அகப்பொருள் இலக்கண நலங்களைத் திறம்படத் தெளித்துணர்த்தித் தேற்றுகின்றது திருக்கோவையார்! மாணிக்கவாசகப் பெருமானின் சிவபத்திச் சிறப்பினையும் சிவானுபவத் திறங்களையும் திருவாசகத்தால் உணரலாம்; நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும் பாடல் சான்ற பண்டைச் சங்க காலப் புலனெறி வழக்கின் இயல்புகளைத் திருக்கோவையார் நமக்குத் தெள்ளிதிற் புலப்படுத்தும்! திருவாசகம் சிவ நெறித் திருநூல்; திருக்கோவையார் செந்தமிழ்ப் பெரு நூல்! திருவாசகம் தெவிட்டாத தேனையனைய சிறப்பினையுடையதெனின், திருக்கோவையார் அத் தேனிடை யூறிய தெய்வநலம் செறிந்த செந்தமிழ் அமிழ்தம் போல்வதாகும்.

''தண்டமிழின் மேலாந் தரம்'' எனத் தகுந்த பெருஞ் சிறப்பைப் பெற்றொளிரும் திருவாசகம் திருக்கோவையார் என்னும் இவ் விரு பெருநூல்களும், சங்ககால இலக்கியங்களுக்கும் பிற்கால நூல்களுக்கும் இடையே, ஓர் எல்லைக்கல் போல விளங்கும் மேம்பாடு மிக்கன. பிற்காலக் கவிதை வகைகள் பலவும் தோன்றுவதற்கு வழி வகுத்துக் காட்டிய கழி பெருஞ் சிறப்பினவாய், அவற்றினின்றும் ஓரளவு வேறுபட்டுச் சிறந்த பொருளும் போக்கும் நடையும் அமைப்பும் உடையனவாய், புதுமையும் பழமையும் பொருந்தக் கலந்த பொலிவும் வளமும் மிக்க மாட்சிமையவாய், இவ் விருபெரு நூல்களும் தெய்வநலம் செறிந்து வீறுற்று விளங்கித் திகழ்கின்றன.

திருவாசகமும் திருக்கோவையாரும் தத்தம் துறையில் தனிப்பெரு மாட்சிமை சான்றவை. இரண்டும் கவிதை யுலகில் தந்நிகர் அற்றுத் தலைசிறந்து திகழ்பவை! கவிதை என்பது கவிஞனின் உள்ளத்தில் இயல்பாகப் பொங்கி எழும் ஆற்றல் மிக்க உணர்ச்சிப் பெருக்கமே யாகும். ("Poetry is the spontaneous overflow of powerful feelings.") கவிஞனின் உள்ளத்தில் உணர்ச்சிகள் பொங்கி எழும்போதே, அவை விரைந்து கவிதையாக மலர்வதும் உண்டு. அன்றி, ஒரோ ஒருகால் அவை கவிஞனின் உள்ளத்திலேயே பன்னாள் ஊறிக் கிடந்து ''மெல்லவே கரு இருந்து'' தெளிந்து வெளிப் படுவதும் உண்டு. ("Poetry takes its origin from emotion recollected in tranquility"—Wordsworth.) இவ்விருதிறக் கவிதைகளுக்கும் முறையே திருவாசகமும் திருக்கோவையாரும் மிகச் சிறந்த எடுத்துக்காட்டுகள் ஆகும். மாணிக்கவாசகரின் உள்ளத்தில் இயல்பாகப் பொங்கி யெழுந்த பத்திமை யுணர்ச்சி திருவாசகம் என்னும் தெய்விகக் கவிதையாக வெளிப்பட்டது. அதனைத் தங்கு தடையின்றிப் பொங்கிப் பெருகி இழுமென இழிதரும் திருக் குற்றால மலையருவிக்கு ஒப்பிடலாம். ''**சிறை பெறு நீர்போல்** சிந்தைவாய்ப் பாயும் திருப் பெருந் துறையுறை சிவனே'' என மாணிக்க வாசகர் தாமே அருளிச் செய்திருத்தல் ஈண்டுக் கருதுதற்குரியது. திருக்கோவையார் இரண்டாம் வகைக் கவிதைகளைச் சேர்ந்தது. பெருந்

*திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டையில் 4-10-59 ஞாயிறன்று நிகழ்ந்த திருவாசக விழாவிற் பேசியதனைத் தழுவியது.

கெடுத்து ஓடிவரும் வெள்ளத்தை அணை கோலித் தேக்கிக் கால்வாய்கள் பலப்பல கவினுற வகுத்து, அவற்றின் வழியே வயல்களுக்குப் பயனுறப் பாயவிடும் மேட்டூர் அணைத் திட்டம் போன்றது திருக்கோவையார்!

கவிதைகள் எல்லாம் கவிஞனின் பலதிற அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு எழுவனவாகும். கவிஞனின் அனுபவமாகிய அகவுணர்ச்சிகளைச் சொற்களின் வடிவில் மாற்றித்தரும் மொழிபெயர்ப்பே கவிதைகள் என்பர் அறிஞர். ("Poetry is the translation of experience into language.") கவிஞன் தனது அனுபவங்களைத் தன்னியல்பில் தன்னை அறியாமலே, "எனை நான் என்பதறியேன் பகல் இரவு ஆவதும் அறியேன் மனவாசகங் கடந்தான் எனை மத்தோன்மத்தன் ஆக்கினன்" என்றாற்போல,தன்வயமிழந்து வெளியிடுவதும் உண்டு. தனது அனுபவங்களைப் பிறர்க்கும் இனிதெடுத் தியம்பிப் புலங்கொள உணர்த்தி, அவற்றை மற்றையவர்களும் அடையச் செய்தல் வேண்டும் என விரும்பி வெளியிடுவதும் உண்டு. ("Poetry does not merely tell us what a man experienced, it makes his very experience itself live again in our minds, by means of the incantation of its words"— L. Abercrombie.) முன்னைய வகைக்குத் திருவாசகமும்,பின்னைய வகைக்குத் திருக்கோவையாரும் தலைசிறந்த எடுத்துக்காட்டுக்கள் எனலாம். "நான் தனக்கு அன்பின்மை **நானும் தானும்** அறிவோம்" என்றாற் போல, இறைவனுக்கும் மாணிக்கவாசகருக்கும் இடையே நிலவிய தொடர்புகள் பற்றிய உணர்ச்சிகளைத் தன்னியல்பில் வெளியிடுவது திருவாசகம்! திருக்கோவையாரோ, "யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" என்னும் பேரருட் பெற்றிபற்றித் தாம் நுகர்ந்த இறையருள் இன்ப நலங்களை, மன்பதைக் கெல்லாம் நன்கினி தெடுத்துரைத்துணர்த்தி, "கடுத் தின்னா தானைக் கட்டி பூசிக்கடுத் தீற்றியவாறு போல" உலகை உய்வித்தற் பொருட்டு இயற்றப் பெற்றதாகும். வேறொரு வகையாற் கூறலுறின், மாணிக்கவாசகரால் தம்முயிர்க்குறுதி வேண்டிப் பாடப் பெற்றது திருவாசகம் எனவும், உலகுயிர் கட்குறுதி வேண்டிப் பாடப் பெற்றது திருக்கோவையார் எனவும் கூறலாம்.

திருவாசகம் மாணிக்கவாசகரின் பத்திமை வாழ்வின் பலதிறப் படிநிலைகளையும் பளிங்கென விளங்கக் காட்டுகின்றது. மாணிக்கவாசகரின் பலவகை மனநிலை அலைவுகள், கையறவு, உணர்ச்சித் தடுமாற்றம், அமைதியின்மை, ஏசறவு என்பன பலவற்றையும்கூட நாம் திருவாசகத்தின் கண் ஓரோவழி ஆங்காங்குக் காணலாம். ("Thiruvasakam depicts in beautiful hymns the progress of the soul..........., its first awakening, its joy and exaltation, way wardness and despondency, struggle and unrest, the peace and the joy of union."— Dr. G.U Pope) ஆனால், திருக்கோவையாரோ "சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட அத்தன் எனக்கு அருளியவாறு ஆர் பெறுவார்? அச்சோவே!" என்றாற்போல, இறையருளைக் "காழில் கனி" எனலாம்படிக் குறைவறப் பெற்றொளிர்ந்த நிறைபெரும் இன்ப நிலையின் உச்சியினின்று பாடப் பெற்றதாகும்.

"அயில்முகக் குலிசத்து அமரர்கோன் நகரும்,
அளகையும் என்றிவை அயனார்
பயிலுறவு உற்ற படிபெரும் பான்மை
இப்பெருந் திருநகர் படைத்தான்"

என்புழி, இந்திரனின் அமராவதியையும் குபேரனின் அளகாபுரியையும் முதற்கண் படைத்துப்பயின்றுகொண்டு,அதனாற்கைவந்த திறம்பற்றியே, பின்னர்ப் பிரமன் அயோத்தி நகரை அழகுறப் படைத்தான் என, அயோத்தி நகரின் அளப்பரும் சிறப்பைக் **கம்பர்** கவிநலம் அமையப் பாடியவாறு போலவும்; 'முதற்கண் வலியனவற்றை வயமாக்கிப் பயின்றுகொண்டு, அதன் பின்னரே இறைவன் என்னை ஆட்கொண்டான். கல்லை மென்கனியாக்கும் விச்சைகொண்டே என்னைத் தன் கழற்கு அன்பன் ஆக்கினான். என்னைத் தனக்கு அடிமை கொள்ளுதல் காரணமாகப் பிறிதொன்றின்மேல் இட்டுக் கல்லை வளைத்தான். கல்லினும் வல்லெனும் என் நெஞ்சத்தை வளைத்தல் காரணமாக, முதற்கண் பயின்று பழகிக் கொண்டதேயன்றித் தனக்கொரு பகையுண்டாய்ச் செய்ததன்று' என்னும் கருத்தில், "**தெவ்வரை மெய்யெரி காய்சிலை ஆண்டு, என்னை ஆண்டு கொண்ட செவ்வரை மேனியன்**" எனத் தாமே பாடியருள்வது போலவும்; மாணிக்கவாசகர் திருவாசகம் பாடித் தேர்ந்து கைவரப்பெற்ற

சிறந்த சிவஞானத் தெளிவின் முதிர்விற் பாடியருளியதே திருக்கோவையார் எனின், அதன் அருமை பெருமைகளை யாம் என்னென்பேம்! ''யாவையும் பாடிக் கோவை பாடுக'' என வழங்கும் அறிஞர்களின் உரையும் ஈண்டு அறிந்தின்புறற்பாலது.

இனி, வேறு சிலவும் ஈண்டுக் கருதுதற்குரியன. காலத்தைப் படைப்பவனும் காலத்தாற் படைக்கப்படுபவனும் கவிஞன் ("A great poet is the creator and creature of his age" —W.H. Hudson) என அறிஞர்கள் கூறும் கூற்று, மாணிக்கவாசகருக்கும் பொருந்துவதாகும். அவர்தம் காலத்திற் ''புத்தன் முதலாய புல்லறிவிற் பல்சமயம் தத்தம் மதங்களில் தட்டுளுப்புப்பட்டு நின்றன.''

''ஆறு கோடி மாயா சத்திகள்
வேறு வேறுதம் மாயைகள் தொடங்கின.
ஆத்தம் ஆனார் அயலவர் கூடி
நாத்திகம் பேசி நாத்தழும் பேறினர்.
விரத மேபர மாகவே தியரும்
சரதம் ஆகவே சாத்திரம் காட்டினர்.
சமய வாதிகள் தத்தம் மதங்களே
அமைவ தாக அரற்றி மலைந்தனர்.
மிண்டிய மாயா வாதம் என்னும்
சண்ட மாருதம் சுழித்தடித் தாஅர்த்து,
உலோகா யதன்எனும் ஒண்டிறற் பாம்பின்
கலாபே தத்த கடுவிடம் எய்தி,
அதிற்பெரு மாயை எனைப்பல சூழ்ந்தன.''

தமிழகத்தின் பொற்காலம் எனத் தகுந்த சங்க காலம் முடிவடைந்து கொண்டிருந்தது. சங்க கால நூல்களும் பழக்க வழக்கப் பண்பாடுகளும் சிதைந்து சீரழிந்து கொண்டிருந்தன. தமிழ் நாட்டில் வேற்றுவரும் வேற்றுக் கொள்கைகளும் நுழைந்து புகுந்தமையாற் பல பெருங் குழப்பங்கள் மக்கள் மனத்தில் நிகழ்ந்துகொண்டிருந்தன. மாணிக்கவாசகர் சங்க இலக்கியங்களை நன்கு பயின்றவர். சங்கப் புலவர்களையும், அவர்கள் வளர்த்த **''தண்ணார் தமிழ்''** மொழியையும் பெரிதும் விரும்பிப் போற்றியவர். சங்கத் தமிழில் அவர்க்கு இருந்த ஈடுபாட்டினை ''உயர்மதிற் கூடலின் ஆய்ந்த **ஒண்தீந் தமிழ்**'' எனப் போதரும் அவர்தம் பாராட்டுரை கொண்டு தெளியலாம்.

அத்துணைப் பெருநலஞ் சான்ற சங்ககால நாகரிகமும் பண்பாடும் இலக்கியங்களும் பிற சிறப்புக்களும் சிதைந்து சீரழியத் தலைப்பட்டமைக்குரிய காரணம் யாதென மாணிக்கவாசகர் ஆராய்ந்திருத்தல் கூடும்! சங்ககாலத் தமிழ் மக்கள் தூய காதல் வாழ்வைப் போற்றி ஒழுகினார். அக் காதல் வாழ்வில் நாளடைவில் ''பொய்யும் வழுவும்'' புகுந்தன. மக்களிடையே தீயொழுக்கங்கள் பரவின. சங்ககாலத் தூய காதல் வாழ்வு, பிற்றை நாளிற் றீய காமக் களியாட்டங்களாக மாறின போலும்! மிகச் சிறந்து விளங்கிய கிரேக்க உரோம நாகரிகங்கள் எல்லாம் 'மருங்கறக் கெட்டு' மாய்ந்து மறைய நேர்ந்தமைக்கு, அந் நாட்டு மக்கள் வளம் நிறைந்த செல்வச் செருக்கிலும் வரம்பிகந்த காமக் களியாட்டங்களிலும் தீய செயல்களிலும் ஈடுபட்டுழலத் தலைப்பட்டமையே ஒரு பெருங் காரணமாதலை அறிஞர்கள் அனைவரும் கூறக் கேட்கின்றனம் அல்லமோ?* அத்தகைய இழிநிலை தமிழ்நாட்டுக்கும் எய்தல் ஆகாது எனப் பெரிதும் மாணிக்கவாசகர் மனக்கவற்சி யுற்றனர் போலும்! அதன் விளைவாகத் தமிழகத்தையும் உலகத்தையும் திருத்தி உய்வித்தற்கு எழுந்ததே திருக்கோவையார் எனலாம்.

---

*"Despot succeeded despot, each rivalling each in cruelty. Claudius had his wife, Messalina, murdered; Nero, his mother, Agrippina; Commodus, his sister and his wife; Caracalla, his brother. Such gentle attentions appear to have been the rule in the imperial families. To make up for this, out of the fifty emperors who occupied the throne in the first three centuries of the regime thirty-seven died violent deaths—were poisoned, beheaded, stabbed, had their throats cut, or committed suicide. They were the victims of their relations, their wives, their mistresses, their soldiers, or—themselves. The Roman Principate was to offer an inexhaustible supply of subjects for the tragic writers of future centuries...Vice was everywhere in the ascendant. The most "enlightened" of the emperors, Trajan and Hadrian, practiced forms of sexual indulgence which are usually regarded as unmentionable, though Catullus hymned them in verse. Luxury and irreligion gave strength to debauchery. Rome had ceased to believe in anything, except, perhaps, in quacks and fortune tellers...Atheism and superstition flourished in Rome of the decadence.

—*The History of the World, Rene Sedillot.*

"When the ruling group and the society as a whole relax their sexual code, within three generations there is usually a cultural decline, as was the case in the later stages of the Babylonian, the Persian, the Macedonian, the Mongol, the Greek, and the Roman civilizations, as well as at the end of the Old and the Middle Kingdoms and of the New Empire, and during the Ptolemic period in Egypt.

—*Call For Sane Sex Order, Dr. P.A. Sorokin.*

திருக்கோவையாரின் சிறப்பினைக் **குமர குருபர சுவாமிகள்** தாம் பாடியருளிய சிதம்பர மும்மணிக் கோவையின்கண், ''**காமஞ் சான்ற ஞானப் பனுவல்**'' எனனும் பொருள் பொதிந்த தொடராற் போற்றிப் பாராட்டு கின்றார். அப் பாராட்டுரை ஆழ்ந்த பெருங் கருத்து அமைந்ததாகும். சங்க நூல்களிற் 'காதல்! 'காமம்' என்னும் இரு சொற்களும் பெரும்பாலும் ஒத்த பொருளிலேயே இழிவுக் குறிப்பின்றி விரவி வருகின்றன. தொல்காப் பியர் அவ்விரண்டினையும் தூய பொருளிலேயே வழங்கியுள்ளார். திருவள்ளுவர் 'காமம்' என்னும் சொல்லைக் காமத்துப்பாலுள் நல்ல பொருளிலேயே ஆண்டிருக்கின்றார். ஆயினும், அவர் ''காம வெகுளி மயக்கம்...'' என்புழி அதனைத் தீய குறிப்பிடம் பெய்துள்ளார். பரி பாடல் ''காதற் காமம் காமத்துச் சிறந்தது'' என அதனைப் பாகுபாடு செய்து பாடிக் காட்டுகின்றது. குறுந்தொகையின்கண்,

''காமம் காமம் என்ப காமம்
அணங்கும் பிணியும் அன்றே...''
(136, 204)

என் வரும் பாடல்களால், மக்களிடையே காமம் நன்றெனவும் தீதெனவும் இரு வேறு முரண்பட்ட கொள்கைகள் நிலவியமை தெளியப்படும். சொற்களும் அவை குறிக்கும் பொருள்களும், மக்களின் மனநிலைக் கேற்ப உயர்ந்தும் இழிந்தும் திரிபெய்துதல் இயல்பு. காலப் போக்கில் காதலும் காமமும் போன்ற சொற்கள் இழிபொருள் எய்தியமை, மக்கள் மனநிலையும் ஒழுக்க நிலையும் இழிவெய்தி யமையினையே இனிதுணர்த்தும் சான்றாகும். மக்களுள் ஒரு சாரார் காம வுணர்வை அறவே கடிய முயலுகின்றனர். மற்றொரு சாரார் அதன் வயப்பட்டொழுகி வருகின்றனர். இரு சாராரும் இருவேறு கோடியில் நிற்றலன், மாணிக்கவாசகர் அவ்விரு சாரார்க்கும் இடை நின்று பொதுவழி - புதுவழி ஒன்று கண்டார்.

''பெற்றசிற் றின்பே பேரின்பமாய் அங்கே
முற்ற வரும்பரி சுந்தீபற
முளையாது பந்தமென் றுந்தீபற''

என்றாற் போலக் காதல் உணர்ச்சியோடு கடவுளுணர்ச்சியைக் கலந்து பாடினார், காமச் சுவையும் ஞானப் பொருளும் அமையத் தமது திருக்கோவையார் நூலை இயற்றினார். சங்க காலப் புலவர்கள் தமது பாடல்களிற் காத லுணர்வைப் பாடிச் சென்றனராக, நம் மாணிக்கவாசகப் பெருமான் காதலுணர்வோடு கடவுளுணர்வையும் கலந்தியைத்து நலந்திகழப் பாடியருளிய திறன், அறிஞர் அனைவர்க்கும் ஆராப் பெருவிருந்து ஆவதாகும்.

சங்கந் தரும்முத்தி யாம்பெற
வான்கழி தான்கெழுமிப்
பொங்கும் புனற்கங்கை தாங்கிப்
பொலிகலிப் பாறுலவு
துங்கம் மலிதலை யேந்தலின்
ஏந்திழை தொல்லைப்பன்மா
வங்கம் மலிகலி நீர்தில்லை
வானவன் நேர்வருமே.

புரங்கடந் தானடி காண்பான்
புவிவிண்டு புக்கறியா
திரங்கிடெந் தாய்என் றிரப்பத்தன்
ஈரடிக் கென்னிரண்டு
கரங்கள் தந் தான்ஒன்று காட்டமற்
றாங்கதும் காட்டிடென்று
வரங்கிடந் தான்தில்லை அம்பல
முன்றில்அம் மாயவனே.

ஓங்கும் ஒருவிடம் உண்டம்
பலத்தும்பர் உய்யஅன்று
தாங்கும் ஒருவன் தடவரை
வாய்ந்தழங் கும்அருவி
வீங்கும் சுனைப்புனல் வீழ்ந்தன்
றழுங்கப் பிடித்தெடுத்து
வாங்கும் அவர்க்கறி யேன்சிறி
யேன் சொல்லும் வாசகமே.

நாய்வயின் உள்ள குணமுமில்
லேனைநற் றொண்டுகொண்ட
தீவயின் மேனியன் சிற்றம்
பலமன்ன சின்மொழியைப்
பேய்வயி னும்அரி தாகும்
பிரிவெளி தாக்குவித்துச்
சேய்வயிற் போந்தநெஞ் சேஅஞ்சத்
தக்கதுன் சிக்கனவே.

பார்வையற்ற பெண்கள் மறுவாழ்வு இல்லத்தில்
இலவச தேவார வகுப்பு

தேவார ஆசிரியர் திரு. எஸ். ஞானப்பிரகாசம்

உ

திருமுறைகளில் தில்லை

திருமுறையாராய்ச்சிக் கலைஞர் பேராசிரியர் திரு. க. வெள்ளைவாரணனார்

உலக மக்கள் எல்லோரையும் தன்பால் ஈர்த்து உய்யும் நெறிகாட்டி யருளும் தெய்வத் திருத்தலங்கள் பலவற்றுள்ளும் தலைமை வாய்ந்தது தில்லைப்பதியாகும். 'பெருமை நன்றுடைய தில்லை'(4-57-4)எனத் திருநாவுக் கரசராற் போற்றப்பெறும் இத்தலம், உலக மாகிய புருடனுக்கு நெஞ்சத் தாமரையாகத் திகழ்வது. இதன்கண் அருள் ஞானப் பெரு வெளியாகிய திருச்சிற்றம்பலத்திலே எல்லாம் வல்ல சிவபெருமான் மன்னுயிர்கள் உய்தி பெறுதல் வேண்டித் தனது அருட்சத்தியாகிய சிவகாமியம்மை காண ஆனந்தத் திருக் கூத்தினை நிகழ்த்தியருள்கின்றார் என அருள் நூல்கள் கூறுகின்றன. புலிக்கால் முனிவராகிய வியாக்கிரபாதர் ஆலின் கீழ் அமர்ந்த சிவலிங்கப் பெருமானைப் பெரும் பற்றாகக் கொண்டு வழிபாடு செய்தமையால் இது பெரும் பற்றப் புலியூர் எனவும் இங்குச் சிவ பெருமான் அமர்ந்த அருள் நிலையம் பெரும் பற்றப் புலியூர்த் திருமூலட்டானம் எனவும் போற்றப் பெறுவனவாயின.

மனுவின் மைந்தனாகிய சிங்கவர்மன் தனது உடம்பின்கண் ஏற்பட்ட வெண்ணிற நோய் காரணமாக அரசாட்சியினை வெறுத்துப் பல தலங்களையும் வழிபட்டு வருபவன், இத்தலத் தில் வியாக்கிரபாத முனிவரை வணங்கி அவர் பணித்த வண்ணம் சிவகங்கையில் நீராடித் தனது உடற் பிணி நீங்கிப் பொன்னிற மேனி பெற்றமையால் இரணியவர்மன் எனப் பெயர் பெற்றான். திருமாலுக்குப் பாம்பணையாகத் தொண்டு புரிந்த ஆதிசேடன், தாருகாவனத் தில் இறைவன் ஆடிய ஆனந்தத்திருக் கூத்தினைக் கண்டு மகிழ விரும்பிப் பதஞ்சலி முனிவராய் அவதரித்துத் தில்லைப்பதியை யடைந்து வியாக்கிரபாதமுனிவருடன் கூடி இறைவனை வழிபட்டிருந்தபோது அவ்விரு வருங் காணச் சிவபெருமான் தில்லையம்பலத் திலே சிவகாமியம்மையுடன் தோன்றி ஆனந்தத் திருக்கூத்தினை நிகழ்த்தியருளினான் எனவும் அது முதல் அம்முனிவர்கள் வேண்டிக்கொண்ட வண்ணம் பல்லோரும் காண அத் திருக் கூத்தினை இடைவிடாது என்றும் ஆடியருள் கின்றான் எனவும் கோயிற் புராணம் கூறும்.

தில்லை மன்றுள் இறைவன் ஆடியருளும் இத் திருக்கூத்தினை மன்று தொழுத பதஞ்சலி வியாக்கிரர் ஆகியோருடன் கண்டு தொழு தவர், திருமுறை யாசிரியர்களுள் காலத்தால் முற்பட்டவரும் சிறந்த சிவயோகியாருமாகிய திருமூல நாயனாராவர். இச்செய்தி,

'' நந்தி யருள்பெற்ற நாதரை நாடிடின்
நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி
மன்று தொழுத பதஞ்சலி வியாக்கிரர்
என்றிவ ரென்னோ டெண்மரு மாமே''
(திருமந்திரம்—67)

எனவும்,

'' செப்புஞ் சிவாகமம் என்னும் அப்பேர் பெற்றும்
அப்படி நல்கும் அருள்நந்தி தாள்பெற்றுத்
தப்பிலா மன்றிற் றனிக்கூத்துக் கண்டபின்
ஒப்பில் எழுகோடி யுகமிருந் தேனே''
(ஷை-74)

எனவும் வரும் திருமூலர் வாய்மொழியால் நன்கு விளங்கும். தில்லைப் பெருமான் வியாக்கிர பாத முனிவருடைய குழந்தை பாலில்லாது அழுதபோது பாற்கடலையே வருவித்துக் குழந்தையின் பசிதீர்த்தருளினார். இச்செய்தி, 'பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப் பாற்கடலீந்தபிரான்' என வரும் திருப் பல்லாண்டிற் குறிக்கப் பெற்றுளது.

பொற்பதியாகிய தில்லை, உலக புருடனின் நெஞ்சத்தாமரையாகவும் இடைகலை பிங்கலை சுழுமுனை என்னும் மூன்று நாடிகளும் சந்திக்கும் இடமாகவும் இறைவனது அருட் கூத்து நிகழும் இடமாகவுந் திகழ்வதனை,

''மேரு நடுநாடி மிக்கிடை பிங்கலை
கூரும் இமவான் இலங்கைக் குறியுறும்
சாரும் திலைவனத் தண்மா மலயத்தூ
டேறும் சுழுனை இவைசிவ பூமியே''
(2747)

என வரும் திருமந்திரம் இனிது புலப்படுத்துவதாகும்.

தில்லைப்பதியிலே நுண்ணிய ஞானவெளியாகிய திருச்சிற்றம்பலத்திலே இறைவன் நிகழ்த்தியருளும் அற்புதத் திருக்கூத்தினை நேரிற் கண்டு மகிழ்ந்தவர் திருமூலதேவர் என்பது,

''நெற்றிக்கு நேரே புருவத் திடைவெளி
உற்றுற்றுப் பார்க்க ஒளிவிடும் மந்திரம்
பற்றுக்குப் பற்றாய்ப் பரம னிருந்திடம்
சிற்றம் பலமென்று தேர்ந்து கொண்
டேனே'' (2770)

என வரும் திருமந்திரத்தாற் புலனாம். 'நெற்றிக்கு நேரே புருவத்து இடைவெளி' என்றது ஆறாதாரங்களுள் ஆக்ஞை எனப்படும் இடத்தினை உற்று உற்றுப் பார்த்தல்–ஐம்புலனடக்கி ஒருமை நிலையிலிருந்து கூர்ந்து தியானித்தல். அங்ஙனம் தியானிக்கும் நிலையில் நாதாந்தத்தின் அஞ்செழுத்தாகிய மந்திர வுருவில் ஒளிப் பிழம்பாய் ஆடல் புரியும் இறைவனது திருக்கூத்துப் புலனாகும் என்பார், 'உற்றுற்றுப் பார்க்க ஒளி விடும் மந்திரம்' என்றார். உயிர்கள் தமக்குப் பற்றுக்கோடாகக் கொண்டுள்ள எல்லாப் பொருள்கட்கும் பற்றுக் கோடாகத் திகழ்பவன் பரமன் ஒருவனே என்றறிவுறுத்துவார், 'பற்றுக்குப் பற்றாய்ப் பரமனிருந்திடம்' என்றார். இறைவன் உயிர்களின் உள்ளமாகிய நெஞ்சக் கமலத்திலே நுண்ணிய பரவெளியாகிய ஞான ஆகாசமே இடமாக அருட் கூத்தியற்றுகின்றான் என்பதனைத் தில்லைச் சிற்றம்பலத் திருக்கூத்தினால் தெளிந்துகொண்டேன் என்பார், 'பரமன் இருந்திடம் சிற்றம்பலமென்று தேர்ந்து கொண்டேனே என்றார். ''நற்றவத்தோர் தாம் காண நாதாந்தத் தஞ்செழுத்தாய் உற்றுருவாய் நின்றாடல்'' (30) எனவும் ''சிவாய நமவென்னுந் திருவெழுத்தஞ்சாலே, அவாய மற நின்றாடுவான்'' (31) எனவும் வரும் உண்மை விளக்கத் தொடர்கள் இங்கு ஒப்பு நோக்கி யுணரத்தக்கன.

மன்னுயிர்களின் சித்தத்தில் எழுந்தருளிய இறைவன் ஐம்பெரும் பூதங்கள், அவற்றிடமாகப் பொருள்களையறியும் வாயிலாகிய ஐம்பொறிகள், அவற்றின் வழி நிகழும் புலனுகர்வுகள், வேதப்பொருளாய் விளங்கும் திருவைந்தெழுத்து, வேதத்தின் மிக்க சிவாகமங்கள், கலைகள் காலம், ஊழி, சுவை முதலிய புலனுணர்வுகள் ஆகிய எல்லாவற்றிலும் வேறறக் கலந்து நின்று திருக்கூத்து நிகழ்த்தியருளுந் திறத்தினை,

''பூதங்கள் ஐந்திற் பொறியிற் புலனைந்தில்
வேதங்கள் ஐந்தின் மிகும் ஆகமந்தன்னில்
ஓதும் கலைகாலம் ஊழியுடன் அண்டப்
போதங்கள் ஐந்திற் புணர்ந்தாடுஞ்
சித்தனே'' (2730)

என வரும் திருமந்திரம் விரித்துரைக்கின்றது. புணர்தல்—வேறறக்கலத்தல்.

'பூதங்கள் ஐந்தாகிப் புலனாகிப்
பொருளாகிப்
பேதங்கள் அனைத்துமாய்ப் பேதமிலாப்
பெருமையனைக்
கேதங்கள் கெடுத்தாண்ட கிளரொளியை
மரகதத்தை
வேதங்கள் தொழுதேத்த விளங்கு தில்லை
கண்டேனே' (கண்டபத்து-10)

என வரும் திருவாசகம், மேற்குறித்த திருமந்திரத்தை அடியொற்றி யமைந்துள்ளமை காணலாம்.

அண்டங்கள் ஏழினுக் கப்புறத் தப்பால்
உண்டென்ற சத்தி சதாசிவத் துச்சிமேற்
கண்டங் கரியான் கருணை திருவுருக்
கொண்டங் குமைகாணக்
கூத்துகந் தானே. (2732)

என வரும் திருமந்திரம், உமையம்மையார் காணத் திருவம்பலத்திலே இறைவன் ஆடியருளும் ஒரு பெருந்திருக்கூத்தின் இயல்பினை விரித்துரைப்பதாகும். இத்திருமந்திரப் பொருளை விரித்து விளக்கும் முறையில் அமைந்தது,

'கற்பனை கடந்த சோதி கருணையே யுருவ
மாகி
அற்புதக் கோலம் நீடி அருமறைச்
சிரத்தின்மேலாம்
சிற்பர வியோம மாகுந் திருச்சிற்றம்
பலத்துள் நின்று
பொற்புடன் நடஞ்செய்கின்ற பூங்கழல்
போற்றி போற்றி'
(பெரிய-தில்லைவாழ்-2)

என வரும் சேக்கிழார் நாயனார் வாய்மொழி யாகும்.

சிற்றம்பலம் எனத் தில்லையம்பலத்தைக் குறித்து வழங்கும் இச் செந்தமிழ்ச் சொல்லே சிதாகாசம் என்ற பொதுப் பொருளில் சிதம்பரம் என வழங்கப் பெறுவதாயிற்று.

எங்குந் திருமேனி எங்குஞ் சிவசத்தி
எங்குஞ் சிதம்பரம் எங்குந் திருநட்டம்
எங்குஞ் சிவமா யிருத்தலால். எங்கெங்கும்
தங்குஞ் சிவனருள் தன்விளை யாட்டதே.
(2722)

என வரும் திருமந்திரப் பாடல் ஒன்றில் மட்டுமே சிதம்பரம் என்ற சொல் வழங்கப் பெற்றுளது. பன்னிரு திருமுறைகளில் வேறு எங்கும் இப்பெயர் எடுத்தாளப் பெறவில்லை.

தாயின் முலைப்பாலையே உணவாகக் கொண்டு வளரும் பசுங் குழந்தைகட்கு நோய் வந்தால் அந்நோயைத் தீர்க்கும் மருந்தினை அக் குழந்தையின் குடர் தாங்காதென்று அம் மருந்தினைத் தாயே உண்டு அதன் பயனைக் குழந்தைகள் பெற்று நலம் பெறவுதவுதல் உலகியலிற் கண்டது. உலக மீன்ற பெருமாட்டி யாகிய சிவகாமியன்னையும் இறைவனது திருக் கூத்தினை மன்னுயிர்கள் நேரிற்காண வியலாத நிலையில் அவ்வுயிர்களின் பிறவி நோய் நீங்கப் பெருமான் செய்தருளும் திருக்கூத்தினை தான் உடனிருந்து கண்டு அதன் பயனை மக்களுக்கு வழங்கியருள்கின்றார். இந்நுட்பம்,

'' அருமானவாண் முகத்தாள் அமர்ந்து
காண
அமரர் கணந்தொழுதேத்த ஆடுகின்ற
பெருமானைப் பெரும்பற்றப்
புலியூரானை''
(6-1-3)

என வரும் திருநாவுக்கரசர் வாய்மொழி யாலும், இத் தொடர்ப் பொருளை விரித்து விளக்கும் முறையில்,

''பாலுண் குழவி பசுங்குடர் பொறாதென
நோயுண் மருந்து தாயுண் டாங்கு
மன்னுயிர்த் தொகுதிக் கின்னருள்
கிடைப்ப
வைய மீன்றளித்த தெய்வக் கற்பின்
அருள் சூற்கொண்ட வையரித் தடங்கண்
திருமாண் சாயல் திருந்திழை காணச்
சிற்சபை பொலியத் திருநடம் புரியும்
அற்புதக்கூத்த''
(சிதம்பர மும்மணிக்கோவை. 2)

என வரும் குமரகுருபரர் வாய்மொழியாலும் இனிது புலனாதல் காணலாம்.

மூவர் அருளிய தேவாரத் திருப்பதிகங்கள் தில்லைக்குரியனவாகத் திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகங்கள் இரண்டும், திருநாவுக் கரசர் திருப்பதிகங்கள் எட்டும், சுந்தரர் திருப் பதிகம் ஒன்றும் ஆகப் பதினொரு திருப்பதி கங்கள் கிடைத்துள்ளன. தில்லைப்பதியை யடைந்த திருஞானசம்பந்தர் அண்ணலார் தமக்கு அளித்த ஞானமேயான அம்பலமும் தம் உள்ளத்தில் நிறைந்த ஞானத்தின் கண் நிகழும் ஆனந்தமாகிய ஒரு பெருந் தனிக் கூத்தும் ஆகிய தமது அகக் காட்சியினைத் தில்லைச் சிற்றம்பலத்திலே புறக்காட்சியாகவும் கண்ணுரக் கண்டு கும்பிட்டார். 'உணர்வின் நேர் பெற வருஞ்சிவ போகத்தினை உருவின் கண், அணையும் ஐம்பொறியளவினும் எளிவர அருளினை' என்று கூறித் தில்லையம்பல வாணரை வணங்கிக் 'கற்றாங்கு எரியோம்பி' என்னும் பதிகத்தைப் பாடித் தில்லை வாழந் தணர்களைச் சிறப்பித்தருளினார். திருவேட் களத்தினைத் தங்கு மிடமாகக் கொண்டு காலந்தோறும் அம்பலவாணரை வழிபட்டு மகிழ்ந்தார். திருவேட்களத்திலிருந்து திருநீல கண்டப் பாணருடன் தில்லைப் பதியிற் புகுந்த போது இறைவனுக்குத் தொண்டு புரியும் தில்லை வாழந்தணர் அனைவரும் சிவகண நாதர்களாகத் தோன்றக் கண்டு அக் காட்சி யைத் திருநீலகண்டப்பாணர்க்கும் காட்டி 'ஆடினாய் நறு நெய்யொடு பால் தயிர்' என்னும் திருப்பதிகத்தைப் பாடிப் போற்றினார்.

ஊனாலும் உயிராலும் உள்ள பயன் பெற விழைந்து தேனாரும் மலர்ச் சோலைத் தில்லை யினையடைந்த திருநாவுக்கரசர் தில்லைச் சிற்றம்பலவர் திருமுன் அணைந்த போது 'என்று வந்தாய்' என அன்புடன் வினவும் திருக்குறிப்புடன் கூத்தப் பெருமான் நாவுக்கரசர்க்குக் காட்சி கொடுத்தருளினார். இத்திருவருட் குறிப்பினைக் 'கரு நட்ட கண்டனை' என்னும் முதற் குறிப்புடைய திருப்பதிகத்தில்,

ஒன்றியிருந்து நினைமின்கள் உந்தமக் கூனமில்லைக்
கன்றிய காலனைக் காலாற் கடிந்தான் அடியவற்காச்
சென்றுதொழு மின்கள் தில்லையுட் சிற்றம் பலத்து நட்டம்
'என்று வந்தாய்' எனும் எம்பெருமான்றன் திருக் குறிப்பே.

என வரும் திருவிருத்தத்திற் குறித்துள்ளமை காணலாம். தம்மை நோக்கி 'என்று வந்தாய்' என இறைவன் வினவிய வினாவுக்கு விடை கூறுவார் போல

பத்தனாய்ப் பாடமாட்டேன் பரமனே பரமயோகீ
எத்தினாற் பத்திசெய்கேன் என்னைநீ யிகழவேண்டாம்
முத்தனே முதல்வாதில்லை யம்பலத் தாடுகின்ற
அத்தா வுன் ஆடல்காண்பான் அடியனேன் வந்தவாறே

என வரும் திருநேரிசையினையும் அன்னம் பாலிக்கும் என்னும் திருக்குறுந்தொகையினை யும் பாடிப் போற்றினார். பின்பு திருவேட் களம் திருக்கழிப்பாலை முதலிய தலங்களை வணங்கிப் 'பனைக்கை மும்மத வேழ முரித் தவன்' என்னுந் திருக்குறுந்தொகையினைப் பாடித் தில்லையை யடைந்தார். 'அரியானை யந்தணர் தஞ் சிந்தையானை' என்னும் பெரிய திருத்தாண்டகம் பாடி அம்பலவரை வணங்கிச் 'செஞ்சடைக் கற்றை முற்றத் திளநிலா வெறிக்குஞ் சென்னி' என்னும் திருநேரிசையை யும், 'பாளையுடைக்க முகோங்கி' என்னும் திருவிருத்தத்தினையும் பாடிப் போற்றினார்.

குனித்த புருவமுங் கொவ்வைச்
செவ்வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல்
மேனியிற் பால் வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த பொற்
பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே
யிந்த மாநிலத்தே.

எனவும்,

'' வாய்த்தது நந்தமக்கீதோர்
பிறவி மதித்திடுமின் ''

எனவும் வரும் திருப்பாடல்களில் தில்லையைக் கண்டு வழிபடுதலே மக்கட் பிறப்பின் மேலான பயன் எனவும் இப்பயனைப் பெறுதற்குச் சாதனமாகிய இப் பிறப்பினை மதித்துப் போற்றுதல் வேண்டும் எனவும் அப்பரடிகள் அறிவுறுத்திய திறம் நினைந்துபோற்றுதற்குரிய தாகும். இறைவன் கோயில் கொண்டருளிய எல்லாத் தலங்களிலும் மிகவும் பெருமை வாய்ந்தது இத் தில்லைத் தலமே என்பதனைப் ''பெருமை நன்றுடைய தில்லை'' (4-57-4) என வரும் தொடரில் நாவுக்கரசர் குறித் துள்ளமை அறியத்தகுவதாகும். சிவபெருமான் பல்வேறு தலங்களிற் கோயில் கொண்டு எழுந்தருளியிருப்பினும் அம்முதல்வனுடைய திருவருட் கலைகள் யாவும் ஒருங்கே புக்கு ஒடுங்கி நிற்கும் பொது நிலையம் இறைவன் அருட் கூத்தியற்றும் புலியூர்ச் சிற்றம்பலமே என்னும் உண்மையினை உணர்த்தும் முறையில் தாண்டக வேந்தர் அருளிய திருப்பதிகம் 'மங்குல் மதி தவழும்'' எனத் தொடங்கும் புக்க திருத்தாண்டகமாகும்.

நம்பியாரூரராகிய சுந்தரர், தில்லைப்பதியை யடைந்து இறைவனது திருக்கூத்தினைக் கண்டு வணங்கி மனிதப் பிறவியே அடியேற்குவாலி தாம் இன்பத்தை வழங்கியது எனக் கண்களில் நீர் சொரியக்கசிந்து அறிவரும் பதிகமாகிய சொன் மாலையற் பரவிப் போற்றினார். சுந்த ரர் கொங்கு நாட்டிற் பாண்டிக் கொடுமுடி முதலிய தலங்களைப் பணிந்து காஞ்சியாற்றின் கரையிலுள்ள பேரூர்த் திருக்கோயிலை யடைந்த போது பேரூர்ப் பெருமான் தில்லை

மன்றுள் நின்றாடுந் தமது திருக்கோலத்துடன் காட்சி கொடுத்தருளினார். அத்தெய்வக் காட்சியைக் கண்ட சுந்தரர், தில்லையம் பலவன் திருக் கூத்தினைக் கண்டு கும்பிடப் பெற்றால் இனிப் புறம் போய்ப் பெறுதற்கு யாதுளது' என்று கூறிப் பேரூரினின்றும் புறப்பட்டுப் பல தலங்களையும் பாடிப் பரவித் தில்லைப்பதியை யடைந்து கூத்தப் பெருமானை ஆர்வமுறக் கண்டு தொழுதார். நன்னெறியில் ஒழுகியவர்கள் வழுவி நரகினையடைந்து துன்புறாதபடி தடுத் தாட் கொள்ள வல்ல இறைவனை நமக்கு உரிமையாகப் பெற்றோம்' எனத் தம் நெஞ்சத் திற்கு அறிவுறுத்தும் முறையில் 'மடித்தாடும் அடிமைக் கணன்றியே' என்னும் முதற் குறிப் புடைய திருப்பதிகத்தைப்பாடிப் போற்றினார்' அப்பதிகத் திருக்கடைக்காப்பில் ''மீ கொங்கில் அணிகாஞ்சிவாய்ப், பேரூரர் பெருமானைப் புலியூர்ச் சிற்றம்பலத்தே பெற்றா மன்றே'' எனத் தில்லையம்பலவன் கொங்கு நாட்டுப் பேரூரில் ஆடற் கோலம் காட்டியருளிய திறத்தைக் குறிப்பிட்டுள்ளமை காணலாம். பேரூர் இறைவன் தம் பொருட்டுத் தில்லைத் திருநடனத்தைக் காட்டியருளினமையால் அத் தலத் திறைவனைக் 'குடகத் திலையம்பல வாணன்' (7-10-2) என நம்பியாரூரர் குறித் துள்ளமையும் இங்கு நினைக்கத்தகுவதாகும். பேரூர் மேலைச் சிதம்பரம் என வழங்குதற்கும் இந் நிகழ்ச்சியே காரணமாகும்.

'கற்றாங்கு எரியோம்பிக் கலியை வாராமே செற்றார் வாழ்தில்லை' எனவும், செல்வர் வாழ் தில்லை, விழாவாரணிதில்லை, சீலத்தார் தொழுதேத்து சிற்றம்பலம், தில்லைமாநகர்ச் சிற்றம்பலம், கற்றவர் தொழுதேத்து சிற்றம் பலம், தூய செம் பொன்னினால் எழுதி மேய்ந்த சிற்றம்பலம், தேரினார் மறுகில் திருவாரணி தில்லை' எனவும், புலியூர்ச் சிற்றம்பலம் எனவும் தேவாரத் திருமுறைகளில் இத்தலம் போற்றப் பெற்றுள்ளது.

திருவாதவூர் மகிழ் செழுமறை முனிவராகிய மணிவாசகப் பெருமான், திருப்பெருந்துறை யிற் குருவாய் வந்தருளிய இறைவன் நலமலி தில்லையுட் கோலமார் தருபொதுவினில்வருக' எனப் பணித்த வண்ணம் தில்லைப் பதியை யடைந்து, கூத்தப் பெருமானை அழகிய மணி வார்த்தைகளால் பாடிப் பரவிப் புத்தரை வாதில் வென்று தவச் சாலையில் தங்கியிருந் தார். அப்போது இறைவனே மறை முனிவ ராகி வந்து திருவாசகம் முழுதையும் எழுதிக் கொண்டதுடன் 'தில்லைச் சிற்றம்பலவனைப் பாட்டுடைத் தலைவனாக் கொண்டு அகப் பொருட் கோவை யொன்று பாடித் தருக' எனக் கேட்டு அதனையும் எழுதிக்கொண்டு 'திருவாதவூரன் சொல்ல அழகிய சிற்றம்பல முடையார் எழுதியது' எனத் தமது கைச் சாத்திட்டுத் தில்லையம்பலத்தில் வைத்து மறைந்தருளினார். அவ்வேட்டினைக் கண்டு வியப்புற்ற தில்லைவாழந்தணர்களும் அடியார்களும் திருவாதவூரடிகளை யடைந்து அதற்குப் பொருள் விரித்தருளும்படி வேண்ட அடிகளார் அவர்களுடன் தில்லைப் பொன்னம்பலத்தை யடைந்து 'திருவாசகத் துக்குப் பொருளாவார் தில்லையம்பலவரே' எனச் சுட்டிக்காட்டி எல்லோருங் காணத் தில்லையம்பலத்துட் புக்கு மறைந்தருளினார் என்பது வரலாறு. எனவே எட்டாந் திருமுறை யாகிய திருவாசகமும் கோவைத் திருவாசகமும் தில்லைச் சிற்றம்பலத்துடன் நெருங்கிய தொடர்புடைய பனுவல்கள் என்பது நன்கு பெறப்படும்.

திருவாசகம், சிவபுராணம் முதல் அச்சோப் பதிகம் ஈறாக ஐம்பத்தொரு பகுதிகளை யுடையது. அவற்றுள் இருபத்து நான்கு பகுதிகள் தில்லையில் அருளிச் செய்யப்பெற்றன. திருச்சிற்றம்பலக் கோவை முழுவதும் தில்லைச் சிற்றம்பலவனைப்போற்றும் தோத்திரமாகவும் அகனைந்திணைப் பொருளை நாடகமாக விரித் துக் கூறும் துறைப் பகுதிகளாகவும் அமைந் துள்ளது. முத்தி நெறியாகிய பேரின்ப நிலை யினை யடைதற்குச் சாதனமாகிய பத்தி நெறி யின் இலக்கியமாகத் திகழ்வது திருவாசகம். உலகியல் வாழ்வுக்கு இன்றியமையாத ஒருவன் ஒருத்தியின் இன்ப அன்பினை வளர்க்கும் அகத் திணை யொழுகலாற்றை விரித்துக் கூறுமுக மாகப் பத்தி நெறியின் பயனாகிய முத்திநெறி யின் பெற்றியினை உய்த்துணர வைப்பது திருச்சிற்றம்பலக் கோவை.

தில்லைப்பொன்னம்பலத்திலே சிவபெருமான் தென்திசை நோக்கி ஆடல் புரிந்தருளுந் திறத்தினைத் 'தென்பாலு கந்தாடுந், தில்லைச் சிற்றம்பலவன்' எனவும், 'தென் மாத்திசை வசை தீர்தரத்தில்லைச் சிற்றம்பலத்துள், என்மாத் தலைக்கழல் வைத்தெரியாடும் இறை' எனவும் வரும் தொடர்களாலும், பதஞ்சலி முனிவர் வேண்டுகோட்கிணங்கித் தில்லையில் இறைவன் ஆடல் காட்டியருளும் அற்புத நிகழ்ச்சியைப் 'பதஞ்சலிக்கருளிய பரமநாடக' என்வும் 'நாகந்தொழ எழில் அம்பலம் நண்ணி நடநவில்வோன்' எனவும் வரும் தொடர்களாலும் அடிகள் போற்றியுள்ளார். தில்லையில் அந்தணர் மூவாயிரவர் குழுமிக் கூத்தப் பிரானை வழிபடும் முறைமையினையும், தம் காலத்தில் தில்லையம்பலத் திருமுற்றத்தே திருமால் அறிதுயிலமர்ந்த கோலத்தில் இடம் பெற்றிருந்த செய்தியினையும் திருக்கோவையில் அடிகள் குறித்துள்ளமை காணலாம்.

திருமாளிகைத்தேவர், சேந்தனார், கருவூர்த் தேவர், பூந்துருத்தி நம்பிகாடநம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலிய முதர், புருடோத்தமநம்பி, சேதிராயர் என்னும் ஒன்பதின்மரும் பாடிய திருவிசைப் பாப் பதிகங்கள் இருபத்தெட்டும் திருப் பல்லாண்டுப் பதிகம் ஒன்றும் ஆக இருபத் தொன்பது திருப்பதிகங்களின் தொகுதி ஒன்பதாந் திருமுறையாகும். இவற்றுள் தில்லைச் சிற்றம்பலத்திற்கு மட்டும் பதினாறு பதிகங்கள் உள்ளன. அவற்றுள் சேந்தனார் பாடிய திருப்பல்லாண்டுத் திருப்பதிகம் 'மன்னுக தில்லை வளர்க நம்பத்தர்கள்' எனத் தில்லை மாநகரையும் அங்கு வந்து இறைவனை வழிபடும் சிவனடியார்களையும் வாழ்த்தித் தொடங்குகின்றது.

பல்லவர் மரபிலே தோன்றித் தொண்டை நாட்டையாண்ட வேந்தர் பெருமான் காடவர் கோன் என்பார் அரச பதவியை மைந்தரிடம் ஒப்படைத்துத் துறவுபூண்டு தில்லைச் சிற்றம் பலம் முதலிய ஒவ்வொரு திருக்கோயிலையும் ஒவ்வொரு வெண்பாவினாற் பாடிப் போற்றினார். ஐயடிகள் காடவர்கோன் நாயனார் பாடிய க்ஷேத்திரத் திருவெண்பாவின் முதற் பாடல்,

''ஓடுகின்ற நீர்மை யொழிதலுமே உற்றாரும்
கோடுகின்றார் மூப்புங் குறுகிற்று—
நாடுகின்ற
நல்லச்சிற் றம்பலமே நண்ணாமுன்
நன்னெஞ்சே
தில்லைச்சிற் றம்பலமே சேர்.''

என்பதாகும். நம்பியாரூரர்க்குத் தோழராய்க் களையாவுடலோடு கயிலை சென்ற சேரமான் பெருமாள் நாயனார், தில்லைத் திருக் கூத்தினைக் கண்டு மகிழ்ந்த நிலையிற் பாடிப் பரவிய செந்தமிழ்ப் பனுவல் பொன்வண்ணத் தந்தாதி என்பதாகும். பொன்னார் மேனியனாகிய இறைவனைக் கண்டு காதலித்த தலைவியொருத்தி அவனையடையப் பெறாமையால் வருந்தித் தன்னுடம்பு பொன் போலும் பசலைநிறம் பெற்றுத் தானும் தன் தலைவனும் பொன் வண்ணமாகிய உரு வொப்புமை பெற்று விளங்குந் தன்மையினைக் கூறுவதாக அமைந்தது.

''பொன்வண்ணம் எவ்வண்ணம்
அவ்வண்ணம் மேனி பொலிந்திலங்கும்
மின்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
வீழ்சடை வெள்ளிக்குன்றந்
தன்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
மால்விடை தன்னைக்கண்ட
என்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ண
மாகிய ஈசனுக்கே'

எனவரும் இவ்வந்தாதியின் முதற்பாடல். இத் திருவந்தாதியின் முதற்பாடல் பொன் வண்ணம் எனத் தொடங்கி நூறாவது செய்யுள் பொன் வண்ணமே என முடிந்தது அந்தாதியாய் அமைதலின் இது பொன் வண்ணத்தந்தாதியென்னும் பெயருடையதாயிற்று.

''கனிதரு செவ்வாய் உமையொடு காளிக்கு, அருளிய திருமுகத்தழகுறு சிறு நகை இறைவன்'' எனவும், ஊன்புக்க வேற்காளியின் கோபந் தவிரத் 'தேன் புக்க தண்பனை சூழ் தில்லைச் சிற்றம்பலவன் தான்புக்கு நட்டம் பயிலும்'' எனவும் வரும் திருவாசகத்தை அடியொற்றிய நிலையில் நக்கீரதேவநாயனார்,

''தாரகன்நன் மார்பிற்றனிச் சூலம்—வீரங்
கொடுத் தெறியு மாகாளி கோபந் தவிர
எடுத்த நடத்தியல்பு போற்றி''

எனப் போற்றித் திருக்கலி வெண்பாவில் இறைவனது திருநடனத்தைப் பரவிப் போற்றி யுள்ளார். இவ்வாறே பரணதேவநாயனாரும்

''ஆங்குரைக்கலாம் பொன் மலர்ப்பாத மஃதன்றே
யாங்குரைக்கலாம் பொன்னணிதில்லை —யாங்குரைத்த
அம்பலத்தும் அண்டத்தும் அப்பாலாய் நின்ற
அம்பரத்தும் அண்டத்து மாம்''
(சிவ—17)

என்வும்

''அடுத்த பொன்னம்பல மேசார்வும் அதனுள்
அடுத்த திருநட்ட மதுவே (ஷை 26)

எனவும்,

''ஆர் துணையாக அங்கிருப்பதம்பலவர்''
(ஷை 47)

எனவும் சிவபெருமான் திருவந்தாதியில் தில்லையைப் போற்றியுள்ளார்.

சிவநெறிச் செல்வர்களால் எத்தகைய அடைமொழியுமின்றிக் கோயில் எனப் போற்றப் பெறும் சிறப்புடையது தில்லைச் சிற்றம்பலம். திருவெண்காட்டடிகள் வெண்பா, கலித்துறை விருத்தம், அகவல் என்னும் நால்வகைப் பாக்களும் ஒன்றன்பின் ஒன்றாக, அந்தாதியாகக் தொடுத்துவர நால்வகை மணிகளால் தொடுக்கப்பட்ட மாலை போன்று பாடிய பனுவல் கோயில் நான்மணிமாலை என்பதாகும். பதினோராந் திருமுறையில் அமைந்த இதன்பாடல்கள் யாவும் தில்லைப் பெருமானைப் போற்றிப் பரவும் தோத்திரமாகவும் சைவ சித்தாந்த நுண்பொருள்களை நுண்ணிதின் விளக்கும் சாத்திரமாகவும் விளங்குகின்றன.

கோயிலாகிய தில்லைச் சிற்றம்பலத்திலே அருட்கூத்தியற்றும் அம்பலவாணரைப் பண்ணார்ந்த விருத்தமாகிய கட்டளைக் கலித்துறை பால் நம்பியாண்டார் நம்பி பரவிப் போற்றிய செந்தமிழ்ப் பனுவல் கோயில் திருப் பண்ணியர் விருத்தம் என்பதாகும். பண்ணோடியன்ற பாடல் என்ற பொருளுடைய 'பண்ணியல் விருத்தம்' என்ற தொடர், லகரத்திற்கு ரகரம் போலியாய்ப் பண்ணியர் விருத்தம்' என்றாயிற்று. இனி, கோயில் திருப்பண்ணியர்' என்ற தொடர்க்குத் 'தில்லைப்பெருங்கோயிலில்திருத்தகவினதாகிய அருட்கூத்தினை நிகழ்த்தியருளுபவர்' எனப் பொருள் கொண்டு கூத்தப் பெருமானைப் பரவிய விருத்தம் எனப் பொருளுரைத்தற்கும் இடமுண்டு. திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளையார் அருள் பெற்ற நம்பியாண்டார் நம்பி திருத்தொண்டர் திருவந்தாதி பாடியதுடன் தேவாரத் திருமுறைகளைப் பரவிப் போற்றினார் என்பது திருமுறைகண்ட வரலாறாகும்.

அருண்மொழித் தேவராகிய சேக்கிழார் பெருமான் அநபாய சோழன் விரும்பிய வண்ணம் தில்லைப்பதியையடைந்து பொன்னம்பலவாணரை வழிபட்டு 'உலகெலாம்' என அம்பலவர் அருளிய மெய்ம்மொழியை முதலாகக் கொண்டு,

உலகெலா முணர்ந் தோதற் கரியவன்
நிலவுலா வியநீர் மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

என அம்பலவாணரை வாழ்த்தி வணங்கித் திருத்தொண்டர் புராணமாகிய வரலாற்றுக் காப்பியத்தினைத் தில்லைப்பதியில் தங்கிப் பாடி முடித்தருளினார். இவ் வரலாற்றை உமாபதிசிவம் தாம் இயற்றிய சேக்கிழார் நாயனார் புராணத்தில் விரித்துக் கூறியுள்ளமை இங்கு உணர்தற்குரியதாகும்.

'பத்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ' ராகிய சேக்கிழார் நாயனார், தில்லைவாழந்தணர் புராணத் தொடக்கத்தில்,

ஆதியாய் நடுவுமாகி அளவிலா அளவுமாகிச்
சோதியாய் உணர்வு மாகித் தோன்றிய பொருளுமாகிப்

பேதியா ஏகமாகிப் பெண்ணுமாய் ஆணுமாகிப்
போதியா நிற்குந்தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி.

எனத் தில்லைத் திருக் கூத்தினைப் பரவிப் போற்றுகின்றார். இத்திருப்பாடலும்இதனை யடுத்து வரும் 'கற்பனை கடந்த சோதி' என்ற முதற் குறிப்புடைய திருப்பாடலும் எல்லாம் வல்ல இறைவனது உண்மை யிலக் கணத்தினையும், அம்முதல்வன் மன்னுயிர்கள் உய்திபெறத்தில்லைத் திருவாளர் திருச்சிற்றம் பலத்தில் நிகழ்ந்தியருளும் அற்புதத் திருக் கூத்தின் நுட்பத்தினையும் நன்கு புலப்படுத்து வனவாகும்.

தில்லைநகரில் சிறப்புடைத் திருமுடி சூடிய இரண்டாங் குலோத்துங்க சோழமன்னன் காலத்தில் வாழ்ந்த அருண்மொழித்தேவர், தம் காலத்து மருதத்தண்பனையும் தாமரை மலர்ந்த ஓடையும் திருநந்தவனமும் சோலை களும் மதிலும் புறத்தே சூழப்பெற்று, எழுநிலைக் கோபுரங்களையுடைய அழகிய திருவீதியினைப் பெற்று விளங்கிய தில்லை மாநகரின் எழில் நலத்தினைத் தடுத்தாட் கொண்ட புராணத்திலும் திருநாவுக்கரசு நாயனார் புராணத்திலும் திருஞானசம்பந்தர் புராணத்திலும் சொல்லோவியஞ் செய்து காட்டியுள்ளார். நம்பியாரூரர் வடதிசை வாயிலாகவும் திருநாவுக்கரசர் மேற்றிசை வாயிலாகவும் ஆளுடைய பிள்ளையார் தென் திசை வாயிலாகவும் தில்லைப்பதியை யடைந்த வழியமைப்பினைச் சேக்கிழாரடிகள் தெளி வாகக் குறித்துள்ளமை காணலாம்.

உலகெலாம் உணர்ந்து ஓதுதற்கு அரிய வனும் அளவில்லாத பேரொளியினனும் ஆகிய இறைவன் ஆடல்புரிந்தருளும் ஞான நிலைய மாகிய திருவளர் திருச்சிற்றம்பலம், அருமறை களின் முதலிலும் நடுவிலும் கடையிலும் அன்பர்கள் சிந்தையிலும் விரிந்து விளங்கும் திருவளரும் ஒளியினாற் சூழப்பெற்றுத் தூய செம் பொன்னினால் (திருவைந்தெழுத்து) எழுதிவேய்ந்த சிறப்பினையுடையதாகும். இந் நுட்பத்தினை

''அருமறை முதலில் நடுவினிற் கடையில்
அன்பர்தம் சிந்தையில் அலர்ந்த
திருவளர் ஒளிசூழ் திருச் சிற்றம்பலம்''
(பெரிய–தடுத்தாட்—104)

எனவரும் தொடரில் சேக்கிழார் நாயனார் புலப்படுத்திய திறம் நினைந்து போற்றுதற் குரியதாகும்.

திருக்கோயிலில் செய்யத்தகாத குற்றங்கள்

1. ஸ்நானம் செய்யாது போதல்
2. தோய்த்துலராத வேட்டி தரித்துக் கொண்டு போதல்
3. கால் கழுவாது போதல்
4. ஆசௌசத்துடனே போதல்
5. தலையில் வஸ்திரம் தரித்துக் கொள்ளு தல்
6. சட்டை இட்டுக் கொள்ளுதல்
7. போர்த்துக் கொள்ளுதல்
8. மேல் வேட்டி போட்டுக்கொள்ளுதல்
9. பாதரக்ஷை இட்டுக்கொள்ளுதல்
10. வாகன மேறிக்கொள்ளுதல்
11. குடைப்பிடித்துக் கொள்ளுதல்
12. வெற்றிலை பாக்கு உண்டல்
13. துப்புதல்
14. மலசலங்கழித்தல்
15. மூக்கு நீர் சிந்துதல்
16. மயிர் கோதி முடிதல்
17. சூதாடுதல்
18. சிரித்தல்
19. சண்டையிடுதல்
20. வீண் வார்த்தை பேசுதல்
21. சயனித்தல்
22. காமப்பற்று வைத்தல்
23. காலை நீட்டிக் கொண்டிருத்தல்
24. ஆசனத்திருத்தல்
25. சுவாமிக்கும் பலி பீடத்துக்கும் குறுக்கே போதல்
26. சுவாமிக்கும் பலி பீடத்திற்கும் இடையே நமஸ்காரம் பண்ணுதல்
27. சுவாமிக்குக் காலை நீட்டி நமஸ்காரம் பண்ணுதல்
28. சுவாமிக்குக் காலை நீட்டி அங்கப் பிரதக்ஷிணம் பண்ணுதல்
29. நிருமாலியத்தைக் கடத்தல்
30. நிருமாலியத்தை மிதித்தல்
31. தூபி துஜஸ்தம்பம், பலிபீடம் விக்கிரகம் இவைகளின் நிழலை மிதித்தல்
32. விக்கிரகத்தைத் தொடுதல்

— ஆறுமுக நாவலர்

பெருமன்றத்தின் நால்வர் விழாவில் திருமுறை ஊர்வலம்



இடம் : திருமயிலை கபாலீசுவரர் கோயில் வாயிலினின்று புறப்பாடு (4—8—85)

உ

சிவமயம்

தசகாரியம்

புலவர் மணி — சித்தாந்தவித்தகர் முரு. பழ. இரத்தினம் செட்டியார்

தசம் — பத்து; காரியம் — செயற்பாடுகள். ஆன்மா ஞானசாதனையில் முன்னேறும் போது அதன் அறிவில் நிகழும் செயற்பாடுகளைப் பத்துவகை ஞானப்படி நிலைகளாக வகுத்துத் ''தசகாரியம்'' எனக் கூறுவது சித்தாந்த மரபாகும்.

தத்துவரூபம், தத்துவதரிசனம், தத்துவ சுத்தி, ஆன்ம ரூபம், ஆன்ம தரிசனம், ஆன்ம சுத்தி, சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம், சிவபோகம் எனத் தச காரியம் பத்தாகச் சொல்லப்படும்.

சரியை, கிரியை, யோகங்களைச் செய்து வருகின்ற ஆன்மா அபர ஞான சாதனையாகிய ஞான சாத்திர ஆராய்ச்சியிலும் ஈடுபடும். உலகப்பற்றும் உடற்பற்றும் அறுவதற்கு இவ்வாராய்ச்சி துணை செய்யும்.

உலகமும் உடலும் தத்துவ, தாத்துவிகங்களால் ஆக்கப்பட்டவை என்றும் அவை அனைத்தும் மாயை என்னும் சடப்பொருளிலிருந்து தோன்றியது என்றும் ஞான சாத்திரம் சொல்லும்.

''முப்பத்தாறு தத்துவங்களும் இன்ன, இன்ன தன்மையன; அவற்றிற்குத் தோற்ற, ஒடுக்கங்கள் இப்படி, இப்படி நிகழும்'' எனத் தன் அறிவிற்குப் பொருந்தச் சாத்திர வாயிலாக ஆராய்ந்து அறிந்து கொள்வது **தத்துவ ரூபமாகும்.**

''தத்துவங்கள் அனைத்தும் சடம்; ஆன்மா சித்துப்பொருள்'' என அறிவது **தத்துவ தரிசனமாகும்.**

''தத்துவங்கள் மயக்கம் தருவன என அறிந்து அவற்றை விட்டு அறிவினால் நீங்கியிருப்பது'' **தத்துவ சுத்தியாகும்.**

''தத்துவங்களுக்கு அறிவில்லை; ஆன்மாவுக்குத் தான் அறிவுண்டு; ஆனால் அந்த அறிவு துணை இன்றி இயங்காது'' என உணர்ந்து ஆன்ம இயல்புகளைச் சாத்திர வாயிலாக அறிந்து கொள்வது **ஆன்ம ரூபமாகும்.**

''ஆன்மா தானே அறியவல்ல தன்று; திருவருள் துணையால்தான் அறியும்'' எனப் பரஞானம் துணையாகத் தெளிவது **ஆன்ம தரிசனமாகும்.**

''எல்லாம் சிவச்செயலே'' என ஆன்மா தற்செயலற்று நிற்கும் நிலை **ஆன்ம சுத்தியாகும்.**

இறைவன் இயல்புகளைக் குருநாதன் உணர்த்த உணர்வது **சிவரூபமாகும்.**

''சிவம் யாண்டும் நீக்கமற நிறைந்திருப்பதை அறிந்து, எல்லாம் சிவமாய்க் காண்டல்'' **சிவதரிசனமாகும்.**

தற்போதமும் தற்செயலும் அற்றுப்பழைய வாசனை தாக்காவண்ணம் திருவருளைப் பற்றி அதனுடன் ஒன்றி நிற்பது **சிவயோகமாகும்.**

திருவருளுடன் கூடிய ஆன்மா சிவத்துடன் முழுமையாக ஒன்றிச் சிவானந்தத்தைத் துய்ப்பது **சிவபோகமாகும்.**

மேற்கண்டவாறு தசகாரியங்களுக்குச் சொல்வது பொது விளக்கமேயாகும். இனி நாம் சிறப்புவகையாக இவற்றைப் பற்றித் தெரிந்து கொள்ளவேண்டும்.

ஞானம் பெறுவதற்குச் சரியை, கிரியை யோகங்களை **அங்கியாகவும்** ஞானசாத்திர ஆராய்ச்சியை **அங்கமாகவும்** கொண்டு சாதனை செய்யவேண்டும்.

ஞானசாத்திர ஆராய்ச்சி மட்டும் ஞானத்தைப் பயக்காது; இறைவழிபாட்டுடன் கூடிய ஆராய்ச்சிதான் ஞானத்தைப் பயக்கும்.

சாத்திர ஆராய்ச்சி வாயிலாக முப்பத்தாறு தத்துவங்களின் இயல்பை ஆராயும் **தத்துவ ரூபமும்** அவை சடம் என அறியும் **தத்துவ தரிசனமும்** ஆன்மாவின் இயல்பை அறியும் **ஆன்ம ரூபமும்** அபரஞானமேயாயினும், இறைவழிபாட்டுடன் கூடி அவை நிகழும் போது, ஆன்மா பரஞானம் எனப்படும் அநுபவஞானம் பெறுதற்குரிய தகுதியை அடைகிறது.

சரியை, கிரியை யோகங்களுடன் கூடிய தத்துவரூபம், தத்துவ தரிசனம், ஆன்மரூபம் ஆகிய மூன்றும் ஆன்மாவினிடத்தே மலபரிபாகமும் இருவினை ஒப்பும் உண்டாகுமாறு செய்யும். விருப்பு, வெறுப்பற்ற நிலையே இருவினை ஒப்பாகும். இந்நிலை கைவந்து விட்டால் ஆன்மா பக்குவம் அடைந்து விட்டதென்று பொருள்.

பக்குவம் பெற்றுவிட்ட ஆன்மாவுக்குப் பரஞானத்தை அநுபவபூர்வமாக உணர்ந்த இறைவன் மானிடச் சட்டை போர்த்தியோ, சீவன் முத்தரை ஆவேசித்தோ குருநாதனாக வந்து காட்சி வழங்குவான்.

இறைவன் குருநாதனாக வருவதைத் தான் ''**சிவரூபம்**'' எனத் தசகாரியம் சொல்கிறது. இங்கே பரஞானம் துவங்குகிறது.

குருநாதன் ஞானத்தை உணர்த்தும் போது ஆன்மா முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்த தன் வியாபக நிலையை அநுபவபூர்வமாக உணரும்.

தத்துவங்களைக் கடப்பதால் ஆன்மாவுக்கு அவற்றின்கண் உள்ள பற்று அறும்; இதனைத் ''**தத்துவ சுத்தி**'' எனத் தசகாரியம் பகரும்.

''தான் வியாபகன்; திருவருளால் தான் இந்நிலையை அறியலாம்'' என ஆன்மா அநுபவத்தில் உணர்வதே ''**ஆன்ம தரிசனம்**'' ஆகும்.

இறைவன் குருநாதனாக வருகின்ற **சிவ ரூபத்தில் தத்துவ சுத்தியும் ஆன்ம தரிசனமும்** உடனாக நிகழும்.

தத்துவரூபமும் தத்துவ தரிசனமும் ஆன்மரூபமும் குருநாதன் காட்சிக்கு முன் உடனாக நிகழும். சிவரூபமும் ஆன்ம தரிசனமும் தத்துவசுத்தியும் குருநாதன் காட்சி தரும் போது நிகழும். முன்னர் நிகழ்வது 'அபர ஞானம்', காட்சியில் நிகழ்வது 'பரஞானம்'.

சிவரூபத்தில் ஆன்ம தரிசனம் பெற்ற ஆன்மா குருநாதன் உணர்த்திய வியாபக நிலையிலேயே சிவத்துடன் ஒன்றிச் சாயுச்சியம் அடைவதும் உண்டு; தொன்று தொட்டுவரும் ஏகதேசப் பழக்க வாசனையால் வியாபக நிலையில் நிற்கமுடியாமல் கீழே இறங்கி வருவதும் உண்டு.

கீழே இறங்கி வருகின்ற ஆன்மா கண்ணிழந்தான் பெற்றிழந்தான் போலத் துடிதுடித்து மீண்டும் திருவருள் காட்டக் காணும் வியாபக நிலையைப் பெறுவதற்காக ஞான சாதனைகளைப் புரியத் துவங்கும். உலகப்பொருட்களும் உடலும் நிலையற்றன என்று அறிவினால் கண்டு கழிக்கும்போது குருநாதன் உணர்த்திய சிவஞானம் புலனாகும். அச் சிவஞானத்தைத் துணையாகக் கொண்டு சிவோகம் பாவனை செய்தல், அந்தரியாக பூஜை செய்தல், திருவைந்தெழுத்தைக் கணித்தல் முதலிய சாதனைகளை ஆன்மா செய்யும். இச் சாதனைகளைச் சாதாரண மானிடக் குருக்கள் மூலம் அறிந்து செய்வது உபாய சாதனை ஆகுமே அன்றி உண்மைச் சாதனை ஆகாது. இதனால் தான் இறைவனே மானிடச்சட்டை போர்த்தி மணிவாசகர்க்கு வந்தது போல வந்தோ, சீவன்

முத்தர் ஒருவர் மீது ஆவேசித்தோ, சிவ ஞானத்தை உணர்த்த வேண்டும் எனச் சாத்திரங்கள் கூறுகின்றன.

குருநாதன் உணர்த்திய சிவஞானம் **கண்ணாகக்** கொண்டு மேற்கண்ட சாதனை களை ஆன்மா செய்து மீண்டும் திருவருள் தரிசனத்தையும் பெறும். திருவருளுக்கும் சிவனுக்கும் பேதமில்லையாதலால், இத் தரிசனத்தைச் ''**சிவதரிசனம்**'' என்றே தச காரியம் கூறும். சிவதரிசனத்தில் ''எல்லாம் சிவமே', என்னும் உணர்வு ஆன்மாவுக்குத் தோன்றும். அதே சமயம் அதற்குத் தொன்று தொட்டு வந்த ஏகதேசப் பழக்க வாசனை அறும். அதனை ''**ஆன்ம சுத்தி**'' எனத் தசகாரியம் நுவலும். சிவதரிசனத்தில் ''ஆன்ம சுத்தி'' உடனாக நிகழும்.

சிவதரிசனம் பெற்ற ஆன்மா திருவருளுடன் முழுமையாக ஒன்றும்; தற்போதமும் தற் செயலும் அற்று ஒன்றுகின்ற இந்நிலை தான் ''ஏகனாகி இறைபணி நிற்றல்'' ஆகும். இவ்வாறு திருவருளுடன் ஒன்றுவதைச் ''**சிவயோகம்**'' எனத் தசகாரியம் கூறும்.

சிவயோகத்தில் நிலைத்து நிற்கும் ஆன்மா விடத்தே சிவன் தன் எண் குணங்களையும் பதிவிப்பான். அப்பொழுது சிவானந்தம் தோன்றும். ஆன்மா சிவானந்தப் பெருக்கில் மூழ்கித் தன்னை மறந்து திளைக்கும். இப் பேரின்ப நிலையைச் ''**சிவபோகம்**'' எனத் தசகாரியம் சொல்லும். இதுதான் சைவ சிததாந்தத்தின் முடிந்த நிலையாகும்.

அநுபவ ஞானம் ஆன்ம தரிசனத்திலிருந்து துவங்குவதால் அதனைச் **சுத்த சாக்கிரம்** என்றும் சிவரூபத்தைச் **சுத்த சொப்பனம்** என்றும் சிவதரிசனத்தைச் **சுத்த சுழுத்தி** என்றும் சிவயோகத்தைச் **சுத்த துரியம்** என்றும் சிவபோகத்தைச் **சுத்த துரியாதீதம்** என்றும் சாத்திரங்கள் சொல்லும். ஆன்ம சுத்தி சிவதரிசனத்துள்ளும் தத்துவசுத்தி ஆன்ம தரிசனத்துள்ளும் அடங்கும்.

தணிகைப்புராண ஆசிரியர், ''நான் பிரமம்'' என்னும் உணர்வு ஆன்ம ரூபத்தில் தோன்றும் என்றும், ''எல்லாம் என்னால் செய்யக்கூடும்'' என்னும் சிவசமவாத உணர்வு ''ஆன்ம தரிசனத்தில்'' தோன்றும் என்றும் இவ்விரு வகை உணர்வினின்றும் நீங்குவதே ''ஆன்ம சுத்தி'' என்றும் கூறுகிறார். அறிஞர் சிலர் இக்கருத்தை உடன்பட்டு எழுதியுள்ளனர்.

சங்கரர் வேதாந்தத்தில் ''நான் பிரமம்'' என்னும் உணர்வுதான் முடிந்த நிலை; சிவசமவாதத்தில் ''எல்லாம் செயல் கூடும்'' என்பதே முடிந்த நிலை; இவ்விருவகை நிலை களும் சைவ சிந்தாந்தத்தின் கீழ்ப்படிகள் என்பதைக் காட்டும் நோக்கில் தணிகைப் புராண ஆசிரியர் இவ்வாறு கூறியிருக்கிறார். எனினும் வேற்று நெறிச் சாதனங்களின் பயனாக வரும் உணர்வுகளைச் சைவநெறிச் சாதனங்களின் பயனாகச் சொல்வது பொருந்தாது.

வேதாந்த நெறியின் படி செல்வோர்க்கும் சிவசமவாத நெறியின்படி செல்வோர்க்கும் இந்த உணர்வுகள் தோன்ற இடமுண்டு. பின்னர் அவை முடிந்த நிலை அல்ல என்பதை அவர்கள் உணர்ந்து சைவநெறிக்கு வந்து சேர்வர் என்பதே சைவசித்தாந்தக் கொள் கையாகும்.

''ஆன்மா உணர்த்த உணரும் தன்மையது; இறைவனின் துணை இன்றி இயங்க முடியாதது'' என்னும் உணர்வு சைவ சாத்திர ஆராய்ச்சி யின் துவக்க நிலையிலேயே மேவிடுமாதலால் சைவநெறிச் சாதனங்களின் பயனாக இத் தகைய உணர்வுகள் தோன்ற இடமில்லை.

சிவஞானபோதச் சூத்திர அமைப்புப்படி தான் தசகாரியத்திற்குப் பொருள் கொள்ள வேண்டும்.

சிவஞானபாடியம் 9ஆம் சூத்திரம் உரைத் துவக்கத்தில் சிவஞான சுவாமிகள், ''சிவதரி சனம் பண்ணுமாறு உணர்த்திற்றென்பது சூத்திரத்தான் இனிது விளங்குதலின்'' எனக் கூறுவதால் 9ஆம் சூத்திரம் சிவதரிசனம் கூறு கிறதென்பது புலனாகும். ''சிவதரிசனத்தில் நிகழ்வது ஆன்ம சுத்தி என்னும் உடனிகழ்ச்சி'' எனமேலும் அவர் கூறுவதால், சிவதரிசனத்தில் ஆன்மசுத்தி நிகழும் என்பது தெளிவாகிறது.

''ஆன்ம தரிசனத்தைப் பயக்கும் சிவரூபத்தின் பின் ஆன்ம சுத்தியைப் பயக்கும் சிவ தரிசனம் ஒருதலையான் வேண்டப்படும்'' என அவர் அடுத்து எழுதுவதால், எட்டாம் சூத்திரம் சிவரூபம் உணர்த்தும் என்பதும் சிவ ரூபத்தில் ஆன்ம தரிசனம் உடனாக நிகழும் என்பதும் பெறப்படும்.

எட்டாம் சூத்திரம் இறைவன் குருநாதனாக வருவதைச் சொல்வதால், ''சிவரூபம்'' என்பது குருநாதன் காட்சியே என்பது தெளிவு. இறைவன் குருநாதனாக வருவதற்கு முன் ஆன்மா பக்குவம் பெறவேண்டும். பக்குவம் என்பது, ''உணர்த்தியதை உணர்த்தியவாறு உணரும் அறிவு'' எனச் சுவாமிகள் சொல்கிறார்.

சிவரூபத்தில் ஆன்மதரிசனம் நிகழும் எனச் சுவாமிகள் சொல்வதால், ஆன்ம தரிசனத்திற்கு முன் உள்ள ஆன்ம ரூபம் ஆன்மா பக்குவம் பெறுகிற நிலையை உணர்த்துவதாகவே இருக்க வேண்டும். ''நான் பிரமம்'' என்னும் உணர்வு ஆண்டு தலைப்பட்டால் இறைவன் குருநாதனாக வருவதற்குரிய பக்குவத்தை ஆன்மா பெறவில்லை என்றாகி விடும். ''ஆன்ம ரூபம்'' ஆன்ம இயல்புகளைப் பிறழ உணராமல் பொதுப்பட உணர்ந்து நிற்கும் நிலையே என்பது இதிலிருந்து புலனாகும்.

சிவரூபத்தில் ஆன்ம தரிசனம் நிகழ்கிறது; இறைவன் குருநாதனாக வந்து உணர்த்தும் போது உணர்த்தியதை உணர்த்தியவாறு உணரும் பக்குவம் பெற்ற ஆன்மா பிறழ உணர இடமில்லை. எனவே சிவரூபத்தில் நிகழும் ஆன்ம தரிசனத்தில், ''நான் எல்லாம் செயல் கூடும்'' என்னும் மயக்க உணர்ச்சி தலைக் காட்ட இயலாது. மேலும் பசுஞானமாகிய சிவசமவாத உணர்வு இறைவன் பதிஞானத்தை உணர்த்துகின்ற இடத்தில் தோன்ற முடியாது. ஆகவே வேற்றுநெறிச் சாதனங்களின் பயன்களை இங்கே புகுத்துவது பொருந்தாது.

சிவஞான போதத்தில் எட்டாம் சூத்திரத்திற்கு முன்னுள்ள சூத்திரங்கள் தத்துவ ரூபம், தத்துவதரிசனம், ஆன்ம ரூபம் ஆகிய மூன்றையும், எட்டாம் சூத்திரம் சிவரூபம், ஆன்ம தரிசனம், தத்துவ சித்தி ஆகிய மூன்றையும், ஒன்பதாம் சூத்திரம் சிவதரிசனம், ஆன்ம சுத்தி ஆகிய இரண்டையும், பத்தாம் சூத்திரம் சிவ யோகத்தையும், பதினோராம் சூத்திரம் சிவ போகத்தையும் உணர்த்துகின்றன. இந்த அடிப்படையில்தான் தசகாரியத்திற்குச் சிறப்பு விளக்கம் செய்ய வேண்டும்.

சிவஞானபாடியம் 9ஆம் சூத்திர உரையில் சுவாமிகள், ''ரூபம் — திரியக் காண்டல்; தரிசனம் — இரட்டுறக் காண்டல்; சுத்தி — தெளியக் காண்டல்'' எனக் கூறுகிறார். ''திரியக் காண்டல்'' என்பதை வைத்து ஆன்ம ரூபத்தில் ஆன்மா தன்னைப் பிரமமெனத் திரியக் காணும் என அறிஞர் சிலர் கருதித் தணிகைப் புராண ஆசிரியர் கருத்தை உடன் பட்டிருக்கக்கூடும.

சிவஞானபோதச் சிற்றுரை 9ஆம் சூத்திரக் கருத்துணர்த்தும் இடத்தில் சுவாமிகள், ''ரூபம் — நிருவிகற்பமாய்க் காண்டல்'' எனக் கூறுகிறார். ''நிருவிகற்பமாய்க் காண்டல்'' என்பது **பொதுவுறக் காண்டலே** அன்றிப் **பிறழக் காண்டல்** அன்று''.

சுவாமிகளே சிற்றுரையில் பொதுவுறக் காண்டல் என ''ரூபத்திற்குப்'' பொருள் எழுதுவதால், ''திரியக் காண்டல்'' எனப் பாடியத்தில் வருவது பொது வுறக் காண்டல் என்னும் பொருளிலேயே தான் இருக்க வேண்டும்; அல்லது ஏடெழுதுவோரால் நேர்ந்த பிழையாய் இருக்க வேண்டும். தத்துவ ரூபம், ஆன்ம ரூபம், சிவரூபம் ஆகிய மூன்றுக்கும் பொது அறக்காண்டல் தான் பொருத்தமாக இருக்குமே அன்றி விபரீதமாகக் காண்டல் பொருத்தமாக இராது. இதனால் ''பொது அறக் காண்டலே'' சுவாமிகள் கருத்தென அறிதல் வேண்டும்.

''இரட்டுறக் காண்டல்'' என்பது அருளை உணர்ந்தும் நிலைக்க முடியாமல் கருவிகளுக்கு மீண்டும் வருவதைக் குறிக்கும். தெளிவுறக் காண்டல் என்பது அருளில் நிலைத்து நிற்பதைக் குறிக்கும்.

ஆன்மாவுக்குத் தொன்று தொட்ட பழக்கத்தால் ஏகதேச உணர்வு தலைப்படுதல் இயல்பு; ''நான் பிரமம்'' என்னும் ஞானமும் ''எல்லாம் செயல் கூடும்'' என்னும் ஞானமும் தொன்று தொட்ட பழக்கத்தால் வருவன அல்ல. அவை சாதன நெறி மாற்றத்தால் வரும் செயற்கை ஞானங்களாகும். ஏகதேசப் பழக்கம் வேறு; விபரீதஞானம் வேறு. விபரீத ஞானத்தைச் சாத்திரத்தாலும் குருநாதனாலும் நெறிப்படுத்தப்படுகின்ற சைவ சாதனைப் படிநிலைகளில் வைத்துச் சொல்வது நியாயமாகாது.

இதுகாறும் கூறியவாற்றால், தசகாரியத்திற்கும் சிவஞானபோதச் சூத்திரங்களின் துணைகொண்டு பொருள் காண்பதே சிறப்பு என்பது புலனாகும்.

உ
சிவமயம்

சைவத்தின் வளர்ச்சிக்கு

டாக்டர் நா. மகாலிங்கம்.

சைவ சமயம் இந்தியாவில் அனாதி காலம் தொடக்கம் வழங்கிய மூத்த சமயம். இறை வழிபாடு மட்டும் செய்யும் சமயமாக இல்லாமல், மக்கள் வாழ்க்கையின் எல்லாத் துறைகளையும் செம்மைப்படுத்தி மனிதனை மாமனிதனாக உயர்த்தக் கூடிய வாழ்க்கை நெறியாகவே சைவ சமயம் அன்று முதல் இருந்து வந்திருக்கிறது. சைவ சமயம் யாரோ ஒருவரால் உருவாக்கப்பட்ட சமயம் அன்று. சங்கரரின் அத்வைதம், இராமானுஜரின் விசிஷ்டாத்வைதம், மத்வரின் துவைதம் என்று சொல்வது போல சைவ சமயத்தின் முடிவான சுத்தாத்வைதத்தை ஒரு ஆசிரியரின் பெயரைக் குறிப்பிட்டுச் சொல்ல முடியவில்லை. சைவ சமயம் வரலாற்றுக்கும் எட்டாது இருப்பது தான் இதற்குக் காரணம் ஆகும்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வான் உறையும் தெய்வத்துள் வைக்கப்படும் நிலையை நமக்கு அளிக்க வல்ல ஒப்பற்ற வழி முறைகளே சமயங்கள். சமயக் கோட்பாடுகளுக்கும், அறிவியல் உண்மைகளுக்கும் பெரிய மாறுபாடு இருப்பது போலச் சிலர் எழுதிக் கொண்டும் பேசிக் கொண்டும் இருக்கிறார்கள். ''அறிவியல் என்பது பயிற்சி பெற்று ஒழுங்கு படுத்தப்பட்ட பொது அறிவுக்கலையே' என்கிறார் தாமஸ் ஹக்ஸ்லி. ''அரை குறையான அறிவியலே சமயத்தைக் குறை கூறும். எங்கு அறிவியற் கலை தடுமாறுகிறதோ அங்கு இருந்துதான் சமயம் தொடங்குகிறது. அறிவியல் இல்லாத சமயம் குருட்டுத் தன்மை உடையது. சமயம் இல்லாத அறிவியல் மூடத் தன்மை வாய்ந்தது'' என்கிறார் தலைசிறந்த அறிவியல் அறிஞர் ஐன்ஸ்டைன்.

''நாம் சமய உணர்வை சமயச்சான்றோர்களின் அரிய அனுபவ உண்மைகளை மக்களுக்கு அறிவுறுத்தத் தவறிவிட்டோம். இன்றைய உலகில் அணு அரக்கன் ஓங்கி வளர்ந்து வருகிறான். அறிவுணர்வுகள் மங்கித் தேய்ந்து வருகின்றன. அமைதியை விடப் போரையும், வாழ்வதை விடக் கொல்வதையும் பற்றியே தெரிந்து கொண்டு வருகிறோம்'', என்று அறிஞர் பெருமக்கள் மிகுந்த வேதனையுடன் பேசி வருகிறார்கள். மனித வாழ்வுக்குச் சமய உணர்வு எவ்வளவு அவசியம் என்பதை இது நமக்கு அறிவுறுத்துகிறது.

சைவ சமயம் ஒரு காலத்தில் உலகம் எங்கும் பரவி இருந்தது. உலகில் நாகரிகம் பெற்ற மக்கள் வாழ்ந்த பல பகுதிகளில் சிவலிங்க வழிபாடு இருந்திருக்கிறது. எகிப்து, சிரியா, பாரசீகம், ஆசியா, கிரீஸ், இத்தாலி போன்ற நாடுகளில் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் சிவலிங்க வழிபாடு இருந்து வந்திருக்கின்றது. இன்றும் ஆப்பிரிக்கா கண்டத்தின் பல பகுதிகளில் சிவலிங்க வழிபாடு இருக்கிறது. ஸ்பெயின் நாட்டுக்காரர்கள் முதன் முதலில் அமெரிக்கா நாட்டைக் கண்டுபிடித்து அங்கு குடியேறியபோது அங்கிருந்த மக்கள் சிவலிங்க வழிபாட்டைச் செய்து வந்ததைப் பார்த்தார்கள். அதை மிகுந்த பக்தி சிரத்தையுடன் அவர்கள் செய்து வந்தார்கள். சிவலிங்க வழிபாடு மனிதனை விலங்கு நிலையில் இருந்து மனித நிலைக்கும், மாமனித நிலைக்கும் உயர்த்தும் உன்னதமான வழிபாடு என்று அவர்கள் கூறிப் பெருமைப்பட்டார்கள். இவ்வாறு வரலாற்று ஆராய்ச்சி நிபுணர்

களான சர் ஜான் மார்ஷல், எச்.எம். வெஸ்ட் ராப், இ.பி. டைலர், அலன்கிராண்டு முதலியவர்கள் சொல்லி வியக்கிறார்கள்.

பாரத நாட்டின் சைவ சமயத்தில் பரம் பொருளான சிவபெருமான் தம்முடைய ரிஷப வாகனத்தில் ஏறி, டமாரத்தை அடித்துக் கொண்டு உலகம் எங்கும் பவனி வந்திருக்கிறார். ஜாவா, சுமத்திரா, போர்னியோ, செலிபிஸ், ஆஸ்திரேலியா ஆகிய இடங்களிலும் அமெரிக்காவின் பல பகுதிகளிலும் சிவலிங்க வழிபாடு நடைபெற்று வந்து இருக்கின்றது.

இது போலவே திபெத், ஜப்பான், சைபீரியா போன்ற நாடுகளிலுள்ள மக்கள் சிவலிங்க வழிபாடு செய்திருக்கிறார்கள் என்பதைப் பல அறிஞர்கள் கண்டு சொல்லி இருக்கிறார்கள் என்று சுவாமி விவேகானந்தர் கூறியுள்ளார்.

லண்டனில் இருந்து வெளியாகும் 'நீயூஸ் ரெவ்யூ' என்ற பத்திரிகையில் 1937–ஆம் ஆண்டில் வெளியாகி இருந்த ஒரு வியக்கத்தக்க செய்தியைப் பாருங்கள்.

அமெரிக்காவின் ஏழாவது பெரிய மாகாணமாக விளங்குவது கொலராடோ. இது மலைகள் சூழ்ந்து இயற்கை வளம் கொஞ்சும் மாகாணம். இந்த மாகாணத்தில் மறைந்து போன உலகை மீண்டும் கண்டுபிடித்திருக்கிறோம் என்று அமெரிக்காவின் தொல் பொருள் ஆய்வாளர்களும், வரலாற்று நிபுணர்களும், விஞ்ஞானிகளும் சேர்ந்து ஒரு கட்டுரையை வெளியிட்டிருக்கிறார்கள். ''இருபதாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் இந்த நிலப் பகுதியில் ஓடிக் கொண்டு இருந்த ஆற்றில் பெரிய வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. அதன் காரணமாக நாகரீகம் பெற்ற மக்கள் வசித்த நகரமும், அதன் எல்லையில் இருந்த மலைப் பகுதியும் துண்டிக்கப்பட்டன. மலைப்பகுதிகளுக்கும் மக்கள் வசித்த பகுதிகளுக்கும் இடையில் ஒன்பதாயிரம் சதுர அடி நிலப் பகுதிகள் மறைந்து விட்டன. இந்த மறைந்த நிலப் பகுதிக்கு அப்பால் இருக்கும் மலை மீது அரை சதுர மைல் பரப்பளவு உள்ள கலை கொஞ்சும் சிவன் கோயில் ஒன்றைக் கண்டோம். மறைந்து போன ஒரு நாகரீக உலகத்தைக் கண்டு பிடித்திருக்கிறோம்'', என்று அந்த சிவ ஆலயத்தின் படத்தையும் அங்கு இருக்கும் சிற்பங்களையும் விக்கிரங்களையும் அந்தக் கட்டுரையில் வெளியிட்டு இருந்தார்கள். அவை அப்படியே நமது தென்னாட்டுச் சிவன் கோயில்களைப் போலக் காட்சி அளித்தன.

சிந்து வெளியில் அகழ்ந்த புதை பொருளைக் கண்ட ஆராய்ச்சியாளர்கள், ''ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இந்த நாட்டில் பரவி இருந்த நாகரீகத்தில் சிவலிங்க வழிபாடும், சிவபெருமான் வாகனமாகிய ரிஷபமும் இருந்தமை தெரிய வந்திருக்கிறது'' என்று சொல்லியிருக்கிறார்கள்.

உலகத்திலும், இந்தியாவிலும் பழைய சமயமாக விளங்கியது சைவ சமயம் என்பதை இந்தச் செய்திகள் உறுதிப்படுத்துகின்றன.

தமிழ் நாட்டில் சமய ஆசாரியர்களாலும், சந்தான ஆசாரியர்களாலும் பரப்பி வளர்க்கப் பட்டது சைவ சித்தாந்தம். சமய ஆசாரியர்கள் ஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்க வாசகர் ஆகிய நால்வர். சமயாசாரியர்கள் நால்வரும் ஏழாம், எட்டாம், ஒன்பதாம் நூற்றாண்டுகளில் சைவத்தை வளர்த்தவர்கள். சிறப்பாக பக்தி மார்க்கத்தை வளர்த்தார்கள். சாத்திரப் படிப்பு, குலப்பெருமை ஆகிய வற்றை விட அன்பு நெறியே இறைவனின் அருளைப் பெறுவதற்கு வழி. உலகுக்கு ஒரே தெய்வம். அந்தத் தெய்வம் சிவம். அந்தத் தெய்வத்தை வழிபட்டு தங்கள் வினைகளில் இருந்து நீங்கி உரிய காலத்தில் இறை அருளைப் பெறலாம் என்பதே இவர்களுடைய பொதுவான உபதேசம். அன்று முதல் இன்று வரை இவர்கள் காட்டிய நெறியிலேயே சைவம் வளர்ந்து வருகிறது.

சைவ சமயம் பிறரைப் பழிக்காதது. நிலையாமையைப் பற்றிப் பேசாதது. ஊர் ஒன்று தான்; அதற்கு வழிகள் ஆறு இருக்கின்றன. ஆறுவித சமயங்களும் இறைவனை அடைவதற்கு வெவ்வேறு வழிகளே. பசுக்கள் பல நிறங்களில் இருக்கலாம். அவற்றின் பால் வெண்மையாகத்தான் இருக்கும். சமயங்கள் பலவாக இருந்தாலும், அவை கூறும் முடிவான பொருள் ஒன்றுதான், என்பன சைவ சாத்திரம் கூறும் சில கருத்துக்கள்.

வேதங்களும், ஆகமங்களும் நால்வர் பாடிய திருமுறைகளும், மெய்கண்டாரின் சைவ சித்தாந்த இலக்கணமும் சைவத்தின் நெறிகளாகும் என்பதை,

''வேதம் பசு; அதன் பால் மெய், ஆகமம் நால்வர்
ஓதும் தமிழ் அதனின் உள் உறும் நெய்–போதமிகு
நெய்யின் உறு சுவையாம் நீள் வெண்ணை மெய்கண்டான்
செய்த தமிழ் நூலின் திறம்''

என்று பேசுகிறது ஒரு தனிப்பாடல்.

வாழ்க்கை முழுவதும் பாவங்கள் நிறைந்தவை என்று பிற மதங்கள் சொல்கின்றன. சைவ சமயம், பாவம் அல்லது தீமையைப் பொருளாகக் கொள்வதில்லை. அழியாத நிலைத்த இன்பம் தரும் வாழ்க்கையை அறிவு பெற்ற மனிதன் தேடவேண்டும் என்கிறது.

பதிபசு பாசம் எனப் பகர் மூன்றில்
பதியி னைப்போல் பசுபாசம் அனாதி
பதியி னைச் சென்று அணுகாப்பசு, பாசம்
பதி அணுகில் பசுபாசம் நில்லாவே!

என்கிறார் திருமூலர்.

அருள் மயமாக நம் வாழ்க்கை வளம் பெறும் போது இறைவனே தம் அருளை நமக்கு வழங்குகிறான். இறைவன், உயிர், உலகம் அதாவது பதி, பசு, பாசம் என்ற மூன்றும் அழியாதவை என்பது தான் சைவத்தின் சித்தாந்தம். சைவத்தின் மற்றொரு தனிச் சிறப்பு சைவம் பெண் குலத்துக்கும் பெருமை தருவது. சாதி வேறுபாடு அற்றது. நாயன் மார்கள் வரலாற்றில் இந்த உண்மைக்ளைக் காணலாம்.

இந்த நாட்டில் சைவ சமயம் மட்டுமே பிற சமயத்தினரைத் தன் கூட்டத்தில் சேர்க்க முயலாத சமயம். காரணம் ஆதி காலத்தில் இந்த நாட்டில் இருந்த ஒரே சமயம் சைவ சமயம்.

சைவ சித்தாந்தத்திற்கு உரிய அடிப்படைக் கொள்கைகள் எல்லாவற்றின் உண்மையையும் உணர்வையும் நிறுவுவதற்குத் துணைபுரி கின்றன என்று மேலை நாட்டு அறிஞர் பெரு மக்கள் ஆராய்ந்து கூறி வருகிறார்கள்.

சர் மானியர் வில்லியம்ஸ் என்ற பேரறிஞர் சைவ சித்தாந்த்தைப் பற்றிக் கூறி இருப்பது எவ்வளவு சிறப்பாக இருக்கிறது என்பதைப் பாருங்கள்.

''சைவ சித்தாந்தம் எல்லாச் சமயங்களையும் ஏற்றுக்கொள்ளும் இயல்புடையது. எதையும் ஒதுக்காமல், இகழாமல் அணைத்துக் கொள்ளும் ஆற்றல் உடையது. உலகம் முழுவதும் ஏற்றுக்கொள்ளும் தகுதியுடன் கூடிய உலகச் சமயமாக விளங்கத்தக்கது. வேறு மதங்களின் வளர்ச்சியைக் கண்டு மயங்காதது. மாறாக அந்த மதங்களைத் தன்னோடு அணைத்துக் கொள்ளும் பெருந் தன்மையுடன் விளங்குவது. ஒவ்வொரு தனி மனிதரின் மன வளர்ச்சிக்கு ஏற்ப அவர்கள் வாழ்க்கைக்கு வழிகாட்டக் கூடியதாகச் சைவ சித்தாந்த நெறி வகுக்கப் பட்டு இருக்கிறது. நுண்பொருள் தத்துவ அறிஞர்களுக்கு உரிய ஆன்மீக அருவக் கூறுகளும், கவிதை உணர்வும், கற்பனைத் திறனும் மிக்கவர்களுக்கு உரிய நடைமுறை பருவடிவக் கூறுகளும், அமைதியை நாடும் தனிமை விரும்பிகளுக்கு உரிய சாந்தி நலம் தரக்கூடிய சிந்தனைக் கூறுகளும் நிறைந்தது சைவ சித்தாந்த நெறி'' என்று சர் மானியர் வில்லியம்ஸ் வியந்து போற்றுகிறார்.

ஒரு நாட்டின் செல்வங்களுக்கெல்லாம் தலையான செல்வம் அந்த நாட்டில் உள்ள மக்களே ஆகும். அதிலும் இளைஞர்களே ஆகும். இன்றைய இளைஞர்களே நாளைய தினம் நாட்டை நடத்துபவர்களாக வருபவர்கள். எனவே ஒரு நாட்டின் சிறப்பும், செழிப்பும் நமது இளைஞர்களின் திறத்திலேயே இருக்கின்றன. நம் தமிழ்நாட்டின் ''சென்ற காலத்தின் பழுதிலாத் திறமும், இனி எதிர்காலத்தின் சிறப்பும்'', நம்முடைய இளைஞர்களின் பொறுப்புணர்ச்சியிலும் அறிவாற்றல் உள்ள செயல் திறமைகளிலும் அமைந்திருக்கின்றன. தமிழ்நாட்டின் பலவிதமான பெருமைகளும் சமயமும், சமய நூல்களும், சமயச் சான்றோர்களும், திருக்கோயில்களும், திருமடங்களும் சிறப்பிடம் பெற்றுத் திகழ்வனவாகும்.

இவற்றைப் போற்றி வளர்ப்பதை நம் குறிக்கோளாகக் கொள்வது நம்முடைய கடமை. அதை நமது இளைய தலைமுறைக்கு உணர்த்துவது நமது கடமைகளில் தலையாய கடமையாகும். இந்தக் கடமைகளை நிறைவேற்றுவதற்குச் சமய நெறிகள் பற்றிய உண்மைகளை நாம் உணர்வதுடன், மக்களுக்கும், இளைய தலைமுறையினருக்கும் திறமையாகக் காலச் சூழ்நிலைக்கு ஏற்ப உணர்த்தும் பொறுப்பும்

நமக்கு இருக்கிறது. இன்று இளைய தலைமுறையினர்களிடம் சமய அறிவும், ஒழுக்க ஆர்வமும் குறைந்ததால் பெரிதும் குழப்பம் காணப்படுகிறது. அரசியல் துறையில் ஈடுபட்டு உயர விரும்புபவர்கள் சமய உணர்வால் முன்னேற்றம் தடைபடுமோ என்று பயப்படுகிறார்கள். நமது கண் முன்னாலேயே, காந்தி அடிகள் சமய உணர்வின் மூலமாகவே அரசியலில் உலகம் வியக்கும் மகத்தான அற்புதத்தை நடத்திக் காட்டி இருக்கிறார். நாட்டுப் பற்றும், மொழிப் பற்றும் ஒரு மனிதனுக்கு எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியம் சமயப் பற்று என்பதை நாம் உணர வேண்டும்; மக்களுக்கு உணர்த்த வேண்டும். மக்களின் எண்ணங்களுக்கும், அவற்றின் வெளிப்பாட்டு முறைகளுக்கும் உயிர் கொடுப்பது மொழி. சமய உணர்வோ, மக்களின் வாழ்க்கைத் துறை அனைத்திற்கும் ஆக்கம் கொடுக்கக்கூடியது. ஒரு நாட்டின் நாகரீகமும், பண்பாடும் பிற எல்லாச் செல்வங்களும் அந்த நாடு வளர்க்கும் உன்னதமான சமய நெறிகளால் உருப்பெற்றுச் சுடர்விட்டு ஒளிவிடுகின்றன. நம்மிடம் சமய உணர்வு இயல்பாகவே அமைந்திருக்கிறது. குறித்த பருவத்தில் 'பால் உணர்வு' ஏற்படுவது போலக் கடவுள் நெறியும் சமய ஒழுக்கமும் எப்போதாவது ஒரு சமயம் ஒவ்வொருவருக்கும் தேவை வந்தே தீரும். அது தவிர்க்க முடியாதது. ஆக அதற்கு இளமையிலிருந்து பயிற்சி கொடுத்துப் பழக்கவேண்டும்.

நால்வர் பாடிய அருட்பாசுரங்கள் தான் இன்று சைவத்தின் உயிர்நாடி. இந்தப் பாசுரங்கள் ஓர் ஐந்நூறு ஆண்டு காலம் சோழ மன்னர்கள் தமிழ்நாடு எங்கும் பெருங்கோயில்களைக் கற்றளியாக எடுத்துப் பரிபாலிக்குமாறு தூண்டியவை. இந்தக் கோயில்களில்தான் இன்று சைவ சமயத்தின் உயிர்த் தத்துவம் ததும்பிக்கொண்டு இருக்கிறது. சங்க நூல்களில் காணும் மதுரை வெள்ளி அம்பலத்தைப் பற்றிய செய்தி நமது திருக்கோயில்களின் தொன்மையை நன்கு தெளிவுபடுத்துகிறது. அதற்கு முன்பே தில்லையில் பொன் அம்பலம் இருந்ததால் வெள்ளியம்பலம் என்று வேறு ஒன்று ஏற்பட்டது. கோச்செங்கட் சோழர் எழுபத்து எட்டு மாடக்கோயில் கட்டினார் என்று அப்பர் சொல்கிறார். திருமங்கையாழ்வார் இந்தச் சோழர் கட்டிய திருநறையூர் மணிமாடம் என்ற திருமால் ஆலயத்தைக் குறிப்பிடும் போது அவர் சிவபெருமானுக்கு எழுபது மாடக் கோயில்கள் கட்டிய விவரத்தை எடுத்துச் சொல்கிறார். ''இருக்கு இலங்கு திருமொழி வாய் எண்தோள் ஈசற்கு, எழில் மாடம் எழுபது செய்து உலகு ஆண்ட திருக்குலத்து வளச் சோழன் செய்த திருக்கோயில், திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே''! என்பது அவர் பாசுரம். இந்தக் கோயில்கள் யானை புக முடியாத அமைப்புகளுடன் கூடியவை என்றாலும் எல்லாமே பெரிய கோயில்கள். இந்தத் திருக்கோயில்களை எல்லாம் போற்றிக் காப்பாற்ற வேண்டியது நமது கடமை. இந்தக் கோயில்களில் வழிபாட்டுக்காகவும், கலைச் செல்வங்களை அங்கு வளர்ப்பதற்காகவும் நமது முன்னோர்கள் ஏராளமான சொத்துக்களை அவற்றுக்கு வழங்கி இருக்கிறார்கள்.

அதன் மூலமாகத் திருக்கோயில்கள் நமது நாகரிகத்தை, பண்பாட்டை, கலைகளை, இசையை, கல்வியை, ஒழுக்கத்தை, தருமத்தை மிகச் சிறப்பாக வளர்த்து வந்தன.

திருக்கோயில்களுக்கு உரிய சொத்துகளைத் திரும்பவும் திருக்கோயில்கள் பெறுவதற்கு நாம் பெரும் இயக்கமே நடத்த வேண்டும். ஏன்? அகிம்சை முறையிலான மாபெரும் போராட்டத்துக்கே கூட நாம் தயாராக வேண்டும்.

அப்படி நடத்துவதே இன்றைய உண்மையான தெய்வ வழிபாடு என்றும் சொல்லலாம். திருக்கோயில்களின் சொத்துக்களைத் திரும்பப் பெறுவதற்காக ஒரு நிபுணர் குழுவை அமைத்து, எந்தெந்தக் கோயிலின் சொத்துகள் அவற்றிற்குப் பயன்படாமல் இருக்கின்றன என்பதைக் கண்டு பிடிக்க வேண்டும். அவற்றைத் திரும்பப் பெற்று அந்தந்தத் திருக்கோயில்களில் வழிபாடுகள் மட்டுமல்லாமல் ஏற்கனவே அது வளர்த்து வந்த கலைகளும் அங்கு சிறந்த முறையில் நடைபெற ஏற்பாடு செய்யவேண்டும். இந்த உணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தவும் வேண்டும். திருக்கோயில் சொத்துகளைத் திரும்பப் பெறுவது போலவே சிதைந்தும், மறைந்தும் கிடக்கும் நமது திருக்கோயில்களையும் திரும்பப் பெற்றாகவேண்டும். அதற்கான எண்ணங்களையும் எழுச்சியையும் மக்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டும்.

தமிழ் நாட்டில் திருக்கோயில்களைப் போலவே சைவத் திருமடங்கள் பல இருக்கின்றன. இந்தத் திருமடங்கள் பல நூறு ஆண்டுகளாக சைவச் சமயத்துக்குப் பெரும் பணிகளைச் செய்து மக்களை வழிநடத்தி வந்திருக்கின்றன. மிகச் சிறந்த சைவ சித்தாந்திகள், சைவத் திருமடங்களின் தலைவர்களாக இருந்து தங்கள் அரும்பணிகள் மூலமாக மக்கள் வாழ்க்கையை நெறிப்படுத்தி வந்திருக்கிறார்கள்.

இந்தச் சைவத் திருமடங்களுக்கும் நமது முன்னோர்கள் ஏராளமான சொத்துகளை அறக்கட்டளைகளாக அளித்திருக்கிறார்கள். அந்தச் சொத்துகளின் வருவாய்களையும் திருமடங்கள் இன்று பெறுவதற்கு முடியாத சூழ்நிலை நாட்டில் உருவாக இருக்கிறது. பல மடங்கள் செயல் இழந்து கிடக்கின்றன. அவற்றின் சொத்துகளை மீண்டும் பெற்றுச் சைவத் திருமடங்களின் பணிகளைத் தொடர முயலவேண்டும். சைவத் திருமடங்கள் சைவ குடும்பத்தில் இருந்து பத்து, பன்னிரெண்டு வயதுடைய வாலிபர்களைத் தேர்ந்து எடுத்து அவர்களுக்கு ஆன்மீகப் பயிற்சிகளையும் ஞான யோக முறைகளையும் கற்றுக் கொடுக்க வேண்டும். சைவ சமயத்தில் உள்ள செயல் முறைத் தத்துவங்களை அவர்களுக்குப் பயிற்றுவிக்கவேண்டும். அவர்களுக்குத் தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம், இந்தி ஆகிய பல மொழிகளையும் கற்றுக் கொடுத்து அவர்களைப் பன்மொழிப் புலவர்களாகவும் உயர்த்த வேண்டும். அப்படித் தயாரிக்கப்பட்ட ஆன்மீக முதிர்ச்சி பெற்றவர்களைச் சைவத் திருமடங்களின் தலைவர்கள் தங்கள் வாரிசுகளாக நியமிக்கவேண்டும். துறவிகளுக்கு எப்படிப் பயிற்சி அளிக்கவேண்டும் என்பதை இராம கிருஷ்ண மடம் செய்துகொண்டு வருகிறது. இராமகிருஷ்ண மடத்துத் துறவிகள் மகத்தான ஆன்மீகப் பணிகளைச் செய்து வருகிறார்கள். அவர்களைப் போல் சைவத் திருமடங்களும் சைவத் துறவிகளைப் பயிற்றுவித்துச் சைவ மடங்களின் பல்வேறு பொறுப்புகளை அவர்களிடம் கொடுக்கவேண்டும்.

சங்கராச்சாரியார் மடத்தில் தங்கள் வாரிசுகளை நல்ல குடும்பங்களில் இருந்தே முறையாகத் தேர்ந்தெடுக்கிறார்கள். அப்படித் தேர்ந்தெடுக்கும் வாலிபருக்குப் பல மொழிகளைச் சொல்லிக் கொடுக்கிறார்கள். பல சமயங்களின் அடிப்படை உண்மைகளையும் கற்றுக்கொடுக்கிறார்கள். தியானம், யோகம் முதலிய பயிற்சிகளைக் கொடுக்கிறார்கள். ஆன்மீகத் துறையில் சிறந்து விளங்கும்படி அவர்களைத் தயாரிக்கிறார்கள். அம்மாதிரி ஒவ்வொரு சைவ மடமும் செயல்படவேண்டும்.

அன்று நாயன்மார்கள் வளர்த்தது போலவே சைவத்தை வளர்க்கும் திருப்பணியில் சைவத் திருமடங்களின் தலைவர்கள் ஈடுபடவேண்டும். திருமடங்களுக்குள் அதன் தலைவர்கள் அடங்கிக் கிடக்காமல் வெளியில் வந்து மக்களுடன் தொடர்பு கொண்டு மக்கள் மத்தியில் பக்தி நெறியையும், சமய ஒழுக்கத்தையும் பரப்பும் திருப்பணியில் ஈடுபடவேண்டும். இன்று காமகோடி பீடம் ஜகத்குரு சங்கராச்சாரியார் சுவாமிகள் அந்தப் பணியை ஒரு முன் மாதிரியாகவே செய்து வருகிறார்கள். ஸ்ரீ சங்கராச்சாரியாரின் பாத யாத்திரையின் மூலமாக நாட்டில் சமய உணர்வும், பக்தி இயக்கமும் பரவி வருகிறது. ஸ்ரீ சங்கராச்சாரியாரின் பணிகள் மக்கள் மத்தியில் ஒரு சமய மறுமலர்ச்சியையும், ஆன்மீக விழிப்பையும் ஏற்படுத்தி இருக்கின்றன. இதைப்போலவே நமது சைவத் திருமடங்களின் தலைவர்கள் பணியாற்ற முன்வரவேண்டும். சைவ சித்தாந்தப் பயிற்சியும் ஆன்மீக வளர்ச்சியும் பெற்ற, பன்மொழி பாண்டித்தியம் பெற்ற, உலக சமயங்களின் ஞானங்களையும் பெற்ற, சைவ சித்தாந்தத் துறவிகளைச் சைவத் திருமடங்கள் ஏராளமாகத் தயாரிக்கவேண்டும். சைவ சமயத் தலைவர்கள் தியானப் பயிற்சியில் தேர்ந்து விளங்கவேண்டும். வாழ்க்கையில் மேற்கொண்ட லட்சியங்களை எப்படியும் நிறைவேற்றியே ஆகவேண்டும் என்று சிந்தித்து அதற்கான ஆற்றலை வளர்த்துக் கொள்வது தான் தியானம். சைவ மடங்களின் வாரிசுகளைச் சர்க்கார் அதிகாரிகள் நியமிக்கும் மிகப் பரிதாபமான நிலையில் சில சைவ மடங்கள் இன்று இருக்கின்றன. இந்த நிலை மாற வேண்டும். சைவத் திருமடங்களின் தலைவர்களே தங்கள் வாரிசுகளை, அதற்கு உரிய ஆற்றல் பெற்றவர்களை அமைக்க வேண்டும். சைவ மடத்தின் தலைவர்கள் மக்கள் பணியே மகேசன் பணி என்று தொண்டாற்ற முன்வருவார்களானால் மக்கள் அவர்களுக்கு நமது முன்னோர்களைப் போல ஏராளமான செல்

வங்களை வாரி வழங்கத் தயாராக இருக்கிறார்கள்.

எனவே சைவத் திருமடங்களின் தலைவர்கள் வெறும் மடங்களின் சொத்துப் பராமரிப்புத் தலைவர்களாகச் செயல்படாமல், உண்மையான சைவ சித்தாந்தக் குருமார்களாக நமது நாயன்மார்களைப் போல — அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர் போன்ற சமய ஆசாரியர்களைப் போலச் செயல்படவேண்டும். அதற்கு ஏற்ற சூழ்நிலையை நாம் நாட்டில் உருவாக்க வேண்டும். அதற்கு முதல் காரியமாகத் திருக்கோயில்களின் சொத்துக்களையும் திருமடங்களின் சொத்துக்களையும், நமது முன்னோர்கள் எந்த நோக்கத்திற்காக அறக்கட்டளை நியமித்துக் கொடுத்திருக்கிறார்களோ, அந்த லட்சியம் நிறைவேறுவதற்காக ஒரு செயல் முறைத்திட்டம் தீட்டி முழு நேரமாகத் தொடர்ந்து செயல்பட்டு அதில் வெற்றி காண முயலவேண்டும்.

தமிழின் சிறப்பைப் பற்றியும் தமிழ் மக்களின் நாகரிகம் பண்பாடு முதலியவை பற்றியும் இன்று அமெரிக்கா போன்ற நாடுகளில் அறிஞர் பெருமக்கள் ஆய்வு செய்து வருகிறார்கள். அவர்களுக்கு உதவி செய்வதற்கு நாம் முன்வரவேண்டும். அதற்கு நம்முடைய சாத்திரங்கள், திருமுறைகள் ஆகிய எல்லா நூல்களையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து மிக அழகிய புத்தகங்களாக வெளியிட வேண்டும். எல்லா விதமான வசதியும் கொண்ட கம்ப்யூட்டர் யுகத்தில் நாம் அந்த வசதிகளை எல்லாம் பயன்படுத்திக்கொண்டு நமது திருமுறைகளை உலகுக்கு அளிக்க வேண்டும். புது உலகத்துக்கும் மனித குலத்துக்கும் செய்யும் மகத்தான தொண்டு இது என்பதை மறந்துவிடக்கூடாது.

நம்மிடம் இருக்கும் சமயச் செல்வம் ஒன்றுதான் அழிக்க முடியாத செல்வம். அது ஒன்றுதான் குறையாத செல்வம். நம்மை உலகத்தின் முன்னால் நாகரிகம் உள்ள மக்களாக, பண்பாடு உள்ள மக்களாக, பல்லாயிரம் ஆண்டு பாரம்பரியம் உள்ள மக்களாக உயர்த்தக்கூடிய செல்வம். அதன் மூலமாக நமக்கு உலகில் மரியாதை ஏற்படும். புதிய விஞ்ஞான யுகத்திலும் நாம் மேலும் மேலும் உயர முடியும். நாம் தொழில் உலகிலும் உயர்வதற்கு உலகம் நம்மீது நம்பிக்கை வைக்க உதவி செய்யும்.

'இனி ஒரு புது விதி செய்வோம். அதை எந்த நாளும் காப்போம்' என்று சைவ அறிஞர் பெருமக்கள் சபதம் ஏற்றுச் செயல்பட முன்வரவேண்டும். தமிழ் மொழியையும், சமஸ்கிருதத்தையும் தம் இரு கண்களாகப் பார்த்து வந்த சமயம் சைவ சமயம். இன்று தமிழும் சமஸ்கிருதமும் மட்டும் போதாது. உலக மொழிகள் எல்லாவற்றையும் தமிழ் அறிஞர்கள் பயில முன்வரவேண்டும். அந்த முயற்சியிலும் ஈடுபடவேண்டும். பட்டம் பெற்ற மாணவர்களை இவ்வாறு பல மொழியிலும் திறமை உள்ளவர்களாக உருவாக்கவேண்டும். அதற்கான பணிகளில் சைவத் திருமடங்கள் தீவிரமாக ஈடுபடவேண்டும். நமது மாணவர்களுக்குப் பள்ளிகளில் சைவம், வைணவம், புத்தம், கிருத்துவம், இசுலாமியம் ஆகிய சமயங்களைப் பற்றியும் போதித்து அவற்றின் அடிப்படை ஞானங்களை அவர்கள் தெரிந்து கொள்ளும்படி செய்யவேண்டும். இதற்கு ஏற்ப, கல்லூரிகளின் பாடத் திட்டத்தை மாற்றி அமைக்க முயலவேண்டும். சமய முறைப்படி வாழ்வதற்கு நமது பிள்ளைகளுக்கு நாம் பயிற்சி அளிக்கவேண்டும். காலை நேரத்தில் திருமுறைகளின் ஓசையைக் கேட்காத குழந்தைகள் துர்ப்பாக்கியம் வாய்ந்தவர்களே! அதுபோலவே, தியானப் பயிற்சியில் ஈடுபடாத பிள்ளைகளும் துர்ப்பாக்கியசாலிகளே!

நம் குடும்ப வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் சமயம் முழுமையாக வெளிப்பட வேண்டும். நம் குழந்தைகள் தம் கண்களால் சமய வாழ்க்கை முறையைக் கண்டுகொண்டே இருக்கவேண்டும். நம்முடைய செயல்களிலிருந்தும் அன்றாட நடைமுறைகளிலிருந்தும் சமயத்தின் சுவையை அவர்கள் உணர வேண்டும். அதன் நல்ல பாதிப்புகள் அவர்களின் உள்ளங்களில் ஆழமாகப் பதியவேண்டும். இறைவனின் வாக்குகளும் நாயன்மார்களின் அருள் மொழிகளும் அவர்களின் காதில்பட வேண்டும்; இடைவிடாமல் பட்டுக்கொண்டே இருக்கவேண்டும். அவர்கள் தாமாகவே சமயத்தைப் பின்பற்றத் தொடங்கவேண்டும். உற்சாகத்துடன் தொடங்கவேண்டும். பெரியவர்கள் தியானம் செய்வதைக் கண்டு பிள்ளைகளும் தியானம் செய்யத் தொடங்கவேண்டும். சமயத்தின் அடிப்படையைத் தாயின் மடியிலேயே குழந்தைகள் கேட்கவேண்டும். இறைவனுக்கு அடிபணிவதன் பொருளை நம் வாழ்க்கையைக் கொண்டே அவர்கள் புரிந்து கொள்ளவேண்டும். சமயத்தின் அழகிய முத்திரை அவர்களின் உள்ளங்களில் பதிந்திட வேண்டும். அவர்களின் பழக்க வழக்கங்கள், பண்பாடு, ஆகிய அனைத்தும் சமயத்திற்கு ஏற்றவாறு அமையவேண்டும். இளைய தலைமுறையினரைச் சரியான மரபுகளில் வார்த்தெடுத்தால் நம் நாட்டை அவர்கள் சமய முறையில் பண்பாடுள்ள அமைதி ததும்பும் நாடாக மாற்ற முற்படுவார்கள்.

உ

சிவமயம்

சுந்தரர் காணக் கண் பெற்றமை

ஆ. சுப்பிரமணிய பிள்ளை

1. திருவொற்றியூரில் சங்கிலிநாச்சியாருக்கு "இவ்வூரை விட்டு அகலேன்" எனச் சபதம் செய்து கொடுத்து, சுந்தரமூர்த்தி சுவாமிகள் அவரை மணந்து, அங்கு சில நாள்கள் வாழ்ந்து வருகிறார். அப்போது அவர் திருவாரூர்ப் புற்றிடங்கொண்டாரைப் பிரிந்திருக்க ஆற்றாது வருந்தி அங்குச் செல்ல நினைந்து, திருவொற்றியூர் எல்லையைக் கடந்ததும் அவர் கண் ஒளி மறைகிறது. பின்னர் கச்சி யேகம்பத்தில் இடக்கண்ணும் திருவாரூரில் வலக் கண்ணும் இறைவர் அருளாற் காணப் பெறுகிறார். இது நாம் பெரிய புராணத்திற் காணும் வரலாறு. இவ்வாறு காணப் பெற்ற கண்கள் யாவை என்பது பற்றிச் சிந்திப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

2. புறக்காட்சி

நமது சமயாசாரியர்கள் திருக்கோயில்களில் அருவுருவத் திருமேனியாகிய சிவலிங்கத்திலும், கூத்தப்பிரான் போன்ற உருவத் திருமேனி களிலும் கண்ட காட்சி நம்போன்றார் கண்டுவரும் 'தரிசனம்' அன்று. அவர்கள் தம்வசம் அழிந்து நிற்க அவர்களது இச்சை அறிவு செயல்கள் இறைவரது இச்சை அறிவு செயல்களாகத் திகழ்ந்தவை; அவர்களது கண், மனம், வாக்கு முதலியன சிவக்கருவிகளாய்ச் சிறந்து நின்றவை. அவர்கள் புறத்தே சிவன் திருமேனியைக் காணும்போது,

i) அவர்களது விரிந்த அன்பு (இச்சை) மனம், சிந்தை முதலிய உட் கருவி களைச் சிவன்பால் உந்தி நிற்பது. ('அந்தக்கரணமோ கலந்த அன்பு உந்த' —தடுத்தாட்கொண்ட புராணம்—105)

ii) அவர்களது விரிந்த அறிவுடன் கூடிய கண்கள் ஐம்பொறி அறிவுகளையும் தம்முள் அடக்கி, 'ஐந்து பேர் அறிவும் கண்களே கொள்ள,' (தடுத்தாட். புரா. 106) கண்ட சிவக் காட்சியில் திளைத்து நிற்பவை.

iii) சிவச்செயலில் நின்ற அவர்கள் வாக்கு தமதுரை சிவனுரையாகத் திருவருட் பாசுரங்களைப் பாடுவது.

இவ்வாறு விரிந்த அறிவு இச்சை செயல் களைப் பெற்றிருந்த சமயாசாரியர்கள் புறத்தே காணும் திருமேனிகளில் சிவபெருமான் அவர் களுக்கு வெளிப்பட்டு நிற்க, அவர்கள் சிவத் துடன் இரண்டறக் கலந்து, பேரானந்தத்தில் அழுந்தி நின்றவர்கள். இதுவே அவர்கள் கண்டு வந்த புறக்காட்சி.

சுந்தரமூர்த்தி சுவாமிகள், கண்டு வந்த புறக் காட்சியை "ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள" எனத் தொடங்கும் திருப்பாட லாலும், "பருகா இன்னமுதத்தைக் கண்களாற் பருகினார்" என்ற திருவாக்காலும் (ஏயர் கோன் புரா. 164) நமக்குச் சேக்கிழார் சுவாமி கள் உணர்த்தியருள்வர்.

3. அகக்காட்சி

நமது சமயாசாரியர்கள் புறத்தேயன்றி அகத்தேயும் சிவபெருமானைக் கண்டு இன்புற் றிருந்தவர்கள். சிறப்பாகச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் அகத்தே காணும் சிவயோக நெறி யில் நின்று அந்நெறியினை உலகுக்கு உணர்த்த வந்தவர் என்பர். அவர் திருவாரூர்ப் புற்றிடங் கொண்ட பெருமானை என்றும்

அகத்தே தியானித்து நிட்டைகூடிக் கலந்து இன்பத்தில் திளைத்து இருந்தவர்.

''எம்மானை மனத்தினால் நினைந்த போது
அவர் நமக்கு இனியவாறே'' (30.1)
''நானேல் உன்னடியே நினைந்தேன்
நினைதலுமே
ஊனேர் இவ்வுடலம் புகுந்தாய்
என் ஒண்சுடரே
தேனே இன்னமுதே'' (21.6)

போன்ற அவர் அருள்வாக்குகளும்,

''புற்றிடமாய் உறைந்த பெருமான் கழல்
பிரியாது ஓவா இன்பம் உற்றிருந்தார்''
(ஏயர் கோன் புரா. 45)

போன்ற சேக்கிழார் சுவாமிகள் திருவாக்கும் நம்பியாரூரர் அகத்தே இறைவரைக் கண்டு பெற்றிருந்த ஆனந்தக் காட்சியினை நமக்கு உணர்த்தி நிற்பன.

4. காணும் கண்

பேரின்பமே வடிவு கொண்ட சிவபெருமானை இவ்வாறு புறத்தேயும் அகத்தேயும் காணவல்ல கண்களே காணும் கண்கள்; விரிந்த அறிவு பெற்ற ஞானக்கண்கள்.

''ஊனக் கண் பாசம் உணராப் பதியை
ஞானக் கண்ணில் சிந்தை நாடி''
என்னும் சிவஞான போதச் சூத்திரம் (9)

ஞான உருவாய சிவத்தை சிவஞானத்தினாலே அறிய வேண்டும் என்று இங்கு மெய்கண்ட தேவர் அருளிச் செய்கிறார். சிவஞானமே மெய்ஞ்ஞானம், திருவருள், ஞானக்கண், அருட்கண் என்றெல்லாம் பேசப் பெறுவது. இக்கண்ணே உயிர்களுக்குச் சிவத்தைக் காட்டிச் சிவானந்தத்தில் திளைக்கச் செய்வது.

''அருட்கண்ணுளோர்க்கு எதிர் தோன்றும்
அரனே'' (1808)
''காணவல்லார்க்கு அவன் கண்ணின் மணி
ஒக்கும்
காணவல்லார்க்குக் கடலின்
அமுதொக்கும்'' (2823)
''சிவமானஞானம் சிவானந்தம் நல்குமே''
(1587)

போன்ற திருமந்திர வாக்குகளால் இதனை நாம் அறியலாம்.

5. சுந்தரர் கண் மறைப்பு

சுவாமிகள் ஒற்றியூர் எல்லையை விட்டு நீங்கியதும் அவரது ஞானக்கண் ஒளி மறைகிறது. அவர் இடையறாது அகத்தே திருவாரூர்ப் பெருமானைக் கண்டு பெற்று வந்திருந்த சிவானந்த அனுபவம் தடையுறுகிறது,

''முன் அடிகள் தோன்றாது கண் மறைய
மூர்ச்சித்தார்''

என்பது சேக்கிழார் சுவாமிகள் திருவாக்கு (ஏயர் கோன் புரா. 274). இங்கு 'அடிகள்' என்றருளியது 'முதல்வனது திருவடியாகிய சிவானந்தத்தை' (சிவஞான பாடியம், சூத் 10 அதி. 1.). நம்பிகள் அகக்கண்ணே 'அடிகள்' தோன்றாது நின்றது அவர் பெற்றிருந்த சிவானந்த அனுபவம் தடையுற்று நின்றதேயாம். இக்கண் மறைப்புக்குக் காரணம் இறைவர் திருமுன் தாம் செய்து கொடுத்த சத்தியத்தை மீறியதே என நம்பிகள் உணர்கிறார். அப்பொழுதே தமது துயரை திருவொற்றியூரில் படம்பக்க நாதருக்கு உணர்த்தும் வகையில்,

''கரும்பே! கட்டியே' ... அமுதே! அத்த! என் இடர் ஆர்க்கெடுத்து உரைக்கேன்'' எனப்பாடுகிறார். (54.3)

இதுவரை இறைவன் தம் அகக்காட்சியில் பேரானந்தத்தை அருளிக் கரும்பும் கட்டியும் அமுதமுமாய் நின்றதையும்,இப்போது அவ்வனுபவம் நீங்கத் தாம் பெருந்துயர் உறுவதையும் நம்பிகள் இதில் நமக்கு உணர்த்துகிறார்.

6. ஊன்று கோல் பெறுதல் :

திருவாரூரை நோக்கிச் செல்லும் ஆரூரர் திருவெண்பாக்கம் அணுகி 'கோயிலுளாயே' என வினாவிப் பாடுகிறார். (பதிகம் 89.). அப்பதிகத்தில் ''ஊன்றுவதோர், கோல் அருளி உளோம் போகீர் என்றானே'' எனவும் பாடி (89.10) இறைவர் தமக்கு ஊன்றுகோல் ஒன்று தந்தருளியதையும் நமக்கு உணர்த்துகிறார்.

தாம் செய்த பெரும் பிழையை எண்ணி எண்ணிப் பேழ்கணித்திருந்த நம்பிகளது சித்தம் சிவன்பாலே ஊன்றி நிற்காமையால் அவருக்கு நிட்டை கூடாததாயிற்று; இறைவர் நம்பி களது சித்தம் தம் மாட்டு ஊன்றி நிற்கும்படி அருள் செய்கிறார்; இதுவே அவர் பெற்ற ஊன்றுகோல் என நாம் கருதலாம்.

''மேவிய அந்தகன் விழிகள் குருடனாம்
ஆவயின் முன் அடிக் காணுமது கண்டு
மேவும் தடி கொண்டு சொல்லும் விழி
பெற'' (2169)

என்பது திருமந்திரப் பாடற் பகுதி. இதில், 'சிவானந்தமாகிய திருவடியைக் காணும் வழியிற் செல்ல ஊன்று கோல் ஒன்று (தடி) உளது; அதுவே சிவஞானமாகிய கண் (விழி)' என்று திருமூல தேவர் நமக்கு உணர்த்தி யருள்வது நாம் இங்கு காணத் தக்கது. இத் திருமந்திரத்தில் ''முன் அடி காணுமது'', என்ற சொற்றொடரை மனத்துட் கொண்டு சேக்கிழார் சுவாமிகள் ''முன்னடிகள் தோன்றாது ...... மூர்ச்சித்தார்'' என்று தமது புராணத்திற் பாடியருள்வதும் நோக்குதற் குரியது.

7. இடக்கண் மறைப்பு நீக்கம்.

பின்னர் நம்பிகள் காஞ்சிமா நகரை அடைந்து, ஏகாம்பர நாதரை வணங்கி, ''கடையானேன் எண்ணாத பிழை பொறுத்து இங்கு யான் காண ... கண் அளித்தருளாய்'' என வேண்டுகிறார். (ஏயர்கோன் புரா. 286). இறைவரும் அருள் கூர்ந்து ''மறைந்த இடக்கண் கொடுத்தார்'' எனச் சேக்கிழார் சுவாமிகள் கூறுகிறார். (புரா. 287). இக் கண் பெற்றதும் நம்பிகள் மகிழ்ந்து பாடியது, ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் ''காணக் கண் அடியேன் பெற்றவாறே'' என்று முடியும் பதிகம் (எண் 61) ஆகும். நம்பிகள் இப் பதிகத்தில்

i) ''உமைநங்கை ...... ஏத்தி வழிபடப் பெற்ற ... கம்பன் எம்மானை'' (1, 3, 4, 5, 7, 8, 9)

ii) உருத்திர மூர்த்தி ஏத்தி வழிபடப் பெற்ற ''நல்ல கம்பனை'', (5).

iii) திருமால் ஏத்தி வழிபடப்பெற்ற ''கள்ளக் கம்பனை'' (10)

''காணக் கண் பெற்றவாறே'' எனப் பாடி யருள்கிறார். இம் மூவரும் காஞ்சியில் தனித் தனியே தாபித்து வழிபட்ட சிவலிங்கத் திரு மேனிகளில் நம்பிகள் புறத்தே சிவபெரு மானைக் கண்டு இன்புற்றதையே நமக்கு இப்பாடல்கள் உணர்த்துவன. எனவே நம்பிகளுக்கு ஏகம்பநாதர் அருளிய இடக் கண் புறக்காட்சியே என்பதனை நாம் அறியலாம்.

மேலும்,

''நண்ணினார்க்கென்றும் நல்லவன் தன்னை
நாளும் நாம்உகக் கின்றபிரானை
காணக்கண் அடியேன் பெற்ற வாறே
(61.7)

என்று, இப்பதிகத்தில் நம்பிகள் பாடியருள் கிறார். நன்மைகளுக்கெல்லாம் மேலான பேரின்பமாகிய நலத்தைத் (மங்கலத்தைத்) தரும் சிவத்தை, தாம் என்றும் புறத்தே சிவலிங்கத் திருமேனியில் கண்டின்புற்றிருந்த இறைவரை மீண்டும் காணக் கண்டு களிப் புற்றதையே இங்கு நமக்கு உணர்த்துகிறார்.

8. வலக்கண் மறைப்பால் வருந்துதல்.

நம்பிகள் திருவாரூரை நோக்கிச் செல்லுங் கால் புற்றிடங் கொண்டாரை நினைந்து

''சிந்தை பராமரியாத் தென்திரு
ஆரூர்புக்(கு)
எந்தை பிரானாரை என்றுகொல்
எய்துவதே''

என்று பாடுகிறார் (83.1) இங்கு 'பராமரித் தல் என்பது ஆதரித்தல்; 'சிந்தை பராமரியா' என்றது சித்தத்தில் அன்பாற் சிவனை ஆதரித்துத் தியானித்து நிற்றல்; 'எய்துதல்' நிட்டை கூடி சிவனோடு அத்துவிதமாய் இரண்டறக்கலந்து நிற்றல். எனவே இப்பாட்டற் பகுதியில் நம்பிகள் புறக்காட்சி பெற்ற தோடமையாது இன்னும் இன்ப அகக்காட்சி எப்போது எய்துமோ என வருந்துவதை நாம் காண்கிறோம்.

பின்னர் திருநெல்வாயில் அரத்துறையில் ''உன்னடியே புகும் சூழல் சொல்லே'' (3.2), என இறைவனது ஆனந்தத் திருவடிகளை அகத்தே கண்டின்புற ஒரு வழியையாவது சொல்லும் படி வேண்டுகிறார்.

பிறகு திருவாவடுதுறையை அடைந்து 'இது வரை அகத்தே என்னோடு கலந்து நின்று, (உறவு செய்து), என்னைப் பேரின்பத்தழுத்தி வந்தாய்; அவ்வாறு உறவு செய்வார் உன்னையன்றி வேறு ஒருவர் இல்லை; ஆதலின் என் பிழை பொறுத்து என் இடர் தீர்த்தருள்வாய் என்னும் பொருள் பெற ''கோதில், அமுதே!' (70.8) 'உறவிலேன் உன்னையன்றி மற்றடியேன் ஒரு பிழை பொறுத்தால் இழிவுண்டே?'' (70 6) 'ஆர் எனக்கு உறவு? (70.1–9) என்றெல்லாம் பாடுகிறார். மேலும் அப் பதிகத்தில் 'அஞ்சல் என்றருளாய் (1—9) எனவும் பாடுகிறார். இங்கு நம்பிகள் (அஞ்சியதாகப்) பாடியது அகக்காட்சி பெறாதிருக்கும் நிலை எவ்வளவு நாள்கள் நீட்டித்து நிற்குமோ என்னும் அச்சத்தால்.

இறுதியாகத் திருவாரூர்ப் பரவையுண் மண்டலியை அணுகி,

> ''நெஞ்சேர நின்னையே உள்கி நினைவாரை
> அஞ்சேல் என் பரவையுண் மண்டளி
> அம்மானே'' (96.5)

எனவும்,

> ''கண்தனைக் கொண்டிட்டுக் காட்டாயே''
> (96.7)

எனவும் பாடுகிறார். இங்கு 'ஏர' என்ற சொல், ஏர்ப்பு அதாவது 'ஈர்ப்பு' என்ற பொருளில் வந்தது; 'நெஞ்சேர' என்பது நெஞ்சம் உன்னை ஈர்த்துக் கலந்து நிற்க, எனப் பொருள் தருவது. 'உள்கி நினைதல்'—தியானித்து நிட்டை கூடி நிற்றல். எனவே இங்கும் நம்பிகள் அகத்தே இறைவரைக் கண்டு இன்னும் இன்பம் பெறாததையே நமக்கு உணர்த்துகிறார். கண்கொண்ட இறைவரை அகக்கண்ணையும் தந்தருள வேண்டுகிறார்.

9. வலக்கண் மறைப்பு நீக்கம்

பின்னர் அன்றிரவு அர்த்தயாம பூசையின் போது திருவாரூர் மூலட்டானரை வழிபடச் செல்லும் வழியில், பெருமானை அகத்தே பிரிந்திருக்கமாட்டாமையால், கைக்கிளைத் திணையில் பதிகம் பாடி (பதிகம் 37), மூலட்டானேசுவரரை அணுகித் திருமுன்பு,

> ''மாயம் காட்டிப் பிறவிகாட்டி மறவா
> மனம் காட்டிக்
> காயம் காட்டிக் கண்நீர் கொண்டால்
> வாழ்ந்து போதீரே'' (95.7)

எனவும்,

> ''எற்றுக் கடிகேள் என்கண் கொண்டீர்
> நீரே பழிப்பட்டீர்
> மற்றைக் கண்தான் தாராதொழிந்தால்
> வாழ்ந்து போதீரே'' (95.2)

என்றும் பாடுகிறார். 'திருக்கயிலையில் சேடியர் பால் மனம் செல்லுமாறு அடியேனுக்கு 'மாயம் காட்டி' இப்பிறவியைத் தந்து, திருவெண்ணெய்நல்லூரில் உமது அழகிய திருமேனியைக் (காயம்) காட்டி ஆட்கொண்டு, என்றும் உம்மை மறவா மனம் கொண்டு அகத்தே தியானித்து நிட்டைகூடி இன்புற்றிருக்கும் பேற்றினையும் தந்து, இப்போது தன் அகக்கண்ணைத் தேவரீர் கொண்டீர் ஆதலின், நீரே பழிபட்டீர். அக்கண்ணையும் இன்னும் தாராதொழிந்தால் நீர் வாழ்ந்து போதீர்' எனத் தமது மெய்யடிமைத் திறத்தாலும், தோழமைத் தன்மையாலும் இறைவரை உரிமையோடு இகழ்ந்து பாடுகிறார்.

'மெய்யடியார் தமக்காம் இடர்' (புரா. 309) இன்னும் இறைவர் தரிப்பரோ? ஆரூர் அம்மான் நம்பிதனக்கு அகக்காட்சியினையும் அருள்கிறார். இரண்டு கண்களாலும் புற்றிடங்கொண்டாரைக் கண்டு இன்ப வெள்ளத்தில் திளைக்கிறார். (புரா. 311)

10. கண்காட்டிய அருட்டிறத்தைப் போற்றுதல்

இவ்வாறு இறைவர் தம் பிழைபொறுத்துத் தன்னை இருகண்களாலும் காணுமாறு காட்டிய பேரருட்டிறத்தைத் திருப்புக்கொளியூர் அவிநாசியில் போற்றிப் பாடுகிறார்.

''பேணாதொழிந்தேன்; உன்னையல்லால் பிற தேவரைக்
காணாதொழிந்தேன்; காட்டுதியேல் இன்னம் காண்பன் நான்
பூணாண் அரவா புக்கொளியூர் அவிநாசியே!
காணாத கண்கள் காட்டவல்ல கறைக்கண்டனே'' (9-2. 8)

எனப்பாடுகிறார். 'திருவொற்றியூரில் தேவரீர் சந்நிதியிற் செய்த சபதத்தைப் பேணா தொழிந்தேன்; ஆதலால் உம்மைக்காணா தொழிந்தேன்; உம்மையல்லால் வேறு ஒரு வரையும் வணங்காத அடியேன் பிறதேவரை யும் காணாதொழிந்தேன்; என் பிழையின் பயனாகக் காணாதொழிந்த கண்களை நீர் காட்டியருளினீர்;அவ்வாறு காட்ட வல்லவரும் நீர் ஒருவரே: உமது பேரருட்டிறம் தான் என்னே! உமது பேரருட்டிறத்தை உமது கறைக் கண்டமே காட்டுமல்லவா !' என்று இறை வரது பெருங்கருணையைப் போற்றிப் பாடு கிறார். மேலும் 'உமது பெருங்கருணைத் திறம் இனி தேவரீர் திருக்கயிலையில் எம் பிராட்டியுடன் எழுந்தருளியிருக்கும் திருக் கோலத்தையும் இவ்விரு கண்களாற்கண்டின் புறக் காட்டியருளும்'' என்ற ஒரு குறிப்பும் பெறப் பாடியருள்கிறார்.

11. முடிவுரை

எனவே சுந்தரமூர்த்தி சுவாமிகள் மீண்டும் 'காணப் பெற்ற' கண்கள் இறைவனை அகத்தேயும் புறத்தேயும் கண்டு இன்புறும் சிவஞானக் கண்கள் என்பதும், இக்கண்களால் பெறும் காட்சிகளை இழந்து நம்பிகளைச் சில நாள்கள் துன்புறும்படி செய்தது. அவர் செய்த சபதத்தை மீறியதற்கு இறைவர் விதித்த தண்டனை என்பதும், உலகு உய்யும் பொருட்டு 'மாயம் காட்டி' இம்மண்ணுலகு வரச்செய்த தம் தொண்டனாகிய ஆலாலசுந்தரருக்கு, ஒரு சிறுபிழை செய்ததன் காரணமாக, அவரது ஊனக்கண்களையே மறைத்துக் குருடராக்கும் பெரும் தண்டனையை இறைவர் அளிப்பார் அல்லர் என்பதையும், இவ்வரலாற்றில் நாம் அறிகிறோம். நம்பிகள் காணப் பெற்ற இரு கண்கள் அகப்புறக்காட்சிக் கண்களே என்ப தனைச் சேக்கிழார் சுவாமிகளும் நாம் உய்த்து உணரும்படி வைத்தார். புராண வரலாறுடன் பல உயர்ந்த ஞானநூற் கருத்துக்களை உலகத் தார்க்கு இவ்வாறு மறைமுகமாக உலக வழக்கில் வைத்துக் கூறுதல் மரபு.

''போற்றியோ நமச்சிவாய ஞான ஆரூரர் பொற்றாள்''

மெய் கண்டார் தமிழர். அவர், குருநாதன் வாயிலாகப் பெற்ற சிவஞான போத உபதேசம், அவர் வழியாகத் தமிழ்ச் சிவஞான போத நூலாகத் திரண்டது. சுருங்கச் சொல்லி விளங்க வைப்பது தமிழுக்கு உரிய சிறப்பு இயல்பு. தமிழ்ச் சிவஞான போதம் மிகச் சுருங்கிய நூல். பன்னிரண்டு சிறு சிறு சூத்திரங் களால் ஆக்கப்பட்டது. சிறு நூல் பெரிய உலகையும், எண்ணிறந்த உயிரையும், எல்லை அற்ற இறைவனையும் காட்டுதல் வியப்பன்றோ? சிவஞான போதம் சுருங்கிய சொல்லும் பெருகிய பொருளும் உடையது. சிவஞான போதச் சொல் ஆலின் விதை போன்றது. அதன் பொருள் மரம் போன்றது.

திரு. வி. க.

(திரு. வி. க. வின் சிவஞான பாடியம் அணிந்துரை)

உ

சிவமயம்

மாணிக்கவாசகரின் அருள் நூல்

அறப்பணிச் செல்வர் டாக்டர் கே. அரங்கசாமி பிள்ளை

உயிர்க்குயிராய் உள்நின்று உணர்த்தும் இறைவன் தன் அருள் பதியும் உயிர்களது பக்குவநிலைக்கேற்ப அருளே திருமேனியாகப் புறத்தே குருவாக எழுந்தருளி வந்து நற் பொருளை உபதேசித்தருள்வன் என்பது சைவ சமயச் சான்றோர்களின் துணிபாகும். சூரியன் எதிர்முகமாக நில்லாது நீங்கிய நிலையில் சூரிய காந்தக் கல்லிடத்தே தீ தோன்றாது. அது போல இறைவன் குருவாக வந்து எதிர் முகமாகத் தோன்றாத நிலையில் மாணவ னிடத்தே மெய்ஞ்ஞானந் தோன்றாது. எனவே,

''சூரிய காந்தக் கல்லினிடத்தே செய்ய
சுடர் தோன்றியிடச் சோதி
தோன்றுமா போல்
ஆரியனாம் ஆசான் வந்தருளால் தோன்ற
அடிஞானம் ஆன்மாவில் தோன்றும்''
(சித்தியார் — பக்கம் 280)

என்பர் அருணந்தி சிவாசாரியார். இறைவனே குருவாக எழுந்தருளிவந்து ஆன்மாவுக்கு மெய் யுணர்வு உபதேசம் வழங்கியருளுவான் என்ப தற்கு எடுத்துக்காட்டாக அமைந்தது மாணிக்க வாசகர் வரலாறாகும்.

''ஐம்புலவேடரின் அயர்ந்தனை வளர்ந்
தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில்
உணர்த்த, விட்டு
அந்நிய மின்மையின் அரன் கழல்
செலுமே''

என மெய்கண்டார் அருளிய சிவஞானபோத எட்டாஞ் சூத்திரத்திற்கு எடுத்துக் காட்டாக அமைந்தது, எட்டாந் திருமுறையாகிய திருவாசகந்தை அருளிச் செய்த மாணிக்க வாசகர் வரலாறேயாகும்.

அன்பினால் உருகிய உள்ளத்திலேயே இறை வன் எழுந்தருளி உடன் ஆவன் என்பது, ''நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே, புக்கு நிற்கும் பொன்னார் சடைப் புண்ணி யன்'' என வரும் அப்பர் அருள்மொழியால் புலனாகும். இவ்வாறு மக்கள் உள்ளத்தை நெகிழ்வித்து இறைவனை அன்பினால் நினைக் குந்தோறும் பேசுந்தோறும் வணங்குந்தோறும் மனங் கசிந்துருகச் செய்யும் பத்திப்பனுவலாக மணிவாசகப் பெருமான் அருளிய அருளுபதேச மாகத் திகழ்வது திருவாசகமாகும். இது குறித்தே ''திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்'' என்ற பழமொழி யும் வழங்குகின்றது.

அன்பினால் ஓதுவார் கேட்பார் ஆகிய எல்லோருடைய உள்ளங்களையும் உருக்க வல்ல பத்திப்பனுவலாக விளங்குவது சைவத் திருமுறைகள் பன்னிரண்டினுள் எட்டாந் திருமுறையாகத் திகழும் திருவாசகமாகும். இதனைப் பாடியருளியவர் சைவசமய குரவர் நால்வருள் ஒருவராகிய திருவாதவூரடிகள் ஆவர். பாண்டி நாட்டில் திருவாதவூர் என்னும் ஊரிலே சம்புபாதாசிரிதர் புதல்வராக அந்தணர் மரபிலே தோன்றி அருங்கலைகள் பல பயின்று பாண்டிய மன்னனுக்கு அமைச்சராகிய திருவாதவூரர், மன்னன் பணித்த வண்ணம் குதிரை வாங்குதற் பொருட்டுப் பெரும் பொருளை எடுத்துச் சென்றார். செல்லும் வழியிலே திருபெருந்துறையில் தங்கியபோது முன்னைத் தவத்தின் பயனாக உயிர்க்குயிராய் உள்நின்று உணர்த்த வல்ல சிவபெருமானே

திருப்பெருந்துறையிற் குருந்த மரநிழலில் சிவகணநாதராகிய மாணவர்கள் சூழக் குருவாய் எழுந்தருளி இருந்து திருவாதவூரருக்குத் தீக்கை செய்து திருவைந்தெழுத்தினை உபதேசித்தருளினார். இறைவன் பால் ஞானோபதேசம் பெற்ற திருவாதவூரடிகள், அருபரத்தொருவனாகிய இறைவன் தம்பொருட்டு இந்நிலவுலகில் மானிடவுருவில் எளிவந்து உபதேசித்தருளிய பெருங்கருணைத் திறத்தை எண்ணியெண்ணி அன்பினால் உள்ளங் குழைந்து மெய்ம்மயிர் சிலிர்த்துக் கண்ணீரரும்பித் தேனினுமினிய செந்தமிழ்ப் பாடல்களால் அம்முதல்வனைப் பரவிப் போற்றினார். இவ்வாறு தன் நெஞ்சினையும் தணிவிக்கும் பழுதிலாச் செந்தமிழ் ஆகிய மணி வார்த்தைகளால் இறைவனுடைய பொருள்சேர் புகழ்த்திறங்களை விரித்துரைத்துப் போற்றினமையால் மாணிக்கவாசகர் என அழைக்கப் பெற்றார்.

பாண்டியனுக்கு அமைச்சராகிய திருவாதவூரார் குதிரை வாங்குவதற்கென மன்னனிடம் பெற்றுச் சென்ற பொன் அனைத்தையும் திருப்பெருந்துறையிற் குருவாய் எழுந்தருளித் தம்மை ஆட்கொண்டருளிய இறைவன் பணித்தவண்ணம் திருக்கோயிற்பணிக்கும் அடியார்கட்கும் செலவிட்டார். அந்நிலையில் அப்பொன்னுக்குரிய குதிரைகளை வாங்கி மன்னனிடம் கொடுப்பதற்கு இயலாது வருந்திய அடிகள் ''நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே'' எனத் தமது பாரமனைத்தையும் இறைவன் பால் ஒப்புவித்து அவனது அருள் வழியடங்கி எத்தகைய இடையூறுகளையும் பொருட்படுத்தாது ஒழுகினார். சித்தம் சிவமாகப் பெற்ற மணிவாசகரது துயரைப் போக்கத் திருவுளங்கொண்ட சிவபெருமான், அவர் பொருட்டு நரியைக் குதிரைகளாக்கித் தானே குதிரைச் சேவகனாக மதுரை மாநகரிற் புகுந்து பாண்டியனிடம் குதிரைகள் ஒப்படைத்தமையும் தன் அருள்விளையாடல்களால் குதிரைகள் மீண்டும் நரிகளாய் மாறி மதுரையிற் கலக்கஞ் செய்தோட அதனாற் சினமுற்ற பாண்டியன் மீண்டும் மணிவாசகரை அழைத்துத் துன்புறுத்தினனாக, அந்நிலையில் வைகையிற் பெருவெள்ளம் உண்டாக்கினமையும் பிட்டு விற்றுப் பிழைக்கும் முதியவளாகிய வந்தியின் பொருட்டுத் தானே கூலியாளாக வந்து பிட்டுண்டு மண் சுமந்தருளி மன்னவனால் பிரம்படிபட்டு மறைந்தருளினமையும் ஆகிய வரலாற்றுச் செய்திகள் திருவாசகத்தில் குறிக்கப்பட்டுள்ளன.

''ஆண்டு கொண்டருள அழகுறுதிருவடி
பாண்டியன்றனக்குப் பரிமாவிற்று
ஈண்டு கனகம் இசையப் பெறாஅது
ஆண்டான் எங்கோன் அருள் வழியிருப்பத்
தூண்டுசோதி தோற்றிய தொன்மையும்''
(கீர்த்தித் திரு அகவல்)

எனவும்,

''அரி யொடு பிரமற்கு அளவறி யொண்ணான்
நரியைக் குதிரையாக்கிய நன்மையும்''

எனவும்,

''நரியைக் குதிரையாக்கி ஞாலமெல்லாம் நிகழ்வித்துப்
பெரியதென்னன் மதுரையெல்லாம் பிச்ச தேற்றும் பெருந்துறையாய்''

எனவும்,

''அங்கது தன்னில் அடிய வட்காகப்
பாங்காய் மண்சுமந் தருளிய பரிசும்''

எனவும்,

''கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண்டு அக்கோவால் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய்''

எனவும் வரும் திருவாசகத் தொடர்கள் மேலே குறிப்பிட்ட மாணிக்கவாசகர் வரலாறுகளை உறுதிப்படுத்தும் அகச் சான்றுகளாக அமைந்துள்ளமை காணலாம்.

திருப்பெருந்துறையில் எல்லாம் வல்ல இறைவனே குருவாக எழுந்தருளிவந்து அருளுபதேசஞ் செய்யப் பெற்ற மாணிக்கவாசகப் பெருமான் திருவாய் மலர்ந்தருளிய திருவாசகமும் கோவைத் திருவாசகமும் உலக மக்கள் அனைவரும் இறைவன் திருவருள் பெற்று உய்தி பெறுதற்குரிய அருளுபதேச மொழிகளாக அமைந்துள்ளன. ''நமச்சிவாய

வாஅழ்க நாதன்தாள் வாஅழ்க'' எனவும், ''நானேயோ தவஞ் செய்தேன் சிவாயநம வெனப் பெற்றேன்'' எனவும் ''அஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின்றேன்'' எனவும், ''ஓங்காரத்துட்பொருளை ஐயன்எனக் கருளியவாறு ஆர் பெறுவார் அச்சோவே'' எனவும் வரும் திருவாசகத் தொடர்கள் மாணிக்க வாசகர் பெற்ற திருவைந்தெழுத்துபதேசத்தின் சிறப்பினை வற்புறுத்தல் காணலாம்.

பெருந்துறையீசன் குரு மூர்த்தியாக எழுந்தருளிவந்து திருவாதவூரர் சென்னியில் திருவடி சூட்டித் தீக்கை செய்து பலரும் காண அவரது பாசப் பிணைப்பாகிய மும்மலங்களையும் நீக்கி தன் திருவடிகளை அகத்தும் புறத்தும் காணுமாறு அவர்க்குக் காட்டியருளினான். சொல்லிறந்த பேரின்பமாகிய சிவானந்தப் பெருந்தேனை நுகர்ந்து இன்புறும் முறையை அறிவுறுத்தினான். ''நின்னை ஒருபோதும் பிரிய மாட்டேன்'' என அன்புரை பகர்ந்து அறிவிலாப் பேரின்ப வாழ்வில் நிலை பெறச் செய்தருளினான். இவ்வாறு தம்பால் இறைவன் நிகழ்த்திய அற்புத நிகழ்ச்சியினை,

''பெரியோன் ஒருவன் கண்டுகொளென்றுன்
பெய் கழலது காட்டிப்
பிரியேனென் றென்றருளிய அருளும்
பொய்யோ எங்கள் பெருமானே''

எனவும்,

''காயத்துள்ளமு தூறவூற நீ கண்டு
கொள்ளென்று காட்டிய
சேயமா மலர்ச் சேவடிக்கண் நஞ்சென்னி
மன்னித் திகழுமே''

எனவும்,

''வாக்கிறந்து அமுதம் மயிர்க்கால் தோறும்
தேக்கிடச் செய்தனன், கொடியேன்
ஊன்தழை
குரம்பை தோறும் நாயுடலகத்தே
குரம்பை கொண்டு இன்தேன் பாய்த்தி
நிரம்பிய
அற்புதமான அமுத தாரைகள்
எற்புத் துளைதோறும் ஏற்றினன்,
உருகுவது
உள்ளங் கொண்டு ஓர்உருச் செய்தாங்கு
எனக்கு
அள்ளூறு ஆக்கை அமைத்தனன், ஒள்ளிய
கன்னற்கனி தேர்களிறெனக் கடைமுறை
என்னையும் இருப்பதாக்கினன்''

என வரும் திருவாசகத் திருவண்டப் பகுதித் தொடர்களிலும் மாணிக்கவாசகர் தெளிவாகக் குறித்துள்ளார். தேவருங் காணாச் சிவபெருமான், மானிடத் திருமேனி கொண்டு இந்நில மிசைத் தம் கண் காண எழுந்தருளி வந்து தம்மை ஆட் கொண்டருளிய செய்தியை,

''தேவரும் அறியாச் சிவனே காண்க
கண்ணா லியானுங் கண்டேன் காண்க
புவனியிற் சேவடி தீண்டினேன் காண்க
சிவனென யானுந் தேறினன் காண்க
அவன் எனையாட் கொண்டருளினன்
காண்க'',

எனத் திருவாதவூரடிகள் தெளிவாகக் குறித்துப் போற்றுகின்றார்.

திருவாதவூரர்க்கு ஞானோபதேசஞ் செய்த சிவபெருமான் மாணிக்கவாசகரைத் ''தில்லைக்கு வருக'' எனப் பணித்து மறைந்தருளினார். அப்பொழுது அவருடன் இருந்த அடியார்கள் இறைவனது பிரிவுக்கு ஆற்றாது திருப்பெருந்துறையில் திகழ்ந்த பூம்பொய்கையில் தோன்றிய தீயிற் பாய்ந்து கயிலைப் பெருமானை அடைந்தனர். இச்செய்தி,

''நாயினேனை நலமலி தில்லையுட்
கோலமார்தரு பொதுவினில் வருகென
ஏல என்னை ஈங்கொழித் தருளி
அன்றுடன் சென்ற அருள் பெறும் அடியவர்
ஒன்ற ஒன்ற உடன் கலந்தருளியும்
எய்த வந்திலாதார் எரியிற் பாயவும்''

எனவரும் மணிவாசகர் வாய்மொழியாற் புலனாகின்றது.

திருப் பெருந்துறையிற் சிவபெருமான் பால் அருளுபதேசம் பெற்ற மாணிக்கவாசகர் திருவுத்தரகோசமங்கையை யடைந்து நீத்தல் விண்ணப்பம் பாடிப் பெருந்துறையிற் கண்ட குருவடிவத்தை அங்கேயும் கண்டு வணங்கினார். பின்பு பல தலங்களையும் வணங்கித் திருவிடைமருதடைந்து தேனினுமினிய சிவ பெருமானைப் போற்றி மகிழ்ந்தார். ''இடை

மருததனில் ஈண்டவிருந்து படிமப் பாதம் வைத்த அப்பரிசும்'' எனவும், ''அந்த இடை மருதில் ஆனந்தத் தேனிருந்த பொந்தைப் பரவி நாம் பூவல்லி கொய்யாமோ'' எனவும் வரும் திருவாசகத் தொடர்கள் இடைமரு தீசர்பால் அடிகள் பெற்ற பேரின்ப நிலை யைக் காணலாம்.

மாணிக்க வாசகர் திருவாரூர்ப் பெருமானை வழிபட்டுத் திருப்புலம்பல் பாடினார். சீகாழிப் பெருமானை இறைஞ்சிப் பிடித்த பத்து பாடினார் எனவும் பின்னர்த் திருக் கழுக்குன்றத்தினையடைந்து பெருந்துறையில் தமக்கு அருளுபதேசம் புரிந்த குருவடிவில் இறைவனைக் கண்டு வணங்கி மகிழ்ந்தார் எனவும் கடவுள் மாமுனிவர் கூறுவர். கழுக் குன்றிற் குரு வடிவங் கண்ட செய்தி.

''மலங்கினேன் கண்ணின் நீரை மாற்றி
மலங்கெடுத்த பெருந்துறை
விலங்கினேன்வினைக் கேடனேன் இனி
மேல் விளைவ தறிந்திலேன்
இலங்குகின்ற நின் சேவடிகள்
இரண்டும் வைப்பிட மின்றியே
கலங்கினேன் கலங்காமலே வந்து
காட்டினாய் கழுக்குன்றிலே''

என வரும் திருக்கழுக்குன்றப் பதிக்த்திருப் பாடலால் நன்கு விளங்கும்.

''நலமலிதில்லையிற் கோல மார்தரு பொது வினில் வருக'' என இறைவன் பணித்த வண்ணம் பல தலங்களையும் வணங்கி முடிவில் தில்லையை யடைந்த மாணிக்கவாசகர் இத் தலத்திலேயே பொன்னம்பலவனை பண் சுமந்த பாடல்களால் பரவிப் போற்றி யிருந்தார் என்பது, மாணிக்க வாசகப் பெரு மான் பாடிய திருவாசகத்தில் தில்லையைப் பற்றிய திருப்பதிகங்களால் நன்கு புரியும். மாணிக்கவாசகர் தில்லையில் தங்கியிருந்த போது இலங்கையிலிருந்து வந்த புத்தர் களுடன் வாது செய்து வென்று இலங்கை மன்னன் மகளாகிய ஊமைப் பெண்ணைப் பேசும்படி அருள் செய்து இலங்கை மன்னனைச் சைவனாக்கினார் என்பது வரலாறு.

தில்லையிற் சிவபெருமான் மறையோராகி வந்து திருவாசகத்தை மாணிவாசகர் சொல்ல எழுதிக் கொண்டதோடு தில்லைச் சிற்றம்பலப் பெருமானைப் பாட்டுடைத் தலைவராக வைத்து அகப் பொருட் கோவையொன்றும் பாடித் தரும்படி கேட்டு அதனையும் எழுதிக் கொண்டு அதன் முடிவில் 'திருவாதவூரன் சொல்ல அழகிய திருச்சிற்றம்பலமுடையார் எழுதியது' எனத் தம் கையொப்பமும் இட்டு அத்திருமறையேட்டினைத் தில்லைச் சிற்றம் பலத்தின் வாயிற்படியில் வைத்தருளினார். மறுநாள் பூசை செய்ய வந்த தில்லைவாழந் தணர்கள் அவ்வேட்டினைக் கண்டு அதிச யித்துத் தில்லை நகர மக்களுடன் மாணிக்க வாசகரை யடைந்து அதற்குப் பொருள் தெரித்தருளிச் செய்யும்படி வேண்டினார். சிவபெருமானது திருவருட்பெருமையினை எண்ணி நெஞ்சம் நெக்குருகிய மாணிக்க வாசகர் தில்லைப் பொன்னம்பலத்தை அடைந்து, ''திருவாசகத்திற்குப் பொருளா வார் பொன்னம்பலவராகிய இவரே'' எனக் காட்டி எல்லோரும் காணத் தில்லையம்பலத் திற் புக்கு இறைவன் திருவடி நீழலில் இரண் டறக் கலந்தனர் எனத் திருவாதவூரடிகள் புராணம் கூறும்.

மாணிக்க வாசகர் இறைவன்பாற் பெற்ற அருளுபதேசத்தின் பயனாகிய திருவாசகம் கோவைத் திருவாசகம் என்னும் திருமுறையின் உட்பொருள் சிவாநுபவத்தினாலேயே முற்று முணர்வதற்குரியதாதலாலும் அவ்வனுபவத் திற்கு உள்ளீடாயிருப்பவன் தில்லைச் சிற்றம் பலவனே யாதலாலும் அவ்விறைவனையே திருவாசகத்தின் பொருளாகச் சுட்டிக் காட்டினார் மாணிக்கவாசகர். திருவாசகத் திற்கும் திருக்கோவையார்க்கும் பொருள் இறைவனே எனக் கூறிய இவ்வுண்மையினை,

''பெருந்துறை புகுந்து பேரின்ப வெள்ளம்
மூழ்கிய புனிதன் வாசகமே
வாசகம், அதற்கு வாச்சியம்
தூசகலல்குல் வேய்த் தோளிடத் தவனே''
(நால்வர் நான்மணிமாலை)

எனச் சிவப்பிரகாச சுவாமிகளும்,

"பைந்தமிழ் நவின்ற செந்நாப்புலவன்
ஐந்திணையுறுப்பின் நூற் பொருள் பயக்கும்
காமஞ்சான்ற ஞானப்பனுவற்குப்
பொருளெனச் சுட்டிய ஒரு பெருஞ் செல்வ"

எனக் குமரகுருபர சுவாமிகளும் நன்கு விளக்கியுள்ளார்கள்.

மாணிக்கவாசகர் மன்னுயிர்கள் உய்தி பெற வழங்கிய அருளுபதேசமாக அமைந்தவை திருவாசகமும் திருக்கோவையாரும் ஆகிய திருப்பாடல்களாகும். இவற்றை அழகிய திருச்சிற்றம்பலமுடையாராகிய கூத்தப்பெருமானே தமது திருக்கரத்தால் எழுதியருளினார் என்ற செய்தியை நால்வர் நான்மணி மாலையில் "நலமலிவாதவூர் நல்லிசைப் புலவ" (நா.நா. மாலை) எனத் தொடங்கும் ஆசிரியப்பாவில் சிவப்பிரகாச சுவாமிகள் நயம் பெற விரித்துக் கூறியுள்ளார்கள். எல்லா உலகங்களும் அவற்றின் மன்னுயிர்களும் உமாதேவியும் தன்னுள் ஒடுங்கத் தான் மட்டுந்தனியனாயிருக்கும் ஊழிக் காலத் தனிமையைக் கழித்தற் பொருட்டே சிவபெருமான் திருவாதவூரடிகளை அடைந்து அவர் அருளிய திருவாசகத்தை எழுதி ஒரு படி வைத்துக் கொண்டான் என்பர்.

"கடையூழிவருந்தனிமை கழிக்க வன்றோ — அம்பலத்தில்
உடையார் உன் வாசகத்தில் ஒரு பிரதி கருதினதே"

என மனோன்மணீய ஆசிரியர் சுந்தரம் பிள்ளையவர்கள் தமிழ்த் தாயைப் பரவிப் போற்றியுள்ளமை திருவாசகத்தின் சிறப்பினை நன்கு வலியுறுத்துவது ஆகும்.

ஞானியார் சுவாமிகளின் பொன் மொழிகள்

1) உலகத்தார் தினமும் தவறாது செய்ய வேண்டியவை மூன்று அவை (1) ஏதேனும் ஒரு நல்ல நூலைப் படித்தல் (2) பெரியர் ஒருவருடன் கூடிப் பழகல் (3) ஏதேனும் ஒரு சிறு தானம் செய்தல்.

2) நூல்களில் மூன்றுவகை உண்டு அவை (1) நண்பனுக்கு உரைப்பது போல் இருப்பவை (2) மனைவி கணவனைத் தன் வயப்படுத்தல் போல் இருப்பவை (3) ஆசிரியன் மாணவனைக் கண்டித்தல் போல் இருப்பவை.

தொகுப்பு — சித்தாந்தம்
பக்கம் 137 — (1982 சூலை)

உ
சிவமயம்

வீர சைவமும் சைவ சித்தாந்தமும்

வித்துவான் **வை. இரத்தினசபாபதி**, எம்.ஏ., பிஎச்.டி.,
தத்துவத்துறை, சென்னை பல்கலைக் கழகம்

முன்னுரை :

சிவன் எனும் பெயரைத் தனக்கேயுடைய செம்மேனி எம்மானை முழுமுதற் பொருளாகக் கொண்டு அவனை வழிபட்டு உய்வதற் கேற்ற வழி வகைகளை வரையறுத்துக் கூறும் நெறியைச் சைவம் என்பது மரபு. சிவனே முழுமுதற் கடவுள் என்பதை ஒப்புக் கொண்டாலும் அவனை அறியும் நெறி, அணையும் நெறி, அணைந்த காலத்து நிலை ஆகியவற்றில் எழுந்த வேறுபாடுகள் காரணமாகச் சைவ சமயத்திலும் பற்பல பிரிவுகள் உளவாயின. அவ்வாறுள்ள பிரிவுகளுள் ஒன்றே வீர சைவம்.

வரலாறு :

சதாசிவப் பரசிவத்தின் சத்யோஜாத முதலான ஐம்முகங்களிலிருந்தும் வெளிப்பட்ட **ரேவணாராத்தியர், மருளாராத்தியர், பண்டிதாராத்தியர், ஏகோராமாராத்தியர், விசுவேசுவராராத்தியர்,** என்ற ஐவகை ஆசாரியர்களால் கிருதயுகத்தில் தோற்றுவிக்கப் பெற்றதே வீர சைவம் என்பது சுப்ரபேதாகமம் முதலிய நூல்களால் தெரிய வருகிறது. இவர்கள் யுகந்தோறும் அவதாரம் செய்து வீர சைவ சமய உண்மைகளை நிலை நாட்டியும் பரப்பியும் வந்தார்கள் எனவும், இவர்கள் முறையே மைசூர் மாநிலத்துக் கடூர் மாவட்டத்தில் உள்ள ரம்பாபுரி, உஜ்ஜயினி ஸ்ரீசைலம், பதரிகேதாரம், காசி என்ற ஐந்து இடங்களிலும் வீர சைவப் பீடங்கள் அமைத்தார்கள் எனவும் வீர சைவ மரபு வழிச் செய்திகள் கூறுகின்றன. ஆனால் மேலே குறிப்பிடப் பெற்ற ஊர்களில் இவ்வைந்து ஆசாரியர்களின் பெயரால் அமைந்த திருமடங்கள் இன்றும் சிறப்புடன் விளங்கி வருகின்றன. இவ்வைவரின் வழிமுறையினர் முறையே பிருங்கி, வீர, விருஷப, ஸ்கந்த, ஹந்தி கோத்திரத்தினர் எனக் கூறி, அவ்வவற்றிற் கேற்ற நெறிமுறைகளை மேற்கொண்டு ஒழுகி வருகின்றார்கள்.

கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் வரலாற்றுச் சிறப்புடைய அருளாளராகவும், மைசூர் மாநிலத்தை அப்போது ஆட்சி புரிந்த விச்சலமன்னனின் முதல் மந்திரியாகவும் வாழ்ந்த பசவேசர் என்பார் 'அல்லமாப் பிரபு தேவர்' என்பவரை ஞான குருவாகக் கொண்டு சமய உண்மைகளை நிலைநாட்டியும் பரப்பியும் தொண்டு செய்தார். தக்க வரலாற்றுச் சான்றுகள் இல்லாமையால் பஞ்சாசாரியர்களே வீர சைவ சமயத்தைத் தோற்றுவித்தவராகக் கொண்டனர். இவ்விருவகைக் கருத்துக்களால் வீர சைவத்தில் **பஞ்சாசாரியம்**, **பசவாசாரம்** என இரு பிரிவுகள் தோன்றலாயின.

அல்லமாப் பிரபு தேவர், பசவேசர் ஆகியோர் வரலாறுகளைக் கூறும் பிரபுலிங்க லீலை, வசவபுராணம் ஆகிய தமிழ் நூல்களை இன்றும் காணலாம். நூல்களேயன்றிக் கல்வெட்டுச் சான்றுகளாலும், பசவேசர் அல்லமாப் பிரபு தேவரின் துணை கொண்டு, தத்துவ வல்லுநர்களைப் பல நாடுகளிலிருந்தும் அழைப்பித்து வீர சைவ தத்துவ உண்மைகளை வரையறை செய்தார் என்பதை உறுதியாகக் கொள்ளலாம். பசவேசர் காலத்துக்கு முன்னுள்ள வீர சைவ சமய உண்மைகளைப் பசவேசர் வரையறை செய்து நிலை நாட்டினார் என்று கொள்ளுவது வரலாற்றுக்கு ஒத்ததே. பிரபுலிங்கலீலையைத் தமிழில் அருளிய கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச சுவாமிகள் வீர சைவ

சமய உண்மைகளை விளக்கும் ***சித்தாந்த சிகாமணி*** என்ற நூலைத் தமிழில் மொழி பெயர்ப்பு நூலாக அமைத்துத் தந்துள்ளார்கள்.

மைசூர் மாநிலத்தில் தோன்றி, பசவர் காலத்திற்குப் பின்பே வீரசைவம் தெலுங்கு, தமிழ் மாநிலங்களில் பரவியது என்று கூறு வோர் உள்ளனர். பசவேசர் வீர சைவத் தத்துவ உறுதிப்பாடு செய்வதற்குப் பல்வேறு மாநிலங்களிலிருந்தும் தத்துவ வல்லுநர்களைத் தருவித்து மாநாடு நடத்தினார் என்பதி லிருந்தே பசவர் காலத்திற்கு முன்னமேயே பல்வேறு மாநிலங்களிலும் வீர சைவ சமயம் வாழ்ந்திருந்தது என்பது உண்மை. கி.பி. 12-ம் நூற்றாண்டிலேயே கும்பகோணத்தில் இன்றுள்ள சாரங்க தேவர் திருமடம் 'பெரிய மடம்' என்று குறிப்பிடும் அளவுக்குச் சீரும் சிறப்பும் பெற்ற மடமாக இருந்து வந்துள்ளது. கி.பி. 12ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒட்டக் கூத்தர் தாம் பாடிய தக்கயாகப் பரணியில்,

> 'குடந்தையம் பதிதனில் கோதிலாப் பெரிய
> மடந்தனில் வாழ்வீர மாகேஸ்வரர்
> வாழியே!'

என்று கூறுவது இவ்வுண்மையை விளக்கும். முருகனுக்கே திருப்புகழ் பாடும் அருணகிரி நாதர் இப் பெரிய மடத்தைப் பற்றி ஒரு திருப்புகழ் பாடியிருக்கின்றார். அங்கே உள்ள ஞானசாரியரிடம் அருணகிரிநாதர் உபதேசம் பெற்ற குறிப்பும் காணப்படுகிறது.

திருமூலர் காலத்திலேயே தமிழகத்தில் வீர சைவம் விளக்கமுற்றிருந்தது என்பதைக் காலஞ் சென்ற டாக்டர் மா. இராச மாணிக்கனார் தெளிவுறுத்தியுள்ளார். திரு மூலர் பிரிவுபடுத்திக் கூறும் நால்வகைச் சைவத்தில் கடுஞ்சுத்த சைவம் வீர சைவமாக இருந்திருக்கவேண்டும். கி. பி. 12ஆம் நூற்றாண்டில் பெரிய மடமாக விளங்கிய கும்பகோணம் சாரங்கதேவர் திருமடத்தின் கிளை மடங்களாகப் பல வீர சைவ மடங்கள் தமிழகத்தில் விளங்கியிருந்தன. வீர சைவத் திற்குத் தாயகம் தமிழகமே என்பதைத் தொல்காப்பியம் போன்ற நூல்களைக் கொண்டு நிறுவமுடியும். ஆயினும் அது பல்கி விரியும். கும்பகோணம் பெரிய மடமேயன்றி, மயிலம் சிவஞான பாலய சுவாமிகள் திருமடம், திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் சுவாமிகள் திருமடம், சிதம்பரம் அம்பலத்தாடிகள் திருமடம், மௌன சுவாமிகள் திருமடம், கோவை பேரூர், சாந்தலிங்க சுவாமிகள் திருமடம், திருப்போரூர் சிதம்பர சுவாமிகள் திருமடம், விருத்தாசலம் குமாரதேவர் திருமடம் முதலியவை சிறப்பு மிக்க வீரசைவத் திருமடங்களாக இன்றும் விளங்கி வருகின்றன.

வீர சைவம்—பெயர்க் காரணம் :

புலால் உண்ணாதவர்கள் சைவர்கள் என்ற கருத்தே பரவி வரும் இக்காலத்தில் சமரசம் என்ற போர்வையில் சமய உண்மைகள் பரவ வேண்டும் என எண்ணும் இக் காலத்தில் 'வீர சைவம்' என்ற சொல்லே கேட்பவர்களுக்கு ஒரு வெறுப்பைத் தருகிறது. தத்துவ அமைப்புக் கிணங்க, வீர சைவத்துக்குச் சக்தி விசிஷ்டாத் வைதம், விசேஷாத்வைதம் போன்ற பல பெயர்கள் இருக்குமேனும் 'வீரம்' என்ற அடை மொழியைச் சைவம் என்ற சொல்லோடு இணைத்து வழங்குவதே பெரும்பான்மை. இலிங்கத்தைக் கழுத்தில் தரித்திருப்பதால் வீர சைவர்களுக்கு 'இலிங்காயதர்கள்' என்ற பெயரும் உண்டு. தமிழகத்திற் சில இடங்களிற் பண்டாரங்கள் என்றும், மலையாளப் பகுதி களில் 'தேவர்' என்றும் வீர சைவர்கள் அழைக் கப்படுகின்றார்கள். 'ஐயர்' என்ற சொல்லைத் தம் பெயரோடு இணைத்துக் கொள்வது வீர சைவர்களுக்கு உண்டு. சைவத்தோடு வீரம் இணைவானேன்?

1. உலகொடுபட்ட வீரம், உலகிறந்த வீரம் என வீரம் இருவகை. போர் முதலிய வற்றிற் காட்டும் வீரம் உலகொடுபட்ட வீரம். பரம்பொருள் ஒன்று உண்டு என்று கொண்டு அப்பரம்பொருளைத் தவிர வேறு எதற்கும் ஆளாகாத வீரம் உலகிறந்த வீரம். இது ஒருவகைக் கற்புநெறி. கணவனைத் தவிர மற்றெவரையும் ஏறெடுத்துப் பாராத மனத் தாண்மையே வீரம். உலகனைத்தும் தோன்று வதற்கும் தோன்றியவாறே ஒடுங்குவதற்கும் மூலமாக உள்ள இலிங்கமெனும் பரம் பொருளைத் தவிர அவ்விலிங்கத்தின் பேதங் களாக வரும் சோமாஸ்கந்தர், அர்த்த நாரீஸ்வரர் போன்ற மூர்த்தங்களைக் கூட வணங்காத கற்புத்தன்மை. குரு, இலிங்க, சங்கமத்தைத் தவிர வேறு யாரையும் ஏறெடுத்துப் பார்க்காத வீரம். முருக வணக்கம் செய்யும் வீர சைவர்கள் முருகனைச்

சங்கமர்களில் ஒருவராகக் கொண்டே வழிபடுவர். இத்தகைய வீரத்தை மேற்கொண்டதால் 'வீர சைவம்' எனப் பெற்றது.

2. இறைவழிபாட்டில் வணிகமுறையை எதிர்த்த வீரம் உடையவராதலின் வீரசைவர் எனப்பட்டனர் என்பது இரண்டாவது கருத்து. பயன் விரும்பிச் செய்கிற எத்தகைய வழிபாட்டையும் வீரசைவர் ஏற்பதில்லை. கூடும் அன்பிற் கும்பிடலேயன்றி வீடும் வேண்டா **விறலினராய்** விளங்கும் அவர் உடலில் வந்துற்ற நோய் நீக்கத்துக்காகவோ, வறுமை முதலியன போகவேண்டும் என்பதற்காகவோ திருக்குளத்தில் மூழ்குதல், சிவனுக்கு அபிஷேகம் செய்தல் போன்ற வழிபாடுகளை அவர்கள் செய்வதில்லை. 'பாலும், தெளிதேனும், பாகும், பருப்பும் இவை நாலும் நான் தருவேன், நீ எனக்குச் சங்கத் தமிழ் மூன்றும் தா' என்பது போன்ற வாக்கியத்தை அறவே வெறுக்கும் வீரநெறியமைந்தவர்கள். இறைவழிபாடு என்பது செய்நன்றிக் கடன் என்று கொள்ளுபவர்கள்.

3. மூன்றாவதாக வேறு ஒரு காரணம் காட்டப் பெறுகிறது. சதாசிவத்தில் கிழக்கு நோக்கிய ஈசானமுகம் தம்மை வழிபடுவர்களுக்கு இவ்வுலகப் பயன்களைத் தரவல்லது. வீரசைவர்கள் ஈசானமுக வழிபாட்டை மறுத்தார்கள். இலிங்கத்தோடு ஐக்கியமாகும் ஞானம் ஒன்றையே பொருளாகக் கொண்டு, மேற்கு நோக்கிய சத்யோஜாத நாதமுக வழிபாட்டையே மேற்கொள்வர். இலிங்கத்தோடு ஐக்கியமாகும் ஞானம் ஒன்றைத் தவிர வேறு எல்லாவற்றையும் வெறுத்த வீரராதலின் வீரசைவர் எனப்பட்டனர். திருவானைக்கா, மயிலைக்காபாலி, புள்ளிருக்கு வேளூர் போன்ற திருத்தலங்களில் அமைந்த இலிங்கங்கள் வீரசைவர்கள் வழிபாட்டுக்குரியவை என்பது பொதுக் கருத்து.

மேலே குறிப்பிடப் பெற்ற மூன்றனுள் சமய நெறியில் வணிகமுறையை வெறுத்து ஒதுக்கிய வழிபாட்டு நெறியானது சிறந்த வீரநெறியே. இறைவனுக்குத் தேங்காய் உடைத்து நிவேதனம் செய்தே எல்லாவற்றையும் பெற்றுவிடலாம் என்ற வணிக முறையானது சமய வளர்ச்சிக்குத் தடையாகும் என நினைத்து எதிர்த்தவர்கள் வீரசைவர்கள் என்பதை எண்ணும்போது இறைவழிபாட்டில் அவர்களுக்கு இருந்த வீரவுணர்ச்சியை யாரும் போற்றாமலிருக்க முடியாது. சோமவார விரதம் போன்ற விரதங்களும் பயன் கருதியவைகளே யாதலின் அவைகளையும் வீரசைவர்கள் ஏற்பது இல்லை.

வீரசைவத் தத்துவ அமைப்பு.

வீரசைவம் ஆகமச் சைவமே. கி. பி. 12 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மெய்கண்ட தேவ நாயனரர் சைவசித்தாந்த தத்துவங்களை வரையறை செய்தருளியமை போன்றே வீரசைவ தத்துவ வரையறைகளும் கி. பி. 12 ஆம் நூற்றாண்டில் பசவேசரால் மைசூர் நாட்டில் செய்யப் பெற்றது. தமிழகத்து வீரசைவ நெறிக்கும் மைசூர் வீரசைவ நெறிக்கும் சிற்சில வேறுபாடுகள் உள்ள போதிலும் சில அடிப்படை உண்மைகளை மட்டும் இங்கே காணலாம்.

'அறுவகைநெறி' என வீரசைவம் தன் தத்துவத்தை வரையறை செய்கிறது. ஷட்ஸ்தலம், ஷடுத்தலம் என்ற வடமொழிச் சொற்கள் பயன்படுத்தப் பெறுகின்றன.

நெருப்பிற் சூடுபோலப் பிரிப்பறநின்ற சக்தியோடு கூடிய சிவமே பரம்பொருள். இப்பரம் பொருளை நிரஞ்சன சூனிய நிஷ்களலிங்கம் என வரையறை செய்கிறது வீரசைவம். எல்லாப் பிரபஞ்சங்களும் தோன்றுவதற்கும் ஒடுங்குவதற்கும் இடமாக இருப்பதால் அதனைப் பரசிவத்தலம் என்று கூறும். தலம்—இடம். 'சொல்லும் இடம் அன்று சொல்லப் புகும் இடம்' என்ற திருவுந்தியார்த் தொடரையும் இங்கே இணைத்துக் காணலாம்.

ஒன்றாய் நின்ற இப்பரசிவத்தலம் தன்னொடு பிரிப்பற நின்ற சக்தியின் ஆற்றலால் இரண்டாகப் பிரிவு கொள்கிறது. இரண்டாகப் பிரிந்து நின்ற பரசிவத்தலத்தின் ஒரு கூறு இலிங்கம் என்றும், மற்றைக்கூறு அங்கம் என்றும் பெயர் பெறுகிறது. இலிங்கம் இறை; அங்கமே உயிர். இலிங்கமாம் பிரிப்பற நின்ற சக்தி என்பதே பெயர். அங்கமாம் பிரிப்பில் பிரிப்பற நின்ற சக்திக்குப் பக்தி என்பது பெயர். இலிங்க சக்தி உலகத்தோற்ற ஒடுக்க முறைகளுக்குக் காரணமாக இருந்து இலிங்கத்தை அங்கத்தோடு (இறையை உயிரோடு) இணைக்கப் பாடுபடுகிறது. அங்கத்தில்

அமைந்த பக்தி சக்தியும் அங்கத்தை இலிங்கத்தோடு இணைக்கப் பாடுபடுகிறது. இலிங்க சக்தி இறங்குமுக சக்தியாகவும், அங்கசக்தியாகிய பக்தி ஏறுமுக சக்தியாகவும் தொழிற்படுகின்றன.

இலிங்கமும் இலிங்க சக்தியும் ஆறுவகையாகப் பிரிந்து நிற்கின்றன. ஆறுவகையாகப் பிரிந்து நின்ற இலிங்கத்தோடு அங்கமும் ஆறு வகைப் படிநெறிகளில் உயர்ந்து ஐக்கியம் கொள்ளுகின்றது. பிரிந்தவர் கூடின்ாற் பேசவும் வேண்டுமோ? என்பதுதான் ஐக்கிய நிலை. அதற்கும் மேல் உள்ள அனுபவ நிலையும் ஒன்றுண்டு.

இறைவன் வேறு, உயிர்கள் வேறு எனக் கொள்ளும் சைவ சித்தாந்தத்தோடு மாறுபடும் தன்மையுடைய வீரசைவம் பிரமமும் ஆன்மாவும் ஒன்றெனக் கொள்ளும் ஏகான்மவாதத்தோடும் மாறுபடுகிறது பேதம், அபேதம், பேதாபேதம் என்ற மூவகை நிலைகளில் சைவ சித்தாந்தத்தைப் போன்றே பேதாபேதத்தை மேற்கொள்ளும் வீரசைவம் அப்பேதாபேத அனுபவத்தை வேறு வகையாக விளக்கம் செய்கிறது. அங்கமும் இலிங்கமும் இணைந்து நின்ற நிலை **'அங்க இலிங்க ஐக்கியம்'** அதற்கு மேல் நிலையில் உயிர்கள் பெறும் அனுபவநிலையை **'இலிங்காங்க சாமரஸ்யம்'** என்று வீரசைவம் விளங்கக் கூறுகிறது.

உயிர்கள் பல என்பதை வீரசைவம் ஒப்புகிறது. சார்ந்துள்ள மலத்தின் அடிப்படையில் விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என உயிர்களை மூவகைப் படுத்துகிறது சைவ சிந்தாந்தம். ஆனால் பக்குவ முதிர்ச்சிக்கேற்ப உயிர்கள் உயிர், ஆன்மா, அங்கம் என்ற மூவகையாக நிற்கின்றன என்று வீரசைவம் கூறுகிறது. இம்மூவகை நிலைகளுக்காக வீரசைவம் மூவகையான உலகப்படைப்பு முறையைத் தருக்க முறைப்படி அமைத்துக் காட்டுகிறது.

அடையும் நெறி — சாதனம் :

வீரசைவத் தத்துவ அமைப்பை உணர்வதால் வரும் ஞானம் 'ஷட்ஸ்தலஞானம்' எனப் பெறும். ஷட்ஸ்தலத் தத்துவ அடிப்படையில் சாதனம் – அடையும் நெறி வகுக்கப் பெறுகிறது. அடையும் நெறி இருவகைப்படும். சமயக்காப்பு நெறி, சமுதாயக் காப்பு நெறி என அவ்விரு நெறிகளையுங் கொள்ளலாம். அன்றி, தனிமனிதன் தன்னைக் காக்கும் அக நெறி என்றும் அவனே சமுதாயத்தோடு இணைத்துத் தன்னைக் காத்துக் கொள்ளும் புறநெறி என்றும் அவ்விருவகை நெறிகளையும் அமைத்துக் கொள்ளலாம். அவ்விருவகை நெறிகளையும் முறையே **'அட்டாவரணம் பஞ்சாசாரம்'** என வீரசைவம் கூறும்.

(அ) அட்டாவரணம் :

அட்டம் – எட்டு; ஆவரணம் – கோட்டை. அரசனுக்குத் தீமை நேராத வண்ணம் காக்கும் கோட்டைகளைப்போல உயிர்களைக் கோட்டைகளாக இருந்து காக்கும் எட்டினை வீரசைவம் உயிர்களுக்குரிய அகக் காவலாகக் கூறுகிறது. அவை குரு, இலிங்கம், சங்கமம், விபூதி, அக்கமணி, மந்திரம், பாதோதகம், பிரசாதம் என்பன, இவ்வெட்டுக் கோட்டைகளையும் பழுதுறாமற் காத்து, அவற்றோடு இணைந்து வாழ்ந்தால் தான் ஷட்ஸ்தல ஞானம் பெறும் உரிமையும் தகுதியும் அவனுக்கு உண்டாகும். இங்கே கூறப்பெறும் எட்டும் சைவசமயத்தின் ஏனைப் பிரிவுகளுக்கும் உடன்பாடேயாயினும் வீரசைவம் சிற்சில மாறுபாடுகளோடு விளக்கங் கூறுகிறது.

1. **குரு :** அறியாமையை அழிக்கும் ஆற்றல் உள்ளவனே குரு. இறைவனே குருவாக வந்து உயிர்களை ஈடேற்றுவான் என்பது வீரசைவத்துக்கும் சைவசித்தாந்தத்துக்கும் ஒத்த கொள்கையே. தீட்சாகுரு, இட்சாகுரு, ஞானகுரு என மூன்றாகப் பிரிந்து நின்று உயிர்களை ஞானநெறியில் —ஷட்ஸ்தலப் பிரமஞான நெறியில் ஈடுபடுத்தும் குருவை 'ஞானத்தாய்' என்று வீரசைவம் இயம்புகிறது. தீட்சை முறையிலும் வீரசைவம் ஏனைச் சைவசமயப் பிரிவுகளோடு வேறுபடுகின்றது.

2. **இலிங்கம் :** இலிங்க வழிபாடு வீரசைவம் கொண்ட சிறப்பு நெறி. மொஹஞ்சதாரோ, ஹரப்பா நகரப் புதைபொருளாராய்ச்சியால் வெளிப்படும் மிக முற்பட்ட கால நாகரிகம் முதலாக, புராணம் மற்றும் கோயிலமைப்பு ஈறாக உள்ள தொன்மைச் சமய வழிபாட்டு முறையை நோக்குவோமாயின் இலிங்க வழிபாடே சிறந்திருந்தமை தெளியலாம்.

இவ்வாராய்ச்சியை விரிவஞ்சி விடுக்க வேண்டிய தாகிறது. உலகம் என்பது நிலம், நீர், தீ, காற்று, வான் என்னும் ஐம்பெரும் பருப் பொருள்களின் கூட்டமைப்பே. இவற்றோடு உயிரும் இணைந்தால்தான் உலகம். இவ்வறு வகைப் பொருளிலும் ஒளிவடிவாய் எழுந்தருளி யிருக்கும் இறையம்சமே இலிங்கம். தண்ணீரில் ஒளி வடிவாய் எழுந்தருளியிருக்கும் இறையம் சத்தை உணர்த்துவதே **திருவானைக்கா**. இங்கே உள்ள இலிங்கத்தை **அப்புலிங்கம்** என்பர். இவ்வாறே மக்களுடம்பிலும் ஆறு இடங்களில் இலிங்கம் - ஒளிவடிவாய் இறையம் சம் அமைந்துள்ளது. உயிரில் அதன் இயல் பாகிய சீவகலையும், இறையம்சம் எனப் பெறும் சிவகலையும் இணைந்துள்ளன. குரு வானவர் தன் சீடனுடைய உயிரில் விளங்கும் சீவகலைக்கும் சிவகலைக்கும் உள்ள இணைப்பை எடுத்துக் காட்டி, அவற்றைத் தம் சக்தியால் வெளிப்பட்டு வருமாறு செய்து, அச்சீவசிவகலைகளை, அச்சீடனின் உடம்பில் ஆறு இடங்களில் விளங்கும் இலிங்கங்களோடு ஒளிவடிவாய் இறையம்சங்களோடு முறை யாகப் பொருந்தச் செய்து, பின் அச் சீவசிவ கலைகளை, இஷ்டலிங்கமாக அமைத்து அச் சீடன் கரங்களில் கொடுக்கிறார். குருவால் அளிக்கப்பெற்று, நாளும் பூசனைக்குரியதாய், மார்பில் தரித்துக் கொள்ளப் பெறுவதாய் அமைந்த அந்த இலிங்கம் வேறொன்று மன்று, ஏற்றுக் கொண்ட சீடனுடைய உயிர்க்கலை யும் அத்னோடு இணைந்து நின்ற சிவகலை யுமே. இஷ்டி - பார்க்கப் பெறுவது. உயிரை யுங் காணாது, உயிரின் உள்ளே அமைந்திருக் கும் சீவசிவகலைகளின் இணைப்பையும் அறி யாது விளங்கும் சீடனுக்கு அவனுடைய உயிரிற் கலந்துள்ள சீவ சிவகலைகளையே எடுத்துக் கொண்டு வந்து கையிலளித்து அவனால் பார்க்கப்படுவதாகக் குருவானவர் அமைத்துக் கொடுக்க, அவனால் பார்க்கப் பெறும் இலிங்கமாதலின் இஷ்டலிங்கம் எனப் பெயர் பெற்றது. அதுவே இஷ்டலிங்கம்; இனி, இஷ்டலிங்கம் என்பது சீடன் விரும்பி ஏற்றுக் கொள்ளும் அறிவு வரப்பெறாத காலத்திலேயே இறையானது உயிர்களின்மேற் கருணை கொண்டு வந்து அமர்ந்த இலிங்கம் என்ற பொருளையும் தரும். தானே இஷ்டப் பட்டு - விரும்பி வந்து கையகத்தமர்ந்த இலிங் கம் இஷ்டலிங்கம்.

'' தானே உவந்து என் கரதலத்து மேவா
அமர்ந்த
மாமணி ''

என விளக்கிக் காட்டினார்கள் சிவப்பிரகாச சுவாமிகள். இங்கே தான் வீரசைவம் சைவ சித்தாந்தம் முதலியவற்றோடு பெரிதும் மாறு படுகின்றது. பரம்பொருளின் அருவுருவ வழி பாட்டுக்கு உரிய மூர்த்தமான இலிங்கத்தைக் கொள்வது சைவசித்தாந்தம். வீரசைவம் உருவவழிபாட்டை ஒத்துக் கொள்வதில்லை. வீரசைவன் தன் உயிரில் அமைந்துள்ள சிவசீவ கலைகளையே பார்க்கிறான். கோயில்களில் உள்ள மூர்த்திகளுக்கு அஷ்டபந்தன மருந்து அமைக்கப்பெறுவது போல இஷ்டலிங்கத்திற் கும் உண்டு. பக்தி என்னும் அஞ்சனமே— மருந்தே அஷ்டபந்தனம். பக்தியால் சிவசீவ கலைகளின் இணைப்பு அமைந்திருக்கிறது என் பதை உணர்த்துவதே இஷ்டலிங்கம். நாள் தோறும் வீரசைவன் இஷ்டலிங்கத்தின் சத் யோஜாத முகத்தில், அகங்காரம் ஆசை முதலியவைகளை அபிஷேகப் பொருளாக ஆக்கி அபிஷேகம் செய்து, பக்தி என்னும் கண் கொண்டு இஷ்டலிங்கத்தையே பார்த்துப் பாவனை செய்வான். கர்மாக்களைக் குறை வறச் செய்தால் வீடுபேறு சித்திக்கும் என்று கூறும் சமயங்களும் உண்டு; ஞானமே மோக்ஷ சாதனம் எனக் கூறும் சமயங்களும் உண்டு. ஞானமும் கர்மமும் ஆகிய இரண்டுமே தேவை எனக் கொள்வனவும் உள. ஆனால் ஞானம், கர்மம், பாவனை என்ற மூன்றன் இணைப் பினாலேயே வீடுபேறு எய்தப் பெறும் என்று வலியுறுத்துவது வீரசைவம்.

கர்ப்ப லிங்கதாரணம், அங்கலிங்கதாரணம் என இலிங்கந்தரிக்கும் முறை இரண்டு. குழந்தையானது தாயின் வயிற்றில் இருக்கும் போதே அக்குழந்தைக்கெனத் தாயின் கழுத்தில் ஒரு இலிங்கத்தைத் தரிப்பது கர்ப்ப லிங்கதாரணம். குழந்தை பிறந்தவுடனேயே தாயின் கழுத்தில் உள்ள இலிங்கத்தை எடுத்துத் தரித்துவிடுவார்கள். குழந்தை வளர்ந்து சில ஆண்டுகள் கழிந்தபின் தீட்சை முறைப்படி இலிங்கதாரணம் செய்வது அங்கலிங்க தாரணம். இஷ்டலிங்கம் தவறுதல் கூடாது. பின்னப்பட்ட காலத்து வேறு இலிங்கத்தைக் கொள்ளலும் கூடாது. ஏனெனின் சீடனுடைய உயிரே அதுவாக இருத்தலின்.

சைவசித்தாந்தத்தில் சமய தீட்சை முதலிய தீட்சை முறைகளும் சிவபூசையும் பெண்களுக்கு உரியவனவாகக் கூறப்பெறவில்லை. வீர சைவத்தில் பெண்களுக்கும் இலிங்கதாரணம் உண்டு. வீரசைவம் தத்துவமுறையிலும் சமய நெறியிலும் ஆடவர்களுக்கு வழங்கிய அத்துணை உரிமைகளையும் பெண்மைக்கும் வழங்கியிருக்கிறது.

3. **சங்கமம் :** சங்கமம் – கலப்பு. உயிரில் சிவம் வந்து கலந்த தன்மையை உலகினர்க்கு உணர்த்துபவர்களே சங்கமர்கள். இவர்களைச் சீவன் முத்தர்கள் எனலாம். பல்வகை அற்புதங் களைச் செய்து காட்டி உயிரில் இறைவன் கலந்து விளங்குவதைக் காட்சியளவையால் விளக்கிக் கொண்டிருப்பவர்களே இவர்கள்.

வீரசைவ முறைப்படி ஒரு சீடன் குரு, இலிங்க, சங்கமம் ஆகிய மூன்றையும் ஒரு பரசிவத் தலத்தின் மூன்று நிலைகள் எனக் கொண்டு போற்றுதல் வேண்டும். குரு, இலிங்க, சங்கமங்களின் கூட்டுறவால் ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மல ஒழிப்பை முறையுறச் செய்யவேண்டும்.

4. **திருநீறு.**

5. **அக்கமணி.**

6. **மந்திரம்** – திருவைந்தெழுத்து

இம்மூன்றும் சைவமாம் சமயம் சார்ந்தோர் அனைவர்க்கும் பொது. ஆனால் வீரசைவம் தனி விளக்கம் காண்கிறது. பூதவுடம்பை ஞானவுடம்பாக மாற்றி ஞானவுடம்பை அருளு டம்பாக மாற்றும் பணியை முறையே இம் மூன்றும் செய்கின்றன எனக் கொள்ளுவதே வீரசைவம். பிற்காலத்தே சாகாக்கலை எனச் சுட்டி, புன்புலால் யாக்கையைப் பொன்னென மின்னும் ஒளியுடம்பாக – அழியாவுடம்பாக மாற்றிக் காட்டிய இராமலிங்கப் பெருந் தகைக்கு மூலமாக நின்றது வீரசைவ நெறியே. திருநீற்றை வெறும் சமயச் சின்னம் எனக் கருதாது பூத அணுக்களை ஒளியணுக்களாக மாற்றுவதற்குரிய சாதனமே திருநீறு எனக் கண்டு, அதற்கு விஞ்ஞான வழியில் விளக்கம் கண்டது வீரசைவம். அதனாலேயே,

''சாதனத்துள் எல்லாம் மூந்து திருநீறு''

எனக் கூறினார் சிவப்பிரகாச அடிகளார்.

திருவைந்தெழுத்து ஓதுதலிலும் நம, சிவ, ஆய என மூன்றாகப் பிரித்துத் தத்வமசிப் பொருளை விளக்கியது வீரசைவம்.

7. **பாதோதகம் :** பாத உதகம் – திருவடி நன்னீர். குரு, சங்கமம் ஆகியோர்களின் திருவடிகளுக்கு அபிஷேகம் செய்த நீரையும் பிரசாதமாகக் கொள்ளுதல். இது பத்து வகைப்படும். இந்த நன்னீரைக் கொண்டே சமையல் முதலியன செய்யவேண்டும் என்பதும் விதி.

8. **பிரசாதம் :** குரு, இலிங்க, சங்கமங் களுக்கு நிவேதனம் செய்த பொருள்களைப் பிரசாதமாகக் கொள்ளவேண்டும். வினைப் பயனை எவ்வாறு நுகரவேண்டும் என்பதற்குக் கீதை முதலாகப் பல நூல்கள் விளக்கங் கூறின. அவைகள் வெளியிட்ட கருத்துக்கள் பலவற் றுக்கும் மாறாக, 'பிரசாதம்' என்னும் கொள் கையின் மூலம் விளக்கங் கூறியது வீரசைவம். மனோதத்துவக் கொள்கையை அடிப்படை யாகக் கொண்டு நிறுவப் பெற்றதே பிரசாதக் கொள்கை.

(ஆ) பஞ்சாசாரம் – ஐவகை ஒழுக்கம்.

இருவகைப்பட்ட சாதனங்களுள் அட்டா வரணம் முற்கூறப்பெற்றது. எஞ்சியது பஞ்சா சாரம். வீரசைவன் சமுதாயத்தோடு தன்னை இணைத்துத் தன்னையும் சமுதாயத்தையும் இணைத்துக் காக்க வகுக்கப் பெறும் நெறியே பஞ்சாசாரம். பஞ்சாசாரத்தைக் கடைப் பிடிக்காத எந்த ஒரு வீரசைவனும் அட்டா வரண நெறியிலோ, ஷட்ஸ்தல ஞானத்திலோ வல்லவன் ஆக முடியாது. மக்கள் தொண்டே மகேசன் தொண்டு, என்ற அடிப்படையில் வகுக்கப் பெற்ற நெறியே **பஞ்சாசாரம்.**

1. **இலிங்காசாரம் :** இஷ்டலிங்கத்தைத் தவிர வேறு எதையும் உயர்வெனக் கருதா திருத்தலோடு, இஷ்டலிங்கத்திற்கு நிவேதனம் செய்யாத எந்த ஒன்றையும் ஏற்றுக் கொள்ளா திருத்தல். உலகியலில் கணவனும் மனைவியும் இணைந்தாற்றும் இல்லற நெறியில் மனை

விக்குச் சில உரிமைகள் உண்டு. இலிங்கத்தைப் பதியெனக் கொண்ட வீரசைவன் தன்னை ஒரு மனைவியென நினைத்து இஷ்டலிங்கமாகிய பதிக்கு அனைத்துக் கடமைகளையும் ஆற்ற வல்லவன். 'நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ இதற்கு நாயகமே' என்றாற் போல எத்தகைய உரிமைகளையும் விரும்பாமல் இஷ்டலிங்கத்தையே பதியென நினைத்துக் கடனாற்றல்வேண்டும். இலிங்காசாரம் பெண்களுக்கு அமையும் போது அவர்கள் இஷ்டலிங்கத்தைச் சிறப்பாகக் கொள்வதா? கணவனைச் சிறப்பாகக் கொள்வதா? என்ற ஐயம் எழுவது இயற்கை. இதற்கு,

''எம் கொங்கை நின் அன்பர் அல்லார்
தோள் சேரற்க
எம் கை உனக்கல்லாது எப்பணியும்
செய்யற்க''

என்ற திருவெம்பாவைப் பாடல் வரிகளிற் கண்ட வேறுபாடுகளை உணர்ந்து ஐயமறுத்தல் வேண்டும்.

2. ***சதாசாரம் :*** வீரசைவன் அறவாழ்க்கையில் வழுவாது நிற்றலோடு நல்வழியில் உழைத்துப் பொருளீட்டுதல் வேண்டும். உழைப்பின்றி வாழும் எவனும் வீரசைவனாகான். சாதி, மத வேறுபாடில்லாமல் அனைத்துயிர்களையும் ஒன்றெனக் கண்டு அவைகளின் முன்னேற்றத்திற்காக உழைத்தல் வேண்டும். உழைப்பால் வந்த ஊதியத்தின் ஒரு பகுதியை மட்டுமே துய்த்து, மற்றவைகளைச் சமுதாயத் தொண்டுக்கெனப் பயன்படுத்தல் வேண்டும்.

3. ***சிவாசாரம் :*** வீரசைவன் ஏனையோரிடத்தும் அமைந்த சிவத்தைக் காணுதலும், சிவம் பெருக்கும் தொண்டில் ஈடுபடுதலும் வேண்டும். இலிங்கதாரணம் செய்தவர்களுக்குள்ளேயே உயர்வு தாழ்வு கருதாமைவேண்டும். வீரசைவன் தன் இனத்துக்குள்ளேயே வேறுபாடு கருதாமையோடு அனைத்து மக்களிடத்தும் சிவம் இருக்கும் தன்மையை உணர்ந்து அனைத்து மக்களும் முன்னேறப் பாகுபாடின்றித் தொண்டாற்றுதல் வேண்டும். தொண்டின் மூலம் சகோதர ஒருமைக் காட்சியை வாழ்த்தல் வேண்டும்.

4. ***பிருத்யாசாரம் :*** விலங்கு முதல் தாவரம் வரை உள்ள உயிர்களிடத்தில் அன்பு கொண்டு சீவகருணையை வளர்க்க வேண்டும். வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடிக் கலங்கும் மனநிலை அமைந்த ஒழுக்கமே பிருத்தியாசாரம்.

5. ***கணாசாரம் :*** சிவம் என்னும் செம்பொருள் விளங்குவதற்குத் தடையாக உள்ள எல்லா ஒழுக்கங்களையும் நீக்கி ஒழுகுதல் வேண்டும். சிவம் விளங்கத் தடை செய்த வரைத் தந்தையென்றுங் கருதாது காலைத் தடிந்த விசார சருமரைப் போன்ற ஒழுக்கத்தை மேற்கொள்ளுதல் வேண்டும். முன்னே கூறிய நான்கும் மெல்வினை; கணாசாரம் வல்வினை. சிவ அபராதத்தைத் தண்டித்தல் இக் கணாசாரத்தில் அடங்கும். இறத்தலால் வருந் தீட்டு, பெண்கள் மாத விலக்கினால் வருந் தீட்டு, எச்சில் தீட்டு முதலிவைகளை எல்லாம் வெறுத்தல் வேண்டும். அவைகளைத் தீட்டு எனக் கருதுதல் சிவ அபராதத்துடன் ஒத்தது.

மேலே குறிப்பிடப்பெற்ற பஞ்சாசாரம், அட்டாவரணம் ஆகிய நெறிகளில் நின்று சடுத்தலப் பிரம்ம ஞானம் பெறுதலே சிவயோகம்.

பயன் : அங்க லிங்க ஐக்யம் என்ற நிலையை அடைந்து, அதன்மேல் உள்ள சூனியமாம் ஆதனத்தில் அமர்ந்து, பேரின்பம் துய்த்தலே பயன். 'மானுட ராக்கை வடிவு சிவலிங்கம், என்ற திருமூலர் வாக்கினுக்கேற்ப இவ்வுடம்பை அழியாத உடம்பாக்கி, இலிங்கமாக்குதலே பயன். இலிங்கமாம் நெறிபெற்ற உடல் ஏனையோர் உடல்போல் இவ்வுலகில் கீழே விழாது, ஐக்யத்தை மட்டுமே முடிந்த முடிவு எனக் கொள்கிறது, என்று கொண்டு வீரசைவத்தை 'ஐக்கிய வாதசைவம்' என்று கொள்ளுவோருமுளர். வீரசைவம் நிரதிசய இன்பப் பேற்றை ஒத்துக் கொள்ளுகிறது.

முடிப்புரை :

ஆகமச் சைவமாகிய வீரசைவம் திருமூலர் காலத்திலேயே தமிழகத்தில் சிறப்புற்று விளங்கிய ஒன்றாகும். வழிபாட்டுக் கொள்கைகளில் சடங்குமுறை, வணிகமுறைகளை, வெறுத்து, நன்றிக் கடனென அதனை நடாத்தி, ஷடுத்தலம், அட்டாவரணம், பஞ்சாசாரம் ஆகிய மூன்றும் இணைந்த சிவயோகத்தில் தலை நின்று ஞானம் கர்மம் பாவனை என்ற மூன்றும் இணைய நிற்பதால் மும்மலக்கட்டு நீங்க, ஐக்யமாம் நிலைபெற்று, அப்பாற் சென்று, சூனிய சிங்காதனத்தமர்ந்து நிரதிசய இன்பப் பேற்றை அடைய வழிவகுப்பதே வீரசைவம். சமுதாய முன்னேற்றத்தையும் பெண்கள் முன்னேற்றத்தையும் முக்கிய நெறிகளாகக் கொண்ட சாதன முறைகளாற் சிறப்புற்று விளங்குவதே வீர சைவம்.

உ

சிவமயம்

பாலறாவாயர் துணை

"சிவதீட்சையின் அவசியமும் பயனும்"

'சைவசித்தாந்த சரபம்'
சிவஸ்ரீ தத்புருஷதேசிகர், தேவகோட்டை.

நிலவுலகத்திலுள்ள கடவுட் கொள்கையுடைய எல்லாச் சமயங்களும் கடவுளை அடைவதனாலேயே உயிர்கள் பேரின்பத்தைப் பெறுகின்றனவென்றும், அப் பேற்றிற்குரிய நெறிமுறைகள் இவையிவை என்றும், தத்தம் தகுதிகளுக்கேற்ப வெவ்வேறு வகைகளில் கூறுகின்றன. கடவுளுண்மை, உயிருண்மை, உயிர்கள் கடவுளை யடைவதற்குத் தடையாயிருக்கின்ற மலவுண்மை, அவற்றின் இயல்பு ஆகியவற்றை அளவை இயைபுடன் புலப்படுத்தி, உயிர்களின் உண்மையான வீடுபேற்றை உணர்த்துவது சித்தாந்த சைவ சமயம் ஒன்றேயாகும்.

கடவுள் இயல்பாகவே பாசங்களின் நீங்கியவர். அதனாலேயே அவர் பாசபந்தத்தால் உழலும் உயிர்களை உய்திக்குக் கொண்டு வரும் தகுதியுடையவரா யிருக்கிறார். உயிர்கள், அனாதி காலத்திலிருந்தே பாசபந்தங்களை உடையவைகளாகி, அதனால் அறியாமை, பிறப்பிறப்பின் பாற்படுதல், இன்ப துன்ப நுகர்ச்சி, முதலியவைகளை அடைகின்றன. கடவுள் உயிர்களுக்கு வரும் கேடுகளை நீக்குவது, அவர் பயன் கருதியதன்று, அவரது பேரருளுடைமையே உயிர்களின் கேடு நீக்கத்துக்குக் காரணமாயிருக்கின்றது.

முதற்பெருங்கடவுளாகிய சிவபெருமான், உயிர்களைப் பிறவிப் பெருங்கடலிலிருந்து, கரையேற்றிப் பேரின்ப வாழ்வில் நிலைநிறுத்துதற்குச் செய்யும் ஒரேயொரு அருளிப்பாடு சிவதீட்சையாகும். தீட்சை பெறுவதற்குரிய பக்குவம் உண்டாவதற்காக இறைவன் உயிர்களுக்குச் செய்யும் உதவி, படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல் என்னும் நான்கு தொழில்களின் வழியாக நிகழும். அவர் செய்யும் இறுதித் தொழிலாகிய அருளலைத் 'தீட்சானுக்கிரகம்' என்று ஞான நூல்கள் கூறுகின்றன. படைத்தல் முதலிய நான்கு தொழில்களும், அருளலுக்கு ஆதாரமாகவே நிகழுகின்றவாதலின் அவற்றையும் அருளின் பாற்படுத்துதல் ஆன்றோர் திருவுள்ளக் குறிப்பாகும்.

படைத்தல் என்பது உயிர்களை உலக போகத்தில் இயைவதற்கு வசதியாக உடம்பையும் மனம் முதலிய உட்கருவிகளையும் உலகத்தையும் நுகர்ச்சிப் பொருள்களையும் தோன்றச் செய்தல். காத்தல் என்பது அங்ஙனம் தோன்றிய தனு, கரண, புவன, போகங்களில் உயிர்கள் உரிய காலம் வரை நிலைநிற்கும்படி செய்தல். அழித்தல் என்பது படைப்பில் தோன்றியவைகளை ஒடுங்க வைத்தல். மறைத்தல் என்பது உயிர்களை அவ்வவற்றின் கன்மங்களுக்கேற்பப் போக நுகர்ச்சியில் நிறுத்துதல். அருளல் என்பது தீட்சா கிருத்தியமாகிய அனுக்கிரகம்.

உயிர்கள் ஓரறிவுடைய தாவரப் பிறப்பிலிருந்து படிப்படியாக மேலேறி ஆறறிவுடைய மனிதப் பிறப்பையடையும். மனிதரும் முதற்கண் கடவுட் கொள்கையில்லாத நாத்திகராகவே வாழுவர். பின்னர், தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாகிப் புறப்புறச் சமயங்களாகிய சமணம், பௌத்தம் முதலியவற்றி

லும் புறச்சமயங்களாகிய ஏகான்மவாதம், பாஞ்சராத்ரம் முதலியவற்றிலும், அகப்புறச் சமயங்களாகிய பாசுபதம், ஐக்கியவாதம் முதலியவற்றிலும், அகச்சமயங்களாகிய பாடாணவாத சைவம், சிவாத்துவிதசைவம் முதலியவற்றிலும் நின்று அவ்வச் சமயங்களில் விதித்தபடி ஒழுகுவார்கள்.

புறப்புறச் சமயத்தார் வேதசிவாகமங்களை நிந்திக்கும் நாத்திகராயினும் தமக்கென நூலும் பிரமாணமும் கொண்டு நிற்பர். புறச் சமயத்தார் வேதத்தைப் பிரமாணமென்று பொதுவகையால் ஏற்றுக் கொண்டு வேதத்தில் தத்தம் கருத்துக்களுக்குப் பொருந்துவன வற்றை மட்டும் கைக்கொள்ளுபவரும், வேதத் துக்குப் பொருள் கொள்ளுதலில் மாறுபாடு டையவரும், வேதப் புறமாகிய நூல்களை யும் பிரமாணமாகக் கொள்ளுபவரும், சிவாகம நிந்தகரும் ஆவர். இனி, அகப்புறச் சமயத்தார் வேத சிவாகமங்களைப் பொது வகையால் பிரமாணமாகக் கொண்டு சிறப்பு வகையால் அவற்றிற்குப் புறமாகிய பாசுபதம் முதலிய நூல்களைப் பிரமாணமாகக் கொள்ளு பவரும் வேத சிவாகமங்களில் விலக்கப்பட்ட வற்றைக் கைக்கொள்ளுபவரும் ஆணவ மலத்தின் உண்மையை மறுப்பவரும் ஆவர். அகச் சமயத்தார் சித்தாந்த சைவரோ டொப்பப் பொருளுண்மையை ஏற்பாராயினும் அவற்றின் பொது இயல்பு, சிறப்பியல்புகளில் முரணி நிற்பர்.

உயிர்கள் முதலில் பசு புண்ணியங்களைச் செய்து சுவர்க்க போகம் முதலியவற்றை அனுபவித்து, அப்புண்ணிய மிகுதியால் சித்தாந்த சைவ நெறியைக் கடைப் பிடிக்கும் பேற்றைப் பெறுகின்றன. சைவத்தில் தவ நெறியைச் சரியை, கிரியை, யோகம், ஞானம் என வரிசைப் படுத்தி ஞான நூல்கள் கூறும். இவற்றில் யோகத்தின் முடிவில் கிடைக்கும் ஞானமே பரமுத்தியை நல்குவது. சைவசித் தாந்த நெறியிலன்றிப் பரமுக்தி சித்திக்காது.

சரியை என்பது சிவாலயத்துக்கும் சிவனடி யார்களுக்கும் ஆசார்யருக்கும் தொண்டு செய் தல். கிரியை என்பது சிவலிங்கப் பெருமானை அகத்தும், புறத்தும் பூசித்தல். யோகம் என்பது மனத்தை விடயங்களின் வழியே செல்லாவண்ணம் நிறுத்திச் சிவத்தைத் தியானித்துத் தியானிப்போனாகிய தானும், தியானமும், தோன்றாது, தியானப் போருளா கிய சிவம் ஒன்றே விளங்கப் பெறுதல். ஞானம் என்பது பதி, பசு, பாசமாகிய முப்பொருள் களின் இலக்கணங்களை உணர்த்தும் ஞான நூல்களைக் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து நிட்டை கூடி அதனால் வரும் சிவஞானத்தைப் பெற்றுப் பேரின்பத்தையடைதல். இவை நான் கும் முறையே ஒன்றுக்கொன்று காரணமா யிருந்து அரும்பு, மலர், காய், கனியை யொப்பன. சரியை, கிரியை, யோகம் ஆகிய மூவகைத் தவத்துக்கும் பயன்களாகக் கிடைப் பன சிவலோகத்தில் வாழும் சாலோகம், சிவ பெருமானுக்கு அருகில் வாழும் சாமீபம், சிவ் பெருமானது உருவத்தைப் பெறும் சாரூபம் என்பனவாம். இறுதிக் கண்ணதாகிய ஞானமே மீண்டு வாரா நெறியாகிய பேரின்பத்தை வழங்கும். அதனால் முன்னைய மூன்றையும் ''பதமுத்தி'' என்றும் பின்னையதைப் ''பர முத்தி'' என்றும் ஆன்றோர் கூறுவர்.

கடவுள் இயல்பாகவே பாசங்களின் நீங்கிய முத்தராதலால் அவருக்கு முத்திப்பேறு வேண்டுவதில்லை. மலங்கள் அறிவற்றவை யாதலால் அவைகளுக்கும் முத்தியின்பம் வேண்டப்படமாட்டாது. சத்தாகிய சிவத் துக்கும் அசத்தாகிய பாசத்துக்கும் இடைப் பட்டுச் சிற்றறிவுடையனவாயிருக்கும் உயிர் களே பாசத்திலிருந்து விடுபட்டு முத்தியைப் பெறும் உரிமையை உடையன. முத்திப் பேற்றுக்குள்ள சாதனம் ஞானாசாரியரை நிலைக்களமாகக் கொண்டு சிவபெருமான் செய்தருளும் சிவ தீட்சைப் பேறு ஒன்றேயாம். வேறு எந்த முயற்சியாலும் முத்திப்பேற்றைப் பெற முடியாது.

உயிர்கள் செய்யும் புண்ணியம், உயிர்களை நோக்கிச் செய்யப்படும் பசு புண்ணியம், கடவுளை நோக்கிச் செய்யப்படும் சிவ புண்ணி யம் என இரு வகைப்படும். பசு புண்ணியப் பலன்கள் அனைத்தும் அழியுந்தன்மை உடை யன. அழிவின்றி நிலை பேறுடையதாகிய உண்மை ஞானத்தைப் பசு புண்ணியத்தால் பெறமுடியாது. பொருளை அடிப்படையாகக்

கொண்டு நிகழுவது பசுபுண்ணியம். தவத்தை அடிப்படையாகக் கொண்டு நிகழுவது பதி புண்ணியம். இச் சிவ புண்ணியம் அதற்கு அங்கமாகிய சிவதீட்சையைப் பெற்றுச் சிவ பெருமானிடத்து வைத்த பக்தி காரணமாக நிகழ்த்தப் பெறவேண்டும்.

ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்று மலங்களையும் உடைய நம் போன்ற சகல வர்க்கத்து உயிர்களுக்கு நம்மனைய மனித வடிவு கொண்ட ஆசாரியரைச் சிவபெருமான் நிலைக்களமாகக் கொண்டு சிவதீட்சை செய்து உய்யக் கொள்ளுவார்.

வேதம் ஓதுவதிலும் வைதிக ஒழுக்கத்தை மேற்கொள்ளுவதிலும், உபநயனம் பெற்ற வர்க்கன்றிப் பார்ப்பன மரபில் பிறந்தமை காரணமாக மட்டும் அதிகாரம் வருவதில்லை. அதுபோல சைவாகமங்களை ஓதுவதிலும், சைவ ஒழுக்கத்தை மேற்கொள்ளுவதிலும் சிவதீட்சைப் பேறுடையார்க்கன்றிச் சைவ மரபிற் பிறந்தமையால் மட்டும் அதிகாரம் வரமாட்டாது.

சமயதீட்சை, விசேட தீட்சை, நிருவாண தீட்சை எனத் தீட்சை மூவகைப்படும். மனிதன் என்ற பொது நிலையிலிருந்து உயர்ந்து சைவன் என்ற சிறப்பு நிலையை ஒருவன் அடைவதற்கு உதவுவது சமய தீட்சையே ஆகும். சமய தீட்சை பெறாதவர்கள் செய்யும் சிவத் தொண்டுகள் நற்றொண்டு களாக மட்டும் இருந்து அதற்குரிய அளவிற் குறைந்த பயனை வழங்குமேயன்றிச் சிவத் தொண்டுக்குரிய சிறந்த பயனை வழங்க மாட்டாது. சமய தீட்சிதர் ஸ்ரீ பஞ்சாட்சர ஜெபமும் ஒரு வேளைச் சைவானுட்டானமும் செய்யும் உரிமை உடையவர்கள். இரண்டா வதாகிய விசேட தீட்சையில் சீடனது ஆன்மா வாகீசுவரர், வாகீசுவரியிடம் சேர்ந்து, சிவ குமாரனாக ஆகும்படி செய்து, ஆன்மார்த்த சிவ பூஜையும் இரண்டு வேளைச் சைவானுட் டானமும் செய்யும் உரிமையை ஆசாரியர் வழங்குவார். மூன்றாவதாகிய நிருவாண தீட்சையில் கன்மங்களுக்கு இடமாகிய மந்திரம், பதம், வன்னம், புவனம், தத்துவம், கலை ஆகிய ஆறு அத்துவாக்களையும் சோதித்துச் சுத்தி செய்து மலநீக்கமும் மெய் ஞானமும் பெறுவித்து, மூன்று வேளைச் சைவானுட்டானம், சிவபூஜை, அக்கினி காரியம், ஆகியவற்றைச் செய்யும் உரிமையை வழங்கித் தேகநீக்கத்தில் வீடுபேற்றை அடையும் வண்ணம் ஆசாரியர் செய்வார். தீட்சை என்ற சொல்லுக்குக் கெடுத்துக் கொடுத்தல் என்று பொருள். இது மல வலியைக் கெடுத்தலும், சிவஞானத்தைக் கொடுத்தலுமாகும்.

சிவஞான போத எட்டாஞ் சூத்திரத்தில் உயிர் சிவத்தையடைவதற்குரிய சாதனத்தை உணர்த்தும் போது, ''ஆன்மா முன்னே செய்து கொள்ளப்பட்ட புண்ணிய விசேடத் தால் இப்பொழுது தனக்கு அந்தரியாமியாய் உள்நின்று இதுகாறும் உணர்த்திவந்த பரம் பொருளே குருவடிவங் கொண்டு எழுந்தருளிச் சிவதீக்கை செய்து ஆன்மாவின் உண்மை யியல்பை அறிவுறுப்ப முதல்வனோடு ஆன்மா அனன்னியமாம் தன்மையில் நிலைபெற்று அம் முதல்வன் திருவடிகளை அணையும்'' என்று அருளப் பெறுகிறது.

ஆசாரியர் மலநீக்கம் செய்து ஞானம் வழங்கும் தீட்சைமுறை பலவிதமாகும். தனது அருட் பார்வையால் சீடனது சஞ்சித வினையை நீக்குவது நயனதீட்சை. திருக் கரங்களாலும் திருவடிகளாலும் தொட்டு மல வலிமையைக் கெடுப்பது பரிசதீட்சை. உப தேசத்தால் ஆட்கொள்ளுவது, வாசக தீட்சை. அருளுருவாக சீடனைப் பாவிப்பது மானஸ தீட்சை. ஞான நூல்களை உணர்த்துவது சாத்திர தீட்சை. யோகப் பயிற்சியில் நிறுத்துவது யோக தீட்சை. குண்டம் மண்டலம் முதலியவைகளைப் புறத்தில் அமைத்துச் செய்வது ஔத்திரி தீட்சை என்று சொல்லப் பெறும். குண்ட மண்டலமாகிய வற்றைப் புறத்திலமைத்துச் செய்வது, கிரியா வதியென்றும், அவற்றை அகத்திலமைத்துச் செய்வது ஞானவதியென்றும் நூல்கள் கூறு கின்றன. முட்டையின்மேல் அடைகிடந்து கோழி, குஞ்சுகளை வெளிப்படுத்துதல் பரிச தீட்சையையும், முட்டையை நினைத்து ஆமை குஞ்சுகளை வெளிப்படுத்துதல் மானஸ தீட்சையையும், முட்டையைப் பார்த்து மீன் குஞ்சுகளை வெளிப்படுத்துதல் நயன தீட்சை யையும் நினைவுபடுத்திக் கொண்டிருக் கின்றன.

சிவதீட்சை முதலிய எல்லாக் கிரியைகளும் சிவஞானங் கிடைப்பதற்கு நிமித்தமாகவே சைவத்தில் அமைந்துள்ளன. மனம், மொழி, மெய் ஆகிய மூன்று கரணங்களும் ஒன்ற நிகழு கின்ற கிரியைகளே உரிய பயனைத் தருவன வாம். அதனால் கிரியை முறையை அறியாத வர்கள், ஞானவதி செய்ய முற்படுவது அறியா மையின் பாற்பட்டதேயாம். ஒளியாலன்றி இருள் நீங்காதவாறு போலச் சிவஞானத் தாலன்றி ஆணவமலம் நீங்காது. நிருவாண தீட்சையில் நிகழ்ந்த அத்துவசுத்தி, அதுவரை நிரம்பிக் கிடந்த சஞ்சித கன்மத்தை நீக்கும். பிராரத்த கன்மம் உடம்புடன் ஒழியும். ஆகாமிய கன்மம், யான், எனது என்னும் உணர்வை ஞான எரியால் வெதுப்பி செம்மை நெறியில் நிற்க, வந்து பொருந்தாது. இங்ஙன மாகிய வினை நீக்கம் இருவினை ஒப்பை உண்டாக்க அது மலபரிபாகத்தைச் செய்ய அதனால் சத்தினி பாதமும் சிவப்பேறும் நிகழும்.

சிவதீட்சை பெற்றுச் சிவபெருமானை வழி படுபவர்களே உண்மைச் சைவர்களாவார்கள். உணவால் சைவமும், பிறப்பால் சைவமும், ஒருநாளும் வராது என்பதை நன்கு தெளிந்து அனைவரும் சிவதீட்சிதர்களாகி இன்பம் பெறுவார்களாக !

நலமேதழைக !

ஞானியார் சுவாமிகளின் பொன் மொழிகள்

1) அன்பும் அருளும் அறிவிற்கு அடையாளம். அறிவுள்ளவன் அன்பும் அருளும் உடையவன். சிற்றறிவு உடையது உயிர். பேரறிவு உடையது கடவுள். அன்பை வளர்க்க அறிவு வளரும். அறிவு வளரக் கடவுளை நெருங்குவோம்.

2) அறிவு வளர வளர இன்பம். ஆசை வளர வளர துன்பம். இன்பத்தை வளர்க்க வேண்டுபவன் அறிவை வெளியே பொறிகள் வழியே செலுத்தாமல், உள்ளே இருக்கும் கடவுளிடத்துச் செலுத்துதல் வேண்டும்.

தொகுப்பு — சித்தாந்தம்
1982 சூலை — பக்கம் 137

உ

சிவ சிவ

நம்பியாண்டார் நம்பிகளும் திருஞானசம்பந்தரும்

(செந்நெறிச் செல்வர், திரு. கு. வைத்தியநாதன்)

1) நம்பியாரூரர் அருளிய 'திருத்தொண்டத் தொகை'யை முதல் நூலாகக் கொண்டு, நம்பியாண்டார் நம்பிகள் 'திருத்தொண்டர் திருவந்தாதி' என்ற அரியதோர் நூலைச் செய்தார்கள். நம்பிகளின் நூலைத் தொடர்ந்து 'திருத்தொண்டர் புராணம்' எனப் போற்றப் பெறும் 'பெரிய புராணம்' என்னும் விரிவானதோர் உயரிய நூலைச் சேக்கிழார் அடிகள் செய்தார்கள்.

''நம்பியாண்டார் நம்பி புந்தியாரப் புகன்ற **வகை**யினால் வந்தவாறு வழாமல் இயம்புவாம்'' என்றும்,

''திருத்தொண்டத் **தொகை விரி** இன்று என் ஆதரவால் இயம்புகேன்'' என்றும் சேக்கிழாரடிகள் இயம்புமாற்றால், இம் மூன்று நூல்களையும் முறையே, தொகை, வகை, விரி'' எனச் சான்றோர் சாற்றுவர்.

2) ஞானசம்பந்தப் பெருமானின் அவதாரத்திற்கான காரணங்களை மூன்று நிலைகளில் வைத்து நம்பிகள் பேசுகிறார்கள். அம் மூன்று நிலைகளையும் சேக்கிழாரடிகள் தமது நூலில் விரித்துக் கூறுகிறார்கள். அவை வருமாறு:–

திருத்தொண்டர் திருவந்தாதி	பெரிய புராணம்
அமணர் வலி தொலைய	—வேத நெறி தழைத்து ஓங்க
யாம் வாழ	—மிகு சைவத் துறை விளங்க
வையம் மகிழ	—பூத பரம்பரை பொலிய

3) பெரிய புராணத்தில் மொத்தம் 4286 பாடல்கள் உள்ளன. அவற்றுள், பாட்டுடைத் தலைவராகிய நம்பியாரூரருக்கு 787 பாடல்களே உள்ளன; ஆனால் ஞான சம்பந்துப் பெருமானைக் குறித்து 1256 பாடல்களைச் சேக்கிழாரடிகள் பாடிப் பரவியுள்ளார்கள். வேறு எந்த அடியாருக்கும் இத்தனை பாடல்கள் இல்லை. எனவேதான், பெரியபுராணத்தைப் ''பிள்ளை பாதி; புராணம் பாதி'' என்று உபசாரத்திற்காகப் பெரியவர்கள் கூறுவார்கள்.

4) பதினோராம் திருமுறையில் நாற்பது பனுவல்கள் உள்ளன; அவற்றுள் பத்துப் பனுவல்கள் நம்பியாண்டார் நம்பிகளால் பாடப்பட்டவை. அப்பத்துப் பனுவல்களுள்ளும் ஆறு பனுவல்கள் ஞான சம்பந்துப் பெருமானைப் பாட்டுடைத் தலைவராக வைத்துப் பாடப்பட்டவை. இந்த ஆறு பனுவல்களிலும் ஞானசம்பந்தப் பெருமானின் வரலாற்றுச் செய்திகள் பலவற்றை நம்பிகள் நயமுடன் நாவினிக்க நவின்றுள்ளார்கள். பெரிய புராணத்தில் ஞான சம்பத்தப் பெருமானைக் குறித்துக் கூடுதல் பாடல்கள் இடம் பெறுவதற்கு, நம்பிகள் அருளிய இந்த ஆறு பனுவல்களே காரணம்.

5) ஞான சம்பந்தப் பெருமானிடத்து நம்பிகளுக்கு எத்துணை ஈடுபாடு இருந்தது என்பதை இப்பனுவல்கள் ஆறும் நமக்குப் பறை சாற்றுகின்றன. அந்த ஆறு பனுவல்கள் வருமாறு:–

i) ஆளுடைப் பிள்ளையார் திருவந்தாதி 100 கட்டளைக் கலித்துறைகளை யுடையது.

ii) ஆளுடைப் பிள்ளையார் திருச்சண்பை விருத்தும் 11 பாடல்களைக் கொண்டது.

iii) ஆளுடைப் பிள்ளையார் திருமும்மணிக் கோவை. ஆசிரியப்பா, வெண்பா, கட்டளைக் கலித்துறை ஆகிய மூவகைப் பாக்களால் ஆயது.

iv) ஆளுடைப் பிள்ளையார் திருவுலா மாலை.— 143 கண்ணிகளை யுடைய கலிவெண்பா.

v) ஆளுடைப் பிள்ளையார் திருக்கலம்பகம்- 49 பாடல்களைக் கொண்ட பல்வேறு பாவகைகளையுடையது.

vi) ஆளுடைப் பிள்ளையார் திருத்தொகை- 65 அடிகளையுடைய கலிவெண்பா.

6) நம்பியாண்டார் நம்பிகள், ஞான சம்பந்தப் பெருமானையே தம் குருவாகக் கொண்டிருந்தார்கள். இதனை,

''சம்பந்தன் தாளிணைகள் என் தலைமேல் இருக்க'' என்று ஆளுடைப் பிள்ளையார் மும் மணிக் கோவை(2)யிலும்,

''பொருள் என **என்னைத் தன் பொற்கழல் காட்டிப்** புகுந்து, எனக்கு இங்கு அருளிய திருஞானசம்பந்தன்'' என்று ஆளுடைப் பிள்ளையார் திருவந்தாதி(84)யிலும் நம்பிகள் தெளிவுபடுத்தியுள்ளார்கள்.

7) திருஞான சம்பந்தப் பெருமானின் திருப்பெயரைச் செவியால் கேட்காத நாள், துயரத்தைத் தரும் நாள் என்பது நம்பிகள் கருத்து.

இதனை,

''பார்அகலத் துன்பம் கடந்து, அமரரால் பணியும்
ஏர்அகலம் பெற்றாலும் இன்னாது(ஆல்)— கார் அகிலின்
தூமம் கமழ்மாடத் தோணி புரத்தலைவன்
நாமம் செவிக்குஇசையா நாள்''

என்ற ஆளுடைப் பிள்ளையார் திருவந்தாதி நூற்பயனில் நம்பிகள் நயந்துரைத்துள் ளார்கள்.

சம்பந்தப் பெருமானின் பல திறப்பட்ட பெயர்களைச் சொல்லிக் கொண்டிருந்தாலே போதும்; அது நமக்குப் பொன்னும் பொருளும் போகமும் திருவும் துறவும் மற்றும் வீடுபேறும் ஆகிய இம்மை மறுமை இன்பங்கள் அனைத் தையும் நிச்சயம் தரும் என்பது நம்பிகள் கொள்கை.

இதனை,

''உறவும் பொருளும்ஒண் போகமும் கல்வியும் கல்வியுற்ற
துறவும் துறவுப்பயனும் எனக்குச் சுழிந்த புனற்
புறவும் பொழிலும் பொழில்சூழ் பொதும்பும் ததும்ப, வண்டின்
நறவும் பொழில் எழில் காழியர்கோன் திருநாமங்களே''

என்று ஆளுடைப்பிள்ளையார் திருவந்தாதி (58)யில் வைத்து நம்பிகள் நம்பிக்கை ஊட்டு கிறார்கள்.

8) ஞான சம்பந்தப் பெருமானின் பதிகங் களைத் திரும்பத் திரும்பத் தம் வாழ் நாள் முழுவதும் படனம் செய்து வருபவர்கள், இம்மையில் இன்பங்கள் அனைத்தையும் பெறுவர்; மறுமையில் வீடுபேறு பெறுவது திண்ணம். இது சம்பந்தப் பெருமான் திருவாக்கு. இத் திருவாக்கைத் தம் தலை மேற் கொண்டு, சம்பந்தப் பெருமானைத் ''தம் நீதி'' அவரே என்றும், ''தமக்குக் கதி'' அவரே என்றும் நம்பிகள் கருதியுள்ளார்கள்; அக்கருத்தை வலியுறுத்தும் வகையில், திரு முறை நெறியைப் ''பதிகப் பெருவழி'' எனச் சிறப்பித்துப் பேசுகிறார்கள். இதனை,

''**பதிகப் பெருவழி** காட்டப் பருப்பதக் கோன் பயந்த
மதியத் திருநுதல் பங்கன் அருள்பெற வைத்த எங்கள்
நிதியைப் பிரமா புரநகர் மன்னனை என்னுடைய
கதியைக் கருதவல் லோர், அம ராவதி காப்பவரே''

என்று ஆளுடைப் பிள்ளையார் திருவந்தாதி (உ)யில் நம்பிகள் அழகுற எடுத்துரைத்துள் ளார்கள்.

9) ஆளுடைப் பிள்ளையார் கலம்பகம் 35-ல், ஞான சம்பந்தப் பெருமானின் **பதிகத்தைப் படனம் செய்பவர் பெறும் பயன்** குறித்து நம்பிகள் நயமுடன் நவின்றிருக்கும் ஒரு பாடலை இங்குக் கூறுவது அவசியம் எனக் கருதுகிறேன்.

அது வருமாறு :—

''பெறும்பயன் மிகப்புவியுள் அருளுவன;
பிற்றைமுறை
பெறுநெறி அளிப்பன; பல்பிறவியை
ஒழிச்சுவன;
உறுதுயர் அழிப்பன; முன் உமை திருவருள்
பெருக
உடையன; நதிப்புனலின் எதிர்பஃறி
உய்த்தன; புன்
நறுமுறுகுறைச் சமணை நிரைகழு
நிறுத்தின;
நனிகதவு அடைத்தன: துன் அரு
விடம் அகற்றியன;
துறுபொழில் மதில்புறவம் முதுபதிமன்
ஒப்பரிய
தொழில்பல மிகுத்த தமிழ்விரகன
கவித்தொகையே''.

இன்னோரன்ன எவ்வளவோ கருத்துக்கருவூலங்களை இன்னும் சொல்லிக் கொண்டே போகலாம். ஆயினும், விரிவு அஞ்சி இத்துடன் இக் கட்டுரையை நிறைவு செய்கிறேன்.

''நால்வர் பொற்றாள் எம் உயிர்த் துணையே''.

சைவ சமயமே சைவம் சமயாதீதப் பழம் பொருளைக்
கைவந்திடவே மன்றுள்வெளி காட்டு மிந்தக் கருத்தை விட்டுப்
பொய் வந்துழலும் சமயநெறி புகுதவேண்டாம் முத்திதருள்
தெய்வ சபையைக் காண்பதற்குச் சேரவாரும் சகத்தீரே

— **தாயுமான சுவாமிகள்.**

தனம் தரும் கல்வி தரும் ஒருநாளும் தளாவறியா
மனம் தரும் தெய்வ வடிவுந்தரும், நெஞ்சில் வஞ்சமில்லா
இனம் தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனம் தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே

— ***அபிராமி அந்தாதி.***

௳

சிவமயம்

கந்தபுராணத்தில் காப்பியச் சுவை

(வித்துவான் அம்பை. இரா. சங்கரனர்,
தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சை.)

புராணம் என்பது பழைய வரலாறு எனப் பொருள்படும். நம் தமிழகத்தில் உள்ள புராணங்கள் கணக்கிலடங்கா. அவற்றுள் தலைசிறந்தவை மூன்றே. அவை கந்தபுராணம், பெரிய புராணம், திருவிளையாடற் புராணம் என்பன. இவை மூன்றும் பெருங் காப்பியத்திற்குரிய இலக்கணங்கள் யாவும் பொருந்தியன. அவற்றிற்கும் மேலாக இம் மூன்றும் பத்திச் சுவையையும் ஊட்ட வல்லன. இம் மூன்றனுள் முதலாவதாய '' கந்தபுராணத்தில் காப்பியச் சுவை '' என்பது பற்றிச் சிறிது ஆய்வோமாக.

பெருங் காப்பியத்திற்குரிய இலக்கணம் பற்றிப் பல படியாக இலக்கண நூல்கள் பேசுகின்றன. அவற்றுள் ஒன்று ஒன்பது சுவைகளும் பொருந்தியிருத்தலாகும். அவ்வொன்பது சுவைகளாவன :

வீரம், அச்சம், இழிவு, வியப்பு, காமம், அவலம், உருத்திரம், நகை , சாந்தம் என்பனவாகும். இவ்வொன்பான் சுவைகளும் இப் புராணத்தை அணி செய்யும் இடங்கல் சிலவற்றை ஈண்டுக் காண்போமாக.

1. வீரச் சுவை

கந்த புராணத்தில் தேவாசுர யுத்தம் யாண்டும் காணப் பெறுகின்றது. ஆகவே போர் உள்ள இடத்தில் வீரம் காணப்பெறுவது இயல்பே. வீரச் சுவைக்குக் கணக்கற்ற இடங்களை இந் நூலில் சான்றாகக் காட்டலாம். இருப்பினும் சில பார்ப்போமாக.

சிவபெருமானைக் குறித்துக் கடுந்தவம் இயற்றிய சூரபன்மன் கிடைத்தற்கரிய பல வரங்களையும் அத்திரங்களையும் பெற்றுக் கொண்டான். அதனால் செருக்கு மீதூரவே திக்குவிசயம் செய்யப் புறப்பட்டான். தன் வீரத்தை உலக முழுவதும் நிலை நாட்ட விரும்பிச் சென்ற பொழுது குபேரன், யமன், நிருதி முதலியோர் அவனை எதிர்க்க இயலாது அஞ்சி அடிபணிந்தனர். இந்திரன் ஓடி ஒளிந்தான். அக்கினி, அரி முதலியோர் சண்டையிட்டும் இயலாது நண்பராயினர். பிரமன் உறவு கொண்டாடித் தப்பினான். இவ்வாறு தேவருலகத்தும் பலரையும் அடி பணியச் செய்து தன் வீரத்தை நிலைநிறுத்தினான்.

மேலும் யாக சங்காரப் படலத்துள் தக்கன் சிவபெருமானை இகழ்ந்து அப் பெருமானை மாத்திரம் அழையாது மற்றவர்களையெல்லாம் தான் செய்யும் யாகத்திற்கு அழைத்தான். சிவ பெருமானுக்குக் கொடுக்க வேண்டிய அவியுணவையும் பிறருக்குக் கொடுத்தான். மற்றைத் தேவர்களும் தக்கனுக்குப் பயந்து சிவபெருமான் வராததையும் நினைந்துப் பாராது அந்த யாகத்துக் கேகினர். இதனை நினைத்த தக்கன் மகளாகிய உமாதேவியார் பெருமானின் ஆணை பெற்றுத் தாமே யாகத்துக்கு வலியச் சென்றார். அம்மையாருக்கும் அங்கு நல் வரவேற்பில்லை. அதனல் வருந்திப் பெருமானிடம் வந்து அம்மையார் முறையிட்டார். பெருமான் நினைத்த அளவில் வீரபத்திரர் நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றினார். அவருக்குத் தக்கன் யாகத்தை அழித்து வரப் பெருமான் ஆணையிட்டார். வீரபத்திரர் தக்க யாகத்தில் வந்து போர் செய்த பெருமை வீரச் சுவையின் உச்சிக் கட்டமாகும். வீரபத்திரர் ஊதிய கொம்பின் ஓசையைக்

கேட்டதும் யாகத்திற்கு வந்தவர்கள் பட்ட நிலையை இப் பாடல் மூலம் அறியலாம் :

எழுகின்ற ஓசை கேளா
இடியுண்ட அரவிற் சோரா
விழுகின்றார் பதைக்கின் றார்வாய்
வெருவுகின் றூர்கள் ஏங்கி
அழுகின்றார் ஓடு கின்றார்
அழிந்ததோ வேள்வி யென்று
மொழிகின்றார் மீளு கின்றார்
முனிவரும் இமையோர் தாமும்
(யாக சங்காரப் படலம்-9)

உடனே வீரபத்திரர் கோபமெய்தி யாகத்திற்கு வந்தவர்களை யெல்லாம் படுத்திய பாடு கூறொணாதது. சந்திரனைத் தேய்த்தார், சூரியனைப் பல் ஒடித்தார், அக்கினியின் கையை வெட்டினார். இவ்வாறு பலரையும் சின்னாபின்னப் படுத்தினார். தக்கன் தலையை வெட்டி அது கீழே விழுமுன் தாங்கி தீயிலிட்டுப் பொசுக்கினுர். பின்னர் உமையம்மையின் வேண்டுகோளின் பேரில் சிவ பெருமான் அண்மையில் இறந்து கிடந்த ஒரு ஆட்டுத் தலையைத் தக்கன் உடலிற் பொருத்தி அவனை உயிர் பெறச் செய்தார். பின்னர் தக்கன் பெருமானைப் பலவாறு போற்றினான் என்று கந்த புராணம் கூறுகின்றது. இன்னும் வீரச் சுவை பற்றி சூரபன்மன் போர், பானுகோபன் போர் முதலிய இடங்களில் எல்லாம் சிறக்கக் காணலாம்.

2. அச்சச் சுவை

வீரமுள்ள இடத்தில் அதற் கெதிராக விளங்குவது அச்சச் சுவையேயாகும். சூரபன்மன் படுத்திய துன்பத்தினாலே தேவர்கள் கொண்ட அச்சம் அளவிடும் தரத்ததன்று. இந்திரனே தேவர்கள் முறையீட்டைக் கேட்டு ஒன்றும் செய்ய இயலாது தனக்கும் தன் மனைவிக்கும் நேர இருக்கும் துன்பங்களை எண்ணி ஓடி ஒளித்தானென்றால் அச்சச் சுவை பற்றி வேறு கூறவும் வேண்டுமோ ? தாய் தந்தையர் பூவுலகில் சீர்காழிப் பகுதியில் வந்து ஒளிந்து கொள்ள இந்திரன் மகன் சயந்தன் தன் பெற்றோரைக் காணாது மிகவும் துன்புற்றான். நாரதர் தேற்ற ஒருவாறு அவன் தெளிவுபெற்றான். அவனையும் அவுணர்கள் பிடித்துச் சிறையிலிட்டனர். அவன் சிறையில் பட்ட துன்பம் மிக அதிகமாகும். தேவர்கள் தாங்கள் பட்ட துன்ப நிலை பற்றிக் கூறுவதைக் கச்சியப்பர் திருவாக்கால் காணலாம்.

ஏனம் பசுமான் இரலை மரைபடுத்த
ஊனும் வடியும் ஒலிகடலி னுள்ளபல
மீனும் சுமந்து விறலசுரர்க்கு ஏவல்செய்து
மானம் குலேந்து மறந்தோம் மறைகளுமே.
(தேவர் புலம்புறு படலம் — 5)

இதனைப் போன்று அச்சச் சுவை பற்றிப் பல பாடல்களை இந்நூலில் யாண்டும் காணலாம்.

3. இழிவுச் சுவை

சூரன் தங்கையாகிய அசமுகி இந்திராணியை அணுகி சூரபன்மனின் பெருமையையும் இந்திரனின் அச்சமுற்று எதிர்த்து நிற்கும் ஆற்றலற்ற தன்மையையும் எடுத்துக்கூறி சூரபன்மனைக் கணவனுக ஏற்றுக்கொள்ள அவளே வற்புறுத்துகிறுள். அவ்வமயம் அசமுகிக்குப் பல நீதிகளே இந்திராணி எடுத்துரைக்கிறுள். மிகவும் இழிவுச்சுவை தோன்றுமாறு இவ்விடத்துப் பல உண்மைகளைக் கூறுவதில் ஒன்றைப் பார்ப்போம்.

பழியும் பார்த்திலை படி இகழ்ந்திடும்
மொழியும் பார்த்திலை முறையும்
பார்த்திலை
வழியும் பார்த்திலை வருவ பார்த்திலை
இழியும் தீயசொல் இயம்பற் பாலையோ?
(இந்திராணி மறுதலேப் படலம் — 7)

4. வியப்புச் சுவை

சூரபன்மன் முருகப் பெருமானுடன் நேராக யுத்தம் புரிகிறான். தான் மிகவும் வீரமாகப் போர் புரிவதாக நினேத்துக்கொண்டு பல அத்திரங்களையும் பெருமான் மீது ஏவுகிறான். அவ்வமயம் முருகப் பெருமான் பகைவனுக்கும் யுத்த முனையில் அருள் செயக் கருதினார். சூரனுக்கு இருந்த ஆணவ இருளைச் சிறிது விலக்கி ஞானம் பெறத் திருவருள் பாலித்தார். அக்கணமே அச்சூரன் அவ்யுத்த களத்திலேயே முருகப் பெருமானேப் புகழ்ந்த திறம் மிகவும் வியப்புக்குரியதாயுள்ளது.

கோலமா மஞ்ஞை தன்னில் குலவிய
குமரன் தன்னைப்

பால்ன் என்றிருந்தேன் அந்நாள் பரிசிவை
உணர்ந்தி லேன்யான்
மாலயன் தனக்கும் ஏனை வானவர்
தமக்கும் யார்க்கும்
மூலகா ரணமாய் நின்ற மூர்த்தி இம்மூர்த்தி
அன்றோ !
(சூரபன்மன் வதைப் படலம் — 433)

எனச் சூரனே வியக்கும் நிலையைக் கச்சியப்பர் படம் பிடித்துக் காட்டுகிறார். அந்நிலையில் முருகப்பிரான் அவுணனுக்கு ஞான உணர்ச்சி நீங்கத் திருவருள் பாலித்தார். பழைய ஆணவம் மீண்டும் அவனை வந்து கவ்விக்கொண்டது. போர் செய்தான்; இறுதியில் அவன் உடல் இரண்டு கூறாயிற்று. ஒரு பாகம் சேவலாகவும் மற்றொரு பாகம் மயிலாகவும் மாறிற்று. அவ்விரண்டனுள் ஒன்றை வாகனமாகவும் மற்றொன்றைக் கொடியாகவும் பெருமான் ஏற்றுக்கொண்டார். தம் பகைவனையும் அடியார்கள் வணங்கத்தக்க நிலையில் ஏற்று அருள்பாலித்த திறம் நினைக்கும் தொறும் மிகவும் வியப்பினை அளிக்கவல்லது.

5. காமச் சுவை

காமச் சுவை பற்றி பக்தி இலக்கியத்தில் காண இயலுமா என்று சிலர்க்கு ஐயம் எழலாம். இச்சுவையை வள்ளியம்மை திருமணப் படலத்தில் கந்தபுராண ஆசிரியர் அகப்பொருள் நெறி வழுவாது மேம்பட அமைத்துள்ளார்.

முருகப் பெருமான் வள்ளியம்மையைத் திருமணம் செய்ய விரும்புகின்றார். தம்மை மணம் செய்துகொள்ளுமாறு வள்ளியம்மையிடம் தினைப்புனத்தில் சந்தித்து வேண்டுகிறார். ''இரந்து பின்னிற்றல்'' என்னும் துறை அமையப் பல பாடல்கள் இவ்விடத்துக் காணப்பெறுகின்றன. பின் '' களிறுதரு புணர்ச்சி'' என்னும் அகப்பொருள் துறைக்கேற்ப விநாயகரை நினைத்து அங்கு வரச் செய்து வள்ளியம்மை தம்மை மணந்து கொள்ள இசைவு பெறும் தன்மையை உருவாக்குகின்றார். இவ்வாறு அகப்பொருட் கோவை போன்றே இப்படலம் காணப் பெறுகின்றது. எல்லாம் வல்ல முருகப் பெருமான் இறுதியில் தம் உண்மை உருவைக் காட்டி வள்ளியம்மையைத் திருமணம் செய்து கொள்கிறார். இவ்வாறு உண்மை உருவை முன்னரே காட்டி அவ்வம்மையைத் திருமணம் புரிந்திருக்கலாம். இருப்பினும் இந்நூலாசிரியர் தமிழ் மரபிற்கேற்பக் காமச் சுவை ததும்ப இப்பகுதியைப் பாடியருளிய திறம் மிகவும் நினைந்து இன்புறற்பாலது.

அண்மையில் வாழ்ந்து மறைந்த தவத்திரு பாம்பன் அடிகளார் அவர்கள் எல்லாம் வல்ல பெருமானைச் சாதாரண செத்துப் பிறக்கின்ற மகனைப் போன்று கருதி உலகியல்பை ஏற்றிக் காமச் சுவை ததும்பப் பாடி அவன் பெருமைகளைக் குறைக்கக் கருதுவது அடாது எனக் கருதினார்கள். ஆதலின் அவ்வாறு காமச் சுவை பயிலாவண்ணம் முருகப் பெருமான் வரலாற்றைத் தாமே ''குமார சாமியம்'' என்னும் பெயரில் ஒரு சிறந்த இலக்கியமாகச் சமைத்துத் தமிழுலகுக்குத் தந்துள்ளார்கள்.

கச்சியப்பர் வழி காமச் சுவைக்கு ஒரு எடுத்துக்காட்டினைக் கீழே காண்போம். வள்ளியம்மையை வேண்டுவதாக முருகப்பிரான் கூற்றாக வரும் பாடல் ஒன்று இவணுள்ளது.

மொழியொன்று புகலாயாயின் முறுவலும்
புரியாயாயின்
விழியொன்று நோக்காயாயின் விரகமிக்கு
உழல்வேன் உய்யும்
வழியொன்று காட்டாய்ஆயின் மனமும்
சற்று உருகாய்ஆயின்
பழியொன்று நின்பாற்சூழும் பராமுகம்
தவிர்தி என்றான்.

இவ்வருமைப் பாட்டின் அருமைப் பாட்டினைத் துய்த்து இன்புறலாம்.

6. அவலச் சுவை

அவலச் சுவைக்கு எடுத்துக்காட்டுகள் கந்த புராணத்தில் கணக்கிலடங்கா. காசிபன் புலம்புறு படலம், தேவர் புலம்புறு படலம், அசமுகி புலம்புறு படலம், சயந்தன் புலம்புறு படலம், அயிராணி சோகப் படலம், இரணியன் புலம்புறு படலம் என்பன போன்று பல பகுதிகள் முழுவதிலுமே இவ்வவலச் சுவை ததும்பி வழிகின்றது. இருப்பினும் காம தகனப் படலத்தில் மன்மதனைப் பிரிந்த இரதியின் புலம்பல் மிகவும் உச்சக் கட்டத்திலுள்ளது.

மன்மதன் சிவபெருமான் நெற்றிக் கண்ணி லுள்ள அனலால் எரிந்து வீழ்ந்தான். இது தெரிந்து அவன் மனைவி ரதி வந்து துன்புறு கின்றாள். இத்துன்புறும் நிலையைக் கச்சியப் பயப்பர் வாக்கால் கண்டின்புறலாம்.

மாறாகப் பரமன்விழி, நின்ஆற்றல்
இலதாக, மற்று உன்மெய்யும்
நீறாக, விண்டுஎல்லாம் நெருப்பாகக்,
கவலை விண்ணோர் நெஞ்சத்து ஆக,
ஆறாத பெருந்துயரம் எனக்காக, எங்கு
ஒளித்தாய் அருவாயேனும்
கூறாயோ வறிதிருந்தாய் என்கணவா
யான்செய்த குறையுண்டோதான்?
(காம தகனப் படலம் — 101)

என்பது அவலக் கடலில் நம்மையெல்லாம் அமிழ்த்துகின்றது.

7. உருத்திரச் சுவை

உருத்திரம் எனினும் சினம் எனினும் ஒக்கும். போருள்ள இடத்தில் சினம் எழுதல் இயல்பே. சிங்கமுகாசுரன், பானுகோபன் முதலிய பல ரும் பல அத்திரங்களைப் பகைவர்கள் மேல் எய்கின்றனர். அவற்றால் பகைவர் அழியாதது கருதிச் சினம் மேலிடுகின்றது. மேலும் பல கடுமையான அத்திரங்களை விடுகின்றனர். பல போர் முறைத் தந்திரங்களைக் கையாள் கின்றனர். அவையெல்லாம் பயன்தரவில்லை. இறுதியாகச் சூரபன்மன் வதைப் படலத்தில் சூரன் பலமுறை சினமீதூர முருகப் பெரு மானுடன் போர் புரிகின்றான். ஒரு சமயம் பெருஞ் சினத்தால் சூரன் கூறும் கடுஞ் சொற் களை நோக்குமின்.

உடைப்பெரும் படைசெறுத்தனை பாலன்
என்று உன்னை
விடுப்பதில்லையால் வெரிநது கொடுக்கினும்
விரைவில்
படுப்பன் வானவர் தொகையுடன் பாரிடர்
தமையும்
கெடுப்பன் என்றனன் தன்பெருங் கிளையுடன்
கெடுவான்.
(சூரபன்மன் வதைப் படலம் — 156)

''எனக்குப் பெருஞ்சேனை இருப்பதையும் உணராமல் நீ என்னுடன் போருக்கு வந்து அழிக்க முனைகிறாய். சிறிய பாலனாயிருப்பத னால் நான் உன்னை விட்டுவிடப் போவதில்லை. ஒருக்கால் பயந்து நீ ஓடினாலும் புறமுதுகு காட்டிப் பகைவன் ஓடினால் போர் அவனிடம் செய்யக் கூடாது என்ற யுத்த தர்மத்தையும் உதறிவிட்டு உன்னையும் உன்னைச் சேர்ந்த தேவர்களையும் பூதமாதியவர்களையும் பிற ரையும் அழித்தே தீருவேன்'' என்று கோபா வேசத்துடன் வஞ்சினம் கூறிப் போர் செய் தான் என்று கச்சியப்பர் கூறுகிறார். இப் பாட்டினிறுதியில் மகுடம் வைத்தாற்போன்று சூரனுக்கு ஒரு தொடரை ஆசிரியர் குறிப்பிடு கின்றார். ''தன் பெருங்கிளையுடன் கெடு வான்'' என்பதே அப்பெருமை வாய்ந்த தொடராகும். ''கெடுவான் கேடு நினைப் பான்'' என்பது பழமொழி, அசுரக் கூட்டத் தோடு பூண்டற்று அழியக்கூடிய நிலையில் உள்ள சூரன் இவ்வாறு கூறுகின்றான் என்று ஆசிரியர் இரக்கச் சுவை, நகைச்சுவை முதலிய பல சுவைகளையும் கூட்டி இத்தொடரை அமைத்துள்ள திறம் படித்தின்புறத்தக்கது.

8. நகைச் சுவை

நகைச்சுவை கந்தபுராணத்துள் பல்லிடங் களிலும் கலந்து காணப்பெறுகின்றது.

''எள்ளல் இளமை பேதைமை மடன்என்று
உள்ளப்பட்ட நகை நான்கு என்ப''

என்பது தொல்காப்பியம். ஆகவே இகழ்ச்சிக் குறிப்பிலும் இளமையிலும் அறியாமையிலும் கொண்டது விடாமையிலும் நகைச்சுவை காண இயலும். அந் நிலையில் பாலனென்றி ருந்தேன் என்னும் பாட்டில் இளமை காரண மாக எழும் நகைச்சுவை தென்படுகிறது. சிறுவன் முதுகுகாட்டி ஓடினாலும் என்ற நிலை யில் இகழ்ச்சிக் குறிப்பால் ஏற்படும் நகை தெளிவாகின்றது. ''கெடுவான் கேடு நினைக் கின்றானே'' என்று ஆசிரியர் நினைக்கும் திறத்தால் அறிவின்மை பற்றி எழும் நகைச் சுவை புலப்படுகின்றது. சூரன் எவ்வாறு தோற்கடிக்கப்பட்டாலும் மேலும் ஆணவ முனைப்பால் போருக்கு எழுந் தன்மையை நோக்குந் தொறும் கொண்டது விடாமை பற்றிய தன்மை குறித்த நகைச்சுவை மேலிடு கின்றது. இவ்வாறு நகைச்சுவை நூல் முழுதும் பரந்திலங்கக் காணலாம்.

9. சாந்தச் சுவை

இறுதியாகச் சாந்தம் என்றும் சமநிலை என்றும் கூறத்தகும் மனத்திற்கு அமைதி தரத்தக்க பத்திச் சுவைதான் கந்தபுராணம் முழுவதும் ஊடுருவியிருக்கிறதெனின் அது மிகையாகாது.

ஆயிரங்கோடிகாமர் அழகெலாந்திரண்டு
ஒன்றாகி
மேயின எனினும் செவ்வேள் விமலமாம்
சரணந்தன்னில்
தூயநல் எழிலுக்கு ஆற்றாது.
(சூரபன்மன் வதைப் படலம் — 439)

கலைப்படு மதியப்புத்தேள் கலங்கல் அம்
புனலில் தோன்றி
அலைப்படு தன்மைத்து அன்றோ அறுமுகன்
ஆடல் எல்லாம்
(வள்ளியம்மை திருமணப் படலம் — 73)

''நன்னெறி ஒழுகச் செய்து நவையறு
காட்சி நல்கி
என்னையும் அடியனாக்கி''
(வள்ளியம்மை திருமணப் படலம் — 262)

என்பன போன்ற பாடல்கள் எத்தகைய துன்புற்ற காலத்தும் மனத்துக்கு நிறைவைத் தந்து மிகவும் சாந்தியை அளிக்கவல்ல தன்மையனவாம். இதனாற்றான் இக்கந்த புராணத்தைப் பெரியோர்கள் பாராயண நூலாகக் கருதித் தினந்தோறும் காலையில் நித்தியக் கடன்களை ஆற்றிய பின்னர் சிறிது நேரமாவது பாராயணம் செய்து பிறபணிகளைச் செய்ய முனைவர்.

ஆகவே, இவ்வரிய நூலினை மக்கள் பொன்னெனப் போற்றி மிகவும் சிரத்தையுடன் படித்து இம்மை மறுமைப் பயன்களைப் பெற்றுய்வார்களாக.

வற்றா அருள்சேர் குமரேசன் வண்காதை
தன்னைச்
சொற்றாரும் ஆராய்ந் திடுவாரும் துகள்
உறாமே
கற்றாரும் கற்பான் முயல்வாரும் கசிந்து
கேட்கல்
உற்றாரும் வீடுநெறிப் பாலின் உறுவர்
அன்றே!
(வள்ளியம்மை திருமணப் படலம் — 266)

— வாழ்க உலகெலாம் —

★

ஒளிவளர் விளக்கே ! உலப்பிலா ஒன்றே !
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே !
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே !
சித்தத்துள் தித்திக்கும் தேனே ;
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே !
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே !

—திரு இசைப்பா

★

உ

சிவமயம்

அப்பரடிகளும் சைவ சித்தாந்தமும்

டாக்டர் செ. சிங்காரவேலன், எம்.ஏ., பிஎச்.டி.

(தமிழ்ப் பேராசிரியர், அ.து.அ. கல்லூரி, மயிலாடுதுறை)

1.0. அப்பர் குறிப்புகள் - கோட்பாடுகள் :

அப்பரடிகள் தேவாரத்தில் காணப்பெறும் சைவசித்தாந்தக் கோட்பாடுகள் எண்ணற்றவை. பதி எனப்படும் இறைவன், பசு எனப்படும் உயிர்கள், பாசம் எனப்படும் உயிர்கள் பற்றியும், இருவினைகள் பற்றியும், இறைவனின் அருள் வீழ்ச்சி பற்றியும், திருவைந்தெழுத்துப் பற்றியும் அடிகள் திருவாக்கில் வரும் குறிப்புகள் கூர்ந்து நோக்குதற்கு உரியவை. அவை சைவசித்தாந்தத் தத்துவ நெறியில் கோட்பாடுகளாகப் பிற்காலத்தே உருக்கொள்ளக் காண்கின்றோம்.

1.1. பதிக் கோட்பாடு - அப்பர் விளக்கம்:

சைவசித்தாந்தத்துள் கூறப்பெறும் முப்பொருள் உண்மை மூவர் திருவாக்குகளில் காணப் பெறுவதே. அப்பர் கூறும் இறை இயல்பு தன்னிகரற்று விளங்குவது. ''சிவ பிரானே முழுமுதற்றன்மை உடைய முதற் பரம் பொருள்'' என்பது அடிகளார் வகுத்துள்ள இறைக் கோட்பாடு எனலாம். பாஞ்ச ராத்திரமோ ''இறைவனுக்குப் பிறப்பு உண்டு'' என்று உரைக்கும்.[1] பெருந் தூய்மையும் பேரின்பமும் வடிவாக உள்ள கடவுளுக்குப் பிறப்பு உண்டு என்று கொள்வோரது ''விபரீத ஞானம்'' (மாறுபட்ட அறிவு) அடிகளார்க்கு வன்மையாகக் கண்டிக்கத் தோன்றும் மாறுபட்ட கருத்தாக உள்ளது :

> ''செத்துச் செத்துப் பிறப்பதே தேவென்று
> பத்திசெய் மனப் பாறைகட்கு ஏறுமோ?''

என்ற குறுந்தொகைப் பகுதி, பதி இயல்பினை இவ்வாறு இனிது விளக்குவதாகக் கொள்ளலாம்.[2] பிறப்பின் வருவது பெருந்துன்பமே; பேரிழிவு பிறப்புடைமை. இதினின்றும் நீங்கி விடுபடுவதே உயர்ந்தோர் உள்ளமாக இருக்க இப்பிறப்பு வலையுள் இறைவனும் சிக்கினான் என்று கூறுவது பொருந்தாது அன்றோ ? ''வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை'' என்று வள்ளுவரும் வேண்டுவது பிறவாமையேயாக இருக்க, இறைவன் பிறப்புத் துன்பத்துட் படுபவன் என்பது எவ்வாறு பொருந்துவதாக இருக்க முடியும்? பிறப்பும் இறப்பும் அற்றவன் இறைவன் என்ற கருத்தை அப்பர் திருவாக்குகளில் எண்ணற்ற இடங்களிற் காணலாம்.[3]

இறைவன் பந்தத்துட் படாத பெரும் பொருள் என்று சைவ சமயம் கூறும். எண் குணங்களில் ஒன்றாக வரும் இயல்பாகவே பாசங்களின் நீங்கிய நிலையாகவும், உயிர்களோடு கலந்து நின்றும் — பாசங்களோடு கலந்து நின்றும் அவற்றின் தன்மையால் தன் நிலை சிறிதும் மாறாத நிலையாகவும் பேசப் பெறும். '' தூயன் '', '' நின்மலன் '', ''விமலன்'', ''அமலன்'' என்ற சொற்களாலும் பிறவற்றாலும் அடிகளார் விளக்குவது முதல்நிலை ''துறவாதே கட்டறுத்த சோதியான்'' என்றும், ''நேரிழையைக் கலந்திருந்தே புலன்கள் ஐந்தும் வென்றானை'' என்றும் அடிகளார் பாடும் இடங்கள் இரண்டாம் நிலையாகக் கொள்ளத் தக்கவை.[4]

கதிரவன், தீக்கடவுள் முதலியோரையோ, பிற கடவுளரையோ பதியாகக் கொண்டு வழிபடும் பலதெய்வக் கொள்கை (Poly theism) அடிகளார்க்கு உடன்பாடன்று; சிவபெருமானே பதி; அவன் ஒருவனே முழுமுதற் பொருள் என்பதே அடிகளார் கோட்பாடு :

''அருக்கன் பாதம் வணங்குவர் அந்தியில்
அருக்கன் ஆவான் அரனுரு அல்லனோ''

என்றும்,

''எரி பெருக்குவர் அவ்வெரி ஈசனது
உருவருக்க மாவது உணர்கிலார்''

என்றும், அடிகளார் உரைத்தருளும் பகுதிகள் ஓர்தற்குரியவை.[5]

இலிங்க புராணத் திருக்குறுந்தொகை, ''தொழற்பாலதே'' என்ற குறுந்தொகை — ஆகியவற்றில் தம் கோட்பாட்டை மிகத் தெளிவாக அடிகளார் அருளியுள்ளார். ''மற்றெல்லாரையும் விடுத்துத் தியானிக்கப்படத் தக்கவன் சிவன் ஒருவனே'' என்ற அதர்வசிகோபநிடதக் கருத்தே அடிகளார் திருவுள்ளத்து இவ்விடத்தே அமைந்தது என்று அறிஞர் கருதுவர்.[6]

எல்லாச் சமயங்களிலும் கூறப்பெறும் பதி, இச்சிவபிரானே என்ற ஒருமை உணர்வு அடிகளார்க்கு இருந்தது. ''மிக்க சமயங்கள் ஆறின் உருவாகி நின்ற தழலோன்'', ''சமயமேலாறும் ஆகித் தானொரு சயம்புவாகி'', ''ஆறு சமயத் தவரவரைத் தேற்றுந் தகையன; தேறிய தொண்டரைச் செந்நெறிக்கே ஏற்றுந் தகையன'' — என்பன முதலாக வரும் அடிகளார் தேவாரப் பகுதிகளை இவ்வகையிற் பொருள் உணர்ந்து கொள்ளலாம்.[7]

''ஆரொருவர் உள்குவார் உள்ளத் துள்ளே
அவ்வுருவாய் நிற்கின்ற அருளுந் தோன்றும்'

என்று அடிகளார் அருளும் பகுதி — இக் கோட்பாட்டினை இனிது விளங்கிக் கொள்ளுதற்கேற்ற முடிமணியானது என்று கொள்ளல் பொருந்துவதாகும்.[8]

மெய்கண்டார்,

''ஒன்றென்ற தொன்றேகாண் ஒன்றே பதி
பசுவாம்
ஒன்றென்ற நீபாசத்தோ டுனைகாண் —
ஒன்றின்னால்
அக்கரங்கள் இன்னால் அகரவுயிர் இன்றேல்
இக்கிரமத் தென்னும் இருக்கு''

(சிவஞானபோதம் — 2-ஆம் சூத்திரம் — 1-ஆம் அதிகாரம்)

என்ற வெண்பாவுள், ''ஒன்றே பதி'' என்று உரைத்தமைக்குரிய வித்து அருளாளர் அருளிய திருமுறைகளில் அமைந்துள்ளமை உணரத் தகுந்தது. ''விண்ணும் மண்ணும் தோற்றுவிக்கும் தேவன் ஒருவனே'', ''ஒருவனே உருத்திரன் இரண்டாம் முதற் கடவுள் இல்லை'', ''பிரமப் பொருள் ஒன்றே''என்றெலாம் வரும் உபநிடதப் பொருண்மையும் ஒப்பிட்டுணரத் தகுந்தது.[9]

முழுமுதல் தன்மை பெற்ற ஒருவனாகிய சிவபிரான் பெருங் கருணையும் உடைய பேரருளாளன் என்பர் அடிகளார்; தேவர்க்காக நஞ்சுண்ட பிரான்; திரிபுரம் எரித்த விரிசடையான்; பாலனுக்காகக் காலனைக் காய்ந்த பரமன்; முதலிய புராண வரலாறுகளை அடிகளார் அடிக்கடிப் பாடி அருள்வது பதியின் பெருங்கருணைத் திறம் விளக்கவே ஆம். உயிர்கள் செய்யும் பிழைக்காக முதற்கண் ஒறுப்புச் சிறிது செய்வானே ஆயினும், பிழை உணர்ந்து தன் திருவடிகளிற் பற்றுவைத்து வணங்குவராயின் மன்னிப்பும் அருளும் மாண்புடையான் என்பதனை உலகிற்கு விளக்குதற்கே இராவணன் திறத்தைத் தம் பதிகம் ஒவ்வொன்றினும் தவறாது கூறுவாராயினர்.[10]

''தொழுதகை துன்பம் துடைப்பாய் போற்றி'' என்று அளவற்ற கருணையைச் சுருக்கி அருளுவர்.[11]

''பன்னாள் அழைத்தால், இவன் நமை
அழைப்பு
ஒழியான் என்று எதிர்ப்படுமே''

என்றருளுவார்.[12] உள்ளம் உருகி வழிபடும் அடியவர் சிந்தையே கோயிலாகக் கொண்டு எழுந்தருளும் பெருங்கருணையாளன் என்று ஓதி ஓதி உருகுதலும் இவர் திருவாக்குகளிற் காணப்படுகின்றது.

''ஆதியும் அந்தமுமாக உலகங்களுக் கெல்லாம் உள்ளவன் பதியாகிய சிவபிரானே'' என்ற கோட்பாடு அடிகளாருடையது. சிவஞான போதத்து முதற் சூத்திரமாக இதுவே மூவடிகளில் முகிழ்க்கின்றது என்று உணரலாம். காத்தும், படைத்தும், கரந்தும், அருளியும், அழித்தும் இறைவன் இயற்றும் ஐந்தொழில்களை அடிகளார் பாடி உருகும் பகுதிகளும் பலவாம்.

பதிப்பொருள் உயிர்களோடும் உலகத்தோடும் வேறறக் கலந்து நிற்றலை அடிகளார் அருளுவர்; ''அத்துவித சம்பந்தம்'' என்று சித்தாந்த சாத்திரங்கள் இந்நிலையைக் குறிப்பிடும். ஒன்றாய், வேறாய், உடனாய் நிற்றல் என்று மூவகைப் பட மொழியும் அத்துவிதத் தொடர்பு அடிகளாரால் ஆங்காங்குச் சிறப்புற மொழியப்பட்டுள்ளது.

நின்ற திருத்தாண்டகம் முழுவதும் ஒன்றாய் நிற்கும் நிலை பற்றியது. ''இருநிலனாய்த் தீயாகி நீருமாகி, இயமானனாய் எறியும் காற்றுமாகி, அருநிலைய திங்களாய் ஞாயிறாகி, ஆகாசமாய் அட்ட மூர்த்தியாகி'' என வரும் அட்டமூர்த்தப் பகுதி காண்க.[13] அடிகளாரது இக்கோட்பாட்டின் விளக்கமாகவே மெய்கண்டார் அருளும் அத்துவித விளக்கம் அமையும்.[14]

''பண்ணையும் ஓசையும் போலப் பழமதுவும்
எண்ணும் சுவையும்போல் எங்குமாம் — அண்ணல்தாள்
அத்துவித மாதல் அருமறைகள் ஒன்றென்னாது
அத்துவித மென்றறையும் ஆங்கு''
(சிவஞானபோதம் — 2-ஆம் சூத்திரம் — 1-ஆம் அதிகாரம்)

வேறாம் நிலை, ''விரிகதிர் ஞாயிறல்லர்'', ''மண்ணல்லை விண்ணல்லை'' முதலிய திருப்பதிகப் பகுதிகளில் கூறப்பெறும்.[15]

''அசிர்ப்பெனும் அருந்தவத்தால் ஆன்மாவின் இடமதாகி
உசிர்ப்பெனும் உணர்வுமுள்ளார் ஒற்றியூருடைய கோவே''

முதலிய பகுதிகள் உடனாய் நிற்கும் நிலை உணர்த்தியவை.[16]

பதிப்பொருளாய் விளங்கும் இறைவன் பசுக்களாகிய உயிர்களைப் பாச உலகிலிருந்து விடுத்து ஆட்கொள்ளும் பொருட்டுப் பல திருமேனிகள் கொண்டு நிற்றலை உடையவன் என்பது சித்தாந்த முடிபு. முதல்வன் இவ்வாறு கொள்ளும் திருவுருவம் அருள்வடிவம் ஆதலால், அவ்வுருவில் தோன்றும் குணங்கள், கரணங்கள், தொழில்கள் யாவும் அருள் வடிவே; இவையனைத்தும் இறைவன் மேற்கொள்வது தன்பொருட்டாக அன்று; உயிர்கள் ஆகிய பசுக்கள் உய்யும் பொருட்டே.

''உருவருள் குணங்களோடும் உணர்வருள் உருவிற் றோன்றும்
கருமமும் அருள் அரன்றன் கரசரணாதி சாங்கம்
தருமருள் உபாங்கமெல்லாம் தானருள் தனக்கொன்றின்றி
அருள்உரு உயிருக்கென்றே ஆக்கினன் அசிந்தனன்றே''
(சிவஞான சித்தியார் — 1-ஆம் சூத்திரம் பாடல் — 67)

அப்பரடிகளார், ''அரிதரு கண்ணியாளை ஒருபாகமாக, அருள் காரணத்தில் வருவார்'' என்று ஓதும் பகுதியை இந்த நோக்கில் காணுதல் சித்தாந்தப் பேருண்மையை விளக்குவதாக அமையும்.[17] இறைவன் இவ்வாறு மேற்கொள்ளும் திருமேனிகள், தன் இச்சையால் தானே மேற்கொள்ளும் திருமேனிகள் என்று சாத்திர நூல் குறிப்பு முடிவு செய்வது அடிகளாரும், பிற அருளாளரும் கூறும் இத்தகு விழுப்பொருள் பற்றியே என்று கூறலாம். இலிங்கோற்பவர், சந்திரசேகரர், நடராசர், உக்கிரர், அர்த்தநாரீசுவரர், பைரவர், பிட்சாடனர் முதலிய மாகேசுவர மூர்த்தங்கள் பற்றிய அடிகளார் அருட்குறிப்புகளைத் தொகுத்து நோக்கினால் விளங்கும் மெய்ம்மைகளும் பலவாம்.[18]

2. முப்பொருள் உண்மை :

''சொற்பாவும் பொருள் தெரிந்து தூய்மை நோக்கித்
தூங்காதார் மனத்திருளை வாங்காதானை'

என்று வரும் அடிகளார் திருவாக்கில், முப்பொருள் உண்மையும் பேசப்பட்டிருத்தல் உணர்ந்து மகிழ்தற்குரியது.[19] ''இருள்'' ஒன்றும் ''இருளை உடைய உயிர்கள் பல'' என்ற ஒன்றும், இருளை வாங்குகின்ற பதி ஒன்றும் ஆக முப்பொருள் உண்மை இதனுள் காணலாம்.

3. தத்துவங்களும் நீக்கமும் :

உயிர்களின் பொருட்டு இறைவன் படைத்துக் கொடுப்பன தத்துவங்களும், அவற்றின் காரியங்களாகிய தாத்துவிகங்களும் ஆம். அவை தொண்ணூற்றாறு என்று அடிகளார் அருள்வர். முப்பத்தாறு தத்துவங்கள் என்று சுட்டியதும் உண்டு. இத்தத்துவக் கூட்டங்கள் நீங்கப் பெற்றால் ஆன்மா இறைவன் திருவடிகளாகிய புகலிடத்தை அடையும் என்பர் அடிகளார்,

''உறுகயி றூசல்போல ஒன்றுவிட்
டொன்று பற்றி
மறுகயி றூசல் போல வந்துவந் துலவும்
நெஞ்சம்
பெறுகயி றூசல் போலப் பிறைபுல்கு
சடையாய் பாதத்து
அறுகயி றூசல் ஆனேன் அதிகை
வீரட்டனீரே''

என்பது அடிகளார் திருப்பாட்டு.[20] மெய் கண்டார், இதனுள் அப்பரடிகளார் அருளிய மெய்ம்மையைத் தம்முடைய வார்த்திகத்துள், ''இவ்வான்மாத் தன்னை இந்திரியத்தின் வேறாவான் காணவே தமது முதல் சீபா தத்தை அணையும் என்றது; ஊசல் கயிறற் றால் தாய் தரையேயாந் துணையான்'' என்று விளக்கினார். மெய்கண்டார் திருவுள்ளக் கிடையாக அப்பர்தம் சித்தாந்த நுட்பம் விளங் கியமை ஓர்ந்து இன்புறத்தக்கது.[21]

4.1. இறைவன் ஆணையும் வினைகளும் :

ஆன்மாக்களுக்கு, இருவினைகள் முதல்வன் ஆணையினான் வரும் என்று விளக்கவந்த மெய்கண்டார், உலகத்தில் வேந்தர் எல்லாம், பாடி காவலாளன் மாட்டுத் தம் ஆணையை வைத்தலும், அவனைக் கொண்டு காவல் தொழிலைச் செய்விப்பது போல என்று விளக்கினர்; ''ஒரு நகரியைக் காப்பான் பாடி காவலிட்டாங்கு அவை அவனது ஆக்கினை யாகலான்'' என்றனர். ''பாடிகாவல் என்பது நெறியின் வழீஇயினாரை வழக்கு வினாய் ஒப்ப நாடிச் செய்யுந் தண்டத் தொழிலுணர்த் துவதோர் சொல். ''கோடிகாவனைக் கூறீ ரேற் கூறினேன், பாடி காவலிற் பட்டுக் சழிதிரே", "கோடி காவனைக் கூறாத நாளெல் லாம், பாடி காவலிற் பட்டுக் கழியுமே' எனத் திருப்பாட்டோதியதூஉம் அது'' (சிவ ஞான பாடியம் — மாதவச் சிவஞான முனிவர் 2-ஆம் சூத்திரம் — 2-ஆம் அதிகரண உரை) என்ற பகுதி,[22] அடிகளார் திருப்பாட்டின் மெய்ம்மை மெய்கண்டார் திருவுள்ளத்தில் இருந்தமையைச் சிவஞான முனிவரும் உணர்ந்து உரைத்தருளியதாக அமைகின்றது.

4.2. வினைவகை விளக்கம் :

வினைகள் உயிர்களைப் பற்றி நின்று இடர் ஊட்டுபவை. இறைவன் அருளால் வினைத் துன்பங்கள் குறையும் என்பர். மும்மலங்களும் பரிபாகம் உற்ற காலத்து முதல்வன் அருள் வீழ்ச்சியால் உயிர்களிடத்திருந்து நீங்கும் என் பர். ''பண்டை வல்வினை'', ''தொல்வினை' ''முன்னை நான் செய்த பாவம்'', ''மேலை வினை'', ''மேலை ஏதங்கள்'' — எனவரும் தொடர்கள் கூர்ந்து நோக்கற்குரியவை. ''மூல நோய் தீர்க்கும் முதல்வன்'' என்ற இடத்து, ஆணவத்தை ''மூலநோய்'' (சகசமலம்) என்று மொழிந்தனர் அடிகளார்.[23]

5. நால்வகை நெறிகள் - நாதன் பணிகள் :

சைவசித்தாந்த சாத்திரத்துள், இறை பணியாக விரித்து உரைக்கப் பெற்ற சரியை, கிரியை, யோகம், ஞானம் பற்றிய குறிப்புகள் அப்பரடிகளார் திருவாக்குகளிற் காணப் பெறு கின்றன. அடிகளாரே தொண்டுநெறி தலைப் பட்ட தூயவரே; '' திருநாவுக்கரசு வளர் திருத்தொண்டு '' என்பர் சேக்கிழார். ''திருவங்கமாலை''த் திருப்பதிகம் முழுவதும் சரியை, கிரியை ஆகிய இரண்டின் விளக்க மாக அமைந்திருத்தல் காணலாம்.[24] ''ஞான யோகக் கிரியா சரியை தானும் நாதன்பணி', (சிவஞான சித்தியார் — 12-ஆம் சூத்திரம் — 3) ஆதலின் அடிகளார் இவற்றைத் தம் திருவாக்கு களில் விரித்துரைப்பாராயினர்.

சரியை முதலிய நான்கும் இறைவனுக்குச் செய்யும் வழிபாடுகளே என்ற கொள்கையைச் சிவஞான முனிவரும் தம் மாபாடியத்துள் இனிது விளக்கினர். அகப்பூசை மாண்பினைக் ''காயமே கோயிலாக'' என்ற திருநேரிசை யிலும், யோகச் சிறப்பினை, ''உயிராவண மிருந்து'' என்ற திருத்தாண்டகத்திலும் அடிக ளார் இனிது விளக்கியுள்ளனர்.[25]

6. அணைந்தோர் தன்மை அருளல் :

உயிர் இறைவன் திருவடிகளை அடைந்து பேரின்பம் பெறுதலையே சாத்திரங்கள் சிறப் புறச் சாற்றும். ''அணைந்தோர் தன்மை'' என்று சிவஞான போதத்துப் பன்னிரண்டாம் சூத்திரத்துக் கூறும் செய்தியை அடிகளார் திருவாக்கிற் பல இடங்களிற் குறிப்பாகவும், கீழ்வரும் திருத்தாண்டகத்தில் வெளிப்படை யாகவும் கூறியருளினர்.

''முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி ஆனாள்

அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தைத்
தன்னை மறந்தாள் தன் னாமம் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே''[26]

7. ஐந்தெழுத்து :

திருவைந்தெழுத்தை இறைவனுக்குரிய மூல மந்திரமாக அடிகளார் கருதினார்; ஒரு பதிக மாகவே அதன் சிறப்பை ஓதினார். தூல நிலை யிலும், சூக்கும நிலையிலும், இதனை ஓதுவர் அடிகளார். ''பஞ்சமந்திரம்'' என்றும் ஓது வதுண்டு.[27] ''ஓசை தரும் அஞ்செழுத்தை விதிப்படி உச்சரிக்க, ஊனம் எலாம் புகுந் தழிப்பன்'', ''விதி எண்ணும் அஞ்செழுத்தே'' என்றும் சாத்திர நூல்கள் விதிப்படி ஓதுக என்று கட்டளையிடுவதற்கு மூலவிதை யாக அமைந்தன திருமுறைப் பகுதிகளே எனலாம்.[28]

8. அடிகளார் அருட்கொடை :

சுருங்கக் கூறினால், சைவசித்தாந்த மெய்ம்மைகளும், கோட்பாடுகளும் திருநாவுக் கரசர் திருவாக்குகள் முழுவதும் விரவிக் கிடப் பன என்றும், அவற்றுட் காணப்பெறும் முப் பொருட் கொள்கைகள் பற்றிய கருத்துக்களே, மெய்கண்ட சாத்திரங்களில் பெருவிளக்கம் பெற்றன என்றும், அவ்வகையில் ''வாழும் தத்துவம்'' (Living Philosophy) ஆக விளங்கும் சைவத் தத்துவ நெறிக்கு அடிகளார் வழங்கி யுள்ள அருட்கொடை மிகப்பெரிது என்றும் தெளியலாம்.

அடிக்குறிப்புகள்

1 1) பாஞ்சராத்திர மதத்தின் கொள்கைகளை மாதவச் சிவஞான முனிவர் தம் பேருரையில் எடுத்து விளக்கு வதுடன் அவற்றிற்கு மறுப்பும் உரைத்துள்ளார். (காண்க : சிவஞான பாடியம்—சை. சி. நூ. கழகம் — (1936) பக் 63 ; பக் 320 — 328.)

2) திருநாவுக்கரசர் திருப்பதிகங்கள்—ஆறாம் திருமுறை—சித்தாந்தக் கலைமணி சி. அருணைவடிவேலு முதலியார் உரைப்பதிப்பு –(1963) பக். 76.

2. திருநாவுக்கரசர் தேவாரப் பதிகங்கள், சைவசித்தாந்த மகா சமாஜப் பதிப்பு—(1943)—5—100—2 (இவ்வாறு காட்டப்படும் மூன்று எண்களில், முதலாம் எண் திருமுறை எண் ; இரண்டாம் எண் பதிக எண் ; மூன்றும் எண் பாட்டு எண்.)
3. மேற்படி நூல் — 4-95-2 ; 4-48-2 ; 4-48 4 ; 4-37-9 ; 6-2-6 ; 6-4-3 முதலியவை காண்க.
4. மேற்படி நூல்—6-11-1 ; 6-50-3.
5. மேற்படி நூல்—5-100-8; 5-100-7.
6. மேற்படி நூல்— ஐந்தாம் திருமுறையில் இத்தலைப்புகளில் அமைந்த திருக்குறுந்தொகைப் பதிகங்களை நோக்குக.
7. மேற்படி நூல்—4-14-3 ; 4-33-6 ; 4-100-4.
8. மேற்படி நூல்—6-18-11,
9. சிவஞான பாடியம் — பக். 123.
10. அப்பர் தேவாரத்திறன், — டாக்டர். சொ. சிங்காரவேலன், துறைசை யாதீன வெளியீடு (1981)—அப்பர் மெய்ப் பொருள் நெறி-பக் 6.
11. திருநாவுக்கரசர் தேவாரப் பதிகங்கள், (1943) 6-51-8.
12. மேற்படி நூல்—4-75-8
13. மேற்படி நூல்—6-84-1.
14. சிவஞானபாடியம்—(1936) பக். 125.
15. திருநாவுக்கரசர் தேவாரப் பதிகங்கள் (1943) 4-8-2 ; 6 45 9,
16. மேற்படி நூல்—4-45-2.
17. மேற்படி நூல்—4 8-2.
18. அப்பர் தேவாரத்திறன் (1981) பக். 14.
19. திருநாவுக்கரசர் தேவாரப் பதிகங்கள் (1943), 6-67-2.
20. மேற்படி நூல்—4-26 6.
21. சிவஞான பாடியம்—(1936) பக். 445.
22. மேற்படி நூல்—பக்கங்கள் 131-132,
23. திருநாவுக்கரசர் தேவாரப் பதிகங்கள் (1943)-5-47-1 ; 6-6-2 ; 6 23-9.
24. அப்பர் தேவாரத் திறன் (1981), பக்கங்கள்-22 33
25. திருநாவுக்கரசர் தேவாரப் பதிகங்கள் (1943)-6 25 1.
26. மேற்படி நூல்—6-25-7.
27. மேற்படி நூல்—4-11-1-10 ; 5-11-3.
28. சிவஞானபோதம்—9-ஆம் சூத்திரம்.

பெருமன்றத்தில் நடைபெற்று வரும் "சிவத்தலப் பெருமை"
தொடர் சொற்பொழிவுக் கூட்டம்



இடமிருந்து வலம் :— திரு. மா. கோடிலிங்கம், திரு. ஆ. இராசரத்தின முதலியார், திரு. பெ. திருஞானசம்பந்தன், டாக்டர் திரு. கு. சுந்தரமூர்த்தி, டாக்டர் திரு. அ. மாணிக்கம்.

எனவரும் இறைவன் திருவாக்காலும் இவ் வுண்மை அறியத்தகும். இறைவன் தனக்கு உவமை இல்லாதவன், அடியரும் அன்னவர் என்பார், ''பெருமையால் தம்மை ஒப்பார்'' என்றார். அன்பால் நினைவார்தம் உள்ளக் கமலத்தில் அவர் நினைந்த வடிவோடு விரைந்து சென்று அருளுவதோடு அவர்கள் திருவுள்ளத்தில் தாம் என்றும் நிலைபெற்றிருப் பார் என்பார், ''பேணலால் எம்மைப் பெற் றார்'' என்றார். தந்தது உன்தன்னைக் கொண்டது என்தன்னை'', ''நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவன்'', ''எனக்குள் நீ உனக்குள் நான் என்று இருக்குமாறு எங்ஙனே'' எனவரும் திருவாக்குகள் ஈண்டு நினைவு கூரத்தக்கன.

ஒரு நெறிய மனம்கொண்டு போற்றும் உயர் வால் உலகையே வென்றிகொளத்தகும் பண்பு அவர்கள்மாட்டு உளதென்பார், ''ஒருமையால் உலகை வெல்வார்'' என்றார். ''ஒட் டிட்ட பண்பின் உருத்திர பல்கணத்தார்'' எனச் சிறப்பிக்கப் பெறுதலும் ஈண்டு நினைவு கூரத்தக்கது. இவ்வாறு ஒன்றி இருந்து நினை வார்க்கு எனைத்தானும் எஞ்ஞான்றும் யாதும் குறைவில்லை என்பார், ''ஊனமேல் ஒன்றும் இல்லார்'' என்றார். ''ஒன்றி இருந்து நினை மின்கள் உந்தமக்கு ஊனமில்லை, நின்னைக் குறுகினேற்கு இனி என்ன குறையே'', ''எங்கெழில் என் ஞாயிறு எமக்கேலோரெம் பாவாய்'', ''ஈரஅன்பினர் யாதுங்குறைவிலர்'' எனவரும் திருவாக்குகள் ஈண்டு நினைவு கூரத் தக்கன. இறைவனை ஒரோ வழி ஒரு கணப் பொழுது நினைந்து தம் உள்ளத்தில் நிறுத்திக் கொள்ள முயற்சிசெய்வது பலர்க்கும் எளிதாம். தம் உள்ளத்திலேயே இருத்தி இடையறாது போற்றி வாழும் நிலை பலர்க்கும் அரிதாம். அத்தகைய செயற்கரிய நிலையினர் என்பார், ''அருமையாம் நிலையில் நின்றார்'' என்றார். ''நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன் நினையாது ஒருபோதும் இருந்தறியேன்'', ''நாயகன் சேவடி தைவரு சிந்தையும்'', ''எட்டுக் கொண்டார் தமைத்தொட்டுக் கொண்டே நின்றார்'' எனவரும் திருவாக்கு கள் ஈண்டு நினைவு கூரத்தக்கன. தம் அன்பை இடையறாது இறைவன் பால் செலுத்திக் கொண்டிருப்பதே இன்பம் என்பார். ''அன்பி னால் இன்பம் ஆர்வார்'' என்றார். ''அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்'' என வரும் திருமந்திரத்தாலும், ''இறவாத இன்ப அன்பு'' என இவ்வன்பை இப்பனுவல் குறிப்பதாலும் இவ்வுண்மையை அறியலாம். ஏனையோரிடத்தும் ஏனையவற்றிலும் செலுத் தும் அன்பு தொடங்குங்கால் இன்பமாயிருப் பினும் பின் துன்பம் பயப்பனவேயாம் என்பது இதனால் அறியக் கிடக்கின்றது. இத்தகைய அடியவர்கள் இம்மை மறுமையாகிய ஈரிடத் தும் வரும் இன்பியலை ஒறுத்தும் வெறுத்தும் நிற்பார் என்பார், ''இருமையும் கடந்து நின்றார்'' என்றார். ''உற்றாரை யான் வேண்டேன் ஊர் வேண்டேன் பேர் வேண் டேன்'', ''கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு'' எனவரும் திருவாக்குகள் இருமை வகை தெரிந்து ஈண்டறம் பூண்ட இவர்கள் பெருமையை விளக்கி நிற்கிறது.

இத்தகைய அடியவர்களில் தொகையடி யார்கள் எனக் குறிக்கத்தக்க ஒன்பதின் மர்களை மூவகையில் பிரித்துக் காணலாம். இடவகையால் எண்ணத்தக்கவர் மூவர். மன மொழி மெய்களால் வழிபட்ட வகையில் எண்ணத்தக்கவர் மூவர். தனித்தனியாக எண்ணத்தக்கவர் மூவர்.

1. தில்லை வாழந்தணர்: இடவகையால் எண்ணத்தக்கவர்களில் இவர்கள் முன்னவ ராவர். இவர்கள் தில்லையில் வாழ்பவர்கள். திருக்கோவிலுக்குள்ளேயும் இறைவனது திரு மேனியைச் சார்ந்து அணித்தேயும் செய்யப் பெறும் திருத்தொண்டிற்கு உரியராவர். உறுவது நீற்றின் செல்வம் எனக்கொளும் உள்ளமும், பெறுவது சிவன்பால் அன்பாம் பேறு எனக் கருதி வாழும் பெற்றியும் உடைய வர். இவர்களைப் பற்றிச் சேக்கிழார் பத்துப் பாடல்களில் பாடியருளியுள்ளார். முதல் இரு பாடல்களும் கூத்தப்பெருமானின் ஆடற் சிறப்பை உளங்கொண்டு போற்றுவனவாய் உள்ளன. காரணம் கூத்தப்பெருமானை உள் ளும் புறமும் வழிபட்டுவரும் சீர்மையும், அதனால் அவர்கள் சிறந்து வாழ்கின்றமையு மாம். இவர்களைப் பாராட்டி மகிழும் எட் டுப் பாடல்களிலும் மூவகையில் இவர்கள் குறித்துப் போற்றப்படுகின்றனர்.

ஒன்று பண்பு நலன், பிறிதொன்று அறிவு நலன், மற்றொன்று பத்திமை நலன். தென்

தமிழ்ப் பயனாயுள்ள திருத்தொண்டத்தொகை யுள் ஆரூர்ப் பெருமான், முன் திருவாக்கால் கோத்த முதற் பொருளாகும் பெருமை இவர் களுக்கமைந்தமை தலையாய பெருமையாகும்.

2. திருவாரூர்ப் பிறந்தார் : ஆரூர்ப் பிறக்க முத்தி என்பர். இங்குப் பிறத்தல் செயற்கை யில் எய்தும் இயற்கைத்தன்று. இத்தகு பெருமையுடைமையால் தான் நம்பியாரூரர், ' திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்குமடி யேன் '' என உளங்கிளரப் போற்றுவாராயி னர். நமிநந்தியடிகள் திருவாரூர்ப் பெருமா னின் திருவிழாக் காட்சியை மணலியில் கண்டு தம்மனைக் கண் இழிவின் தொடக்கால் உட் புகுதாது இருக்க, அவர் கனவில் '' ஆரூரில் பிறந்தாரெல்லாம் நம் கணங்கள் ஆன பரிசு காண்பாய் '' என்று அருளிச் செய்தமை திருவாரூர்ப் பிறந்தார் தம் பெருமையைப் பெரிதும் விளக்குவதாகும். மனுவேந்தன் தன் மகன் செய்த தீங்கிற்காக ஒறுக்கவேண்டு மென மதியமைச்சர்களிடம் கூற, அவர்கள், ' மறை மொழிந்த அறம் புரிதல் நெறி யென்று ' கூறத், ' திருவாரூர்த் தோற்ற முடை உயிர் கொன்றான், ஆதலின் அவனைக் கொல்லுவதே அறம் '' என்கின்றான். இப் பகுதியால் திருவாரூர்ப் பிறந்தார்கள் மட்டு மன்று; அங்குப் பிறந்த உயிரினங்கள் அனைத் துமே உயர்வுடையன எனக் கருதுமாறுளது.

3. அப்பாலும் அடிச்சார்ந்தார் : இத் தொட ரில் குறிக்கப் பெறும் அடியவர்கள் முன் எண்ணியவாறு ஒவ்வோர் இடங்கட்கு மட்டுமே உரியர் அல்லர். உலகனைத்திலும் சிவபரம் பொருளிடத்துப் பத்திமை பூண்டிருக்கும் அடி யவராவர். அப்பாலும் என்னும் சொல் இவ்வாறு இடந்தழுவி நிற்பதோடன்றிக் காலந் தழுவியும் நிற்கும் எனச் சேக்கிழார் பெருமான் குறித்தருளுகின்றார். இவ்வாற்றான் தமிழ் வழங்கும் நாட்டிற்கு அப்பால் உலகந் தழுவி வாழும் அடியவர்களையும், திருத் தொண்டத் தொகையில் குறிக்கப்படும் அடியவர்களின் காலத்திற்கு முன்னும் பின்னும் உள்ளவர் களையும் இத் தொடர் குறிக்கின்றது. இடம், காலம் இரண்டிற்கும் அப்பாற்பட்டு விளங்கும் அடியவர்கள் அப்பாலும் அடிச் சார்ந்தவ ராவர் என விளக்கம் கண்டமை சேக்கிழாரின் அறிவு நலத்தையும், அகன்ற அன்புள்ளத்தை யும் காட்டுகின்றது. நாடு கடந்து மொழி கடந்து, இனம் கடந்து, காலம் கடந்து வாழ்ந்த வாழ்கின்ற, இனியும் வாழ வருகின்ற அடிய வர்கள் அனைவரையும் போற்றி வழிபட்டி ருக்கும் திறத்தால் இக் காப்பியம் உலகம் தழு விய காப்பியமாய் அமைந்து நிற்கின்றது.

1. சித்தத்தைச் சிவன் பாலே வைத்தார் : இறைவனை மனம் மொழி மெய் ஆகிய மூன்றி னாலும் வழிபடுவதே முழுமையான வழிபா டாகும். ஆயினும் இவ்வடியவர் முதலாக இங்கு எண்ணப்பெறும் மூவகை அடியவரும் ஒவ்வொரு கருவியால் வழிபட்டமை விதந்து பேசப் படுகின்றது. காரணம் பத்திமை என்பது மனம் மொழி மெய் ஆகிய மூன்றனுள் ஒன்றைச் செலுத்தவே ஏனையவும் அதற்கு அரணாகும் பான்மையில் செலுத்தத் தக்கது என்பதும் இப்பாங்கு இவ்வடியவர் மாட்டு இருந் தது என்பதும் கொண்டு ஆகும். சித்தம் என்பது எஞ்ஞான்றும் யாதானும் ஒன்றைச் சிந்தித்துக் கொண்டே இருக்கும் கருவியாகும். அவ்வாறு பலவழிப்பட்ட சிந்தனையை ஒரு வழிப்படுத்தி இறைவனுடன் ஒன்றுபடுத்திக் கொண்டு வாழும் வாழ்வு அரியதும் பெரியது மாகும். மனம் பற்றியது ஒன்றைச் சிந்திக்க வல்லது சித்தமாகும். அவ்வாறு சிந்தித்து அயர்ந்து போகும் சித்தத்தை இவ்வாறு ஒரு வழிப்படுத்தி உயர்ந்து விளங்கும் அடியவர் கள் இவர்கள் ஆதலின் இவர்களைச் சிறப் பித்துப் போற்றினார் சேக்கிழார். இவ் வகையில் ஒருமையால் உலகை வெல்லும் உயர் நிலை இவர்களுக்குரியதாகும்.

2. பரமனையே பாடுவார் : மனம் பற்றிய வாறு யாதானுமொரு பொருளை எண்ணிப் பாடுவோர் பலர். பொருள் பற்றினால் மனித இனத்தைப் புகழ்ந்து பாடுவோரும் பலர். இவ்வாறு பாடப் பெற்றனவும், பாடிப் பெற்ற பொருள்களும் நிலைபேறுடையன வல்ல ஆதலின், உயர்ந்த குறிக்கோளுடைய அடியவர்கள், யாவர்க்கும் மேலாய பரம னையே பாடி வாழ்வாராயினர். பரமனையே என்ற விடத்துள்ள ஏகாரம் தேற்றத்தின்கண் வந்தது. பாடுதல் வாயின் தொழில். அத் தொழிலால் இருள் சேர் இரு வினையும் நீங் கும் என்பர் திருவள்ளுவர். அத்தகைய அரும் பணியை ஒன்றிய மெய்யுணர்வோடும் உள்ளுருகிப் பாடும் பெரும் பணியைச் செய்த வர்களாதலின் இவர்கள் போற்றப் பெற்றனர்.

3. பத்தராய்ப் பணிவார் : பணிதல் மெய்யின் தொழிலாம். எனினும் இப்பணிவு மனம் மொழியாகிய இரண்டன் வழித்தாயும், வயத்ததாயும் நிகழ்தலின் முக்கருவிகளாலும் வணங்குவார் என்பதே புலனாகும். இவ்வடியவர்களைப் பற்றிக் காணப்படும் எட்டுப் பாடல்களில் முதல் ஏழு பாடல்களும் பழைய ஏடுகளில் இல்லையெனச் சிவக் கவிமணியவர்கள் குறித்துள்ளார்கள். ஆயினும் அவ்வேழு பாடல்களிலும் திருத் தொண்டர்களுக்கு இன்றியமையாத எட்டுக் குணங்களும் கூறப்பட்டுள்ளன என்று திருத்தொண்டர் புராண சாரம் கூறுகிறது. அவ்வெண் குணங்கள் :

'' தொண்டரடித் தொழல்பூசைத்
தொழின் மகிழ்த லழகார்
துளங்கியவர்ச் சனைபுரித
றொகுதிநிய மங்கள்
கொண்டபணி திருவடிக்கே
கொடுத்த லீசன் குணமருவு
மருங் கதையைக்
குலவிக் கேட்டு
மண்டிவிழி துளும்பன்மயிர்
சிலும்ப லுன்னன்
மருவுதிருப் பணிகாட்டி
வருவ வாங்கி
யுண்டிகொளா தொழிதலென
விவையோ ரெட்டு
முடையவர் பத்தரென
வுரைத்து ளோரே. ''

எனவரும் பாடலால் அறியக் கிடக்கின்றன. இறைவர்க்கு எண்குணத்தான் என்னும் பெயருண்டு. அடியவர்களுக்கும் இவ்வெண் குணங்களும் இருத்தல், '' பெருமையால் தம்மை ஒப்பார் '' என்பதை மெய்ப்பிக்கும்.

எட்டாவது பாடலில் சங்கரனுக்காளான இவர்களது தவமும், அதன் பயன் துய்க்கும் பேறும், பொங்கியெழும் சித்தமுடன் பத்தராய்ப் போற்றி வாழும் பொலிவும் குறிக்கப் பெற்றுள்ளன.

1. பொய்யடிமையில்லாத புலவர் : தொகையடியார்களில் தனித்தனியாக எண்ணத்தக்கவரில் முன்னவராக விளங்குபவர் இவர். பொய் என்பது ஈண்டு பொய்ப் பொருளைக் குறிக்கும். அப் பொருள்கள் உலகமும் அதன் வழிபட்ட நுகர் பொருள்களுமாகும். ' நில்லாதவற்றை நிலையின என்று உணரும் புல்லறி வாண்மை கடை ' 'பொருளல்லவற்றைப் பொருள் என்று உணரும் மருளானாம் மாணாப் பிறப்பு' எனவரும் திருக்குறட்பாக்கள் மிகவும் ஆழ முடையன. பொய்ப்பொருளை மெய்ப் பொருளாகக் கொள்வது அறிவுடைமையாகாது. அன்றியும் அவ்வுணர்வு பிறவிக்கும் வித்தாகும் என்பது இக் குறட்பாக்களின் கருத்தாகும். புல்லறிவு நீங்கி நல்லறிவு கோடலும் அதன் பயனாகப் பிறப் பென்னும் பேதைமை நீங்கிச் சிறப் பென்னும் செம்பொருள் காண்பதும் அறிவின் முடிந்த முடிபாகும். அத்தகைய முடிந்த பயனைப் பெற்றவர்கள் இவர்கள். ஆதலின் இவர்கள் மெய்ப்பொருளாய இறைவனுக்கு அடிமை செய்து வாழும் பெற்றிமையோடு திகழ்கின்றனர்.

இத்தகையோர் யாவர் என்பதில் கருத்து வேற்றுமை உள்ளது. பொய்யடிமையில்லாத புலவர் என்பார் மணிவாசகர் எனக் கூறி, இத்தொடரைத் தனியடியாரைக் குறிப்பதாகக் கொள்வர் சிலர். மணிவாசகராயின் ஏனைய மூவரையும் (அப்பர், சம்பந்தர், சுந்தரர்) சிறப்பித்துக் கூறியிருப்பது போல இவர்தம் வரலாற்றிலும், அருட் செய்கைகளிலும் பெரிதும் ஈடுபட்டுக் கூறியிருப்பர். சேக்கிழார், அவ்வாறு கூறப் பெறாமையே அவர் அல்லர் என்பது துணிபாம். அன்றியும் நம்பியாண்டார் நம்பிகள் இத் தொடர் சங்கப் புலவர் நாற்பத்தொன்பதின் மரையே குறிக்கும் என மிகத் தெளிவாகக் கூறியுள்ளார்.

'' தரணியிற் பொய்மை யிலாத்
தமிழ்ச் சங்க மதிற்கபிலர்
பரணர்நக் கீரர் முதனாற்பத்
தொன்பது பல்புலவோர்
அருணமக் கீயுந் திருவால
வாயரன் சேவடிக்கே
பொருளமைத் தின்பக்
கவிபல பாடும் புலவர்களே ''

என்பது அவர் திருவாக்காகும். ஆதலின் தொகையடியார் வரிசையில் எண்ணத்தக்க தொடரே இது என்பதும், இத் தொடரின் கண் கூறப் பெற்றிருப்பவர்கள் சங்கப் புலவர் நாற்பத்தொன்பதின்மர் ஆவர் என்பதும் ஒருதலை.

இவர்கள் கற்றதனாலாய பயன் வாலறிவன் நற்றாள் தொழுவதே என்பதையும், இறைவன் புகழே பொருள் சேர் புகழ் என்பதையும் நன்குணர்ந்தவர்களாதலின் மெய்ப் பொருளுக்கு ஆளாகியும், அப் பொருளின் பொருள் சேர் புகழைப் போற்றியும் வாழ்ந்து உயர்ந்தனர்.

2. முப்போதும் திருமேனி தீண்டுவார்: திருக்கோயில்களில் இறைவனை ஆறு காலங்களிலும் பூசனை செய்தல் வழக்கம். அவ் ஆறு காலங்களிலும் காலை, நண்பகல், மாலை எனும் முக்காலங்களும் சிறப்புடையன. ஆதலின் முப்போதும் திருமேனி தீண்டுவார் என்றார்.

அவ்வாறு வழிபாடு ஆற்றுங்கால் அப்போதைக் கப்போது ஆர்வமிகும் அன்பு இவர்கள் மாட்டுத் ததும்பும் எனக் குறித்திருப்பது இவர்களுக்கு இறைவன் மீது உள்ள பத்திமையை விளக்குவதாகும். இவர்களைப்பற்றி மூன்று பாடல்களில் பின்னிரண்டு பாடல்களும் பல படிகளில் இல்லை என்பர் சிவக் கவிமணியவர்கள்.

3. முழு நீறு பூசிய முனிவர்: திருநீறு அடியவர் அணிந்து இன்புறுவது மட்டுமன்று, இறைவனும் அணியப் பெறும் பேறுடையது. 'மெய் யெலாம் வெண்ணீறு சண்ணித்த மேனியான்,' ''செய்யா வெண்ணீறாடி,'' ''உருவளர்பவள மேனி ஒளி நீறணிந்து'' மண்டமர் பல கடந்து மதுகையால் நீறணிந்து '' எனவரும் திருவாக்குகள் இவ் வுண்மையை விளக்கும்.

திருமுறைகளில் தனியொரு பதிக வழிச் சிறப்புப் பெறுவன முப்பொருள்களாம். ஒன்று திருநீறு, பிறிதொன்று திருவைந் தெழுத்து, மற்றொன்று திருவாரூர் ஆதிரை விழாச்சிறப்பு இவற்றுள் திருநீற்றுப் பதிகம் என்பது திரு ஞான சம்பந்தரால் அருளிச் செய்யப்பெற்றதாகும். அதில் வரும் ஒரு தொடர் 'முனிவர் அணிவது நீறு ' என்பதாகும். அவ்வாறு நீறு பூசுதலும் சிறுமகாருக்கு நெற்றியில் தொட்டிட்டு அணியும் வெண்ணீற்றுக் குறி போல்வதன்று. முழுமையாக அணிதல் வேண்டும். அவ்வாறணியும் பேறுடையர் என்பார் 'முழுநீறு பூசிய முனிவர்' என்றார். ''தூய வெண்ணீறு துதைந்த பொன் மேனியும் ''என்ற தொடரால் நாவரசர் நீறணிந்த திருக்கோலம் விளங்கும்.'' முழுநீறு என்பது உடல் முழுதும் நீறணிதலைக் குறிக்கும். அவ்வாறு அணிபவரே தகுதியாலும் முழுமை பெறுவர் என்பதையும் அத் தொடர்க் குறிப்பு விளக்கும். இம் முனிவர் பற்றிய பாடல்கள் ஆறனுள் முன் ஐந்து பாடல்களும் பல படிகளில் காணப்படவில்லை என்பர் சிவக்கவி மணியவர்கள். அப்பாடல்கள் ஐந்தும் திருநீற்றை உருவாக்கும் முறைபற்றிக் குறிப்பிடுகின்றன. ஆறாவது பாடலில் அதனை அணிந்து விளங்கும் முனிவரர், ' சாதியினில் தலையாய தருமசீலர் '' என்றும், ' தத்துவத்தின் நெறியுணர்ந்தோர் '' என்றும், 'தங்கள் கொள்கை நீதியினில் பிழையாது நெறியில் நிற்போர் '' என்றும், '' புலியதளின் உடையானைப் போற்றி நீற்றை ஆதிவரும் மும்மலரும் அறுத்த வாய்மையர் '' என்றும் சிறப்பிக்கப்படுகின்றனர்.

ஒரு பெருங்காப்பியத்தில் காப்பியத் தலைவரோடு ஒத்த பெருமைக்குரியராயும், தொகையடியார் எனத் தனியொரு நிரலில் குறிக்கப் பெற்றிருப்பவராயும் அமைந்திருக்கும் புதுமை இச் சீரிய காப்பியம் ஒன்றிலே யாம் என்பது உளங்குளிர எண்ணத்தக்கதாம்.

உ
சிவமயம்

மங்கையர்க்குத் தனியரசி

(புலவர் திருமதி ச. குழந்தையம்மாள் தூத்துக்குடி)

மங்கையர்க்குத் தனிரசி எங்கள் தெய்வம்
வளவர்திருக்குலக்கொழுந்துவளைக்கைமானி
செங்கமலத் திருமடந்தை கன்னிநாடாள்
தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப்பாவை
எங்கள்பிரான் சண்பையர்கோன் அருளினாலே
இருந்தமிழ்நா டுற்றஇடர் நீக்கித்தங்கள்
பொங்கொளி வெண்திருநீறு பரப்பினாரைப்
போற்றுவார் கழல்எம்மால் போற்றலாமே.

—பெரிய புராணம்

மங்கைய ராகப் பிறப்பதற்கே நல்ல
மாதவம் செய்திடல் வேண்டு மம்மா.

என்றார் கவிமணியவர்கள். மங்கையருள்ளும் சைவமாம் சமயஞ்சாரும் நல்லூழ் பெற்ற சைவ மங்கையராகப் பிறக்கப் பல பிறவிகளிலே மாதவம் செய்திடல் வேண்டும். சைவத் திறமடையும் பெருமை பெற்ற சைவமங்கையர்கள் '' என்ன மாதவம் செய்தனை நெஞ்சமே '', எனப் பெருமிதம் கொள்ளலாம். சேக்கிழார் போற்றும் சைவ மங்கையர்கள், தம் வாழ்வில் தம் கணவருக்கு, சைவ வழித்துணையாக நின்று, அவர்களின் சிவத்தொண்டுகள் யாவினுக்கும் கைகொடுத்துதவி மாதரறங்களை மாட்சிபெறச் செய்து வாழ்ந்தனர். தங்கள் கணவரின் செயல்களில் துணை நின்ற தோடல்லாது அவர்களை நாயன்மார்களாக்கிய பெருமைக் குரியவர்களாகவும் விளங்கினார்கள். அத்தகைய சைவ மங்கையருள் நாயகமாக—தனியரசியாக விளங்கும் பெருமை பெற்றவர் மங்கையர்க் கரசியார்.

பாண்டிய நாட்டில் சைவம் தளர்ந்த காலத்தில்—மன்னனே சமண நெறி நின்ற அந்நிலையில்—தனியொருவராக—மெய்ம்மைக் குலச்சிறையாரின் துணையுடன், சண்பையர் கோன் அருளினாலே சமணத்தை வீழ்த்தி, மேன்மைகொள் சைவநெறியை மீண்டும் நிலை நிறுத்திய செயற்கரும் செயல் செய்த தீரராகிய மங்கையர்க்கரசியாரை,

''மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம் '' என்று வணங்குகிறார் சேக்கிழார் பெருமான்.

வளவர்கோன் பாவையாக அவதரித்த அவ்வன்னை '' மானி '' என்னும் பெயருடையவராகவும் விளங்கினார். '' மாணாபரணர் '' என்பது சோழர்களுக்கு அமைந்த சிறப்புப் பெயர்களுள் ஒன்று. அத்தகைய சிறப்புடைய மணிமுடிச் சோழன் மகளாராகிய மங்கையர்க்கரசியாருக்கு '' மானி '' என்பது இயற் பெயராகவும் அமைந்திருக்கலாம்.

'' வரிவளையாள் மானிக்கும் நேசனுக்கும் அடியேன் '' என்று திருத் தொண்டத்தொகையில் '' மானி '' என்ற பெயரையே குறிப்பிடுகிறார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

செம்பியர் பெருமான் குலமகளார் பாண்டிமாதேவியானார். பாண்டியன் முன்னை வினைப்பயனால் சிவ நெறியை விட்டு, அவநெறியாகிய சமண சமயம் சார்ந்து நின்றான். பாண்டிய நாடே சமண மாயது. '' நன்னெறி திரிந்து மாறி நவை நெறி நடந்ததன்றே' என்கிறார் சேக்கிழார். இந் நிலையில் தென்னவன் உய்வதற்காகவே அவதரித்த செல்வப் பாண்டி தேவியார், மந்திரி குலச்சிறையார், இவ்விருவர் மாத்திரமே அந்நாட்டில் சைவர்களாக வாழ்ந்தனர். '' இருவர் தம் பாங்கு மன்றிச் சைவம் அங்கெய்தாதாக'' என்று பாண்டிய நாட்டின் நிலையை விளக்குகிறார் சேக்கிழார் பெருமான். தமிழ் நாட்டுக்கு ஏற்பட்ட தீங்கினை எண்ணிச் சிந்தையில் பரிவு கொண்டார் அம்மையார். தான் சைவத்தில் நிற்குந் தன்மை தன் கணவனுக்குப் புலப் படாவகையில் ஒழுகினார், கணவனைப் பேண

வேண்டுவது கற்புடை மங்கையின் கடமை. ஆனால் அம்மையாரோ, கணவனையும் பேண வேண்டும்; சைவத்தையும் காக்க வேண்டும். சைவச் சின்னங்களைக் கண்டால் சமணனாகிய கணவனுக்குக் கண்டு முட்டு. ஆகவே சைவச் சின்னங்களையும் பேண வேண்டும். என் செய்வார் ! திருநீறு பூசுவதைக் கணவன் அறியா வகையில், அத் திருநீற்றைச் சந்தனத் துடன் குழைத்து, மார்பினில் அணிந்து கொண்டார். இந் நிலையைக் காணாதே அம்மையாரிடம் அன்பு கொண்ட திருஞான சம்பந்தப் பெருமான் மதுரையின் எல்லையில் நின்று பாடும் முதற் பதிகத்தில் குறிப்பிடு கிறார், '' முத்தின் தாழ்வடமும் சந்தனக் குழம்பும் நீறும் தன் மார்பினில் முயங்க பத்தியார்கின்ற பாண்டிமாதேவி.'' எனக் குறிப்பிடுகிறார்.

இந்நிலை மங்கையர்க்கரசியாரின் தற் காத்துத் தற்கொண்டான் பேணும் திறத்தை உலகுக்கு உணர்த்துகிறது.

இந் நிலையில் திருஞான சம்பந்தப் பெரு மானைக் கேள்வியுறுகிறார். கேட்ட அள விலேயே உள்ளத்துயர்ந்தெழுந்த அன்புப் பெருக்கால் பால் சுரக்கிறது. என்னே ? அன்பின் திறம். இந்த அன்பைப் போற்று கிறார் சிவப்பிகாச சுவாமிகள். திருஞான சம்பந்தருக்குத் தாயார்கள் மூவர் எனலாம். அவரைப் பெற்றெடுக்கும் பேறு பெற்ற பகவதி யார் ஒருவர். மூன்றாண்டில் பொய்கைக் கரையில் அழுதபோது, அழுகையைக் கண்டு இரங்கி ஞானப்பால் அளித்த உமையம்மை மற்றொருவர். இன்னொருவர் அவர் நிலை கேட்ட அளவிலேயே பால் சுரந்த மங்கையர்க் கரசியார். இம் மூன்று தாயரிலே, பெற்றெ டுத்த தாயாராகிய பகவதியார் ஈறில் பெருந் தவம் செய்து தாய் எனப் பேறுபெற்றவர். தாய்மை அன்பை அடைந்த அவர், பால் கொடுத்தது கடமையின் பாற் படும். ஆகவே அவரை நீக்கி ஏனைய இரு தாயரையும் ஒப் பிட்டு யார் சிறந்த தாயர் என்று ஞான சம்பந்தரிடம் வினவுகிறார் சிவப்பிரகாச சுவாமிகள் :

பிள்ளையார் அழுதல் கண்டு
பால் சுரந்தாள் உமையம்மை
அவர் நிலைவிளம்பக் கேட்டுக்
கொங்கை சுரந்தாள் அருட்கோமகள்

இருவரின் காணாதே பிள்ளையாரின் நிலை கேட்டு, அன்பின் பெருக்கால் பால் சுரந்த, தலையன்பு வாய்ந்த மங்கையர்க்கரசியாரின் பேரன்பை எண்ணி, எண்ணி மகிழ்கிறார் சிவப்பிரகாசர்,

இலைபடர்ந்த பொய்கை இடத்தழுதல் கண்டு
முலைசுரந்த அன்னையோ முன்நின்—நிலை
[விளம்ப
கொங்கை சுரந்தஅருட் கோமகளோ ?
சம்பந்தா !
இங்குயர்ந்தாள் ஆர்சொல் எனக்கு.

என்று மங்கையர்க்கரசியாரை உமையம்மை யோடு ஒப்பிட்டுப் பாடுகிறார். மங்கையர்க் கரசியார் பெற்ற பேறுதான் என்னே ! இப் பேரன்பைத் திருக்களிற்றுப்படியார் ஆசிரி யரும் விளக்குகிறார்,

சுரந்த திருமுலைக்கே துய்ய சிவஞானம்
சுரந்துண்டார் பிள்ளையெனச் சொல்ல—
[சுரந்த
தனமுடையாள் தென்பாண்டி மாதேவி
[தாழ்ந்த
மனமுடையாள் அன்பிருந்த வாறு.

இவ்வாறு சாத்திரமும் தோத்திரமும் புகழ நின்ற, இவ்வம்மையார், மங்கையர்க்குத் தனி யரசியே யாவார்.

சிரபுரச் செல்வராகிய திருஞான சம்பந்தப் பெருமானிடத்தில் அளவிலா அன்புகொண்ட அம்மையார், பிள்ளையார் திருமறைக் காடு சேர்ந்த செய்தியைக் கேள்வியுறுகிறார். கேட்ட வுடன் தான் தூரத்திலுள்ள மதுரையிலிருந் தாலும், பிள்ளையாரின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கிய உணர்வைப் பெறுகிறார். ''சேட் படு புலத்தாரேனும் சென்றடி பணிந்தார் ஒத்தார் '' என்று பெரிய புராணம் கூறுகிறது. ஞானச் செல்வரைத் தம் நாட்டிற்கு அழைத் தார். மதுரையின் எல்லையில் பிள்ளையாரை வரவேற்றார் குலச்சிறையார். அங்கு நின்று பாலறாவாயர் '' ஆலவாயிது '' என்று மது ரையின் முதற் பதிகம் பாடும்போது, ''மங்கை யர்க்கரசி வளவர்கோன் பாவை '' என்று எடுத்துப் பாடும் பெருமையைப் பெறுகிறார் அம்மையார். அப் பதிகத்தில் அம்மையாரை, 'பங்கயச் செல்வி'' ''சிவன் திரு நீற்றினை வளர்க்கும் பந்தணை விரலாள் '' - பத்திலார்

கின்ற பாண்டி மாதேவி '' '' செய்ய தாமரை மேல் அன்னமேயனைய சேயிழை '' பன்னலம் புணரும் பாண்டி மாதேவி '' என்றெல்லாம் புகழ்கிறார். ஞானபோனகர் வாக்கால் தேசுடைய பாடல் பெறும் பெருந்தவமுடைய மங்கையர்க்கரசியாரின் மாண்பு நம்மால் அளவிட்டு உரைக்கும் தரத்ததன்று.

பிள்ளையாரை வரவேற்கக் குலச்சிறையாரை ஊரின் எல்லைக்கு அனுப்பிய அம்மையார், தான் ஆலவாய் அமர்ந்தார்தம்மைக் கும்பிட வேண்டும் என்று கொற்றவனிடம் கூறித் திருக்கோவில் சென்றார். அங்கு நம்பரை வணங்கிப் பிள்ளையாரை வரவேற்க நின்றார். பிள்ளையார் கோவிலுக்கு எழுந்தருளுமுன் புகுதும்; அப்பொழுது, ஆலவாயண்ணலைத் தொழும் விருப்பால் செல்லும் பிள்ளையார் முன் செலாது ஒருமருங்கு ஒதுங்கி நின்றார். பெருமானை வணங்கிப் பிள்ளையார் மீள்கின்றபோது சிவக்கன்றின் செய்ய பொன்னடிக் கமலங்களில் வீழ்ந்து வணங்கி நின்றார். இச் செயல் அம்மையாரின் அடக்கப் பண்பினையும், தாழ்வெனும் தன்மையினையும், பத்திமையையும் விளக்குகிறது.

திருஞான சம்பந்தரைத் தொழுதெழுந்த நற்றவத்து மானியார், தம் மனக்கருத்து முற்றியதென மதித்து, கண்களில் நீர் மல்க, பவளவாய் குழறி, '' யானும் என்பதியும் செய்த தவமென்கொல்'' என்கிறார். வேற்றுச் சமயத்தில் நின்றொழுகும் தன் கணவனையும் உட்படுத்திச் சொல்லும் பாங்கு அம்மையாரின் கற்புடைமைக்குச் சான்றாக இலங்குகிறது.

திருஞான சம்பந்தர் வரவால் சித்தம் இன்புறும் அமைச்சராகிய குலச்சிறையார் திருமடம் காட்ட ஞானசம்பந்தர் அங்குத் தங்கினர். குலச்சிறையார் அம்மையாரிடம் வந்து, பிள்ளையார் இங்கணைந்திடப் பேறு பெற்றமை, ஈசன் அன்பர் தம்மை நாம் இன்று இறைஞ்சப் பெற்றோம். இனிச் சமணர் செய்யும் வஞ்சனையறியோம், என்ற போது, அம்மையார் அஞ்சினார். வஞ்சகப் புலையர்களாகிய சமணர்கள் ஈனமே புரிய வல்லவர்கள். நாம் என்ன செய்வது ? என்று மயங்கி, பின் ஞானசம்பந்தர் தம்பால் நன்மையல்லாது செய்யும் ஊனம் வந்தடையின் உயிர் துறந்தொழிவது என்று துணிந்தார். பின் இரவு மடத்தில் சமணர்கள் தீயிட்ட செய்தி கேட்டு, பெருகும் அச்சமோடு, ஆருயிர் பதைத்து, சிரபுரப் பிள்ளையாரை இத்தீயவர் நாட்டிடை வரவழைத்த நாம் மாள்வதே சரி எனத் துணிந்தார். திருமடத்தில் தீயினால் தீதில்லை என்ற செய்தியறிந்து தெளிந்தார். கடைசிவரை எப்படி யாகுமோ ? எனவும் சிந்தித்தார். சைவம் காக்கும் பணியில் உயிரையும் விடத் துணிந்த அம்மையின் தியாகம் வணங்குதற்குரியது. ஞானசம்பந்தப் பெருமானைத் தன் சேயெனவே எண்ணி அவருக்குத் தீங்கு நேரின் உயிரையும் விடத்துணிந்த அன்புடைத் தாயாக விளங்கினார் அம்மையார். இவரன்றோ ! சைவத்தின் தாய் என்று போற்றுதற்குரியவர்.

பாண்டியன் வெப்பு நோயால் தவிக்கும் போது, பாண்டி மாதேவியார், இந் நோய்க்குத் தீர்வு பிள்ளையார் அருளே என்று கணவனுக்குத் தக்க சமயத்தில் எடுத்துக் கூறி, ஞானத்தின் திருவுருவை – கானத்தின் எழுபிறப்பைக் கண் களிப்பக் கண்டு, அரண்மனைக்கு அழைத்து வந்தார். திரு நீற்றின் பெருமையினாலும், ஞானம் உண்டார் அருளினாலும் வெப்பு நோய் நீங்கத் துணை நின்று திருநீற்றின் பெருமையை உலகுணரச் செய்த அம்மையின் அருள் செயலை எங்ஙனம் புகழ்வது ?

திருஞான சம்பந்தப் பெருமான் மங்கையர்க்கரசியார்பால் கொண்ட அன்பு அளவிட முடியாதது. ஒரு சேய் தன் தாயிடத்துக் கொண்ட அன்பினினும் மேம்பட்டது. தாம் தங்கியிருந்த மடத்தில் சமணர்கள் இட்ட தீயை, மங்கையர்க்கரசியாருக்காக அவரின் பயிலு நெடுமங்கல நாண் பாதுகாப்பதற்காகப் பையவே சென்று பாண்டியற் காகுக என்றார். பிள்ளையாரின் இச் செயல் மங்கையர்க்கரசியாரைத் தன் தாயாகக் கருதிய அன்பின் திறத்தைக் காட்டுகிறது. ''பயிலு நெடு மங்கல நாண் '' என்ற அருள் வாக்கு, அம்மையாரின் மங்கல நாண் நெடுநாள் பயில வேண்டும் என்று வாழ்த்துவதாக அமைந்துள்ளது. தன் தாய் மங்கலமான நன்னிலையில் இருத்தலையே அவள் பெற்ற சேய் விரும்புவது இயல்பு. இங்கு அம்மையாரின் மங்கல நிலையை விரும்பும் சேயாகத் திகழ்கிறார் ஞானசம்பந்தர். அவருடைய மங்கலவாழ்த்தால், அம்மையார் பாண்டியனுக்குச் சைவ வழித் துணையாய் நெடுங்காலம் வாழ்ந்தார்.

பாண்டியனின் வெப்பு நோயைத் தீர்க்கப் பிள்ளையார் அரண்மனைக்கு எழுந்தருளிய போது, அம்மையார் இச் சமணர்கள் ஞானச் செல்வருக்குத் தீங்கிழைத்து விடுவார்களோ ? என்று அஞ்சினார். ஞானசம்பந்தர் ''மானி னேர் விழி மாதராய் ! பாலன் என்று நீ பரிவு எய்திடேல் ஆலவாயரன் திருவருள் முன்னிற்கும் '' எனத் தேறுதல் கூறி அம்மை யின் தளர்ச்சியைப் போக்கினார்.

குதலைமை தந்தைக்கண் தோன்றின் தான் [பெற்ற
புதல்வர் மறைப்பக் கெடும்.

(குதலைமை—தளர்ச்சி)

என்று நாலடியார் கூறுவது போல தாயின் தளர்ச்சி நீக்கிய தனிப் பெரும் புதல்வராக விளங்கினார் ஞான அமுதுண்டார். இப் பெறலரும்பேறு பெற்ற அன்னையே மங்கை யரின் தனியரசியாவார். அவர் பெருமை, ஒரு நாவால் உரை செய்ய ஒண்ணாத உயர் வுடையது.

அனல் வாதம் புனல் வாதங்களில் வென் றார் ஞானப் பெருந்தகையார், மங்மையர்க் கரசியார் மட்டிலா மகிழ்ச்சி அடைந்தார். '' வேந்தனும் ஓங்குக'' என்ற திருப்பாசுரப் பாடலினாலே வேந்தன் கூன் நிமிர்ந்தது. சிர புரச் செல்வர் திருநீறு அளிக்க, வாங்கிஅணிந்து புனிதனானான். மதுரை மாநகர மக்களெல் லாம் தூய நீறணிந்தார்கள். வாழையடி வாழையெனச் சைவ மரபில் வந்த பாண்டியர் குலம் இடையில் சமண நெறியில் சார்ந்தது என்ற பழி நீங்கியது.

'' தென்னர் குலப் பழி தீர்த்த தெய்வப் பாவையானார் '' அம்மையார். பாண்டி யனும் நின்ற சீர் நெடுமாற நாயனாராகத் திகழும் பெருமையை அம்மையாரால் பெற் றான். சைவ நெறியினின்றும் பிறழாமல் தன்னைக் காத்து, சமண நெறியில் நின்ற தன் கணவனையும் சிவ நெறியில் சேலுத்திப் பேணி அவனை நாயனாராக்கி, பாண்டிய மரபுக்கு நேர்ந்த பழியை நீக்கி, பாண்டியர்கள் சிவ நெறிச் செல்வர்கள் என்ற தகைசான்ற சொல்லைக் காத்து, சோர்விலாமல் பாண்டி யனுக்குச் சைவ வழித்துணையாய் விளங்கிய மங்கையர்க்கரசியார்,

தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகை [சான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்.

என்ற குறளுக்கு இலக்கியமாவார்.

திருஞானசம்பந்தப் பெருமானால் பாடல் பெறும் தவமுடைய அம்மையார், சேக்கிழார் பெருமானால் வணங்கும் பெருமை பெற்று, மங்கையர் குல திலகமாய்— மங்கையர்க்குத் தனியரசியாய் — தெய்வமாய்த் திகழ்கிறார், அவரைப் போற்றுபவரின் திருவடியை நாமும் போற்றுவோம்.

வாழ்க ! சிவநெறி

வளர்க ! மங்கையர்க்குத் தனியரசி புகழ் !

யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க்கு இன்னுரை தானே.

திருமூலர் திருமந்திரம், 252

உ

சிவமயம்

சைவசித்தாந்தம் பரவ வழிவகைகள்

திரு. கி. லக்ஷ்மணன், முன்னாள் கல்வி இயக்குநர், இலங்கை.

சைவசித்தாந்தம் தனிச் சிறப்பான பல கோட்பாடுகளை யுடையது. மேலோட்டமான சில ஒப்பிடுகைகள் மூலம் சில உதாரணங்களை இங்கே குறிப்பிடுவோம்.

இந்த உலகம், உயிர்கள், இறைவன் என்பன யாவற்றுள்ளும் எதுவுமே கணம் கூட நிலையானதன்று ; உண்மையில் ஒன்றுமேயில்லை என்ற கோட்பாட்டை யுடையரே பௌத்தம். உண்மையில் ஒன்றுமே கணமும் நிலைப்பதில்லை ; யாவும் சூன்யம் என்ற இந்தக் கோட்பாட்டைச் 'சூன்யவாதம்' எனக் குறிப்பிடுவது வழக்கம். இதற்கு நேர்மாறாக உலகம், உயிர் இறைவன் யாவுமே உண்மை எனக் கொள்வது சைவ சித்தாந்தம். பௌத்தத்தை ஆங்கிலத்தில் 'Nihilism' எனவும் சைவசித்தாந்தத்தை 'Realism' எனவும் குறிப்பிடுவது வழக்கம்.

உலகம் பொய், உயிர்களும் பொய், அடிப்படையிலுள்ள 'பிரமம்' எனப்படும் ஒரேயொரு பொருள் மட்டுமே உண்மையென வாதாடுவது அத்வைத வேதாந்தம். இதற்கு நேர்மாறாக உலகம் உயிர் இறைவன் யாவும் உண்மை. உண்மையானது பிரம்மம் மட்டுமன்று உயிர்களும் உண்மையானவை. உண்மையான பொருள் ஒன்றே யொன்று மட்டுமன்று. உலகு உயிர்கள் உட்பட உண்மையான பொருள்கள் பல என வாதாடுவது சைவ சித்தாந்தம். ஒரேயொரு பொருள் மட்டுமே உண்மை என்பதால் அத்வைத வேதாந்தம் 'ஒருமைவாதம்' ஆகின்றது. பலவும் உண்மை என்பதனால் சித்தாந்தம் 'பன்மைவாதம்' ஆகின்றது. ஆங்கிலத்தில் அத்வைத வேதாந்தத்தை (Monism) எனவும் சித்தாந்தத்தை (Pluralism) எனவும் குறிப்பிடுவதுண்டு.

ஆன்மாக்கள் நிலையானவை யெனினும் அவற்றுக்கு ஒரேயொரு பிறப்பு மட்டுமேயுளது மறுபிறப்பு எதுவுமே கிடையாது என்பதே கிறிஸ்தவம் இஸ்லாம் ஆகியவற்றின் கோட்பாடு. இதன் விளைவு, கிடைத்த ஒரேயொரு பிறப்பில் நாம் இழைத்த தீவினைகள் காரணமாக மோட்சத்தை அடையத் தவறிய ஆன்மாக்கள் அனைத்தும் மீளா நரகத்தைஅடைந்து உய்தி எதுவுமின்றி எல்லையில்லாத் துன்பத்தில் உழன்று கொண்டிருக்கு மென்பதாகும். சைவ சித்தாந்தக் கோட்பாட்டின்படி பிறப்பு ஒன்றல்ல ; ஒவ்வொரு ஆன்மாவுக்கும் பல பிறப்புகள் உண்டு. எனவே ஒரு பிறப்பிலே செய்த தவறுகளுக்கு அடுத்த பிறப்புகளிலே ஈடுசெய்து ஈற்றில் மோட்சத்தை அடையும் வழியும் நம்பிக்கையு முண்டு.

வைணவம் பல விதத்திலும் சைவ சித்தாந்தத்தோடு ஒத்த கோட்பாடுகளையுடையது. ஆயினும் வைணவம் ஆன்மாக்களை இறைவனுடைய சரீரமாகக் கருதுகின்றது. வைணவ கோட்பாட்டின்படி இறைவன் சரீரி. ஆன்மாக்கள் யாவும் இறைவனுடைய சரீரம். இவ்வாறு கொள்வதனால் ஒரு புறம் இறைவனுடைய தனித்துவம் குறைகின்றது. மறுபுறம் ஆன்மாக்களுடைய நிறைவும் குறைகின்றது எனக் கருத இடம் ஏற்படுகின்றது.

சைவசித்தாந்தக் கோட்பாடுகளை இவ்வாறு ஒப்பீட்டு முறையிலும் நுணுகியும் நோக்கும்போது அவற்றை நல்ல முறையில் உலகுக்கு எடுத்து விளக்க முடியுமாயின் ஆன்மீக நாட்டமுடைய பலரும் அவற்றால் ஈர்க்கப்படுவதும் அவற்றில் ஈடுபாடு கொள்வதும் நிச்சயம் என்ற எண்ணமே மேலோங்குகின்றது.

சைவசித்தாந்தம் மேலே குறிப்பிடப்பட்டனவும் அவை போன்ற இன்னும் பல தனிச் சிறப்புகளும் உடையதாயிருந்தும் தன் சிறப்புகளுக்கு ஏற்ற அளவு பலராலும் அறியப்படவும் இல்லை, பயன்படவு மில்லை என்பது பலருடைய கவலை. இதனைப் பலர் தம் பேச்சுக்களிலும் எழுத்துக்களிலும் பற்பல

சமயங்களிலே தெரிவித்துள்ளனர். அண்மையில் நிகழ்ந்த சைவ சித்தாந்தப் பெருமன்ற விழாவிலே உரையாற்றிய பெரியவர் ஒருவருடைய உரையிலும் இக் கவலை புலப்பட்டது.

வெளி நாடுகளில் மட்டுமன்றி இந்தியாவிலுள்ள ஏனைய மாநிலங்களிலும் சைவ சித்தாந்தத்தைப் பற்றி அறிந்தவர்கள் மிகச் சிலரே. சென்ற ஆண்டு டெல்லியிலே துறவிகள் மாநாடொன்று நடைபெற்றது. அது இந்து மதத் துறவிகளுடைய மாநாடு. ஆயினும் அதிலே கலந்துகொண்ட பலருக்குச் சைவசித்தாந்தம் பற்றி எதுவுமே தெரியவில்லை எனத் தமிழ் நாட்டிலிருந்து அம் மாநாட்டுக்குச் சென்று திரும்பிய அடிகள் ஒருவர் குறிப்பிட்டுத் தமது கவலையையும் தெரிவித்தார்.

சைவசித்தாந்தம் போதிய அளவு பரவவில்லை. அதன் சிறப்புகள் உணரப் படவும் பாராட்டப்படவு மில்லை எனக் கவலைப்படுவோர், அது எங்கு, யார் மத்தியில் பரவ வேண்டுமென விரும்புகின்றனர் ? ஐரோப்பாவிலும், கடல் கடந்த அமெரிக்கா ஆப்பிரிக்காக் கண்டங்களிலும் சைவசித்தாந்தம் நன்கு பரவ வேண்டுமென்பதா அவர்கள் விருப்பம் ? எதற்காக அங்கெல்லாம் பரவ வேண்டும் ? யார் அதனைப் பரப்புதல் வேண்டும் ? பிற தேசத்தவர்கள் சைவ சித்தாந்தத் தத்துவங்களையும் கோட்பாடுகளையும் அறிவியல் ரீதியில் அறிந்துகொண்டால் போதுமா? நடைமுறையிலும், அவர்கள் இதுவரை பின்பற்றி வந்த நெறி முறைகளைக் கைவிட்டுச் சைவ சித்தாந்த அடிப்படையிலே தம் வாழ்க்கை நெறிகளை அமைத்துக் கொள்ள வேண்டுமா? இத்தகைய வினாக்கள் எழுவது இயல்பு.

சைவ சித்தாந்தக் கோட்பாடுகளைப் பொறுத்த மட்டில் ஐரோப்பா, அமெரிக்கா, கனடா ஆகிய தேசங்களிலுள்ள சில பல்கலைக் கழகங்களில் ஓரளவு ஆராய்வுகள் நடைபெறுகின்றன. அண்மையில் தருமபுரத்தில் நடைபெற்ற அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி மாநாட்டிலே கனடாவிலுள்ள மக்மாஸ்டர் பல்கலைக் கழகத்திலிருந்து வந்த கனடிய இளம் பெண்ணொருத்தி ''சைவ சித்தாந்தத்தில் கன்மம்'' என்ற தலைப்பிலே சபையோர் வியக்கும்படி பேசிப் பலருடைய பாராட்டையும் பெற்றது நினைவுக்கு வருகின்றது. மக்மாஸ்டர் பல்கலைக் கழகத்திலே சைவ சித்தாந்தம் பயிலும் ஆராய்ச்சி மாணவர்கள் சைவ சித்தாந்தத்துக்கு முக்கிய மூல இலக்கியங்களாகிய 14 சாத்திர நூல்களையும் 12 தோத்திரங்களையும் அவற்றின் மொழி பெயர்ப்புகளையு மட்டுமே கொண்டு ஆராய்வதோடு திருப்தியடையாமல் தமிழிலுள்ள மூலநூல்களையும் வாசித்தறியும் நோக்கத்துடன் தமிழ் மொழியையும் குறுகிய கால எல்லையுள் பயின்று வருகின்றார்களெனத் தெரிகின்றது.

சைவ சமயக் கோட்பாடுகளின் தனிச் சிறப்புகளால் ஈர்க்கப்பட்டு அவற்றைத் தம் வாழ்க்கை நெறியாக அண்மைக் காலத்தில் அமைத்துக்கொண்டு வாழும் வெளிநாட்டவர்களுக்கு எடுத்துக்காட்டாக ஹவாய் சுப்பிரமுனிய சுவாமிகளையும் அவருடைய சீடர்களையும் குறிப்பிடலாம். சுப்பிரமுனிய சுவாமிகளுடைய கருத்துக்கள் சில சைவசித்தாந்த அடிப்படைகளோடு பொருந்துவனவாகக் காணப்படாவிடினும், நூல்கள் மூலமும் மாதாந்திர வெளியீடுகள் மூலமும் அமெரிக்காவில் சிவாலயங்களை அமைப்பதன் மூலமும் பெருந் தொகையான பணத்தைச் செலவு செய்து சைவத்தை உலகெங்கும், முக்கியமாக அமெரிக்க நாடுகளில் பரப்பும் பொருட்டுச் சுப்பிரமுனிய சுவாமி தோற்றுவித்த இயக்கம் செய்து வரும் அரும்பணிகள் பாராட்டுக்குரியன.

சைவசிந்தாந்தம் பரவுவதற்கான வழிவகைகளையொட்டி எழக்கூடிய எல்லா வினாக்களும் இங்கு ஆராயப்படவில்லை. எனினும் இத்தொடர்பில் எழக்கூடிய முக்கியமான வினா ஒன்றை ஆராய்வது இங்கு அவசியமாகும். சைவசித்தாந்தத்தை வெளிநாடுகளில் பரப்புவதற்கு வழிவகைகளை ஆராய முற்படும் போது உள்நாட்டில் — அது தோன்றிப் பல நூற்றாண்டுகளாக வழங்கிவரும் அதன் சொந்த நாடாகிய தமிழ் நாட்டில் அதன் நிலைமை என்ன என்பதே அந்த வினா. தமிழ் நாட்டில் சைவசித்தாந்தம் அடைந்து வரும் விருத்தியிலும் அதற்குக் கிடைத்துவரும் ஆதரவிலுமே அது வெளிநாடுகளில் பரவுவது மிகுதியும் தங்கியுள்ளது. எவ்வளவுக்கு எவ்வளவு அதிக தொகையினர் இங்கு சைவசித்தாந்தத்திலே அக்கறையும் ஈடுபாடும் கொள்கின்ற

னரோ அவ்வளவுக்கவ்வளவு அதன் சிறப்பு களை உலகுக்கு நன்கு விளக்கவல்ல தரமான நூல்களும் ஆற்றல்மிக்க சொற்பொழிவாளர் க்ளும் உருவாக வாய்ப்புகள் ஏற்பட இட முண்டு.

தமிழ்நாட்டிலே சைவசித்தாந்தத்தின் நிலை மையைப் பல்கலைக் கழகங்களிலும் ஏனைய கல்வி நிலையங்களிலும் அது வகிக்கும் இடம் ஆதீனங்கள் அளிக்கும் ஆதரவு, மன்றங்கள் ஆற்றிவரும் பணிகள், பொதுமக்கள் காட்டும் ஆர்வம் எனப் பல நிலைகளிலே ஆராயலாம்.

சென்னைப் பல்கலைக்கழகத்திலும் மது ரைப் பல்கலைக்கழகத்திலும் தஞ்சைப் பல் கலைக்கழகத்தின் ஆதரவில் காஞ்சியிலுள்ள தத்துவ மையத்திலும் சைவசித்தாந்த ஆராய்ச் சிக்கெனத் துறைகள் அமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவது சைவசித்தாந்தத்தின், பல நூற்றாண்டு வரலாற்றிலேயே மிக முக்கிய யத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாகும். இச்சம யத்தில் இலங்கை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலும் சைவசிந்தாந்தத்துக்கென ஒரு துறை அமைக்க ஏற்பாடுகள் நடைபெறு வதையும் இங்கே குறிப்பிடுவது பொருத்த மாகும்.

அண்மையில் தருமபுர ஆதீனம் நிறுவியுள்ள அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனத்தையும் குறிப்பிடல் வேண்டும். திருப்பனந்தாள் காசிமடம் ஆற்றி வரும் பணி களும் குறிப்பிடத்தக்கன. சைவசித்தாந் தத்தை வட நாட்டிலும் பரப்பும் நோக்கத் துடன் திருப்பனந்தாள் ஆதீனம் பல ஆண்டு களுக்கு முன் காசிப் பல்கலைக் கழகத்திலே ஒரு சைவசித்தாந்த பீடத்தை நிறுவியது. எக் காரணத்தாலோ அப்பீடம் தொடர்ந்து தனிப் பீடமாக இயங்காது நின்று விட்டது. காசிப் பல்கலைக் கழகத்திலும் அலகபாத் பல்கலைக் கழகத்திலும் திருப்பனந்தாள் ஆதீனம் சைவ சித்தாந்தச் சொற்பொழிவுகள் நிகழ்த்த ஏற் பாடுகள் செய்தமையும் பின்னர் அச்சொற் பொழிவுகள் நூல்களாக அச்சிடப்படுவதும் பயனுள்ள பணிகளாகும். மேலே குறிப்பிடப் பட்ட ஆராய்ச்சிகளின் விளைவாக எதிர் காலத்தில் சைவசித்தாந்தத்தை உலகுக்கு நன்கு எடுத்துரைக்கவல்ல தரமான அரிய நூல்கள் பல வெளிவருமென எதிர்பார்க்கலாம். அதைப் போலவே சைவசித்தாந்த நுட்பங் களைத் திறம்பட உலகுக்கு எடுத்தியம்ப வல்ல சொல்வன்மை மிக்க சிந்தனையாளர்களும் உருவாகுவரென எதிர்பார்க்கலாம்.

வேதாந்தத்தைப் பற்றி மேல் நாடுகளில் பலர் அறிந்திருப்பதற்கு ஒரு காரணம் அதைப் பற்றிப் பல கோணங்களிலிருந்தும் தரமான பல நூல்கள் எழுதப்பட்டுள்ளமையாகும். மற்றொரு காரணம் உலக மேடைகளிலே அதன் நுட்பங்களைக் கேட்போர் உளங் கொள்ளுமாறு டாக்டர் ராதாகிருஷ்ணன், டாக்டர் மகாதேவன், சுவாமி ரங்கநாதானந்தா போன்ற தத்துவ மேதைகள் ஆற்றிவந்த அற் புதமான ஆங்கிலச் சொற்பொழிவுகளுமாகும்.

சைவசித்தாந்த அறிவுக்கு அனுசரணையான சைவ சமய அறிவை இளம் வயதிலேயே பள்ளிக் கூடங்களில் மாணவர்களுக்குக் கட்டாய பாட மாகப் புகட்ட முடியுமாயின் மிக நன்றாகும். இளம் வயதிலே பெற்ற அறிவு, வயது முதிர முதிர மேலும் மேலும் விருத்தியடைந்து சைவசித்தாந்தத்திலே ஈடுபடவும் ஏனையோ ரையும் அதிலே ஈடுபடச் செய்யவும் வழிகோலும்.

இந்தியா சமயச் சார்பற்ற நாடாகையால் பள்ளிக்கூடங்களில் சமய பாடத்தைக் கற் பித்தல் இயலாது. எனினும் அப்பணியைச் சைவ மன்றங்கள் ஓரளவு ஏற்றுச் சனி, ஞாயிறு நாட்களில் ஒழுங்குசெய்து நடத்த முன்வரலாம். அத்தகைய வகுப்புகளை நல்ல முறையாக நடத்த முடியுமாயின் பல பெற்றோர் தங்கள் பிள்ளைகளை அவ்வகுப்புகளுக்கு அனுப்ப முன் வருவர் என்பது நிச்சயம். வகுப்புகளை நடத்த முடியாவிடினும் சமய அறிவுப் பரீட் சைகள் நடத்திச் சிறந்த மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கி ஊக்கப்படுத்தலாம். சிறுவர் களையும் இளைஞர்களையும் எந்தத் துறை யிலும் ஈடுபடச் செய்வதற்குப் போட்டிகள் வைப்பதும் பரிசில்கள் வழங்குவதும் சிறந்த வழிகளாகும். சமயத்துறைக்கும் இது பொருந்தும். சமய அறிவுப் பரீட்சைகள் மட்டுமின்றி இளைஞர்களிடையே கட்டுரைப் போட்டிகளும் பேச்சுப் போட்டிகளும் நடத் தலாம். இவை தவிர இசைப் போட்டிகளும் நடத்தலாம். தேவாரங்களிலும் திருவாசகங்

களிலும் எளிமையும் ஓசை நயமும் பொருந்திய பாசுரங்களைத் தெரிவுசெய்து தனி நூல்களாக அச்சிடலாம். இந்த நூல்களில் சிற்சில பகுதிகளைக் குறிப்பிட்டு மனனம் செய்யும்படிச் செய்து போட்டிகள் நிகழ்த்திப் பரிசில்கள் வழங்கலாம். இப்போட்டிகள் நல்லமுறையாக நடைபெற்றால் அவற்றிலே கலந்துகொள்ள சிறுவர்கள், இளைஞர்கள் பலர் முன்வருவர். இப்போட்டிகளை நடத்துவதற்காகும் செலவுக்ாகக் கொடையாளிகள் பலரிடம் அறக் கட்டளைகளாகவும் வேறாகவும் பணவுதவி பெறலாம். இன்று கல்லூரிகளில் ''மர்திகிற'' (Mardigran) போன்ற கலாசார வாரங்கள் பெரிதும் விரும்பி வரவேற்கப் படுகின்றன. இந்த நிகழ்ச்சிகளிலும் சைவ சித்தாந்த வினா—விடைகளும் இடம்பெற வழி வகுக்க முடியுமாயின் காலப்போக்கில் அந்த ஏற்பாடு நல்லதொரு களமாக அமைந்து பெரும் பயனளிக்கக்கூடும். சிறு வயதிலே இத்தகைய போட்டிகளிலே பங்குபெறுவோர் பிற்காலத்திலே பலவித சிறப்புகளையுடையவர்களாகத் திகழ்வதைக் காண்கின்றோம்.

வளர்ந்தபின் சைவசித்தாந்தத்திலே ஈடுபாடு ஏற்படும் பொருட்டு இளம் வயதிலேயே சமய ஈடுபாட்டை ஏற்படுத்துவதற்கான சில வழி வகைகளை இதுவரை விவரித்தோம்.

இன்னொரு விதமாக நோக்குவதாயின் சைவசித்தாந்தத்தைப் பரப்பும் வழிவகைகளை வீடு, தமிழ்நாடு, இந்தியதேசம், அயல்நாடுகள் அடங்கும் ஆசியாக் கண்டம், அகில உலகம் ஆகிய ஐந்து நிலைகளில் ஆராயலாம்.

சைவசித்தாந்த தத்துவங்களைப் பின்பற்றுவோர் வாழும் இல்லங்களிலே சைவசித்தாந்த அடிப்படை நூல்களாகிய பதினுன்கு சாத்திரங்கள், பன்னிரு திருமுறைகள் ஆகியவற்றுள் முக்கியமானவையாவது இடம்பெறுவது அவசியமாகும். சைவசித்தாந்த தத்துவங்கள் தெளிவாகவும் இலகுவாகவும் எழுதப்பட்ட உரை நடை நூல்கள் ஒன்றிரண்டாவது இருத்தல் அவசியம். நூல்கள் இருந்தால் மட்டும் போதாது. குடும்பத்தார் அனைவரும் தாமாகவோ அறிந்தவர்கள் மூலமாகவோ சித்தாந்தக் கொள்கைகளை நன்கு தெரிந்துகொள்வதும் அவற்றின் தனிச்சிறப்புகளை உணர்ந்தும் மதித்தும் அவற்றில் ஈடுபடுவதும், அவற்றின் அடிப்படையையொட்டி வாழ்வதும் அவசியம். ''சித்தாந்தம்'' போன்ற சஞ்சிகைகளை வருவித்து வாசிப்பதும், சித்தாந்த வகுப்புகள், சொற்பொழிவுகள், கருத்தரங்குகள் ஆகியவற்றில் மகளிர், இளைஞர்கள் உட்படக் குடும்பத்தினர் அனைவரும் இயன்றவரை கலந்துகொள்வதும் பயன்தருவனவாகும்.

தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் கல்வி நிலையங்கள், சைவ மன்றங்கள் ஆகியவற்றின் பணிகளே முக்கியம். இவை செய்யக்கூடிய பணிகள் சிலவற்றைப் பற்றி மேலே சில பத்திகளிலே விவரித்துள்ளோம். இத்தொடர்பில் சென்னை, சைவசித்தாந்தப் பெருமன்றம் புதிது புதிதாகச் சிந்தித்துத் திறம்படச் செயற்படுத்தும் திட்டங்கள் உட்பட ஆற்றி வரும் அரும்பணிகள் யாவும் பாராட்டுக் குரியன.

இந்திய தேசம் முழுவதையும் எடுத்துக் கொள்ளின் இத்தேசத்திலுள்ள பிரதான மொழிகளனைத்திலும், முக்கியமாக இந்தி மொழியில் சைவசித்தாந்தக் கருத்துக்களை வாசிப்போர் உளம் கவரும் வகையில் விளக்கும் நல்ல நூல்களோ மொழிபெயர்ப்பு நூல்களோ வெளிவருவது அவசியம்.

ஆசியாக் கண்டத்தையும் உலகத்தையும் பொறுத்தவரையில் சைவசித்தாந்தக் கோட்பாடுகளைத் தர்க்க ரீதியாகவும் மனங்கவர் முறையிலும் விளக்கி எழுதப்பட்ட சிறந்த நூல்கள் உலக மொழியாகிய ஆங்கிலத்தில் போதிய அளவு வெளிவரல் வேண்டும். இன்று உலகில் எழுநூறு மில்லியனுக்கு மேற்பட்ட தொகையினர் ஆங்கிலத்தைப் பயன்படுத்துகின்றனரெனத் தெரிகின்றது. சைவ சித்தாந்த நுட்பங்களை அகில உலகுக்கும் திறம்பட எடுத்துரைக்க வேண்டுமாயின், சைவசித்தாந்தத்தில் தீவிரப்பற்று, அதன் பல அம்சங்கள் பற்றிய ஆழமான அறிவு, ஏனைய தத்துவங்களோடு ஒப்பிடக்கூடிய தத்துவ ஒப்பியலறிவு, தமிழ்மொழி, வடமொழி இரண்டிலும் ஆழ்ந்த புலமை, சைவசித்தாந்தக் கோட்பாடுகளை விளக்கி ஆங்கில மொழியில் மிகத் திறம்படப் பேசவும் எழுதவும் கூடிய தனியாற்றல் ஆகிய யாவும் ஒருங்கு கைவரப் பெற்றவர் தொகை பெருகுதல் வேண்டும்.

எல்லா அம்சங்களையும் நுட்பமாகவும் தெளிவாகவும் விளக்கி ஆங்கிலத்தில் எழுதப் பட்ட மிகச்சிறந்த நூலொன்றே இன்று சைவ சித்தாந்தத்துக்கு உடனடியான தேவையா யுள்ளது. முதலில் அத்தகைய நூலொன்றை நல்ல முறையாகத் தயாரித்துக்கொண்டால் பின்னர் அதனை ஏனைய முக்கிய மொழிகளில் மொழிபெயர்ப்பித்துக் கொள்வது சுலபமாகும்.

இன்னும் இரண்டு கருத்துக்களைச் சுருக்க மாகக் குறிப்பிட்டு இக்கட்டுரையை முடிப் போம். இவை இந்து சமயம் முழுவதுக்குமே பொருந்தும். சமயம் வெறும் கோட்பாட்டுப் பெருமை பேசுவதோடு மட்டும் நின்றுவிட லாகாது. மறுமையை மட்டுமே முழுதும் நினைத்துக்கொண்டு இம்மையைப் புறக்கணித் தலாகாது. விண்ணுலகுக்குத் தயார் செய்யும் அதே வேளையில் திருஞானசம்பந்தர் கூற்றுக்கு ஒப்ப, மண்ணுலகிலும் நல்ல வண்ணம் வாழ வழியனைத்தும் செய்தல் வேண்டும். அதிலும் ஆத்மார்த்தம் பேசிச் சுயநலத்தை மட்டுமே குறியாக வாழாது சமுதாய நலன் கருதிச் சமயத்தையும் சமுதாயத்தையும் இணைத்துச் சமய அடிப்படையில் சமுதாய மேம்பாட்டுக் காக ஒவ்வொரு சமயமும் தன்னாலியன்ற அனைத்தையும் செய்தல் வேண்டும். இவ் வகையில் இன்று சமய அடிப்படையில் நின்று கொண்டு, சமயத்தையும் சமூகத்தையும் இணைத்துச் சமுதாய நலன்களுக்காகத் திட்ட மிட்டுத் திறம்படச் செயலாற்றி வருகின்ற தவத்திரு குன்றக்குடி அடிகளாரவர்கள் பாராட்டுக்குரியவராகின்றார்.

ஒவ்வொருவருடைய அகவாழ்வையும் நேர் மையும், புனிதமும் நிறைந்ததாக ஆக்குவதே சமயக் கோட்பாடுகளின் முக்கிய நோக்கம். சமயக் கோட்பாடுகளை அர்ச்சனை, சமயச் சடங்குகள், வெளிவேடங்கள் ஆகியனவற்றுக்கு மட்டுமே பயன்படுத்திக்கொண்டு அகத்தில் நேர்மை, தியாகம், பிறர் நலம் பேணல், பொறுமை முதலிய நற்பண்புகளில்லாத வாழ்வே இன்று அதிகரித்து வருகின்றது. இந்த இரட்டை வாழ்வு முற்றாக ஒழிதல் வேண்டும். சமயக் கோட்பாடுகளின் உயர்வுக்கேற்ப அக் கோட்பாடுகளை அடிநாதமாகக் கொண்ட வாழ்வும் உயர்ந்ததாதல் வேண்டும். தத்துவக் கோட்பாடுகள் பரவுவதற்கு வழிவகைகளை ஆராயும் இச்சந்தர்ப்பத்தில் அக்கோட்பாடு களுக்கும் அவற்றை அடிப்படையாகக்கொண்ட வாழ்க்கை நெறிக்குமிடையேயுள்ள முரண்பாடு களைக் களைந்து செயற்பட ஒவ்வொருவரும் முன்வர வேண்டும்.

ஆறுமுக நாவலரை யான் கண்டதில்லை. அவரது நாவன்மையைப் பிறர்சொல்லக் கேட்டிருக்கிறேன். இளமையில் யான் கண்ட நாவலர் கதிரைவேற் பிள்ளையே. ஞானியார் சுவாமிகள் பேச்சைக் கேட்ட பின்னேத் தமிழ் நாட்டில் மற்ரெரு நாவலர் இருத்தலைக் கண்டேன். தமிழ் நாட்டில் கிளாட்ஸ்டன்கள் சுரேந்திரர்கள் இருக்கிருர்கள் என்று என் நெஞ்சம் எண்ணியது.

திரு. வி. க.

(திரு. வி. க. சிறப்புரை — ஞானியார் அடிகள் நினைவு மலர்)

உ

சிவமயம்

சக்தி - தத்துவ விளக்கம்

டாக்டர் கோமதி சூர்யமூர்த்தி

சக்தி - விளக்கம்

எல்லாம் வல்ல முழுமுதற் பொருளான இறைவனின் திருவருள் தான் சக்தி எனப்படும்.

''அருளது சக்தியாகும் அரன்தனக்கு
அருளையின்றித்
தெருள்சிவ மில்லைஅந்தச் சிவமின்றிச்
சக்தியில்லை''
[சிவஞானசித்தியார் சுபக்கம், செ. 239]

என்று அருணந்தி சிவாசாரியார் தம் சிவஞான சித்தியாரில் கூறுகின்றார். சூரியன் தன்னள வில் கூறப்படும்பொழுது ''கதிரவன்'' என்றும் உலகப் பொருட்களை விளக்கிக் காட்டும் பொழுது ''கதிர்'' என்றும் கூறப்படுவது போன்று, இறைவன் தன்னளவில் கூறப்படும் பொழுது ''சிவன்'' என்றும், உயிர்கட்கு அருள் புரியும் நிலையில் ''சக்தி'' என்றும் கூறப்படு கின்றான்.

சக்தி - ஒன்றா? பலவா?

ஒரு சக்தியே செயலால் பலவகையாகப் புலப்படும். மின்சக்தி ஒன்றுதான். அது மின் அடுப்பில் செயல்படும்போது வெப்பசக்தி எனப்படும். மின்விளக்கில் செயல்படும் போது ஒளிசக்தி எனப்படும். வானொலியில் செயல்படும்போது ஒலி சக்தி. மின்சார இரயில் வண்டிகளில் செயல்படும்போது இயங்கு சக்தி ஆகும். அதைப்போல இறைவனது சக்தி ஒன்றுதான். அது செயல்படும்போது பல வகைப் பெயர்களைப் பெறுகின்றது.

இறைவனது சொரூப நிலையிலுள்ள சக்தி ''பராசக்தி'' எனப்படும். அவன் உலகத்தை நோக்கத் தொடங்குகையில் அச்சக்தி ''ஆதி சக்தி'' என்று பெயர் பெறும். ஏனெனில் உலகத்தை இயக்கும் எல்லாச் சக்திகட்கும் இதுவே முதல் மூலம். இது திரோதான சக்தி என்றும் சொல்லப்படும். இந்தச் சக்தி உயிர் கட்கு இறைவனைக் காட்டாமல், உலகத் தையே காட்டி அவைகளைப் பிறப்பிறப்பில் அகப்பட்டு உழலச் செய்வதால் அப்பெயர் பெறுகிறது. இறைவன் உலகத்தை இயக்கு தற்கு அவனது பேராற்றலுள் ஒரு சிறிது போதுமாகலின், பராசக்தியின் ஒரு சிறு கூறே ஆதிசக்தி அல்லது திரோதான சக்தியாய் நிற்கும். இதனை, ''பராசக்தியில் ஆயிரத்தில் ஒரு கூறு ஆதிசக்தி'' என்று கூறுதல் மரபு. ஆதிசக்தி ஒன்றே ''இச்சா சக்தி'', ''ஞான சக்தி'', ''கிரியா சக்தி'' என்று வேறு வேறு வகையாகச் செயற்படும்.

இச்சா சக்தி, ஞான சக்தி, கிரியா சக்தி

நாம் ஒரு காரியத்தைச் செய்யவேண்டு மென்று நினைக்கிறோம். அதனை நன்றாகச் செய்ய வேண்டுமென்று ஆசைப்படுகின்றோம். அதை எப்படி எப்படிச் செய்யவேண்டுமென்று திட்டமிடுகின்றோம். திட்டப்படியே வேலை செய்து காரியத்தைச் சாதித்துக் கொள்கின் றோம். எல்லாவற்றுக்கும் மூலமாக இருப்பது செய்ய வேண்டுமென்ற ஆசை. பின்பு அதற் குரிய வழிகளைக் காட்டுவது அறிவு. அதன் பிறகு செயல் முகிழ்க்கின்றது. ஆசை என்பது தான் இச்சை. அறிவு என்பது தான் ஞானம். செயல் என்பது தான் கிரியை. இம்மூன்று சக்திகளும் எல்லா உயிர்களிடத்தும் உண்டு. இதற்கு மூலமாக இறைவனிடத்து உள்ள சக்திகள் அமைகின்றன.

அநாதியான உயிர்கள் செம்பில் களிம்பு போல் அநாதியாய் ஆணவமலத்தால் பந்திக்கப் பட்டுள்ளன. இறைவன் உயிர்களிடம் கொண் டுள்ள கருணையால் உயிர்களிடத்துள்ள இந்த ஆணவமாகிய அழுக்கைப் போக்கி தன்னைப் போன்ற சுத்த நிலைக்குக் கொண்டுவர நினைக்

கின்றான்; ஆசைப்படுகின்றான். எப்படிச் செய்ய வேண்டும் என்பதைச் சங்கற்பிக்கின்றான். அதற்கேற்ற ஐந்தொழில்களை ஆற்றுகின்றான். இவ்வாறு இறைவன் உயிர்களைத் தன் நிலைக்குக் கொண்டுவர விரும்பி, சங்கற்பித்து, செயலாற்றுவது அவனது இச்சா, ஞான, கிரியா சக்தி எனப்படும்.

இறைவன் உயிர்களைத் தன் நிலைக்குக் கொண்டு வருவதை—

''தன்னிலைமை மன்உயிர்கள் சாரத்
தரும்சத்தி
பின்னமிலான் எங்கள் பிரான்''
[திருவருட்பயன் – 2]

என்று உமாபதிசிவம் கூறுகின்றார். இறைவனது சக்தி ஒன்றே இவ்வாறு மூன்று வகையாகப் புலப்படுவதை,

''ஒன்றதாய் இச்சா ஞானக் கிரியையென்
றொருமூன்றாகி
நின்றிடுஞ் சக்தி இச்சை உயிர்க்கருள்
நேசமாகும்
நன்றெல்லாம் ஞான சக்தி யால்நயந்
தறிவன் நாதன்
அன்றருட் கிரியை தன்னால் ஆக்குவன்
அகில மெல்லாம்',
[சிவஞானசித்தியார் சுபக்கம், செ.83]

என்று அருணந்தி சிவாசாரியார் கூறுகின்றார்.

சக்தியின் வடிவம்

''சக்தியின் வடிவே தென்னில் தடையிலா
ஞான மாகும்''
[சிவஞானசித்தியார் சுபக்கம், செ.82]

என்று அருணந்தி சிவாசாரியார் கூறுகின்றார். இறைவன் உலகத்தை நோக்காது தன்னியல்பில் நிற்கும்பொழுது ''சிவன்'' என்று சொல்லப்படுவான். இதுவே ''சொரூப நிலை'' எனப்படும் அவனது உண்மை நிலை. இந்நிலையில் அவன் ''பரமசிவன்'', ''சொரூப சிவன்'', ''சுத்த சிவன்'' எனப்படுவான். இந்நிலையில் அவனது சக்தி பராசக்தி எனப்படும். இந்நிலை யாதொரு வடிவமும் உடையதன்று.

சக்தி பெண்வடிவு கொள்ளல்

வடிவமில்லாத அருட்சக்தி – ஞான சக்தி பெண் வடிவு கொள்வது நம் பொருட்டே யாகும்.

''மங்கை யொருபாகமாக அருள்காரணங்
கள் வருவான்''
[2–223–3]

என்று திருஞானசம்பந்தர் கூறுகின்றார்.

இவ்வுலகிலுள்ள உயிர்களெல்லாம் ஆண், பெண் என இருவகையாக அமைந்துள்ளன. எல்லா உயிர்களும் ஆணும் பெண்ணுமாய் இணைந்து போகம் நுகர, இறைவன் சக்தியும் சிவமுமாகி அம்மையப்பராயிருந்து இவ்வுலகை உண்டுபண்ணுகின்றான்.

''அம்மையப்பரே உலகுக்கு அம்மையப்பர்'' என்று திருக்களிற்றுப்படியார் (செ. 1) கூறுகின்றது.

''தரைமுத லுலகினி லுயிர்புணர் தகைமிக
விரைமலி குழலுமை யொடுவிர வதுசெய்து'
[1–123–6]

என்ற திருஞானசம்பந்தர் திருவாக்கும் இங்குச் சிந்திக்கத்தக்கது.

சிவம் சக்தியோடு சேர்ந்து விளங்கினால் இவ்வுலகிலுள்ள இயங்கும் பொருட்களும், இயங்காப் பொருட்களும் ஆண், பெண் தன்மையில் கூடி மகிழும். இன்றேல் அவை கூடாது, பிரியும். இறைவன் கல்லால் நிழலில் தக்ஷிணமூர்த்தியாய் இருந்தபோது உயிர்கள் கூட்டுறவின்றி இன்புறாமல் இருந்தன என்றும், அம்மையை மணந்து அம்மையப்பரான பொழுது எல்லா உயிர்களும் இன்புற்றிருந்தன என்றும் புராணங்கள் கூறுகின்றன. தென்பாலுகந்தாடும் தில்லைச் சிற்றம்பலவன் பெண்பாலுகந்தது ஏன் என்னும் கேள்விக்கு,

''பெண்பால் உகந்திலனேல் பேதாய்
இருநிலத்தோர்
விண்பால் யோகெய்தி வீடுவர்காண்''
[திருச்சாழல் – 9]

என்று மாணிக்கவாசகர் விடை கூறுகின்றார்.

இறைவன் கழுமலநகரில் பெண்ணில் நல்லாளொடும் வீற்றிருப்பது மண்ணில் உயிர்கள் நல்ல வண்ணம் வாழ என்கின்றார் திருஞானசம்பந்தர். [3–282–1]

இறைவன் சிவசக்தியாய் விளங்குதலின் தத்துவத்தை,

''போகியாயிருந்து உயிர்க்குப் போகத்தைப்
புரிதல்''
[சிவஞானசித்தியார் சுபக்கம், செ. 70]

என்று அருணந்தி சிவாசாரியார் கூறுகின்றார்.

சக்தி பேதங்கள்

சக்திகள் மனோன்மணி, மகேசை, உமை, திருமகள், கலைமகள் எனப் பலவாகக் கூறப் படுவதன் தத்துவம் யாது எனக் காண்போம். இறைவன் தூய மாயையில் நின்று தொழில் செய்யும்போது தொழிலுக்கேற்றவாறு ஒன்பது வகைப் பெயர் பெறுகின்றான். அவை சிவம், சக்தி, நாதம், விந்து, சதாசிவம், மகேசுவரன், உருத்திரன், மால், அயன் என்பன. இவை நவந்தருபேதம் எனப்படும் (சிவஞான சித்தியார் சுபக்கம், செ.164). இவற்றுள் சிவம், சக்தி, நாதம், விந்து என்ற நான்கும் இறைவனின் அருவ நிலையாகும். சதாசிவம் அருவுருவ நிலையாகும். மகேசுவரன், உருத்திரன், மால், அயன் உருவ நிலையாகும். நவந்தரு பேதத்தில் சக்தி, விந்து இரண்டும் சக்தி வேறுபாடானதால் அவற்றை நீக்கிச் சிவபேதம் ஏழு என்பர். இந்தச் சிவபேதம் ஏழனுக்கும் சக்திபேதம் ஏழு கூறுவர். அதாவது இறைவன் அருபத்தில் சிவமாய் இருக்கும்போது அவளும் அருபத்தில் சக்தியாய் இருப்பாள். அவன் நாதமாய் இருக்கும்பொழுது அவள் விந்துவாய் விளங்குவாள். அவன் அருஉருவமான சதாசிவமாகும்பொழுது அவள் மனோன்மணி யாவாள். அவன் மகேசனாக உருவுகொள்ளும் போது அவள் மகேசையாகவும், உருத்திரனாகும்போது உமையாகவும், திருமாலாகும் போது திருமகளாகவும், பிரமனாகும்போது (அயன்) கலைமகளாகவும் விளங்குவாள். இதனை,

''சத்தியாய் விந்து சத்தி யாய்மனோன்
மணிதா னாகி
ஒத்துறு மகேசை யாகி உமைதிரு வாணி
யாகி
வைத்துறும் சிவாதிக் கிங்கன் வருஞ்சக்தி
ஒருத்தி யாகும்
எத்திறம் நின்றான் ஈசன் அத்திறம்
அவளும் நிற்பள்''
[சிவஞானசித்தியார் சுபக்கம், செ.165]

என்று அருணந்தி சிவாசாரியார் கூறுகின்றார்.

சிவன்-சக்தி தொடர்பு

சக்தியானது சிவத்தோடு பிரித்துக்காண முடியாதபடி விளங்குவது. திருமுறையாசிரியர்களெல்லாம் சக்தியைச் சிவத்தோடு சேர்த்தே பாடியுள்ளனர். பத்தாம் திருமுறையாகிய திருமந்திரம் மட்டும் சக்தியைப் பற்றித் தனியே கூறுகின்றது. திருமுறைகளில் இறைவனுடைய அர்த்தநாரீசுவர வடிவம் அதிகம் போற்றப்படுகின்றது.

''தோலும் துகிலும் குழையும் சுருள்தோடும்
பால் வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும்
பைங்கிளியும்
சூலமும் தொக்க வளையு முடைத்
தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய்
கோத்தும்பீ''
[திருக்கோத்தும்பி, செ.18]

என்று மாணிக்கவாசகர் இறைவனின் அர்த்தநாரீசுவர வடிவத்தை அழகாக வர்ணிக்கின்றார். மேலும், அதனைத் ''தொன்மைக் கோலம்'' என்கின்றார்.

ஒன்றாகிய இறைவனே இரண்டாக ஒருருவில் விளங்கித் தோன்றுவதை,

''ஒருரு வாயினை மானாங் காரத் தீரியல்
பாயொரு''
[1—128—1]

என்று திருஞானசம்பந்தர் கூறுகின்றார்.

திருமூலரும்,
''ஒன்றவன் தானே இரண்டவன்
இன்னருள்''
[திருமந்திரம் — 1)

என்கின்றார்.

சிவத்திற்கும் சக்திக்குமுள்ள பிரிப்பற்ற தொடர்பை,
''ஆணையின் நீக்கமின்றி நிற்குமன்றே''
[சிவஞானபோதம், சூத்.—2]

என்று மெய்கண்டதேவர் கூறுகின்றார். இங்கு ''ஆணை'' என்றது சிற்சக்தியைக் குறித்தது.

உமாபதிசிவமும்,

''சக்தி பின்னமிலான் எங்கள் பிரான்''
[திருவருட்பயன்—2]

என்று கூறுகின்றார். பின்னமிலான் என்றதற்குப் பிரிப்பிலாதவன் என்பது பொருளாகும். இவ்வாறு சிவத்திற்கும் சக்திக்குமுள்ள பிரிப்பற்ற தொடர்பு சைவசித்தாந்தத்தில் ''தாதான்மிய சம்பந்தம்'' என்று கூறப்படும்.

திருமுறைகளில் சிவனும் சக்தியும் பெரும்பாலும் கணவன் மனைவியாகவே பேசப்படுகின்றனர். மாணிக்கவாசகர் சிவனைச் சக்திக்குக் கணவனாகக் குறிப்பிடுவதோடு மட்டுமல்லாமல் மகனாகவும், தகப்பனாகவும், தமையனாகவும் குறிப்பிடுகின்றார்.

''எம்பெருமான் இமவான் மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன் தகப்பன்
தமையன்'' [திருப்பொற்சுண்ணம்—13]

என்பது மாணிக்கவாசகரின் திருவாக்கு.

திருமூலரும்,

''வாயு மனமுங் கடந்த மனோன்மணி
பேயுங் கணமும் பெரிதுடைப் பெண்பிள்ளை
ஆயும் அறிவுங் கடந்த அரனுக்குத்
தாயும் மகளுநல் தாரமு மாமே''

[திருமந்திரம்—1178]

என்று கூறுகின்றார். இவ்வாறு குறிப்பிடுவதன் தத்துவத்தை ஆராய்வோம். சைவசித்தாந்தம் 36 வகை தத்துவங்களின் தோற்றத்தை விளக்கிக் கூறுகின்றது. அதில் சுத்தமாயையிலிருந்து சிவம், சக்தி, சதாசிவம், ஈசுரம், சுத்தவித்தை, என்ற ஐந்து தத்துவங்கள் தோன்றுவதாகவும், அவை சிவதத்துவம் எனப்படும் என்றும் கூறப்படுகின்றது (உண்மை விளக்கம், செ.20). இறைவன் சிவசக்தியாயிருந்து உயிர்கட்குத் தநு, கரண, புவன, போகத்தைக் கொடுப்பதால் இறைவன் சக்திக்குக் கேள்வன். தத்துவங்கள் தோன்றும் முறையில் சிவத்திலிருந்து சக்தி தோன்றுவதால் சிவன் சக்திக்குத் தகப்பன். சக்தியிலிருந்து சதாசிவம் தோன்றுவதால் சிவன் சக்திக்கு மகன். சிவமும் சக்தியும் சுத்தமாயையிலிருந்து தோன்றுவதால் சிவன் சக்திக்குத் தமையன்.

திருவைந்தெழுத்தில் சக்தி

சைவர்களுக்குரிய மந்திரம் ''ந ம சி வ ய'' என்ற திருவைந்தெழுத்தாகும். இதில் நான்காம் எழுத்தாகிய வகரம் சக்தியை (திருவருளைக்) குறிக்கும்.

''நாலாம் எழுத்தோசை ஞாலம் உருவது
நாலாம் எழுத்தினுள் ஞாலம் அடங்கிற்று
நாலாம் எழுத்தே நவிலவல் லார்கட்கு
நாலாம் எழுத்தது நன்னெறி தானே''
[திருமந்திரம்—971]

என்ற பாடலில் திருமூலர் சக்தியை நாலாம் எழுதது என்ற குறியீட்டால் குறிப்பிடுகின்றார்.

முடிவுரை

உயிர்கள் இறைவனை நினைப்பதற்கும், வணங்குவதற்கும் முதற்கண் அவனருள் வேண்டும். ''அவனருளாலே அவன் தாள் வணங்கி'' (சிவபுராணம் அடி 18) என்கின்றார் மாணிக்கவாசகர். அம்மை (சக்தி) மூலம் அப்பனை (சிவம்) அடைதல் வேண்டும். மாணிக்கவாசகரும் ''அம்மையே அப்பா ஒப்பிலா மணியே'' (பிடித்த பத்து, செ.3) என அம்மையை முதலில் வைத்துப் பாடினார். திருஞானசம்பந்தரும் சிவஞானப் பாலுண்டபின் தாம் பாடிய முதல் பதிகத்தை அம்மையை நினைத்தே ''தோடு'' எனத் தொடங்கினார். அம்மையின் அருட்பார்வை உயிர்களிடத்துப் பதிதலால் உயிர்கள் அடையும் பேறுகளை அபிராமிபட்டர் பின்வரும் பாடலில் அழகாகக் கூறுகின்றார்.

''தனந்தரும் கல்வி தரும் ஒருநாளுந்
தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவும் தரும்நெஞ்சில்
வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாம் தரும்அன்பர்
என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழ லாள்அபி ராமி
கடைக்கண்களே''
[அபிராமி அந்தாதி, செ. 69]

சத்தி அருள் பெற்று சத்தனை அடைவோமாக!

உ
சிவமயம்

திருக்கோயில் வரலாறும் வழிபாடும்

திரு. கோ. மு. முத்துசாமி பிள்ளை, இ.ஆ.ப. (ஓய்வு)

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்த் திகழ்ந்த பழம்பாண்டி நாட்டைத் தன்னுள் கொண்ட குமரிநாடே பண்டைத் தமிழகம் என்பதாக ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். ஈங்கிருந்த குமரி மகேந்திரப் புனித மலையில் சிவபெருமான் சிவாகமங்களை அருளினார் என்பதை,

''மன்னு மகேந்திர மதனில்
சொன்ன ஆகமம் தோற்றுவித் தருளியும்''

என்னும் மாணிக்கவாசகர் திருவாக்கைக் கொண்டு ஆன்றோர் விளக்குவர்.

1. தொன்மைக் கோயில்கள்

சிவ வழிபாடு ஆற்றுவதற்குரிய விதிமுறைகள் ஆகமங்களில் வகுக்கப் பெற்றுள்ளன. புகழ்மிக்க அரசாட்சியை விரும்புவோர் பொன் சிவலிங்க வழிபாடு மேற்கொள்ள வேண்டுமென ஆகமங்கள் கூறியதால் இராவணன் எங்கெல்லாம் சென்றனனோ, அங்கெல்லாம் பொன்சிவலிங்கத்தைத் தன்னுடன் எடுத்துச் சென்று தூபதீபம் இட்டு சிவவழிபாடு ஆற்றியதாகவும் இலங்கையில் கோயில்கள் இருந்தன என்பதாகவும் இராமாயணம் கூறுகிறது. அருச்சுனன் தான் தீர்த்த யாத்திரை மேற்கொண்டபோது, தெற்கே காவிரியிலும் மற்றப் புண்ணிய நதிகளிலும் நீராடி, ஆங்காங்கிருந்த பல கோயில்களில் வழிபாடு செய்து, பின்னர் மணலூரை அடைந்தான் என வியாசர் பாரதம் தெரிவிக்கிறது.

தொல்காப்பியர் காலமாகிய ஏறத்தாழ 2500 ஆண்டுகளுக்கு முன்னர் இயற்கை வாழ்வில் திளைத்த பழந்தமிழர், இயற்கைச் சூழ்நிலையில் காட்சியருளிய இறைவனுக்கு நிலங்கள் தோறும் வேறு வேறு பெயர்களில் கோயில்களை அமைத்துப் பலவகை விழாக்கள்நிகழ்த்தி மகிழ்வெய்தினர். தொல்காப்பியருக்குப் பிற்பட்ட காலமாகிய கடைச்சங்க காலத்தில், சிவபெருமான், முருகர், திருமால், பலதேவர், உமையம்மை, காளி முதலிய தெய்வங்களுக்குக் கோயில்கள் இருந்தன. மன்னர்கள் திருக்கோயிலை வலம் வந்தனர் எனப் புறநானூற்றுப் பாடல் ஒன்று தெரிவிக்கின்றது. சங்க காலத்தையடுத்து எழுந்த சிலப்பதிகாரம், கற்பகமரம், அயிராவதம், பலதேவர், சிவபெருமான், முருகர், இந்திரன், சாத்தன், சந்திரன், மன்மதன் முதலியோர்களுக்குக் கோயில்கள் புகார் நகரில் இருந்தன என்பதைச் சுட்டிக் காட்டுகிறது. சங்க காலக் கோயில்களெல்லாம் சுடுமண் கோயில்களாக இருந்தமையால் அவை காலப்போக்கில் அழிவுற்றன. தமிழகத்தில் சிவ ஒளி மங்காதவாறு எழுபது சிவன் கோயில்களைக் கட்டியவர் கோச்செங்கணான். ''எண்டோள் ஈசற்கு எழுபது செய்து உலகாண்டான்'' என இம்மன்னரைத் திருமங்கையாழ்வார் தமது திருநறையூர்ப் பதிகத்தில் புகழ்கிறார். இவ்வாறு இவரால் கட்டப்பட்ட கோயில்களுள், நன்னிலம், பெண்ணாகடம் ஆகிய ஊர்களிலுள்ள மாடக் கோயில்களைக் குறிப்பிடலாம். மாடக் கோயில் என்னும் பெருங்கோயில் யானை ஏறமுடியாதவாறு படிகள் வைத்துக் கட்டப்பட்டதாகும்.

2. வடபுலக் கோயில்கள்

கி.மு.250-ஆம் ஆண்டில் அசோக மன்னர் தம் புதல்வி சாருமதியோடு நேபாளத்தின் பசுபதீசுவரர் கோயிலுக்குச் சென்றிருந்தபோது, அக்கோயிலின் அருகில் அவள் ஓர் ஆசிரமம் அமைத்துச் சிவவழிபாடு மேற்கொள்ள, அசோகர் தாம் மட்டுமே திரும்பினார். அசோகர் மக்களுள் ஒருவராகிய ஜலகௌக என்பார் காஷ்மீர நாட்டைத் திறம்பட

ஆட்சி புரிந்த காலத்தில் புத்த சமயத்தை வெறுத்துச் சிவவழிபாட்டைப் பரப்பும் வகையில் சிவன் கோயில்கள் பலவற்றை அமைத்ததாகவும் அவ்வாறு அமைக்கப்பட்ட கோயில்களுள் ஒன்று அசோக மன்னர் பெயரில் கட்டப்பட்ட அசோகேசுவரக் கோயில் ஆகுமெனவும் வரலாறு கூறுகிறது. கி.மு.232-ஆம் ஆண்டில் அசோகர் மறைந்த பின்னர், ஆந்திர நாடு தன்னுரிமை பெற்றதிலிருந்து சுமுகன் முதல் முப்பது அரசர்கள் அரசு செலுத்தினார்கள். அக்காலத்தில் அங்குள்ள கோயில்களில் சிவ வழிபாடு மேம்பட்டது. மற்றும் அக்காலத்தில் வெளியிடப்பட்ட நாணயங்களில் சிவமூர்த்தங்களின் வடிவங்கள் பதிக்கப்பட்டன. விஞ்ஞான அறிவியலில் ஆர்வம் கொண்டவர் வராக மிசிரர். அவர் தாம் இயற்றிய பிரகத் சம்ஹிதையில் மேருமந்திரம், கயிலாசம், இடபம், கருடம், பதுமம், குஞ்சரம் முதலிய விமானங்களைப் பற்றிக் குறித்திருப்பதிலிருந்து, பல விமானங்கள் கொண்ட சிவன் கோயில்கள் இந்நாட்டில் அப்போது கட்டப்பட்டன என்பது தெரியவருகிறது.

3. தென்னாட்டு இடைக்காலக் கோயில்கள்

தற்போது நிலைத்துள்ள கோயில்களில் பழமையானவை பல்லவர் காலத்துக் கோயில்களாகும் (கி.பி.600—850). அவர்கள் மலையைக் குடைந்து கோயில்கள் பலவற்றைக் கட்டினார்கள். இவற்றிற்கு எடுத்துக்காட்டுகள் திருச்சி மலைக்கோயிலும், நாமக்கல் மலைக்கோயிலுமாகும். காஞ்சிபுரத்தில் கயிலாசநாதர் கோயிலும், வைகுந்தப் பெருமாள் கோயிலும் அவர்கள் அமைத்த அரிய படைப்புகளாகும். இவற்றுள், கயிலாசநாதர் கோயில் கயிலையின் இயற்கையை விளக்கம் தரும் வகையில் இன்றும் உள்ளது. பல்லவர்களைத் தொடர்ந்து சோழர்கள் கி.பி.1350-ஆம் ஆண்டு வரை ஆட்சி புரிந்தனர். கி.பி.1100 ஆம் ஆண்டில் ஆட்சி எய்திய பாண்டியர்கள் சோழர்களோடு கி.பி.1350-ஆம் ஆண்டில் வீழ்ச்சியுற்றனர். சோழர்களுக்குப்பின் விசய நகர மன்னர்கள் தென்னகத்தை முகமதியர் தாக்குதலிலிருந்து கி.பி.1565-ஆம் ஆண்டு வரையில் பாதுகாத்து வந்தார்கள்.

பாண்டியர்கள், உயர்ந்த மதில்கள், அழகிய விமானங்கள், ஓங்கிய கோபுரங்கள், உள் மண்டபங்கள் ஆகியவற்றுடன் கூடிய கோயில்களைக் கல்லால் கட்டினார்கள். இத்தகைய கோயில்களில் தற்போது நிலைத்துள்ளவற்றில் கொடும்பாளூர், பனங்குடி, விராலூர் ஆகிய ஊர்களில் உள்ள கோயில்களை எடுத்துக் காட்டலாம். சோழர்கள் பல அளவுகளைக் கொண்ட பல கோயில்களைக் கட்டினார்கள். தற்போதுள்ள கோயில்களில் பெரும்பான்மைக் கோயில்கள் திருத்தி அமைக்கப்பட்டோ புதியவையாகவோ சோழ மன்னர்கள் காலத்தில் அமைக்கப்பட்டவையாகும். இவற்றுள் குறிப்பிடத்தக்கவை முதல் இராசராசன் கட்டிய தஞ்சைப் பெருவுடையார் கோயிலும் இம்மன்னர் புதல்வர் முதலாம் இராசேந்திரன் கட்டிய கங்கை கொண்ட சோழேச்சரமும், மூன்றாம் குலோத்துங்கன் எடுத்த திரிபுவனேச்சரமும் ஆகும்.

தமிழகக் கோயிற் சிறப்பு அயல்நாடுகளில் பரவிற்று என்பதற்கு எடுத்துக்காட்டு, வட ஆற்காடு அரக்கோணம் வட்டத்தில் திருஞான சம்பந்தர் பாடல் பெற்ற திருவூறல் மகாதேவர் கோயிலைத் தன்னுள் கொண்ட தக்கோலமாகும். இது முதல் இராசராசன் காலத்தில் ''க்ஷத்திரிய சிகாமணிபுரம்'' என்றும், முதல் இராசாதிராசன் காலத்தில் ''இரட்டபாடி கொண்ட சோழபுரம்" எனவும், முதல் குலோத்துங்கன் காலத்தில் ''பல்லவபுரம்'' எனவும், ''குலோத்துங்க சோழபுரம்'' எனவும், விசய கண்ட கோபாலன், விசய நகர மன்னர் ஆகியோர் காலங்களில் ''வடமுடிகொண்ட சோழபுரம்'' எனவும் வழங்கப்பட்டது. திருவூறல் மகாதேவர் கோயிலுக்கு 16-ஆம் நூற்றாண்டு வரையில் மன்னர்களும் மக்களும் நன்கொடைகள் பல அளித்துச் சிறப்பளித்ததைக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. கி.பி.2-ஆம் நூற்றாண்டினராகிய கிரேக்க நாட்டு நிலவியல் ஆசிரியர் தாலமி இவ்வூரைத் ''தக்கோல'' எனக் குறிப்பிட்டுள்ளார். இவ்வூர்ச் சிறப்பின் அடிப்படையில் சியாம் நாட்டைச் சார்ந்த தாகோமா வட்டத்தில் ''தக்கோலம்'' என்னும் ஓர் ஊர் விளங்கி வருகிறது. இதன் அருகில் உள்ள ஆற்றுக்கும் ''தக்கோல'' என்னும் பெயர் வைக்கப்பட்டுள்ளது. அங்குள்ள குன்றின் பெயர் நாரணன். இங்குள்ள சிற்பங்கள் சீதேவி, பூதேவி ஆகியோரைக் குறிக்கின்றன. இங்குள்ள தமிழ்க் கல்வெட்டு கி.பி.9-ஆம்

நூற்றாண்டைச் சார்ந்தது. முதல் இராசேந்திரன் 18-ஆம் ஆட்சி ஆண்டு மெய்க்கீர்த்தியில் (கி.பி.1030) கலை வல்லுநர் புகழும் ''மேல்நிலைத் தக்கோலம்'' என்னும் பொருளில் ''கலைத்தக்கோர் புகழ் கலைத் தக்கோலம்'' எனத் தக்கோலம் புகழப்படுகிறது.

அரக்கோணம் தக்கோலத்தில் நந்தி தீர்த்தம் என்னும் அருமையான தீர்த்த அமைப்புடைய சிறிய சிவன் கோயில் உள்ளது. இக்கோயில் மேற்புறத்தில் ஆழமான நிலப்பரப்பில் கட்டப்பட்டுள்ளது. இதன் மேற்புறத்தில் உயர் நிலைப் பகுதியிலுள்ள சுனைநீர் ஒரு நந்தியின் வாயிலிருந்து இக்கோயிலின் உட்புறம் விழுந்து அங்குள்ள சிவலிங்கத்தின் நாற்புறங்களிலும் பாய்ந்தோடி, சிவலிங்கத்தின் அடிப்பகுதியில் ஊறும் நீருடன் ஒன்று சேர்ந்து அக்கோயிலின் கிழக்குப் பகுதியிலுள்ள மற்றொரு நந்தி வாயின் வழியாக அக்கோயிலின் அடிப்பகுதியை அடுத்து, ஆழத்தில் அமைக்கப்பட்டுள்ள சிறு குளத்தில் வீழ்கிறது. இந்நீர்வீழ்ச்சியில் மக்கள் நின்று நீராட இயலுமாறு அக்குளம் அமைக்கப்பட்டுள்ளது. இக்குளத்திலிருந்து வழிந்தோடும் நீர் இக்குளத்தின் அடியிலிருந்து சற்றுக் கிழக்கிலுள்ள ஆற்றில் விழுகிறது. இவ்வூர் இறைவன் திரு ஊறுகின்ற தலம் என்னும் பொருள் தரும் ''திருவூறல்'' என்னும் பெயர்க்கேற்ப, இவ்வூரில் தண்ணீருக்கு என்றுமே தட்டுப்பாடு ஏற்பட்டதில்லை.

விசயநகர மன்னர்கள் உயர்நிலைக் கோபுரங்களையும் சீரிய மண்டபங்களையும் அமைத்தார்கள். காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயில் 194 அடி உயரமுள்ள கோபுரமும் சுசீந்திரம் கோயிலின் 134 அடி உயரமுள்ள கோபுரமும் காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் பரந்த ஆயிரக்கால் மண்டபமும் பல்வகை அழகிய சிற்பங்களைக் கொண்ட காஞ்சிபுரம் வரதராசர் கோயில் கிழக்குக் கோபுரமும் திருக்கலியாண மண்டபமும், விசயநகர மன்னர்களால் கட்டப் பெற்றவையாகும்.

இவ்வாறு வெளிநாட்டினரும் வியக்கத்தக்க வகையில் பல கோயில்கள் இயற்கைச் செங்குன்றுகளின் உச்சிகளிலும், கண்ணுக்கினிய பசுமையும், காதிற்கினிய பறவை ஒலியும், நாசிக்கினிய நறுமணமும், நாவிற்கினிய நற்கனிகளும் உடலுக்குகந்த உயர் தென்றலும் மிக்க சோலைகளிலும் புனித ஆற்றங்கரைகளிலும், கவினுறு கடற்கரையிலும் தோன்றின. இக்கோயில்கள் ஆன்மிக இன்பமும் தெய்வீக அருளும் நல்கின.

4. கி.பி. 17-ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர்

இக்காலத்தில் முகமதியர் தாக்குதலைத் தாங்கி நிற்க வேண்டிய நிலை கோயில்களுக்கு ஏற்பட்டது. கி.பி. 1688-ஆம் ஆண்டில் முகமதியர் தாக்குதலை எதிர்நோக்கித் தென்னிந்தியாவின் முக்கியமான மையங்களில் பதட்ட நிலை பரவிற்று. காஞ்சிபுரம் வரதராசப்பெருமாள் கோயில் தெய்வத் திருவுருவங்கள் பாதுகாப்புக்காகத் திருச்சிராப்பள்ளி மாவட்டம், உடையார் பாளையத்துக்கு எடுத்துச் செல்ல வேண்டிய தேவை ஏற்பட்டது. இவ்விடர் நீங்கிய பின்னர், கி.பி.1710-ஆம் ஆண்டில் இத்திருவுருவங்கள் காஞ்சிக்குத் திரும்பி வந்து சேர்ந்தன.

தென்கோடியில் உள்ள சுசீந்திரம் கோயிலைச் சந்தாசாகிப் தாக்க வந்தபோது, அக்கோயில் அதிகாரி வட்டப்பள்ளித் தானிகர், அக்கோயிலின் பணியாளர்களையும் அக்கோயில் நிலங்களைப் பயிரிடுவோர்களையும் திரட்டிக்கொண்டு சென்று, சந்தாசாகிப் முன்னேறி வந்ததைத் தடுத்து நிறுத்தினார். இதில் அவர் உயிர் துறந்தனர் எனினும் அவர் புரிந்த தீரச் செயலின் விளைவாகக் கோயில் நகைகள், தெய்வத் திருவுருவங்கள் முதலியவை பாதுகாக்கப்பட்டன. இத்தகைய தாக்குதல்களை வேறிடங்களிலுள்ள திருக்கோயில்களும் ஒருவாறு தாங்கி நின்றன. இதன் பின்னர், ஆங்கிலேயர் ஆட்சி தொடங்கிற்று. கி.பி.1812 ஆம் ஆண்டில் நாட்டிலுள்ள எல்லாக் கோயில்களின் நிர்வாகத்தையும் ஆங்கிலேய நிறுவனம் மேற்கொண்டது. பின்னர் ,1841-ஆம் ஆண்டில் கோயில்களின் நிர்வாகம் முன்னர் எவரெவரிடம் இருந்ததோ அவரவரிடம் ஒப்புவிக்கப்பட்டது. இதன் பின்னர், பல திட்டங்கள் வகுக்கப்பட்டன. தற்போது பெரும்பான்மையான கோயில்களின் நிர்வாகம் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கீழ் உள்ளது.

இக்காலத்தில் புதியவையாகப் பல கோயில்கள் கட்டப்பட்டுள்ளன.

5. தற்காலத்திலுள்ள கோயில்களின் எண்ணிக்கை விவரம்

தேவாரத் திருப்பதிகம் பெற்ற கோயில்கள் 274. கல்வெட்டின் வழியில் தெரிய வந்த பதிகம் பெற்ற கோயில் திருவிடைவாய். இது கொரடாச்சேரிக்கு மூன்று கல் தொலைவில் உள்ளது. தேவாரப் பாடல் பெற்ற இச் சிவ தலங்கள் எழுநூற்று எழுபத்தைந்துக்குள் அநேகதங்காபதம் (கௌரிகுண்டம்), இந்திர நீலப் பருப்பதம், கேதாரம் ஆகியவை வடநாட்டிலும், பருப்பதம் (சிவசைலம்) ஆந்திர நாட்டிலும், திருவஞ்சைக்களம் கேரளத்திலும், திருக்கேதீச்சுரம் திரிகோணமலை ஆகியவை இலங்கையிலும் உள்ளன. இவற்றோடு வைப்புத் தலங்கள் 192 உள்ளன.

ஆழ்வார்களால் மங்கள சாசனம் பெற்ற 108 கோயில்களுள் திருமூழிக்களம், திருக்காட்கரை, வித்துவக்கோடு, திருக்கடித்தானம், திருவல்லவாழ், திருவண்டூர், திருவாறன்விளை, திருப்புலியூர், திருச்செங்குன்றூர், திருவனந்தபுரம், திருவாட்டாறு ஆகியவை கேரள நாட்டில் உள்ளன. திருவேங்கடம், சிங்கவேழ்குன்றம் (அகோபிலம்) ஆகியவை ஆந்திர நாட்டில் உள்ளன. துவாரகை, வடமதுரை, திருவாய்ப்பாடி (கோகுலம்), நைமிசாரண்யம் அயோத்தி, சாலிக்கிராமம், திருக்கண்டங்கடிநகர் (தேவப்பிரயாகை), திருப்பிரதி (ஜோசிமடம்) வதிரியாச்சிரம் (பத்ரிகாச்சிரமம்) ஆகியவை வடநாட்டில் உள்ளன. திருப்பாற்கடல், பரமபதம் ஆகிய இவ்விரண்டும் இந்நிலவுலகில் இல்லை.

தேவாரப் பாடல் பெற்ற 275 கோயில்களில் உள்ள 94 முருகன் கோயில்கள் திருப்புகழ்ப் பாடல் பெற்றுள்ளன. திருப்புகழ்ப் பாடல் பெற்ற மற்ற முருகர் கோயில்களின் எண்ணிக்கை 76. வழி தெளிவாகத் தெரிய வராத சுப்பிரமணியர் கோயில்களின் எண்ணிக்கை 79.

தமிழகத்தில் மட்டும் சிவன் கோயில்கள் திருமால் கோயில்கள், விநாயகர் கோயில்கள், முருகர் கோயில்கள், கிராம தெய்வங்களாகிய மாரி, காளி அம்மன், பிடாரி ஐயனுர் ஆகியோர் கோயில்கள் அனைத்தின் எண்ணிக்கை ஏறத்தாழ 25,000 என மதிப்பிடலாம். இக்கணக்கு விவரத்தில் வடநாட்டிலுள்ள கோயில்கள் சேர்க்கப்படவில்லை.

II திருக்கோயில் வழிபாடு

1. கோயில் தத்துவ விளக்கம்

சிவன் கோயில்களின் அமைப்பும் அங்கு நிகழ்த்தப் பெறும் பூசைகளும், ஆன்மாக்கள் உய்யும் பொருட்டுச் சிவபெருமான் அருளிய ஆகம விதிமுறைகளுக்கேற்ப நிலைப்படுத்தப் பெற்றுள்ளன.

திருக்கோயிலில் வழிபாடு ஆற்றத் தொடங்குமுன் நம் கண்ணிற்குப் புலப்படுவது கோபுரமே. இதன் ஒவ்வொரு பகுதியும் சிவபெருமானின் தூலத் திருமேனியின் ஒவ்வோர் உறுப்பைக் குறிக்கிறது. இது அவரிடமிருந்து அதிகாரம் பெற்ற பிரமன், திருமால், அட்டதிக்கு பாலகர்கள், சூரியன், சந்திரன் முதலியோர்களின் உருவங்களை ஏந்தி நிற்கிறது. அடுத்து, நாம் காண்பது கொடிமரம். இது, பிருதிவி தத்துவம் முதல் முப்பத்தாறு தத்துவங்களாலும் விளக்கம் பெறும் இருதய கமலத்தில் சிவபெருமான் எழுந்தருளியுள்ளதைக் காட்டுகிறது. விமானத்திலுள்ள சிவலிங்கம் சூக்கும இலிங்கமெனவும், பலிபீடம், பத்திர இலிங்கம் எனவும் கொள்ளவேண்டும் என்பதைத் திருமந்திரம் கூறுகிறது.[2] சிவலிங்கம், நந்தி, பலிபீடம் ஆகிய மூன்றனுள் சிவலிங்கத்திற்கு நேராக நந்தியும் பலிபீடமும் இருப்பது அவை மூன்றும் ''அநாதி நித்தியம்'' என்பதை உணர்த்துகிறது. சிவபெருமான் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்களால் பிரபஞ்சத்தைச் சித்திரிக்கிறார் என்னும் பொருளைச் சிவலிங்கம் என்னும் சொல் கொண்டுள்ளது. சிவலிங்கத்தின் கீழ் உள்ள ஆவுடையார் கிரியா சக்தியாகும். ஆன்மாக்களின் பாசத்தைக் கெடுத்தற்பொருட்டு ஓர் அசைதற் சக்தி சிவலிங்கத்தைச் சுற்றிக் கொண்டிருக்கிறது. ஆவுடையாரின் ஒரு பக்கத்தில் நீண்டு வெளிவந்துள்ள கோமுகி ஆன்மாக்களைத் திரு

நோக்கம் செய்து கொண்டிருக்கிறது. சிவலிங்கத்தின் அடிப்பாகமாகிய பிரமபாகம் அஃறிணையையும் மையப் பாகமாகிய திருமால் பாகம் பெண்பால் தன்மையையும், உச்சிப் பாகமாகிய உருத்திர பாகம் ஆண்பால் தன்மையையும் குறிக்கின்றன. இவை முறையே அது, அவள், அவன் என்னும் சைவசித்தாந்தக் கோட்பாட்டைக் குறிக்கின்றன. இவ்வுண்மையை,

''சக்தியும் சிவமுமாய தன்மையில் உலக
மெல்லாம்
ஒத்தும் ஒவ்வா ஆணும் பெண்ணும்
உயர்குண குணியுமாகி
வைத்தனன் அவனால் வந்த ஆக்கமிவ்
வாழ்க்கையெல்லாம்
இத்தையு மறியார் பீடலிங் கத்தினியல்பு
மோரார்''

என்னும் சிவஞான சித்தியார் பாடல் எடுத்துக் கூறுகிறது. ஆதலால் இலிங்கமென்பது சிவமேயாம். இச்சிவம் ''சிவன் என்னும் நாமம் தனக்கேயுடைய செம்மேனிப் பெம்மான'' எனக் குறிப்பிடுகிறார் திருநாவுக்கரசு நாயனார்.

இவரே மூவருக்கு மேலான ''சிவம்சாந்தம் அத்வைதம் சதுர்த்தம்'' என மாண்டுக்கிய முதலிய உபநிடதங்களால் குறிப்பிடப் பெறுபவர். மூவரில் ஒருவராகச் சிவபெருமான் கருதப்படத் தக்கவர் அல்லர் என மாணிக்க வாசகர் திருச்சதக்கத்தின் நான்காம் பாடலில் தெரிவிக்கிறார்.

தென்னகத்தில் அமைந்த பெரும் கோயில்களில் ஐந்து, நிலம், நீர், தீ, காற்று, விசும்பு என்னும் இயற்கை சக்திகளால் வழிபடப் பட்டவை, பிருதிவிலிங்கம் (சிவபெருமான் புற்றிடங்கொண்டிருக்கும் திருவாரூர், அம்பிகை மணல் இலிங்கம் அமைத்து வழிபட்ட இடமாகிய காஞ்சியம்பதி) அப்புலிங்கம் (இலிங்கத் திருமேனி எப்போதும் ஊற்று நீரோடு ஒன்றியுள்ள திருவானைக்கா) தேயுலிங்கம் (மாலும் அயனும் அடிமுடி தேடி அறியப் படாதது (திருவண்ணாமலை), வாயுலிங்கம் (திருமூலத் தானத்தில் காற்றின் அசைவு எப்போதும் காணப்படும் வாயுத்தலமாகிய (திருக்காளத்தி), ஆகாசலிங்கம் சிதாகாசமாகிய (சிதம்பரம்) ஆகியவையாம். மனிதரால் செய்யப்படாத சுயம்பு லிங்கங்களைக் கொண்டவை திருவாரூர், தென்னாகை, திருநள்ளாறு திருமறைக்காடு, திருக்காறாயில், (திருக்காறைவாசல்), திருவாமூர், திருக்கோளிலி ஆகிய ஏழு தலங்களாகும். இவை சப்தவிடங்க தலங்கள் எனப்பெறும்.

சிவ இலிங்கங்கள் தவிர, ஆகமங்களில் குறிப்பிடப் பெற்றவாறு சந்திரசேகரர், உமா மகேசுவரர், நடராசர், பிட்சாடனர் ஆகியோர் போன்ற திருவுருவங்களும் கோயில்களில் நிலைபெறுத்தப் பெற்றுள்ளன.

கோயிலிலுள்ள ஐந்தாம் பிராகாரம் உடலில் உள்ள அன்னமய கோசத்தையும், நான்காம் பிராகாரம் பிராணமய கோசத்தையும், மூன்றாம் பிராகாரம் மனோமய கோசத்தையும் இரண்டாம் பிராகாரம் விஞ்ஞானமய கோசத்தையும், முதல் பிராகாரம் ஆனந்தமய கோசத்தையும் குறிப்பிடுகின்றன. இவ்வைந்து கோசங்களுக்கு அப்பால் உயிருடன் உயிராய் இறைவன் இணைந்து உயிர் மூலமாக உடலை இயக்குவது போன்று கோயிலின் ஐந்து பிராகாரங்களுக்கு அப்பால் இலிங்கவடிவில் இறைவன் அருள் பாலிக்கிறார்.

முதல் பிராகாரத்தை வலம் வருவதிலும் இரண்டாம் பிராகாரத்தை வலம் வருவதிலும் மிகுந்த நன்மைஏற்படுகிறது. இவ்வாறு படிப்படியாக ஐந்தாம் பிராகாரத்தில் வலம் வருதல் மிகச் சிறப்புடையது. நம் கால்களால் அடையக்கூடிய பயன் அரன் கோயில் வலம் வருதல் எனத் திருநாவுக்கரசு நாயனார் திருவங்கமாலையில் அருளிய அறிவுரை கருத்தில் கொள்ளத்தக்கதாகும்.

2. கோயில் தெய்வச்சிலைகளிலும் உலோகத் திருமேனிகளிலும் இறைவன் எழுந்தருளல்:

எழுத்துக்களுக்கு ஒலி வடிவம் வரி வடிவம் ஆகிய இவ்விரண்டும் உள்ளன. எழுதப் படுவதாம் எழுத்து என்பதோடு எழுகின்றது அல்லது எழுச்சியுறுவது எழுத்து எனவும்

கூறலாம். வரிவடிவிலான எழுத்துக்களாகிய ''அனுமதியின்றி உள்ளே வரவேண்டாம்'' என்னும் தொடர் ஒரு வீட்டின் முகப்பில் எழுதி வைக்கப்படின் அத்தொடர், விரைவாக வீட்டினுள் நுழைய வருவோரைத் தடுத்து நிறுத்துகிறது.

தமது உடலுறுப்பு அசைவைக்கொண்டு ஊமையர் தமது எண்ணத்தை வெளிப்படுத்து தலால் சைகைக்கு ஆற்றலிருப்பது தெரிய வருகிறது. எண்ணத்திற்கும் ஆற்றல் உண்டு. எண்ணங்களை எண்ண அலைகள் '' thought waves '' என்பர். சாதாரண மக்களே தங்கள் எழுத்தாலும், சைகையாலும் எண்ணத் தாலும் பல செயல்களில் பிறர் ஈடுபடுமாறு செய்ய முடியுமெனில், சைவ ஆகமங்கள் பாராட்டும் ஆதிசைவர்கள் தாங்கள் புரியும் சைவக் கிரியைகளாலும் ஓதும் மந்திரங் களாலும் தங்கள் உள்ளத்திலுமன்றி எங்கும் நிறைந்துள்ள சிவபெருமானைக் கற்சிலை களிலும், செம்பு வெண்கலத் திருவுருவங் களிலும் தெய்வ ஆற்றலை நிலைப் படுத்து கிறார்கள். இவ்வாறு நிலைப்படுத்தப் பெறு வது சிந்திக்கப்படத் தக்கதாகும்.

''ஆவாகனம்'' என்பது சிவபெருமானைத் திருவுருவத் திருமேனிக்குள் வரவழைப்ப தாகும். அடுத்தது தாபனம், இது ''தயா நிதியே அருள் புரிவதற்காக இச்சிவலிங்கத்தின் (அல்லது உலோகத் திருமேனியில்) எழுந்தருள வேண்டும்'' என்பதற்காகச் செய்யப்படும் பாவனையாகும் எனச் சதாசிவரூபம் கூறு கிறது. அடுத்தது சந்நிதானமாகும். இது ஆன்மாவின் அறிவு சிவபெருமானுடைய பரி பூரண குணத்திலும் சிவபெருமானது பரிபூரண தன்மை ஆன்மாவிடத்திலும் ஒன்றை ஒன்று பிரியாதவாறு ஆண்டானும் அடிமையுமாக நிற்றலாகும். அடுத்துள்ளது ''இறைவனே எப்போதும் இங்கு அருள் பாலித்துக் கொண் டிருக்க வேண்டும் என்னும் முறையில் மேற் கொள்ளும் பாவனை சந்நிரோதணமாகும். அடுத்தது அவகுண்டனம், எண்ணிறந்த ஆற்றல்களுடையவரும், எங்கும் நிறைந்திருப் பவருமாகிய பரமேசுவரன் அவர் அடியார்களல் லாதவர்கள் பார்வை படாதவாறு மறைத்தல் பாவனையாகும். இத்தகைய பாவனை களாலும் ''நிறைமொழி மாந்தர் தம் ஆணை யில் பிறக்கும் மறைமொழி மந்திர மென்ப'' என்னும் தொல்காப்பியச் சூத்திரத்தின் கீழ் வரும் மந்திரங்களாலும், தமிழ் மறையாகிய தேவாரப் பதிகம் ஓதப்பெறுதலாலும் இறை வன் கற்சிலைகளிலும் உலோகத் திருவுருவங் களிலும் நிலைப்படுத்தப் பெறுகிறார்.

3. ஆகமங்களில் பிராகாரம் ஆவரணம் எனக் குறிக்கப்படுகிறது. மூன்று பிராகாரங் களுள்ள கோயில்களில் அவை தூலம் சூக்குமம் காரணம் என்னும் மூன்று உடல்களைக் குறிக் கும். இரண்டு பிராகாரங்கள் உள்ளவற்றில் அவை தூலம், சூக்குமம் என்னும் இரண்டு உடல்களைக் குறிக்கும்.

திருக்கோயிலைச் சிவனெனவே கருதி அவ் வாறே வழிபடவேண்டும் என்பதை ''ஆலயம் தானே அரனெனத் தொழுமே'' என்பதாக சிவஞான போதம் எடுத்தியம்புகிறது. இவ் வாறு பல கோயில்களில் வழிபாடாற்றி மார்க் கண்டேயர் பெரும்பேறு பெற்றார் என்பதை

''அத்தன் ஆலய மனைத்தும் வைகலும்
பத்தி யோடுமுன் பரவியே மிகும்
முத்தி யெய்தினன் முழுதுணர்ந் துளான்

எனக் கந்தபுராணம் தெரிவிக்கின்றது.

கோயிலிலுள்ள தெய்வத் திருவுருவங்களில் இறைவன் எழுந்தருளியுள்ளார் என்னும் ஆழ்ந்த நம்பிக்கை முதலில் அமைய வேண்டும் என்பதாகவும் இந்நம்பிக்கை வலுப்படுமானால் இதனால் கிடைக்கப்பெறும் நன்மைகள் கணக்கில் அடங்கா எனவும் குறிப்பிட்டு இதில் தாம் கொண்ட கருத்தை, புகழ்வாய்ந்த மருத் துவர் ஒருவர் தம்மை அணுகிய நோயாளி ஒருவர் உட்கொள்ள வேண்டிய மருந்து இன் னது எனத் தாம் அவருக்கு எழுதிக் கொடுத்த வுடனே அந்நோயாளியின் உடல் நலம் முன்னே றியதாகவும், தம்மைக் கண்டவுடனே மற் றொருவரின் நோயின் வேகம் தணிந்ததாகவும் குறிப்பிட்டு அவர் பின்வருமாறு கூறியுள்ளார். ''பல வரம்புகளுக்குட்பட்ட சாதாரண மருத் துவரிடம் நோயாளி கொள்ளும் நம்பிக்கையே, குறிப்பிடத்தக்க நிவாரணம் அளிக்கிறது

எனில், வரம்புகள் யாவற்றிற்கும் அப்பாற் பட்ட எல்லாம் வல்ல இறைவனிடம் ஒருவர் நம்பிக்கையைப் பெருக்கிக் கொள்வார் எனில், அதனால் அவர் அடையக்கூடிய நன்மை அற் புதமாக அமையும். யான் கூறுவதிலுள்ள உண்மையை உணர்ந்துகொள்ள, வைத்தீசு வரன் கோயில், திருப்பதி, பழனி ஆகியவை போன்ற கோயில்களுக்கு யாத்திரை மேற் கொண்டாலே போதும். இவ்விடங்களில், நூற்றுக் கணக்கில், ஆயிரக் கணக்கில் மக்கள் தாங்கள் அடைந்த நன்மைகளுக்காகத் தங்கள் கடமையைச் செலுத்துகிறார்கள். பன்னெ டுங் காலமாக, வழிபாட்டினாலும், கோயில் களுக்குச் செல்வதாலும், மக்கள் பலவகை நோய்களுக்குத் தீர்வுகாண்கிறார்கள். தேவைப் படுவது யாதொரு ஐயமற்ற உண்மை நம் பிக்கையாகும். இத்தகைய நம்பிக்கையோடு இறைவனிடம் வேண்டிக்கொள்வீர்கள் எனில், உங்கள் துன்பங்களெல்லாம் மறைந்துவிடும்.''

கோயிலில் வழிபாடாற்றும் போது, அக் கோயிலில் முன்பு நாயன்மார்களும் ஆழ்வார் களும் வழிபட்டபோது அருளிய பாடல்களில் சிலவற்றையேனும் நினைவுகூர வேண்டும். திருமறைக்காட்டில் சுந்தரர் வழிபாடாற்றிய போது, அதற்கு முன்னர் அங்கு எழுந்தருளி அருள் பாடல்களை அருளிய திருஞான சம்பந்தரையும் திருநாவுக்கரசு நாயனாரையும் அவர் நினைவு கூர்ந்ததாகச் சேக்கிழார் எடுத்துக் காட்டுகிறார்.

வைணவ சமயத்தைப் பல இடங்களில் பரப்பிய இராமானுஜர் கி.பி.1017 முதல் 1137 வரையில் வாழ்ந்தவர். இவருக்காக வைணவர் அனைவரும் கோயில் நிறுவி யுள்ளார்கள்.

வைணவ அன்பர்கள் வடகலைக்குச் சார்ந்தவர்களாயின் வைணவ விளக்கம் தந்த வேதாந்த தேசிகரைத் (கி.பி.1268–1369) தெய்வமாகப் போற்றுகிறார்கள். இவர் பெய ரில் மயிலாப்பூரிலும் காஞ்சிபுரத்திலும் கோயில்கள் அமைக்கப் பெற்றுள்ளன. இதே நிலையில் பெரிய ஜீயர் எனப் போற்றப்பெற்ற தென்கலை வைணவ ஆசாரியர் மணவாள மாமுனிவருக்கு (கி.பி.1370–1443) கோயில் கள் அமைக்கப் பெற்றுள்ளன. ஆனால் சைவர் களைப் பொறுத்தவரையில் சைவ சாத்திரங் கள் தந்த அருளாளர்களின் திருவுருவங்கள் சிவன் கோயில்களில் காணப்படுவதில்லை. அத்தி பூத்தது போன்று காஞ்சிபுரம் ஏகாம்பர நாதர் கோயிலில் மெய்கண்டார், அருணநந்தி சிவம், மறைஞான சம்பந்தர், உமாபதி சிவம் ஆகியோர்கள் திருவுருவங்கள், நாயன்மார்கள் திருவுருவங்களுக்கு அடுத்து நிறுவப் பெற் றுள்ளன. சென்னையம்பதிக்கு திலகம் போல் விளங்கும் திருமயிலைக் கபாலீச்சரத்திலும் கூட இவ்வருளாளர்களின் திருவுருவங்கள் நிறுவப் படவில்லை. இக்கோயிலுக்கு எதிரிலே தன் கடமைகளைச் சிறப்போடு ஆற்றிவரும் சைவ சித்தாந்தப் பெருமன்றமே இதனை மேற் கொள்ளவில்லையெனில், இங்கு வேறு யாருளர் ?

திருக்கோயில்களில் கல்வி நிலையம், மருத் துவமனை, நூல் நிலையம் முதலியவை இருந்து வந்தன. இன்றும் திருத்தணிகை, வடபழனி முதலிய தலங்களில் ஏழைச் சிறுவர்களுக்கு உணவு அளிக்கும் அன்பு இல்லங்களும் தேவா ரப் பாடசாலைகளும் நிறுவப்பட்டுள்ளன. சில கோயில்களில் சித்த மருத்துவ வசதிகளும் உள்ளன. சிற்பக் கலை, ஓவியக் கலை, படிமக் கலை, இசைக் கலை, நாட்டியக் கலை, ஆகியவற்றை உருவாக்கக் கோயில்கள் உதவி வருகின்றன. இவ்வகையில் பல கோயில்கள் மிக்க வளர்ச்சியடைந்துள்ளன என்பது மறுக்க முடியாத தொன்றாகும். இதே சமயத்தில், மறுக்கப்பட முடியாத மற்றோர் உண்மை, குடிவாரச் சட்டங்களின் விளைவாகவும் மற்றச் சூழ்நிலைகள் காரணமாகவும் முன்னொரு காலத்தில் மிக்க செல்வாக்குப் பெற்றிருந்த கோயில்கள் உட்பட சில கோயில்களில் நாட் பூசை கூட சரிவர செய்யப்பட முடியாத வாறு வறுமை நிலைமை ஏற்பட்டுள்ளது. திருக்கோயில்களில் பூசைகள் செய்யப்பட வில்லையெனில் என்ன என்ன தீயவிளைவுகள் ஏற்படும் என்பதைத் திருமூலர் திருமந்திரம் எடுத்துக் கூறுகிறது. இந்நிலைமையைச் சரிப் படுத்த சில திட்டங்கள் வகுக்கப்படுகின்றன என்னும் செய்தி எடுத்துக் கூறப்படுகிறது. இத்திட்டங்கள் செயற்படுவதை எதிர்பார்த்து நின்றுவிடாமல் தங்கள் தங்கள் பகுதிகளிலுள்ள கோயில்களில் பூசைகள் ஓரளவாயினும் நடை பெறுமாறு கவனித்து வருவது அந்தந்தப் பகுதி களில் வாழும் பேரன்பர்கள் கடமையாகும்.

---

1 புறநானூறு – 6

2 திருமந்திரம் 17.18

3 ஆகமங்களில் பிராகாரம் ஆவரணம் எனக் குறிக்கப்படுகிறது. மூன்று பிராகாரங்க ளுள்ள கோயில்களில் அவை தூலம் சூக்குமம் காரணம் என்றும் மூன்று உடல்களைக் குறிக் கும். இரண்டு பிராகாரங்கள் உள்ளனவற் றில் அவை தூலம், சூக்குமம் என்றும் இரண்டு உடல்களைக் குறிக்கும்.

4 டாக்டர் சுப்பிரமணியம், பி.எஸ்சி.,எம்.டி. என்.ஆர்.சி.பி. லண்டன், சென்னை மருத் துவக் கல்லூரிப் பேராசிரியர்–வைத்திசுவரர் கோயில் கும்பாபிடேக மலர் 1970

உ
சிவமயம்

சைவ சமய சாதனங்கள்

சித்தாந்த சிகாமணி பேராசிரியர் க. வடிவேலாயுதம், எம்.ஏ.

சைவ சமயம் உலகில் உள்ள நெறிகளுள் மிகப் பழமையான நெறியாகும். சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்ட நெறி. சிவத் தொடர்புடையதால் அந்நெறிக்குச் சைவம் என்று பெயர் உண்டாயிற்று. எனினும் பொதுவாகச் சைவர் என்றால் புலால் உண்ணாமையைச் சிறப்பாகக் கடைப்பிடித்து ஒழுகுபவர் என்றே உலகியலில் மக்கள் கருதுகின்றனர். அதுவும் ஒரு சார் ஏற்புடைக் கருத்தேயாகும்.

சிவபெருமான் எப்பொழுதும் வெண்ணீறு அணிந்து, கண்மணிகளைக் கழுத்திற் பூண்ட செம்மேனி எம்மானாகவே சிறப்பித்துப் போற்றப்படுகின்றார். எனவே அவரை வழிபடுகின்ற மக்களும் அதனை அவர் அடையாளமாகக் கொண்டு, அவற்றை அணிதல் அவருக்கு விருப்பத்தை மிகுவிக்கும் என்ற ஆர்வத்தால் திருநீற்றையும் உருத்திராக்கத்தையும் அணிந்து கொள்ளுதலைச் சிறந்த சைவ சாதனம்மாகப் போற்றி வருகின்றனர். உள்ளன்பிற்குப் புற அடையாளங்களும் இன்றியமையாத சாதனங்களே. கணவனிடத்து மிகுந்த அன்புள்ள மனைவி எவ்வாறு அவன் விரும்புவதைத் தான் ஏற்றுக்கொண்டால் அவனுக்கு அவளிடத்துப் பிரியம் மிகுகின்றதோ அதுபோலச் சிவனடியார்களும் சிவபெருமான் விரும்பியணிவதைத் தாங்கள் அணிந்தால் அவர் அருள் சித்திக்கும் என்று எண்ணியே அதனை அடையாளப் பொருளாக விரும்பி அணிந்து கொள்கின்றனர்.

நாட்டின் முப்படைகளும் ஒன்றாக இருந்தாலும் அவற்றின் தன்மைக்கேற்ப வெவ்வேறு அடையாளங்களைக் கொண்டிருத்தல் நாம் உலகியலில் காணும் உண்மையாகும். காவல் படைகளிலும் அவரவர் பதவிக்கேற்ப வெவ்வேறு சின்னங்களை அணிந்து சிறப்படைதல் கண்கூடாகக் காணப்படுகின்றது.

சிவபெருமானது நாமமாகிய திருவைந்தெழுத்தும் அவருக்கு உவகையூட்டும் மற்றொரு சிறந்த சாதனமாகும். ''தீரா நோய் தீர்த்தருள வல்லான் தன்னை'' என்று அப்பர் சுவாமிகள் அருளியுள்ளது சிவபெருமானே துன்ப நீக்கத்திற்கு உறுதுணையாகவுள்ளார் என்ற கருத்தை வலியுறுத்துகிறது. உடல் நோயையும் பிறவி நோயையும் தீர்க்கும் வல்லமை தனக்கேயுடைய செம்மேனி எம்மான். ஆகையினாலேயே சிவபெருமானுக்கு வைத்திய நாதன், வைத்தியலிங்கம் என்ற சிறப்புப் பெயர்கள் வழங்கலாயின. இதனையே ''எப்பொழுது ஆகாயத்தைத் தோல்போற் சுருட்டுதல் கூடுமோ அப்பொழுது சிவனையறியாமல் துன்பத்தினின்று நீங்குதல் கூடும்'' என்று விளக்குகின்றது ''சுவேதாசுவதரம்'' என்னும் உபநிடதம்.

இக்கருத்தினையே கந்த புராணம்,

''பரமசிவ னுணர்ச்சியின்றிப் பல்லுயிர்த்
தொகையுமென்றும்
விரவிய துயர்க்கீ றெய்தி வீடுபே றடைது
மென்றல்
உருவமில் விசும்பைத் தோலின் உரித்துடுப்
பதற்கொப் பென்றே
பெருமறை இயம்பிற்றென்னிற் பின்னு
மோர் சான்றுமுண்டோ''

(தட்ச.கா உபதேசப் – 25)

என்று எடுத்தியம்பியுள்ளது.

பரமசிவன் துன்பத்தைத் துடைப்பதோடன்றி இன்பத்தையும் தருதலாலேயே அவருக்குச் சங்கரன் என்ற பெயரும் உண்டு.

''நெருப்பனைய திருமேனி வெண்ணீற் றானை'' என்று சிவபெருமான் பல இடத்தும் புகழப் படுதலால் திருநீறு அணிதல் சிவ அடை யாளங்களுள் சிறந்த ஒன்றாகும். அது ஆன் மாக்கள் செய்யும் பாவங்களை நீறாக்கி விடுத லால் திருநீறு எனவும், அந்தமில் இன்பத்து அழிவில் வீடாகிய முத்தியின்பத்தையும் தருத லினால் விபூதி எனவும், ஆணவம், கன்மம், மாயை ஆகிய மலங்களைக் கழுவுதலால் சாரம் எனவும், சிறுதெய்வங்களால் ஏற்படும் துன்பங்களினின்றும் நீக்கிக் காப்பாற்றுதலால் காப்பு எனவும், அறியாமையினை நீக்கி ஒளியைத் தருதலால் பசிதம் எனவும் பல பெயர்களைப் பெறும் என்று பேரூர்ப் புரா ணத்தில் கூறப்பட்டிருக்கிறது.

திருநீற்றினைச் சிறப்பாகப் பாராட்டும் உப நிடதங்கள் மூன்று. சுவேதாசுவதரம், காலா க்னிருத்ரம், பஸ்மஜாபாலம் என்பனவாம். இவ்வுப நிடதங்களின் சாரத்தைத் திருஞான சம்பந்த சுவாமிகளின் திருநீற்றுப் பதிகமாகிய தமிழ் வேதம் நமக்குத் தெளிவாக அறிவுறுத் தியுள்ளது. மதுரைக்கு அரசியார் மங்கை யற்கரசியார், அமைச்சர் குலச் சிறையார் முதலியோர் வேண்டுகோளுக்கிணங்கி எழுந் தருளி, அந்நகரத்தரசராக இருந்த கூன் பாண்டியனது வெப்பு நோயைப் போக்கி அவ் வரசனை நின்ற சீர் நெடுமாறனாக்கிய அற் புதப் பதிகமே அத் திருநீற்றுப் பதிகம். ' மந்திரமாவது நீறு ' என்று தொடங்குகிறது அத் திருப்பதிகம்.

திருநீறு மந்திரம் போல நினைத்ததைக் கொடுக்கும். நினைத்தவரைக் காக்கும். சிவலோகத்தில் உள்ளவரது திருமேனியிலும் பூசப்பட்டது. அணிந்தோர்க்கு அழகு ஊட்டு வதாகும். எல்லோராலும் போற்றித் துதிக் கப்படுவதாகும். சிவாகமத்தில் சிறப்பாகச் சொல்லப்படுவது. சிவ சமயத்தில் அழியாப் பொருளாவது நீறு. திருநீறே சிவமாகும். அறிவார்க்கு அதுவே சிவகதியாகும்.

திருநீறு வேதத்தில் சிறப்பாக எடுத்தோதப் பட்டது. கொடிய பிறவித் துயரம் முதலி யவற்றைத் தீர்ப்பது, சிவஞானத்தைத் தரு வது, அறியாமை முதலிய புன்மைகளை நீக்கு வது, ஆசிரியர் மாணவர்க்கு ஓதத் தருவது, ஓதும்போது அணியத் தகுதியுடையது இத் திருநீறு. வீட்டையளிப்பது திருநீறே. எல்லாச் செல்வங்களையும் வெறுத்த முனிவர்களும் விரும்பியணிவதும் எப் பொழுதும் சத்திய மாகவுள்ளதும் தக்கோர் புகழ்ந்துரைப்பதும், பத்தியைத் தருவதும், வாழ்த்த இனியதும், அணிமா முதலிய எண்வகைச் சித்திகளையும் தருவதும் எண் திசையோரும் ஏத்தும் தகைய தும் தவத்திற் சிறந்தோர்களது ஆசையை அறுப்பதும் புண்ணியர் பூசுவதும், எல்லா வற்றின் முடிவாயிருப்பதும், அதுவே. அரக் கனாகிய இராவணனும் அணிந்து கொள்ளும் படியான சிறப்புற்றது நீறு. சமணர்கள், சாக்கியர்கள் ஆகிய இருவர்கள் கண்களைத் திகைக்கச் செய்ததும் நீறே. சிவ நெறி சார்வ தற்கும் சிங்காரமான சிவனடி சேர்வதற்கும் துணையாக நிற்பது திருநீறே. இவ்வாறு அதன் பெருமைகளை எடுத்தியம்பியுள்ளது திருநீற்றுப் பதிகம். இதனைப் பாடியே நோய் நீங்கினார் பலர்.

இத் திருநீறு மூன்று வகைப்படும். கற்பம், அநுகற்பம், உபகற்பம் என்பன. இவற்றின் விளக்கம் பெரிய புராணத்தில் முழுநீறு பூசிய முனிவர் புராணத்தில் தெய்வச் சேக்கிழார் பெருமானால் சிறப்பாக விளக்கப்பெற் றுள்ளது.

1. கற்பம் : கன்றுள்ள பசுக்கள் இடும் சாணத்தைத் தாமரையிலையில் ஏற்றுச் சிவாக் னியில் இட்டுச் சுட்டு எடுத்துச் சிவசிந்தனை யோடு சேர்த்து வைப்பது.

2. அநுகற்பம் : காட்டில் உலர்ந்துள்ள பசுஞ் சாணத்தைக் கொண்டுவந்து பொடியாக் கிக் கோஜலத்தையிட்டு நன்றாகப் பிசைந்து அத்திர மந்திரத்தால் உருண்டையாகச் செய்து ஓம நெருப்பிலிட்டுச் சுட்டு எடுத்துக்கொள்வது.

3. உபகற்பம் : காட்டிலே நெருப்பினால் எரிந்து வெந்த நீறும், காட்டிலே தீயினால் வெந்த சாணத்தின் நீறும், செங்கல்லைச் சுடும்போது உண்டான நீறும், இவைகளைத் தனித் தனியாக உருண்டையாகச் செய்து மடத்திலுள்ள சிவாக்கினியில் இட்டுச் சுட்டு எரித்து எடுத்துக் கொள்வது.

திருநீற்றை உத்தூளனமாகவும் (பொடியாகவும்) நீரில் குழைத்து முக்குறித் தொகுதியாகவும் (திரிபுண்டரமாகவும்) தரித்துக் கொள்ளலாம். திரிபுண்டரமாக அணியும் தானங்கள் சிரம், நெற்றி, மார்பு, கொப்பூழ், முழந்தாள்கள் இரண்டு, புயங்களிரண்டு, முழங்கைகளிரண்டு, மணிக்கட்டுகள் இரண்டு, விலாப்புறமிரண்டு, முதுகு, கழுத்து என்னும் பதினாறாகும்.

திருநீறு வெண்ணிறமானதாகவே இருத்தல் வேண்டும். திருநீறு அணியாது எக்காரியங்களையும் செய்யத் தொடங்குதல் கூடாது. பெரிய புராணத்தில் ஏனாதிநாத நாயனார் புராணம், மெய்ப் பொருள் நாயனார் புராணம் முதலியன திருநீற்றினை அணிந்து பெருமைபெற்ற அடியார்களது வரலாறாகும். திருவாளன் திருநீற்றைத் திலகவதியார் கொடுக்க அதனால் சமணத்தில் அழுந்திய மருணீக்கியார் திருநாவுக்கரசரான வரலாறு சைவம் அறிந்த உண்மையாகும். '' திருவாய் பொலியச் சிவாய நம என்று திருநீறணிந்தேன். தருவாய்ச் சிவகதி ' என்ற திருநாவுக்கரசர் வாக்கு திருநீறு அணியும் முறைமையினைச் செப்புகின்றது.

' திருவெண்ணீறு அணியாத திருவிலூரும்
[......காடே '
' வெண்ணீறு அணிகிலாதவரைக் கண்டால்
[அம்ம நாம்அஞ்சுமாறே
' திருநீறு இடா உருத் தீண்டேன் '

என்பன திருநீற்றின் பெருமை கூறும் திருமுறை வாக்குகள். ' நீறில்லா நெற்றியைச் சுடு ', ' நீறணிபவன் சிவனோடொப்பான் ', ' நீற்றினை நிந்தித்தவன் சிவனை இகழ்ந்தவனாவான் ' என்பன பஸ்மஜாபால உபநிடத வாக்கியங்களாகும்.

' நீறில்லா நெற்றி பாழ் ' என்பது ஔவையார் அருந்தமிழ்ப் பகுதியாகும்.

மந்திரம் ஜபிக்கும் பிற மதத்தவர்களும் விபூதியைப் பயன்படுத்துகிறார்கள்.

' கங்காளன் பூசும் கவசத் திருநீற்றை
மங்காமல் பூசி மகிழ்விரே யாமாகில்
தங்கா வினைகளும் சாரும் சிவகதி
சிங்கார மான சிவனடி சேர்விரே '

என்ற திருமந்திர வாக்கு திருநீற்றின் பெருமையினை இனிமையாகப் பேசுகின்றது.

உருத்திராக்கம் சிவ சின்னங்களுள் மிக முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது.

' பரமசிவன் அமலன் பத்தர்க்குச் சின்னம்
உருவுடலிற் கண்டிகையும் நீறும் '

என்ற சைவ சமய நெறிக் குறள் அதன் பெருமையை நன்கு உணர்த்துகின்றது. கண்டிகையே முதலில் கூறப் பெற்றிருப்பது அதன் சிறப்பினைத் தெளிவாக்குகிறது. திருநீறு வியர்வை முதலியவற்றால் உடம்பில் மறைந்து போனாலும் அணிந்துள்ள உத்திராக்கம் ஒரு நாளும் உடம்பை விட்டு நீங்காது. இந்த மணி உருத்திரன் கண்ணினின்றும் தோன்றிய காரணத்தால் உருத்திராக்கம் — ருத்திராக்ஷம் எனப் பெயர் பெற்றது. அக்ஷம் என்றசொல் கண்ணைக் குறிக்கும் வடசொல்லாகும். அக்ஷம் அக்கமாயிற்று. பிறவிக் கடலில் வீழ்ந்து கரையேற முடியாது தவிக்கும் ஆன்ம கோடிகளைக் கரையேற்றுபவன் உருத்திரன் என்று கந்தபுராணம் கூறும்.

' இன்னலங் கடலுட்பட்டோர் யாவரையும்
எடுக்கு மாற்றால்
உன்னரும், பரமமூர்த்தி உருத்திரன் எனும்
பேர் பெற்றான் '

கணவனை மணந்த கற்புடையாளுக்கு எவ்வாறு மங்கல நாண் இன்றியமையாததோ அதுபோலவே இறைவனை நாயகனாகக் கொண்ட உயிர்களுக்கும் உருத்திராக்கம் மிக வேண்டப்படுவதாயிற்று. இதன் மறு பெயர்கள் தெய்வமணி, புனித மணி, நாயகன் விழிமணி, கண்கணி, அக்கமணி, கண்டிகை எனப் பல புராணங்கள் சிறப்பித்துக் கூறுகின்றன.

இதன் தோற்றம் பற்றி வழங்கும் செய்தியினைக் காண்போம். முற்காலத்தில் தாருகாக்ஷன், கமலாக்ஷன், வித்யுண்மாலி என்னும் மூன்று அசுரர்கள் பொன், வெள்ளி, இரும்பு ஆகியவற்றாலாகிய மூன்று கோட்டைகளிலிருந்து சிவனிடம் பெற்ற வரத்தால், தேவர்களைத் துன்புறுத்தி வந்தார்கள். அதனைப் பொறுக்காத தேவர்கள் இறைவனைக்குறித்து

ஆயிரம் ஆண்டுகள் தவமிருந்தார்கள். தவத்திற்கு இரங்கிய கருணாமூர்த்தியாகிய சிவபிரானது 3 கண்களினின்றும் நீர்த் துளிகள் கீழே விழுந்தன. (விழுந்த இடம் பரத கண்டமாகிய இந்தியாவின் வட கோடியிலுள்ள நேபாளம் என்னும் தேசத்திலாம்) வலக் கண்ணிலிருந்து வீழ்ந்த நீர்த் துளிகளில் 12 உருத்திராக்ஷ மரங்கள் தோன்றின. இடக் கண்ணிலிருந்து விழுந்த நீர்த் துளிகளில் 16 உருத்திராக்ஷ மரங்கள் தோன்றின. நெற்றிக் கண்ணிலிருந்து சிந்திய நீர்த் துளிகளில் 10 மரங்கள் தோன்றின. ‘ உருத்திரனின் விழித் துளிகளே உருத்திராக்கம் ’ என்று விருத்தாசல புராணம் கூறும். ஆக 38 மரங்களிலிருந்து வீழ்ந்த காய்களே உருத்திராக்கங்கள் ஆயின. இவற்றிற்கு கண்மணிகள் என ஒரு பெயரும் உண்டு. இவற்றின் மீதுள்ள கோடுகள் முகங்கள் என்று சொல்லப் பெறும். வலக் கண்ணிலிருந்து தோன்றிய மணிகள் கபில நிறமாகவும், செந்நிறமாகவும், பொன்னிறமாகவும் இருக்கும். இடக் கண்ணிலிருந்து தோன்றிய மணிகள் வெண்ணிறமாக விருக்கும். நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றிய மணிகள் கருநிறமாகவிருக்கும். அவைகளையெல்லாம் இறைவன் ஆணையிட்டருளியவாறு தேவர்களும் முனிவர்களும் அணிந்து துன்பம் நீங்கி இன்புற்றார்கள். இவற்றை அணிவதால் நோய்கள் நீங்குவதாக வைத்திய நூல்கள் கூறுகின்றன. மணிகளின் எண்ணிக்கை ஜப மாலையாக இருந்தால் 54 அல்லது 108 கொண்டனவாக இருத்தல் வேண்டும். நடு நாயகமான மணிக்கு மேரு என்று பெயர். அக்குமாலை கொடு அங்கையில் எண்ணுவார்’ என்ற அருள் வாக்கு நினைக்கத்தக்கது.

இம் மாதிரியான மணிகள் ஆயிரத்தை ஒருவர் அணிந்து கொண்டால் அவர் பரம சிவனுக்குச் சமானமானவர் என்பர்.

‘ ஆயமாமணி ஆயிரம் புனைந்திடி லவரை
மாய நான்முகன் புரந்தரன் வானவர்
[முதலோர்
பாயு மால்விடைப் பரனெனப் பணிகுவர்
[என்றால்
தூய மாமணி மிலைந்தவர் மனிதரோ
[சொல்வீர்.

எனப் பிரமோத்திர காண்டம் உணர்த்துவது இங்கு நினைக்கத்தக்கது.

‘‘ஆசையராய் பாசம் விடாய் ஆனசிவ
[பூசை பண்ணாய்
நேசமுடன் ஐந்தெழுத்தை நீ நினையாய்
[சீ சீ
சினமே தவிராய் திருமுறைகள் ஓதாய்
மனமே உனக்கென்ன வாய் ’’

என்ற தருமையாதீனக் குருமுதல்வர் குரு ஞான சம்பந்த சுவாமிகள் வாக்கு ஐந்தெழுத்தின் பெருமையை நன்குணர்த்தும்.

திருவைந்தெழுத்து என்றாலும் ஸ்ரீ பஞ்சாட்சரம் என்றாலும் ஸ்ரீ பஞ்சாக்கரம் என்றாலும் சிவ மூல மந்திரம் என்றாலும் ஒரு பொருளையே குறிக்கும். இது நமசிவாய என்றும் ‘ சிவாய நம ’ என்றும் இன்னும் சில வகையாலும் விளங்கும் என்று நம் உயிர்க்கு உறுதி பயக்கும் திருமுறைகளும் சித்தாந்த சாத்திரங்களும் முழங்குகின்றன. இம் மகா மந்திரத்தின் முழுப்பயனையும் அடைய வேண்டின் தக்க குருமுகத்தின் மூலமாகத்தான் அறிய முடியுமே தவிர வேறு வகையால் இயலாது.

இனி திருவைந்தெழுத்து சி, வ, ய, ந ம என்ற ஐந்து எழுத்துக்களையும் குறிக்கும். இவ்வைந்து எழுத்தையும் கூட்ட வரும் சிவய நம என்பது வட மொழியில் ஒரு சொற்றொடர். அது இங்கே சொற்றொடர் அல்ல. எழுத்து. ஆதலால் தான் இதனைத் திரு ஐந்தெழுத்து என்றனர் பெரியோர். இவ்வெழுத்துக்கள் இறைவனை திருப் பெயர்களுள் ஒன்றான நமசிவய என்பதில் உள்ளவையே. இதை மாற்றிச் சிவாய நம என்றால் பெயர்த் தன்மை நீங்கி எழுத்தாகி விடுகிறது. திரு ஐந்தெழுத்தை நினைத்து ஓத வேண்டுமாயின் ‘ நமசிவாய ’ என்ற திருப் பெயரை மாற்றி எழுத்தாக்குவது முதல்விதி. இல்லையென்றால் திருவைந் தெழுத்துக்களை இலக்கண முறைப்படிப் பெற முடியாது. திரு ஞானசம்பந்தர், ‘ நந்தி நாமம் நமச்சிவாய ’ என்றும், திருநாவுக்கரசர், ‘ எந்தையார் திரு நாமம் நமச்சிவாய ’ என்றும் அருளிச் செய்திருப்பது காண்க :

இவற்றுள் ‘ சி ’ என்பது சிவபரம் பொருளைக் குறிக்கும்.

‘ வ ’ என்பது அவனருளை (சக்தியை)க் குறிக்கும்.

'ய' என்பது உயிரை (ஆன்மாவை)க் குறிக்கும்.

'ந' என்பது மறைப்புச் சக்தி அல்லது திரோதான சத்தியைக் குறிக்கும்.

'ம' என்பது மலத்தைக் குறிக்கும்.

'நமச்சிவாய' என்பது தூல பஞ்சாக்கரம்.

'சிவாய நம' என்பது சூக்கும பஞ்சாக் கரம்.

'சிவாய சிவ' என்பது அதி சூக்கும பஞ் சாக்கரம்.

சிவமந்திரமே சிவமாகும். அதனை உச்ச ரித்தலே முத்தியைத் தரும். திருஞான சம்பந்தரும், வேத நான்கினும் மெய்ப்பொரு ளாவது', என்றும் 'செந்தழல் ஓம்பிய செம் மை வேதியர்க்கு அந்தியுண் மந்திரம்' என் றும், திருநாவுக்கரசு சுவாமிகளால், ''கற்று ணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும் நற் றுணையாவது' என்றும், 'நாவினுக்கு அருங் கலம்' என்றும், 'நல்லக விளக்கு' என்றும் பாராட்டப் பெறுவதும், திரு ஐந்தெழுத்தை முதலாக வைத்து, 'நமச்சிவாய வாழ்க' என அருளிச் செய்தார் மணிவாசகர் என்றும் புக ழப்படும் பெருமையினையு முடையது ஸ்ரீ பஞ்சாட்சரம்.

இவ் வைந்தெழுத்தின் சிறப்பினையும் உயர் வினையும் வலியுறுத்தவே திருஞான சம்பந்தர் இரண்டு பஞ்சாக்கரப் பதிகங்களையும், திரு நாவுக்கரசு நாயனார் ஒரு பஞ்சாக்கரப் பதிகத் தினையும், சுந்தர மூர்த்தி சுவாமிகள் ஒரு பஞ்சாக்கரப் பதிகத்தையும் அருளியுள்ளார் கள். இம் மந்திரத்தை ஓதி உய்ந்தவர்கள் 63 நாயன்மார்களுள் பலர். கயிலை செல்லும் போது சேரமான் பெருமாள் நாயனார் தான் ஏறியிருந்த குதிரையின் காதில் உபதேசித்ததும் இம் மந்திரமே.

பிறவிப் பிணியைப் போக்கும் உயரிய மருந்து. வாயிலே வைக்குமளவில் பயனைத் தந்துவிடும்' என்பர் நக்கீர தேவர்.

''சிவாய நம' என்று சிந்தித்திருப்பவர்க்கு அபாயம் ஒரு நாளும் இல்லை' என்கிறார் தமி ழன்னையாகிய ஔவைப் பாட்டியார்.

மாதவச் சிவாஞான சுவாமிகள் காஞ்சிப் புராணத்தில் 'அஞ்செழுத்தும் திருநீறும் கண் டிகையும் பொருளாக் கொண்ட நாயன்மார் திருக்கூட்டம்' என்று சிறப்பித்துப் போற்றி யுள்ளார்.

''நல்லவர் தீயர் எனாது நச்சினர்
செல்லல் கெடச்சிவ முத்தி காட்டுவ
கொல்ல நமன்றமர் கொண்டு போமிடத்
தல்லல் கெடுப்பன அஞ்செ ழுத்துமே.

(திருஞான சம்பந்தர்)

வினவும் விடையும் :

யான் இளமை தொட்டு ஞானியார் சுவாமிகளை வணங்கி வந்தேன். ஒருவரை ஒருவர் வணங்குதல் கூடாதென்று சிலர் பேசுவர். அவருள் ஒருவர், ''நீங்கள் ஏன் ஞானியாரை மட்டும் வணங்குகிறீர் ?'' என்று கேட்டார். அதற்கு, ''ஞானியாரை வணங்கும் பழக்கம் எனக்கு இன்று நேற்று ஏற்பட்டதன்று. அஃது ஏற்பட்டு நீண்ட கால மாயிற்று. அதை வலிந்து நிறுத்தப் புகுவது ஆணவமாகும்.'' என்று பதிலிறுத்தேன்.

திரு. வி .க.

(திரு.வி.க. சிறப்புரை - ஞானியார் அடிகள் நினைவு மலர்)

உ
சிவமயம்

திருவெண்காட்டு நங்கையார் மாண்பு

திருமதி தி. சுந்தராம்பாள், எம்.ஏ., எம்பிஃல்.,
தமிழ்ப் பேராசிரியை, வே.வ.வ. மகளிர் கல்லூரி, விருதுநகர்.

பெரிய புராணம் பரவும் 63 நாயன்மார்களுள் ஒருவர் சிறுத் தொண்டர். இவருடைய இயற்பெயர் சிறுத் தொண்டர். அடியார்களின் பெருமையின் முன்பு தம்மை மிகச் சிறியவராய் மதித்து ஒழுகிவந்தமையால் சிறுத் தொண்டர் என்றழைக்கப்பட்டார். இவருடைய மனைவி திருவெண்காட்டு நங்கை. இவ்வம்மையின் இயற் பெயர் சுட்டப்பெற வில்லை. இவர் பிறந்த திருவெண்காடு என்ற ஊர்ப்பெயர் பற்றி இங்ஙனம் அழைக்கப் பெற்றனர் போலும், '' காரைக்காலம்மையார் '' என்ற வழக்கு இங்கு ஒப்பு நோக்கத் தக்கது.

சிறுத்தொண்டரது 'மனையறத்தின் வேராக' விளங்கிய திருவெண்காட்டு நங்கையாரின் சைவநலஞ் சான்ற இல்லற மாண்பினையும் அடியார் அடிமைத் திறத்தில் அவர் கொண்ட அன்பு மேம்பாட்டையும் விளக்குவது இக் கட்டுரையின் நோக்கம்.

இல்லாள் பண்பு :

இல்லற வாழ்வில் ஈடுபடும் மகளிருக்கு இன்றியமையாப் பண்புகளாகத் தொல்காப்பியர் ' கற்பு, காமம், நல்லொழுக்கம், பொறையுடைமை, விருந்து போற்றுதல், சுற்றம் தழுவுதல் ' முதலியவற்றைக் குறிப்பிடு கிறார். (தொல்-பொருள் நூற்பா 150) இப் பண்புகள் இல்லற முன்னேற்றத்திற்கு அரணாக அமைந்து இல்லத்தை வாழ்விக்கும். மேற் கண்ட பண்புகள் பொருந்திய மகளிரை 'மனை முதல் ' என வழங்கினர் பண்டைத் தமிழர். ' இல்லாள் ', ' வாழ்க்கைத் துணை ', என்று சுட்டுவர் வள்ளுவர். 'மனையறத்தின் வேர்' என்று பாராட்டுவர் சேக்கிழார்.

நீதிநூல் காட்டும் இல்லறம் :

இல்லறத்திற்கு இலக்கணம் வகுத்த வள்ளுவம் முதலான நீதி நூல்கள் '' இல்லறமென்பது, ஒருவன் மனைத்தக்க மாண்புடையாளை மணந்து நல்லொழுக்க நெறி நின்று துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும் துணையாகித் தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல், தான், என்னும் ஐம்புலத்தாறும் ஒழுகி, பழிக்கு அஞ்சி, தக்கவர்க்கு பகிர்ந்துண்டு வாழ்தல் ' என்றும், 'அறவோர்க் களித்தல், அந்தணர் ஓம்பல் துறவோர்க் கெதிர்தல் ' ஆகிய நல்லறங்களை நாள் தோறும் இயற்றி வாழ்தல் என்றும் குறிப்பிடுகின்றன.

நாயன்மார் இல்லறம் :

நாயன்மார்கள் மேற்கொண்ட இல்லறம் மேலே குறிப்பிட்ட இலக்கணங்கள் அனைத்தும் பொருந்தி யமைந்ததுடன் அவற்றுக்கு மேலானதொரு குறிக்கோளுடையதாகவும் விளங்கியது. அரன்பணியும், அடியார் பணியும், அன்னாரது இல்லறத்தின் தலையாய பணிகளாக மதிக்கப்பட்டன.

' நீதிநூல்கள் கூறும் இல்வாழ்வான் கடமைகள் உலகியற் பயத்தன. உரிய போகங்களைத் தந்து இறுதியிற் பிறவிக்குக் காரணமாவன. ஆனால் அடியார் பணி அவற்றிலிருந்து வேறுபட்டுச் சிவன் பணியேயாகி, முடிவில் வீட்டுப் பேற்றினை நல்கும் சிறப்புடையது. சிறுத்தொண்ட நாயனார் உலகியற் போகங்கள் பற்றியோ, மகப்பேறு பற்றியோ திருமணம் செய்து மனையறம் மேற்கொண்டவர் அல்லர், அடியார் பணி செய்யவே மனையறத்தை மேற்கொண்டார், இதனை

'' வேதகா ரணரடியார் வேண்டியமெய்ப் [பணிசெய்யத்
தீதில்குடிப் பிறந்ததிரு வெண்காட்டு நங்கை [யெனுங்
காதன்மனைக் கிழத்தியார் கருத்தொன்ற [வரும் பெருமை
நீதிமனை யறம்புரியு நீர்மையினை நிலை [நிற்பார்.''

—சிறுத். புரா, பா. 12.

என்று விளக்குவர் சேக்கிழார்.

அடியார் பணி :

சிவனருட் செல்வர்கள், சிவனருள் பெறுதற்கு அரன்பணி அடியார் பணி ஆகிய இரு பணிகளையும் ஆற்றிய வரலாறுகளைச் சிறப்புறப் பெரிய புராணம் விளக்குகிறது. மக்களிடத்தில் சிவனைக் கண்டு வழிபடும் உள்ளத்துடன் பணி செய்தலே, அடியார் பணியாகும். அடியார் பணி செய்த நாயன்மார்கள் அவரவர் தகுதி, தொழில் வசதி, வாய்ப்புக்கு ஏற்ப ஏதேனும் ஒரு பணி செய்தலை நித்த நியமமாகக் கொண்டொழுகினர். அப் பணியே அவர்களுடைய குறிக்கோளாகவும் அமைந்தது. அக் குறிக்கோள் :

(1) அடியார்க்கு மட்கலம் திருவோடு வழங்குவதாக (திருநீலகண்டத்துக் குயவனார்)

(2) அடியார்க்கு உடை கோவணம் வழங்குவதாக (அமர்நீதியார், நேசர்).

(3) அடியார்க்கு மகளின் கூந்தலை அரிந்து கொடுத்தலாக (மானக்கஞ் சாறர்)

(4) அடியார்க்கு ஆடை வெளுத்துக் கொடுத்தலாக (திருக் குறிப்புத் தொண்டர்)

(5) அடியார் விரும்பிய யாவுங் கொடுப்பதை மேற்கொண்டு மனைவியையுங் கொடுப்பதாக (இயற்பகையார்).

(6) திருவமுது ஊட்டுவதாக (இளையாயான்குடி மாறர், கலிக் கம்பர், காரைக்காலம்மையார், மூர்க்கர், முனையடுவார், சிறுத்தொண்டர்) அமைந்திருத்தல் காணலாம்.

கணவரது குறிக்கோளுக்குத் துணைபுரிதல் :

'ஆகம விதிப்படி நாள் தோறும் சிவனடியாரை முன் ஊட்டிப் பின் உண்ணுதல்' சிறுத்தொண்டரது குறிக்கோளாகும். இக் குறிக்கோளைக் காப்பதில் அம்மையாரின் பங்கு பெரிதும் இடம் பெறுகிறது. '' காதல் இருவர் கருத்து ஒருமித்து ஆதரவு பட்டதே இன்பம்' என்பர். 'காதல் ஒருவனைக் கைப்பிடித்தல், அவன் காரியம் யாவினும் கை கொடுத்தல்' என்பதற்கிணங்க தம் கணவர் எதிர்கொண்ட அடியார்களைத் தம் கணவர் விரும்பிய வண்ணம் அமுதூட்டுவதற்காக 'மனைக்கடனுடைய' அம்மையார் ஆற்றிய செயல்கள் பல.

1. மணமுடைய மலர்மாலை, முத்துமாலைகளைத் தொங்கவிட்டு மனையை அலங்கரித்தல்.

2. அடியவர் திருவடிகளை விளக்குவதற்கு (திருவடி விளக்குதல் — பாத்தியம் எனப்படும் பூசையின் அங்கம்) மணங்கமழும் நீர் ஏந்தி வார்த்தல்.

3. அடியார் அமர்வதற்குரிய ஆசனத்தை மலர்கள் பரப்பி அலங்கரித்தல்.

4. அடியார்க்குரிய திருவமுது, கனிவகை, அறுசுவைக்கறி, நறுநெய், உறைந்த தயிர், பால், இனிய பலகாரங்கள், அமுதம்போன்ற உண்ணீர் ஆகியவற்றைத் தயாரித்தல்.

5. அடியாரை அருச்சிக்க மலர்களை எடுத்துக் கொடுத்தல்.

6. சாத்துதற்குச் சந்தனக் கலவை அமைத்தல்.

7. தூப தீபங் காட்டிப் பூசை புரிவதற்கு ஏற்பாடு செய்தல்.

8. உண்கலத்தை விளக்குதல்.

9. அதனைப் பாவாடை மேல் வைத்தல்.

10. அமுது வகைகளை சுவையறிந்து உண்ணுவதற்கேற்ப வரிசையாகப் படைத்தல்.

11. படைக்கப்பெற்ற உண்கலத்தை முக்காலியின் மேல் விரித்த பாவாடையின் மீது (பாவாடை — வெண்ணிறமான பரப்பப்பட்ட ஆடை) வைத்தல்.

என்பனவாம். இச் செயல்கள் கணவரது அடியார்க்கு அமுதூட்டும் விரதத்தைக் காப்பதில் அம்மையார் கொண்ட அக்கறையினையும், இல்லறம் அரன் பூசைக்கும், அடியார் பூசைக்

கும் ஏற்புடையதாக அமைய வேண்டும், என்பதையும் விளக்குகிறது. மேலும் இல்லறத்தை நல்லறமாக நடத்திய பல்கலைச் செல்வி என்பதையும் காட்டுகிறது.

மகப்பேறடைதல் :

மனைவாழ்வின் மங்கலமாக அமைவன மனைவியின் மாண்புகள். நன்கலமாக அமைபவர் நல்ல மக்கள். மக்களே மனை வாழ்க்கையின் மகிழ்ச்சிக்கு அடிப்படை.

குறுகுறு நடந்து சிறுகை நீட்டும் தம் குழந்தையின் உடலைத் தொடுதல் உடற்கு இன்பம், சொற்கேட்டல் செவிக்கு இன்பம், மழலைச் சொல் யாழ் ஓசையைவிட குழலோசையைவிட மிகச் சிறந்த இன்பம் பயக்கும். இவ்வின்பங்களையெல்லாம் துய்க்கும் வகையில் திருவெண்காட்டு அம்மையின் மனைவாழ்வின் நன்கலமாய் அவதரித்தவர் சீராள தேவர். இச் செய்தியை :

'' நீராருஞ் சடைமுடியார் அருளினால் [நிறைதவத்துப்
பேரானா ரவர்தமக்குப் பெருகுதிரு மனை [யறத்தின்
வேராகி விளங்குதிரு வெண்காட்டு [நங்கைபால்
சீராள தேவர்எனுந் திருமைந்தர் அவ [தரித்தார் ''

என்று கூறுவார் சேக்கிழார்.

தன் மைந்தனுக்கு, சுருண்ட மயிர் நிறைந்த நெற்றியில் சுட்டியும், காதுகளில் குதம்பையும், கழுத்தில் கண்ட சரமும், மார்பில் ஐம்படைத் தாலியும், கைகளில் வைரவளைகளும், இடையில் பொன்னரை ஞாணும் திருவடிகளில் சதங்கையும் பூட்டி அணிசெய்து மகிழ்ந்தார் நங்கையார்.

சுற்றம் தழுவுதல் :

இல்லறத்தின் உயிர்நாடி அறம். அறத்தால் வருவதே இன்பம். அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை. ' தன் பெண்டு, தன் பிள்ளை, சோறு, வீடு, சம்பாத்தியம் இவையுண்டு தானுண்டு ' என்னும் சின்னதொரு கடுகுபோல் உள்ளங்கொண்ட தன்னலப் பிறவிகளைத் திருத்தும் பயிற்சிக் களமாக, தன்னலத்தைப் போக்கிப் பொதுநலத்தைப் போதிக்கும் கல்விச் சாலையாக விளங்குவது இல் வாழ்க்கை. நல்ல குடும்பம் பல்கலைக் கழகம் '. கணவனும் மனைவியும் ஒன்றிய மனத்தினராய் உற்றார் உறவினர் சுற்றத்தார் என்பவருக்காக வாழ்தல் மாண்புடையது. 'செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல், 'அன்பெனப் படுவது தன் கிளை செறாஅமை' என்பர்.

நன்மகப் பேற்றின் போது சுற்றத்தார், செய்வதொரு மகிழ்ச்சிச் சடங்கு நெய்யாடல் விழா. (இதனை எண்ணையாடல் விழா என்பாருமுண்டு) பிள்ளைப் பருவச் சடங்குகளில் முதல் இடம் பெறும் இவ் விழாவை சீராள தேவர் பிறந்த போது திருச்செங்காட்டங் குடியிலுள்ளோர் வீடும், தெருவும், நகரும் அலங்கரித்துச் சிறப்பாகக் கொண்டாடினர். அம்மையாரும் கணவனாரும், மங்கல இயங்கள் ஒலிப்ப வேத மந்திரங்களை ஓதித் தம் குல மரபினுக்குரிய சடங்குகளைப் பத்து நாட்கள் நிகழ்த்திக் காப்பு நாண் சாத்தினர். குழந்தைக்கு வகுத்துச் சொல்லப்பட்ட செங்கீரைப் பருவம், முதலாகப் பத்துப் பருவங்கள் தோறும் செய்யப் பெறும் சடங்குகளையும், சிறப்புப் பெருகச் செய்தனர். சுற்றத்தார் மகிழும் படி வரிசைகள் நல்கிப் பாராட்டினர். ' அங்கணர் தஞ்சீரடியார்க்கு அளவிறந்த நிதி அளித்தனர் ''.

இந் நிகழ்ச்சிகள் அம்மையாருக்கும் உற்றார் உறவினர்க்கும் இடையே நிலவிய பரஸ்பர அன்பையும் பாசத்தையும் விளக்குகின்றன. சுற்றம் தழுவுதல், அடியாரை உபசரித்தல் ஆகிய இல்லற மாண்புகள் அம்மையாரிடம் பொருந்தி விளங்கிய பான்மையையும் தெளிவுறுத்துகின்றன.

கணவன் வழி நிற்றல் :

சிறுத்தொண்டரது திருத்தொண்டின் மெய்த் திண்மை அன்பு நுகருவதற்கு இறைவர் பயிரவராக வருகிறார். தமது நித்த நியமமாகிய அடியாரை அமுது செய்விப்பதற்கு அடியாரைத் தேடிச் சென்ற சிறுத் தொண்டர் பயிரவ அடியாரைக் காண்கிறார். அடியார் வேண்டியதை அளித்து அமுதூட்டும் நியமம் தவறாது காத்ததில் நாட்ட முடைய சிறுத் தொண்டர்

பயிரவர் வேண்டிய வண்ணமே '' ஒரு குடிக்கு ஒரு மகனாய், ஐந்து வயது உடையவனாய், உறுப்புகளில் மறுவில்லாத ஒரு மகனைத் தாய் பிடிக்கத் தந்தை அரியத் தம்மில் மனமகிழ்ந்து சமைத்த கறியை ' ஊட்டுவதாக உறுதி யளித்து வீடு திரும்புகிறார். மனைவியாரை நோக்கி, 'கேட்பவர் நினைவு நிரம்பப்பொருள் கொடுத்தால் பயிரவர் குறிப்பிட்ட இலக்கணங் கள் அமைந்த மகனைத் தருவார் உண்டு. ஆனால் நேரே எதிரில் நின்று தன் மைந்த னைத் தந்தையும் தாயும் அரிவார் இவ்வுல கில் இல்லை, ஆகவே பயிரவ அடியாரைத் திருவமுதூட்டுதற்குக் காலதாமதம் செய்யா மல் நமது மகனை அழைப்போம்' என்றுரைத்த போது,

. . . . .அதனுக்கிசைந் '' தெம்பி ரான் தொண்டர் இன்று தாழாதமுது செய்யப் பெற்றிங் கவர்தம் மலர்ந்த முகம் நன்று காண்ப தென நயந்து நம்மைக் காக்க வரு மணியைச் சென்று பள்ளியினிற் கொண்டு வாரும் ''

சிறுத். புரா. 57

என்று கூறினார். அருமை மகனை, அடியா ரைத் திருவமுதூட்டுதற்குரிய கறிப் பிண்டம் ஆக்குதற்கு இசைந்த அம்மையாரின் துணிவு, அம்மையாருடைய கணவர் வழி நின்றொழு குதல், அவர் கொடுத்த வாக்குறுதியைக் காத் தல் அவருடைய நித்த நியம விரதம் குலை யாமல் ஆற்றுதல், அடியார்க்கமுதூட்டுதலா கிய அடிமைத் திறத்து உறைப்பாக நிற்றல் ஆகிய ஒப்பற்ற பண்புகளை விளக்குவதாயுள் ளது.

பாசங்கடந்த நிலை :

பள்ளி சென்று மைந்தனை நாயனார் கொண்டுவர, மைந்தனை வாங்கிக் கொண்ட அம்மையார் என்ன செய்தார் ? வெளியே சென்ற குழந்தை வீடு திரும்பியபோது பாச மிக்க தாயார் செய்வது போல, குழந்தை யின் குஞ்சி திருத்தி, முகம் துடைத்து, கடுக் கண் அரைஞாண் ஆகியவற்றில் படிந்த தூசி யைத் துடைத்துக் கலவைச் சாந்தம் அழிந்த தற்காக வருந்தி, கண்ணின் மையும், மருங் கொதுக்கி அன்போடு திருமஞ்சனமாட்டி எஞ் சலிலாக் கோலம் செய்தார். கோலம் செய்த அம்மையார் மைந்தனைக் கொஞ் சினாரா ? இல்லை. கோலம் செய்து எடுத்துக் கணவர் கையில் கொடுத்து விட்டார். ஏன் ?

கோலம் செய்த குழந்தையை உச்சிமோந்து, மார்பின்கண் அணைத்து முத்தம் உண்டு குழந் தையைப் பாராட்டி மகிழ்வதும் பாசம் மிக்க தாயார் செயல். ஆனால் அம்மையார் அப்படிச் செய்யவில்லை. ஏன் ? அடியார்க் குப் படைக்கும் கறிப்பிண்டமாக்குவதற்கு உரிய பொருளாகத் தன் மைந்தனது திருவுடல் கொள்ளப்பட்டமையால் அப் பண்டத்தைக் கழுவி திருவமுதுக்குரியதாகச் செப்பமாக்குவது மனைவியாகிய தன் கடமை என்பதாலும் அமுதுக்குத் தக்கதாக ஆக்க வேண்டுமென்ற அன்பினாலும் ஆகும். மேலும் அரனுக்கும், அடியார்க்கும் படைக்கும் பொருள்களை எவ் வாற்றானும் நாம் நுகராது காத்தல் வேண்டு மென்பது ஆகமவிதி. சீராளனைத் தம் மகன் என்ற நிலையினை மாற்றி, அடியார்க் குரிய கறியமுதுப் பண்டம் என்று எண்ணிவிட் டமையால், தாம் உச்சி மோந்தும் அணைத் தும், முத்தம் உண்டும் நுகர்ந்தால் கறியமு தாம் அப் பண்டம் எச்சில் பட்டுவிடும் என்று அச்சம் எய்திச் செய்யாது ஒழிந்தார்.

மகனை அடியார்க்குக் கறிப் பண்டமாக்கும் செயலை உலகர் அறிந்தால், அதன் உண்மை உணராது பழித்தும் தடுத்தும் பிறவாறு இடை யூறு விளைவித்தல் கூடும், அதனால் கால தாம தம் ஏற்பட்டு அடியார் திருவமுது செய்ய இடையூறாகும் என்று எண்ணி அடுக்களைக்கு (அடுக்களை — அமுது செய்யும் — சமைக்கும் இடம்) செல்லாது வேறு தனியிடத்துக்குக் கொண்டு சென்றார்,

இச் செய்திகளை

'' . . . . . . பரிந்து திருமஞ்சன மாட்டி எஞ்சல் இல்லாக் கோலஞ்செய் தெடுத்துக் கணவர் கைக் கொடுத்தார் '' '' அச்சம் எய்தி கறியமுதாம் என்னும் அதனால் அரும்புதல் வன் உச்சி மோவார் மார்பின்கண் அணைத்தே முத்தந் தாமுண்ணார் பொச்சம் இல்லாத் திருத்தொண்டர் புனிதர் தமக்குக் கறிஅமைக்க மெச்சு மனத்தால் அடுக்களையின் மேவார் வேறு கொண்டணைவார் .''

சிறுத். புரா. 60, 61

என்று சித்திரமாக வரைந்து காட்டுகிறார் சேக்கிழார்.

மேலே குறிப்பிட்ட அம்மையாரின் செயல்கள், அம்மை யாருடைய உலகியல் கடந்த சிவனடி திறம் பற்றிய பேரன்பின் நிலையினை விளக்குவனவாகும். இப் பேரன்பே, வெல்ல முடியாத மிக வலிய பிள்ளைப் பாசத்தைக் கடக்க உறுதுணையாகியது. மைந்தனாருடைய திருவுடல், அடியார் திருவமுதுக்குரிய கறிப் பண்டமாகி அடியார்க்கமுதூட்டும் நியமம் தவறாதிருக்க உதவிய சிவ புண்ணிய பேற்றுக்குத் துணையாய் வீடு பேறு தரும் சாதனம் ஆகியது.

சேக்கிழார் உள்ளம் :

நாயனாரும் அம்மையாரும் தங்கள் ஒப்பற்ற தனிமகனை மன நடுக்கமின்றி அரிந்து கறி சமைத்த செயல் ஒப்பற்ற செயல் ! உலகவரால் செய்தற்கரிய செயல் ! என்று பாராட்டலாம். '' வாளால் மகவெறிந்து ஊட்ட வல்லேன் அல்லேன் '' என்று பட்டினத்தார் போற்றலாம். திருவெண்காட்டு நங்கையாரின் மனையற மாட்சிகளை விரித்துரைக்கும் சேக்கிழார் மகளிர் இனத்திற்குத் தரும் செய்தி யாது ? அம்மையின் மாண்புகளை அறியும் மகளிர் குலத்திடமிருந்து சேக்கிழார் எதிர் பார்ப்பது யாது ? அம்மையாரைப் பின் பற்றிப் பிள்ளைக்கறியமுது படைக்கத் தம் மக்களைத் தியாகம் செய்வதா ? அது முடியுமா ? என்ற வினாக்கள் எழலாம்.

சேக்கிழாரின் உள்ளத்தைப் புரிந்து கொண்டால், பெரிய புராணத்தின் வழியாக இவ்வுலகத்தார்க்கு அவர் உணர்த்தும் உண்மையைப் புரிந்து கொண்டால் இவ் வினாக்களுக்கு விடை கிடைத்து விடும்.

அடியார்கள் ஆற்றிய தொண்டின் நிலையைத் திருக்களிற்றுப் படியார் என்னும் தத்துவ நூல், வன்தொண்டு, மென் தொண்டு என்று இரு வகைப்படுத்தி, அவற்றுள் சிறுத்தொண்டரது செயல் பிறர் செய்தற்கு அரியதாகிய வன் தொண்டின்பாற்படும் என்று காட்டுகிறது.

வன் தொண்டாயினும் சரி, மென் தொண்டாயினும் சரி இருவகைத் தொண்டுகளுக்கும் பொதுமையாக ஒளிவிட்டு விளங்குவது அடியார்களின் '' அகநிலை '' '' மனப் பக்குவம்'' என்ற உண்மையை உணர்த்துகிறார் சேக்கிழார். இதை உணராது புறக்கோலத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கும்போதுதான் மேற்கண்ட வினாக்கள் எழும்.

எனவே, அடியார்க்கு அமுதூட்டும் பணியில் ஈடுபடுவோர் உலகப் பற்றற்றவராய் இருத்தல் வேண்டும், தமது உயிர்ச் சார்பு பொருட் சார்புகளைத் தம்முடைமை என்று கருதாது அவை அரனுடைமை, அரனடியாருடைமை என்று கருதும் அருநிலையுடையராதல் வேண்டும் என்பன திருவெண்காட்டம்மையின் மாண்புகளை உணரும் மகளிர் குலத்திடமிருந்து சேக்கிழார் எதிர் பார்ப்பன என்று கருதலாமல்லவா ?

அன்பே சிவம்

அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே
அன்பெனும் குடில்புகும் அரசே
அன்பெனும் வலைக்குள் படும்பரம் பொருளே
அன்பெனும் கரத்தமர் அமுதே
அன்பெனும் கடத்துள் அடங்கிடும் கடலே
அன்பெனும் உயிரொளிர் அறிவே
அன்பெனும் அணுவுள் அமைந்தபே ரொளியே
அன்புரு வாம்பர சிவமே.

திருவருட்பா

உ

சிவமயம்

சிவபெருமான் படிமங்கள்

திரு. எ. வி. ஜயசந்திரன்

" வழிபடும் தெய்வம் நின்புறம் காப்ப
பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து ''

தமிழர்கள் எல்லாம் கடந்த நிலையில் உள்ள இறைத்தன்மையினையும் வழிபடுவதற்காக உருவத்திருமேனியையும் உணர்ந்த கொள்கை யுடையவர்கள் எனத் தெளிவாகிறது. உருவத் திருமேனியின் வழிபாடு, மக்களின் மனதினை ஒருமைப்படுத்தி அற நெறியிலும் பக்திப்பாதை யிலும் செலுத்தி இறை நிலையை அடைய வழிகோலுவது. சிவன் என்ற சொல் சங்க கால இலக்கியங்களில் காணாவிடினும், அப் பெருமானது சிறப்புகளின் செய்திகள் விரவி இருப்பதைக் கண்ணுறலாம். ஆகவே சிவ பெருமானின் சில தோற்றப் பொலிவுகளுக்கு வழிபாடுகள் இருந்திருக்கலாமென ஊகிக்க இடமுண்டு. 6—7ஆம் நூற்றாண்டுகளில் பல்லவர்கள் தமிழகத்தை ஆண்ட பொழுது, அவர்கள் எழுப்பிய கோயில்களில் காணப்படும் சிவனது உருவங்களில் இக் கருத்துத் தெளிவா கிறது. காலப் போக்கில், வேத, ஆகம, சிற்ப, தோத்திர நூல்கள் எழுந்து சிவனது உருவத் திருமேனிகளைப் பல தத்துவங்கள் கண் கொண்டும், புராண வரலாற்று அடிப்படையி லும், ஆகமக் கோட்பாடுகளின் வழிநின்றும் உருவாக்கினர். அப்படி அவர்கள் கண்ட திருமேனிகள் சிலவற்றினை நூல்களின் ஆதா ரம் கொண்டு காணலாம்.

இந்த ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட சிற்ப, ஆகம, நூல்களாவன : சகலாதிகாரம், சாரஸ் தீய சித்திர கர்ம சாத்திரம், காச்யபசில்ப சாத்திரம், சில்பரத்தினம், ஸ்ரீ தத்துவ நிதி யும் அதில் குறிப்பிட்டுள்ள நூல்களான கார ணாகமம், சிவ பஞ்சாக்ஷரி, ஸ்கந்த புராணம் (சங்கர சம்மிதை), பாஞ்ச ராத்திரம், சிவ தத்துவ ரத்னாகரம், லலிதோபாக்யானம், சைவ ஆகமங்கள், புராணங்கள். இந்த நூல்களில் காணும் சிவசூருப பேதங்களாவன :

(1) சோமாஸ்கந்தம், (2) சந்திர சேக ரம், (3) விருஷ வாகனம், (4) நடேசுவரம், (5) கங்காதரம், (6) திரிபுராந்தகம், (7) கல்யாணசுந்தரம், (8) கங்காலம், (9) அர்த்த நாரி, (10) கேசவார்த்தம், (11) பிக்ஷாடனம் (12) சண்டேசானுக்கிரகம், (13) தக்ஷிணா மூர்த்தி, (14) கால சம்ஹாரம், (15) லிங் கோத்பவம், (16) சுகாசன மூர்த்தி, (17) காமதகனர், (18) உமா மகேசுவரர், (19) பாசுபதம், (20) கஜ சம்ஹாரர், (21) பஞ் சாக்ஷரி, (22) ருத்ரம், (24) ம்ருத்யஞ்யர், (24) விருஷாரூடம், (25) பிரசாதம், (26) சைவ அஷ்டாக்ஷரம், (27) அகோரம், (28) சிந்தாமணி, (29) அநுஷ்டுப், (30) சம்வாதம் (31) சக்தி பஞ்சாக்ஷரி, (32) கின்னர சிவம், (33) ரக்ஷோகினர், (34) பஞ்ச மூர்த்தி, (35) ஜலந்த்ரர், (36) பிரம்ம சிரச்சேதர், (37) வீரபத்ரர், (38) கிராதார்ஜுனர், (39) விஷா பஹரர், (40) சக்ரதானர், (41) விக்னேசுவர பிரசந்தர், (42) ஏகபாதர், (43) சரபமூர்த்தி, (44) மகேசுவரர், (45) மகா கைலாசமூர்த்தி, (46) அகோரர், (47) மகாகாலர், (48) மிருத் யுஞ்சயர், (49) நீலகண்டர், (50) சபாபதி, (51) அஷ்ட மூர்த்தி, (52) ஏகாதச ருத்ரர், (53) க்ஷேத்ரபாலர்.

இந்த மூர்த்தங்களின் எல்லா அம்சங்களும் சிந்திப்பது இக் கட்டுரையில் இயலாது. அது ஒரு தனி நூலாகும். ஆகவே இந்த உருவங் களின் சிறப்புக் குணங்களையும், தோற்றங் களையும் சுட்டிக் காட்டுவோம்.

(1) சோமஸ்கந்தர் :

உமை, கந்தன் இருவருடன் தோற்றமளிக் கும் மூர்த்தி. சுவாமிக்கு இடது புறம் தேவி

யும், இருவருக்கு நடுவே ஸ்கந்தனும் அமைந்த உருவத் திருமேனி. சிவபிரான் வலது காலைத் தொங்கவிட்டும், இடது காலினை ஆசனத்தில் மடித்து வைத்தும் இருப்பார். உமை இடது காலைத் தொங்கவிட்டும் வலது காலை மடித்தும் வைத்திருப்பார். சிவபிரானுடைய நான்கு கைகளில் பரசு, மான், அபய முத்திரை, சிம்மகர்ண முத்திரை முதலியன அமைந்திருக்கும். இது ரஜோகுணம் உடைய மூர்த்தம் ஆகும்.

(2) சந்திரசேகரம் :

சந்திரசேகர மூர்த்தி சிருங்கார பாவத்தில் அமையும். தனியாகவோ, உமையுடனோ, அல்லது உமையினை அணைத்துக் கொண்டோ இருக்கும் படிவம். மேல் இரு கைகளில் பரசு, பெண்மான், தாங்கியும், கீழ் இரண்டு கைகள் அபய, வரத முத்திரைகள் தாங்கியும் இருக்கும். சந்திரன் சிவபெருமானுடைய ஜடாபாரத்தில் ஒளிர்வான். முழங்கால்வரை பீதாம்பரம் உடுத்திருக்கும். சில சந்திர சேகர திருமேனிகளில் சிவபெருமான் தேவியை அணைத்த வண்ணம் இருப்பார்.

(3) விருஷ வாகனம் :

உமா தேவியுடன் பரசு, மிருக, அபய, வரத முத்திரைகள் அணிந்து விருஷப வாகனத்தில் தோற்றமளிக்கும் உருவம்.

(4) நடேசுவரம் :

ஆனந்தத் தாண்டவத் தோற்றம். இத் தோற்றத்தில் பல வகைகள் உண்டு. 4, 6, 8, 10 கைகளுடன் நடேசப் பெருமானை உருவாக்குவார்கள். நான்கு கைகளுடன் இருக்கும் திருமேனி கைகளில் டமரு, அக்னி, அபய முத்திரை தாங்கியும் ஒரு கை தொங்கிய நிலையிலும் இருக்கும். ஜடாமுடியில் மண்டை ஓடு, ஊமத்தம் பூ அல்லது எருக்கம் பூ, பாம்பு, சந்திரன், கங்கை முதலியவை காணலாம். வலது காதில் மகர குண்டலமும், இடதுகாதில் சுருள் ஓலையும் அணிந்திருக்கும். வலது காலை அபஸ்மாரம் என்னும் முயலகன்மேல் ஊன்றியும், இடதுகாலைத் தூக்கிய வண்ணமும் தோற்றம் அளிக்கும். நடேசப் பெருமானைச் சுற்றிப் பிரபை அமைந்திருக்கும். மார்பகத்தில் தலை ஓடுகள் கூடிய மாலையைச் சில படிமங்களில் காணலாம்.

(5) கங்காதரம் :

கங்காதரத் தோற்றத்தில் சிவ பெருமானுடைய ஜடை விரிந்து அதில் கங்கை வீற்றிருப்பாள். இந்த மூர்த்தத்தில் பல வேறுபாடுகள் உள. ஒன்றில் சிவ பெருமான் உமையின் முகவாய்க் கட்டையைப் பிடித்து சாந்தப்படுத்தும் நிலையிலும், மற்றொன்றில் உமை தோளில் ஒரு கை அணைத்தவாறும், மூன்றாவதில் சிவபெருமானின் ஒரு கரம் உமையின் மார்பின் மீது இருக்கும் நிலையிலும் காணலாம். கங்காதர மூர்த்தி நின்ற நிலையில் உமையுடன் தோற்றமளிப்பர். அவருடைய வலது கை ஒன்று சடையில் உள்ள கங்கையைத் தொட்டவாறு அமையும், அவருடைய இடது கால் சற்று வளைந்தும் உமையின் வலது கால் வளைந்தும் இருவரும் நெருங்கி அந்நியோந்ய பாவத்தில் இருப்பார்கள்.

(6) திரிபுராந்தகர் :

இந்தத் திருமேனி 4, 8, 10 கைகளுடன் நின்ற கோலத்தில் காணப்படும். தேரின் உள் இருந்தவாறும், தனியாக மான், பரசு, வில், அம்பு, முதலியன தாங்கி வலது, அல்லது இடது காலை மடித்தும் காணப்படும். சில படிமங்களில் கால் தேரின்மேல் வைத்தவாறும் தோற்றமளிக்கும்.

(7) கல்யாணசுந்தரர் :

திருமணக் கோலம். உமையின் வலது கையினைத் தனது வலது கையினால் பிடித்த வாறு நின்ற அமைப்பின் தோற்றம். விஷ்ணு தாரை வார்த்துத் தருவது போலவும், பிரம்மா யாகம் வளர்ப்பது போலவும் அமையும். பரசு, பெண் மான், வரத முத்திரையுடன் மூன்று கைகளும், ஒரு கை தேவியின் வலது கையைப் பிடித்த வாறும் அமையும்.

(8) கங்காலம் :

நடக்கும் அமைப்பின் தோற்றம், வலது கால் மடிந்து நடக்கும் பாணியில் இருக்கும். இந்த வடிவத்தின் ஜடை மகுடமாகவும் அல்லது மண்டல மாகவும், (விரிந்து இருக்க) அமையும். ஒரு கையில் பெரிய டக்கா எனும்

பெரிய டமரு மத்தளத்தைத் தாங்கி மற்றொரு கையில் அதை அடித்தவாறு அமையும். ஒரு கையில் கீழே இருக்கும் மானுக்குப் புல் தருவதுபோல் தோற்றம். மற்றொருகையில் பெரிய திரிசூலம் தோளின்மேல் வைத்திருக்கும் தோற்றம். சூலத்தில் குத்தியவாறு முனையில் ஒரு பிரேதம் தொங்கி இருக்கும். இந்த தோற்றத்தில் ஒரு பூத கணம் ஒரு பாத்திரத்தைத் தலையில் தாங்கியவாறு அருகில் இருக்கும்.

(9) அர்த்தநாரி :

மாதொரு பாகனாக விளங்கும் திருமேனி. ஒரு பாகத்து சிவனது அகன்ற மார்புடனும், மற்றொரு பாகம் ஸ்தனத்துடனும் தோற்றம், சிவனது பாகத்தில் ஜடா முடியும், முழங்கால் வரை ஆடையும், மகர குண்டலமும் அமைந்திருக்கும். இடது பாகமான அம்மைக்கு கரண்ட மகுடம் நுனிக்கால் அளவு சேலை, கழுத்தில் ஆபரணங்கள் முதலியன உள. சிவபிரானது கையில் இருக்கும் ஆயுதங்கள் சிலைக்குச் சிலை பேதப்படும். ஆயினும் பொதுவாக ஒரு கை விருஷபத்தின் மேல் வைத்த நிலையில் இருக்கும். சிவ பெருமானது ஒரு சூலம், அல்லது கபாலத்தையும், மற்றொரு கை வரத முத்திரையைத் தாங்கியிருக்கும். அம்மையின் கையில் புஷ்பம் இருக்கும். இந்தத் திருமேனியை 6, 4, 2 கைகளுடன் காணலாம்.

(10) கேசவார்த்தம் :

சங்கர நாராயணன் என்றும் பெயரிட்டு அழைப்பர். கேசவார்த்தம் எனின் கேசவனின் பாதியாக உடல் அமைந்தவர் எனப் பெறும். சிவ பெருமானது பாதியில் ஜடா மகுடம், பரசு, அபயக் கையும், விஷ்ணுவின் பாதியில் ஒரு கை சங்கு தாங்கியும், மற்றொரு கை தொடைமேல் வைத்தும் காணப்படும். சிவ பெருமானது பாகம் ஜடாமகுடமும், விஷ்ணுவின் பகுதியில் கிரீட மகுடமும் அமையும்.

(11) பிக்ஷாடனர் :

நடக்கும் பாவனையில் அடி எடுத்து வைக்கும் தோற்றத்தில் இந்த மூர்த்தி காணப்படும். முடி ஜடாமண்டலம் அல்லது ஜடாபாரமாக இருக்கும். நாகத்தால் அலங்கரிக்கப்பட்ட முடி. கைகளில் பரசு, பெண்மான் தாங்கியும், ஒரு கையில் பிக்ஷா பாத்திரமும், மற்றொரு கையில் கிழே உள்ள மானுக்குப் புல் அளிப்பது போலவும் தோற்றம், தூண் சிற்பம். ஓவியத்தில் இப் பெருமானைச் சித்தரிக்கும் போது ரிஷி பத்தினிகள் கைகளில் கரண்டிகள் தாங்கி, ஆடைகள் உடலை விட்டு நெகிழ, நினைவிழந்த கோலத்தில் காட்சி அளிப்பர். பிக்ஷாடனர் ஆடையின்றி தோன்றுவார்.

(12) சண்டேசாநுக்கிரகம் :

சோமாஸ்கந்த மூர்த்தியின் அமைப்பு இந்த மூர்த்தத்திற்கு உண்டு. ஆயினும் சிவபெருமான் இரண்டு கைகளாலும் சண்டேசுவரருக்கு தலைமாலை சுற்றுவதாகத் தோற்றம்.

(13) தக்ஷிணாமூர்த்தி :

சிவபெருமான் குருவாக எழுந்தருளி உபதேசம் செய்யும் தோற்றம். இந்த உருவத்தின் சிறப்பு கையிலுள்ள சின்முத்திரை தான். ஆள்காட்டி விரலை மடக்கி பெருவிரல்சேர்த்து மற்றைய விரல்களைச் சற்று வளைந்தவாறு வைப்பது சின் முத்திரையாகும். சுட்டு விரலான உயிர், பெருவிரலான இறையுடன் ஒன்றும்போது எஞ்சிய விரல்களான கன்மம், மாயை, ஆணவம் மலபரிபாகமாகும் என்ற சைவ சித்தாந்த உண்மையினை தெளிவாக்குகிறது இந்தச் சின் முத்திரை.

தக்ஷிணாமூர்த்திக்கு நான்கு உருவ பேதங்கள் உண்டு : (1) வியாக்யான தக்ஷிணாமூர்த்தி. சனகர், சனந்தனர், சனத்குமார், சனாதனர் என்ற நான்கு முனிபுங்கவர்களுக்கு உபதேசம் அருளும் தோற்றம், (2) வீணாதர தக்ஷிணாமூர்த்தி. இந்தத் தோற்றத்தில் சிவபெருமான் வீணையை இருகைகளிலும் தாங்கி விந்து, நாத உண்மைகளை உலகுக்கு போதிக்கும் உருவம், (3) ஞான தக்ஷிணாமூர்த்தி. இந்தத் திருமேனி கையில் புத்தகத்துடன் மெய்ஞானத்திற்கு வழி காட்டும் அண்ணலாய் விளங்கும், (4) யோக தக்ஷிணாமூர்த்தி. இந்தப் படிமத்தில் இரு கால்களையும் இணைத்தவாறு யோகப் பட்டம் இருக்கும்.

பொதுவாக தக்ஷிணாமூர்த்தி கல்லால விருக்ஷத்தின் அடியில் அமர்ந்திருப்பார். அவரு

டைய முடி, ஜடாபாரமாகவோ, அல்லது ஜடா மண்டலமாகவோ திகழும். ஜடையில் சந்திரனும், ஊமத்தப் பூவும், நாகமும் இருக்கும். அவரது ஆடை புலித்தோல். அவரது கைகளில், ஜபமாலையும், சின்முத்திரையும் அமையும். மற்றைய கைகளில், அக்னி அல்லது மான் திகழும். நான்காவது கையில் புத்தகம் இருக்கும் அல்லது அபய முத்திரையுடன் விளங்கும். நான்காவது கை சில ரூபங்களில் மடங்கிய கால் முட்டியின்மேல் வைத்திருக்கும்.

(14) காலவிநாசனம் :

காலனைக் கடிந்த சிவபிரானுடைய தோற்றம் இது. இந்த உருவத்தில் சிவபெருமான் நடனத்தைத் தொடங்கும் நிலையிலிருப்பார். சூலத்தை ஒரு கையில் காதளவு தூக்கியும், பரசு, வரத முத்திரை தாங்கிய கைகளும், நான்காம் கையில் சூச்சி (சுட்டிக் காட்டும்) முத்திரை தாங்கியும் இருப்பார். வேறு உருவபேதத்தில் கையில் விஸ்மய (ஆச்சரிய) முத்திரை விளங்கும். காலசம்ஹார மூர்த்தி 8 கைகளுடனும் அமையும். கீழே வீழ்ந்துள்ள யமனுடைய உடலை மிதித்த வண்ணம் ஒரு கால் இருக்கும்.

(15) லிங்கோத்பவர் :

அடிமுடி காணமுடியாத பிரானது தோற்றம் இது. இலிங்கத்தினின்று நின்ற நிலையில் வெளிப்படும் மூர்த்தி. சந்திர சேகர மூர்த்தியின் அம்சங்கள் யாவும் இதற்குப் பொருந்தும். இலிங்கத்தின் அடியில் விஷ்ணு வராகமாகவும், முடியில் பிரம்மா அன்னமாகவும் காட்டப்பட்டிருக்கும்.

(16) பிரம்மசிரச்சேத மூர்த்தி :

பிரம்மனுடைய தலையைக் கொய்த தோற்றம். இது சிவனுடைய எல்லா அம்சமும் பொருந்தி இருக்கும். ஆனால் நான்கு கைகளில் வஜ்ரம், பரசு, கபாலம், சூலம் தாங்கிய தோற்றம்.

(17) சுகாசன மூர்த்தி :

உமையுடன் அமர்ந்த கோலம். இந்த உருவத்தில் ஸ்கந்தன் அவர்களுக்கிடையே இருப்பதில்லை. மேல் இரண்டு கைகள் பரசு, மான் தாங்கியிருக்கும். கீழ் இரு கைகள் அபய முத்திரையும், கடக முத்திரையும் தாங்கியிருக்கும். மற்றபடி சோமஸ்கந்த மூர்த்திக்குரிய லக்ஷணங்கள் பொருந்தியவையாக இருக்கும்.

(18) காமதகனம் :

வியாக்யாந தக்ஷிணாமூர்த்தியைப் போல் அமர்ந்த கோலம். ஆனால் கைகளில் பரசு, மான் தவிர கொடி இருக்கும். நான்காம் கையில் ஆசி (சுட்டிக் காட்டும்) முத்திரை தாங்கியிருக்கும். காமன் மகரத்தின் அல்லது அன்னத்தின் மேல் அல்லது ரதத்தின் மேல் அமர்ந்திருப்பான்.

(19) பாசுபதம் :

நின்ற திருக்கோலம். ஜடை விரிந்த கோலமாக இருக்கும். நான்கு கைகளில் சூலம், ருத்ராக்ஷ மாலை, அபய, வரத முத்திரைகள். சில படிமங்களில் அக்ஷமாலைக்குப் பதிலாக கபாலம் தாங்கியிருக்கும்.

(20) கஜசம்ஹாரம் :

நின்ற திருக்கோலம். நான்கு அல்லது 8 கைகளுடன் விளங்கும் திருமூர்த்தி. மேலிரண்டு கைகள் கிழித்த யானையின் தோலை விரித்த பாணியில் இருக்கும். மற்ற இரண்டு கைகளில் பாசமும், தந்தமும் அமையும். எட்டுக் கைகளுடன் தோன்றும் மூர்த்தி மற்றைய 4 கைகளில் டமரு, சூலம், கபாலம், கத்தி தாங்கும்.

(21) ஜலந்தரம் :

இந்த மூர்த்திக்கு ஜடாபாரம் உண்டு, எல்லா அலங்காரமு முடைய தோற்றம். கால்கள் இரண்டிலும் பாதுகைகள் உண்டு. பரசு, மான், குடை, கமண்டலம் தாங்கிய கைகள்.

(22) பஞ்சாக்ஷரம் :

பஞ்சாக்ஷரம் என்ற மூர்த்திக்கு ஐந்து தலைகள். ஒவ்வொரு முகத்திலும் மூன்று கண்கள். புலித்தோல் ஆடை. பத்மாசனத்தில் அமர்ந்திருப்பார். நான்கு கைகளில் பரசு, மான், அபய, வரத முத்திரைகள் தாங்கி இருப்பார். இந்த ஐந்து தலைகளுக்குப் பெயர், ஈசானம், தத்புருஷம், வாமதேவம், அகோரம், சத்யோஜாதம் என்பன.

(23) ருத்ரம் :

இந்த மூர்த்திக்கு நான்கு கைகள். அவைகளில் அங்குசம், பாசம், கட்வாங்கம், கபாலம் தாங்கி இருக்கும். மற்றை சிவச்சின்னங்கள் யாவும் பொருந்தியிருக்கும்.

(24) மிருத்யுஞ்சயம் :

தீர்க்காயுளை அளிக்கும் இந்த மூர்த்திக்கு நான்கு அல்லது எட்டு கைகள் உள. அமர்ந்த வடிவம். எட்டுக் கைகளில் சூலம், நாகம், பரசு, மணி, கத்தி, அங்குசம், வஜ்ரம், பாசம், அக்னி முதலியன தாங்கியும், எஞ்சிய கை அபய முத்திரை தாங்கியும் இருக்கும். சிவ அம்சங்கள் யாவும் பொருந்தியிருக்கும்.

(25) விருஷாரூட மூர்த்தி :

நின்ற கோலம். ஒரு கை விருஷப வாகனத்தின் முதுகில் ஊன்றிய திருமேனி. மற்றைய சிவச் சின்னங்கள் அமைந்திருக்கும்.

(26) சைவ அஷ்டாக்ஷரி :

இந்த மூர்த்தி பத்மாசனத்தில் அமர்ந்து இருப்பார். அவர் மருங்கில் அமர்ந்து உமை தனது வலது கையை அவர் தொடையில் வைத்திருப்பார். மேலிரண்டு கைகளில் பரசும் மானும், கீழ் கைகளில் ஒன்று அம்பைத் தாங்கியும், மற்றொரு கை உமையினை அணைத்து மார்பக்கத்தை வருடிய வாறும் அமையும். தேவியின் மற்றொரு கையில் சிவந்த மலர் இருக்கும்.

(27) சிந்தாமணி :

சிவச் சின்னம் யாவும் பொருந்திய மூர்த்தி. எட்டு கைகள், அவைகளில் நாகம், பரசு, சூலம், கட்கம், அக்னி, கபாலம், அம்பு, வில் அமைந்திருக்கும்.

(28) சம்பாதம் :

இந்த மூர்த்தம் சந்திரனின் காந்தம் பின் புறத்தில் இருக்க பத்மாசனத்தில் அமர்ந்திருக்கும். நான்கு கைகளில் அங்குசம், பாசம், அபய, வரதம் தாங்கி இருக்கும்.

(29) சக்தி பஞ்சாக்ஷரி :

சிவபெருமான் இடது தொடையின் மீது சக்தி அமர்ந்துகொண்டு தனது மார்பு அவருடைய மார்போடு ஒன்றும்படி இரு கைகளாலும் அணைத்திருக்கும் வடிவம் இது. சிவ பெருமானுடைய கைகளில் பரசு, மான், அபய வரத முத்திரைகளாவது அல்லது சூலம், கபாலம், அபய, வரத முத்திரைகளாவது இருக்கும்.

(30) கின்னர சிவம் :

ஈடு, சுடு காடுகளில் இருக்கும் தோற்றம். ஜடை விரிந்து உடலெல்லாம் பரந்து கிடக்கும். சிவபெருமான் கௌபீனத்துடன் அமர்ந்து இருப்பர். உடலெல்லாம் திருநீறு பூசிய கோலம். திரிசூலம் தாங்கி இருப்பார். அதன் முனையில் சிங்கம் இருக்கும். மற்ற சிவ அம்சங்கள் இந்த படிமத்திற்கு உண்டு. பிசாசுகள் இப் படிமத்தைச் சூழ்ந்திருக்கும்.

(31) ரக்ஷோசினர் :

இதுவும் சிவனுடைய கோர ரூபத்தில்ஒன்று' பூதங்களாலும், பைசாசங்களாலும் சூழப் பட்டிருப்பர். அவருடைய நான்கு கைகளில் திரிசூலம், டமரு, பரசு, கபாலம் காணப்படும்.

(32) பஞ்சமூர்த்தி :

சிவபிரானது ஐந்து முகங்கள். அதன் தனித்தனி சிறப்புகளோடு காணப்படும் மூர்த்தம். இது சிவலிங்கத்தில் வடித்துக் காட்டப் படும். நான்கு முகங்கள் நான்கு திக்குகளிலும், ஒரு முகம் உச்சியில் இருப்பதான பாவனையில் விளங்கும். மதுரை ஆலயத்தில் லிங்கம் இருக்கிறது. சில கோவில்களில் இதனை வடிவமாக வைத்து வழிபடுவர். எடுத்துக் காட்டு தஞ்சைப் பெரிய கோவில் பிராகார கோஷ்டத்தில் இந்த மூர்த்தங்களைக் காணலாம். எல்லா மூர்த்தங்களுக்கும் மூன்று கண்கள், ஜடாமுடி இருக்கும்.

(அ) சத்யோஜாதம் :

வெண்மை நிறம். நான்கு கைகள், அவைகளில் வேதம், அக்ஷமாலை, அபய, வரதம் முத்திரைகள் இருக்கும்.

(ஆ) வாமதேவம் :

சிவப்பு நிறம். நான்கு கைகளில் பரசு, அக்ஷமாலை, அபய, வரத முத்திரைகள் விளங்கும்.

(இ) அகோரம் :

கரிய நிறம். எட்டுக் கைகள். அவைகளில் இருப்பன அக்ஷமாலை. வேதம், பாசம், அங்குசம், டமரு, கட்வாங்கம், சூலம், கபாலம் ஆகியவைகள்.

(ஈ) தத்புருஷம் :

மின்னலின் நிறம். நான்கு கைகளில் வேதம், பரசு, அபய, வரத முத்திரைகள் இருக்கும்.

(உ) ஈசானம் :

முத்து போன்ற வெண்மை. 10 கைகள். அகோர மூர்த்தியின் கைகளிலுள்ள எட்டு ஆயுதங்களோடு அபய, வரத முத்திரைகள் தாங்கிய இரு கைகள். இந்த பஞ்ச மூர்த்திகளை சத்யோஜாதம் — பிரம்மாவை குறிப்பதாகவும், வாமதேவம் — விஷ்ணுவைக் குறிப்பதாகவும், அகோரம் — ருத்திரனைக் குறிப்பதாகவும், தத்புருஷம் — ஈஸ்வரனைக் குறிப்பதாகவும், ஈசானம் — சிவபெருமானைக் குறிப்பதாகவும் கொள்ளுவர்.

(33) ஏசுபாத மூர்த்தி :

சிவபெருமான் பரசு, மான், அபய, வரத முத்திரைகள் தாங்கிய நான்கு கைகளுடன் நிற்க அவரது இடுப்பிலிருந்து இருமங்கிலும், பிரம்மாவும், விஷ்ணுவும் தங்கள் ஆயுதங்களுடன் இணைந்திருக்கும் திருமேனி.

(34) மகேஸ்வரம் :

மகேஸ்வர மூர்த்தியைப் பற்றி ஸ்ரீதத்துநிதி விளக்கமளிக்கிறது. இந்த மூர்த்திக்கு 10 கைகள். அந்தக் கைகளில் தாங்கியிருப்பவை சூலம், வஜ்ரம், கட்கம், பரசு, நாகம், பாசம், மணி, அக்னி, அங்குசம், அபய முத்திரை. இந்த மூர்த்தி ஸ்படிக நிறத்துடன் இருப்பார். எல்லா அலங்காரத்துடனும், சிவ அம்சங்களுடனும், 5 தலைகளுடனும் விளங்குவார்.

ஏதேது செய்திடினும் ஏதேது பேசிடினும்
ஏதேது சிந்தித்தி ருந்திடினும்—மாதேவன்
காட்டிடுவ தானவருட் கண்ணைவிட்டு நீங்காது
நாட்டம் அதுவாய் நட.

குருஞானசம்பந்தர்
சிவபோக சாரம் 76

பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்பது அறிவு.

திருக்குறள் 350

உ

சிவமயம்

இரு பெருநெறிகள்

டாக்டர் தெ. ஞானசுந்தரம்
தமிழ்ப் பேராசிரியர், கந்தசாமி நாயுடு ஆடவர் கல்லூரி, சென்னை-600 012.

இரு பெருநெறிகள் :

சைவ சித்தாந்தமும் வைணவ சித்தாந்தமும் தமிழ் நாட்டில் பெரு வழக்காக உள்ள இரு தத்துவ நெறிகளாகும். இரு நெறிகளும் சில வகையில் ஒன்றுபட்டும் சில வகையில் வேறு பட்டும் செல்கின்றன. இரு நெறிகளும் வேதத்தை மேற்கோளாகக் (பிராமணங்கள்) கொள்கின்றன. ஆனால் வேறு வேறு ஆகமங்களை அதனோடு சேர்த்துத் தமக்குரிய மேற்கோள்களாகக் கொண்டு வேறுபடுகின்றன. இரண்டும் முப்பெரும் உண்மையை ஒப்புக் கொள்கின்றன. ஆனால் அவற்றின் தன்மை, தொடர்பு முதலியவற்றை விளக்குமிடத்து வேறுபடுகின்றன. இவை அடிப்படைகளில் எவ்வளவு ஒன்று பட்டும் வேறுபட்டும் செல்கின்றன என்று காண்பது சுவையும் பயனும் உடையது.

வடமொழிச் சார்பு :

இரு நெறிகளும் வடமொழி மரபைத் தழுவியனவாகவே காணப்படுகின்றன. எழுத்துக்கள் (வன்னம்) ஐம்பத்தொன்றாகும் என்று சைவ சித்தாந்தம் வடமொழி மரபு தழுவிச் சொல்கிறது. '' அக்கரங்கள் ஐம்பத் தொன்றாகும். '' என்பது சிவஞான சித்தியார்[1]. வைணவம் இருபத்தைந்தாவது தத்துவம் உயிர் என்றும் அதனைச் சுட்டுவது மகாரமாகிய எழுத்து என்றும் சொல்லி அந்த மகாரம் வடமொழியில் மெய்யெழுத்து வரிசையில் இருபத்தைந்தாவது எழுத்தாக இருத்தலைச் சுட்டுகிறது. '' மகாரம் — ககாரம் முதலான இருபத்து நாலெழுத்தும்.. இருபத்து நாலு தத்துவத்தையும் காட்டி, தான் இருபத்தைவரான ஆத்மாவைக் காட்டக் கடவது..'' என்கிறார் அழகிய மணவாளப் பெருமாள் நாயனார்[2]. இவ்வாறு வடமொழிச் சார்புடையனவாக இருந்த போதிலும் இரு நெறிகளும் முறையே திருமுறைகளையும் திவ்ய பிரபந்தங்களையும் கொண்டே தம் கொள்கைகளை விளக்குகின்றன.

மூவகைக் காரணம் :

உலகைத் தோற்றுவிக்கும் போது இறைவன் நிமித்த காரணமாகவும், மாயை முதற் காரணமாகவும், சத்தி துணைக் காரணமாகவும் அமைகின்றன என்பது சைவ சித்தாந்தம்[3].

வைணவ சித்தாந்தம் இறைவனே மூவகைக் காரணமாகவும் இருக்கிறான் என்கிறது. தன்னில் வேறாகப் பிரிந்திராத அறிவில் பொருள்களையும், அறிவுடைப் பொருள்களையும் தனக்குப் பண்பாகக் கொண்டவனாகவும், '' யானே பலவாகக் கடவேன் '' என்னும் திருவுள்ளத்தோடு கூடியவனாகவும் இருக்கும் இறைவனே நிமித்த காரணமாகவும், தன்னுள்ளே பெயரும் வடிவும் பகுத்தறிய முடியா வண்ணம் அடங்கிய நுண்ணிய அறிவுடைப் பொருளோடும் அறிவில் பொருளோடும் கூடிய இறைவனே முதற் காரணமாகவும், இவ்வுலகைப் படைத்தற்கு ஏற்ற ஞானத்தோடும் சத்தியோடும் கூடிய இறைவனே துணைக் காரணமாகவும் உள்ளான் என்பது வைணவர் கொள்கை. '' ஜகத் ரூப கார்ய உத்பத்தியில் ஈச்வரனே த்ரிவித காரணமுமாய் இருக்கும். எங்ஙனே என்னில், ' பஹுஸ்யாம் ' என்கிற ஸங்கல்ப விசிஷ்டனாய்க் கொண்டு நிமித்த காரணனாயும், நாம ரூப விபாக அநர்ஹமாம்படி தன்னுள்ளே கூடிக் கிடக்கிற ஸூக்ஷ்ம சித் அசித் விசிஷ்டனாய்க் கொண்டு உபாதாந காரணமாயும், ஜ்ஞாந சக்தி ஆதி விசிஷ்டனாய்க் கொண்டு ஸஹகாரி காரண

மாயும் இருக்கும். ''[4] இறைவனோடு கூடிக் கிடக்கும் அறிவுடைப் பொருள்களும் அறிவில் பொருள்களும் உலகாக மாறும்போது அவன் பால் மாற்றம் நிகழாதோ என்னில், அவை அவனுக்குப் படிகளாக (ப்ரகாரங்கள்) இருத்தலின் அவற்றின் மாற்றம் படிகொளியாக (ப்ரகாரி) இருக்கும் அவனைப் பற்றுவதில்லை. இறைவனது இத்தன்மை சிலந்தி தன் இயற்கைக்குக் குலைவு இல்லாமலேயே தன் உடலில் பொருந்தியுள்ள ஒரு பொருளாலே வலை பின்னுவதைப் போன்றதாகும் என்பர்[5].

இவ்வாறு வைணவம் இறைவனை மூவகைக் காரணமாகவும் சொன்னாலும் சைவ சிந்தாதத்தின் அடிப்படையோடு மாறுபடாமல் இணங்கியதாகவே காணப்படுகிறது. இறைவனே நிமித்த காரணம் என்பதனை இரண்டும் ஒப்புக் கொள்கின்றன. முதற் காரணத்தையும், துணைக் காரணத்தையும் சொல்லும் முறையிலே தான் வேறு படுகின்றன. இறைவன் அறிவுடைப் பொருளோடும் அறிவில் பொருளோடும் கூடிக் கிடக்கிறான் என்பது வைணவக் கோட்பாடு. இவற்றில் அறிவுடைப் பொருள்கள் உயிர்களாகின்றன. அறிவில் பொருள்களில் இருந்து தான் இருபத்து நான்கு தத்துவங்களைக் கொண்ட உலகம் தோன்றுகிறது. இவ்விருபத்து நான்கு தத்துவங்களுக்கு இடனாக வைணவம் சொல்லும் மிச்சிர சத்துவமும், சைவம் சொல்லும் பிரகிருதி மாயையும் ஒன்றே. எனவே மாயை தான் முதற் காரணம் என்பது இரு நெறியின் கொள்கையும் ஆகும். இது போலவே, துணைக் காரணமாக இறைவனது சக்தியே அமைகிறது என்பதனை இரு சித்தாந்தங்களும் ஏற்கின்றன. சைவம் கதிரவனைவிட்டுப் பிரியாத ஒளிக் கதிர் போலச் சிவத்தைவிட்டுப் பிரியாத சக்தியைத் துணைக் காரணமாகச் சொல்கிறது. வைணவம் இறைவனோடு கூடிக் கிடக்கும் ஞான சக்திகளைத் துணைக் காரணமாகச் சொல்கிறது.

இவ்வாறு மாயையாகிய அறிவில் பொருளும், இறைவனது சக்தியும் முறையே முதல் துணைக் காரணங்களாய் அமைந்த போதிலும் வைணவம் அவற்றைச் சொல்லாமல் இறைவனை ஏன் அக் காரணங்காளகச் சொல்கிறது என்னும் வினா எழும். அதற்குக் காரணம் எல்லாப் பொருள்களும் பண்புகளாய்ப் பிரிவின்றிக் கூடிக் கிடக்கப் பண்பியாய் நிற்கும் இறைவன் ஒருவனே என்னும் கோட்பாடே ஆகும். அக் கோட்பாடு அடிப்படையாய் இருத்தலின் அசித்தையும் சத்தியையும் பிரித்துச் சொல்ல முடியாமற் போகிறது. எனவே தான் அவற்றோடு கூடிக்கிடக்கும் இறைவனே முதல் துணைக் காரணங்களாகச் சொல்லப் பெறுகிறான்.

சத்தியும் திருவும்

இறைவன் சிவமாகவும் சத்தியாகவும் இலங்குகிறான் என்பது சைவர் துணிபு. சிவத்தை ஆணாகவும், சத்தியைப் பெண்ணாகவும் கூறுவது வழக்கு. இதனை உமா மகேஸ்வர கோலம் என்பர். திருமுறைகளும் ' ஏழை பங்காளன் ' என்றும், ' மாதொரு பங்கன் ' என்றும் இறைவனைக் குறிக்கின்றன.

இறைவன் தன் செயல்களைச் சத்தியாலே நடத்துகிறான் என்பது சைவ சித்தாந்தம். '' அவளால் வந்த, ஆக்கம் இவ் வாழ்க்கை எல்லாம் '' என்பது அருணந்தி சிவாச்சாரியார் கூற்று.[6] இவ்வொரு சத்தியே பலவாகிறது. '' எத்திறம் நின்றான் ஈசன், அத்திறம் அவளும் நிற்பள் '' என்கிறது சிவஞான சித்தியார்.[7]

இவ் விறைவனும் சத்தியும் இருவரா என்னும் வினா எழும். சிவனும் சத்தியும் இருவரல்லர், ஒருவரே என்கிறது சைவ சித்தாந்தம். சிவத்தைக் கதிரவனாகவும் சத்தியைக் கதிரவனை விட்டுப் பிரியாத கதிராகவும் சொல்வர். அஃதாவது சிவத்தைப் பண்பியாகவும் சத்தியைப் பண்பாகவும் சுட்டுவர்.

வைணவமும், இறைவனும் திருமகளும் என்றும் நீக்கமின்றிக் கூடியிருக்கின்றனர் என்றே சொல்கிறது. ' திருமகள் கேள்வன்' என்பது அவனுக்குரிய தனி அடையாளம். கதிரவனை விட்டுக் கதிரையும், மலரை விட்டு மணத்தையும் பிரிக்க முடியாதது போல என்றும் நிலைத்திருப்பது அச்சேர்த்தி என்பர். ''பிரபையையும் ப்ரபாவானையும் புஷ்பத்தையும் மணத்தையும் போல'' என்பது முமுட்சுப்படி.[8] திருமகளும் பெருமானுக்குப் பண்பாகவே சொல்லப்பெறுகிறாள்.

இறைவனோடு சேர்ந்திருக்கும் அப் பெண் ஆற்றும் பங்கு யாது என்பதிலே இரு நெறிகளுக்கும் இடையே வேறுபாடு காணப்படுகிறது. சிவம் சத்தியைக் கொண்டு செயற்படுகிறது என்பது போலத் திருமால் திருமகளைக் கொண்டு தன் செயல்களை நடத்துவதாக வைணவம் புகலவில்லை. அவள் பெருமானை விட்டுப் பிரியாதவளாக இருந்தாலும் உயிர்களின் திரளோடு சேர்ந்தவளாகவே சொல்லப்பெறுகிறாள். ‘ ஸ்ரீ ’ என்னும் அவளது பெயர் அவள் உயிர்களால் தொழப்படும் தன்மையையும், தான் பெருமானைத் தொழும் தன்மையையும் காட்டுவதாகும். அவள் உயிர்களுக்குத் தாய் ; பெருமானுக்குத் தேவி. அவள் பெருமானோடு சேர்ந்திருப்பது, அவனைப் பற்றுவோர் தம் பிழைகளைக் கண்டு அவன் சீறுவான் என்று அஞ்ச வேண்டாதவாறு செய்கிறது. அவள் தன் பால்மொழியால் மால் சீற்றத்தை ஆற்றித் தன் சொல்வழி வரும்படி செய்து அவனையும் அடியாரையும் பொருந்த விடுகிறாள். இம் மனிதன் இறைவனாகிய பேற்றினை அடைய அவனையே கருவியாகப் பற்றும்போது, அவள் கருவியாக இல்லாமல் இவனை ஏற்றுக்கொள்ளும்படி பரிந்துரை செய்பவளாகவும், இறைவனாகிய பேற்றினை அடையும் போது இவன் செய்யும் அடிமையினைப் பெருமானிடத்தில் ஒன்று பத்தாகச் சொல்லி அவனை மகிழ்வித்து இவன் செய்யும் தொண்டினை வளர்ப்பவளாகவும் அமைகிறாள்.[9]

திருமகள் உயிர்களைப் பெருமானோடு சேர்த்து வைப்பவள் (புருஷகார பூதை) என்பது வைணவத்தில் மட்டுமே காணப்படும் சிறப்பாகும்.

இறை — உயிர்த் தொடர்பு :

இறைவனுக்கும் உயிர்களுக்கும் இடையே உள்ள தொடர்பினைச் சொல்வதிலேயே பெரும்பாலும் சமயங்கள் வேறுபடுகின்றன.

இறைவன் ஒருவனே உண்மை ; மற்றவை எல்லாம் உண்மையல்ல (மாயை) என்பது அத்வைதம். இறைவன் வேறு, உயிர்கள் வேறு என்று வேற்றுமை சொல்வது துவைதம். இறைவன் உயிர் போலவும் ஏனைய உயிரும் உலகமும் அவனுக்கு உடல் போலவும் அமைந்துள்ளன என்பது விசிட்டாத்தைவதம். இவை மூன்றினும் வேறுபட்டு இறைவன்உயிர்களோடு ஒன்றாய், வேறாய், உடனாய் மூவகையாகவும் உள்ளான் என்பது சைவ சித்தாந்தம்.

இச் சைவ சித்தாந்த உண்மையினை விளக்குமிடத்து, இறைவன் அத்வைதிகள் சொல்லும் முறையில் பொன்னையும் அதனால் ஆகிய பணியையும் போல ஒன்று அல்லன், ஒருவனிடத்து உயிரானது உடம்பு வேறு தான் வேறு என்னும் வேற்றுமையின்றிக் கூடி இருப்பதுபோல ஒன்றாய் இருப்பவன் என்றும், துவைதிகள் சொல்லும் முறையில் ஒளியும் இருளும் போல வேறானவன் அல்லன், உயிர் உடம்போடு கலந்து நிற்பினும் உயிர் உடம்பாகவோ உடம்பு உயிராகவோ மாட்டாது. இரண்டும் வேறு வேறாய் நிற்றல் போல வேறாய் இருப்பவன் என்றும், விசிட்டாத்வைதிகள் சொல்லும் முறையில், சொல்லும் பொருளும் போல ஒன்றும் வேறுமாய் இருப்பவன் அல்லன், உயிர் உடம்போடு கூடி நின்று அதனை இயக்கி நிற்றல் போல உடனாய் இருப்பவன் என்றும் கூறுவர்.[10]

வைணவர்களுக்கு இறைவன் ஒன்றும் வேறுமாய் இருத்தலைக் (பேதாபேதம்) கூறுவதில் தான் நோக்கு. ஏனெனில், இராமானுசர் உள்ளிட்ட வைணவப் பெருமக்கள் வேதங்களில் ‘ உண்மைப் பொருள் ஒன்றே, இரண்டும் அன்று ’ என்றும், ‘ உயிரும் பரம்பொருளும் ஒன்று அல்ல, இரண்டே ’ என்றும் வரும் பகுதிகளை ஒன்றுபடுத்திக் காட்டுவதிலேயே முனைந்து நின்றனர். இவ் விருவகைத் தொடர்களையும் பொருந்த விட வேண்டுமெனில் இறைவன் உயிர்களோடு ஒன்றும் வேறுமாக (பேதாபேதமாக) உள்ளான் என்று சொன்னால் தான் முடியும். ஆகவே இராமானுசர் உயிர்கள் இறைவனுக்கு உடலாகவும், அவ் வுயிர்களாகிய உடலுக்கு இறைவன் உயிராகவும் இருக்கிறான். உயிர்கள் இறைவனுக்குப் படிகள் (ப்ரகாரங்கள்) ; அவன் படிகொளி (ப்ரகாரி) என்றார். அவரது இக் கோட்பாட்டினை, ''சரீர ஆத்ம பாவம்'' (உடல் உயிர்க் கொள்கை) என்பர்.

இதனை யொட்டியே வைணவ உரைகாரர்கள் ஆழ்வார்கள் பாசுரங்களுக்கு உரை கண்டனர். இது,

'' சரீரி பூர்ணன் ஆனவாறே சரீரமும் புதுக் கணிக்கு மிறே ; ஜகச் சரீரியிறே அவன்'' (தி. வா. மொ. 4—3—8— ஈடு).

'' இந்த லோகத்தில் ஸ்தாவர ஜங்கமாத்ம கமான ஸர்வ பதார்த்தங்களும் ' நீ ' என்கிற சொல்லுக்குள்ளே ஆம்படி ப்ரகாரமாயிற்று, நீ ஒருவனுமே ப்ரகாரியாய்....'' (தி. வா. மொ. 4—9—7— ஈடு.)

'' நடுவே புக்கு ஒரு பதார்த்தமும் ஸ்வதந் தரமாய் இருப்பதில்லை ; அடைய ப்ரகார மாய்த் தான் ப்ரகாரியாய் இருக்கும் '' (தி. வா. மொ. 8—4—9 ஈடு) என்னும் உரைப் பகுதிகளால் விளங்கும்.

எனினும், இறைவன் உயிர்களோடு ஒன்றா கவும் வேறாகவும் இருக்கிறான் என்பதும் சைவ சித்தாந்தத்தைப் போல வைணவ சித் தாந்தத்திற்கும் உடன்பாடானவையே.

இறைவன் உயிர்களோடு ஒன்றாய் இருத் தலை அவன் எல்லாப் பொருள்களின் உள்ளே யும் கரந்து உறையும் வடிவம் உணர்த்தும். அவனது இந்த வடிவத்தை ' அந்தர்யாமித் துவம் ' என்பர். நம்மாழ்வாரும் இதனை,

'' திடவிசும் பெரிவளி நீர்நிலம் இவைமிசைப்
படர்பொருள் முழுவது மாய்அவை அவை
[தொறும்,
உடல்மிசை உயிரெனக் கரந்தெங்கும் பரந்
[துளன்,
சுடர்மிகு சுருதியுள் இவையுண்ட சுரனே ''
(தி. வா. மொ. 1 : 1 : 7)
''நீராய் நிலனாய்த் தீயாய்க் காலாய்
[நெடுவானாய்ச்
சீரார் சுடர்கள் இரண்டாய்ச் சிவனாய் அயன்
[ஆனாய் ''
(தி.வா.மொ. 6 : 9 : 1)

முதலிய பாடல்களில் குறிப்பிடுகிறார்.

இப்படி உள்ளுறைபவனாய் இருப்பினும் உயிர்களின் குற்றங்கள் தட்டாதவனாய் வேறாக இருக்கிறான். உடலில் உண் டாகும் பிள்ளைமைத் தொடக்கமான உரு மாற்றங்கள் உயிருக்கு வராதது போல அவனுக்கு உயிர்களின் குற்றங்கள் சேரா என்கிறது தத்வத்ரயம். ''அந்தர்யாமி யானால் தோஷங்கள் வாராதோ என்னில், சரீர கதங்களான பால்யாதிகள் ஜீவாத்மா வுக்கு வாராதாப் போலே, த்ரிவித சேதநாசே தந தோஷமும் ஈச்வரனுக்கு வாராது.'' (தத்வ த்ரயம் ஈச்வர ப்ரகரணம் 4, 5.)

இனி, சைவ சிந்தாத்தத்தில் இறைவன் உயிர்களோடு விசிட்டாத்வைதம் சொல்லு மாறு , ' சொல்லும் பொருளும் போல ' உட னாய் இருப்பவன் அல்லன் ; உயிர் உடம்போடு ஒன்றித்து நின்று அதனை இயக்குவது போல உடனாய் உள்ளான் என்று விளக்கப் பட்டுள் ளது. இதில் விசிட்டாத்வைதிகள் சொல்வ தாகக் குறிக்கப் பெறும் '' சொல்லும் பொரு ளும் போல '' என்னும் எடுத்துக் காட்டு வைணவ நூல்களில் இடம் பெற்றிருப்பதாகத் தெரியவில்லை. காளிதாசனே இறைவணக் கம் பாடும்போது, '' சொல்லும் பொருளும் போல நன்கு பொருந்தியிருக்கும் உலகின் பெற்றோராகிய உமையோரு பங்கனை வணங்குகிறேன் ''[11] என்று இரகுவம்சத் தில் பாடியுள்ளான். இராமானுசர், '' உடம் பும் உயிரும் போல '' என்னும் எடுத்துக் காட்டினையே தந்துள்ளார். இவ் வெடுத்துக் காட்டு வெறும் சேர்த்தியை மட்டு மல்லாமல் இறைவன் உயிர்களை இயக்குவதையும் காட்டு வதாகவே அமைந்துள்ளது. மேலும் உயிர் இறைவனுக்குக் கட்டுப் பட்டு நடப்பதாய், அவனால் தாங்கப்படுவதாய், அவனுக்கு அடி மையாய் இருக்கிறது என்பது வைணவர் சொல்லும் இலக்கணம் ஆகும். '' ''ஆத்ம ஸ்வரூபம் ஈஸ்வரனுக்கு நிபாம்யமாய், தார்ய மாய், சேஷமாய் இருக்கும் '' என்பது தத்வ த்ரயம்.[12]

இதுகாறும் கூறியவற்றால், வைணவமும் சைவத்தைப் போல இறைவன் உயிர்களோடு ஒன்றாயும், வேறாயும், உடனாயும் இருக்கி றான் என்பதனைத் தெரிவித்தல் அறியலாம்.

உயிர்கள் :

இரு நெறிகளும் உயிர் என்னும் ஒரு பொருள் உண்மையினை ஏற்கின்றன. உயிர் அணு அளவினது என்பது வைணவர் கொள்கை.[13] இதனைச் சைவ சித்தாந்தம் ஏற்கவில்லை. உயிர் எல்லையற்று நிற்கும்

விரிந்த பொருள் என்பதும், அது பாசத்தை நோக்க விரிவாகவும் இறைவனை நோக்க அடக்கமாகவும் இருப்பது என்பதும் சைவர் கொள்கை. [14]

உயிர்களைப் பற்றும் மலங்களை மூன்றாகக் கொள்வதால் உயிர்களையும் அப் பகுப்பினை ஒட்டி மூன்றாகச் சொல்கிறது சைவம். உயிர்களைப் பற்றும் சேறு, உலக இயற்கை என்ற ஒன்றே என்பதால் அதனையொட்டி என்றும் அதனால் பற்றப் படாதவர்கள் என்றும், பற்றப் பட்டுக் கழிந்தவர்கள் என்றும், பற்றப்பட்டுக் கிடப்பவர்கள் என்றும் மூவகையாகச் சொல் கிறது வைணவம்.

ஆணவ மலம் உயிர்களுக்கு உடன் வந்தது என்பதும், அதுவே இறைவனை அடையாத வாறு அவற்றைத் தடுக்கிறது என்பதும்அதனை நீக்குதற் பொருட்டே ஏனைய கன்ம மாயா மலங்கள் உள்ளன என்பதும் சைவ சித்தாந் தத்தில் மட்டுமே காணப்படுவன. அறிவற்ற உலகத்தின் தொடர்புதான் உயிர்களை இறை வன்பால் அடைய முடியாமல் தடுக்கிறது என்பதும், அவ் வறியாமை நீங்கினால் உயிர் வீடு பேறடையும் என்பதும் வைணவத்தில் நிலவும் கருத்தாகும்.

தத்துவங்கள் :

சைவ சித்தாந்தம், மாயையினின்றும் தத் துவங்கள் பிறந்து அவற்றினின்றும் உலகம் தோன்றும் என்கிறது. மேலும் தத்துவங் களின் தோற்றத்திற்கு இடமாகிய மாயை யைச் சுத்த மாயை, அசுத்த மாயை, பிரகிருதி மாயை என்று மூவகையாகக் கூறுகிறது.

இம் மூவகை மாயைகளில் சுத்த மாயை யினின்றும் சுத்த தத்துவங்கள் ஐந்தும், அசுத்த மாயையினின்றும் வித்தியா தத்துவம் ஏழும், பிரகிருதி மாயையினின்றும் ஆன்ம தத்துவங்கள் இருபத்து நான்கும் உண்டாகின்றன. சைவ சித்தாந்தம் மொத்தம் முப்பத்தாறு தத்துவங் களைச் சொல்கிறது.

வைணவ சித்தாந்தம் அறிவில் பொருளைச் (அசித்) சுத்த தத்துவம், மிச்சிர சத்துவம், சத்துவ சூனியம் என்று மூவகையாகக் கூறு கிறது. இவற்றுள் சத்துவ சூனியம் காலம் ஆகும். எனவே உலகிற்குக் காரணமாகஅமை வன சுத்த சத்துவமும், மிச்சிர சத்துவமும் என்னும் இரண்டுமே ஆகும். இவற்றுள் சுத்த சத்துவம் இறைவன் விழைவாலே வைகுந்த மாகவும், மிச்சிர சத்துவம் முக்குணத்தோடு கூடிய மண்ணுலகாகவும் ஆகின்றன. மிச்சிர சத்துவத்தினின்றே இருபத்து நான்கு தத்துவங் கள் உண்டாகின்றன. இத் தத்துவங்களும் சைவ சித்தாந்தம் சொல்லும் ஆன்ம தத்துவ மும் ஒன்றே. இவ்விருபத்து நான்குக்கு மேலாக இருபத்தைந்தாவது தத்துவமாக இருப் பது உயிர் என்பதும், இருபத்தாறாவது தத்து வமாக இருப்பவன் இறைவன் என்பதும் வைண வர் முடிவு. '' சதுர் விம்சதி தத்வாத்மிகை யாய் இருக்கும் ப்ரக்ருதி, பஞ்சவிம்சகன் ஆத்மா, ஷட்விம்சகன் ஈச்வரன் '' என்பது பெரிய திருமொழி உரை (9 : :9 : 6 உரை.) இவ்வாறு வைணவர்கள் மொத்தம் இருபத் தாறு தத்துவங்கள் சொல்கிறார்கள்.

சைவம், தத்துவங்களுக்குரிய இடத்தை சுத்த மாயை, அசுத்த மாயை, ப்ரக்ருதி மாயை என்று மூன்றாகச் சொல்வதற்கும், வைணவம் சுத்த சத்துவம், மிச்சர சத்துவம் என்று இரண்டாகச் சொல்வதற்கும் காரணம் உண்டு. சைவம் உயிர்களை ஒருமலம் உடைய விஞ்ஞானகலர், இருமலம் உடைய பிரளயா கலர், மும்மலம் உடைய் சகலர் என்று மூவகை யாகச் சொல்வதனால் அவர்களின் பொருட்டு அமைந்த உலகங்களையும் சுத்த பிரபஞ்சம், மிச்சிர பிரபஞ்சம், அசுத்த பிரபஞ்சம் என்று மூன்றாகவும், அவற்றிற்குக் காரணமான மாயையினையும் சுத்த மாயை, அசுத்த மாயை பிரக்ருதி மாயை என்று மூன்றாகவும் சொல் கிறது. வைணவம் உயிர்களை இயற்கையி லேயே தூயராய் இருப்பவர் (நித்யர்) உலகியல் சேறு கழித்து தூயரானவர் (முத்தர்) உலகியல் சேற்றில் கட்டுண்டு உழல்பவர் (பத்தர்) என்று மூவகையாகக் கூறினும் அவர்களுள் முதல் இரு வகையினருக்கும் உரிய இடம் வைகுந்த மாகவும், மூன்றாம் வகையினருக்கு உரிய இடம் மண்ணுலகாமகவும் அமைவதால் இடங் களையும் அவற்றின் காரணத்தையும் இரண் டாகப் புகல்கிறது.

இம் மாயையினின்றும் தோன்றும் தத்துவங் கள் இருபத்து நான்கு என்பதில் இரு சாரார்க்

கும் உடன்பாடு இருந்த போதிலும், அவை தோன்றும் வகையில் வேறுபாடுகள் உள்ளன. இருவரும் ஆணவத்தை வைகாரிகம், தைசதம், பூதாதி என்று மூவகையாகவே கூறுகின்றனர். ஆனால் தைசதத்தினின்றும் மனமும் அறி கருவிகளும் தோன்றுகின்றன என்பதும், வைகா ரிகத்தினின்றும் தொழிற் கருவிகள் பிறக்கின் றன என்பதும், பூதாதியினின்றும் தன்மாத் திரைகள் உண்டாகின்றன என்பதும் சைவ சித்தாந்தம் வைகாரிகத்தினின்றும் அறிகருவி களும் தொழிற் கருவிகளும், மனமும் தோன்று கின்றன என்பதும், பூதாதிகளினின்றும் தன் மாத்திரைகள் உண்டாகின்றன என்பதும், தைசத்தினின்றும் தத்துவங்கள் பிறப்பதில்லை என்பதும், அது வைகாரிகத்துக்கும் பூதாதிக் கும் துணையாய் இருக்கும் என்பதும் வைணவ சித்தாந்தம்.

முடிவுரை :

இவ்வாறு இரு நெறிகளும் தங்களுக் கென்று சில தனித் தன்மைகளைக் கொண்டு திகழ் கின்றன. இவற்றின் ஒப்பாய்வு இவை தங் களுக்கென்று அமைத்துக் கொண்ட அடிப் படைக் கொள்கைகளுக்கு மாறாமல் செம்மை யாக வகுக்கப்பட்டுள்ளன என்பதனைத் தெளி வாக்குகிறது.

---

1. சிவஞான சித்தியார் பாட்டு 261.
2. அருளிச் செயல் ரஹஸ்யம், எஸ். கிருஷ்ண சாமி அய்யங்கார், பதிப்பு, பக்கம் 25.
3. சிவஞானசித்தியார், பாட்டு 38.
4. தத்துவத் த்ரய வ்யாக்யாநம், பக்கம் 147.
5. தத்வ த்ரயம் ஈச்வர ப்ரகரணம், 25—29
6. சிவஞானசித்தியார், பாட்டு, 89.
7. சிவஞானசித்தியார் பாட்டு, 165.
8. முமுட்சுப் படி சூத்திரம், 29.
9. முமுட்சுப்படி, த்வய ப்ரகரணம், சூத் திரம் 32.
10. சிவஞான சித்தியர் சுபக்கம், மு. திரு விளங்கம் உரை, பக்கம் 167, 168.
11. வாகர்த்தாவிவ ஸம்ப்ருக்தெள [வாகர்த்தப்ரதிபத்தயே
 ஜகத : பிதரெள வந்தே பார்வதி [பரமேச்வரெள
12. தத்வத்ரயம், சித் ப்ரகரணம், 4
13. தத்வத்ரயம் சித் ப்ரகரணம், 5
14. சிவஞானசித்தியார் பாட்டு 210.

என்றும் நாம் யாவர்க்கும் இடைவோம் அல்லோம்;
இருநிலத்தில் எமக்கு எதி ராவாரும் இல்லை ;
சென்றுநாம் சிறுதெய்வம் சேர்வோம் அல்லோம்;
சிவபெருமான் திருவடியே சேரப் பெற்றோம்
ஒன்றினுல் குறையுடையோம் அல்லோம் அன்றே
உறுபிணியார் செறல் ஒழிந்திட்டு ஓடிப்போனுர் ;
பொன்றினுர் தலைமாலை அணிந்த சென்னிப்
புண்ணியனை நண்ணிய புண்ணியத் துளோமே.

திருத்தாண்டகம்—திருநாவுக்கரசர்

உ

சிவமயம்

அற்புதத் திருவந்தாதியில் காரைக்கால் அம்மையாரின் பா நலம்

திருமதி சாரதா நம்பி ஆரூரன், எம்.ஏ., எம்.ஃபில்.,
தமிழ்ப் பேராசிரியை, இராணிமேரிக்கல்லூரி சென்னை-4

காரைக்கால் அம்மையாரின் இயற் பெயர் புனிதவதி. இவர் சோழ நாட்டைச் சார்ந்த காரைக்காலில் பெருஞ்செல்வனாய்த் திகழ்ந்த தனதத்தன் என்பானது மகளாய்ப் பிறந்தார். பெற்றோரிடையவர்பால் கொண்ட அன்புடன் அழகின் கொழுந்தென வளர்ந்தார். உரிய பருவத்தில் நிதிபதி என்ற வணிகனின் மகன் பரமதத்தனை மணந்தார். இறையருளால் அம்மையார் வரவழைத்த மாங்கனியால் அவரது தெய்வீக மாண்பினை உணர்ந்த கணவன் அவருடன் வாழ அஞ்சிப் பிரிந்தான். பாண்டி நாட்டில் மற்றொருத்தியை மணந்தான். அவர்களுக்குப் பிறந்த மகவிற்குப் புனிதவதி என்னும் நாமமிட்டான். அவனைக் காணச் சென்ற மனைவியின் அடிபணிந்தான். கணவன் பொருட்டுச் சுமந்துள்ள அழகை நீக்கி இறைவன் திருவடிகளைச் சூழ்ந்து போற்ற வல்ல பேய்வடிவத்தை இறைவனிடம் வேண்டிப் பெற்றார் அம்மையார்.

என்பு வடிவாய் பேயுருவம் பெற்றதும் இறைவன் திருவருளால் தம்முள்ளத்துத் தோன்றியெழுந்த சிவஞானத்தின் ஒருமைப் பாட்டினால் அற்புதத் திருவந்தாதியைப் பாடியதாகவும், பின்பு இரட்டை மணி மாலையைப் பாடியதாகவும் சேக்கிழார் குறிப்பிடுகின்றார்.

இறுதியாக, திருவாலங் காட்டிற்குத் தலையால் நடந்து வந்து, திருவாலங்காட்டடிகளைக் கண்டு வணங்கிப் பாடிய பதிகங்களே மூத்த திருப்பதிகங்கள் ஆகும்.

மூத்த திருப்பதிகங்களிரண்டும் அற்புதத் திருவந்தாதிக்கும், இரட்டை மணிமாலைக்கும் பின்பு பாடியவையே எனினும் அம்மையார் விரும்பியவாறு திருவாலங்காட்டிலுள்ள இறைவன் ஆடும் திருவடிக் கீழ் இருந்து பாடிய பெருமை யுடையவாதலின் அவை பதினோராம் திருமுறையில் இடம் பெற்றன எனலாம்.[1]

சிவபெருமானைப் பதிகம் பாடி வழிபடும் முறையினை முதலில் வகுத்தவர் அம்மையாரே. பதிகத்திறுதியில் திருக்கடைக்காப்பு கூறுதலும், அதில் தம் பெயரையும் அப்பதிகத்தை ஓதுவோர் எய்தும் பயனையும் குறித்தலும் அவர் காட்டிய முறையேயாகும்.

அற்புதத் திருவந்தாதி, திருவிரட்டை மணிமாலை அந்தாதித் தொடையில் அமைந்துள்ளன. சங்க இலக்கியமான பதிற்றுப் பத்தில் நான்காம் பத்தைப் பாடிய காப்பியாற்றுக் காப்பியனார் அப்பத்துப் பாடலையும் அந்தாதித் தொடையில் அமைத்துள்ளார். எனினும் இப்பத்தின் இறுதிச் செய்யுளின் இறுதியடி முதற் செய்யுளின் முதலடியுடன் மண்டலித்து முடியவில்லை. இம் முறையினையும் முதலில் தோற்றுவித்தவர் அம்மையாரே. அந்தாதித் தொடையமைய, நூற்றொரு வெண்பாக்களால் இறுதியும் முதலும் மண்டலித்து முடியக்காரைக்காலம்மையார் பாடிய அற்புதத் திருவந்தாதி, அந்தாதி இலக்கியத்துள் தொன்மையும் சிறப்பும் வாய்ந்த விருந்து நூலென்பது அறிஞர் முடிபு.[2]

திருவருள் ஞானம் பெற்றவர் அம்மையார் என்பது ‘ திருவருள் ஞானமாவது முதலிகள் மூவர்2காரைக்காலம்மை முதலாயினோர்க்குண்டாகிய ஞானமென அறிக ’ என்ற சிவப்பிரகாச உரையால் இனிது விளங்கும்.[3]

அம்மையார் உள்ளத்துத் தோன்றிய சிவஞானத்தின் ஒருமைப் பாட்டினால் சிவபெருமானைப் போற்றிப் பாடிய அந்தாதியாதலின்

இது அற்புதத் திருவந்தாதி என்னும் பெயர் பெற்றதை,

''உற்பவித் தெழுந்த ஞானத் தொருமையின்
[உமைகோன் றன்னை
அற்புதத் திருவந்தாதி அப்பொழு தருளிச்
[செய்வார். ''4

எனவரும் சேக்கிழார் அடிகள் உணர்த்துகின்றன.

இந் நூலில் அம்மையார் திருவருள் அனுபவத்தினை உலகத்தார்க்கு உணர்த்தும் பாடல்களும், தம் நெஞ்சிற்கு அறிவுறுத்தும் பாடல்களும், தம்மையொத்த அடியவர்களின் சிறப்பினை விரித்துரைக்கும் பாடல்களும், இறைவனுடைய அருட் கோலங்களையும் திருவருட் செயல்களையும் நினைந்து அப் பெருமானை முன்னிலைப் படுத்தி அழைத்து உரையாடி மகிழும் நிலையில் பாடப் பெற்ற பாடல்களும் சிறப்புற அமைந்துள்ளன.

குழவிப் பருவம் முதல் சிவனையன்றி வேறொன்றை நினையாத் தன்மையை,

'' பிறந்து மொழி பயின்ற பின்னெல்லாம்
[காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன் ''5

என்று முதற் பாடலிலேயே குறிப்பிடுகின்றார்.

அடித்தளர்வுற்று அசையுநடைப் பருவத்தே
பணியணிவார் கழற்கடிமை பழகி..
காதல் ததும்ப வரும் மொழி பயின்றார் ''

என்று சேக்கிழார் கூறும் அம்மையார் வரலாற்றுக்கு6 இம் முதற் பாடலே அகச் சான்றாயமைகின்றது.

'' எம்பெருமான் எனக்குண்டாகிய துன்பங்களை நீக்காவிடினும், யான் படும் துன்பங் கண்டு உளம் இரங்காவிடினும், அத் துன்பங்களை விலக்கி உய்ந்து போதற்குரிய நல் வழியைக் காட்டாராயினும் எனது நெஞ்சத்தில் நீங்காது வீற்றிருக்கும் அவர்பால் யான் வைத்துள்ள அன்பு ஒருபோதும் குறையாது '' என்பதை,

'' இடர்களையா ரேனு மெமக்கிரங்கா ரேனும்
படரு நெறிபணியா ரேனுஞ் — சுடருருவில்
என்பறாக் கோலத் தெரியாடு மெம்பனார்க்
கன்பறா தென்னெஞ் சவர்க்கு '' 7

என்கிறார். இடர்களைதல் முதலிய பயன் கருதித் தான் இறைவனிடம் அன்பு செலுத்தவில்லை என்கிறார். '' அன்பு செய்தலே அதற்குப் பயன் ; வேறில்லை . வீடும்வேண்டா விறல் என்பது திருக் கூட்டச் சிறப்பாகும்.''8

ஞானமே திருமேனியாக வுடையவனும், திருநீலகண்டருமாகிய சிவபெருமானை விண்ணுலகில் உள்ளான் என்றும், மண்ணுலகில் உள்ளான் என்றும் கூறுவார் கூறுக ; நான் அவர் என் நெஞ்சையே இடமாகக் கொண்டு நீங்காது வீற்றிருப்பவர் என்று கூறுவேன். ''

வானத்தா னென்பாரு மென்க ; மற் றும்பர்
[கோன்
தானத்தா னென்பாருந் தாமென்ப ;
[ஞானத்தான்
முன்னஞ்சத் தாலிருண்ட மொய்யொளிசேர்
[கண்டத்தான்
என்னெஞ்சத் தானென்பன் யான்.9

எனும் பாடலில் தனது நெஞ்சில் நிலைபெற்று நீங்காமலிருப்பவன் சிவன் என்றிறுமாந்து கூறும் அநுபவ நிலையைக் காணலாம். ''நாடி நாரணன் நான்முகன் என்றிவர், தேடியும் திரிந்தும் காண வல்லரோ.. தில்லையம்பலத் தாடி பாதம் என் நெஞ்சுளிருக்கவே!'' (குறுந்); ''திருமாலொடு நான்முகனும் தேடித் தேடொணாத் தேவனை என்னுள்ளே தேடிக் கண்டு கொண்டேன்'' (திருவங்கமாலை); ''உள்ளத்தில் காண்பாயெனில் கோயில் உள்ளேயும் காண்பாயடி.'' (கவிமணி) என்னும் கருத்துக்கள் ஒப்பு நோக்குதற்குரியன.

இறைவன் தானே அறிவான்; அறிவிப்பானும் தானே; அறிவுக்கறிவாய் நின்று அறிகின்றானும் தானே; அறியப்படும் மெய்ப் பொருள்களும் தானே; சுடர், நிலம், ஆகாயம் முதலிய பொருள்களும் அவனே;10 இறைவன் மாலுக்கும் பிரமனுக்கும் அன்று அளப்பரியவன்; ஆனால் இன்று அன்பினால் அவனைக் காணல் எனக்கு எளிதாயிற்று என்கிறார்.

அம்மையார் பாடல்களில் உவமை நயம் சிறப்புற்று விளங்கக் காணலாம்.

இறைவரது செஞ்சடையும், உமையம் மையின் கரிய குழலும் உடனிருத்தலுக்கு எரியும், இருளும் ஒன்று போலவே உடனிருந் தாலும் ஒப்பாகாது என்கிறார்.

''மிக்க முழங்கெரியும் வீங்கிய
பொங்கிருளும்
ஒக்க உடனிருந்தா லொவ்வாதே''

என்று இல் பொருள் உவமையை இனிதுடன் அமைத்துள்ளார்.11

சிவபெருமானுக்கு உதய காலம் போன்று திருமேனி சிவந்து விளங்கும்; நடுப்பகல் போன்று அத்திருமேனியில் உள்ள வெண்ணீறு வெள்ளியதாய் விளங்கும்; அந்தி மாலையின் பொன்னொளியைச் சடைக்கற்றை நினைவுறுத்தும்; அதன் மேல் திணிந்த இருளைப் போன்று திருமிடறு விளங்கும்.

காலையே போன்றிலங்கு மேனி; கடும்
பகலின்
வேலையே போன்றிலங்கும் வெண்ணீறு;
மாலையின்
தாங்குருவே போலுஞ் சடைக்கற்றை;
மற்றவற்கு
வீங்கிருளே போலு மிடறு.12

என்ற பாடலில் நாளின் பல கூறுகளாக இறைவனது திருமேனிப் பகுதிகளைக் கண்டு போற்றுகின்றார். ''பார்த்த விடமெல்லாம் பரவெளியாய்த் தோன்ற'' என்னும் பெரியோர் இயல்பு இதுவே. ''நெருநலையா யின்றாகி நாளையாகி நிமிர்புன் சடையடிகள் நின்றவாறே'' என்று திருத்தாண்டகமும் போற்றுகின்றது.

''தாயுமிலி தந்தையிலி தான்தனியனாகிய'' இறைவரால் ''அம்மையே'' என்றழைக்கப்பட்டவராதலின் தாயாம் தன்மை நிலையில் நின்று,

''அரவமொன்று ஆகத்து நீ நயந்து
பூணேல்....
பொன்னாரம் மற்றொன்றுபூண்''
(அற். திரு. 27)

''திங்களிது சூடிச் சில்பலிக்கென்று
ஊர் திரியேல்'' (அற். திரு. 43)

இடுகாட்டில் ஆடும்போது பிராட்டியைக் கூட வைக்க வேண்டா (அற். திரு. 51) என்று உரிமையுடன் வேண்டுகிறார்.

முப்புரமெரிசெய்தோன் திருவடித் தாமரைகளைச் சார்ந்தால் காலனையும் வெல்லலாம்; கடுநரகத்தினின்றும் தப்பிக்கலாம்; இருவினைப் பயன்களையும் வேரறுக்கலாம் என்றெல்லாம் துணிவு கூட்டும் அம்மையார்13

''ஆராத அன்பினோடு அண்ணலைச்
சென்றேத்துவார்
பேராத காதல் பிறந்து''14

என்று நமக்கு நம்பிக்கை அளிக்கின்றார். அவர் வாக்கின்படி நாம் பேராத காதல் பிறந்து ஆராத அன்பினோடு அண்ணலைச் சென்றேத்துவோம்!

---

1. வித்துவான் செ. வேங்கடராமச்செட்டியார், பன்னிரு திருமுறை மன்றம் வெள்ளி விழா மலர். மதுரை, 1978, ப. 80.
2. வித்துவான் க. வெள்ளைவாரணன், பன்னிரு திருமுறை வரலாறு, இரண்டாம் பகுதி, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 1980, ப. 690.
3. மேற்படி நூல், ப. 690.
4. சேக்கிழார், காரைக்காலம்மையார் புராணம், (பெரிய புராணம்) பாடல் 52.
5. அற்புதத் திருவந்தாதி, பாடல் 1.
6. சேக்கிழார், காரை. புரா. பாடல் 3.
7. அற். திரு. பாடல் 2.
8. சி. கே. சுப்பிரமணிய முதலியார் உரை, காரை. புரா. மூன்றாம் பகுதி, இரண்டாம் பாகம், ப. 900.
9. அற். திரு. பாடல் 6.
10. அற். திரு., பாடல் 20
11. அற். திரு., பாடல் 58
12. அற். திரு., பாடல் 65
13. அற். திரு., பாடல் 81
14. அற். திரு., பாடல் 101

வாழ்த்துப்பா

திருச்சிற்றம்பலம்

''தென்னா டுடைய சிவனே போற்றி
எந்நாட் டவர்க்கும் இறைவா! போற்றி''

[நேரிசை வெண்பா]

(1) கற்பகநற் பொற்கொடியோ டின்னருள்
செய் காபாலி
பொற்பதத்தைப் போற்றிப் பணிந்
திட்டால் — பொற்புறும்
நல்வாழ்வும் நற்பண்பும் நல்லனவும்
வந்தெய்தும்
பொல்லா தனஎல்லாம் போம்.

[எழுசீர் விருத்தம்]

(2) மும்மொழிக் கடலெனும் மூதறிவாளர்
மூத்த நற்சைவப் பேரறிஞர்
அம்பிகை பாகனை அடைந்துய் வதற்கோர்
அம்சிவ ஞான போதமலை
செம்மனச் செல்வர் சிந்தையி லோர்ந்து
சைவசித் தாந்தப் பெருமன்றம்
அம்புவி அமைக்க ஆர்வமாய் ஞானியார்
அடிகளை அணுகி முதன்முதலில்,

(3) சென்னை இராயப் பேட்டையில் தென்றல்
திரு.வி.க. சச்சி தானந்தம்
என்னும் இவர்களோ டேனைய அன்பரை
இணைத்துச் செயல்பட இனிதாகப்
பன்னுயர் சிவபெரு மானரு ளாலே
பாங்குற அமைத்தார், பார்போற்ற
நன்மனச் சான்றோர் மறைமலை
அடிகளார்
நல்லறப் பணிவளர்ந் தோங்குகவே.

(4) மாயிரு ஞாலத் தாயிரம் பிறையைக்
கண்டது மாண்பார் பெருமன்றம்
தாயினுஞ் சிறந்த தண்ணளி யாளரும்
தக்கார் தாழ்விலாச் செல்வருடன்
வேயுறு தோளி பங்கனின் விரைகழல்
விழையும் வித்தகப் பெரியோரும்
நேயமாய்க் கூடி நேர்மையாய் நடாத்தும்
முத்துநல் விழாச்சிறந் தோங்குகவே

பெருமன்றம் பேணியாற்றும் பெரும்பணிகள்

(5) பன்னிரு திருமுறை பண்புற ஓதலும்
பதினான் கெனுமுயர் சாத்திரமும்
பன்னருஞ் சைவச் சிறப்பும் பாரெலாம்
பரவிடச் செய்யும் வெளியீடும்
கன்னலின் இனிதாம் பண்ணார் தெய்வக்
கவினார் இன்னிசைத் தேவாரம்
கன்னியர் காளையர் யாவருங் கருத்தாய்க்
கற்றிடப் பயிற்சி அளித்தினிதே

(6) இப்புவி யெங்கணும் சைவம் தழைக்க
ஏற்றநன் முறையில் தொண்டாற்றும்
திப்பிய சான்றோர் ஆன்றோர் நினை
வாய்த்
தெளிவுரை நிகழ்த்தியும் வருமினிய
செப்புயர் சைவசித் தாந்தப்பெரு
மன்றம் சிறப்பாய் நடாத்த விழை
ஒப்பிலா உத்தம முத்துப் பெருவிழா
உலகெலாம் ஒளிதர வாழ்த்துவமே.

பெருமன்றச் செயற்குழு உறுப்பினர்:
புலவர் ஏறு. வித்துவான்
ஆ. ஜெ. இராமசாமி முதலியார்

—(o)—

உ

செந்திலாதிபன் துணை

தலபுராணங்களால் சமயநெறியாளருக்கு ஏற்படும் பயன்கள்

(பேராசிரியர் டாக்டர் சு. சுவர்ணகாளிச்சுரன், டி.லிட்., திருவையாறு)

''புராணம் என்பது பழைமையானது. புதுமை மிக்கது. எது தொன்று தொட்டு இருந்து வருகிறதோ அது புராணம்'' என்று வாயு புராணம் கூறும். தமிழில் புராணம் என்ற சொல்லாட்சி பண்டுதொட்டு இருந்த போதிலும் எப்போது தொடங்கியது என்று கூற இயலவில்லை. தமிழில் பெரிய புராணமே புராணம் என்ற பெயரால் முதலில் எழுந்தது.

தமிழில் தோன்றிய புராண நூல்களை (1) அடியார் வரலாறு ,கூறும் புராணம் (2) தல புராணம், (3) அரிச்சந்திர புராணம் போல இதிகாசக் கதைகள் பற்றி எழுந்த புராணம் (4) ஜாதிப் பெருமை கூறும் புராணங்கள் என நால்வகையாகப் பிரிக்கலாம்.

இந்நால்வகைப் புராணங்களில் தல புராணங்களால் சமயத்திற்கு ஏற்படும் பயன்களைச் சிந்திப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தல புராணம் என்ற இலக்கிய வகை வேம்பத்தூரார் இயற்றிய திருவாலவாயுடையார் புராணத்தை முதலாகக் கொண்டு தொடங்கியது என்பது ஒரு சாராரது ஆய்வு. புராண இலக்கிய காலம் என்று சிறப்புப் பெறும் 16, 17-ஆம் நூற்றாண்டு. அது 18, 19-ஆம் நூற்றாண்டு வரை தொடர்ந்தது.

தல புராணம்: ஒரு தலத்து இறைவன் மீது பாடப்பெறுவது.

குும் வகையில் நிறுவுவது. விலங்குகளில் யானை, சிலந்தி, கழுதை, ஆடு முதலியவைகளும், அதுமட்டுமா, சிலந்தி, ஈ, எறும்பு, பாம்பு இவைகள்கூட இந்தத் தலங்களில் இறைவனை வழிபட்டுச் சிவபூசை செய்து உய்ந்துள்ளனவே. ஆறறறிவுடைய மனிதர்களே நீங்கள் இறைவனை வழிபட வேண்டாமா? என்று நம்மை நோக்கி வினவுவதுபோல் வரலாறுகளை அமைத்துக் காட்டி மானிடப் பிறவி வகுத்தது அரன் பணிக்கே என்பதனை வற்புறுத்திக் காட்டுகின்றன தல புராணங்கள்.

நான் மிகத் தாழ்ந்து விட்டேன், அளக்கொணாத தவறுகளைச் செய்து விட்டேன். எனக்கு உய்வுண்டா? சமயத்தில் எனக்கு இடமுண்டா? என ஏங்கிக் கிடப்பாரை நோக்கி நீங்கள் தவற்றினை உணர்ந்து இறைவனை வழிபட்டால் உறுதியாகத் திருந்துவீர்கள் இன்ன இன்ன தலங்களில் இத்தகைய கொடியோர் கூட உய்ந்திருக்கின்றார்கள் ''கடையருக்கும் கதிமோட்சம் உண்டு'' என்றழைப்பது. எவ்வாறு செய்த தவற்றினை ஒத்துக் கொள்வேன் என மறுகுவோருக்கு தக்கோர் இருக்கும் இடங்களுக்குப் பக்கமாவது செல்லுங்கள், நீங்கள் உய்வீர்கள்; தவம் என்றோ விரதமென்றோ அறியாதவர்களும் உய்ந்திருக்கின்றார்கள், நீங்களும் உய்யலாம் என அழைப்பன தல புராணங்கள்.

''வானிடத்தவரும் மண்மேல் வந்து அரன் றனை அருச்சிப்பர்'' என்னும் சாத்திர மொழியைத் தலங்கள் தோறும் இந்திரன் உள்ளிட்ட தேவர்கள் வந்து வழிபடுதலை விளக்

நம் சமய உண்மைகளான பதி, பசு, பாச இலக்கணங்களையும், சைவ பூஷணமாகக் கூறப்படும் ஐந்தெழுத்து, திருநீறு, உருத்திராக்கம் ஆகியவற்றின் பெருமைகளையும்

க்தை மூலமாகச் சிற்றறிவினோரும் அறியச் செய்திடுவன தல புராணங்கள்.

வேம்பத்தூரார் திருவிளையாடல் ஞான சம்பந்தப் பெருமான் திருநீற்றின் பெருமையை மதுரையில் எவ்வாறு விளக்கினார், வளர்த்தார் என்று காட்டுகின்றது.

அவரது சீடர் ஆராவமுதாச்சாரியார் திருச்சுழியற் புராணத்தில் தத்துவ விளக்கங்களைக் குறிப்பாகத் தந்துள்ளார். இப் புராணத்தில் அம்பலவாண நாவலப் பெருந்தகை காளையார் சருக்கம் என்ற ஒன்றை இணைத்து திருமுறை விளக்கம் செய்துள்ளார்.

பரஞ்சோதி முனிவர் மதுரை நகரத்து வாழ்வார் சிறப்புக் கூறுங்கால் சரியை வல்ல மெய்த்தொண்டரும் கிரியைகள் செய்யும் மைந்தரும் யோகம் தெளியும் சாதகக் கேளிரும் தேசிகத் தன்மை புரியும் போதகச் செல்வரும் அளவிலாதவர் வாழ்ந்தார்கள் எனக் காட்டுவார். இதனால் மதுரைப் பதியில் நால்வகைத் தீக்கையுற்றோர்களும் சிறப்புடன் திகழ்ந்தார்கள் என அறிகின்றோம்.

இத்தகைய தீக்கைகளை அவரவர் பக்குவ மறிந்து சமய விசேட, நிருவாணமென்னும் தீக்கைகளைத் தேசிகன் செய்விப்பான் என சிவஞான முனிவர் காஞ்சித் தல புராணத்தில் விளக்குகின்றார். இவ்வாறு நம் மலத்தைக் கெடுத்து உய்விக்கும் தீக்கைகள் செய்யும் முறைகள் ஏழாம். அவை : (1) நோக்கு, (2) ஊறு, (3) மொழி, (4) எண்ணம், (5) நூல், (6) யோகம், (7) ஔத்திரி எனக்காட்டுகின்றார் ; (நோக்கு—ஆசான் தன் திருக்கண்ணால் பார்த்துத் திருத்துதல், பக்குவப் படுத்தல்.) (ஊறு—தன் திருக்கையால் தொட்டுப் பக்குவப் படுத்தல்.) (மொழி—தன் திரு வாயால் உபதேசித்துப் பக்குவப் படுத்தல்.)

எண்ணம் — மனதால் எண்ணிப் பக்குவப் படுத்தல்.

நூல் — சாத்திர நூல்களின் கருத்தைப் போதித்துப் பக்குவப் படுத்தல்.

யோகம் : யோக நிலையில் ஞான புத்திரனாக்கிப் பக்குவப்படுத்தல்.

குண்ட முதலிய இட்டுச் செய்தல் ஔத்திரி தீக்கையாம். இத் தீக்கையும் ஞான, கிரியா பாகமென இருவகைப்படும். சைவ நெறிப் படுத்தல் சமய தீக்கை. மகமை நெறி எய்தல் விசேட தீக்கை. ஆதார சத்தி முதல் குடியை ஈறாக ஆசன பூசைகள் செய்து பஞ்ச சுத்தி, பஞ்சாவரண பூசை செந்தழலோம்புதல் வரை செய்தல் எனவும் காஞ்சித் தல புராணத்தில் சிவஞான முனிவர் விளக்குகின்றார்.

இச் சிவ பூசையின் சிறப்பை ஞானக் கூத்தர் விருத்தாசலம் புராணத்தில் சிவபூசைப் படலத்தில் வற்புறுத்தி உரைப்பார். அகோர மாதவர் காளை நாயகர் புராணத்தில் ஐவகைச் சுத்தி, ஆவரண பூசை முதலியவற்றை நன்கு விளக்கியுள்ளார். இந்த அகோர மாதவரே வேதாரணிய புராணத்தில் ஐந்தெழுத்தின் மகிமைகளை நுண் பொருள்களை விளக்குகின்றார். மகா வித்வான் பிள்ளையவர்கள் மாயூரம் புராணத்தில் ஸ்நானவிதிப் படலம் அனுட்டானப் படலம், சிவபூசைப் படலம், வழிபாட்டுப் படலம், போஜன விதிப் படலம் முதலியவற்றால் சிவ பூசை விதிகளை விவரித்துக் காட்டுகின்றார். யோக ஞான தீட்சா விதிமுறைகளைப் பரஞ்சோதி முனிவர் வாதவூரருக்கு உபதேசித்த படலத்தில் மதுரைத் தலபுராணமாகிய திருவிளையாடலில் காட்டுகின்றார்.

கச்சியப்ப முனிவர் தணிகைப் புராணத்தில் நந்தி உபதேசம் பெற்ற படலத்தில் மெய்கண்ட சாத்திர நுட்பங்களைத் தொகுத்துக் காட்டுகின்றார். அகத்தியர் உபதேசம் பெற்ற படலத்தில் மறைஞான சம்பந்தர் செய்த ஆயிரத்து நூற்றெட்டுச் செய்யுளுடைய, சிவ தருமோத்தரத்தை ஐந்நூற்றுப் பதினைந்து செய்யுட்களால் தொகுத்துக் காட்டுகின்றார்.

காஞ்சித் தல புராணத்தில் சித்தாந்த நற் கருத்துக்களை நேரில் காட்டி விளக்குவது போல நாடு நகர ஆற்று வருணனைகளில் சிவஞான முனிவர் பெருந்தகை நமக்குக் காட்டுகின்றார்.

நம் திருமுறையில் கூறப் பெறும் சில வரலாறுகள் தல புராணங்களால் விளக்கம் பெறுவதற்குப் பல சான்றுகள் காட்டலாம். ஒன்றை மட்டும் இங்கு நினைவுகூரலாம். மணிவாசகப் பெருமான், இறைவன் வண்டோதரிக்கு அருள் செய்த வரலாற்றைக் கூறுகின்றார். இவ் வரலாற்றின் விளக்கம் உத்தரகோசமங்கைத் தல புராணத்தில் விளக்கப்படுகின்றது.

பரார்த்த பூஜாவிதிகள் அகோர மாதவர் செய்த காளைநாயகர் புராணத்திலும், கச்சியப்ப முனிவர் செய்த பேரூர் புராணத்திலும், மற்றும் பூஜா விதியின் நுட்பங்கள், திருக்காளத்திபுராணம், திருவானைக்கா புராணம் ஆகியவற்றிலும் காணலாம்.

திருவையாற்றுத் தல புராணத்தில் சைவர்கள் மனத்தால் அடைய வேண்டிய பதினாறு பேறுகள் கூறப்படுகின்றன. அவைகளாவன :

(1) மறைகள் நிந்தனை சைவ நிந்தனை பொறாமனம் ;

(2) ஐம்புலன்கள் சென்ற வழியே செல்லாமல் மனத்தை ஒருவழிப் படுத்தல் ;

(3) பிறவி தீதெனாதவரோடு வேறுபடுதல் ;

(4) உறுதி நல்லறம் உரைப்பவர்களோடு உறுதி கூறுதல் ;

(5) நல்லன்பர்கள் யாது கேட்கினும் உதவும் மனம் ;

(6) மாதவத்தினோர் நம்மைத் திருத்துவதற்காகத் தண்டித்தால் அதனை ஏற்றுக் கொள்ளும் இயல்பு.

(7) அவர்கள் செய்த நல்லுபதேசங்களை ஏற்கும் மனம்.

(8) அன்பர்கள் தீது செய்யினும் சிவச் செயல் எனக் கொளும் தெளிவு ;

(9) இறை அன்பர்களிடத்தில் மனமும் வாக்கும் ஒருமையுறல்.

(10) கனவினும் அடியாருக்கு அடிமையாகல் ;

(11) நினைவில் ஒரு கடவுளையே சிந்தித்தல்.

(12) இறைவன் திருப்புகழை நாள்தோறும் உரைத்திடல்.

(13) தீமை விளைக்கத்தக்க புறக் கொள்கைகளை சமுதாயத்தினின்று நீக்க முயலும் மனம்.

(14) பிறர் பொருளுக்கு ஆசைப்படாமை.

(15) பிறதாரம் நோக்காமை.

(16) யான் எனது என்னும் செருக்கறுத்தல்.

இத்தகைய பேறுகளை நாம் பெற வேண்டும் என்பதனைத் திருவையாற்றுத் தல புராணம் நமக்குக் காட்டுகின்றது.

இவ்வாறு தல புராணங்கள் நம்மைச் சமய நெறியில் ஈடுபடுத்தி நம்மை மனிதானாக்கி வாழ்வாங்கு வாழச் செய்து தெய்வத்துள் வைக்கப்பட உதவுகின்றன.

வாழ்க சைவ நெறி
வளர்க நல்லுலகம்

தவமும் முத்திப்பேறும்

உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்கு உரு.

கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு.

கொல்லாமை மேற்கொண்(டு) ஒழுகுவான் வாழ்நாள்மேல்
செல்லா(து) உயிருண்ணும் கூற்று.

தெய்வத் திருக்குறள்

உ
சிவமயம்

தேவாரத்தில் சில இசைச் சிந்தனைகள்

திரு. மா. வைத்தியலிங்கம், எம்.ஏ., எம்.பில்
தமிழ்ப் பேராசிரியர், ஜி.டி.என். கலைக் கல்லூரி, திண்டுக்கல்.

1. தீட்சிதரும் தேவாரமும்

முத்துசாமி தீட்சிதர் கன்னி முதல் காசி யீறாகத் தல வழிபாடு செய்து ஆங்காங்குக் கோயில் கொண்டுள்ள மூர்த்திகளை வட மொழிக் கீர்த்தனங்களினாலே துதித்தவர். வடநாட்டு வாழ்க்கையின் போது இந்துஸ்தானி மார்க்கத்தைப் பயின்று அந்த வழி களைத் தம் கீர்த்தனங்களில் இயைத்துள்ள னர். பல கீர்த்தனங்கள் ஹிந்துஸ்தானி இராகங்களில் அமைந்தவை. ' பிருந்தாவன ஸாரங்க ' முதலிய இராகங்களை அவர் பாட்டுக்களில் காண்கிறோம்.

திருவாரூர் தேவார அட்சி பெற்ற தலம். முதன் முறையாகச் செப்பேடு செய்விக்கப் பெற்ற தேவார அடங்கன் முறை திருவாரூர்ப் பண்டாரத்தில் வைக்கப் பட்டிருந்தது என் பர். ' நித்தியோற்சவ நிரஞ்சனரான ' தியா கேசருக்குப் பணி விடைக்கென நியமிக்கப் பட்டிருந்த ஓதுவார்கள், நடன மாதர்கள், வாத்தியக்காரர்கள், நட்டுவனார்கள் எண்ணற் றோர்.

திருவாரூரில்தான் தியாகையர், தீட்சிதர், சாமா சாஸ்திரிகள் மூவரும் தோன்றினர். தியாகையர் திருவையாற்றில் குடியேறி விட்டார்.

தீட்சிதர் தம் காலத்தில் வாழ்ந்த ஓதுவா மூர்த்திகளிடத்திலும், நட்டுவன்மாரிடத்தி லும் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தது இயல்பே. அவருடைய முதன்மையான மாணாக்கரில் ஒருவரான தம்பியப்ப நட்டு வனார் பொருட்டே அவர் நவக்கிரக கீர்த்த னைகளை இயற்றினார். அவர்களிடத்து முறையாகத் தேவாரப் பண்ணமைதிகளைத் தெரிந்து வைத்திருந்தார். மூவர் பாடியரு ளிய அமைதிகள் தீட்சிதரிடத்தில் காணக் கிடக்கின்றன.

முதலாவது : தேவாரங்கள் (இக் காலத் தார் கூறுவது போல) ரத்தி ராகங்களிலே அமைந்தவை. தீட்சிதர் உருப்படிகள் பெரும் பாலானவை அவ்வாறே.

இரண்டாவது : தேவாரப் பாட்டுக்கள் மித விளம்ப காலத்தில் அமைந்திருப்பவை. அதாவது முதனடை, வாரம், கூடை, திரள் என நாலு வகை நடைகளில் வாரம் என்ற நடையில் அமைந்தவை வாரப் பாடல்கள். தீட்சிதர் பாட்டுக்களும் அவ்வாறே யாகும்.

மூன்றாவது : ஈரடி மேல் வைப்பு, நாலடி மேல் வைப்பு என்பன தேவாரத்தில் பயிலும் ஒரு சிறப்பு அம்சமாகும். தேவாரத்திற் காணும் இந்த அம்சத்தைப் பெரும்பாலும் எல்லாப் பாடல்களிலுமே கையாளுகிறார் தீட்சிதர். இவ்வமைதியைத் தியாகையர், சாஸ்திரியார் இருவரும் பின்பற்றக் காணோம்.

(அ) மாதர் பிறைக் கண்ணியானை 'எனும் திருப் பாட்டில் ' கண்டேனவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்.

(ஆ) ' இடரினும் தளரினும் ' எனும் திருப் பாட்டில் ' இதுவோ எமை யாளு மாறீவ தொன்றெனக் கில்லையேல் அதுவோ உன தின்னருள் ஆவடுதண் துறை அரனே.

(இ) 'சுண்ண வெண் சந்தனச் சாந்து' என் னும் திருப்பாட்டில் ' அஞ்சுவதியா தொன்று மில்லை அஞ்ச வருவதும் இல்லை. '

எனும் பகுதிகள் வாரத்திற் கூடையாய்ப் பாடப்படுவது காணலாம்.

தீட்சிதர் தம் கீர்த்தனங்களில் :

(அ) கராம்புஜ பாச பீஜபூரம் கலுஷ
விதூரம் பூதா காரம்
ஹராதி குருகுஹ தோஷித பிம்பம்
ஹம்ஸத்வநி பூஷித ஹேரம்பம்
(வாதாபி கணபதிம்)

(ஆ) மகேஸ்வர குருகுஹ பக்த சந்தன
மாதங்க வத நேந்த்ராதி வந்தன
(மகா கணபதிம்)

நான்காவது : தீட்சிதர் நால்வர்களை ஆங்காங்கு போற்றியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

(அ) ' வாகீச வரத குருகுஹ
(நாகலிங்கம் பஜரே)

(ஆ) ' ஞான சம்பந்த வாகீச சுந்தர மணி வாசகாதி என்ற, தொடர்கள் நினைவுக்குரியன.

இதன்றி சுந்தரர் பெயரில் ஒரு தனிக் கீர்த்தனம் அவர் செய்திருப்பதும் நாம் அறியக் கிடக்கிறது.

ஸ்ரீ முத்துசாமி தீட்சிதர் என்னும் தலைப்பில் டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரவர்கள் கூறியிருப்பது வருமாறு :

'தேவாரப் பண்கள் ரத்தி ராகத்தில் அமைந்துள்ளன. ஆதலால் அந்த ராக பாவங்களை அறிவதற்குத் தீட்சிதருடைய கீர்த்தனங்களைக் கீழ் வேளூர் வாசியான சொக்கலிங்க தேசிகர் என்பவர் கற்றனர். பிறகு ராக பாவங்கள் புலப்படும் படி தேவாரங்களைப் பாடிப் பல பாடசாலைகளை அமைப்பித்துக் கற்பித்து வந்தனர். தேவார கோஷ்டிகள் இப்பொழுது பாடி வரும் சம்பிராதாயங்கள் எல்லாம் அவர் கற்பித்தனவே, அவருடைய சிறிய தகப்பானார் தீட்சிதரிடம் கற்றுக்கொண்டவர். அவர் பெயர் ஞாபகத்தில் இல்லை.

ஐயரவர்கள் தாம் கேள்வியுற்றதை எழுதுகிறார்கள். அதில் சில தவறுகள் இருத்தல் இயல்பே. தீட்சிதர் கீர்த்தனங்கள் தேவாரத்தைப் பின்பற்றியதனால் தான் தேசிகர் மேற்படி கீர்த்தனங்களைக் கற்றனர்.

மரபு வழி வந்த பாடத்தைப் பயிலப் புதிய தொன்றின் துணை தேவையில்லை : இன்று நிலவி வரும் பாடங்களுக்குச் சொக்கலிங்க தேசிகர் காரணமாயிருத்தல் கூடும். ஆனால் தீட்சிதரால் தேவாரம் சிறப்படைந்தது என்பது தவறாகும். தேவாரம் ரத்தி ராகங்களில் அமைந்திருந்தன என்று ஐயர் ஒப்புக் கொள்கிறார். அப்படியானால் மற்றைய இசையுருக்காரர்களின் வழியை நாடாது தீட்சிதர்வழியை நாடியதேன். 2 தியாகையர், சாஸ்திரியார் வழியை நாடாமல் தீட்சிதர் வழியை நாடியதற்குக் காரணம் அவர் தேவார வழியைப் பின்பற்றியதால் தான் என்பது புலப்படும்.

ஐந்தாவது : தீட்சிதர் தேவாரத்தில் ஈடுபட்டாலும் இசைக்கு அதனை முன்னோடியாகக் கொண்டாலும் பத்தி நெறியில் தேவாரத்தைக் கடைப்பிடிக்கவில்லை. பல தெய்வ வணக்கமாக இன்னும் சிறு தெய்வ நவக்கிரக வழிபாட்டிலும், அவர் கீர்த்தனைகள் செய்திருப்பதைக் காணலாம். இது தேவாரத்து ஒரு தெய்வத் திருநெறிக் கொள்கைக்கு உகந்ததன்று.

2. வரிகள்

வரி என்பது பண்டைத் தமிழ் இசைப் பாட்டு வகைகளுள் ஒன்று. நான்கடியாய் இடை மடக்கி வரும் நீர்மையுடையவை இவை.

' கயலெழுதி வில்லெழுதி காரெழுதி காமன்
செயலெழுதி தீர்ந்த முகம் திங்களோ காணீர்
திங்களோ காணீர் திமில் வாழ்நர் சீறூர்க்கே
அங்கணேர் வானத்து அரவஞ்சி வாழ்வதுமே '

இது சிலப்பதிகாரத்தில் ஒரு வரி.

இது இடைமடக்கி வந்தது.

' திடமலி மதிலணி சிறுகுடி மேவிய
படமலி அரவுடை யீரே
படமலி அரவுடை யீருமைப் பணிபவர்
அடைவதும் அமர் உலகதுவே.

திருஞான சம்பந்தருடைய வாக்கில் வரிகள் மிகுதியாகவே உள்ளன.

சிலப்பதிகாரத்து ' முரிவரி ' புகழ் பெற்றது. முரித்துப் பாடுதல் முரிவரி. எடுத்த இயலும் இசையும் தம்முள், முரித்துப் பாடுதல் முரியெ யெனப் படுமே. கோவலன் முரிவரி ஒன்று பாடினான்.

' திரைவிரி தருதுறையே
திருமணல் விரிஇடமே
விரைவிரி நறுமலரே
மிடைதரு பொழிலிடமே
மருவிரி புரிகுழலே
மதியுரை திருமுகமே
இருகயல் இணைவிழியே
எனைஇடர் செய்தவையே.

இந்த பாட்டின் முரி அமைப்பை ஒட்டியது தான் நமது திருஞான சம்பந்தர் பாடியருளிய ' மாதர் மடப்பிடியும் ' என்கின்ற முரிவரி ஆகும். இது யாழின் மேல் வைத்துப் பாடிய முரி ஆதலால் யாழ்முரி எனப்பட்டது.

' மாதர் மடப்பிடியும் மட அன்னமும் அன்ன
[தோர்
நடையுடை மலைமகள் துணையென
[மகிழ்வர்
பூத இனப் படை நின்றிசை பாடவும் ஆடுவர்
அவர் படர் சடைந் நெடு முடியதோர் புனலர்
வேதமொ டேழிசை பாடுவர் ஆழ்கடல்
[வெண்திரை
இனரின் நுரை கரை பொருது விம்மி நின்றயலே
தாதவிழ் புன்னை தயங்கு மலர்ச் சிறை
[வண்டறை
எழில் பொழில் குயில் பயில்தரும புரம்பதியே.

இதில் ' நடை உடை மலைமகள் துணை யென மகிழ்வர் ' என்பது முதலிய அடிகளைத் தொழிற் படுத்திப் பாடும் முறையை தேவாரம் இசைப்பக் கேட்டவர்கள் அறிவார்கள். சிலப்பதிகாரப் பாடல்களும் இவ்வாறே பாடப் படுதல் வேண்டும்.

தேவாரத்திலேயே இவ் விளக்கம் நமக்குக் கிடைக்கிறது. இக்காலத்து, ' மாதர் மடப் பிடியும் ' என்கின்ற திருப் பதிகம் பிற்காலத்து இராகமாகிய ' அடாணா 'வில் பாடப்படுவது சென்ற நூற்றாண்டில் தான் வழக்குக்கு வந்தது என்பர். ஆனால் முரித்துப் பாடுதல் என்பது மட்டும் மாற்றம் அடையவில்லை என்பதை அறிய வேண்டும்.

திருஞான சம்பந்தர் மறை பாடுவதை வரி பாடுவதாகச் சோல்கிறார் :
' வரிய மறையார் பிறையார் '
[திருக்கடவூர் மயானம் தலத்தில் பாடியருளியது.]

என்பதற்கு வரிப்பாட்டு அமைதியுள்ள மறையைப் பாடுகிற பொருளிலேயே கண்டிருக்கிறார். வரி என்பது இக்காலத்து 'கீதம்' பாடும் முறையைக் கொண்டதாகும்.
' கீத மொழி கூட்டி வேத இசை சூட்டு
கீரர் இசை கேட்ட கிருபை வேளே '

இதில் கீதம் என்பது திருப்புகழ்.

கீதம், வரி, மறை, வேதம் என்ற சொற்களை ஒத்துப் பார்க்கும் போது இந் நுட்பம் புலனாகும்.

௫. கீர்த்தனை.

கீர்த்தனை என்பது இசைத் தமிழ் உருக்கள். உருக்கள் இன்று உருப்படிகள் என்று வழங்குகின்றன. கீர்த்தி என்றால் புகழ். ' கீர்த்தி மிகு புகழ் ' என்பது தொல்காபியம். கீர்த்தி சகரத் தடமாறலால் கீர்த்தி ஆயிற்று. (தொல் சொல் சேனா. 312).

' இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு '

இன்றிருந்து நாளைச் சாகும் மனிதனின் புகழ் சிறு புகழ் — இறைவனது புகழ் மிகு புகழ் — திருப்புகழ் — அதாவது பொருள் சேர் புகழ். ஆகவே இறைவனின் புகழைப் பாடும் பாட்டுக்களுக்குக் கீர்த்தனை என்று பெயர் வந்தது. ஸமஸ்கிருதத்தில் இச் சொல் வர வேற்கப்பட்டு அங்கு சிறப்பாகவே வழங்குகின்றது. ' கீர்த்தனம் ' ' நாம சங்கீர்த்தனம் ' (இறைவன் புகழை நன்கு சேர்ந்து இசைத்தல்) என்னும் வழக்குகளைக் காணலாம்.

தமிழில் கீர்த்தனை என்று வழங்கும் இதனைத் தெலுங்கிலும் வட மொழியிலும் ' கிருதி ' என வழங்குவார்கள். கிருதி என்னும் வட சொல்லுக்குச் செய்யப் பட்டது. அதாவது செய்யுள் என்றே பொருளாகும். தீட்சிதர் கிருதி, தியாகராாசர் கிருதி என்றெல்லாம் கூறுவதுண்டு. (தீட்சிதர் பாட்டுக்களைக் கிருதிகள் என்றும், தியாகராாசர் பாட்டுக்களைக் கீர்த்தனங்கள் என்றும் கூறவேண்டும் என்று சிலர் கூறுவர். இவ் வேறுபாடுகள் அவர்கள் கற்பித்துக் கொண்டவையே.

இப் பெரியோர்கள் இறைவனையே பாடினார்கள். அவனுடைய பல்வேறு உருவ வேறு பாடுகளை வழிபட்டுப் பாடினார்கள். அப் பாட்டுக்கள் கீர்த்தனங்கள் ஆயின. புரந்தர தாசர் கன்னட மொழியில் கண்ணனைப் பரவிப் பாடினார். அவர் பாட்டுக்கள் இறைவன் புகழ் — தேவார நாமா எனப்பட்டன. அவையும் கீர்த்தனங்களே.

கடவுளைப் பாடிய பாட்டின் யாப்பமைதியை அரசரைப் பாடும் போது பயன்படுத்தினர். அரசன் கடவுளை ஒத்தவன் என்று திருக்குறளும் சொல்லுகிறது. வள்ளல்கள் இக் கீர்த்தனை வகைப் பாட்டினால் பாடப்பட்டனர். மற்றைப் பொருள்களைப் பாடும் போது இந்த யாப்பமைதி பின்பற்றப்பட்டால் குறைவு நேர்ந்து விடுமா? இசையோடு பாடுவதற்கு இந்த யாப்பு முறை பாவாணர்களுக்குக் கைகொடுத்தது. அதனால் இந்த யாப்புக்கே கீர்த்தனை என்பது பெயராகி விட்டது.

தெலுங்கிலும் ஸமஸ்கிருதத்திலும் பாடல்கள் இயற்றிய தியாகையர், முத்துசாமி தீட்சிதர், சியாமா சாஸ்திரி ஆகியோர் வாழ்ந்த காலம் சென்ற நூற்றாண்டு. இப் பெரியோர்கள் இறையருள் பெற்றவர்கள். இசைத் துறையில் மிக்க புலமை உடையவர்கள். ஆகையால் இவர்கள் கீர்த்தனைகள் யாவரும் விரும்பிப் பாடும் பெருமை யுடையவை. ஆனால் இவர்கள் தம் கீர்த்தனைகளைத் தமிழ் நாட்டில் உருவாக்கியவர்களா? இல்லை.

தியாகையர், தீட்சிதர், சாஸ்திரி — இவர்களுக்கு முன்னால் வாழ்ந்து தெய்வ நலம் பெருகும் தமிழில் கீர்த்தனைகளைத் தந்த பெரியோர்கள் முத்துத் தாண்டவர், மணி முத்தாப் பிள்ளை, அருணாசலக் கவிராயர் ஆவர். என்ன காரணத்தாலோ இசைப் புலவர்கள் இடைக் காலத்தில் இவர்களை மறந்தார்கள்.

மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள் எழுதுகிறார்கள் :

'' சங்கீதப் பயிற்சிக்கு ஏற்றபடி சாகித்யங்கள் முதலில் தமிழ் நாட்டில் உண்டாக வில்லை. தெலுங்கில் பச்சை மீரியன், ஆதிப் பையர், தியாகையர், சாமா சாஸ்திரிகள் முதலியவர்களும், வட மொழியில் முத்துசாமி தீட்சிதரும் பல வகையான கீர்த்தனைகளை இயற்றினார்கள். ஆனை ஐயா, ஆதிப் பையர், ஸ்ரீரங்கம் ஸ்ரீனிவாசன், அரியலூர் சண்பக மன்னார் முதலிய பலர் வேறு பாஷைகளில் கீர்த்தனைகளை இயற்றியிருப்பதோடு தமிழிலும் செய்திருக்கிறார்கள். தமிழில் மட்டும் கீர்த்தனைகள் இயற்றியவர்களும் உண்டு '' என்று எழுதினார்கள்.

முத்துத் தாண்டவர் முதலியவரைப் பற்றி பேச்சே எழவில்லை. காரணம் புலனாக வில்லை.

இப்படி எழுதிய ஐயரவர்கள் சிலப்பதிகாரம் முதலாகத் தமிழ் நாட்டில் வழங்கி வரும் இசையுருக்களைக் குறிப்பிட்டு ஏராளமான எடுத்துக் காட்டுகள் தந்து கீர்த்தனங்கள் இயற்றியோரையும் குறிப்பிடுகின்றார். அவர்கள்தம் பட்டியல் வருமாறு :

மேலகரம் திருகூட ராசப்பக் கவிராயர், கும்பகோணம் பாபவிநாச முதலியார், பச்சை மிரியன், ஆதிப்பையர், சீர்காழி அருணாசலக் கவிராயர், பெரிய திருக்குன்றம் சுப்பராம ஐயர், கனம் கிருஷ்ணய்யர், உத்தமதானபுரம் லிங்கப்பையர், தேவனேஸ்வர ஐயர், சீர்காழி முத்து தாண்டவராயர், கொட்டையூர் சிவக் கொழுந்து தேசிகர், தில்லை விடங்கன் மாரி முத்துப் பிள்ளை, பெருங்கரைக் கவி குஞ்சர பாரதி, வேளூர் சுப்பராம ஐயர், திருமயம் அப்பாவையர், வேட்டக்குடி பாரதிகள், திருக் கடவூர் அபிராம பட்டர், வையை இராம சாமி ஐயர், வையை மகா வைத்தியநாத ஐயர், முடிகொண்டான் கோபால கிருஷ்ண பாரதிகள், மயூரம் வேதநாயகம் பிள்ளை, பழனி மாம்பழக் கவிச் சிங்க நாவலர், அரிய லூர்ச் சண்பக மன்னார், தொட்டிக் கலைச் சுப்பிரமணிய முனிவர், சென்னிகுளம் அண்ணாமலை ரெட்டியார், முதலியோர் முக்கியமானவர்கள் என்று குறிப்பிடுகின்றார்.

ஐயரவர்களுக்கே குழப்பம் உண்டாகி இருக்கிறது. தியாகையர் முதலிய சங்கீத மும்மூர்த்திகளுக்கு முந்தியவர்கள் அருணாசலக் கவிராயரும், மாரி முத்துப் பிள்ளையும். அவர்கட்கும் காலத்தால் முந்தியவர்கள் முத்துத் தாண்டவர். அப்படியிருக்கத் தமிழில் முதன் முதல் கீர்த்தனைகள் உண்டாகவில்லை என்பது விபரீதம். அதனோடு தியாகையர் முதலியவர்கள் தமிழ் நாட்டில் வாழ்ந்தவர்கள் என்பதோடு தமிழ் மரபைப் பின்பற்றியே கீர்த்தனைகள் செய்துள்ளார்கள் என்பதும் புலப்படும்.

சிவமயம்

சிவஞான மாபாடியச் சிறப்பு

பேராசிரியர் **ஆதி. முருகவேள்**, எம். ஏ.
திருவாவடுதுறை ஆதீனப் புலவர்,
நமச்சிவாய சைவசித்தாந்த அஞ்சல்வழிக் கல்வி இயக்குநர் (திருச்சிராப்பள்ளி-23)

சிவஞான போதமும் சிறந்த பேருரையும் :

சித்தாந்த சைவத்தைத் திட்டமுறக் காட்டுவது சிவஞான போதம். திருவெண்ணெய் நல்லூர் மெய்கண்ட தேவரால் அருளிச் செய்யப்பெற்றது தமிழ்ச் சிவஞான போதம். இது உலகிலேயே ஒப்பற்றதோர் மெய்ஞ்ஞான நூல் என விளங்குவது. இவ்வாறு விளங்குதற்கு வழிசெய்தது எது ? தமிழ் தந்த தண்பொதியில் விக்கிரமசிங்கபுரத்துத் தோன்றியவர், மெய்கண்டார் மரபின்வரு தமிழ் ஞானப் பண்ணை திருவவாடுதுறை ஆதீனத்தின் முனி புங்கவர் திரு மாதவச் சிவஞான யோகிகள், சிவஞான போதத்திற்கு அவர் செய்தருளிய பேருரையே சிவஞானபோதத்தை உலகில் பொலிவுறச் செய்தது என்றால் அது பொய்யுரையன்று. இப் பேருரையும், அவரே செய்துதவிய மற்றொன்றாகிய சிற்றுரையும் இல்லையென்றால் இன்று எத்தனையர் சிவஞான போதத்தை அறிந்திருக்க முடியும் ?

திராவிட மாபாடியம் :

பேருரையென்பது அகலவுரை. அகலவுரையே பாடியம் என்பது. அதுவே விருத்தியுரை யெனவும்படும். சிவஞான போதத்திற்குச் சிவஞான யோகிகள் செய்தருளிய பாடியம் சிவஞான பாடியம். தண்டமிழ் மொழியில் தோன்றி இன்றும் என்றும் சிறந்தோங்கி நிற்கும் ஒரே பாடியம் இது. இச் சிறப்புக் கருதி இதனைத் ‘ திராவிட மாபாடியம் ’ எனவும் வழங்கி மகிழ்ந்தனர்.

சிந்தனைக்குச் சில :

இச் சிவஞான பாடியத்தின் சிறப்புப் பற்றிய சிந்தனையே இங்குக் கருதியது. ஒரே பொருள் ஒரு வகையில் தான் என்பதன்றிப் பல வகையிலும் சிறப்புற்றிருக்கவும் கூடும். அவ்வாறு, சிவஞான பாடியத்தில் சிந்தனை கொள்வார்க்கு அதன் சிறப்புக்களாகத் தோன்றுவன எண்ணில் அடங்காதன. அத்தனையும் இங்கு நினைவிற் கொணரல் ஆகாது. எனினும் மிகச் சிலவற்றையேனும் சிந்தையிற் கொணர முற்படுகின்றேன்.

முதலாவது :

சிவஞான பாடியத்தின் சிறப்புக்களைச் சிந்திக்க முற்படுவார் முதலாவது ‘ பாடியம் ’ என்பதைப் பற்றி விளக்கிக் கொள்வது இன்றியமையாததல்லவா ?

பாடியம் ஆவது யாது ? ஏற்கெனவே பாடியம் என்பது அகலவுரை என அறிந்துள்ளோம்.

ஆழமும் அகலமும் :

அகன்று செல்வதை இரு வகையாகக் கொள்ளலாம். பெருங்கடலின் மேற் பரப்பில் நாலா பக்கமும் விரிந்து நீந்திச் செல்வான் ஒருவன். மற்றொருவன் ஆழத்தில் மூழ்கி அங்கே அகன்று செல்வான். இவ்விருவர் பெறும் பயனும் வேறுபடக் காணலாம். கடல் படுபொருள்களில் சிறந்தனவற்றைக் கண்டு கொள்ள இரண்டாமவனுக்கு எளிதாகிறது. முதலவனுக்கோ அந்த வாய்ப்பில்லை. அங்கு அப் பொருள் உண்டு என்பது கூட அவனுக்குத் தெரியாமற் போகலாம்.

இப்படித்தான் நூற்பொருள் உணர்வதிலும் மேலெழுந்தவாறே பல நூல்களையும் படித்து விரித்துச் செல்வது (Vast Reading) ஒரு

வகை. ஒன்றாயினும் ஆழ்ந்து கற்றறிவது (Deep study and understanding) என்பது மற்றொரு வகை. இவ்விரண்டில் எது பொருளின் உண்மையைக் காட்டும். உண்மை நுண்ணிது. அதுவே அளவற்று அகன்றது. அந்த நுண்ணிதான அகன்று கிடக்கும்பொருள் உண்மையை இரண்டாவது முறையிலேயே பெறக் கூடும். இக் கருத்தினை மணிவாசகரின் திருவாசகம் ' ஆழ்ந்து அகன்ற நுண்ணியன் ' என்று உணர்த்தியமையாலும் அறியலாம்.

பொதுவும் சிறப்பும் :

உண்மை எனப்படுவது கடவுட் பொருள். அப் பொருளை உயிர்கள் உணர்தல் வேண்டும். எப்படி உணர்வது ? தாமாகவே உணர்ந்து கொள்ளல் ஆகுமா ? ஆகாது. அப்படியானால் ? அக் கடவுட் பொருளே இறையாயிருந்து உணர்த்தினால் உணர்ந்துகொள்ளும். அவ்வாறே அம் முதல்வனே தனது உண்மை நிலையைத் தானே உணர்த்தினான். எப்படி? வேதங்காளகிய மறைகளை அருளினான். மறைப் பொருளைத் தெளிந் துணர்த்தும் ஆகமங்களையும் அருளிச் செய்தான். அவை இரண்டும் மெய்யாம் இறைவன் நூல்களே.

' வேதமோ டாகமம் மெய்யாம் இறைவன் நூல் ' திருமந்திரம் 2397

என்றாலும் இவ் இருவகை நூல்களுக்கும் இடையே வேறுபாடும் உள்ளது. என்ன வேறுபாடு ?

வேதங்கள் மெய்ப் பொருளை உள்ளபடியே உணர்த்தா. ஆகமங்கள் அப்படியல்ல. அவை மெய்யான பொருளை மெய்யாகவே காட்டும். வேதங்களை அறிபவர்க்குப் பொருள் அதுவோ இதுவோ என அலைப்பு உண்டாகலாம். ஆகமங்களை அறிபவர் பொருள் இதுவே என அறியும் வாய்ப்பினைப் பெறுவர். இதனால் வேதம் பொது நூல் எனவும் ஆகமம் சிறப்பு நூல் எனவும் வேறுபடுத்துக் கூறப்பட்டது.

வேறுபாடு எப்படி ?

இது எது போல ? ஒரு நூலின் மூலமாகிய சூத்திரம் ஒன்று. அச் சூத்திரத்தின் பொருளைத் தெரிவிக்கும் பேருரை பாடியம் ஒன்று. சூத்திரத்தைக் கற்போர்க்கு அது சுருங்கிய சில சொல்லில் பல பொருளையும் செறிவாகக் கொண்டுள்ளமையால் பலவாறும் பொருள் கொள்ளத் தோன்றும். ஆனால் பாடியமோ அவ்வாறன்று. அது பல சொற்களாலும் ஆழ்ந்து அகன்று சென்று சூத்திரத்து உண்மைப் பொருளை இதுவே பொருள் எனத் துணித்து நிலையுறக் காட்டும். ஆதலின், பல பொருளும் கொள்ளக் கிடப்பதால் சூத்திரத்தைப் ' பொது ' எனவும், இதுவே பொருள் எனத் தெளித்துணர்த்துவதால் பாடியத்தைச் ' சிறப்பு ' எனவும் கூறுவர். சிறப்பு என்பது உண்மை. இவ்வாறு சூத்திரமும் அதன் பாடியமும் பொது எனவும் சிறப்பு எனவும் ஆமாறு போலவே வேதமும் ஆகமமும் என்பர்.

பொது சிறப்பு என்ற இரண்டிற்கும் விளக்கம் உணர்த்த வந்த சிவஞான பாடியமே ' பாடியம் ' என்பது யாது எனவும் நமக்கு விளக்கம் தந்து விட்டது என்பதனை எண்ணும் போது எத்துணை இன்பம் பெருகுகிறது.

பல பொருள்படும் சூத்திரத்தை அங்ஙனம் படாமைத் தெளித்துரைக்கும் பாடியம். '
(சூத். 2: அதி 1.)

சுவாமிகளின் உணர்த்தும் திறன் :

' பாடியம் ' என்பது எத்தகையது ? சிவஞான பாடியத்தைத் தாம் எந்தக் குறிக்கோளில் செய்துள்ளார் ? தமது முயற்சி என்ன ? என்றெல்லாம் உணர்ந்து கொண்டார் தம் நூலாற் பயனுறுவர், என்னும் கருத்தினை எவ்வளவு நயம்பட இங்கு உணர்த்தியுள்ளார் ! சிவஞான சுவாமிகளின் உணர்த்துந் திறனை அறிய இது ஒன்றே போதாதோ!

உணர்த்தும் முறை :

இவ் விடத்து ஓர் ஐயம் உண்டாகலாம். ' வேதம் பல பொருள்பட நிற்பது. ஆக

ம்மோ பல பொருள் படாமல் பொருளைத் தெளிவாக உணர்த்துவது.' என்றால் ஒரே முதல்வன் இவ்வாறு இரண்டும் அருளி நம்மைத் திகைப்புறச் செய்வானேன் ? ஆகமம் ஒன்றே போதுமே. நம்மை இவ்வாறு மயங்க வைப்பதுவா அவனது அருட் செயல் ? இல்லை.

'அம்மி மிதித்து அருந்ததி பார்த்தல்' என்பது தமிழர் திருமணத்தில் ஒரு மரபு. அருந்ததி என்பது ஒரு விண்மீன் (நட்சத்திரம்) அதனைப் பார்க்க ஒருவன் விரும்புகிறான். அறிந்த ஒருவன் அதனை அவனுக்குக் காட்ட முயல்கிறான்.

அருந்ததி மிகச் சிறியதொரு மீன், முதன் முதலாக அதனைப் பார்க்க விரும்புவார்க்குத் தெரிந்து கொள்ளல் இயலாது. எப்படியும் தெரியவைத்தல் வேண்டும். இதற்கு என்ன வழி ?

வானத்தின் வடக்குத் திசையில் உள்ளது எழுமுனிவர் மண்டலம். (சப்தரிஷி மண்டலம்) அது கலப்பை வடிவில் உள்ளது. கீழிருந்து வளைவில் இரண்டாவது தெரிவது வசிட்டர் எனப்படும் மீன். அதன் பக்கமாகச் சிறியதாக இருப்பது அருந்ததி மீன். இதனைக் காட்ட முயல்பவன் காண விரும்புபவனுக்கு முதலாவது வசிட்ட மீனைக் காட்டுகிறான்.

முதலில் காட்டப்பட்டது உண்மைக்குப் பக்கமாக எளிதில் புலப்படும் சார்பானதொரு பருமையான மீன். அதனைக் காட்டிக் காணும் வன்மையை மிகுவித்தான். உரிய தகுதி வந்தபோது உண்மையை தெரிவித்தான். இவ்வாறு பருமையைக் காட்டிப் படிநிலையறிந்து நுண்மையை உணர்த்துவது என்பது ஓர் உணர்த்தும் முறைமை நியாயம். இதனைத் 'தூலாருந்ததி நியாயம்' என நியாய நூல் கூறும்.

இந்த முறைமை—நியாயம் தான் வேதம் ஆகமங்கள் பொருள் உணர்த்தும் முறைமை. இதுவே சூத்திர படிவங்களின் முறைமையுமாகும். ஆதலின் வேதம் ஆகமங்களுக்கு இடையேயோ அல்லது சூத்திர பாடியங்களுக்குஇடையேயோ முரண்பாடு இல்லை.

'அதர்வசிகை முதலிய உபநிடதங்களின் (உபநிடதங்களும் வேதங்களே) கூறப் படும் பொருள்களும் சிவாகமப் பொருளை நோக்கும் வழிச் சூத்திரமும் பாடியமும் போலத் துலாருந்ததி முறைமையாகலின் வேதம் பொதுநூல் எனவும் ஆகமம் சிறப்பு நூல் எனவும் கூறப் பட்டன. (சிறப்புப்பாயிரம்)

இவ்வாறு ஒன்றை (பாடியம்) விளக்க வந்த இடத்திலேயே உவமை கூறும் முகத்தான் பிறிதொன்றனையும் (நியாய நூற்செய்தி) விளக்கி விடும் பாடியச் சிறப்பொன்றையும் இங்குக் காணுகின்றோம். இன்றியமையா நியாயங்கள் சிலவற்றை எளிதாக உணர வைக்கும் சிறப்பும் இப்பாடியத்திற்கு உரியதே.

சொற்பொருளைத் திட்பமுறத் தெரிவித்தல் :

'இதெல்லாம் ஆராய்ச்சியில் தெரியாது. அனுபவத்தில் தெரிய வேண்டியது.' என்கிறோம். 'ஆராய்ச்சி அறிவின் வேலை' என்கிறோம். அப்படியானால் அனுபவம் என்பது ? அறிவுக்குத் தொடர்பில்லாதது அது என்ற கருத்தோ ? ஆம். அப்படித் தான் பெரும்பாலும் கருதுகின்றனர்.

அறிவுப் பொருள் உயிர். அப்படியிருக்க அறிவுத் தொடர்பில்லாமல் உயிர்க்கு அனுபவம் உண்டாயிற்று என்றால் எப்படிப் பொருந்தும் ? அனுபவம் உயிர்க்குத் தானே ? அப்படியென்றால் அறிவினிடத்துத் தானே அனுபவம் உண்டாகும் ? இது பற்றிய தெளிவு மிக ஆழ்ந்த அறிவில்தான் பிறக்கும். அத் தெளிவில் அறிவு அனுபவத்தின் வேறு என்றோ அனுபவம் அறிவின் வேறானதென்றோ தோன்றாது. இரண்டுமே அறிவு நிலைதாம். சிறப்பாக அனுபவமே அறிவின் விளக்க நிலையாகும். ஒரு பொருளில் தோயாது நிற்க அப் பொருள் பற்றிய அறிவு நமக்கு உண்டாயிற்று என்றால் அது தான் முதலாவது கூறப் பட்ட அறிவுநிலை. அந்த அறிவில் பொருள் பற்றிய உண்மையியல்பு முற்றும் விளங்காது. அனுபவம் என்பது அப் பொருளில் நமது

அறிவு தோய்ந்து நிற்கும் நிலை. அப்போது தான் அப் பொருளை உள்ளபடியே நமது அறிவு அறியும். ஆதலால் இந்த அறிவினை அழுந்தியறியும் நிலையாகச் சொல்லுவர். ' அழுந்தியறிதலுக்குப் பெயர் '' அனுபவம் '' என்பது.

ஆகவே, அழுந்தியறிதலே அனுபவம். அனுபவமும் அறிவின் வேலையே. அறிவுக்கு வேறாக அனுபவம் என்பதில்லை. அனுபவமும் அறிவே. ஆதலால் அனுபவமாகிய அறிவினை அனுபவ அறிவு எனவும்அனுபவஞானம் எனவும் கூறுகிறோம்.

இத்தகைய மிக நுட்பமான சொற்பொருள் தெளிவினை நமக்கு அளிக்கும் சிறப்பினை இம் மாபாடியத்துள் காண்கிறோம்,

' அழுந்தி யறிதலே அனுபவித்தல் என்னும் சொற்குப் பொருள்.

(சிறப்பு, சூ. 11. அதி. 1)

' அறிந்த பொருளில் அழுந்துதலே சார்ந்த தன் வண்ணமாய் அறிதல். அதுவே அனுபவம் என்னும் சொற்குப் பொருள். '

(சூ. 6, அதி. 2)

' வாசக ஞானமே யன்றி அனுபவ ஞான மல்ல '. (சூ. 6)

இது போன்றே பல சொற்களுக்கு மிக நுட்பமாகவும் திட்பமாகவும் பொருளைத் துணித்துக் காட்டலை யறியலாம்.

திருமுறைப் பொருள் விளக்கம் :

திருமுறைப் பாடல்களுக்கு அக் காலத்தில் உரை நூல் இல்லை. அவை அனுபவ வாக்கு ஆதலின் நமது அறிவு கொண்டு அவற்றிற்கு உரைவரைதல் தவறெனவும் கருதப்பட்டது.

அனுபவமுடைய தேசிகர் வழியிலும் திருவருளுதவியாலும் அனுபவ ஞானம் பெற்றவர் சிவஞான சுவாமிகள். அவர் தமது மாபாடியத்தில் பல இடங்களில் திருமுறைப் பாடல் பலவற்றிற்குப் பொருள் உணர்த்தும் திறன் காணுகின்றோம். நேரடியாகவும், குறிப்பாகவும், எடுத்தாளும் இடத்தாலும், இன்னும் பல முறைகளாலும் பொருளை உணர்த்துவார். திருமுறை ஆசிரியரின் உள்ளக் கிடக்கையையும் சித்தாந்த சைவ நுட்பத்தையும் திறம்பட எடுத்துக் காட்டுவார். சான்றாக ஒன்று காண்போம்.

' ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச் சோதிக்க வேண்டா ''

(சம். 3—54.5)

என்பது திருஞான சம்பந்தப் பெருமானின் திருமொழி. சம்பந்தர் திருமுறை இறைவன் இயல்பினை எத்தனை வகையாலோ பேசாமலில்லை. ஆனால் இவ்விடத்தில் இப்படியும் கூறப்படுகிறதே ! இதன் உண்மை என்ன ? இது திருமுறை உணர்வார்க்கு உண்டாகும் சிந்தனை. இச் சிந்தனையில் ஒரு தெளிவினை உண்டாக்குகிறது மாபாடியம்.

' அவனே தானே ' (சூ. 10) முதலாகிய சிலவற்றால் நித்தப் பொருள்களும் உயிரால் சுட்டியறியப்படுமோ என்ற ஐயம் உண்டாகிறது. இவ் ஐயத்தை முதற் சூத்திரம் முதல் அதிகரண உரைப்பகுதியில் முனிவர் பெருமான் ' அவை அங்ஙனம் பொதுமையில் சுட்டியறியப்படுமாயினும் அனுபவ நிலையில் சுட்டியறியப்படா ''

என்று கூறி விலக்குகிறார். அவ்விடத்து சம்பந்தப் பெருமான் திருவாக்கினை எடுத்துக் காட்டி

' ....எனவும் ஓதுவனவற்றான் அறிக '

என உறுதிப்படுத்துகின்றார். இதனால், ' ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் ' எனும்போது ' பொதுமையில் சுட்டியறியப்படும் ' என்பதும் ' மிக்குச் சோதிக்கவேண்டா எனுமிடத்தில் ' அனுபவ நிலையில் சுட்டியறியப்படாது ' என்ற உண்மையும் நன்கு விளங்குகிறதல்லாவா ?

இவ்வாறு ஞான சம்பந்தப் பிள்ளையாரின் அனுபவ சித்தாந்தத்தை என் போன்றாரும் எளிதில் உணருமாறு செய்து விடும் மாபாடிய மாண்பினை என்னென்பேன் !

சாத்திரத்திற்கு விளக்கம் :

திருமுறைப் பாடலுக்கு நுட்பம் உணர்த்துவதுபோலவே சிவஞான பாடியம் சித்தாந்த சாத்திர நூற் பாடல்களிலும் தெளிவு தருவதைக் காணலாம்.

சிவஞானபோதம் 5ஆம் சூத்திரம் முதல்வனது உதவி கூறுகிறது என்பார். உயிர்கள் உலகத்தை அறிந்து அனுபவித்தற்கு உதவி செய்வது முதல்வனது அருளாகிய சிவசக்தி. சிவசக்தியாகிய அருள் இவ்விடத்தில் திரோதான சத்தியை உணர்த்தி நின்றது என்பார் சுவாமிகள். ஆகவே இச் சூத்திரம் திரோதான சத்தியின் இயல்வு கூறியதாக ஆகிறது.

உலக வாழ்க்கைக்குத் திரோதான சத்தி மட்டும் துணையிருந்தால் போதுமா ? உலகப் பொருள்கள் வேண்டாமா ? இன்ப துன்ப நுகர்ச்சிக்கு ஏதுவான வினை வேண்டாமா ? இவற்றின் இயல்பும் இங்கு உணர்த்தப்பட வேண்டுமே.

நூலாசிரியர் மெய்கண்டார் இங்கு உலகப் பொருள்களையோ அல்லது அவற்றின் முதற் பொருளாகிய மாயையையோ, வினையையோ வெளிப்படையாகக் கூற வில்லை. என்றாலும் அவற்றைப் பற்றியும் இங்கு ஆசிரியர் கருதியிருக்க வேண்டும். இன்றேல் குன்றக் கூறலாய் முடியும். அங்ஙனம் அவரது உள்ளக் குறிப்பினை உய்த்துணர்ந்து கண்டார் சிவ ஞானசுவாமிகள். பொருந்துமாறு விளக்கினார்.

திரோதான சக்தி மறைப்புச் சத்தி. இவ்வாறு செய்யும் என்றால் அச் செயலுக்குக் கருவிகளாகிய மாயையும் வினையும் அதற்குள் அடங்குந்தானே. ஆதலின் இவற்றின் இலக்கணங்களும் ஒருங்கே உணர்த்தப்பட்டன என்றார்.

> ''மாயையும் கன்மமும் திரோதான
> சத்திக்குக் கருவியாய்
> அதனுள் அடங்குதலின், திரோதான
> சத்தியினது
> இலக்கணம் கூறவே மாயை கன்மங்களது
> இலக்கணமும் கூறியவாறாதல் அறிக

என்பது 5-ஆம் சூத்திர உரைப்பகுதி.

இவ்வாறு நூலாசிரியரின் உள்ளக் கிடக்கையை அவர் வாக்கின்வழியே ஆழ்ந்து உய்த்துணர்ந்து வெளிப்படுத்தும் சிறப்பினையும் இப் பாடியத்துள் பரக்கக் காணலாம். ஞானாமிர்தம் முதலாகத் துகளறுபோதம் ஈறாகப் பல சாத்திரப் பகுதிகளுக்கு இந்நூலில் இவ்வாறு விளக்கம் அறியலாம்.

பொருள்களை வகைப்படுத்து உணர்த்தும் மாண்பு :

ஞானம் என்பது ஒன்றே என்றுதான் நினைப்போம். ஒருவேளை சிவஞானபோதம் சிந்தனைக்கு வந்தால் பாசஞானம் பசுஞானம் சிவஞானம் என்ற மூவகை ஞானம் நினைவுக்கு வரலாம். ஆனால் பாடியமோ ஞானத்தை எட்டாக வகைப்படுத்தி நம்மை உணர வைக்கிறது.

உள்கருவிகளில் ஒன்று புத்தி, அப்புத்தியின் குணபாவங்கள் தன்மம் முதலாக எட்டு எனக் குறிப்பிடுவார். அவற்றுள் இரண்டாவதாக வருவது ஞானம். இந்த ஞானமும் எட்டு வகைப்படும் என்பர். அவ் எட்டினையும் நம்மில் யாரும் விளங்கிக்கொள்ளுமாறு அனுபவத்தில் காட்டுவார்.

(1) பொருள்களை முன்னொடுபின் மலைப்பில்லாமல் பொருந்தும் முறையில் ஆராய்ச்சி செய்து ஊகித்து அறியும் ஞானம் ஒன்று.

(2–4) உயிர்களால், இயற்கை நிகழ்ச்சிகளால், தெய்வத்தால் நமக்குத் துன்பம் வரும்போது உண்டாகும் சோர்வினால் பிறக்கும் ஞானம் மூன்று.

(5) நண்பர் ஆவார் நமக்குக் கூறும் அறிவுரையால் வரும் ஞானம் ஒன்று.

(6) சாத்திர நூல்களை ஒருவன் தானே கற்பதால் உண்டாகும் ஞானம் ஒன்று.

(7) அவ்வாறன்றி ஓர் ஆசிரியரை வழிபட்டுக் கேட்கப்பெறும் ஞானம் ஒன்று.

(8) தானம் முதலிய நல்வினைகளைச் செய்வதால் வரும் ஞானம் ஒன்று.

இவ்வாறு கூறும் வகைப்பாடும் விளக்கமும் நம் ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் பெற்றுக் கொண்டிருப்பினும் அவற்றை வகைசெய்து உணர்த்திய பெருமை இத் திராவிடமாபாடியத்திற்கன்றி வேறெதற்குள்ளது ! இது போன்றே பத்தாம் சூத்திரவுரையில் ஒற்றுமைப்படுதல் என்பதனைப் பதினான்கு வகைப் படுத்தியது மட்டும் அன்றி ஒவ்வொன்றையும் எடுத்துக்காட்டால் இனிது விளக்கிய தன்மை கற்பாரை இன்புறச் செய்யும்.

எளிய எடுத்துக்காட்டுகள் :

மெய், வாய் முதலான ஐந்தும் ஐந்து பொறிகள். இவற்றிற்கு இடமாய் அமைந்தன உடம்பில் நமக்குப் புலப்படும் மெய் (தோல்), நா முதலான ஐந்தும் என்று கூறப்பட்டது. பின்னர் ஓரிடத்தில் ஐந்து பொறிகளுக்கும் இடமாவன ஓசை முதலிய ஐந்து தன்மாத்திரைகள் என்று கூறப்பட்டது.

இங்கு இவ்விரண்டில் எது ஏற்கத் தக்கது? எது உண்மை? இரண்டுமே உண்மை என்பார் மாபாடிய ஆசிரியர். இதனை ஓர் எளிய உதாரணத்தாலும் விளக்குவார்.

ஒருவன் தேரில் ஏறிச் செல்கிறான். செல்லும் அவனுக்கு இடமாய் அமைந்தது எது? தேர் என்பது யாவர்க்கும் தெரியும். மற்றொன்றும் இடமாயுள்ளது. நினைத்தால் அது தெரியும். தேர் எதன்மேல் செல்லுகிறது? நிலத்தின் மேலல்லவா? அப்படியானால் தேரில் செல்பவனுக்குத் தேரும் இடம், அடியில் உள்ள நிலமும் இடம்.

இதுபோலவே, ஐம்பொறிகளுக்கும் தன் மாத்திரைகளும் உடலில் உள்ள மெய் முதலிய உறுப்புக்களும் இடமாயிருக்கும் என்பார். (சூ. 2—அதி. 2) அறிவில் குறைபாடுடைய சிறுவருங்கூட அறிந்துகொள்ளும் தன்மையில் ஆழ்ந்த தத்துவ உண்மைகளை விளக்கிக் காட்டுவதில் மிக உயர்ந்து நிற்கிறது சிவஞான மாபாடியம் என்றால் அது மிகையன்று.

அறிவியல் சிந்தனை :

தமிழ்நாட்டில் தமிழ் மொழியில் எழுந்த ஓர் உரைநூல் இது. இதில் மேற்றிசையில் வளர்ந்து பரவிய அறிவியல் சிந்தனைக்கு இடம் ஏது? மெய்ஞ்ஞான உரைநூலாகிய இதனில் விஞ்ஞானத்திற்கு இடம் ஏது? ''என்று எண்ணம் உண்டாகலாம்.

மாதவச் சிவஞான யோகிகளின் சிவஞான மாபாடியத்தை உணர்ந்து கற்பார் எத்தனையெத்தனை அறிவியற் கருத்துக்களையோ அறியலாம். ''சாமியார்க்குச் சாத்திரம்தான் தெரியும், விஞ்ஞான அறிவு ஏது?'' என்று நினைக்க வேண்டாம். இருள் பற்றியும், இடம் பற்றியும், காலம் பற்றியும், ஓசை பற்றியும் கூறும் இயற்பியற் கருத்துக்கள் வேண்டுமா? இங்குக் கிடைக்கும். வானியலறிவும் கோள்களின் அறிவும் இதில் விளங்குவது அறியலாம். நிலவியல் பற்றித் தெரியலாம். உடலியல் பற்றி உணரலாம். உள்ளத்தின் தொழிற்பாட்டினைத் தெரியலாம். இவ்வாராய்ச்சியெல்லாம் சிறப்பாய் 2-ஆம் சூத்திர உரையுள் அறியலாம். ஓசையை இசையோசை, எழுத்தோசை எனப் பகுத்துக் காட்டும் திறமும், ஒளி, இருள் பற்றிய ஆராய்ச்சியும், நீருக்கும் நிழலுண்டு என நிறுவிக்காட்டுவது, இன்னும் இவைபோன்ற ஆராய்ச்சிப் பகுதிகளெல்லாம் இம்மாபாடிய நூல் சிறந்ததோர் அறிவியல் நூல் என்பது புலப்படுத்தும். அண்டங்கள், அவற்றின் தொலைவு, அளவு முதலியன கூறுவனவெல்லாம் புதிய அறிவியல் உலகம் இன்னும் பன்னூறு ஆண்டுகள் ஆராய்ந்து காண வேண்டியன எனலாம்.

இலக்கண விளக்க நுட்பம் :

மாபாடியம் செய்தருளிய மாதவச் சிவஞான யோகிகள் சாத்திர நுட்பம் உடையவர் மட்டுமல்லர். சாத்திரத்துப் பொருளைத் தெளிவு செய்துரைக்க இலக்கண நுண்ணறிவு தேவை. இலக்கண அறிவின்றி எந்தச் சாத்திரப் பொருளையும் உள்ளபடி அறிய இயலாது. இதிலிருந்து பன்னிரு சூத்திரப் பொருளையும் நுட்பமாகத் தெளிவித்துரைத்த பாடிய ஆசிரியர்க்கு எத்துணை இலக்கண அறிவு இருந்திருக்கவேண்டும் என்பது யாவரும் அறிவர்.

முனிவர் பிரான் தமது பாடியத்துள் எடுத்தாண்ட இலக்கண மரபுகள் எண்ணற்றன. சூத்திரத்துப் பொருளைத் துணிவுசெய்ய இலக்கணத்தைப் பயன்படுத்தினார் என்றாலும் அவற்றைக் கற்பார் அனைவரும் வேறு தனி இலக்கண நூல் கல்லாதபடியேயும் சிறந்த இலக்கண நுட்ப அறிவு வாய்ந்தவராவர் என்பது உறுதி.

மாபாடியத்துள் காணும் இலக்கண விளக்கங்களைத் தொகுத்தால் அதுவே சிறந்ததோர் இலக்கண நூலாக அமையும். எழுத்து முதலாகிய மூவகை இலக்கணக் குறிப்புக்களையும் இந்நூலுள் காணலாம். வினைப்பெயர், ஆகுபெயர், அன்மொழித்தொகை, இலக்கணை

முதலாகப் பல வகை இலக்கண நுட்பங்களைச் சட்ட விதிகளை நீதிமன்ற நடைமுறையில் தெளிந்து கொள்வதுபோல எளிதில் இங்கு விளங்கிக் கொள்ளலாம்.

கருத்தினை வற்புறுத்தி நிலைபெறச் செய்தல் :

ஓரிடத்துக் கூறிய கருத்தினைப் பின்னரும் வாய்க்கும் இடத்தில் வற்புறுத்தி நிலைபெறச் செய்வார் முனிவர்.

பாயிர உரையுள், ''பெரும்பெயர் . . . . உணர்க'' என்று பெரும்பெயர் எனப்படும் மகாவாக்கியத்திற்கும் திருவைந்தெழுத்திற்கும் வேற்றுமையின்மை கூறுவார். பின்னர் சூத். 9, அதி. 3-ல் அதனை அனுபவத்தோடு பொருந்தக்காட்டி உறுதி செய்வார்.

மேலும் சில :

திருமுறைப் பாடல்களுக்குப் பொருள் நயம் காட்டித் தெரிவிப்பதோடன்றி, சில பாடல்களுக்கு அழகான பொழிப்புரையே தந்துவிடுவார். ''முறுக வாங்கிக் கடைய முன்நிற்குமே'' என்ற அப்பர் திருமொழிக்கு ''பதிப்பொருளாகிய . . விளங்கி நிற்கும்'' என இவர் தந்துள்ள அழகிய பொழிப்புரையை ஒன்பதாம் சூத்திரம் மூன்றாம் அதிகரண உரைப் பகுதியில் காணலாம்.

பல்வேறு சமயக் கொள்கைகளை அவ்வச் சமயநூல் கல்லாதே இந்த ஒரு நூற்கல்வியிலேயே அறிந்துகொள்ளும் வாய்ப்பும் சிறப்பாக உண்டு. அக்கொள்கைகளை அப்படியே தெரிந்து கொள்வதோடன்றி அவற்றின் பொருந்தாமையையும் குறைபாட்டினையும் கூட இங்கேயே தெரிந்துகொள்ளலாம்.

இது ஞானநூற்பொருளை விளக்குவதாக இருப்பினும், மற்றும் சரியை கிரியை யோகம் பற்றிய சிலபல செய்திகளையும் நமக்குத் தருவதாக அமைந்துள்ளது. மூலபாடச் செய்திகளை விளக்குமிடத்து அவற்றை முறைப்படவுணர்த்தும்.

பேராசிரியர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், பரிமேலழகர், நக்கீரர் போன்றாரையெல்லாம் மிக விஞ்சிய மொழிநடையையும் சொற்பொருள் துணிக்கும் திறத்தையும் இப்பாடிய மொழித்திறம் காண்பார் அறிவார். ''திருவாவடுதுறை வேழம்'' என்று பாராட்டுப் பெற்ற சிவஞான முனிவரது மாபாடிய உரைநடை தமிழ் வீறுகொண்டு விளங்கும் விம்மித நடையெனத்தகும். வடசொற் கலப்பு இருப்பினும் படிப்போர் எண்ணத்தில் எல்லாம் செந்தமிழே என்னும்படி இனிதாய் ஓடும் தண்டமிழ் நடையை இப்பாடியத்தில்தான் காணலாம். இம்மாபாடியத்தைப் பன்முறை தனியிருந்து படிப்பார் நாவினில் என்றும் தீந்தமிழ் நடமிடக் காணலாம். சிந்தையில் நல்ல தெளிவு விளங்கும். எதனையும் கூர்த்தறியும் திறமே எளிதாய்க் குடிகொள்ளும். இன்றைய ஆராய்ச்சியுலகிற்கு ஆய்வு நெறிமுறைகளையும், அறியும் நுண்திறனையும் வழங்கவல்ல சிறப்பினை இப்பாடியத்தில் அறியலாம்.

மாபாடியச் சிறப்பு :

தொடக்கத்தில் ''பாடியம்'' என்பதன் உண்மைக் கருத்தினை இப்பாடியமே உணர்த்தியவாறு அறிந்தோம். மீண்டும் நினைவுக்குக் கொணர்வதானால், ''பாடியம்'' என்பது பல பொருள்படும் சூத்திரம் போலன்றிப் பொருள் இதுவே எனத் தெரிவித்துரைப்பது.

''பாடியம்'' என்பது செந்தமிழ்ச் சொல் எனக் கொண்டால் என்ன பொருள்படுகிறது? படுதல்-தோன்றுதல். பாடு—தோற்றம், புலப்பாடு. இயம்—இயம்பும் கருவி. இனிமையை வெளிப்படுத்தும் கருவி ''இன்னியம்'' எனப்பட்டது காண்க. சூத்திரத்துள் அமைந்துள்ள நூல் நுவல் பொருள் உண்மைப் பொருளைத் தெரிவித்துப் புலப்படச் செய்வது எது அது பாடியம். இது சிவஞானபாடியம். அப்படியானால் சிவஞானபோத நூலின் உண்மைப் பொருளை மயங்கிக் கருதுவார்க்கு மயக்கந்தீர உண்மை இதுவே எனத் தெரிவித்தல் அது ஒன்றே இம்மாபாடியச் சிறப்பு எனலாகும். சிறப்பு ஒன்றேயா யிருத்தால்தானே சிறப்பு!

அந்த முறையில் ஓரிடம் :

சித்தாந்த சைவத்தின் தனிச் சிறப்பு முத்திக் காலத்தும் முப்பொருள் உண்மை. சுத்தாத்துவிதக் கலப்பு நிலையாகிய இரண்டடற்ற கலப்புநிலை. இரண்டற்ற கலப்பு நிலையில் முப்பொருள் உண்மை காண்பதுவே சித்தாந்த சைவம். எல்லாவற்றிலும் இயைந்து

வந்தாலும் சிவ சமயவாதிகள், சிவாத்துவித சைவர் ஆகியோர் இந்த முடிவிடத்தில் மயங்குவர். இம் மயக்கத்தையும் தீர்த்து உண்மையைத் தெரிவிப்பதுவே சிவஞானபோதத்தின் முடிவான குறிக்கோள். மெய்கண்ட தேவரின் திருவுள்ளம் அதுவே. அவ்வுள்ளத்தை உணர்ந்தவர் சிவஞானயோகிகள். ''அத்துவிதம்'' என்ற சொல்லை வைத்துக்கொண்டு பிறர் பிறவாறுரைக்க அங்கு உண்டாம் வழுவினை எடுத்துக்காட்டி ''அத்துவிதம்'' என்ற சொல்லின் பொருள் இதுவே என வடமொழி இலக்கண மரபிலேயே பிழைபடாமல் புலப்படச் செய்தது இத்தமிழ்ப் பாடியமே. இதனை இரண்டாவது, ஆறாவது சூத்திரங்களின் உரைப்பகுதிகளில் அறியலாம்.

''அது இது ஆதற்கு ஏதுவாய் அவ் விரண்டற்கும் உளதாகிய சம்பந்த விசேடம் உணர்த்துதலே அத்துவிதம் என்னும் சொற்குப் பொருள் என்று உணர்ந்துகொள்க'' என ஆறாம் சூத்திர உரை அத்துவிதச் சொல்லின் பொருளை மிகத் திட்பமாகத் தெரிவிக்கும் பாங்கினைச் சிந்தையிற் கொள்ளவேண்டும்.

சிவசமவாதக் கொள்கையும் சிவாத்துவிதக் கொள்கையும் சிவஞானபோதக் கருத்தல்ல என்பதனைப் பலபடியாக ஆராய்ந்து விளக்கி வந்து ஓரிடத்து மிக எளிதான முறையில் நுட்பக் கருத்தினைப் புலப்படுத்துவது என்றும் நினைந்து இன்புறக் தகுவதாகும்.

தன்னால் அறியற்பாலது சிவம் ஒன்றே..! அதுவதுவாய் நின்று அனுபவிக்கும் ஆன்மா ஏனையவற்றையும் அறிவுழிச் சிவானுபவ விளைவில் குறைபடும் ஆதலின் ஏனையவற்றை அறிதல் முத்திப் பெரும்பயனுக்கு இடையூறு..' ''ஏனையவற்றை அறியாமையே முத்திப் பெரும்பயனுக்குச் சிறந்த காரணம்..''

(சூ. 6, அதி.2)

இவ்வாறு சித்தாந்த முத்தியே சிவஞான போதம் உணர்த்தும் முத்தியென்னும் சிறப்புண்மையினை மாதவச் சிவஞானயோகிகளின் மாபாடியமே கலங்காது தெளிவித்து நிற்கின்றது என்ற சிறப்பே மாபாடியத்தின் மற்றைய சிறப்புக்களைக் காட்டிலும் ஒப்பற்ற தலையாய ஒரே சிறப்பு எனக் கூறிச் சிவஞான மாபாடியச் சிறப்புப்பற்றிய சிந்தனையில் இத்துடன் அமைகின்றேன். ( )

சிவஞான மாபாடியத்தின் சிறப்புக்கள் இடம் கருதி இங்குச் சுருக்கமாகக் கூறப்பட்டன. மேலும் எளிதாகவும் விளக்கமாகவும் விரிவாகவும் பாடிய பொருள்களை அறிய விரும்புவோர் இக்கட்டுரை ஆசிரியர் நடத்திவரும் ''நமச்சிவாய சைவ சித்தாந்த அஞ்சல்வழிக் கல்வி''ப் பாடங்களிலும், ''சிவநெறி'' எனும் திங்கள் வெளியீட்டிலும் அறிந்து பயனுறலாம்.

பராபரமே

பாராயோ என்னை?முகம்பார்த்து ஒருகால் என்கவலை
தீராயோ? வாய்திறந்து செப்பாய்—பராபரமே!

சொல்லும் பொருளுமற்றுச் சும்மா இருப்பதற்கே
அல்லும் பகலுமெனக்கு ஆசை—பராபரமே!

கொல்லா விரதம் குவலயமெல்லாம் ஓங்க
எல்லார்க்கும் சொல்லுவதென் இச்சை—பராபரமே!

எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இரங்கவும்நின்
தெய்வ அருட்கருணை செய்யாய்—பராபரமே?

சன்மார்க்க ஞானி, தாயுமானவர்

உ

சிவமயம்

சிதம்பரத்தில் ஆறுமுக நாவலர்

திரு. க. சுவாமிநாதன், பி.எஸ்ஸி., பி.டி.

''தமிழ்க் கல்வியும் சைவ சமயமும் வளர்ச்சி யடைவதற்குக் கருவிகள் முக்கிய தலந்தோறும் வித்தியாசாலை தோற்றுவித்தலும் சைவப் பிரசாரம் செய்தலுமேயாம்'', என்ற உறுதியான நோக்கத்துடன் சிவதருமம் செய்தவர் யாழ்ப்பாணம் நல்லூர் ஆறுமுக நாவலரவர்கள். அவர்கள் வாழ்ந்த காலம் 1822—1879 ஆகும். எல்லாவித தருமங்களுக்கும் மூலமாய், அவ்வெல்லாத் தருமங்களையும் தன்னுள் அடக்கி, அவ்வெல்லாத் தருமங்களுக்கும் மேற்பட்டு விளங்கும் இத் தருமம் தமிழ் நாடெங்கும் பரவ வேண்டுமென்று விரும்பினார். வேதாகமங்களை ஓதுதலும், அறிவு நூல்களைப் பிறருக்கு விரித்துணர்த்துதலும், தருமங்களை எடுத்துப் போதிப்பதும், பள்ளிக்கூடங்கள் கட்டுதலும் பெரும் புண்ணியங்கள் என்பதை ஞானாமிர்தம் என்ற நூலிலிருந்து, நாவலர் மேற்கோள் காட்டுகிறார். அவருடைய சிவத்தொண்டுகள் ஈழத் தீவோடு மட்டும் நின்றுவிடாமல், கடல் கடந்து தமிழ் நாட்டிற்கும் கிடைத்தன.

தமிழ் நாட்டின் நற்பேறு ! திருநீறணிந்து, திருநட்டமாடியைத் தொழுது, வணங்கி வாழ்த்தி, சிவனடியார் நடுவில் இருக்க அவன் அருளுக்கு விண்ணப்பித்தும், தன்னைத் தடுத்தாட்கொள்ள வேண்டியும்—நாவலர் சிதம்பரத்திற்கு வருகிறார். இத்தலம், இன்னிசையால் தமிழ் பரப்பி, சைவ நெறிமுறைகளையும் சேர்த்துப் பரப்பிய சைவசமய குரவர்கள் அருள் பாலித்த இடம்; திருநீலகண்ட நாயனார், கூற்றுவ நாயனார், திருநாளைப்போவார் நாயனார், கணம்புல்ல நாயனார் முத்திபெற்ற இடம். தொண்டர்சீர் பரவுவாராகிய சேக்கிழார் நாயனார், திருத்தொண்டர் புராணத்தை அரங்கேற்றிய இடம்; சைவ சித்தாந்த சாகரம் உமாபதி சிவாச்சாரியார் வாழ்ந்து இறைவன் திருவருள் பெற்ற இடம். இவ்வாறு பல்லாற்றானும் சிறப்பு வாய்ந்த இடத்தைத் தம் சிவத்தொண்டுகளுக்கு ஏற்ற இடமாகத் தேர்ந்தெடுத்தார் நாவலர் பெருமான்.

தமிழ் நாட்டில் பிற சமய ஆதிக்கம் தோன்றிய காலத்தில், சைவ சமயத்தைப் பாதுகாக்க சிவபெருமானுடைய திருவருளினால் சமயாசாரியர்கள் தோன்றினர்; சைவ சமயத்தில் புத்துணர்ச்சி தோன்றியது. அதுபோலவே, பிற நாட்டினரின் ஆதிக்கம், வேற்று மதத்தினரின் செல்வாக்கு, கல்வியின்மை, எப்படியும் வாழலாம் என்ற மக்களின் அலட்சியப் போக்கு ஆகியவற்றால் சைவ சமயம் அழிந்துவிடுமோ என்று அஞ்சியிருந்த காலத்தில், சிவபெருமானின் பெருங் கருணையால் யாழ்ப்பாணம் நல்லூரில் ஆறுமுக நாவலர் தோன்றினார்; பரசமயக்கோளரி ஆனார்; ஆறுமுக நாவலரானார்; தமிழ்ப் பாடசாலைகளை அமைத்தும், சமயச் சொற்பொழிவுகளாற்றியும், அழிந்துவிடும் நிலையிலிருந்த ஓலைச் சுவடி நூல்களைப் பரிசோதித்து அவற்றை அச்சிற் பதிப்பித்தும், பல அரிய நூல்களுக்கு உரை எழுதியும், புதிய நூல்கள் பலவற்றை எழுதியும் எழில் ஞானபூசையை நாவலரவர்கள் செய்தமை சைவ சமயத்தின் மறுமலர்ச்சியைத் தோற்றுவித்தது.

23 வயதிற்குள்ளாகவே தமிழிலுள்ள இலக்கிய இலக்கண நூல்கள், சமய இலக்கியங்கள், திருமுறைகள், சித்தாந்த நூல்கள், புராணங்கள், தலமான்மியங்கள், சமஸ்கிருதத்திலுள்ள ஆகமங்மள், பிறநூல்கள்; ஆங்கிலத்தில் விவிலிய நூல் ஆகியவற்றை நாவலர் தாமே கற்றார். 25-ஆம் வயது முதல் சொற்பொழிவாற்றத் தொடங்கினார்; 28-ஆம் வயது முதல் நூல்களைப் பதிப்பிக்கவும், எழுத

வும், ஆரம்பித்தார். இப்பணி 1879-ஆம் ஆண்டு வரை நீடித்தது.

''தமிழையும் சைவத்தையும் தம் இரு கண்களாகக் கொண்டு அவற்றை ஒளி குன்றா மல் பாதுகாப்பது தன் கடமை; அவற்றை வாழவைக்கப் பணிபுரிவது தன் வாழ்வின் குறிக்கோள்'' என வாய்த்த பிறவியை மதித்து வாழ்ந்த நாவலர், சிதம்பரத்தில் ஒரு வித்தியா சாலையையும், மடம் ஒன்றையும் நிறுவக் கருதினார். அதற்கு முன்னோடியாக 1848-ம் ஆண்டில் யாழ்ப்பாணம் நல்லூர் வண்ணார் பண்ணையில் சைவப் பிரகாச வித்தியா சாலையை நிறுவினார்; அதனைப் பிடியரிசி சேர்த்தும், தம்மிடம் முன்னர் கற்ற திரு. சதா சிவப்பிள்ளை போன்றவர்களை ஆசிரியர் களாக நியமித்தும், மாணவர்களிடம் சம்பளம் வாங்காமலும், ஊதியம் (வேதனம்) பெறா மலும் நடத்தினார். தமிழ் நாட்டில் பள்ளிகள் செயல்படும் முறையை நேரில் கண்டறிய ஒரு முறை வந்துள்ளார். இங்கே திண்ணைகளிலும் கொட்டகைகளிலும் பாடசாலைகள் நடை பெறுவதையும், மாணவர்களிடம் சம்பளம் பெற்று கல்வி கற்பிப்பதையும், நீதி நூல்கள் மட்டும் கற்பிப்பதையும், சமய நூல்கள் கற்பிக் கப்படாததையும் கவனித்தார். எனவே, தாம் தோற்றுவிக்கும் பாடசாலைகளில் மாண வர்களிடமிருந்து சம்பளம் பெறாமல் கற்பிக்க வேண்டும்; கல்வியும், அறிவும், ஒழுக்கமும் சமயநூற் கல்வி வழியாகத்தான் அமைய முடியும் என்ற உறுதியான கொள்கைகளைக் கொண்டிருந்தார். தமிழ் நாடெங்கும் பாட சாலைகளை இக்கொள்கையுடன் தொடங்கி, அங்கு இளம் வயதிலேயே இம்மைக்கும் மறு மைக்கும் உதவுவதற்கும், பொருளை ஈட்டு தற்கும், லௌகீக நூல்களையும் கற்பித்தல், திருக்கோயில்களில் மக்களுக்குச் சமயநெறி களைப் போதித்தல் ஆகியவை மிக மேன்மை யான புண்ணியங்கள் என்று நம்பிக்கையுடன் செயல்பட்டார்.

வித்தியாசாலையை அமைக்கத் தேவை யான பொருளைத் திரட்டி அதனை வட்டிக் குக் கொடுத்து, சிதம்பரத்துத் திருவீதியிலே ஒரு நிலம் வாங்கத்தக்க அளவு பொருள் சேர்ந்த உடனே நிலம் வாங்கிக்கொண்டு பாட சாலையைக் கட்டுவித்து, பிள்ளைகளைப் படிக்கச் செய்து, தமிழ் வேதம் ஓதுவித்து' சிவபுராணம் பாராயணம் செய்து வரவும், சமய சாத்திரங்களைப் படிக்கும் துறவிகளுக் கும் வறியவர்களுக்கும் அன்னதானம் செய்ய வேண்டுமென்றும் தன் விருப்பங்களை 1868, 1870-ஆம் ஆண்டுகளில் வேண்டுகோள்களில் (விஞ்ஞாபனங்கள்) தெரிவிக்கிறார். வித்தியா சாலையை எவ்வாறு அமைக்க வேண்டும், எவ் வாறு செயலாற்ற வேண்டும், வரவு செலவுத் திட்டம் எவ்வாறு தயாரிக்கப்படவேண்டும் என்ற பல இன்றியமையாக் குறிப்புக்களை அவற்றில் காணலாம்; விரிவை திரு. த. கைலா சப் பிள்ளையின் ஆறுமுகநாவலர் சரித்திரத்தில் காணலாம்.

சிதம்பரத்தில் சைவப்பிரகாச வித்தியா சாலையை மேலவீதியில் 1864-ஆம் ஆண்டு நிறுவிய பின், சுமார் பத்து ஆண்டு காலம் தமிழ் நாட்டில் சிவதருமங்களைச் செய்து வந்தார். 1848-ஆம் ஆண்டு அவருடைய விவிலிய நூல் தமிழ்மொழி பெயர்ப்பு காரண மாக சென்னை வந்திருந்தார். 1849-ஆம் ஆண்டு அச்சு இயந்திரம் வாங்கச் செல்ல சென்னைக்கு வந்திருக்கிறார். பின்னர் 1854, 1858 மற்றும் 1864-ஆம் ஆண்டுகளிலும் தமிழ் நாட்டின் பல பகுதிகளுக்கும் சென் றுள்ளார். அவருடைய சொற்பொழிவுகளில் சொல்லழகு, செந்தமிழ் நடை, இலக்கிய இலக்கண அறிவு, சைவ சமய நுட்பங்களைத் தெளிவாக உணர்ந்து பேசும் தன்மை, அவரு டைய நூற்பதிப்புப் பணி ஆகியவை தமிழ் நாட்டவரைக் கவர்ந்தன. அவற்றை நேரில் கண்டறிந்த திருவாவடுதுறை ஆதீனகர்த்தர் அவர்கள் அவருக்கு நாவலர் பட்டம் சூட்டிப் பாராட்டினார்கள். திருவண்ணாமலை ஆதீ னம், தருமபுர ஆதீனம், காஞ்சிபுரம் ஆதீனம், மதுரை திருஞானசம்பந்தர் ஆதீனம் ஆகிய வற்றின் தலைவர்களும், இராமநாதபுரம் பொன்னுசாமித் தேவரும் சிறந்த முறையில், அவரைப் பாராட்டி மகிழ்ந்தனர்.

இவருடைய காலத்தில் வாழ்ந்த அருளா ளர்களில் ஒருவர் நந்தன் சரித்திரக் கீர்த்த னைகளைப் பாடிய கோபாலகிருஷ்ண பாரதி யார். ஒரு முறை நாவலர் நடராசப் பெரு மானை வழிபட, திருக்கோயிலுக்குச் சென்றி ருந்தபோது, பாரதியார் மனமுருகிப் பாடி

யதைக் கேட்டு மகிழ்ந்து அவருக்குக் கைநிறையப் பணம் கொடுத்தார்.

வடலூர் இராமலிங்க அடிகள் (1823—1874) நாவலருடைய சம காலத்தவர். அவரியற்றிய அருட்பா, இனிய, தெளிவான, எளிமையான நல்லிசைப் பாடல்கள்; அவை எங்கும் எல்லாராலும் பாடப்பெற்றன. ஆனால் நாவலர், திருமுறைகளே கோயில் களில் ஓதத்தக்கவை; அவைதாம் அருட்பாக்கள்; மற்றவை மருட்பா என்று கருதியமையால் திருமுறைப் பாடல்கள் இருக்கும் போது, வேறு பாடல்களை இயற்றத் தேவையில்லை என்ற கருத்தைக் கொண்டிருந்தார். 1869-ஆம் ஆண்டு அருட்பா—மருட்பா போர் தொடங்கியது. 'போலி அருட்பா மறுப்பு' என்ற நூலை நாவலர் எழுதி வெளியிட்டார். இரு சாரரும் தங்கள் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்திக் கொண்டிருந்தனர். புலமைக்கு மதிப்பு தந்தவர் நாவலர்; அவர் மகாலிங்க ஐயர், விசாகப் பெருமாளையர், தாண்டவராய சுவாமிகள், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, தியாகராசச் செட்டியார் போன்ற நல்லறிஞர்களுடன் தொடர்பு கொண்டிருந்தமை இதற்குச் சான்று. நாவலரவர்களும் இராமலிங்க அடிகளாரும் காழ்ப்புணர்ச்சி கொண்டவர்க ளல்லர்; கருத்து வேறுபாடு கொண்டிருந்தவர்கள். கடலூர் மஞ்சக்குப்பம் நீதிமன்றத்தில் இராமலிங்க அடிகளார் மீது நாவலர் வழக்கு ஒன்றைத் தொடர்ந்திருந்தார். இராமலிங்க அடிகள் நாவலரை அவமதித்துப் பேசினார் என்பது வழக்கு. நீதிமன்ற விசாரணை நாளன்று, நாவலரை தாம் அவமதித்துப் பேசவில்லை என்று இராமலிங் அடிகள் சொல்லிவிட்டார். நாவலர் இதனை ஏற்றுக் கொண்டார். வழக்கு முடிந்தது. இதன் விரிவை ஆறுமுகநாவலர் சரித்திரத்திலும், ஆறுமுகநாவலர் பிரபந்தத் திரட்டிலும் காணலாம். இவ்விரு சான்றோர்களின் மறைவுக்குப் பிறகும் அருட்பா மருட்பா கருத்துப்போர் தொடர்ந்தது, 1907-ஆம் ஆண்டுடன் மறைந்தது எனச் சிலம்புச் செல்வர் திரு. ம.பொ. சிவஞானம் தன்னுடைய ''வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு'' என்ற நூலில் தெரிவிக்கிறார்.

மரபு வழுவாமல் வாழ்ந்த நாவலர் சிதம்பராலய பூசாவிதி பதஞ்சலி பத்ததியிற் சொல்லப்பட்டது போல செயல்படாத காரணத்தால் தீட்சை பெறாதவர்கள் கையால் திருநீறு பெறுவதில்லை என்ற நியமத்தை மேற்கொண்டார் என்றும், சிவதீட்சை நிந்தனையைக் கண்டித்துச் சிதம்பரம் சைவப் பிரகாச வித்தியாசாலையில் நாவலர் சொற்பொழிவாற்றினார் என்றும் பண்டிதமணி திரு. சி. கணபதிப் பிள்ளையும் தன்னுடைய ''நாவலர்'' நூலில் எழுதுகிறார்.

கற்றதனாலாய பயனறிந்த நாவலர் மீது தீட்சிதர்கள் தொடுத்த ஒரு வழக்கில், தமக்கு தண்டனை உறுதி என முடிவு செய்து, வழக்கு நாளன்று காலையில் தம் பூசையை முடித்துக் கொண்டு, திரு. சதாசிவப் பிள்ளையிடம் தம் உடையவரைக் கொடுத்து, வழக்கில் தமக்கு தண்டனை கொடுக்கப்படின், தாம் உயிரை விட்டுவிடப் போவதாகவும், உடையவரைக் கங்கையில் போட்டுவிடச் சொல்லியும் நீதி மன்றம் சென்றிருந்தார். இறைவன் தன் அடியாரைக் கைவிடவில்லை. வழக்கு இவருக்குச் சாதகமாக முடிந்தது.

சிவ அபராதத்தைத் தாங்கமுடியாதவராக நாவலர் வாழ்ந்ததால் அவரிடம் நிறைந்த பக்தியுடைய சிதம்பரம் சிவபுரி வெள்ளந் தாங்கியைச் சார்ந்த ஆறுமுகப் பிள்ளை சிவகாமி அம்மன் கோயிலுக்குச் சொந்தமான 40 வேலி நிலத்தைத் தாமே அனுபவித்து வந்ததைக் கண்டு மனம் நொந்தார். நில வருமானத்தை கோயிலுக்குச் செலுத்திவிடுமாறு நாவலர், ஆறுமுகப் பிள்ளையை பலமுறை வற்புறுத்தி வந்தார், பலன் இல்லை, அவர் மிகுந்த கோபம் கொண்டு, ஆறுமுகப் பிள்ளையை வைதுவிட்டார். இதுவும் வழக்காக நீதிமன்றம் சென்றது. தாம் செய்த குற்றத்தை ஒப்புக்கொண்டு நாவலர் அபராதம் செலுத்தினார்; மேல் முறையீடு செய்ய பலர் அவரைக் கேட்டுக்கொண்டும், அதனை அவர் மறுத்துவிட்டார். ஆனால் சிவபுரி மடத்து வாரிசுக்காரன் ஒருவரால், வேறு வழக்கின் மூலமாக அந்த நிலங்களையும், அவற்றின் வருமானத்தையும் சிவகாமி அம்மன் கோயிலுக்குக் கிடைக்குமாறு செய்து சிவ அபராதம் தொடராதபடி செய்துவிட்டார்.

தனக்கென்று எதனையும் பெறாத தன்மையை நாவலர் பெற்றிருந்தார். 1865-ஆம்

ஆண்டு திருவாவடுதுறை ஆதீனத் தலைவர வர்கள் சிதம்பரம் வித்தியாசாலைக்கு எழுந் தருளி, வித்தியாசாலைப் பணியைப் பாராட்டி நாவலருக்கு ஒரு சால்வை, இரண்டு சருகை வேட்டிகள், ஆசிரியர்களுக்கு வேட்டி, மாண வர்களுக்குப் புத்தகப் பரிசுகள் வழங்க ரூ.50 கொடுத்து சிறப்பு செய்தார்கள். நாவலர் தமக்குக் கொடுத்தவற்றை திருக்களாஞ்சேரி மறைஞான சம்பந்தரின் சமாதித் திருக்குறட் டையும், திருமதிலையும் திருப்பணி செய்யும் பொருட்டு ஆதீனத் தலைவரவர்களிடமே பணிவோடு கொடுத்துவிட்டார்கள்.

நடராசப் பெருமான் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ மூலட்டானேசுரருக்கு முதன்முதலாகப் பாற்காவடித் தருமத்தை நிய மித்தவர் நாவலரே. அத்தருமம் இன்னமும் நடைபெற்று வருகிறது.

1864-ஆம் ஆண்டு முதல் சுமார் 10 ஆண் டுக் காலம் சைவப் பிரகாச வித்தியாசாலை வளர்ச்சிக்குப் பாடுபட்டார். 1858-ஆம் ஆண்டில் சென்னை தங்கசாலைத் தெருவில் தாம் நிறுவிய சைவ வித்தியானுபாலன அச்சு இயந்திர சாலையில் கீழே குறிப்பிட்ட புத்த கங்கள் அச்சிடப் பெற்றன. சேது புராணம், இலக்கண விளக்கச் சூறாவளி, தொல்காப்பிய சூத்திரவிருத்தி, இலக்கணக் கொத்து, கந்த புராணம், கோயிற் புராணம், சைவ சமய நெறி ஆகியவற்றிற்குப் புத்துரை, நான்காம் பால பாடம், தமிழ்நாட்டு சைவ சமயிகளுக்கு விஞ்ஞாபனம் (ஆறுமுக நாவலர் பிரபந்தத் திரட்டில் காணலாம்) கந்தபுராண வசனம், திருவிளையாடற் புராண வசனம் எழுதத் தொடங்கினார்; சைவப் பிரசாரம் செய்து வந்தார். அப்போது அவருக்கு உறுதுணை யாக இருந்தவர் அவருடைய தலை மாணாக்க ராகிய திரு. சதாசிவப் பிள்ளை. அக்காலத் தில் அவரிடம் பாடம் கேட்டவர்களில் வன் றொண்டர் செட்டியார், திருவாவடுதுறை நமச்சிவாயத் தம்பிரான் போன்றவர்கள். திரு. சி.வை.தாமோதரம் பிள்ளை நாவலரைக் கொண்டு தொல்காப்பியம் சேனாவரையம் பரிசோதித்து வெளியிட்டார்.

சிதம்பரத்தில் நாவலரவர்கள் தமிழ்க் கல்வி கற்பிக்க சைவப் பிரகாச வித்தியா சாலையைத் தோற்றுவித்ததும், சைவ சமய வளர்ச்சிக்கு சமய நூல்களை வெளி யிட்டதும், சொற்பொழிவுகள் செய்ததும், தமிழ் மொழி தழைத்தோங்க இலக்கிய இலக் கண நூல்களைப் பதிப்பித்ததும் என்றும் நினைவில் நிற்கும் அரிய பணிகளாம். அவரு டைய சிவ தருமங்கள் ஆறுமுகநாவலர் சைவப் பிரகாச வித்தியாசாலை அறக்கட்டளையால் தொடர்ந்து செய்யப்பட்டு வருகின்றன.

